தமிழ் ஆய்வுக் களங்கள்

பதிப்பாசிரியர்
முனைவர் ந. கடிகாசலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தமிழ் ஆய்வுக் களங்கள்

பதிப்பாசிரியர்
முனைவர் ந. கடிகாசலம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சி.ஐ.டி. வளாகம், தரமணி (அஞ்சல்), சென்னை-600113

BIBLIOGRAPHICAL DATA

Title	:	Tamil Āyvu-k-Kaḷaṅkaḷ
Editor	:	Dr. N. Ghadigachalam Senior Fellow International Institute of Tamil Studies Madras-600 113
Publisher & Copy right	:	International Institute of Tamil Studies, Madras-600 113
Publication No	:	187
Language	:	Tamil
Date of Publication	:	August, 1994
Edition	:	First
Paper used	:	Tamil Nadu Creamove(m)16 kg
Size of the Book	:	21X18 cms
Printing types	:	10 point
No. of pages	:	XVI + 431
No. of Copies	:	1200
Price	:	Rs. 70/-
Printers	:	Kavinkalai Achagam 2/141 Kandhasami Nagar, Palavakkam, Madras-600041 Phone 41 71 41
Binding	:	Card Board
Artist	:	Sathya
Subject	:	Research Fields in Tamil

Professor
K. PONNUSAMY
M.Sc,, B.L,,
Minister for Education

Secretariat
Madras-600 009

Date: 16-08-1994

அணிந்துரை

உலகும் தமிழும் தொன்மையானவை. ஆயினும் என்றும் புதிதாய்க் காட்சி தருபவை. காலந்தோறும் பல மாற்றங்களுக்கும் தாக்குதல்களுக்கும் உட்பட்டிருப்பினும் இன்றும் இளமை வீறுடன் புத்தொளி வீசிப் புத்தழகுடன் காண்பாரை வியக்க வைக்கின்றன். இத்தொடரிற்புச் சிறப்புடை நிலையில் இன்தமிழ், உலகத் தமிழாய் வலம்வர வேண்டும் என்ற பெருநோக்கில் ஆன்றோர் பலரின் பெரு முயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் (1968) விளை வாக 1970 அக்டோபர் 21ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்றியது.

சிறிய ஆலம் விதையாய் முளைவிட்ட நிறுவனம் இன்று தமிழின் துறைதோறும் ஆய்வு எனும் கிளை பரப்பி நூல் வெளியீடு எனும் விழுதுவிட்டு ஆய்வறிஞருக்கும் தமிழார்வலருக்கும் புகலிட மாக விளங்குகிறது. இலக்கியம், இலக்கணம், மொழி எனும் குறுகிய வட்டத்திற்குள் நின்றுவிடாது தமிழில் செழித்து நிற்கும் பிற துறைகளை (அறிவியல், சமூகவியல்...) இனங்காட்டியும், தழைக்க வேண்டியவற்றிற்கு (சுவடிப்பதிப்பு...) உரமிட்டும், தானும் வளர்ந்து தமிழையும் வளர்த்து வருகிறது. மிகக் குறுகிய காலத்திற்குள் (20 ஆண்டுகளில்) குறைந்த பணியாளரைக் கொண்டுப் பல்வேறுதுறைகளில் 185 நூல்களை வெளியிட்டிருப்பது தமிழுலகம் பாராட்டுகின்ற சாதனையாகும்.

உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் நிகழ்கையில் அதனை யொட்டித் தேவையான பல நூல்களை வெளியிட வேண்டும் என்பதும் அதன் தலையாய குறிக்கோள்களுள் ஒன்று. மதுரையில் 1981இல் ஐந்தாம் மாநாடு நிகழ்ந்தபோது நூல்கள் பல வெளிக் கொணரப்பட்டன. தமிழர் நலம், தமிழ்மொழி என இவற்றின் உரிமை நலம் காக்கும் தமிழன்னை மாண்புமிகு தமிழக முதல்வர் சமூக நீதி காத்த வீராங்கனை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது சீரிய தலைமையில் 1995சனவரியில் தஞ்சையில்

நிகழவிருக்கும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் 'தமிழ் ஆய்வுக் களங்கள்' நூல் முதலாவதாக வெளிவருகிறது. மற்றும் பல நூல்கள் தொடர்ந்து வர உள. காலச் சூழலுக்கேற்ப, ஆய்வுலகின் தேவையறிந்து கருத்தரங்குகளும், ஆய்வுகளும் நிகழ்த்தி அவற்றை வெளியுலகு பயன்பெறச் செய்வது இந் நிறுவனத்தின் இடையறா பணியாக இருந்து வருகிறது.

இன்று தமிழில் ஆராய்ச்சி பலவிதமாகப் பல்கிப் பெருகியிருந் தாலும் ஆய்வுப் பொருளைத் தேர்வு செய்வதில் இயலாமை, மயக்கம், ஒரே நெறியில் ஒரே பொருளில் பல ஆய்வுகள் எனப் பல குறைகள் உள. அவற்றை நீக்கவும், ஆய்வாளருக்கு ஆய்வில் துணை நிற்றல் வேண்டியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட பெரு முயற்சியின் பயனே இந்நூல். தமிழில் ஆய்வு செய்ய இனி என்ன இருக்கிறது என்று கேட்போருக்கும், எப் பொருளை எங்ஙனமெல்லாம் ஆய்வு செய்யலாம் என விழை வோருக்கும் விடையாக, வழிகாட்டியாக, கையேடாகக் கனிந் துள்ளது. அன்று தொட்டு இன்று வரையிலும் அனைத்தையும் உள்ளடக்கிய நிலையில் பல்துறைகளையும் பயன்கொளச் செய்யும் பெருமையைப் பெற்றுள்ளது. 'கூறியதனால் கூறாதது முடித்தல்' எனும் தொல்காப்பியர் உத்தியையும் கற்போரை நினைவிற் கொளச் செய்கிறது.

1992இல் நிறுவனத்தில் நிகழ்ந்த 3நாள் ஆண்டுக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும் இந்நூல். அவ்வத் துறையில் துறைபோகிய 30 அறிஞர் பெருமக்களின் கருத்துரையை ஒருங்கிணைத்துப் பெறல் என்பது எளிய பணியன்று. அதனைச் சிறப்புற, தேவையான பொழுதில் நிறைவேற்றித் தந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைப் பெரிதும் பாராட்டு கின்றேன். நூலாக்கத்திற்குத் துணைநின்ற அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

க. பொன்னுசாமி

சிலசொல்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1968இல், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுத் தொடர்பில், அப்போதைய தமிழக முதல்வர் டாக்டர் சி. என். அண்ணாதுரையால் உருவாகும் நிலை பெற்றது, 1970இல் இந்நிறுவனம் ஒரு அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டது. 1972முதல் தற்போது இயங்கி வரும் சி.ஐ.டி வளாகக் கட்டிடத்தில் செயற்படுகிறது.

நிறுவனம் 1975 முதல் ஆண்டுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. 1975இல் ஆராய்ச்சி நெறிமுறைகளும் 1976இல் தமிழர் நாட்டுப்புறவியல் கருத்தரங்கும் நடத்தப் பெற்றன.

தமிழரின் பண்பாட்டு மரபுச் செல்வத்தை இனங்காணும் முயற்சியில், 1977 முதல், ஆண்டிற்கொன்றாக, எட்டுக் கருத்தரங்குகள் நடத்தப்பெற்று, கட்டுரைகள் (ஆங்கில) வெளியீடுகளாகக் கொணரப்பெற்றன. பண்பாடு (1981), மொழியும் இலக்கணமும் (1980), இலக்கியம் (1981), வரலாறு (1983), தத்துவம் (1983), சித்த மருத்துவம் (1984), கல்வியும் தொழிலும் (1986), கலையும் கட்டிடக் கலையும் (1983) என்பன அவை.

தொடர்ந்து 1989இல், 'இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழரின் கொடை' எனும் நோக்கில் கருத்தரங்கம் நிகழ்ந்தது.

1989 டிசம்பரில் அப்போதைய நிறுவன இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களும், நிறுவன முதுநிலை ஆய்வாளர் முனைவர் ந. கடிகாசலம் அவர்களும் இணைந்து 'தமிழ் ஆய்வுக் களங்கள்' எனும் ஆண்டுக் கருத்தரங்கிற்குரிய அடிப்படையைத் தோற்றுவித்தனர். நிறுவன நிதிநிலை கருதி, 1990 ஏப்ரலுக்குப் பின் இத்திட்டம் செயற்படலாம் என ஒத்திவைக்கப்பட்டது. 1990 செப்டம்பரில் நிறுவன ஆய்வலுவலர்க்கும், வெளியே ஆய்வறிஞர் பலர்க்கும் இத்திட்டம் தெரிவிக்கப்பட்டுக் கட்டுரை வழங்கிக் கருத்தரங்கில் கலந்துகொள்ள ஒப்புதல் வேண்டப்பட்டது. ஒப்புதல் அளித்தவர்க்கு, தொடர்ந்து நவம்பர் 90இலும் பெப்ருவரி '91 இலும் நினைவூட்டுதல்கள் அனுப்பப் பெற்று, '91 மார்ச்சு 25-27 நாட்களில் கருத்தரங்கு நிகழ்ந்தது.

தமிழாய்வு வளர வேண்டும், வளம்பெற வேண்டும் என்ற நோக்கில் இம்முயற்சி தொடங்கப் பெற்றது. ஒவ்வொரு துறையிலும் அனுபவம் வாய்ந்த மூதறிஞர் கருத்துகள் வழங்குவது இளந் தலைமுறையினர்க்குப் பயனுடையதாக அமையும்.

ஆய்வு எந்தக் கோணத்தில் சென்றது, எந்தப் போக்கில் இனிச் செல்ல வேண்டும், ஆராயாது விடப்பெற்ற இடங்கள் எவையெவை, மேலும் ஆய்தற்குரிய தலைப்புகள் என்னென்ன, குறிப்பிட்ட துறைக் கல்விக்கு மேம்பாடு தர எத்தகைய ஆய்வுகள் உதவும், துறைகட்கிடையே உள்ள ஒப்பாய்வு அல்லது இணைவாய்வின் வாய்ப்புகள் எத்தகையன (Inter-disciplinary) என்பன போன்ற சிந்தனைகள் இக்கட்டுரையில் விளக்கம் பெறுமாயின் ஆய்வுலகம் பயன்படும்.

தமிழாய்வுப் போக்கு, தமிழ்க் கல்விப் போக்கை ஒட்டியதா என்பதும் ஆயத்தக்கது. தமிழ் சார்ந்த அல்லது தமிழுடன் இணையத்தக்க குறிப்பிட்ட கல்வித் துறைகளும், பாடத்திட்டங்களும் கல்லூரி/பல்கலைக் கழகங்களில் உட்படும்போது, காலந்தோறும், அதற்கேற்ப ஆய்வுத் துறைகளும் உருவாகி வருகின்றன. மொழிபெயர்ப்பியல், நாட்டுப்புறவியல், மொழியியல், இதழியல், மகளிர் ஆய்வுகள், பதிப்பியல் என இது பரக்கின்றது.

பிற துறை அறிவும் தொடர்பும் கூடத் தமிழாய்வுப் போக்கில் புதிய பரிமாணங்கள் வழங்கியுள்ளன. சமூகவியல், மானுடவியல், உரலாற்றியல், அறிவியல்...எனச் சார்த்தித் தமிழ் மொழி-இலக்கியம்—பண்பாடு—கலை என இணைத்துக் காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கட் தொடர்புச் சாதன வகைப் பெருக்கு, அவற்றையும் உளனாக்கி ஆய்வுகள் வழங்கியுள்ளது. மேலும் ஆய்வு நிறுவனங்களைப்பற்றியும், சிறப்பான நூல் வெளியீட்டகங்களைப் பற்றியும், தமிழுக்குத் தொண்டாற்றிய பெருமக்கள், அறிஞர் பற்றியும் தற்போது ஆய்வுகள் எழுகின்றன. இவை புதிய போக்குகளாகத் தென்படுகின்றன.

இதைத்தான் ஆய்தல் வேண்டும் என்ற பழநோக்கம் மாறி, தற்போது எதையும் ஆராயலாம் என்ற உணர்வுக்கு வழிவிட்டுள்ளது. பழையனவான செவ்விலக்கிய இலக்கண ஆய்வுகள் குன்றி, அத்தகு தலைப்பு விருப்பு கழிந்து, புதுப் புது நோக்குகள் புகுந்துள்ளன. அகலாய்வுகளை விட ஆழாய்வுகளும், விரிவாய்வு

களைவிடச் சுருக்கஆய்வுகளும் இக்காலக் கோலமாகின்றன. இவ்வாறு ஆய்வுப் போக்குகள் மாறிவருதலின் காரணமும் ஆய்தற் குரியது.

20ஆம் நூற்றாண்டு முற்பாதியில் 'தமிழுணர்வு' கிளைத் தெழுந்து இயக்கமாகவே அமைந்துவிட்ட நிலையில், அது ஆய்தற் குரிய ஒரு இன்றியமையாத களனாகின்றது (நன்றி: முனைவர் ஔவை நடராசன் அவர்கள்). அரசியலும், சமூகமும், பண்பாடும் பின்னிப் பிணைந்த பின்புலம்; குறிப்பிட்ட இன ஆதிக்கம், இனப் பற்று எனப் பன்முகம் கொண்ட பான்மையினதாக இது வெளிப் படுகின்றது. நாட்டுப்புறவியல் எனும் துறை எழுச்சியும் இவ்வாறே ஆய்தற்குரியதாகச் சுட்டப்பெற்றது.

பேராய்வுகள் ஒருபுறமமைய, ஆய்வுப்பட்டங்களை எதிர் நோக்காத அரிய ஆய்வுகளும் நூல்களாக, அறக்கட்டளைச் சொற் பொழிவுகளாக, கட்டுரைகளாக, பொழிவுகளாக வெளிப்படு கின்றன. புதிய புதிய பார்வைக் கோணங்களையும், அணுகுமுறை களையும் இவை புலப்படுத்துகின்றன. தமிழுக்கு வளஞ்சேர்க்கும் இத்தகு கொடைகளே தனியாய்வுக் களம் வழங்கத்தக்கனவாகும்.

இலக்கிய எழுச்சி மட்டுமன்றி, இயக்கங்களும், திறனாய்வு வளர்ச்சியும் ஆய்வுப் பொருளாகலாம். குறிப்பிட்ட நூல் (சிலப்பதி காரம்) அல்லது ஆசிரியர் (பாரதியார்) பற்றிய எழுத்துகளை-ஆய்வுகளை, திறனாய்வுகளை-ஆய்வு அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளமை தற்கால ஆய்வேடு சிலவற்றைப் பார்க்கும்போது தெரிகிறது.

பன்மொழிக் கல்வி, ஒப்பீட்டாய்வுக்கு உந்துதலாகவும், தூண்டுதலாகவும் அமைகின்றது. ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு எனும் உணர்வுகளும் இத்தகு களத்திற்கு உறுதுணையாக அமைந் துள்ளன.

1930இல் சுப்பிரமணிய சாஸ்திரியால் (History of Grammatical Theories in Tamil and their Relation to the Grammatical Literature in Sanskrit-University of Madras) தொடங்கப்பட்ட சுமார் 60 ஆண்டு காலத் தமிழாய்வு வரலாறு தனியானதும், சிறப் பானதும், ஆழமானதுமான கல்விக்கு உரியது. அதனைப் பின் னோக்கியும், இனியெழும் ஆய்வுப் பெருக்கை எதிர்நோக்கியும் இக் கருத்தரங்கம் உருவாகியது.

"ஆய்வு மாணவர்க்கு வழிகாட்டியாக அமைதல்; தமிழாய்வில் இதுவரை வந்தவற்றினின்றும் இப்பொழுது நிகழும் / இனி நிகழ விருக்கும் ஆய்வுகளை எவ்வகையில் செம்மைப்படுத்தலாம், எவ் வகையில் வளர்ச்சிக்கு அடிகோலலாம் என்று ஆராய்தல்; இனி, பார்க்க வேண்டிய புதிய பார்வைகளை/கோணங்களைக் கண்டறி தல்; பழுத்த பட்டறிவுமிக்க ஆய்வு நெறியாளர்களைக்கொண்டு, பல்வேறு துறையிலான செய்திகளைத் திரட்டி, அவற்றை ஆய்வு நோக்குடன் வழிகாட்டலாக / நெறிப்படுத்தலாக அமைத்தல்" ஆகியவை இக்கருத்தரங்கின் நோக்கங்களாகும்.

ஆய்வறிஞர் பெருமக்களிடம் நிறுவனம் எதிர்பார்க்கும் கட்டுரைத் தன்மையும் குறிப்பிடப் பெற்றது :

1) எடுத்துக்கொண்ட தலைப்பில் இதுவரை வந்துள்ள ஆய்வுகள் பற்றிய சிறு அறிமுகம்/மதிப்பீடு, 2) ஆய்வுச் சிக்கல் களும் அவற்றுக்கான தீர்வுகளும், 3) விரிவான நிலையில் இனி செய்யப்பட வேண்டிய ஆய்வுகள், 4) அணுகுவதற்கான ஆய்வு நெறிமுறைகள், 5) இனி செய்வதற்கான புதிய தலைப்புகள், 6) தேர்ந்த துணையாகு நூற்பட்டியல் ஆகியவற்றை உள்ளடக்கிய தாகத் தங்களின் ஆய்வுக்கட்டுரை அமைதல் வேண்டும். 7) ஆய்வு மாணவர்க்கு வழிகாட்டியாதலின் முழுநிலையில் ஆய்வு நெறி முறைகளைப் பின்பற்றியும் கட்டுரை அமைதல் இன்றி யமையாதது.

நாற்பத்தி மூன்று ஆய்வறிஞர் கட்டுரை வழங்கிக் கலந்து கொள்ள இசைவளித்திருந்தனர். தற்போது, இத்தொகுதியில் பல துறைச் சார்பினவான முப்பது எழுத்துரைகள் அமைகின்றன. இந்நூல் ஆய்வுலகத்திற்கு ஒரு வழிகாட்டியாக, புதுப்பாதையாக அமையும் என நம்புகிறோம்.

கருத்தரங்கு நிகழப் பலர் உற்றுழி உதவியாயினர் - உறுதுணை யாயினர்.

கருத்தரங்கிற்குத் தலைமையேற்றுத் தொடக்கவுரை நிகழ்த் திய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை மேனாள் செயலர், இந் நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள்; சிறப்புச் சொற்பொழிவாற்றிய, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ஜெயாகோதை பிள்ளை அவர்கள்;

கருத்தரங்க ஆய்வுகளுக்குத் தலைமை தாங்கிய நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள்; சென்னைப் பல்கலைக் கழகத் தமிழிலக்கியத் துறைத் தலைவர் முனைவர் பொற்கோ அவர்கள்; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை மேனாள் தலைவர் முனைவர் அ. அ. மணவாளன் அவர்கள்; பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் க.ப. அறவாணன் அவர்கள்; திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை மேனாள் தலைவர் முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்கள்;

கருத்தரங்கக் கட்டுரையளித்துச் சிறப்பித்துள்ள பல்துறை அறிஞர் பெருமக்கள்; கருத்தரங்கிற்கு அடித்தளமிட்டுத் தந்த நிறுவன மேனாள் இயக்குநர் முனைவர் சிவம்பொலி சு. செல்லப்பன் அவர்கள்;

கருத்தரங்கப் பங்கேற்பாளருக்குக் கோப்பு முதலியன வழங்கவும், கருத்தரங்கக் கட்டுரைத் தொகுப்பைக் கட்டம் செய்திடவும் நிதியுதவி நல்கிய மதுரை கப்பலூர் தியாகராசர் மில்ஸ் நிறுவனத்தார்;

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர், அலுவலர், கல்வியாளர் என இவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றி தெரிவிக்கிறோம்.

சென்னை-113
12—8—'94

அன்னி தாமசு
இயக்குநர் (பொறுப்பு)

பதிப்புரை

தமிழாய்வின் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் துணை புரியும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆண்டுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. இவ் வரிசையில் 1991 மார்ச் திங்களில் 'தமிழ் ஆய்வுக் களங்கள்' எனும் தலைப்பில் நிகழ்ந்த கருத்தரங்கில் வழங்கப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பு இப்போது நூல் வடிவம் பெற்றுள்ளது.

இளந்தலைமுறை ஆய்வாளர்க்குப் பெரிதும் பயன் படும் வகையில் இந்நூல் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. தமிழ்கூறு நல்லுலகிற்கு நிறுவனம் வழங்கும் மற்றொரு சிறப்பு நூல் இது எனலாம்.

'தமிழ் ஆய்வுக் களங்கள்' நூல் வடிவம் பெறுவதற்கு உறுதுணையாய் இருந்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர்களுக்கு நன்றி கூறுவது என் கடமை.

சிறப்பாணதொரு அணிந்துரை அளித்துதவிய நிறுவனத் தலைவரும் மாண்புமிகு கல்வியமைச்சருமான பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பணி நிறைவேற்றத்திற்கு முழு நிலையில் உறுதுணை புரிந்த நிறுவன முதுநிலை ஆய்வாளர் முனைவர் ச. சிவகாமி; மெய்ப்புத் திருத்துவதில் உதவிய நிறுவன ஆய்வு மாணவர் பு. பாலாஜி; சிறப்புச் சொல்லகராதி தயாரித்தளித்த நிறுவன மொழிபெயர்ப் பியல் பட்டய வகுப்பு மாணவியர் செல்வி பா. தமிழ்ச் செல்வி, செல்வி இரா. சானகி; சிறந்த முறையில் நூலை அச்சிட்ட கவின்கலை அச்சக உரிமையாளர் நாரா. நாச்சியப்பன் ஆகியோருக்கும் நன்றி.

தமிழுலகம் இந்நூலைப் பெரிதும் வரவேற்கும் என்று நம்புகிறோம்.

சென்னை-113
25—8—1994

—ந. கடிகாசலம்

தமிழ் ஆய்வுக் களங்கள் கருத்தரங்கம்
திட்டமிட்ட தலைப்புகள்

1. இலக்கியம்

அ) சங்க இலக்கியம்.

ஆ) நீதி இலக்கியம்

இ) பக்தி இலக்கியம்

சைவம், வைணவம், சமணம், பௌத்தம்
கிறித்தவம், இசுலாம், சித்தர்

ஈ) காப்பியம்

உ) சிற்றிலக்கியம்

அகம், புறம், பக்தி

ஊ) படைப்பிலக்கியம்

சிறுகதை, குறும்புதினம், புதினம், கவிதை—
மரபுக் கவிதை, புதுக்கவிதை
தனிப்பாடல்கள், நாடகம்—
உரைநடை நாடகம், கவிதை நாடகம்,
மேடை நாடகம்

எ) உரைநடை இலக்கியம்

வாழ்க்கைவரலாறு, பயணம், மடல், கட்டுரை

ஏ) சிறுவர் இலக்கியம்

ஐ) சுவடிப் பதிப்பு

ஒ) உரையாசிரியர்

ஓ) மொழிபெயர்ப்பு

2. இலக்கணம்

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி,
நிகண்டுகளும் அகராதிகளும்

3. நாட்டுப்புறவியல்

நாட்டுப்புறக் கலைகள்
நாட்டுப்புறக்கதைகளும் கதைப்பாடல்களும்
நாட்டுப்புறப் பாடல்கள்
பழமொழிகளும் விடுகதைகளும்

4. ஒப்பியல்

தமிழோடு தமிழ், தமிழ்-ஆங்கிலம்
தமிழும் பிற திராவிட மொழிகளும்
தமிழும் பிற இந்திய மொழிகளும்

5. நுண்கலைகள்

கோயில், இசை, நாட்டியம், சிற்பம், ஓவியம்,
கட்டடக் கலை

6. மொழியியல்

நடையியல், கிளைமொழி
இக்கால மொழியியல், மொழி கற்பித்தல்

7. மக்கள் தொடர்புத்துறை

இதழியல்—இதழ்களும் இலக்கிய வளரீச்சியும்
இதழ்களும் மொழிவளர்ச்சியும்
வானொலி —தொலைக்காட்சி
திரைப்படம்
தமிழ் நிறுவனங்களும் மடங்களும்
கவியரங்கம் — பட்டிமன்றம் — சொற்பொழிவு

8. தமிழும் பிற துறைகளும்

அறிவியல், உளவியல், மருத்துவம்,
கல்வெட்டு, வரலாறு, பொருளியல்,
தத்துவம், தொல்பொருள், ஊர்ப்பெயர் ஆய்வு,
நாணயவியல், சமூகவியல்,
மானுடவியல், சித்த மருத்துவம்,
மகளிர் பற்றிய ஆய்வு,
பிற நாடுகளில் தமிழும் தமிழரும்

கட்டுரையாளர்

முனைவர் வீ. அரசு, விரிவுரையாளர், தமிழ் இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

முனைவர் க.ப. அறவாணன், பேராசிரியர், சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழி & இலக்கிய உயராய்வு நிறுவனம், புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி-605 014.

முனைவர் அன்னி தாமசு, இயக்குநர் (பொறுப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை-600 113.

முனைவர் பீ.மு. அஜ்மல்கான், பேராசிரியர், தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-625-021.

முனைவர் ஜாண். ஆசீர்வாதம், தமிழ்த்துறை, கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை-600 059.

முனைவர் அரங்க. இராமலிங்கம், தமிழ் விரிவுரையாளர், அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை-600 005,

முனைவர் சூ. இன்னாசி, பேராசிரியர், கிறித்தவத் தமிழிலக்கியத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

முனைவர் ந. கடிகாசலம், முதுநிலை ஆராய்ச்சியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113.

முனைவர் கி. கருணாகரன், பேராசிரியர், மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக் கழகம். கோவை-641 046

முனைவர் இரா. காசிராசன், இணைப் பேராசிரியர், தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-625 021

முனைவர் ப. கிருஷ்ணன், உயர்நிலை ஆய்வாளர். தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

திரு. எஸ்,எஸ். குமார் (வான்முகில்), விரிவுரையாளர், ஆங்கிலத் துறை, இரா.வே. அரசு கலைக்கல்லூரி, செங்கல்பட்டு.

முனைவர் இராம. குருநாதன். தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030

முனைவர் தா.ஏ. சண்முகம், (ஓய்வு) உளவியல் துறை, சென்னைப் பல்கலைக் கழகம். சென்னை-600 005.

முனைவர் ச. சிவகாமி. முதுநிலை ஆராய்ச்சியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600 113.

முனைவர் பூ, சுப்பிரமணியம். சுவடியியல் துறை,ஆசியவியல் ஆய்வு நிறுவனம், திருவான்மியூர், சென்னை-600 041.

முனைவர் ச.வே. சுப்பிரமணியன், மதிப்புறு இயக்குநர், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர்-627 808

முனைவர் ந. சுப்புரெட்டியார். மேனாள் தமிழ்த்துறைத் தலைவர், திருவேங்கடவன் பல்கலைக்கழகம், AD-13, அண்ணா நகர், சென்னை-600 040.

முனைவர் நா. செயப்பிரகாசு. தமிழ்த் துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030.

முனைவர் தூ. சேதுபாண்டியன். தமிழ் விரிவுரையாளர், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-625 021.

முனைவர் சு. திருநாவுக்கரசு, பேராசிரியர், சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்-604 304

முனைவர் சி.கோ. தெய்வநாயகம், கட்டடக்கலைத் துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 005

முனைவர் பா. புவனேசுவரி, தமிழ்த் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600 032.

முனைவர் பூவண்ணன், தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு), 1, பாரதி பூங்கா 4ஆம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோயம்புத்தூர்-641 011.

முனைவர் ஏ. என். பெருமாள், மேனாள் இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அரிகிருஷ்ணா இல்லம், ஒசரவிளை, புத்தளம் (அஞ்சல்)-629 602

முனைவர் இரா. மாணிக்கவாசகம், தமிழ்த் துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030

முனைவர் பழ. முத்தப்பன், முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி-622 403

முனைவர் பா. வளன் அரசு, தமிழ்த்துறைத் தலைவர், தூய யோவான் கல்லூரி, திருநெல்வேலி.

முனைவர் சு. வேங்கடராமன், இணைப் பேராசிரியர். தமிழியல் துறை, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-625 021.

முனைவர் வ. ஜெயா, மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை-641 046

உள்ளே

		பக்கம்
1,	பொருளிலக்கணம் *சு.வே. சுப்பிரமணியன்*	1
2,	யாப்பியல் *அன்னி தாமசு*	14
3.	தனிப்பாடல்கள் *ப. கிருஷ்ணன்*	24
4.	சைவம் *சு. திருநாவுக்கரசு*	45
5.	சித்தர் *இரா. மாணிக்கவாசகம்*	60
6.	இசுலாமிய இலக்கியம் *பீ.மு. அஜ்மல்கான்*	73
7.	கிறித்தவம் *சூ. இன்னாசி*	88
8.	பாரதிதாசன் *அரங்க. இராமலிங்கம்*	95
9.	சிறுகதை *இராம. குருநாதன்*	100
10.	குறுநாவல் *சு. வேங்கடராமன்*	110
11.	கவிதை நாடகம் *ஏ. எஸ். பெருமாள்*	124
12.	வாழ்க்கைவரலாற்று இலக்கியம் *பா. புவனேசுவரி*	133
13.	பயண இலக்கியம் *ச, சிவகாமி*	151
14.	கட்டுரை *ஜாண். ஆசீர்வாதம்*	160
15.	சிறுவர் இலக்கியம் *பூவண்ணன்*	190
16.	நாட்டார் பாடல்கள் *வீ. அரசு*	203

17. நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும்
பா. வளன் அரசு 213

18. இதழ்களும் மொழிவளர்ச்சியும்
தூ. சேதுபாண்டியன் 231

19. இதழியல்
இரா. காசிராசன் 242

20. வானொலி - தொலைக்காட்சி
ந. கடிகாசலம் 255

21. சைவத் திருமடங்கள்
பழ. முத்தப்பன் 260

22. தனித்தமிழ்
நா. செயப்பிரகாசு 273

23. நடையியல்
வ. ஜெயா 297

24. கிளைமொழியியல்
கி. கருணாகரன் 319

25. ஒப்பிலக்கியம்
எஸ்.எஸ். குமார் (வான்முகில்) 344

26. தமிழாய்வுக்குப் பன்முக அறிவின் தேவை
க.ப. அறவாணன் 365

27. தமிழும் அறிவியலும்
ந. சுப்புரெட்டியார் 374

28. தமிழும் உளவியலும்
தா.ஏ. சண்முகம் 381

29. கட்டடக்கலை
சி.கோ. தெய்வநாயகம் 387

30. சுவடிப் பதிப்பு
பூ. சுப்பிரமணியம் 402

பின்னிணைப்புகள்

1. தேர்ந்த துணைநூற்பட்டியல் 425
2. சிறப்புச் சொல்லகராதி 427

பொருளிலக்கணம்

ச. வே. சுப்பிரமணியன்

இந்திய மொழிகளில் எதற்கும் இல்லாத சிறப்பு பொருள் இலக்கண நிலையில் தமிழுக்கு உண்டு. பொருளிலக்கணம் பொது நிலையில் இலக்கியத்திற்குரிய பொருளைக் கூறுகின்றது. பொருளிலக்கணத்தில் இலக்கியக் கொள்கைகள், இலக்கியத் திறனாய்வுகள், யாப்பமைப்புகள் இலக்கிய வகைகள் அனைத்தும் அடங்குகின்றன.

1. 'பொருள்' என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி 27 பொருள்களைத் தருகின்றது[1]. முக்கியமான பொருள்கள் பல விடுபட்டுள்ளன. அதனைத் தொல்காப்பியத்தில் 'பொருள்' என்ற சொல் 128 இடங்களுக்குப் பயன்பட்டுள்ளமையும் (பின்னிணைப்பில் காண்க) அதன் பொருள்களிலிருந்தும் தெரிந்து கொள்கிறோம்.

2. 'இலக்கணம்' என்ற சொல் தொல்காப்பியத்தில் நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

(அ) இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல 510—4[2]

---

1. வஸ்து - Matter; 2. சொற்பொருள் - Meaning; 3. விஷயம் - Subject matter; 4. உண்மைக் கருத்து - Essence 5. Object-காரியம்; 6. தத்துவம் - Essential principle; 7. மெய்ம்மை-reality; 8. மதிக்கப்படுவது - Important; 9. கல்வி - Learning; 10. அறிவு - Knowledge; 11. கொள்கை - Doctrine; 12. அறம் - Virtue; 13. பயன் - Result; 14. மோட்சம் -Final bliss; 15. கடவுள்-God; 16. திரவியம் - Property; 17. பலபண்டம் - Provisions; 18. பொன் - Gold; 19. புத்திரன் - Son; 20. தந்திரம் - Device 21. சுணங்கு - Beauty spot; 22. உவமேயம்- The thing compared; 23. உறுதி - Objectives of human existence; 24. அருத்தாபத்தி - Deduction; 25. அகமும் புறமுமாகிய திணைப் பொருள் - Affairs of life. 26. அர்த்த சாஸ்திரம் - Science of political economy; 27. தலைமை - Leadership.

2. இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ள தொல்காப்பிய நூற்பா எண்கள்—தொல்காப்பியம் மூலம், P. சிதம்பர புன்னைவனநாத முதலியார் பதிப்பு, 1922.

(ஆ) புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் 1002—2

(இ) இழைபின் இலக்கணம்...1498—4.

(ஈ) இழைத்த இலக்கணம் பிழைத்தன போல 1499—2

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் பொது வழக்காதலின் ''எல்லே இலக்கம்'' 753—1; என்ற நூற்பாவின் வழி இலக்கிய அடிப்படையையும் உணர்கின்றோம்.

3. 'பொருளிலக்கணம்' தமிழுக்கே உரிய ஒன்று. இந்திய மொழிகளில் எதற்கும் இல்லாத சிறப்பு பொருள் இலக்கண நிலையில் தமிழுக்கு உண்டு. இந்திய மொழிகளில் இலக்கண நூல் முதல் நூலாக அமைகின்ற பெருமையும் தமிழுக்கு உண்டு.

3. அ. பொருளிலக்கணத்தில் 'பொருள்' என்பதை விளக்க வந்த நச்சினார்க்கினியர் ''பொருளாவன அறம் பொருளின்பமும், அவற்றது நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடு பேறுமாம். பொருளெனப் பொதுப்படக்கூறவே, இவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியுங், காட்சிப் பொருளுங் கருத்துப் பொருளும், அவற்றின் ஐம்பெரும் பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும், நிலத்திணையும் பிறவும் பொருளாம்'' என விளக்குகின்றார்,

4. பொருளதிகாரத்தில் முதல் கரு உரிப் பொருள்கள் எனக் கூறும்போது—முதல் பொருள் நிலத்தையும் பொழுதையும் குறிக்கின்றது. கருப்பொருள் நிலத்திலுள்ள பொருள்கள், நிலத்தோடு தொடர்புடைய பொருள்கள் அனைத்தையும் குறிப்பிடுகின்றன—இவை பருப்பொருளில் Time and Space இரண்டையும் உணர்த்துகின்றன.

உரிப்பொருள் என்பது அந்நிலத்திலுள்ள செயல்கள், செயற்பாடுகள் இவற்றைப் பேசுகின்றன. இம்மூன்றும் இணையும்போது தான் உலகம் செயல்படுகின்றது. இதனைத் தான் 'Time, space and action' என்று கூறுகிறோம். இதனால் பொருளிலக்கணத்தில் அனைத்தும் அடங்குகின்றன என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

5. பொருளிலக்கணம் பொது நிலையில் இலக்கியத்திற்குரிய பொருளைக் கூறுகின்றது. அப்பொருள் அகப்பொருளாகவோ, புறப்பொருளாகவோ அமையலாம். அகப்பொருள் வீட்டு வாழ்க்கையையும் புறப்பொருள் நாட்டு வாழ்க்கையையும் பற்றிப் பேசுகின்றன, அதை வெளியிடுவதற்கு ஒரு வடிவம் தேவைப்பட்டது. அதுவே செய்யுளாயிற்று. அதை, உடல், உள

உணர்ச்சிகளுடன் வெளியிட முயலும்போது மெய்ப்பாடு தோன்று கிறது. அதை அழகாகப் பிறர் புரிந்து கொள்ளும் நிலையில் வெளியிட உவமவியல் அடித்தளமாக அமைந்தது. அதைத் தமிழ் மரபின் நிலைக்களத்தில் நிறுத்திக் கூற மரபியல் பயன்படுகின்றது. இதனால் பொருளிலக்கணத்தில் இலக்கியக் கொள்கைகள், இலக்கியத் திறனாய்வுகள், யாப்பமைப்புகள், இலக்கிய வகைகள் அனைத்தும் அடங்குகின்றன.

6. இலக்கணம் என்பது—நடந்தவைகளை வைத்துக் கொண்டு கொள்கைகளை வகுத்துத் தருவது என்பது மட்டுமல்லாமல் நடக்க இருப்பவைகளையும் கோடிட்டுக் காட்டுவதாகும்.

6. அ. சான்றாக. இலக்கிய வகைகளாகப்
பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே,
அங்கதம், முதுசொல் அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவரி தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்

(தொல். செய். 75)

என்று கூறியுள்ளமை—நடந்தவைகளை வைத்துக் கொள்கை களைத் தருவது.

6. ஆ. விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே

(தொல். செய். 239)

இங்கு இந்நூற்பா புதுவதாகத் தோன்றுகின்ற இலக்கியங்கள் அனைத்திற்கும் வித்தாக அமைகின்றது. இவ்விதை 96 பிரபந்த வகைகளாகி, இப்போது 200க்கு மேற்பட்ட இலக்கிய வகைகளாக முகிழ்த்திருப்பது நடக்க இருப்பவைகளைக் கோடிட்டுக் காட்டுவது.

6. இ. இவற்றோடு எல்லா இலக்கண நூல்களிலும் ஒவ்வொரு அதிகாரத்திலும், இயலிலும் 'புறனடை' கூறுவதன் நோக்கமே, புதிதாக வந்தவைகள் முன்பு கூறப்படாதவைகளாக இருந்தால் அதனையும் தெளிவுபடுத்தி இலக்கணம் அமைத்தல் அறிவுடையோர் கடமை என்பதாகும்.

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவஉள எனினும் வந்தவற்றியலான்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே.

(தொல்-செய்-235)

பொருளிலக்கணம்

அகம்				புறம்
1	3	4	5	2
அகத்திணை யியல்	களவியல்	கற்பியல்	பொருளி யல்	புறத்திணை யியல்

அகத்திணையியல்
களவியல்
வரைவியல்
கற்பியல்
ஒழிபியல்

தமிழ்நெறி விளக்கம்
|
நம்பியகப் பொருள்
|
மாறனகப் பொருள்
|
இறையனார் களவியல்
|
களவியற் காரிகை

பன்னிரு படலம்
|
புறப்பொருள் வெண்பா மாலை

ஐந்திலக்கண நூல்கள்

1. வீரசோழியம்
2. இலக்கண விளக்கம்
3. தொன்னூல் விளக்கம்
4. முத்து வீரியம்
5. சுவாமி நாதம்
6. அறுவகை இலக்கணம்

இவை அனைத்தும் பொருளிலக் கணம் உடையவை. பொருத்திப் பார்த்துக் கால மாற்றத்தால் ஏற்பட்டவை களைக் கணிக்கலாம்.

செய்யுளியல்	உவம வியல்	மரபியல்	மெய்ப் பாட்டியல்
8	7	9	6

யாப்பு அணி

யாப்புநூல்கள்—பாட்டியல் நூல்கள்

நற்றத்தம்	இந்திரகாளியம்	தண்டியலங்காரம்
பல்காயம்	வெண்பாப்பாட்டியல்	மாறனலங்காரம்
அவிநயம்	பன்னிருபாட்டியல்	உவமானசங்கிரகம் வளர
காக்கைப் பாடினியம்	நவநீதப்பாட்டியல்	சந்திராலோகம் வேண்டிய
	வரையறுத்தபாட்டியல்	குவலயானந்தம்-1 ஒன்று
மயேச்சுரர் யாப்பு	இலக்கணவிளக்கம்	குவலயானந்தம்-2உடலியல் உளவியல்
யாப்பருங்கலம்	பாப்பாவினம்	
யாப்பருங் கலக்காரிகை	பிரபந்தத்திரட்டு பிரபந்த தீபிகை பிரபந்த தீபம்	
ஏனைய.	விருத்தப்பாவியல் பொருத்தவிளக்கம் ஏனைய.	நிகண்டுகள்

7. பொருளிலக்கணம் தொல்காப்பியக் காலத்திலிருந்து இன்று வரை எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை மரவரிப் படம் (Tree diagram) காட்டுகிறது.

8. இவ்வரை படத்திலிருந்து நாம் தெரிந்து கொள்வது :

(அ) பகுதியாக வளர்ந்துள்ள இலக்கியத் துறையாகிய யாப்பிலக்கணமும், பாட்டியல் நூல்களும், தமிழ் தோன்றியதிலிருந்து இன்று வரை இலக்கிய வகைகளும் வடிவங்களும் மாற்றங்களை அடைந்து வருவதைக் காட்டுகின்றன.

(ஆ) அணி இலக்கண நூல்களாக, வடமொழி மரபுத் தாக்கத்தால் ஆறு நூல்கள் தோன்றியுள்ளன.

(இ) அகப் பொருள் இலக்கண நூல்களாகச் சில தோன்றியுள்ளன. அவற்றுள்ளும் களவியலுக்கு மட்டுமே இரு நூல்கள் தோன்றியுள்ளன.

(ஈ) புறப்பொருள் இலக்கணம் அடுத்த நிலையில் உள்ளது.

(உ) மரபியலின் அடிப்படையில், பல வகையான நிகண்டுகள் தோன்றியுள்ளன.

(ஊ) உடல், உளவியல், கொள்கைகளாகிய மெய்ப் பாட்டியல் இன்னும் வளர வேண்டிய நிலையில் உள்ளது.

9. பொருளிலக்கணம்—அகப் புறப் பொருள்களைக் கூறுவதால்—சமுதாயவியல் நோக்கிலும் (Sociology) மானுடவியல் நோக்கிலும் (Anthropology) பார்க்கும்போது இன்னும் பல தெளிவுகள் கிடைக்கலாம். சான்றாகத் திருமண வயது.

9. அ. தலைவன், தலைவி, தோழி—ஏனைய உறுப்பினர் கூற்றுக்கள் அனைத்தும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை, வாழ்க்கையோடு ஒட்டி அமைவன சிலவே என விவாதிப்போர் உண்டு, ஆயின் அவை அனைத்தும் உளவியல், உடலியல் அடிப்படையில் அமைந்தவை. வெறும் கற்பனை அன்று வாழ்க்கையில் நிகழ்ந்தவைகளை, நிகழ்பவைகளை ஒழுங்குபடுத்தி வரையறைப் படுத்தப்பட்டவை. பெரும்பான்மையும் 75 விழுக்காடு வரை நடைபெறுபவை—சமுதாயத் தப்பல்கள் (exceptions) எவ்விடத்தும் இருப்பது இயல்பே.

9. ஆ. புறத்திணையில் போர் நிகழ்ச்சிகள் அக்கால முறையில் அமைந்தவை. இன்று அவை பொருந்தாமலிருக்கலாம். இருப்பினும் இன்றும் "எஞ்சாமண் நசை வேந்தனை வேந்தன் அஞ்சு தகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே" என்பதற்கு

ஈராக்கையும் அமெரிக்காவையும் பொருத்திக் கூறும் நிலையில் அவை அமைந்துள்ளன.

ஆய்வுக் களங்கள் சில

10. 1. சமுதாயத்தில் நிகழும் பல சீர்கேடுகளுக்குக் காரணம் - தகுதியான இருவர் இணையாமையும் ஒன்று. பிறப்பு - குடிமை - ஆண்மை - ஆண்டு - உருபு - நிறுத்தகாமவாயில் - நிறை - அருள் - உணர்வு - திரு - இப்பத்துப்பொருத்தம் பற்றி ஆயலாம். (மெய்ப்பாடு-25) - ஒவ்வொன்றை எடுத்தும் ஆயலாம் - சான்றாக ஆண்டு - கோவலன் 16 - கண்ணகி 12 - இவ்வாண்டு நிலை சங்க இலக்கியத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இதனுடைய தோற்றம், மாற்றம், வளர்ச்சி, தளர்ச்சி, தேவை - போன்ற வற்றை எல்லாம் பார்க்கலாம் - சமுதாய அமைப்பு முறையில் இவற்றைப் பார்க்கலாம்.

2. தேவையற்ற பண்புகளாக இல்லற ஒழுக்கத்திற்குச் சிலவற்றைக் கூறுகிறார்.

நிம்பிரி - கொடுமை - வியப்பு - புறமொழி - வன்சொல் - பொச்சாப்பு - மடிமை - குடிமை - இன்புறல் - ஏழைமை - மறப்பு - ஒப்புமை - இந்நூற்பாவை (மெய்ப்பாடு - 26) உளவியல், உடலியல் கூறுகளின் அடிப்படையில் ஆயலாம். இதில் உளவியல் கூறுகள் தான் மிகவும் முக்கியம்.

3. மெய்ப்பாட்டியல் முழுவதையும் உடலியல் (Physiology) உளவியல் (Psychology) கூறுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யலாம்.

4. மெய்ப்பாடு - 12ஆம் நூற்பா - 32 பொருள்கள் பற்றிய தனி ஆய்வு.

5. பொருள் - மரபிலக்கணங்கள் உணர்த்தும் மாற்றங்கள் - தொல்காப்பியம் - வீரசோழியம் - இலக்கண விளக்கம் - தொன்னூல் விளக்கம் - முத்துவீரியம் - சுவாமிநாதம் - அறுவகை இலக்கணம். இவை அனைத்தையும் ஒரு சேர நோக்கி (Survey) மாற்றங்களைத் தரலாம்.

6. மரபிலக்கணங்களில் அகத்திணையியலில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் - தொல்காப்பியம் - தமிழ் நெறி விளக்கம் - நாற் கவிராச நம்பியகப் பொருள் - மாறனகப் பொருள் ஏனைய ஐந்திலக்கணங்கூறும் நூல்கள் - இவற்றை நோக்கி வேறுபாடு களைச் சுட்டலாம்.

7. புறத்திணைக்கோட்பாடுகள் - தொல்காப்பியம் - பன்னிரு படலம் - புறப்பொருள் வெண்பாமாலை.

8. களவியல் கூறுகள் - தொல்காப்பியம் - இறையனார் களவியல் - தமிழ் நெறி விளக்கம் - நம்பியகப் பொருள் மாறனகப் பொருள் - ஏனைய ஐந்திலக்கண நூல்கள். இவற்றை ஒப்பு நோக்கி உரைக்கலாம்.

9. கற்பியல் நோக்குகள் - தொல்காப்பியம் முதல் அறுவகை இலக்கணம் வரையுள்ள மரபிலக்கணங்களைத் தொகுத்தும் வகுத்தும் நோக்கி உரைக்கலாம்.

10. பொருளிலக்கண அடிப்படையில் தலைவன் பண்புகள்.

11. பொருளிலக்கணப் பார்வையில் தலைவி பண்புகள்.

12. தொல்காப்பியம் - பொருளிலக்கணமும் - புறநானூறும் திணைதுறை - வேறுபாடுகள்.

13. தொல்காப்பியம் - பொருளிலக்கணமும் - சங்க இலக்கிய அகத்திணை நூல்களும்.

பொருளிலக்கணமும்

(அ)	(தொல்காப்பியம்)	அகநானூறும்
(ஆ)	,,	குறுந்தொகையும்
(இ)	,,	நற்றிணையும்
(ஈ)	,,	ஐங்குறுநூறும்
(உ)	,,	கலித்தொகையும்

14. தமிழிலக்கியத்தில் ஏற்பட்டுள்ள பாவின மாற்றங்கள் தொடக்க காலத்தில் ஆசிரியப் பாவால் இயன்ற இலக்கியங்கள், பிற்காலத்தில் கலிப்பா விருத்தப்பா, வெண்பா போன்ற நிலைகளில் மாற்றமடைந்தமையைக் காட்டுவது.

15. இலக்கிய வகைகள் - தொல்காப்பியம் கூறும் எழு நிலத் தெழுந்த செய்யுள் - இன்று 200க்கு மேல் வளர்ந்தமை.

16 எண் சுவைகளும் இலக்கியங்களும் - பொது நிலையில் -

17	சங்க இலக்கியத்தில் —	நகை
18	,,	(அழுகை) அவலம்
19	,,	இளிவரல்
20	,,	மருட்கை
21	,,	அச்சம்
22	,,	பெருமிதம்
23	,,	வெகுளி
24	,,	உவகை

25 ஒவ்வொரு காப்பியத்திலும் இது போன்று தனித் தனியாக ஆய்வு செய்யலாம்.

26 தலைவி கூற்றுகள் - தொல்காப்பியம் - சங்க இலக்கியம் (பொருளிலக்கணம்)

27 தலைவன் " " "

28 தோழி " " "

29 பொருளிலக்கணத்தில் - செய்யுளியல் - யாப்பிலக்கண நூல்களாகவும், பாட்டியல் நூல்களாகவும் பரந்து விரிந்ததைப் போன்று மரபியல் ஏன் பரவவில்லை? (நிகண்டுகளாக விரிந்தாலும்)

30 'கனவொடு மயங்கல்' - இலக்கியத்தில் கனவு பெறும் பங்கு.

31 அகப்பாடல்களில் ஐந்து உள்ளுறைகள்.

32 வரலாற்று நிலையில் உவம உருபுகள்.

33 தமிழில் உவமைகள் — காலந்தோறும்

34 " — சங்ககாலம்

35 " — காப்பியங்கள்

36 " — சிற்றிலக்கியங்களில்

37 " — தற்காலத்தில்

38 தமிழுக்கே உரியவை.

பின்னிணைப்பு

1	பொருள் வேறுபடா - meaning	68-1
2	அப்பொருள் இரட்டா "	80-1
3	பொருள் தெரி புணர்ச்சி	141-1
4	பொருள் வரைந்திசைக்கும்	157-12
5	முன்னப் பொருள்	142-2
6	உரைப் பொருட் கிளவி	210-7
7	" " "	212-1
8	வேற்றுமைப் பொருள்வயின்	357-1
9	பொருள் வயினான	439-2
10	வேற்றிமை குறித்த பொருள் வயினான	481-5
11	அப்பொருள் புணர்ந்த கிளவியான	498-2
12	அப்பொருளாகும் உறழ் துணைப்பொருளே	499-2

13	தானறிபொருள் வயிற் பன்மை கூறல்	506-2
14	அறியாப் பொருள்வயின் thing	514-2
15	அறிந்த பொருள்வயின் ”	515-3
16	எப்பொருள் ஆயினும் அல்லது இல்லெனின் provisions	518-1
17	அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்	518-2, 2
18	அப்பொருள் கூறிற் சுட்டிக் கூறல்	519-1
19	பொருளோடு புணராச்சுட்டுப்பெயர்	520-1
20	பொருள் வேறுபடாது	520-2
21	மன்னாப் பொருளும்	517-1
22	இயற்கைப் பொருளை	502-1
23	செயற்கைப் பொருளை	503-1
24	ஒரு பொருள் குறித்த வேறு பெயரிக் கிளவி	525-1
25	அம்முதற்பொருள்	556-9
26	எப்பொருளாயினும் கொள்ளும்	558-3
27	உள்பொருள்	532-1
28, 29, 30;	பலபொருள் ஒரு சொல்	535-1,3
31	”	536-2
32	பொருள் தெரி நிலையே	536-4
33	பலபொருள ஒருசொல்	537-2
34	அதற்குப் படுபொருளின்	559-2
35	அப்பொருட் கிளவி	559-5
36	வேற்றுமைப் பொருளை	566-1
37	பல்லாறாகப் பொருள் புணர்ந்திசைக்கும்	566-3
38	முதலும் சினையும் பொருள் வேறுபடா	572-1
39	பொருள் வயினான	578-2
40	அப்பொருள் ஆதற்கு	582-2
41	உருபினும் பொருளினும் மெய்தடுமாறி	584-2
42	ஒருசொல் நடைய பொருள் செல் மருங்கே	585-2
43	நெறிபடு பொருள்வயின்	586-2
44	அல்லாப் பொருள்வயின்	588-1
45	பொருள்செல் மருங்கின்	589-2
46	பொருள்நிலை திரியா	590-2
47	பொருள் வயினானும்	593-2
48	தத்தம் பொருள் வயிற்	598-2
49	ஒப்பில் வழியாற் பிறிதுபொருள்	598-3
50	மெய்ப்பொருள்	604-4

51	எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே	639-1
52	பொருண்மை தெரிதல்	640-1
53	பொருண்மை நிலை	641-2
54	இறைச்சிப்பொருள்வயின்	680-1
55	பொருள்நிலை திரியா	720-2
56	புணரியல் நிலையிடைப் பொருள்	734-2
57	வேற்றுமைப் பொருள்	734-3
58	தத்தம் குறிப்பிற் பொருள் செய்குந	734-5
59	ஒப்பில் வழியாற் பொருள் செய்குந	734-7
60	பொருள் வேறுபடுதல்	765-5
61	எஞ்சு பொருட் கிளவி	768-1
62	அவ்வச் சொல்லிற்கு அவை அவைபொருளென	779-1
63	ஒருசொல் பலபொருட்குரிமை தோன்றினும்	781-4
64	பல சொல் ஒரு பொருட்குரிமை தோன்றினும்	781-5
65	மிகுதி செய்யும் பொருள்	783-3
66	இசைப் பொருட் கிளவி	840-2
67	பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம்பின்றே	873-1
68	பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்	874-1
69	மொழிப்பொருள் காரணம்	876-1
70	உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட	878-3
71	ஒரு பொருள் குறித்த வேறுசொல்	881-1
72	வேறுபொருள் குறித்த ஒரு சொல்	881-2
73	தம் பொருள் வழாமை	880-4
74	சொல்வேறு நிலைஇப் பொருள் வேறு நிலையல்	887-4
75	பொருள் தெரி மருங்கு	890-1
76	சொன்னிலை மாற்றிப் பொருள் எதிர் இயைப	891-2
77	அந்நான்கென்ப பொருள்நிலை மரபே	901-5
78	எஞ்சுபொருட் கிளவி	912-4
79	,, ,,	921-2
80	மந்திரப் பொருள்வயின்	931-5
81	ஒரு பொருள் இருசொல்	942-1
82	முதல் கரு உரிப்பொருள்	948-1
83	உரிப்பொருள்	958-1
84	இழைத்த ஒண்பொருள்... பணம்	973-4
85	பொருள் வயிற் பிரிதல் ,,	978-1
86	உயர்ந்தோர் பொருள்வயின்	978-2
87	மொழிப் பொருள் தெய்வம்	981-2

88	ஒன்றாப் பொருள்வயின்	986-11
89	ஒத்துப் பொருள் முடிகென... கருத்து	993-1
90	பொருளின் துய்த்த பேராண் பக்கம்	1008-6
91	பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்	1059-6
92	இருபாற் குடிப்பொருள்	1060-11
93	மூன்று பொருளாக	1086-2
94	குற்றஞ் சான்ற பொருளெடுத்துரைப்பினும்	1091-7
95	பெறற் கரும் பெரும்பொருள்	1095-1
96	சீருடைப் பெரும் பொருள்	1095-5
97	பொருள் படமொழிதல்	1106-2
98	பெரும் பொருள் வதுவை	1117-1
99	அப்பொருள் வேட்கை	1153-2
100	பொருளென மொழிதலும்	1159-1
101	பொருட் பயம்படவரின்	1163-1
102, 103	மிக்க பொருளினுட் பொருள்வகை	1164-1
104	இறைச்சி தானே பொருட் புறத்ததுவே	1174-1
105	இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே	1175-1
106	செய்பொருள்	1177-1
107	பொருள்கோள்	1220-3
108	பொருள் எதிர் புணர்த்து	1227:2
109	செம்பொருள்	1381-2
110	ஒருபொருள் நுதலிய	1410-1
111	பொருண்மை காட்டி	1423-4
112	ஒருபொருள் நுதலிய	1425-1
113	பொருள் நனி விளங்க	1426-4
114	குறித்த பொருளை	1434-3
115	பொருட்பு றத்ததுவே	1436-2
116	பொருள் நிகழ் உரைப்பது	1459-3
117	உரிப்பொருள்	1465-3
118	பொருள்வகை	1465-4
119	அகன்று பொருள் கிடப்பினும்	1467-1
120	இயன்று பொருள் முடிய	1467-2
121	சூத்திரத்துப் பொருள்	1603-2
122	தெற்றென ஒரு பொருள்	1604-4
123	பொருளில மொழிதல்	1608-4
124	தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்	1608-7
125	பல்பொருள் கேட்பின்	1610-16

126 மொழிந்த பொருளோடு ஒன்ற 1610-4
127, 128 பொருள் இடை இடுதல் எதிர் பொருள் உணர்த்தல் 1610-20.

துணை நூற்பட்டியல்

1. இலக்கண வரலாறு, இரா. இளங்குமரன், 1988 மணிவாசகர் பதிப்பகம், சென்னை,
2. இலக்கிய வகையும் வடிவும், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984.
3. தொல்காப்பியம் - மூலம், P. சிதம்பர புன்னைவனநாத முதலியார் பதிப்பு, 1922.
4. தொல்காப்பியப் பொருளதிகாரம், சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பு, 1885.
5. தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, கோ. கிருஷ்ணமூர்த்தி சென்னைப் பல்கலைக்கழகம், 1990.
6. தொல்காப்பியச் சொல்லடைவு, கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தட்டச்சுப்படி, 1968.
7. பாட்டியல் நூல்கள், மருதூர் அரங்கராசன், 1983.
8. பாட்டியலும் இலக்கிய வகைகளும், ந. வீ. ஜெயராமன் 1981.

யாப்பியல்

அன்னி தாமசு

இலக்கண நூல்களைக் களனாகக் கொள்வன, செய்யுள் இலக்கியப் படைப்புகளைத் தளமாக உடையன. இவ்விரண்டினையும் இணையடிப் படையாகக் காண்பன எனும் மூன்றின் அடிப்படையில் தமிழ் யாப்பியல் ஆய்வுக் களங்களைப் பகுத்துக் கொள்ளலாம். அறிவுத் துறைகளை ஆயும் நெறிமுறைகளை யாப்பியலாய்வுக்கும் பயன்படுத்த முடியுமா என்பதும் கருதற்குரியது. விளக்க ஆய்வு நிலைக்கு வேறாக, அறிவிய லாய்வாக அமைக்கும் முயற்சி ஏற்புடையதாகலாம்.

1

தமிழ் யாப்பியல் ஆய்வுக் களங்களை மூன்று அடிப்படைகளில் பகுத்துக் காணலாம். 1. இலக்கண நூல்களைக் களனாகக் கொள்வன; 2. செய்யுள் இலக்கியப் படைப்புகளைத் தளமாக உடையன; 3. இவ்விரண்டினையும் இணையடிப்படையாகக் காண்பன — என்பன.

இவற்றுள், முன்னதில், இலக்கண நூல்களுடன் யாப்புச் சான்றிலக்கிய நூல்களும், யாப்பிலக்கண உரைகளும், உரைநடை அல்லது வினாவிடை வடிவ யாப்பியல்களும் அடங்கும்.

களத் தேர்வை, ஆழ்ஆய்வும் அகல்ஆய்வும் வரையறுக்கும். ஒருநூல் அல்லது யாப்பியலின் ஒரு கூறு என்பது ஆழ் ஆய்வையும், பல நூல் அல்லது பல கூறுகள் என்பது அகலாய்வையும் களமாகக் கொள்ளும். இவற்றைத் தம்முள் உறழ்ந்தால், ஒரு நூலைக் களனாக்கிப் பல அல்லது எல்லா யாப்புக் கூறுகளையும் ஆயும் பாங்கை அகலாய்வாகவும் பல நூல்களை அடித்தளமாக்கி ஏதேனும் ஒரு கூறினைப் பற்றிக் கற்கும் பான்மையை ஆழ் ஆய்வின் விளக்கக் களமாகவும் கொள்ளலாம் என்பது புலப்படும். மேலும், இப் பின்வகையில், கால எல்லையைக் கருத்தில் கொண் டால் குறுகிய காலக் கட்டம் அல்லது பெருகிய கால வட்டம் களனை வரையறை செய்வது தெளியும். அதாவது குறிப்பிட்ட

ஒரு காலப்பகுதியுள் எழுந்த நூல்களைக் களனாக்குவது சிறு பரப்பையும், இருபது நூற்றாண்டுகாலப் பகுதியுள் தோன்றியன வற்றைக் களமாக்குவது பெரும்பரப்பையும் தர இயலும்.

நூலியல்பு அல்லது நூலின் தன்மை என்பதும் அடிப்படை யாகிக் களனில் உள்வரையறை அமைக்க முடியும். செய்யுளியல், யாப்பியலெனவும் பாட்டியலெனவும் இளைத்துள்ளமையும்; பாட்டியலும், பொருத்தம், மங்கலம் எனத் தனிக் கூறுகளால் நூல் பெற்றமையும்; யாப்பியற் சார்புடன் அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு, விருத்தப்பாவியல் உருவாகியமையும், களனில் வகைப்பாட்டைத் தருகின்றன. பல நூல்களைப் பற்றிய பரந்த ஆய்வில், எல்லா நூல்களையுமன்றி, இத்தகு ஓரின நூல்களை இணைத்துக் களம் கொள்வதன் வாய்ப்பு இங்குத் தெரிகின்றது.

அகநிலை ஆய்வு, புறநிலை ஆய்வு என்பனவற்றிற் கேற்பவும் களனை அணுகலாம். நூல் நுவல் பொருளை முன்னதும், நூலமைப்பு, ஆசிரியர்-காலம்-பதிப்பு வரலாறுகளைப் பின்னதும் களப்பொருளாகக் கொள்ளும். யாப்பிலக்கணங்களின் வரலாறும், பதிப்பு வரலாறும், சுவடிபேத/பாடபேத ஆய்வும் தனித்தனி நிலை கொள்ளக் கூடும்.

புறநிலை ஆய்வு, பெரும்பாலும் வரலாற்றாய்வாக அமைய, அக நிலையாய்வு, திறனாய்வு, கோட்பாட்டாய்வு, ஒப்பீட்டாய்வு எனப் பல நிலைகளில் அமைகின்றது. இவை பொது ஆய்வு முறைகளாகவும், அணுகுதல்களாகவும் அமைந்து எல்லாத் துறைக்கும் பொருந்துவனவாகும். துறைச் சொல்லாய்வும் இங்கு இணைத்துக் கருதத் தக்கது.

பெரும்பாலும், திறனாய்வு ஒரு நூலுக்கும், ஒப்பீட்டாய்வு இரண்டு அல்லது இரண்டிற்குமேற்பட்ட நூலுக்கும், கோட்பாட் டாய்வு ஒன்று அல்லது பல நூலுக்கும்/அமைதல் வாய்ப்பாகும். கோட்பாட்டு வளர்ச்சியைக் கால வரிசையில் (Chronological order) அணுகிக் கண்டு மாற்றத்தின் காரணத்தைக் கணித்தல், துறை விளக்கம் தரத் தக்கது. இச் சூழலில், ஒரு நூலாய்விலும், இரண்டு அல்லது பலவற்றை இணைத்துக் காணுதல் பயன் மிகுந்த தாகவும் வரவேற்கத் தக்கதாகவும் அமையும்.

II

தமிழ் யாப்பியல் ஆய்வில் பல பாங்குகள் காணப்படுகின்றன. ஏ.சி. செட்டியாரின் பிஎச்.டி. பட்ட ஆய்வு, 10 நூற்றாண்டுகளின் யாப்பியல் கோட்பாடுகளை ஆய்கிறது. (Advanced Studies in Tamil Prosody - 1942). இது யாப்பியல் பற்றிய முதல் ஆய்வேடாகும். தொல்காப்பியம் முதலாகத் தற்காலம் வரை யாப்பியல் ஆய்வுக் களம் பரந்து அமைவதை இக்கட்டுரையாளரின் ஆய்வேட்டில் காணமுடிகிறது (Tamil Prosody through the Ages, 1974).

இவை தனித்த இலக்கண ஆய்வுகளாக உருவாகவில்லை. இலக்கிய இணைவுடன் எடுத்துக்கொண்ட பொருண்மையை ஆய்ந்துள்ளன.

பல ஆண்டுகள்/நூற்றாண்டுகள் என்ற காலப் பரப்பும், பல நூல்கள் எனும் கள விரிவும் கொள்ளும் இவற்றிற்கு வேறாக தொல்காப்பியத்தை மையங்கொண்டு ஏ. சங்கர நாராயணனின் எம்.லிட். ஆய்வேடு அமைகிறது (The Concept and Structure of Poetry in Tolkappiyam - 1962). இதில் யாப்புக் கோட்பாடுகள், கவிதையாய்வின் ஒரு கூறாக மட்டும் அமைவது மற்றொரு வேறுபாடாகும். 'தொல்காப்பியம்-செய்யுளியல்-ஒரு திறனாய்வு' - 1975 எனும் முதுகலை ஆய்வேடு (சைமன்) இன்னும் சுருங்கிய களம் கொள்கிறது.

ஒரு கூறு மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற நிலையை மருதூர் அரங்கராசனின் 'பொருள்கோள்' (1979) எனும் எம்.பில். ஆய்வேடு காட்டுகிறது. யாப்பியலில் மட்டுமன்றி, சொல்லியலிலும், அணியியலிலும் கூடக் கருதப்படும் இக்கூறு தனித்துச் சுட்டத் தக்கது. யாப்பியலாய்வுக் களத்தின் மற்றொரு பரிமாணமாக இதை உணரலாம்,

யாப்புத் துறையின் துறைச் சொல்லாய்வும் தனிப்பட்ட வகை யாகும். எஸ். ஞானப்பூங்கோதையின் எம்.பில். ஆய்வேடு (யாப்பியல் கலைச் சொல்லகராதி - 1983) இவ்வகைப்பட்டது.

யாப்பியலுக்கு ஆய்வுக்களமைந்தவளவு பாட்டியலுக்குத் தனிப் பட்டு அமைந்ததாகத் தெரியவில்லை. யாப்பியலைப் பாட்டியலில் அடக்கி ஆய்வுக் கருத்துகள் தரப்பெற்றமை ஏ. சி. செட்டியார், இக்கட்டுரையாளர் ஆய்வேடுகளில் காணப்படுகின்றது,

யாப்பிலக்கண உரையாய்வுகளில், சி. ஆர். நாராயணசாமி வழங்கிய எம்.பில். ஆய்வேடு, 'யாப்பருங்கலக் காரிகை-குணசாகரர் உரை-ஓர் ஆய்வு' (1980) எனத் தனிப்பட்டு நிற்கிறது.

III

இலக்கியங்களைக் களனாக்கிய யாப்பியல் ஆய்வுகள் ஓரிரு வகைப்பட்டு அமைகின்றன. ஒரு காலக்கட்ட இலக்கியங்களைக் களமாக்கியமை அ. பிச்சையின் 'சங்க யாப்பு' (1980) என்பதில் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களான எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் தொல்காப்பிய மரபிலக்கணப் பார்வையிலும், மரபு வேறுபாடு காட்டும் நிலையிலும் அணுகப் பெற்றுள்ளன.

தனியொரு நூல் அல்லது இலக்கிய யாப்பும் ஆராய்ச்சிக்கு உரியதாகுவதை ந. வீ. செயராமனின் சிலப்பதிகார யாப்பமைதியும் (1977), கே. வி. தாட்சாயணியின் (The Metres in Kamparamayanam, 1976) கம்பராமாயண யாப்பாய்வும் தருகின்றன- இவ்வாறன்றி, ஓராசிரியரின் பல படைப்பில் அமையும் செய்யுள் வடிவை அறிதலாகவும் ஆய்வுகள் வரலாம் என்பதைச் செங்கமலத் தாயாரின் 'பாரதி யாப்பு' (1982) எனும் எம்.பில். ஆய்வேடு காட்டுகிறது.

முழு ஆய்வேடுகள் இவ்வாறு அருகி அமைய, இலக்கியத் திறனாய்வு வகையிலமையும் பல ஆய்வேடுகளும், தம்மியலுள் ஒன்றாக யாப்பாய்வை உட்படுத்துவதுண்டு. சான்றாக பி. விஜயலக்ஷ்மியின் கலம்பகங்கள் ஒரு திறனாய்வு (1970) எனும் முதுகலை ஆய்வேடு 'நந்திக் கலம்பகத்தில் யாப்பு' என ஒரு பகுதி அமைக்கிறது; இந்திரா மானுவலின் 'பாலை பாடிய பெருங் கடுங்கோ' (1973) எனும் முதுகலை ஆய்வேடு அவர் பாடல்களின் யாப்பைத் தனிப் பகுதியில் ஆய்கிறது.

IV

இலக்கணத்திலும் இலக்கியத்திலும் யாப்பியலாய்வுக்கு மிகுந்த இடம் உள்ளது. தொல்காப்பியச் செய்யுளியல் மட்டுமே பல நிலையில் விரிவாய்வுக்கும் ஆழ் ஆய்வுக்கும் இடம் தரக்கூடும். அம்மை முதலான எட்டும் இன்னும் தெளிவுபட விளக்கம் பெறவில்லை. எழுத்தடியும் சீரடியுமாகிய இருவகைக் கோட்பாட்டினைத் தருகின்றமையின் அடிப்படை புலப்படவில்லை; யாப்பு

எனும் உறுப்பும் ஒளிவுபடவில்லை. அதன் 'உரைவகை நடை' இன்னும் விளக்கம் பெறவேண்டியுள்ளது. தொல்காப்பியம் கூறும் தொடைகளின் எண்ணிக்கைப் பெருக்கு மேலும் தெளிவுப்படுத்தப் பட வேண்டும். நோக்கு, எச்சம், முன்னம், சொற்சீர் என்பன நூற்பாவால் விளக்கப்படுவது போதுமானதாக இல்லை. பாவில், பரிபாடலும், கலிப்பாவும் (கொச்சகக்கலி-148; கொச்சக ஒருபோகு-142) இன்னும் தெளிவாகப் புலப்படவேண்டும். சுருக்க மாகச் சொன்னால், உரையாசிரியரிடையே வேறுபட்ட கருத்து களமையுமாறு காணப்படும் செய்யுளியல் சூத்திரங்கள் அனைத்தும் மேலும் ஒளிவும் விளக்கமும் பெற ஆய்வுக்குட்படுத்தத் தேவையானவையாகும். தொல்காப்பிய யாப்பியற்கோட்பாடுகள் இத்தகு ஆய்வுக்குப் பின்பே தெளிவாக வகுக்கப்பெற இயலும்.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து, 10 நூற்றாண்டு இடை வெளிக்குப் பின்பே பிற யாப்பியல்கள் வெளிவந்ததால், செய்யுளிய லுடன் இணைத்து வைத்து ஆயத்தக்கனவாக எதுவும் முன் நிற்கவில்லை. எனினும், ஒவ்வொரு யாப்பியல் நூலையும் தொல்காப்பியத்துடன் ஒப்பீடு செய்து கோட்பாட்டு வேறுபாடு களைக் கணிக்க இயலும். கலமும் காரிகையும் தம்முள் ஒப்பீட்டுக்குச் சிறந்த களன் வழங்குவன. புதுநெறிகளைப் புகுத்தும் வீரசோழியம், திறனாய்வுக்கும் ஒப்பீட்டாய்வுக்கும் கோட்பாட்டாய்வுக்கும் உட்படவல்லது. அவ்வாறே தொன்னூல் விளக்கமும் யாப்பியல் அந்தனையில் தனித்த ஆய்வுக்குட்படத் தக்கது.

முன் சுட்டிய வண்ணம், பாட்டியல், தனி யாய்வேடுகளை உருவாக்காத நிலையில், மிகப் பல்வகைப்பட்ட ஆய்வுக் களன் புலப்படுத்தலாம். அனைத்தையும் சேர்த்துக் காணவோ, பொருத்தம்-இலக்கிய இனங்கள் என உள்வகைகளுள் உட்படுவன வற்றைத் தொகுதி தொகுதியாக, பகுதிபகுதியாக இணைத்துக் காணவோ இயலும்.

பாட்டியல் தரும் பொருத்தம் பற்றிய எண்ணங்கள் பல. சமுதாய்வியல் சார்புடன் ஆய்தற்குரிய தேவையுடையன. மங்கலம், நாள் பொருத்தம் போன்றன எழுச்சி கொண்டமை தனியாய்வுக்குரியது. இவை எவ்வகையில் அறிவியலாகும் என்பதும் அலசப்பெறலாம்.

பாட்டியல் கூறும் இலக்கிய வகைகள் காலந்தோறும் மாறியும், விரிந்தும், பெருகியும் வருவதன் காரணமும் கண்டு கொள்ளல்

தேவையாகும் மேலும், 'இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' எனப் பொருத்திக் காணல் ஒரு வகை. இவ்வாறு உட்படாதனவற்றின் செவ்வி அல்லது தேவை கண்டுணரற்குரியது. முன்னிலக்கியத்திலில்லாது இலக்கணத்தில் மட்டுமமையும் வகைப் பாடுகள் தனித் தொகுதியாக இணைத்துக் காணத்தக்கன. இவை அடிப்படைத்திட்டமாகிப் பின்பு இவற்றிலிருந்து இலக்கியம் கிளைத்து 'மாதிரி' நிலை கொண்டனவா எனப் புலப்படுத்தப் பெற வேண்டும் (blue print-model). பாட்டியலில் அமையும் இக் களன், யாப்பியலில் அமைவதாகத் தெரியவில்லை.

உரையாய்வுக் களங்கள் தனியாகக் குறிப்பிடத் தக்கன. மூலத்தையும் உரையையும் ஒத்தும் உறழ்ந்தும் கண்டு, உரை வழியே மட்டும் புலப்படும் புதுக் கோட்பாடுகளும் அவை புகுந்ததன் காரணமும் காண வேண்டியனவாம், நூலுக்கும் உரைக்கும் உள்ள கால இடைவெளி புதுக் கோட்பாடுகளைத் தந்திருக்கலாமா? அல்லது உரையாசிரியரின் வேறுபட்ட தொகுதிச் சிந்தனைகள் (schools of thought) இத்தகு விலகுதல் ஏற்படுத்தி யிருக்கலாமா? பிற இலக்கண இலக்கியத் தாக்கம் எந்தவளவு உரையாசிரியரின் கொள்கைகளைத் தந்துள்ளது? என்பன போன்ற சிந்தனைகளும் ஏற்படுதல் காணலாம். இதனால் தமிழ் மரபு வழிக் கோட்பாடுகளும், பிற (மொழி) மரபுவழிக் கோட்பாடுகளும் தெளிவாக இனங்காணப் பெறலாம், தொல்காப்பியச் செய்யுளி யலின் மூவர் உரையும் சிறந்த ஒப்பீட்டாய்வுக் களம் வழங்குவது சுட்டத்தக்கது.

யாப்புச் சான்றிலக்கிய நூல்களும் தனியாய்வுக்குட்படத் தக்கன. இவை முன்னிலக்கணம் சுட்டுகின்ற பா-இன-வகை களுக்கு மட்டும் சான்று தந்து இலக்கணக் குறிப்புத் தருகின்றனவா? அல்லது மரபு யாப்புப்படி, விதிமுறை மாறாது அமைவனவற்றுடன் சிறிது யாப்பு மாறுபாடு தருவனவற்றையும் அளிக்கின்றனவா? இலக்கியத்தில் மட்டும் கண்டுணர்ந்த வகைகளைப் புதியதாகப் புகுத்துகின்றனவா? அல்லது தாமே உருவாக்கிய ஆக்க வகை களையும் அமைக்கின்றனவா? எனப் பன்முக நோக்கில் இவற்றின் கொடையை அணுகலாம். இவை இன்னும் ஆயப்படாத நிலையில் அமைவது கருத்தில் கொள்ளத் தக்கது.

ஐந்திலக்கண அமைப்பில், யாப்பு-பாட்டியல் எண்ணங்களைப் பிற இலக்கணக் கருத்துகளுடனும் சார்த்தி ஆய்தல் கூடும்,

'மாத்திரை, எழுத்தியல். அசைவகை...' பற்றிய எண்ணங்கள் எழுத்தியலுடன் சார்த்திக் கருதலாம்; இவ்வாறே அணியிலக்கண மும் மயங்கிவரும் இடங்கள் (சித்திரக்கவி...) எச் சார்பின என வரையறுத்தற்குரியன. செய்யுளுறுப்புகளில், தொல்காப்பியத்தின் படி, துறை-மெய்ப்பாடு போன்றன அமைந்த போதும் உவமை/ அணி உறுப்பாகச் சுட்டப்படாதது ஏன்-என்பது போன்ற எண்ணங்கள் தெளிவுபட வேண்டும்.

யாப்பியல் வரலாற்றை முழுமையாகக் கண்டு, இலக்கணப் பெருக்கையுணர்ந்து, யாப்பியல் செல்வாக்குப் பெற்ற காலம், செல்வாக்கு இழந்த காலம், இரண்டிற்கும் காரணம் என்பன கருதப் பெறல் வேண்டும்.

ஒரு நூலுக்குள்ளேயுள்ள பார்வையும், இத்தகு முழுமைப் பார்வைகளும் ஒருபாலாக. ஒரு கூறினை மட்டும் எடுத்துக் கொண்டு, காலந்தோறும் அதில் ஏற்பட்ட மாற்றம், வளர்ச்சி என்பனவும் ஆய்தற்குரியன. இவ்வாறு ஒரு கூறினையணுகும் போது, எவை அணுகத்தக்கன, ஆய்தற்குரியன என்பதும் தனித்த சிந்தனை வழங்கத் தக்கது. விரிந்த களன் வழங்குவனவும், மிகுந்த வகைமை காட்டுவனவும், இருபது நூற்றாண்டுக் காலம் வேறுபாடுகளுடன் தொடர்ந்து பயின்றனவும் களப் பரப்புக் கொள்வதால் ஆய்வுக்குரியனவாகின்றன.

செய்யுள் அடி பற்றிய கோட்பாடுகள் மட்டுமே இவ்வாறு கணிக்கப்படலாம். அல்லது சீர், தொடை, சித்திரக்கவி பா-வகை-இனம் எனப் பிறவும் கொள்ளப் பெறலாம். பாவடிவில், 'விருத்தம்' என்பது மட்டுமே பேராய்வுக்கு இடம் தர வல்லது. அவ்வாறே (திருப்புகழ்) வண்ணச் செய்யுள் வகையும் அமையும். 19-ஆம் நூற்றாண்டில் வந்த விருதப்பாவியல், வண்ணத்தியல்பு எனும் இலக்கணநூற் கருத்துடன், இவ்விலக்கியத் தரவுகளை ஒத்தும் உறழ்ந்தும், கொள்கையாய்வு செய்தலும் வாய்ப்பாகும்.

இலக்கணம் சுட்டாத இலக்கியப் பாவடிவங்கள் மிகப் பலவாகும். முழுமையான இலக்கண அறிவுடன் இலக்கியக் கல்வி அமையும் போது மரபு தராத இத்தகு செய்யுள் வடிவங்கள், மரபு மீறிய யாப்பு வடிவங்கள் இனங்காணப் பெறலாம். இவை முதன்மைத் தோற்றத்தினவா (original), சோதனை வடிவினவா (experimental) அல்லது சார்வடிவினவா என்பனவும், தோன்றிய காரணமும், பயிற்சியியல்பும் (மிகு/குறை) ஆராய்வதற்குரியன.

ஆனந்தக்களிப்பு, சிந்து, கண்ணி, கும்மி, கீர்த்தனைமுதலிய பயின்ற வடிவங்கள் ஒரினை வகைப்படும் என்றால், மேல்வைப்பு, 'தலையே நீ வணங்காய்' எனத் தொடங்கும் அப்பர் பதிகம், 'அமலனாதி பிரான்' யாழ்மூரி போன்றன தனியமைப்பினவாகும் (unique). இவ்வினங்காணும் முயற்சி, இத்தகு புதியன புகுதல்களுக்கு இன்று இலக்கணம் வடிக்க வாய்ப்பளிக்கும்.

பயிற்சியில் இருந்து வழக்கிழந்து போன பாவடிவங்கள் சிறப்பாய்வுக்கு உட்படத் தக்கன. கலியும், பரிபாட்டும், வண்ணச் செய்யுளும் இன்று அருகியமைக்கு அல்லது எழாமைக்கு என்ன அடிப்படை? சித்திரக்கவி, மிறைக்கவி வடிவங்கள் பயிற்சி குன்றியமைக்கு அடித்தளம் என்ன? உரைநடை செல்வாக்குற்றது தான் காரணமா? கடினமானவை எளிமைக்கு இடம் தந்தன எனலாமா? அவ்வாறாயின் எளிமையிலிருந்து கடினமானதற்குச் செல்லல் (from simple to complex) என்ற பொதுவிதி அடிபடுமே என்ற எண்ணமும் எழுந்து ஆய்வுக்குரியதாகின்றது.

மேலும் நால்வகைப்பா எனக் கூறி, மருட்பா இணைத்து ஐந்தாக்கியுள்ளதில், வஞ்சி, மருட்பா போன்றன மிகமிக அருகிய பயிற்சியே கொள்வதும்; ஒப்பீட்டு நிலையில் ஆசிரியம், வெண்பா அதிகமாகப் பயில்வதும் (frequency) காரண ஆய்வுக்கு உட்படுத்தப் பெறலாம். கடின வரையறையில்லாததும், மிகு பட்ட வகைமை காட்டுவதும்தான் விருத்தப் பயிற்சிக்கும் பரப்புக் கும் அடிப்படையா என்பது கணித்தற்குரியது. 'குறிப்பிட்ட பொருண்மைக்குக் குறிப்பிட்ட யாப்பு வடிவம்' என்பது உண்டா என்பது கால வரிசையில் அணுகிக் காணற்குரியது. அவ்வாறே குறிப்பிட்ட உணர்வுக்கு, செயலுக்கு, செய்திக்கு ஏற்ப வடிவங்கள் வகுக்கப்படுகின்றனவா என்பதும் காணப்பட வேண்டியதாகும்.

இலக்கியத் தரவுகளை அடிப்படையாக்கி யாப்புக்கும் இசைக்கு மூரிய தொடர்பும் கருதப்பட வாய்ப்புண்டு. இசைச் சார்புடைய தரு, திபதை, கண்ணி, சிந்து, கும்மி, கீர்த்தனை போன்றன ஒருபாலாக பரிபாடல் முதல் தேவாரப் பதிகங்கள் வரை பண்ணோடமைவன மற்றொருபால் இச்சார்பில் கருதத்தக்கன வாகும்.

பிரபந்த எழுச்சியின் காரணம் ஆய்தற்குரியதாகும். ஒவ்வொரு பிரபந்த வகையும் தனியாய்வேடு உருவாகக் களன் வழங்கும். பாட்டியல் குறித்தும், இலக்கிய வகைகள் குறித்தும்,

கட்டுரைகளும் நூல்களும் பலவாக எழுந்துள்ளமை, அவற்றை மாதிரியாகக் கொண்டு ஆய்வேடுகள் எழ வழிகாட்டியாகலாம்.

இலக்கியப் பதிப்புகள், மருந்து நூற் பதிப்புகள், ஆய்வேடாக உருவாகியுள்ளமை போன்று யாப்பிலக்கண நூல்கள் உருவாகவும் வாய்ப்புண்டு. இறந்ததாகக் கருதப்படும் நூல்களின் சுவடிகளோ, கேள்வியுறாத யாப்பியல் சுவடிகளோ நூலகங்களில்-தனியாரிடம் தேரப்பெற்று, பதிப்பாய்வும், பாடவேறுபாட்டு ஆய்வும் பொருந்தி வெளிவருவது இத்துறைக்கு வளம் சேர்க்கும்.

இருமொழிக் கல்வியினர், தமிழ்யாப்பைப் பிற மொழியாப்பி னுடன் ஒப்பிட்டுப் பல நிலையில் பல்வேறு ஆய்வேடுகளைத் தரலாம். அண்மை மொழிகளுடனும், வட இந்திய மொழி களுடனும், உலக மொழிகளுடனும், வடமொழி-கிரேக்கம் போன்ற தொல்மொழிகளுடனும் இவ் யாப்பியல் கோட்பாடுகளை இணைத்துக் காண்பது ஒருமைப்பாட்டுக்கும் ஒருங்கிணைப்புக்கும் கூட வித்திடலாம். மூல திராவிடம், உலக முதன்மொழி போன்ற கருதுகோள்களுக்கு இவை உறுதியான துணைச் சான்று வழங்கவும் கூடும். தமிழ் யாப்பின் தனித்தன்மை, தமிழ் யாப்பால் பாதிப்புற்ற பிற மொழி யாப்பு நிலை, தமிழ்யாப்பைப் பாதித்த பிற மொழி யாப்பு போன்றனவும் இதனால் விளங்கி இத்துறைக் கல்விக்கு ஏற்றம் வழங்கலாம்.

V

ஆய்வுகள் பல பெரும்பாலும் தொகுப்பாய்வுகளாக அமை கின்றன. பகுப்பாய்வாக (analytical) அமைதல் தேவை. ஏன், எப்படி என்ற வினாக்களை எழுப்பிக் காரணம் காண முயல்தல் இன்றியமையாதது. ஆய்வு முடிவுகளால், குறிப்பிட்ட துறையில் தெளிவு ஏற்படுவதுடன், செம்மைப்பாட்டிற்கும் உதவ வேண்டும். மேலும் ஆய்வு முடிவால் உய்த்துணரப்படும் உண்மைகள் பற்றியும் கருத்துச் செலுத்துதல் நலம்.

வரலாற்று நோக்கில், ஒவ்வொரு மாற்றமும், வளர்ச்சியும், வீழ்ச்சியும், நலிவும் காரணத்துடன் நிறுவப்படுவது, யாப்பிலக்கண வரலாற்றிற்குத் தெளிவு தருவதாக அமையும். பண்பாட்டுக் கலப்பு, பிறமொழித் தாக்கம் என்பனவே மாற்றங்கட்குக் காரணமா, அல்லது புதுமை வேட்டலும், புது முயற்சிகளும், ஆக்கமும் (creativity), காரணமா என்பதும் கருதப்படல் வேண்டும்.

அறிவுத்துறைகளை ஆயும் நெறிமுறைகளை யாப்பியலாய்வுக்கும் பயன்படுத்த முடியுமா என்பதும் கருதுதற்குரியது. விளக்க ஆய்வு நிலைக்கு (descriptive) வேறாக, அறிவியலாய்வாக அமைக்கும் முயற்சி ஏற்புடையதாகலாம்.

முன் சுட்டிய வண்ணம், இலக்கண-இலக்கிய யாப்பியலாய்வாக நின்றுவிடாது, சமுதாய நோக்கிலும், மானுடவியல் நோக்கிலும்-இவ்வாறே பிற நோக்குகளிலும் அணுகல் கூடுமா என்பதும் சிந்தித்தற்குரியது.

தற்கால ஆய்வு நெறிகளுக் கேற்பவும், ஆய்வுமுறைகளுக் கேற்பவும் பன்முக நோக்குடன் யாப்பியலைக் கையாண்டு அரிய கருத்துகளை வெளிக்கொணர இயலும் என்பது அறிவியல் ஆய்வு முன்னிற்கின்ற இக்காலத்திற்கு ஏற்புடையதாம்.

நூற்றொகை

(அ) அடங்கல்

1. Dissertations on Tamilology, Annie Thomas, International Institute of Tamil Studies, Madras, 1977.
2. தமிழியல் ஆய்வு, இராம. பெரிய கருப்பன் (தமிழண்ணல்), மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மு. ப. 1983, இ. ப. 1988.

(ஆ) ஆய்வேடு

3. Advanced Studies in Tamil Prosody. A. Chidambaranatha Chettiar, Annamalai University, Annamalainager, 4th Edn, 1977.
4. The Metres in Kambaramayanam, K. V. Dakshayani, Annamalai University, Annamalainagar, 1st Edn, 1979.
5. Tamil Prosody through the ages. Annie Mrithulakumari Thomas, Kerala University, Trivandrum, (unpublished) 1974.
6. சிலப்பதிகார யாப்பமைதி, ந. வீ. செயராமன். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1977.

(இ) யாப்பியல்

7. இலக்கணத் தொகை-யாப்பு-பாட்டியல், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978.
8. தமிழ் இலக்கிய வகையும் வடிவும். ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984.

தனிப்பாடல்கள்

ப. கிருஷ்ணன்

வெற்றுப் பாடல் என்று தள்ளவும் முடியாமல், இலட்சிய நோக்கு டையவை என்று கொள்ளவும் முடியாமல் இடைப்பட்ட நிலையில் அமைந்தவை தனிப்பாடல்கள். தனிப்பாடல்களில் அகவுணர்ச்சிகளைச் சித்திரிக்கும் பாடல்களும் சமுதாயச் சிந்தனைப் பாடல்களும் பேரளவு இடம்பெற்றுள்ளன. தனிப்பாடல்களின் அழகியல் கூறுகளை வெளிக் கொணர வேண்டும். தனிப்பாடல்களில் மொழி ஆளுமை, நடைச் சிறப்பு பற்றியும் ஆராயலாம்.

முன்னுரை

தனிப்பாடல்களைத் தொகுக்கும் முயற்சி தமிழ் இலக்கிய உலகுக்குப் புதியதன்று; தன்னுணர்ச்சிப் பாடல்களாய் விளங்கும் சங்கப் பாடல்களிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள பல பாடல்கள் தொகுப்பு முயற்சியில் உருவானவைதாம். இத்தகைய தொகுப்புகளில் ஒரு புலவர் பாடிய பல பாடல்கள் இருக்கலாம்; பல புலவர்கள் பாடிய பல பாடல்களும் இருக்கலாம். பறநானூற்றைப்போல் பொருளால், களவழி நாற்பதைப்போல் இடத்தால், கார்நாற்பதைப்போல் காலத்தால், ஐந்திணையைப் போல் தொழிலால், கலித்தொகையைப்போல் பாட்டால், குறுந் தொகையைப்போல் அளவால் எனப் பல நிலைகளில் தனிப் பாடல்கள் உதிரிகளின் சேர்க்கையாகவோ தொகை நிலைச் சேர்க்கையாகவோ அமையலாம். இத்தகைய தொகுப்புக் குறித்த இலக்கணத்தை,

> தொகைநிலைச் செய்யுள் தோன்றக்கூறின்
> ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
> பொருள் இடம் காலம் தொழில்என நான்கினும்
> பாட்டினும் அளவினும் கூட்டியதாகும்[1]

என்று தண்டியலங்காரம் கூட்டுகிறது.

---

1. தண்டியலங்காரம், பொதுவணியியல், நூற்பா 5.

தனிப்பாடலின் வேறுபெயர்கள்

தனிப்பாடலை இலக்கண உரையாசிரியர்கள் முத்தகம், தனியன், தனிநிலை, தனிநிலைச் செய்யுள் ஆகிய பெயர்களில் குறிப்பிடுகின்றனர். இவ்வாறே தனிப்பாடல் தொகுப்புகளும் வேறுசில பெயர்களைப் பெற்றிருக்கின்றன. தனிப்பாசுரத் தொகை, தனிச் செய்யுட் கோவை, தனிப்பா மஞ்சரி, தனிச் செய்யுட் கொத்து, தனிப்பாமாலை, தனிச்செய்யுட் சிந்தாமணி, தனிப்பாடல் திரட்டு ஆகிய பெயர்கள், தனிப்பாடல் தொகுதி யினைச் சுட்டும் பெயர்களே.

தனிப்பாடல் வகைகள்

தமிழில் தனிப்பாடல் தொகுப்புகளை மூன்று வகைகளில் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை பகுக்கிறார். சங்கம் மருவிய காலத்திலிருந்து கி.பி. பதினான்காம் நூற்றாண்டுவரை தோன்றிய பாடல்களை நீதி பற்றியவை, சமயம் பற்றியவை, தத்துவம் பற்றியவை என மூன்று வகைகளில் பகுக்கிறார்.[2] மு. அருணாசலம் சங்கப் பாடல்கள், சமயப் பாடல்கள், இலக்கணத் தொகைகள், பக்திப் பாடல்கள், தத்துவத் திரட்டுகள், சந்தர்ப்பப் பாடல் தொகுப்புகள் என ஆறு வகையாகப் பகுக்கிறார்.[3] காலத்தையும் கருத்தையும் உள்ளடக்கிப் பாடல்களை வகைப் படுத்தும் முயற்சி அருணாசலம் அவர்களிடம் தெரிகிறது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் குறிப்பாகப் பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை போன்றோரின் தனிப்பாடல்கள் பொருள் அடிப்படையில் வகை தொகை செய்யப் பட்டிருப்பதைக் காணலாம்.

தனிப்பாடல் தொகுப்புகள்

இவ்வாய்வுக் கட்டுரையில் தனிப்பாடல் திரட்டினைப் பற்றித் தனியாக அறிவதற்கு முன்னர் தனிப்பாடல்களின் தொகுப்பு முயற்சியைப் பற்றிச் சிறிது அறிவது இன்றியமையாதது. சங்கப் பாடல்கள் சிலவற்றுடன் தொடங்கிக் கம்பராமாயணம் ஈறாக உள்ள இலக்கியங்களிலிருந்து 1570 பாடல்களைத் தொகுத்துப்

---

2. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய மணிமாலை, பக். 10-12.
3. M. Arunachalam, An Introduction to the History of Tamil Literature, pp. 250-260.

புறப்பாடல் திரட்டு என்னும் பெயரில் ஒரு நூல் வந்துள்ளது. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த இந்நூலைத் தொகுத்தவர் எவர் என்று தெரியவில்லை, ஓலைச்சுவடிகளில் இடம்பெற்றிருந்த இப்பாடல்களுக்குப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை 1939ஆம் ஆண்டு நூல் வடிவம் தந்தார். தமிழில் மறைந்துபோன நூல்களாகிய தகடூர் யாத்திரை, சாந்தி புராணம், ஆசிரிய மாலை, நாரத காதை போன்றவற்றிலிருந்து சில பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருப்பது இதன் தனிச் சிறப்பு.

தமிழ் நாவலர் சரிதை என்னும் பெயரில் சங்க காலம் தொடங்கி கி.பி. பதினேழாம் நூற்றாண்டு வரை வாழ்ந்த புலவர் களின் பாடல் தொகுப்பு ஒன்று வந்துள்ளது. இதில் 270 பாடல்கள் உள்ளன. பல புலவர்களின் வரலாறுகள் இத்தொகுப்பில் கற்பனையாகப் புனையப்பட்டுள்ளன.

அறிஞர் ஜி. யூ. போப் நீதிநெறிப் பாடல்களைத் தொகுத்துத் தமிழ்ச் செய்யுட் கலம்பகம் என்னும் பெயரில் கி.பி. பத்தொன்ப தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளியிட்டுள்ளார்.

எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை செய்யுட்கோவை என்னும் பெயரில் 44 பொருட்பாகுபாடுகளுடன் ஒரு தொகுப்பு நூலை 1895-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். பாண்டித்துரைத் தேவர் பன்னூல் திரட்டு என்னும் நூலை 1898ஆம் ஆண்டு வெளியிட் டுள்ளார். இத்தொகுப்பில் 1647 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சைவ சமயச் சிறப்பினை விளக்கும் பாடல்களைத் தொகுத்துச் சைவ மஞ்சரி என்னும் பெயரில் ஒரு நூலும் இவர் வெளியிட் டுள்ளார். இத்தொகுப்பில் 1316 பாடல்கள் உள்ளன. திருவேங்ட நாயுடு என்பவர் சிவபுராணத் தோத்திர மஞ்சரி என்னும் பெயரில் 1400 பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூலை 1898ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். மு. இராகவையங்கார், பெருந்தொகை என்னும் பெயரில் தனிப்பாடல் தொகுப்பு ஒன்றை 1935ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். இந்து சமயப் புலவர்களைப் போலவே இசுலாமியப் புலவர்களும் தனிப்பாடல் தொகுப்புகள் கொண்டு வந்துள்ளனர். அவற்றுள் பலபாடல் திரட்டு என்பது குறிப்பிடத் தக்கது. இது 1907ஆம் ஆண்டு வெளிவந்தது.

தனிப்பாடல் திரட்டுகள்

தமிழ் நாவலர் சரிதையைப் பின்பற்றிப் பொன்னுசாமித் தேவர் முயற்சியால் முதல் தனிப்பாடல் திரட்டு தொகுக்கப்பெற்று 1862ஆம் ஆண்டு நூலாக வந்தது. இதைப் பின்பற்றி, மு. ரா. கந்தசாமிக் கவிராயர் தனிச்செய்யுட் சிந்தாமணி என்னும் பெயரில் ஒரு திரட்டினைக் கொணர்ந்தார். இத்திரட்டில் இடம் பெற்றுள்ள மொத்தச் செய்யுட்கள் 3815. கவிராயரின் காலத்தில் வாழ்ந்த 23 புலவர்களும் அவருக்கு முன்னர் வாழ்ந்த 159 புலவர்களுமாக மொத்தம் 182 பேர் இப்பாடல்களைப் பாடியுள்ளனர். இப்பாடல்களுள் 779 பாடல்கள் அவர் வாழ்ந்த காலத்தில் பாடப் பெற்றவை; ஏனையவை பழம்பாடல்கள்.[4] இத் தொகுப்பின் செல்வாக்கினால் பின்னாளில் பல தனிப்பாடல் திரட்டுகள் வெளிவரத் தொடங்கின.

தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராச பண்டிதர் பதிப்பாக 1862, 1875, 1924, 1940 ஆகிய ஆண்டுகளில் தனிப்பாடல் திரட்டு மூலம் மட்டும் வெளிவந்தது. கலாரத்நாகரம் அச்சுக்கூடம் பதிப்பாக 1878ஆம் ஆண்டிலும், இட்டா பார்த்தசாரதி நாயுடு பதிப்பாக 1907ஆம் ஆண்டிலும் தனிப்பாடல் மூலங்கள் வெளி வந்தன. இப்பாடல்களுக்குரிய உரைப் பதிப்புகளாக வித்யா விநோதினி இதழாசிரியர்களின் உரைப்பதிப்பு 1892, 1902 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்தன. காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு உரை 1907, 1908 ஆண்டுகளில் வெளிவந்தது. கா. சுப்பிரமணியப் பிள்ளையின் உரை 1939ஆம் ஆண்டிலும், எம். வீரைவேற் பிள்ளையின் உரை 1940ஆம் ஆண்டிலும், அ. மாணிக்கம் உரை 1977ஆம் ஆண்டும் வெளிவந்தன. இவையன்றி டி. சந்திரசேகரன் பதிப்பிலும், ச. பாலசுந்தரம் பதிப்பிலும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பிலும், க. த. திருநாவுக்கரசு பதிப்பிலும் தனிப்பாடல் திரட்டுகள் வெளிவந்துள்ளன. இவை அனைத்திற்கும் அடிப்படையாய் அமைந்தது கந்தசாமிக் கவிராயரின் தனிச்செய்யுட் சிந்தாமணியே.

தனிப்பாடல்களின் காலம்

சங்ககாலப் பாடல்களிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் அவ்வக் காலத்தைப் புலப்படுத்தும் தனிப்பாடல் தொகுதிகளை நாம் அறிந்தாலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில்

4. கலைக்களஞ்சியம், தொகுதி 5, ப. 545,

தொடங்கி, பதினாறாம் நூற்றாண்டில் வளர்நிலை பெற்று, பத்தொன்பதாம் நூற்றாண்டில் மலர்ச்சியடைந்த தனிப்பாடல்களையே தனிப்பாடல் அல்லது தனிப்பாடல் திரட்டு என்கிறோம். தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பாகத் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், கா. சுப்பிரமணியப் பிள்ளை, மு. அருணாசலம் போன்றோர் தனிப்பாடல்கள் பாடிய ஆசிரியர்களின் காலத்தையும் உறுதிப்படுத்த முனைந்திருக்கின்றனர். இவ்வகையில், சங்க காலத்திலிருந்து பிற்காலம் வரை வாழ்ந்த பல ஔவையார்களைப் பற்றிய ஆராய்ச்சி வளர்ந்திருக்கிறது. மேலும் ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், இரட்டைப் புலவர், காளமேகப் புலவர், வீரராகவ முதலியார் போன்றோரின் காலமும் ஒருவாறு ஆராயப் பட்டிருக்கின்றன. தனிப்பாடல்கள் பற்றி ஆராய்ந்த டாக்டர் தமிழன்பன் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் காலம் பற்றிய கருத்துகளைத் தொகுத்துத் தருகிறார். அதன்படி கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஏழுவரும், பன்னிரண்டாம் நூற்றாண்டில் பதினேழு பேர்களும், பதின்மூன்று பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுகளில் நூற்றாண்டுக்கு நால்வர் வீதம் பன்னிருவரும், பதினாறாம் நூற்றாண்டில் பதின்மரும், பதினேழாம் நூற்றாண்டில் இருபதின்மரும், பதினெட்டாம் நூற்றாண்டில் பன்னிருவரும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏறக்குறைய நாற்பது பேர்களும் தனிப்பாடல்களைப் பாடியுள்ளனர்.[5] கி பி. 200 முதல் 1000 வரையுள்ள நீண்ட காலக்கட்டத்தில் வாழ்ந்த புலவர்களில் பதினேழு பேர்களின் இருபத்தொன்பது கவிதை மட்டுமே தனிப்பாடல் திரட்டில் இடம்பெற்றுள்ளன. எனவே, கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை உள்ள காலங்களில் தொகுக்கப்பெற்ற தனிப்பாடல்களையே தனிப்பாடல் திரட்டு என்று சுட்டுகிறோம். பல தனிப்பாடல் திரட்டுகளுள் கா. சு. பிள்ளையின் திரட்டில் கடவுள் வாழ்த்து உட்பட 1737 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் 826 பாடல்கள் பதினேழு, பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. ஆதலின் இந்தக் காலத்தைத் தனிப்பாடல்களின் உச்சநிலைக் காலம் என்று அழைக்கலாம்.

தனிப்பாடல்களும் புலவர்களும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் வேறு எந்தக் காலப் புலவர்களை விடவும் தனிப்பாடல் புலவர்கள் கூடுதலான உரிமை பெற்றிருந்

5. தமிழன்பன், தனிப்பாடல் திரட்டு ஓர் ஆய்வு, பக். 318-326.

தனர். தொல்காப்பியரின் கவிதைநெறிகளுக்குக் கட்டுப்பட்டுப் பாடல்களை யாத்த சங்கப் புலவர்களைப் போலவோ, தற்கட்டுப் பாட்டு உணர்ச்சியுடன் காப்பியம், சிற்றிலக்கியம் போன்ற வற்றைப் பாடிய இடைக்காலப் புலவர்களைப் போலவோ இல்லாமல் இவர்கள் முழுஉரிமை பெற்றிருந்தனர். தமிழ் இலக்கிய வரலாற்றை மேலோட்டமாகப் பார்த்தாலும்கூடத் தன்னுணர்ச்சிப் பாடல்கள் (சங்கப் பாடல்கள்) நீதிச் செய்யுள்கள், காப்பியங்கள், பக்திப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள், தத்துவச் செய்யுள்கள் என்னும் அடிப்படையில் சில வகைமைகளைப் பிரிக்கலாம். ஆனால் தனிப்பாடல்களை இந்த வகைமை எதனுள்ளும் அடக்க முடியாது. இவற்றைப் பாடிய புலவர்கள் கருதியதே புறவடிவங்களாகவும் பொருள் வடிவங்களாகவும் அமைந்தன. கவிஞர்களின் உருவத்தை மறைத்துக் கருத்துகளின் உருவங்களை முன்னிறுத்திய ஏனைய காலப் புலவர்களைப் போல் இல்லாமல் தங்களின் தனி உணர்வையே முன்னிலைப்படுத்திப் பாடியவர்கள் தனிப்பாடல் புலவர்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தின் புறச் சூழல்களே இதற்குரிய காரணமாக இருக்கலாம். சிறு அளவில் வேந்தர்களையோ, சிற்றரசர்கள், நிலக்கிழார் களையோ நம்பி வாழ்ந்த புலவர்களால் இப்படித்தான் பாட முடிந்தது போலும். மேலும் காப்பியம், சிற்றிலக்கியம், பக்திப் பாடல்கள் என்னும் ஒரே அமைப்பிலிருந்து பாடப்படும்-செக்கு மாட்டுச்சிந்தனையிலிருந்து விடுபடும் நோக்கிலும் தனிப்பாடல் களைப் புலவர்கள் பாடியிருக்கலாம்.

தனிப்பாடல்களின் பொருளமைதி

விழுமிய பண்புகளைப் பெறாத வெற்று/வெள்ளைப் பாடல்கள் என்று தள்ளவும் முடியாமல், இலட்சிய நோக்குடை யவை என்று கொள்ளவும் முடியாமல் இடைப்பட்ட நிலையில் அமைந்தவை தனிப்பாடல்கள். அழகியல் நோக்கிலோ சமூகவியல் நோக்கிலோ குறிக்கோளை முன்னிறுத்தாத யதார்த்தப் பாடல் களாகவே அவை அமைந்துள்ளன. யதார்த்தம் என்பதால்தானோ என்னவோ பாடுபொருளும் பலவாகப் பரந்து வெளிப்பட்டுள்ளன. கவிதைப் பொருளமைதி வீச்சுக் குறைந்து தனிமனித/தன்முனைப்பு வீச்சு தனிப்பாடல்களில் விஞ்சி நிற்கின்றது. ஆயினும் சராசரிப் பொதுமக்களின் - சுவைத்திறனுக்கேற்ப அவர்களின் உணர் வோட்டங்களுடன் ஒன்றிப் பாடிய புலவர்களின் சமூக உணர்ச்சியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆழ்ந்த தத்துவ

விசாரணையோ நுணுகிய இலக்கியப் பயிற்சியோ இல்லாமல் நாட்டுப்புறப் பாடல்களையும், புராண இதிகாசக் கதைகளையுமே இலக்கியங்களாகச் சுவைத்து வந்த பொதுமக்களுக்குத் தனிப் பாடல்கள் ஒரு புதிய சுவை வாயிலாக வந்தது என்பதே உண்மை. காப்பியங்களுக்குரிய கதைக்கூறுகள் இல்லாமல், கவிதைக்குரிய விழுமம்/மேம்படுத்தம் இல்லாமல், நாட்டுப்புறப்பாடல் வடிவங் களிலும் அமையாமல் இயல்தமிழ் யாப்பு வடிவங்களில் தனிப் பாடல்கள் பொதுமக்களைச் சென்றடைந்தன. அந்த வகையில் தனிப்பாடல்களின் பாடுபொருள் தெரிவில் பொருள்தேர் திறனில் தாழ்வு காணப்பட்டாலும் தமிழின் யாப்பு வகைகள் பொது மக்களுக்கு அறிமுகமானதும் சுவைக்குரியதாகியதும் பெரிய வெற்றிதான்.

பக்திப் பாடல்களை யாத்த நாயன்மார்களும் ஆழ்வாராதி யர்களும் இறைமைத் தத்துவத்தை மக்கள்மயமாக்குவதற்கு எளிய நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் கையாண்டது ஒரு நிலை. ஆனால் பொது மக்களின் உணர்வுகளைக்கூட உயர்ந்த இயல் தமிழ் யாப்பு-வடிவங்களில் கவிதையாக்கி மீண்டும் அவர்களிடமே தந்து அவர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்ப முடியும் என்னும் நோக்கில் உயர் யாப்பில் பாடிய தனிப்பாடல் புலவர்களின் முயற்சி இன்னொரு நிலை. முன்னையதில் பாடுபொருளும் பின்னையதில் பாடல் வடிவமும் மக்களுக்கு எளிதில் அறிமுகமாகின்றன. தனிப் பாடல்களின் பாடுபொருள் பொதுமக்களின் உணர்வுகளைத் தரப்படுத்த இயலாதவையாக இருந்தாலும், கடினமான இலக்கியப் பயிற்சி, தரமுயர்ந்த சங்கப் பாடல்களின் அறிமுகம், காப்பியத் தேர்ச்சி ஆகியவை இல்லாதவர்களின் இலக்கிய ஈடுபாட்டுக்கு இத்தகைய தனிப்பாடல்கள் போதுமானவையாக இருந்தன. படைப்பாளி என்னும் தம்முடைய கல்வித்தறுகண் நிலையிலிருந்து கீழிறங்கி வந்து பாவலர்கள் விளையாட்டாகப் பாடல்களைப் பாடியதை மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். இவ்வாறு பாடப் பெற்ற பாடல்களைப் பெரும்பாலும் அவற்றின் சுவை கருதியே மக்கள் விரும்பினர். சிலேடை, சீட்டுக்கவி, அங்கதம், விடுகதை போன்ற மக்களிடம் நல்ல உறவு கொண்ட இலக்கிய நுண்ணுணர்வுக் கூறுகள் இலக்கிய வகைகளாக உருப்பெற்றன.

பொதுவாகத் தனிப்பாடல்களில் முழுநீளச் சிந்தனையைக் காணமுடியாது. ஔவையார் பாடல்களில் மட்டும் அறக் கருத்துகள் ஓரளவு ஊழையாகச் செல்கின்றன. மற்றபடி

கம்பர், ஒட்டக்கூத்தர், கடிகைமுத்துப் புலவர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர், காளமேகம் போன்றோரின் பாடல்களில் கூடப் பாடல்களின் மைய இழையைக் காண்பது அரிதாக இருக்கிறது. செய்திச் சிதறல்களும்; கவிதைச் சிலிர்ப்புகளுமே தனிப்பாடல்களில் தென்படுகின்றன. தொடர்ச்சியற்ற, ஒழுங்கு முறைக்குட்படாத சிந்தனை. அப்பாடல்களின் போக்கில் காணப் பட்டாலும் எந்தப் பொருளையும் நினைத்த அளவில் சுவைபடப் பாடும் திறத்தை அவற்றின்வழி அறியமுடிகிறது.

தனிப்பாடல்களின் செந்நெறி

தனிப்பாடல்களில் அக உணர்வுகளைச் சித்திரிக்கும் பாடல் களும் சமுதாயச் சிந்தனைப் பாடல்களும் பேரளவு இடம் பெற்றுள்ளன.

அகவுணர்ச்சிப் பாடல்கள்

அகவுணர்ச்சிப் பாடல்கள் எனும்போது சங்க காலத் தன்னுணர்ச்சிப் பாடல்களுடன் எவ்வகையிலும் தனிப்பாடல்களை ஒப்பிட்டுக் காண இயலாது. இரண்டும் வெவ்வேறு நோக்கும் போக்கும் உடையன. அடிமன உணர்வுகளைத் தந்நிலையிலிருந்து உயர்த்தியும் மென்மைப்படுத்தியும் மேலே கொண்டு வருவன சங்கப் பாடல்கள்; உணர்ச்சிகளைக்-கிளர்ச்சியடையச் செய்வன தனிப்பாடல்கள். ஆழ்ந்த சமுதாய உணர்வுடன் கூடிய புதினங் களுக்கிடையே மாதப் புதினங்கள் வெளியாகி வாசகரின் உணர்வை மலினப்படுத்துவதை ஒத்துத் தனிப்பாடல்களின் வரவு அமைந்ததா என்பதை இன்னும் சிந்தித்து உறுதிப்படுத்த வேண்டும். காலப் பழமை வாய்ந்த இலக்கிய மரபுகளை ஒதுக்கிவிட்டுப் புதுவழி அமைக்க முயற்சி செய்ததன் நோக்கமும் பின்னணியும் என்ன?

> "பெண்ணடிமைத்தனம், தேவதாசி முறை, நிலவுடைமைச் சமுதாயத்தில் செல்வர்களின் பிறழ்ந்த பாலுணர்ச்சிகளுக்கு இரைபோடும் புலவர்களின் அடிமைப்பட்ட மனத்தின் சிறுமைகள் எல்லாம் அகப்பாடல்களாக உருப்பெற்றன. இடைக்காலத்து எழுந்த தூது, உலா, கலம்பகம், கோவை முதலான அக இலக்கியங்களின் கூறுகளைக் கொண்டும், சங்க அக இலக்கியத்தின் இலக்கணக் கூறுகள் சிலவற்றை மேற் கொண்டும், வாழ்வின் நடைமுறைகளைக் கொண்டு

யதார்த்தப் போக்குகளைப் பின்பற்றியமையால் இங்குக் காதற் கவிதைகளுக்கே உரிய உயர்தனித் தூய்மை நலத்தைக் காணமுடியவில்லை.''[6]

என்று தமிழன்பன் கூறும் விளக்கம் பொருத்தமாகத் தோன்று கிறது.

அகப்பாடல் வகைகள்

தனிப்பாடல்களின் அகப்பாடல்களை மூன்று வகைகளில் பகுக்கலாம். 1. கடவுள்மீது அமைந்த காதல் பாடல்கள், 2. வள்ளல்கள்மீது அமைந்த காதல் பாடல்கள், 3. ஒழிபியல் நிலையில் அமைந்த காதல் பாடல்கள். ஆய்வு வசதி கருதி இவ்வாறு மூன்று நிலைகளில் பகுத்துப் பார்த்தாலும் இப்பாடல் களுக்குச் சங்ககாலத்தைப் போல் திணை, துறைப் பாகுபாட்டினை அளித்துவிட முடியாது. கடவுளர்மீதும் வள்ளல்கள்மீதும் பெண்கள் கொள்ளும் காமத்தில் பெரிய வேறுபாடு எதுவும் இல்லை, பக்திக்கால இலக்கியங்கள் கற்பித்த சீவாத்மா, பரமாத்மா கோட்பாடுகூட இப்பாடல்களில் பிற்பற்றப்பட வில்லை. பெண்களின் விரகதாப உணர்வே பெரிதும் பேசப்படு கிறது.[7] திருமணமான ஒரு பெண்கூடத் திருப்பரங்குன்றத்து இறைவனுடன் ஒரு பாடலில் தொடர்புபடுத்திப் பாடப் படுகிறாள்.[8]

கடவுள்மீது பெண்கள் விரக தாப உணர்வு கொள்வதைப் புலவர்கள் பாடுகின்றனர். புகழேந்திப் புலவர், ஒப்பிலாமணிப் புலவர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், சுப்பிரமணிய புலவர், காளிமுத்துப் புலவர், கடிகைமுத்துப் புலவர் போன்றோரின் பாடல்களில் பெண்களின் நிறையழிந்த நெஞ்சம் படம்பிடித்துக் காட்டப்படுகிறது.[9] குறிப்பாகக் கடிகைமுத்துப் புலவர், வள்ளல் வெங்கடேசு ரெட்டன் உட்படப் பல வள்ளல்களுக்குத் தம் காதல் பாடல்கள் மூலம் பல பெண்களை நேர்ந்தளிக்கிறார். வெங்கடேசு ரெட்டனுக்கு மட்டும் முப்பத்துமூன்று பாடல்களில்

6. மேற்படி, ப. 148.
7. கா. சுப்பிரமணிய பிள்ளை, தனிப்பாடல் திரட்டு, பாகம்-2, பக். 207-211.
8. மேற்படி, பாகம்-1, ப. 299,
9. மேற்படி, பாகம்-1, ப. 64, 187, 219, 220, 282, 283, 313, 323.

பெண்களைப் படம்பிடித்துக் காட்டுகிறார். அவர் படைத்த பெண்ணொருத்தி விரகதாபத்தால் வெண்ணிலவைப் பின்வருமாறு பழிக்கிறாள் :

"எட்டமரா
சேந்திரன் என்னை மருவா நாளில்
துட்டமதன் கணைதுளைத்த துளைவழியே
தென்றல் வந்து சுவைத்துத் தள்ளி
விட்டவெறுங் கூட்டை இனிச் சுட்டதனால்
என்ன பயன் வெண்ணிலாவே"[10]

என்று உடல் சோர்ந்த நிலையில் வெண்ணிலவைப் பழிக்கிறாள்.

தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்
பெண்ணிலா ஊரிற் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலவே இந்த வேகமுனக் காகாதே

என்று நந்திக் கலம்பகத்திலும்,[11]

விண்ணிலே பிறந்ததற்கோ வெண்ணிலாவே—எரு
விட்டுநான் எரிந்ததற்கோ வெண்ணிலாவே
கண்ணின்விழி யாதவர்போல் வெண்ணிலாவே
காந்தியாட்டம் ஆடுகிறாய் வெண்ணிலாவே

என்று குற்றாலக் குறவஞ்சியிலும்[12] நாகரிகமாக இடம்பெறும் உணர்வு தனிப்பாடலில் விரசப்படுத்தப்பட்டிருக்கிறது. புலவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட வன்பசிப்பிணியையும் ஈவறுமையையும் போக்குவதற்காக மட்டும் இவ்வாறு பாடினார்கள் என்று கொள்ள முடியாது. பொதுவாகச் சமூக உணர்ச்சியிலேயே திரிபுநிலைப் போக்குகள் இருந்திருக்க வேண்டும். குறிப்பாக நிலக்கிழார் களிடமும் குறுநிலத் தலைவர்களிடமும் சோரம்போன சிற்றின்ப உணர்வின் வீச்சு மிகுதியாக இருந்திருக்க வேண்டும்.

"படைகளின் உதவி கொண்டு தமது ஆட்சியின்கீழ் மாவட்டங்களை ஆண்டுகொண்டிருந்த பல பாளையக்காரர் களும் படைத்தலைவர்களும் சிற்றின்பக் களியாட்டங் களுக்குச் சில வேளைகளில் தம் வாழ்வில் இடமதிகம் அளித்தனர். ஆபாசமான காம வருணனைகளைக் கேட்டுப்

10. மேற்படி, பாகம்-1, ப. 323.
11. நந்திக்கலம்பகம், பாடல் 111.
12. திருக்குற்றாலக் குறவஞ்சி, பாடல் 16.

பாராட்டினர், இச்சுவைத்தரக்கேட்டால் இப்பாடல்கள் புதுயுகத்தின் ஆற்றலையும் வாழ்க்கையையும் புலப்படுத்தி யதைவிட, காலச் சரிவினால் ஏற்பட்ட பலவீனங்களையே காட்டலாயின.''

என்று பேராசிரியர் தெ. பொ. மீ. குறிப்பிடுவது ஆழ்ந்து எண்ணத் தக்கது.

பொது நிலையில் அமைந்த காதல் பாடல்கள் சிலவற்றில் சங்கப்பாடல்களைப் போல் துறைக் குறிப்புக் காணப்பட்டாலும் அகனைந்திணை அமைப்போ பொருட்சிறப்போ அவற்றில் காணு மாறில்லை. கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றிற்குரிய இழிநிலைத் தன்மைகளே காணப்படுகின்றன. ஊடல் நிலையில் கூடத் தலைவனையும் தலைவியையும் சமன்மை நிலையில் வைத்துப் பார்க்கும் சங்க இலக்கியப் போக்கிற்கு மாறாக இப் பாடல்களில் தலைவி மட்டுமே விரக வேதனையில் காம நுகர்ச்சி வேண்டிப் புலம்புகிறாள்.

காதல் பாடல்களில் இத்தனை இழிவுகளுக்கிடையிலும் சில பாடல்கள் உள்ள உணர்வின் நளினமாக வெளிப்படுகின்றன. தலைவன் அருகில் இல்லாத இரவின் கொடுமையை ஒரு தலைவி பின்வருமாறு பாடுகிறாள்.

அரவம் கரந்ததோ அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப் போச்சோ—இரவிதான்
செத்தானோ இல்லையோ தீவினையோ பாங்கினைக்
கெத்தால் விடியும் இரா[13]

என்று தலைவியின் கூற்றாக ஒப்பிலாமணிப் புலவர் பாடுகிறார். 'முட்டுவேன்கொல், மோதுவேன்கொல்' என்று சங்கத்தலைவி ஓர் இரவை ஒரு யுகமாக்கிப் பாடுவதை ஒத்து இப்பாடலும் அமைந்திருக்கிறது. வள்ளுவரும் இவ்வுணர்வை நயம்படப் பாடுகிறார்.

ஒருநாள் எழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு[14]

என்கிறார். செலவழுங்கல் துறையில் அமைந்துள்ள ஒரு பாடலும் நயம்பட அமைந்துள்ளது.

---

13. தனிப்பாடல் திரட்டு, பாகம்-1, ப. 188
14. குறள். 1269.

நங்கை பயணம் நமக்கென் றுரைத்தளவில்
அங்கை பசலை நிறமானதே—செங்கை
வளைநெகிழப் பாதி மறுத்தேனென் றோத
உளநெகிழப் பாதி யுடைந்து[15]

என்னும் பாடலில் திருக்குறளின் கருத்துச் சாயல் தெரிகிறது.

உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது[16]
புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு[17]

ஆகிய குறட்பாக்கள் இவ்விடத்தில் ஒப்பிட்டு எண்ணத்தக்கன. இவ்வாறே வேறு சில நயமான பாடல்களும் தனிப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.[18]

காதலையும் காமத்தையும் பாடியதைப் போலவே சமூக ஒழுக்க நிலையில் தாழ்வுற்றிருந்த தாசியரையும் அவர்கள் தரும் சுகத்தையும் புலவர்கள் பாடியுள்ளனர். கம்பர், அந்தகக்கவி வீரராகவ முதலியார், சுப்ரதீபக் கவிராயர் போன்றோர் தாசியரிடம் பெறும் சுகபோகத்தைப் பாடுகின்றனர்.[19] தாசியரின் உடலுறுப்பைப் பழித்தும் புகழ்ந்தும் பாடியுள்ளனர். குறிப்பாகக் கண்கள், மார்பகங்கள், உதடுகள் ஆகியவற்றில் புலவர்களின் பாடல்கள் பதிந்தன. காதல் உணர்வு என்னும் நுண்பொருளே புலவர்களின் கவிதைக் கட்டுப்பாட்டுக்கு வாராமல் காட்டாற்று வெள்ளமாய்ப் பாய்ந்த நிலையில் காமக் கொள்கலமாய் விளங்கும் தாசியர் என்னும் பருப்பொருள் அவர்களின் கவியாட்டப் பொருளானதில் வியப்பில்லை.

தனிப்பாடல்களில் சமுதாயத் தாக்குரவுகள்

சங்க காலம் வரை போர்ச் சமூகமாக விளங்கிய தமிழ்ச் சமூகம் சமண பௌத்தர் வரவால், குறிப்பாகச் சமணர்களின் மிதமிஞ்சிய நீதிக் கருத்தால் கொல்லாமை நெறியால் முற்றுகையிடப் பெற்று மன வலுவிழந்தது. சைவ வைணவர்களின் பக்தி நெறியால்

---

15. தனிப்பாடல் திரட்டு, பாகம்-1, ப. 250.
16-17. குறள், 1185, 1187.
18. தனிப்பாடல் திரட்டு, பாகம்-1, ப. 46, 280, 298. பாகம்-2, ப. 48, 49, 236,266,338,339.
19. மேற்படி, பாகம்-2, ப. 11, 17, 107.194,195,197.256,257.282.

தமிழர்கள் வீரத்தையும் விவேகத்தையும் இழந்து வெறும் மனிதர் களாகி விட்டனர். பிற்காலச் சோழர் காலத்திலிருந்து பிரித் தானிய ஆட்சிக் காலம் வரை தமிழ்நாடு நாடாக இல்லாமல் படை வீடாகவே காட்சி தந்தது. இசுலாமியர், நாயக்கர், போர்ச்சுகீசியர், ஆர்க்காடு நவாப், கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆகியோர்களின் காலத்தில் தமிழ்நாடு அவர்களின் விளையாட்டுக் களமாயிற்று. இந்தச் சூழல் அமைந்த காலக்கட்டம் போர் இலக்கியங்கள் தோன்றுவதற்கு ஏற்புடைய காலக்கட்டமாக இருந்தாலும் தமிழர் அறம், பக்தி என்னும் பலிபீடங்களில் மதத்தைப் பலியிட்டு விட்டார்கள். வீரம் என்பது அகராதிச் சொல்லாகிவிட்டது. எனவே இந்தக் காலக்கட்டங்களில் போரிலக்கியங்கள்—புறப்பாடல் கள், வீர காவியங்கள் தோன்றுவதற்கு வழியின்றிப் போய்விட்டது. தனிப் பாடல்களிலும் இந்த நிலையையே காண்கிறோம். நலிந்த நிலையிலேனும் அத்தொகுப்புள் அகப்பாடல்களை அறிந்த அளவுக்குப் புறப்பாடல்களை அறிய முடியவில்லை. எனவே அகம் தவிர்ந்த ஏனைய பாடல்களைப் பொதுநிலையில் சமுதாய உணர்வு களைப் பிரதிபலிக்கும் பாடல்களாக அறிய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

புலவர்களின் வாழ்க்கைநிலை, புரவலர்களுடன் அவர்கள் கொண்டிருந்த உறவு, பொதுமக்களிடம் கொண்டிருந்த நெருக்கம் ஆகிய நிலைகளில் தனிப்பாடல்கள் காட்டும் சமுதாயத் தாக்குரவு களைக் காணலாம்.

புலவர்களுக்கும் புரவலர்களுக்குமிடையே உறவு நெருக்கமான தாக இருந்தது. புலவர்கள் வேண்டிய பொருளை அவர்கள் விரும்பியவாறு நல்கினர். இதற்கு நேர்மாறாக நடந்த நிகழ்ச்சியும் உண்டு. ஆனால் பொதுநிலையில் வள்ளன்மை வற்றிவிடாத நிலையிலேயே இருந்தது. நெற்குன்ற வாண முதலியார், இரகுநாத வள்ளல், வெங்கடேசு ரெட்டன், வல்லை மாநகர்க் காளத்தி, செகந்நாத வள்ளல், ஏகம்பவாணர் போன்ற வள்ளல்களிடம் புலவர்கள் வேண்டிய அளவு பரிசில்களைப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள் பெற்ற பரிசில்களுக்கு ஈடாக எத்தகைய கவிதைப் பங்களிப்பைச் செய்தனர்? சமூகத்தின் பொது மனிதர்கள் என்ற நிலையில் அவர்களின் சமூகக் கடப்பாடு அல்லது கவிதைக் கடப் பாடு எத்தகையதாக இருந்தது? வள்ளல்களைக் கிளர்ச்சியடையச் செய்வது மட்டுமே அவர்களின் கவிதைக் கடமையாக இருந்ததைத் தான் தனிப்பாடல்கள் சுட்டுகின்றன.

பரிசில் தந்த புரவலர்களைப் புலவர்கள் பாராட்டியதைப் போலவே தராதவர்களை வெண்டிப அளவு பழித்தும் இருக்கின்றனர். புடவிக்கயவர், ஈயாத புல்லார், செல்வக் கயவர், ஈயாத லோபர் ஆகிய சொற்களெல்லாம் ஈயாத வள்ளல்களுக்குக் கிடைத்த அடைமொழிகள். தமிழ்ச் சுவை என்றால் என்ன வென்றே தெரியாத கம்பங்களாகக் கூடச் சில புரவலர்களின் மனைவியர் இருந்திருக்கின்றனர்.[20] பொருள் தந்தோரை ஏற்றிப் போற்றுவதும் தராதோரை இழித்துப் பேசுவதும் அவர்களின் போக்காக இருந்ததைக் காணும்போது அவர்கள் புலவர்களாக இருந்ததை விடவும் மொழிவித்தைக்காரர்களாக இருந்திருப்பார் களோ என்று எண்ணத் தோன்றுகிறது. மொழி, சமூகத்தின் விளை பொருள் என்பதையும் நாகரிக, பண்பாடுகளின் ஊடகம் என்பதை யும் முறையாக உணரும் எந்தப் படைப்பாளியும் மொழியை எச்சரிக்கையாகவே பயன்படுத்துவர். மொழியை வாயிலாக்கி மிதமிஞ்சிப் புகழ்வதும் இகழ்வதும் சாபமிடுவதுமாகிய நடவடிக் கைகள் ஒரு படைப்பாளியின் மேலோட்டமான போக்கினையே குறிக்கும். கொங்கு நாட்டு மக்கள் கம்பருக்கு உரிய மதிப்புத் தராத தால் அந்நாட்டையும் நாட்டுமக்களையும் இழித்துப் பாடிய செய்தி தனிப்பாடலில் உண்டு.[21] இவ்வாறே ஒரு புலவர் நாகப்பன் என்பானை ஏழு நரகங்களில் கிடந்து உழலுமாறு சபித்த பாடலும் இடம்பெற்றுள்ளது.[22]

செல்வந்தர்களிடமும், நிலக்கிழார்களிடமும் பேரளவு நட்புப் பூண்டிருந்த புலவர்கள் பொது மக்களோடும் நட்புப் பூண் டிருந்தனர்.

> உப்புக்கும் பாடி, புளிக்கும் ஒருகவிதை
> ஒப்பிக்கும் என்றன் உள்ளம்[23]

என்னும் ஔவையின் பாடல் அடிகளில் அவரது எளிய மனநிலை வெளிப்படுகிறது. மேலும் சிலம்பி என்பவள் அளித்த கூழுக்காகவும், இடையன் மகளிர் இட்ட கீரைக்காகவும், அவர்கள் தந்த உடைக் காகவும் பாடியுள்ளார்.[24] இவ்வாறே கம்பர் சீராமன் என்னும்

---

20. மேற்படி, பாகம்-2, ப, 32.
21. மேற்படி, பாகம்-1, ப. 85.
22. மேற்படி, பாகம்-1, ப. 365.
23. மேற்படி, பாகம்-1, ப. 7.
24. மேற்படி, பாகம்-1, ப. 9,10.

துணி வெளுப்போனையும், தம்பிபுகான் என்னும் சிகை திருத்து வோனையும் சிங்காரன் என்னும் கருமாரத் தொழிலாளியையும் பாராட்டிப் பாடியுள்ளார்.[25]

சமூகத்தில் நிலவிய சில பொதுப்போக்குகளையும் குறிப்பாக ஒழுக்கம் தொடர்பான போக்குகளையும் புலவர்கள் பாடி யுள்ளனர். தனிப்பாடல்களின் காலத்தில் நாட்டில் நிகழ்ந்த ஒழுக்கச் சிதைவுகளை இதன்வழி அறிந்து கொள்ள முடிகிறது. கணிகையரும் விலைமாதரும் ஒழுக்கம் தவறி நடப்பது குலத் தொழிலாகவே இருந்தது. குலதருமம் என்னும் பெயரில் அவர்கள் அந்த உரிமையைப் பெற்றிருந்தனர் ஆனால் குலமாதரே விபசாரி களானது சமூகத்தின் நெறிகெட்ட போக்கினையே காட்டுகிறது. கணவன் இருப்பவும் கள்ளத் தொடர்பு கொண்ட ஒருத்தியைப் பற்றி ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.[26] கடிகைமுத்துப் புலவரும் பாடுகிறார்.[27] இத்தகைய தொடர்புகளுக்குக் காரணம் பொருளாசையும், உடல் திமிரும் ஆகும். தேவை கருதியும் திமிருக் காகவும் இவ்விழிதகைமைச் செயலைச் செய்வோர் உண்மையில் தன் கணவனைவிடக் கள்ளக் காதலனிடம் மிகவும் பாசமும் நேசமும் கொண்டு மோகம் கொண்டலைவார்களாம்.[28] இத்த கைய இழிதகைமைப் போக்குகளைப் புலவர்கள் வெகுவாகக் கண்டித்துள்ளனர். அவர்களின் செயல்களை உற்சாகப்படுத்த வில்லை. அப்படி உற்சாகப்படுத்தியிருந்தால் விறலிவிடு தூதினைப் போல் குப்பை இலக்கியங்கள் கூடுதலாகக் கிடைத்திருக்கும்.

தனிப்பாடல்கள் புலப்படுத்தும் சமூக நிலைகளில் குறிப்பிடத் தக்க மற்றொன்று பெண்பாற் புலவர்களின் பெருக்கமாகும். சங்க காலத்தைப் போலவே தனிப்பாடல் காலத்திலும் கூடுதலான பெண்பாற் கவிஞர்கள் உருவாயினர். ஔவையார், உப்பை, உறுவை, வள்ளியம்மை, ஏகம்பவாணரின் மனைவி, பரராசசிங்கத் தின் மனைவி, வர துங்கராம பாண்டியன் மனைவி, கம்பரின் வீட்டு வேலைக்காரி போன்றோர் கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றவர் களாக விளங்கியிருக்கின்றனர்.

தமிழகத்தில் நிலவிய சாதி பற்றிய கருத்துகளையும் தனிப் பாடல்கள் சுட்டுகின்றன. பிராமணர், வேளாளர், வன்னியர்,

---

25. மேற்படி., பாகம்-1, ப. 70, 71, 74.
26. மேற்படி, பாகம்-1, ப. 51.
27. மேற்படி, பாகம்-1, ப. 344.
28. மேற்படி, பாகம்-2, ப. 371.

நாயக்கர், செங்குந்தர், பொற்கொல்லர், தச்சர், செட்டி, பள்ளர் பறையர், கடம்பர், சக்கிலியர், குறவர் போன்றோரைச் சுட்டும் பாடல்கள் இடம் பெறுகின்றன. சாதி பற்றிய இயல்புகளைச் சில பாடல்கள் தெரிவிக்கின்றன. பிராமணர்களைப் பற்றிச் சில புலவர் கள் குறிப்பிடுவது புதுமையாக இருக்கிறது. பிராமணர்கள் மது அருந்தினராம்; புலால் உண்டனராம்.[29] பிராமணர்களை அமைச்சர்களாக அமர்த்தினால் நீதி முறை மாறிவிடுமாம்.[30] சாதியை உயர்வு தாழ்வுபடுத்திப் பார்க்கும் பழக்கம் இருந்ததற்குச் சிவனும் நக்கீரரும் சாதியின் பெயரால் ஏசிக்கொள்வது சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

சமூகத்தின் இன்றியமையாத் தேவையான கல்வி பற்றியும் அதைக் கற்கும் முறை பற்றியும் தனிப்பாடல்கள் வெகுவாகச் சுட்டுகின்றன. கல்வி, ஞானத்தின் திறவுகோல் என்றும் பதினாறு பேறுகளில் ஒன்று என்றும் கல்வியைக் குறிக்கின்றனர். இம்மை மறுமை பற்றி அறிதல், நீதியை உணர்தல் ஆகியன கல்வியின் துணையினால்தான் முடியும் என்கின்றனர். இத்தகைய கல்வியைக் குருவின் துணையின்றிப் பெறக்கூடாது என்கிறார் ஔவையார்.[31] மேலும் கல்வியில் தேர்ச்சியடையும் படிநிலைளையும் குறிப்பிடு கிறார்.[32] பிள்ளை வயதினில் கல்வி கற்க வேண்டும் என்பது அவரது அறிவுரை[33] கல்விச் செல்வம் பெற்றவன்தான் ஒரு பெண்ணை மணப்பதற்குத் தகுதியுடையவன் என்று கல்வியை மணத்திற்கு அளவுகோலாக்குவது புதுமையும் புரட்சியும் நிறைந்த கருத்தாகும்.[34] இத்தகைய கல்வியைப் பெறாத செவிகள் 'குட்டைச் செவிகள்' என்று கல்லாதோர் இழித்துரைக்கப் படுகின்றனர்.[35] ஐந்திலக்கணத் தேர்ச்சி, நாற்கவிப்புலமை, வாதத்திறன், அவதானக்கலை வல்லமை ஆகியன அந்நாளைய் கல்வித் துறைகளாக விளங்கியிருக்கின்றன.[36]

---

29. மேற்படி. பாகம்-2, ப. 129 130.
30. மேற்படி, பாகம்-1, ப. 18,
31. மேற்படி, பாகம்-2, ப. 34, 299, 386, 398, 413.
32. மேற்படி, பாகம்-1, ப. 20.
33. மேற்படி, பாகம்-1, ப. 235,
34. மேற்படி, பாகம்-2, ப. 381.
35. மேற்படி, பாகம்-2, ப. 192.
36. மேற்படி, பாகம்-1, ப. 242, 344, 397.

தமிழ்ச் சமூகத்தில் விளங்கிய பழக்க வழக்கங்கள் நம்பிக்கைகள் ஆகியன தனிப்பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பிடத்தகுந்த சிலவற்றைக் காணலாம். மன்னர்களின் பிறந்த நாளில் கைதிகளை விடுதலை செய்யும் பழக்கம் இருந்திருக்கிறது.[37] அட்டமியில் படிப்பித்தால் ஆசிரியர்க்கும் சதுர்தசியில் படித்தால் மாணவர்க்கும் கேடு உண்டாகும், பவுர்ணமி கல்விக்குக் கெடுதியை உண்டாக்கும்; பிரதமையில் கற்கும்போது கல்வி அணுகுமுறையில் தவறு ஏற்படும்[38]. காலை மாலை வேளைகளில் உறங்குவோர், பகல் வேளையில் பாலுணர்ச்சியில் ஈடுபடுவோர், இரவில் தயிரை உண்போர் செல்வத்தை இழப்பர்.[39] இஞ்சி, நெல்லிக்காய், பாகற்காய், கஞ்சி ஆகியவற்றை இரவில் உண்போர் வறுமையடையவர்.[40] பாக்கை முன்னும் வெற்றிலையைப் பின்னும் வாயிற் போட்டால் திருமகள் விலகிவிடுவாள்; மாற்றிப்போட்டால் மன்னரைப் போல் வாழ்வர்.[41] செந்தமிழ்நூல், வெற்றிலை பாக்கு, திருநீறு, பவிலக்கு, பொன்மாலை, உடை, கன்னிப்பெண் ஆகிய ஏழும் முயற்சியின்றி ஒருவனுக்குக் கிடைக்குமானால் மறுப்பின்றிப் பெற்றுக்கொள்ள வேண்டுமாம். இல்லாவிடில் திருமகள் அவனை விட்டு நீங்கி விடுவாளாம்.[42] தமிழரின் பல நம்பிக்கைகளில் இவை குறிப்பிடத் தக்கவையாக இருக்கின்றன.

தனிப்பாடல் யாப்புகள்

தனிப்பாடல்கள் யாவும் இயல்தமிழ் யாப்பிலேயே அமைந்துள்ளன. வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், கலிப்பா, கலிவிருத்தம், ஆசிரியப்பா, குறள்வெண்பா ஆகிய யாப்புகளில் முழுப்பாடல்களும் அடங்குகின்றன; சங்ககாலத் தன்னுணர்ச்சிப் பாடல்களில் ஆசிரியப்பா முதன்மை பெற்றிருந்தது. தனிப்பாடல்களிலோ வெண்பாவே முதன்மை பெற்றிருக்கிறது. தனிப்பாடல் திரட்டில் இடம் பெறும் 1735 பாடல்களில் வெண்பா மட்டும் 760 இடம் பெற்றுள்ளன. ஏனைப்பாக்களாகக் கட்டளைக் கலித்துறை 427, அறுசீர் ஆசிரிய விருத்தம் 281, எழுசீர் ஆசிரிய

37. மேற்படி, பாகம்-1, ப. 76.
38. மேற்படி, பாகம்-2, ப. 219.
39. மேற்படி, பாகம்-2, ப. 385.
40. மேற்படி, பாகம்-2, ப. 386.
41. மேற்படி, பாகம்-2, ப. 6.
42. மேற்படி, பாகம்-2, ப. 379.

விருத்தம் 36, எண்சீர் ஆசிரிய விருத்தம் 100, பன்னிருசீர் ஆசிரிய விருத்தம் 10. பதினான்குசீர் ஆசிரியவிருத்தம் 64, கலிப்பா 2. கலிவிருத்தம் 35, ஆசிரியப்பா 14, குறள் வெண்பா 5 என்ற எண்ணிக்கையில் பாடல்கள் அமைந்துள்ளன.[43] வெண்பா முதல் நிலையிலும் ஆசிரிய விருத்தங்கள் அடுத்த நிலையிலும் கட்டளைக் கலித்துறை மூன்றாம் நிலையிலும் அமைந்துள்ளன. அகவல் பாவில் மட்டுமின்றி எத்தகைய பாவடிவத்திலும் தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாட முடியும் என்பதைத் தனிப்பாடல்கள் உறுதிப் படுத்துகின்றன. பழமொழிகளில் காணப்படும் வேகமும் சொல்லில் அமைந்திருக்கும் பொருட் பருமனும் தனிப்பாடல் வெண்பாக்களில் அமைந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் வெண்பா யாப்பை உணர்ச்சி பொங்க வெற்றிகரமாகப் பயன்படுத்தியவர்களாக மிகச் சிலரே உள்ளனர். நளவெண்பாப் பாடிய புகழேந்திப் புலவர், மணிமேகலை வெண்பாப் பாடிய புரட்சிக்கவிஞர் வெண்பாவைச் செழுமையடையச் செய்தவர்கள். இதே மதிப்பீடு தனிப்பாடல் கவிஞர்களுக்கும் முற்றிலும் பொருந்தும். சமவெளியில் ஓடும் ஆற்று நீரைப் போலல்லாமல் மலையருவியைப் போல் தனிப்பாடல் வெண்பாக்களில் பாடுபொருள் குதித்து விழுகின்றன. பொதுவாகத் தனிப்பாடல்கள் முழுவதிலும் மொழி ஆளுமையும், நடைச் செழுமையும் செம்மாந்து விளங்குகின்றன. தனிப்பாடல்களில் காணப்படும் தனித்திறன்களாக இந்த இரு பண்புகளையே காண முடிகிறது; இத்தனித்திறத்தின் பரந்த வீச்சுகளை இப்புலவர்களில் ஒருவரேனும் காப்பிய முயற்சிக்கோ ஏனைய முழுநீளச் சிந்தனைகளின் வெளிப்பாட்டுக்கோ பயன்படுத்தியிருந்தால் தமிழில் இந்தக் காலக் கட்டத்துக்குரிய ஒரு பேரிலக்கியம் கிடைத்திருக்கும்.

தனிப்பாடல்களில் ஔவையார் பாடிய 80 பாடல்களில் 71 பாடல்கள் வெண்பாக்கள், இவ்வாறே காளமேகப் புலவரின் 187 பாடல்களில் 150 பாடல்கள் வெண்பாக்கள். வெண்பாவைப் போலவே கடுமையான விதிமுறைகளைக் கொண்டது கட்டளைக் கலித்துறை. இதையும் வெற்றிகரமாகச் சுவை ததும்பக் கையாண்டுள்ளனர். பல பட்டடைச் சொக்கநாதப் புலவரும் காளமுத்துப் புலவரும் இந்த யாப்பில் பல பாடல்களைப் பாடியுள்ளனர். முன்னவரின் 65 பாடல்களில் 55 பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளன, பின்னவர் பாடிய இருபது பாடல்களும்

43. தமிழண்பன், மு. நூ., ப. 338.

இந்த யாப்பிலேயே அமைந்துள்ளன. அறுசீர் விருத்தத்தில் மிகுதி யாகப் பாடியவர் கடிகை முத்துப்புலவர்.

பன்னிரண்டுக்கும் மேற்பட்ட யாப்பில் பாடிய புலவர்கள் இப் பாடல்களை இருபதுக்கும் மேற்பட்ட உத்திகளில் வெளிப்படுத்தி யுள்ளனர். அவையாவன; சிலேடை, மடக்கு, எண்ணலங்காரம், எழுத்தலங்காரம், சொல்விளையாட்டு, பொருள்கோள் வகை, சமுத்தி, விடுகதை, அங்கதம், நிந்தாஸ்துதி, வசை, நேரடியாகச் சொல்லல், சுற்றி வளைத்துச் சொல்லல், அடைமொழி இல்லாமல் பாடுவது, வினா விடை வகைகள், உவமை, உருவகம், கற்பனை, நகைச்சுவை, சீட்டுக்கவி ஆகியவை. இவ்விருபதும் தலைமை உத்தி களாகும், இவை ஒவ்வொன்றுக்கும் துணை உத்திகள் பல உண்டு.[44]

உத்திமுறைகள் பலவற்றை வெற்றிகரமாகக் கையாண்ட புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர் காளமேகப்புலவர் ஆவார். சிலேடை, சமுத்தி, அங்கதம், வசை, நிந்தாஸ்துதி, வினா விடை வகைகள் ஆகிய உத்திகளை இவர் தம் பாடல்களில் சரளமாகப் பயன்படுத்துகிறார். குறிப்பாக இவரது சிலேடை, சமுத்திப் பாடல் களுக்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்த இடம் உண்டு. இவரது பாடல்களில் இழைந்தோடும் நகைச்சுவை உணர்வு ஆற்றல் வாய்ந்தது. கவிதையின் பாடுபொருள் எதுவாக இருந்தாலும் அதை அழகியல் நுட்பத்தோடு வெளிப்படுத்த வேண்டும் என்பதைக் காளமேகப் புலவரின் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

தனிப்பாடல் வரலாற்றில் ஔவையாரின் இடமும் விதந்து பார்க்கத் தக்கது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், குறிப்பாகத் திருக்குறள் உணர்த்தும் அறக் கருத்துகளின் சுருங்கிய வெளிப் பாடாக ஔவை திகழ்கிறார். பொதுமக்களின் வாழ்க்கையோடு ஒன்றி அவர்களுக்குப் புரியும் தமிழில் அவர்களிடமிருந்து கருத்தைப் பெற்று மீண்டும் அவர்களுக்கே தந்து விடுகிறார். கல்வி, ஈகை, ஊக்கமுடைமை, நேர்மை, நடுவுநிலைமை, அடக்கம், மானம், இல்லறம், விருந்தோம்பல் போன்ற நுண்பொருள் உண்மைகளே அவரது பாடல்களின் எச்சமாய்த் திகழ்கின்றன. உவமை உருவகம் ஆகிய உத்திகளில் உவகை, வெகுளி, பெருமிதம் ஆகிய மெய்ப் பாடுகள் தோன்றத் தம் பாடல்களை யாத்துள்ளார்.

---

44. மேற்படி, ப. 265.

நிறைவுரை

தமிழில் இலக்கிய வகைகள் உருப்பெற்றிருக்கின்றன. இலக்கியங்களை வகைமைப்படுத்துவதைப் பற்றிய சிந்தனையும் தொல்காப்பியர் காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது. ஆனால் எந்த இலக்கிய வகைமைக்கும் கட்டுப்படாத புத்திலக்கியமாக, புதுமைச் சிதறல்களாக - கோலமல்லாத புள்ளிகளாகத் தனிப் பாடல்கள் உருப்பெற்றிருக்கின்றன. தனிப்பாடல் கவிஞர்கள் புதுமை விரும்பிகள் என்பதில் ஐயமில்லை. ஆதனால்தான் பெருங்காப்பியங்களும் சிறுகாப்பியங்களும் பக்தி இலக்கியங்களும் தங்களுக்கு முன்னோடிகளாக இருந்தும் கூட அவைபோல் பாடாமல் விண்மீன்களைப் போல் தனிக்கவிதைத் தெளிப்புகளைப் பல நூற்றாண்டுக் காலப்பரப்பில் தெளித்திருக்கின்றனர். வெறுத்து ஒதுக்கத் தக்க கருத்துகளாகச் சில இருந்தாலும் யதார்த்த நிலைக்கும் கவிதை வடிவம் தந்துள்ளனர். சராசரிப் பொதுமக்களின் உளப்பாங்கிற்கும், ஏற்பு நிலைக்கும், சுவைத்திறனுக்கும் ஏற்பக் கவிதை புனைந்துள்ளனர். நாடோடிப் பாடல்கள் மட்டுமன்றி இயல் தமிழ்க் கவிதைகளைக்கூட மக்கள் மயமாக்க முடியும் என்பதைத் தனிப்பாடல் கவிஞர்கள் உறுதிப்படுத்தி இருக்கின்றனர். தனிப்பாடல்களைப் படிக்கும் எவரும் அவற்றின் மொழி ஆளுமையில்; நடைவீச்சில் உத்திச் சிறப்பில் மயங்காமல் இருக்க முடியாது. படைப்பாளிகள் இக்கூறுகளை உள்வாங்கி உயர்ந்த தன்னுணர்ச்சிப் பாடல்களில் அமைத்துத் தந்தால் தமிழில் புதிய இலக்கிய வகை பிறக்கும்.

மேலாய்வுக் களங்கள்

தனிப்பாடல்களைச் சில பொதுப் பகுப்புகளில் (Macro level) இதுவரை அறிந்தோம். இனி, மேலாய்வுக் களங்கள் சிலவற்றை அமைத்து நுட்பப்படுத்திக் காணும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். சில களங்கள்:

1. புலவர்கள் அடிப்படையிலும் கருத்துகளின் அடிப்படையிலும் தனிப்பாடல்களை வகை தொகை செய்து அழகியல் கூறுகளை வெளிக்கொணர்தல்.

2. காளமேகம், ஔவையார் போல அதிகமான பாடல்களைப் பாடிய புலவர்களின் பாடல்களைத் தனிமைப்படுத்தி இலக்கியக் கொள்கை வகுத்தல்.

3. இத்தகைய புலவர்களின் கவிதை செல்நெறியை—மைய ஓட்டத்தை உணர்ந்து அவர்கள் பெயரில் இடைச்செருகல் களாக உள்ள பாடல்களைத் தனிமைப்படுத்தல்.
4. தனிப்பாடல்களில் மொழி ஆளுமை, நடைச்சிறப்பினை அறிதல்.
5. கா.சு. பிள்ளையின் தனிப்பாடல் திரட்டினை முன்னிறுத்திக் கால அடிப்படையில் தனிப்பாடல் வகையைப் பிரித்துத் தருதல்.
6. தனிப்பாடல் ஒரு காலக்கட்டத்துக்கு உரியது என்பதை அறியச் செய்யும் வகையில் ஏனைய பாடல்களை அவற்றிலிருந்து பிரித்தல். ஏனெனில் தனிப்பாடல் ஒரு காலக்கட்ட இலக்கிய வகையே அன்றி, தமிழ் இலக்கிய வரலாற்று வழியிலான பாடல்களின் தொகுப்பு (Historical Reader) அன்று.

துணைநூற் பட்டியல்

1. சுப்பிரமணிய பிள்ளை, கா., தனிப்பாடல் திரட்டு, மூலமும் உரையும் (இரு பாகங்கள்), பி. இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1939.
2. தனிப்பாடல் திரட்டு (ஐந்து தொகுதிகள்), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969-1972.
3. திருநாவுக்கரசு, க.த., தனிப்பாடல் திரட்டு, உரை, மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.
4. மாணிக்கம், அ., தனிப்பாடல் திரட்டு மூலமும் உரையும், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.
5. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு, (கி.பி. 1500), காந்தி வித்தியாலயம், திருச்சிற்றம்பலம், 1969.
6. வையாபுரிபிள்ளை, எஸ்., இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1964,
7. தமிழ் வெளியீட்டுக் கழகம், கலைக்களஞ்சியம் (தொகுதி-5) சென்னை.
8. Meenakshisundaram, T.P., A History of Tamil Literature, Annamlai University, Annamalainagar, 1965,
9. Arunachalam. M., An Introduction to the History of Tamil Literature, Gandhi Vidyalayam, Thiruchitrambalam, 1974.

சைவம்

சு. திருநாவுக்கரசு

சைவ இலக்கியங்களைப் பாடியவர்களின் காலத்தை வரையறுப்பதிலும், ஒருவர் பெயரில் பலர் வாழ்ந்து பல நூல்களை எழுதியிருப்பதனை நுணுகி ஆய்ந்து வெளியிடுவதிலும், அருளியல் நிகழ்ச்சிகளை உலகியல் அறிவு கொண்டு ஏற்பதா மறுப்பதா என்பதிலும் சிக்கல்கள் தோன்றுகின்றன. பாடல்களின் ஓசை நயம், அணிநலம், சொல்லமைப்பு, பொருள், நோக்கு முதலியவற்றைக் கூர்ந்து நோக்கி ஆய்வாளர் ஆய்வு செய்தல் நன்மை தரும்.

முன்னுரை

உயர்தனிச் செம்மொழியாகத் திகழும் தமிழ் மொழியின்கண் இலக்கணம், இலக்கியம், சமயம். தத்துவம், மருத்துவம் சோதிடம், வானியல், சிற்பம் முதலான பல துறையைச் சார்ந்த தூல்கள் உள்ளன. தமிழர்தம் அறியாமையாலும், பொறுப்பின்மையாலும் மொழி, நாடு, சமயம், இனம் முதலியவற்றால் வேறுபட்ட ஆட்சியாளர்களின் ஆளுகையினாலும் அழிந்தன போக, இருக்கின்ற நூல்களை எண்ணும்போதும் 'அறந்தார் பெருமைலையப் போல' எண்ணுதற்கரியனவாகவே உள்ளன. மனிதரின் வாழ்வுக்கு வளமும், நலமும் சேர்க்கும் இத்தகைய துறைகளைச் சார்ந்த நூல்களை ஆய்வதால், வாழும் நெறியையும். வாழ்வின் பயனையும் உணரவும், உணர்த்தவும் இயலும்.

அவ்வகையில் தமிழின்கண் பண்டுதொட்டு இன்றுவரை தோன்றியுள்ள சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்களைப் பற்றிய ஆய்வினை இக்கட்டுரை மேற்கொண்டுள்ளது.

சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்கள்

சிவபிரானைத் தனித்தும், சத்தியொடு கூடிய நிலையில் இணைத்தும், இவர்களின் பிள்ளைகளாக விநாயகரையும, முருகனையும் புராண நோக்கில் கொண்டு, சிவ குடும்பமாகப் போற்றி வழிபடும் நிலை, சைவரிடத்தில் இருந்து வருகின்றது.

நெருப்பினிடத்துத் தோன்றும் சூடு, செவ்வொளி, நீலக் கொழுந்து ஆகியவற்றையும், மலரிடத்துத் தோன்றும் மணம், மலரீச்சி, வடிவம் ஆகியவற்றையும் முறையே, சிவபிரானிடத்துப் பிரிப்பறத் தோன்றும் சக்தி, முருகன், விநாயகராகப் பெரியோர்கள் கொண்டுள்ளனர். சமயச் சின்னங்கள், மந்திரங்கள், கிரியை, பாவனை ஆகியவற்றில் சிற்சில வேறுபாடுகள் இருப்பினும், அவற்றையெல்லாம் சிவவழிபாட்டின் வளர்ச்சி நிலைகளாகக் கொள்ளலாம்.

இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள்

சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்களை இதுவரை அறிஞர் பலர் ஆய்வுசெய்து நூல்கள் யாத்துள்ளனர். ஆய்வாளர்கள் ஆய்வு செய்து முதுகலை, ஆய்வுப் பட்டங்களைப் (எம்.ஏ., எம்.ஃபில்., எம்.லிட்., பிஎச்.டி.) பெற்றுள்ளனர்.

கட்டுரையின் பக்க வரையறை கருதி, அந்நூல்களைப் பற்றிய மதிப்பீடுகளைக் குறிக்காமல், நூல்கள். ஆய்வேடுகள் அவற்றை எழுதிய ஆசிரியர்களின் பட்டியல் மட்டும் தரப்பெறுகின்றன.

பன்னிரு திருமுறை வரலாறு –க. வெள்ளைவாரணன்.

சைவ இலக்கிய வரலாறு - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை

பக்தி இலக்கியங்கள் - ப. அருணாசலம்

சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் - சை. சி. நூ. ப. கழக வெளியீடு.

''தெய்வத்தமிழ்'' நூல்-சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு.

சைவ சமய வளர்ச்சி - மா. இராசமாணிக்கனார்

சேக்கிழார் செம்மணித்திரள் - சம்பந்த சரணாலயத்தம்பிரான்

திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு
திருநாவுக்கரசர் - ஓர் ஆய்வு
சுந்தரர் - ஓர் ஆய்வு
திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்
} வை. இரத்தினசபாபதி

திருமந்திர ஆராய்ச்சி
திருவருட்பா ஆராய்ச்சி
} இரா. மாணிக்கவாசகம்

திருத்தொண்டர்களின் தனித்தன்மைகள் - சு. தங்கவேலு

திருவாசகத்தில் உவமைகள் உணர்த்தும் உண்மைகள் - ஜெ. வி. கே. மீனாட்சி

திருவருட்பா ஆய்வு வரலாறு - எஸ். பி. இராணி
சேக்கிழாரின் இலக்கியத்திறன் - எஸ். பரமசிவம்
பன்னிரு திருமுறைகளின் இயற்கை - இரா இலட்சாராமன்
தேவியும் அருணகிரிநாதரும் -
எஸ். வி. சுப்பிரமணியம் &
எஸ். வி. சாதுராம சுவாமிகள்
விநாயகர் வழிபாடு - க, ஜெயா
திருப்புகழ் - ஓர் ஆய்வு - ஜி.ஆர். கிருஷ்ணமூர்த்தி
திருப்புகழில் மெய்ப்பொருளியல் · சு. திருநாவுக்கரசு
சிவஞான முனிவர் பிள்ளைத்தமிழ் நூல்கள் -
ஓர் ஆய்வு - சு. திருநாவுக்கரசு

ஆய்வுச் சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

பக்தி இலக்கியங்களுள் நுழைந்து ஆய்வு செய்ய முற்படும் போது பல சிக்கல்களை ஆய்வாளர் சந்திக்க வேண்டியுள்ளது. சான்றாகச் சிலவற்றைக் கூறலாம்.

பக்தி இலக்கியங்களைப் பாடியவர்களின் காலத்தை வரையறுப்பதிலும், ஒருவர் பெயரையே பலரும் தமக்குக்கொண்டு பல்வேறு காலங்களில் வாழ்ந்து, பல நூல்களை எழுதியிருப்பதனை நுணுகி ஆய்ந்து வெளியிடுவதிலும், அருளியல் நிகழ்ச்சிகளை உலகியல் அறிவு கொண்டு ஏற்பதா, மதிப்பதா என்பதிலும், புராணக்கதைகளை ஏற்பதிலும், பாடலில் இடம் பெற்றுள்ள சொற்களுக்குப் பொருள் கொள்ளும் முறைகளில் இடர்ப்பாடு நிகழ்வதிலும் சிக்கல்கள் தோன்றுகின்றன.

இருப்பினும் 'காய்தல் உவத்தல் அகற்றி, நடுவுநிலை பிறழாமல் கிடைத்த தரவுகளைக் கொண்டு ஆய்வதையும், குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகைநாடி மிக்கதைக் கொள்வதையும், ஆய்வாளர் கடமையாகக் கொள்ளின், அவர்களின் ஆய்வுப் பேரொளியால், சிக்கல்களெனும் இருட்பகுதிகள் நீங்கி விளக்கம் பெறும், எனவே இத்தகைய சிக்கல்களை ஆய்ந்து முடிவுக்கு வருதல் ஆய்வாளரின் கடனாகின்றது.

1. காலச்சிக்கலும், தீர்வும்

திருமூலர் : இவர் திருவாவடுதுறையில் படர்அரசிற்கீழ் யோகத்தமர்ந்து, ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களை அருளியதாகச் சேக்கிழார், திருமூல நாயனார் புராணத்திற் குறிப்பிடுகின்றார். நெடுங்காலம் சிவயோகத் திருந்தமையை

ஒப்பில் எழுகோடியுகமிருந்தேன் (திருமந். 74)

எனவும்,

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலிகோடி. (திருமந். 80)

எனவும் கூறப்பெறும் அவர் வாக்கால் உணரலாம்.

இக்கூற்றினையொட்டி, கருதலளவையின் துணைகொண்டு துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் எழுதிய 'திருமூலர் வரலாறு' என்னும் நூல் பின்வருமாறு கூறுகின்றது:

"திருமூலர் திருக்கயிலையிலிருந்து, தென்திசைவந்தது கி.மு. 6000க்கும் கி.மு. 3100க்கும் இடைப்பட்ட காலம் என்றும், கி. மு. 6000இல் திருக்கயிலையிலிருந்து பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆகிய முனிவர்களுடன் தில்லைக்கு வந்து நடனதரிசனம் கண்டு, வடகயிலை சென்று தலமிருந்தா ரென்றும், கி.மு. 3100இல் அகத்தியரைக் காண இரண்டாம் முறையாகத் தென்திசைக்கு வந்தாரென்றும், வரும்வழியில் சாத்தனூரில் ஆயனுடலிற் புகுந்து, திருவாவடுதுறையில் 3000 ஆண்டுகள் சிவயோகத்தமர்ந்து, 3000 திருமந்திரங்களை யருளிச் செய்து கி மு. 100-ஆம் ஆண்டில் மீளவும் வட கயிலை சென்று பிறவா நெறிபெற்றார் என்றும், திருமூலராகிய சிவ யோகியாரது முன்னைய உடம்பின் பிறப்புப்பற்றியும், அவர் வாழ்ந்த காலம் பற்றியும் ஊகித்து ஆராய்ந்து முடிவு கூறுவாரு முளர்.[1]

திருமூலர் மூவாயிரம் ஆண்டுக்காலம் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களை ஆண்டுக்கொரு பாடலாக அருளினார் என்பது, ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமையவில்லை. காரணம் பாடல் அமைப்பு, நடை, மொழி முதலியன அவர் தம் அனுபவம், ஆண்டுகள் ஆகியவற்றின் வேறுபாட்டிற்கேற்ப சிறிதுகூட மாற்ற மின்றி, ஒரே நிலையில் உள்ளன.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களுக்கும், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுக்குமே கால அடிப்படையில், யாப்பு வகை யிலும், மொழியமைப்பிலும், நடைவேறுபாட்டிலும், பொருளமைப் பிலும் எவ்வளவோ வேறுபாடுகள் உள்ளன. எனவே, ஒருவர்

1. க. வெள்ளைவாரணன், பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் தொகுதி - பக். 423-424, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1969.

ஓரிடத்தில் மூவாயிரம் ஆண்டுகள் தங்கியிருந்து சமய உணர்வு என்னும் ஒரே நோக்கில் பாடல்கள் பாடினார் என்பது பொருந்து மாறில்லை.

ஆயினும், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடல்களில் திருமந்திரப் பாடல்களின் சொற்றொடர்களும் பொருள்களும் இடம் பெற்றிருப்பதால். அவர்கள் வாழ்ந்த கி.பி. 7ஆம் நூற்றாண் டிற்கு முற்பட்டவர் எனலாம். சான்று :

தாயினும் நல்லன் (திருமந். 8)

தாயினும் நல்ல தலைவர் (திருஞான சம்பந்தர், தேவாரம் 3-190-9)

தாயினும் நல்ல சங்கரனுக்கன்பர் (திருநாவுக்கரசர்-தேவாரம் 5-100-9)

மேலும், கி. பி, ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்லவ மன்னனாகிய சிம்மவர்மன், தில்லையில் திருச்சிற்றம்பலத்தைப் பொன்வேய்ந்தான் என்பர் அறிஞர் தி. வை. சதாசிவ பண்டாரத் தார். திருமந்திரத்தில், தில்லை கோயில் 'பொன்னம்பலம்' என்று கூறப்பட்டிருப்பதால், இந்நூல் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியிலோ, ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ பாடல் பெற்றிருத்தல் வேண்டுமெனத் துணியலாம்.

இவ்வாறே மணிவாசகர், தேவார ஆசிரியர் மூவர்க்கும் பிற் பட்டவர் என்றும் மூவர்க்கும் முற்பட்டவர் என்றும் இரண்டு வகைக் கருத்துகளைக் கொள்ளும்படியாக ஆய்ந்துள்ளனர்.

தேவார மூவர்க்கும் முற்பட்டவர் மாணிக்கவாசகர் என்ப தனை மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் என்னும் நூலில் மறைமலையடிகள் நிலை நாட்டியுள்ளார். ஆயினும், பன்னிரு திரு முறை வரலாறு எழுதிய க. வெள்ளைவாரணனார் எடுத்துக்காட்டி யுள்ள ஏதுக்களால் மாணிக்கவாசகர் தேவார ஆசிரியர் மூவர்க்கும் பிற்பட்டவர் என்னும் கொள்கையும். கி.பி, 792முதல் கி.பி. 825 வரை ஆட்சிபுரிந்த முதல் வரகுண பாண்டியனது ஆட்சிக் காலமே இவர் தம் காலம் என்பதும் தெளிவாகின்றது.

2. பெயரடிப்படையில் ஏற்பட்டுள்ள சிக்கலும் தீர்வும்

நக்கீரர் பலர் : எட்டுத்தொகையில் அகநானூறு முதலிய வற்றில் பாடல்கள் பாடிய நக்கீரரும், பத்துப்பாட்டு, நெடுநல்

வாடை பாடிய நக்கீரரும் மொழிநடை சொல்லாட்சி, பொருளமைப்பு முதலியன கொண்டு ஒருவரே எனத் துணியலாம். ஆனால் பத்துப்பாட்டு முதல் நூலாகிய திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் வேறொருவர் எனக் கருதக் காரணம் உண்டு. திருமுருகாற்றுப்படையுள் பெறலரும் பரிசில் நல்குமதி (அடி - 295) என்னும் தொடரிடத்து முன்னிலையசைச் சொல்லாக வரவேண்டிய 'மதி' என்பது, படர்க்கையில் ஆளப்பட்டுள்ளது. எனவே, தொல்காப்பியர் கூறும் முன்னிலையிடத்துக்கு மாறாகப் படர்க்கையிடத்துக்கு வருவதால் இந்நூல் தொல்காப்பியத்திற்கும், சங்க இலக்கியத்திற்கும் காலத்தால் பிற்பட்டதென்பதும், ஆயினும் பத்துப்பாட்டு தொகுக்கப்பட்ட காலத்துக்கு முற்பட்டது என்பதும் தெரிகிறது. இவ்வாறே இறையனார் அகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்குத் திட்ப நுட்பம் செறிந்த உரைவரைந்த நக்கீரர் வேறு 'ஒருவர்' ஆவார்.

பதினோராம் திருமுறையில் 'கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி' முதலான நூல்களைப் பாடிய நக்கீரர் வேறொருவர் எனலாம்.

இவ்வாறு உரைப்பதற்குக் காரணம், சங்க கால நக்கீரருக்குப் பிற்பட்ட ஏனையவர்களின் பாடல்களைக் காட்டிலும், தம்பாடல்களில் ஆண்டுள்ள வடசொற்களினைவு, கையாளப்பட்டுள்ள மொழிநடை ஆகியன முன்னையோர் மூவரை நோக்க மிகவும் பிற்பட்ட காலத்தவர் என்றே காட்டுகின்றன.

எனவே, இலக்கிய உலகில் நக்கீரர் என்னும் பெயரில் நால்வர் பல்வேறு காலங்களில் தோன்றி நூல்கள் படைத்துள்ளனர் எனத் தெளிய முடிகிறது. பட்டினத்தார் என்னும் பெயரில் சிலர் வாழ்ந்தமையும் சுட்டத்தக்கது.

இவ்வாறு பாக்களின் வடிவம், உள்ளடக்கம், பொருளமைப்பு, மொழிநடை, சொல்லாட்சி, பிறமொழிக்கலப்பு, சமகால இலக்கியங்கள், சமகாலப்புலவர்தம்படைப்புகள் முதலியன கொண்டு ஒப்பீட்டு நிலையில் ஆய்ந்து நோக்கி ஆசிரியர் வரையறை அவர்தம் காலவரையறை நிறுவப் பெறுதல் வேண்டும்,

3. திருமுறைகளுக்கு உரையின்மை யாகிய சிக்கலும், தீர்வும்

பன்னிரு திருமுறைகளுக்கும் அவை தோன்றிய காலத்திலிருந்து அருளுபவம் மிக்க சான்றோர்களால் விளக்கமாக

உரை எழுதப் பெறவில்லை என்பது ஒரு குறையாக, சிக்கலாகச் சுட்டப் பெறுகின்றது.

திருமுறைகளுக்கு விரிவாக உரை எழுதப் பெறாமை, தத்துவக் கோட்பாடுகளை விளக்கும் வகையில் தக்க அளவில் உரை யமையாமை, விரிவான உரையின்மையால், கிடைத்த பதிகங்களுள் மிறைக்கவி முதலான மூல இலக்கியங்களின் பொருளறிய வியலாமை ஆகிய குறைகள், திருஞானசம்பந்தர் தேவார ஆராய்ச்சி யில் எழுஞ் சிக்கல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன.[2]

திருமுறைப் பாடல்களின் சொற்பொருளறியவும், நுட்பமான உட்கிடக்கையை உணரவும், அப்பாடல்களின் பொருணலத்தை ஏனைய பகுதிகளோடு ஒப்பிட்டு உணரவும், தத்துவச் செய்திகளை விளங்கிக் கொள்ளவும், உரை இன்றியமையாதது என்னும் உண்மை ஏற்க வேண்டிய ஒன்றே. இருப்பினும் திருமுறைகளுக்கு உரைவரை யாமைக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்பதும் ஆய்வதற் குரியதே. எல்லாம் வல்ல இறைவன் அருளால், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானியாகிய அருள்ஞானம்கைவரப் பெற்றவர்கள் திருமுறையாசிரியர்கள். இறைவனால் ஆட்கொள் ளப்பெற்ற நிலையில் சித்தமலம் நீங்கிச் சிவமாகப்பெற்ற அடியார் களால் பாடப்பெற்ற அவ்வருட்பாக்களுக்கு அத்தகைய அனுபவ நிலை எய்தப் பெறாதோரால் எழுதப்படும் உரை, பொருந்தாத வையேயாகும். அருள் நூல்களை ஆயும் திறனுடையோர் அனுபவ நிலை எய்தப் பெற்று உரைவரைந்தாலும், அவ்வனுபவநிலை அறிய மாட்டாதோர்க்கு அவ்வுரையால் பயன் நுகர முடியாமற் போகும்.

இன்றியமையாமை கருதி உண்மைப் பொருள் விளங்குமாறு உரைவரைந்தாலும் பின்வருவோர் அவ்வுரையைப் படித்த அளவி லேயே தம்முயற்சிகளை நிறுத்திக் கொள்ளவும் கூடும், அவ்வாறா யின், மேலும் தனியாகச் சிந்தித்து உய்த்துணரும் வாய்ப்பில்லாமல் போகும். இன்னொரு வகையில், அனுபவமிக்கோர் உரையில் கூறிய நுண்பொருள்கள் கூட, உரையின் மூலமாக நூலை அறிய முயலும் எளியவர்க்கு உய்த்துணர்ந்து அறிய முடியாமல் போகின்றது. அதனால் தாம் உணர முடியாத உரையமைந்த நூலை விடுத்து அவர்கள் ஒதுங்கவும் கூடும்.

---

2. பி. எஸ். சோமசுந்தரம், திருஞானசம்பந்தர் தேவார ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள், கருத்தரங்கம்- உ.த,ஆ. நிறு வனம், தட்டச்சுப்படி.

எனவே திருமுறைகளுக்கு அவரவர் அறிவு நிலைக்கும், அனுபவ நிலைக்கும் ஏற்பப் பொருள் உணர்ந்து நூல்களில் ஈடுபாடு கொள்ளட்டும் எனினும் எண்ணத்தில் உரைவரையாது விட்டனரோ என எண்ணத் தோன்றுகின்றது. திருமுறைகள் அனுபவப்பிழிவு ஆதலினால், பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப்பற்றி மண்ணும் அடியார்க்கு. அந்நூல்களில் ஆய்வும் தோய்வும் கொள்ளும்போது நுட்பப்பொருளெல்லாம் விளக்க முறும் என்று ஆன்றோர்கள் கொண்ட உண்மை எண்ணமும் காரணமாகும்.

பன்னிரு திருமுறைகளுக்கும் அண்மைக் காலத்தில் உரைவரை யப்பெற்ற பதிப்புகள் பல வெளிவந்துள்ளன.

பன்னிரு திருமுறைகளின் பிழிவாக நமக்கு சிவஞானபோதம் முதலிய பதினான்கு சாத்திரங்கள் கிடைத்துள்ளன என்பது உண்மை. ''திருமுறைத் தெளிவே சிவஞான போதம்''[3] என்னும் நூல் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றது.

சந்தான குரவருள் முதல்வராகிய மெய்கண்டாரின் தோற்றத் திற்கும், அவரருளிய சிவஞான போதத்தின் வழி ஏனைய சைவசித் தாந்த சாத்திரங்களின் தோற்றத்திற்கும், அவர்தம் சிடமரபினராக மூவர் தோன்றுவதற்கும் அடிப்படையாக அமைந்த அருட் பதிகம் திருஞானசம்பந்தர் பாடிய திருவெண்காட்டுப்பதிகம் எனில், இவைபோலும் ஏனைய பதிகங்களுக்கும், திருமுறைகளுக்கும் உள்ள அருட்சிறப்பை ஆய்ந்திடும்போது, உரையின்மையால் ஒன்றும் குறையில்லை எனத்தெளியலாம். திருவருட் செயல் சைவம் சார்ந்த பக்தி இலக்கியங்களுக்குக் கிடைத்த பெருவெற்றியாகும்.

4. பக்தி இலக்கியங்களில் சிற்றின்பச் செய்திகளும், விலைமாதர் உறவும் இடம் பெற்றுள்ளமையால் எழும் சிக்கல்கள்

அருணகிரிநாதர், திருப்புகழ்ப் பாடல்கள் பலவற்றுள் விலை மாதர்பால் கொள்ளும் உறவையும், சிற்றின்பத்தையும் விதந்து கூறியுள்ளமை, சிற்றின்பத்தால் வரும் கேட்டினை விளக்குவதற் காகவேயாகும். இதனால், உயிர், உடலைப் பெற்றதனால் பெற வேண்டிய இறையருள் இன்பம் கிட்டாமல், உடல் கேட்டினை அடைகிறது. உடலினைக் காக்கவேண்டிய இன்றியமையாமையும்

3. வை. இரத்தினசபாபதி. திருமுறைத் தெளிவே சிவஞான போதம், சென்னைப் பல்கலைக் கழகம்.

காவா வழிச் சிற்றின்பத்தால் அடையும் கேட்டினையும் குறித்து வள்ளற்பெருமானின் கருத்துகளை ஒப்பிடுவது தக்கதாகும்.

"நம்மை நஷ்டம் செய்வன் நான்கு. அவையாவன ஆகாரம், மைதுனம், நித்திரை, பயம். ஆதலால் இந்நான்கிலும் அதிஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். இந்த நான்கிலும் முக்கியமானவை ஆகாரம், மைதுனம், ஆதலால் இவ்விரண்டிலும் அதிஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இந்த இரண்டிலும் முக்கியமானது மைதுனம். ஆதலால் இந்த விஷயத்தில் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவ்வாறு இராவிடில், தேகம் அதிசீக்கிரத்தில் போய்விடும். முத்தியை அடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும், வேறு தேகத்தால் அடைவது அரிதாகவும் இருப்பதால் எவ்விதத்திலாயினும் தேகம் நீடித்திருக்கும்படிப் பாதுகாத்தல் வேண்டும்."[4]

இறைவனை அடையுமட்டும் இவ்வுடல் வேண்டும் என்பதே தாயுமானவரின் எண்ணம். அறியாமை முழுதும் அகற்றி, அறிவாய் நின்று ஆனந்தமும் பெற்று, குறியே இன்றி இருந்தால் இவ்வுடல் வேண்டாம். அதுவரை இவ்வுடல் வேண்டுமென் என்றே வேண்டுகின்றார் அவர்.

அறிவில் அறியாமை அற்றறிவாய் நின்று
பிறிவற ஆனந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தால்
அற்றைக் குடல் வேண்டாம்; ஐயாஇவ் வாக்கையையே
எற்றைக்கும் வேண்டுவனே யான்[5]

(தாயுமா-28-33)

எனவே, பொதுமகளிர்பால் பெறும் இன்பத்தால் உடல் மெலிகிறது; நோயையும் அழிவையும் தருவதாயினும் அதனைக் கைவிடுதல் அரிது என்று அதன் ஆற்றலையும், கொடுமையையும் உணர வைப்பதன் மூலம் அருணகிரிநாதர் எச்சரிக்கின்றார்.

கொஞ்சி நடம்பயில் வேசை முண்டைகள்
தந்த சுகந்தனை யேபு கன்றுடல் மெலிவேனோ?
(திருப். 111)

ஒருபொழுதும் விடலரிது எனும் அனுபவம் இது (திருப். 921)

---

4. வள்ளலார், நித்திய ஒழுக்கம் என்னும் உலகியல், ஆறாவது திருமுறை, திருவருட்பாத்திரட்டு, ப. 199.
5. ச. வே. சுப்பிரமணியன், தாயுமானவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பக் 94-95

மா அனுபவம் இது; சற்றும் விடவோ இயலாது இயலாதே
(திருப். 1140)

எனவே, சிற்றின்பச் செய்திகள், பக்திப் பாடல்களில் இடம் பெற, இவையே காரணமெனலாம்.

5. அருள் நிகழ்ச்சிகளை அறிவு நோக்கில் ஆராய்வதால் வரும் சிக்கல்

அருளாளர் வாழ்வில் நிகழ்ந்த, இயற்கை இகந்த, நிகழ்ச்சிகளை - அற்புதங்களை - ஆராய முற்படுதல் சிற்றறிவும், சிற்றனுபவமும் வாய்ந்தவர்க்கு ஏலாததாகும்.

காணும் கரணங்களெல்லாம் பேரின்பம் எனப் பேணும் அடியாராகிய செம்புலச் செல்வர்களின் வாழ்வில் நிகழ்ந்ததை, அத்தகைய உயர்நிலை யனுபவம் வாய்க்கப் பெறாதோர் 'நடக்க முடியாத ஒன்று' எனத் துணிவது 'நரிவாலைக் கொண்டு கடலாழம் கண்ட கதை' யொக்கும்.

எனவேதான், ஆண்டவன் இருப்பிலோ, அவனருளிலோ ஐயப்பட வேண்டாம் என்று வற்புறுத்து முகமாக,

'ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி'
(3-54-5)

என்பார் ஞானசம்பந்தர்.

6. புராண, இதிகாசக் கதைகளை நம்புவதா? என்பதில் சிக்கல்

புராண, இதிகாசங்களில் வரும் கதைகள் அறிவுக்குப் பொருத்தமானதாகவோ, உலகியலுக்கு ஒத்த உண்மையானதாகவோ இல்லை எனப் பலர் மொழிகின்றனர்.

இந்தக் கதைகளின் நோக்கம், மற்றவர் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காக அன்று. மிக நுட்பமான, அடிப்படையான, மறுக்க முடியாத உண்மைகளை உணர்த்துவதாகத்தான் இவற்றின் நோக்கத்தைக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாகச் 'சிவபிரான் திரிபுரத்தைச் சிரித்தே எரித்தான்' என்பது ஒரு புராணக் கதை. திருமூலர் இக்கதையின் உட்கருத்தைக் கண்டு கொள்ளுமாறு நமக்குக் காட்டுகின்றார் ஒரு பாடலில்.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் எரித்தனன் என்பர்கள் மூடர்கள்;
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆரறி வாரே (திருமந்திரம், 343)

இப்பாடலின் மூலமாகத் திருமூலர் முப்புரங்களாவன மும்மலங்கள் என்றும் சிவபிரான் முப்புரங்களை எரித்தமை என்பது ஆன்மாக்களின் மும்மலங்களை எரித்த செயலையே குறிப்பதாகவும், தத்துவ அடிப்படையில் கூறியுள்ளதை நோக்குதல் வேண்டும்.

இவ்வாறே, ஏனைய இதிகாச, புராணக் கதைகளின் உட் பொருளை ஆய்ந்து தீர்வு காணலாம்.

7. தல புராணங்கள் அமைப்பிலும், பொருள் தன்மையிலும் ஒன்றைப் போலவே பெரும்பாலும் ஏனையவை அமைவதால் ஏற்படும் சிக்கல்.

தமிழ் மொழியில் தல புராணங்கள் பலவுள்ளன. அவை யனைத்தும் சற்றேறக்குறைய ஒரே அமைப்புடையனவாக விளங்குவதும், வடமொழிப் புராணங்களைத் தழுவி எழுதப்பட்டிருப்பதும் படிப்போர்க்கும், ஆய்வோர்க்கும் சிலபோது சலிப்புத் தருவனவாகவே அமைந்துள்ளன.

தலபுராணங்கள் வடமொழித் தழுவலாயினும் தமிழ் மரபு ஒட்டியே எழுதப்பட்டுள்ளன. மேலும், இவை மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றைச் சிறப்பிக்கும் முறையில் தலத்துக்குத் தலம் இந்நூல்கள் வேறுபடுகின்றன. எத்தகைய பாவியாக இருந்தாலும் குறிப்பிட்ட தலத்துக்குச் சென்று ஆண்டுள்ள தீர்த்தத்தில் படிந்து மூர்த்தத்தினை உண்மையன்புடன் உருகி வழிபட்டால் உறுதியாக அவன் உய்திபெறுவான் என்னும் கருத்தினை எடுத்தியம்பி, நம்மை நம்பிக்கை கொள்ளச்செய்து வழிபாட்டில் ஈடுபடவைப்பதால், தலபுராணங்களும், படித்து ஆய்ந்து பயன்பெறுதற்கு உரியனவேயாகும்.

8. பாடல்களில் காணப்படும் சொற்களுக்குப் பாட்டின் பொருள் நோக்கிற்கேலாத வகையில் மாறான பொருள் கொள்ளுதலும், அதற்கேற்ப கதை புனைந்து உலகில் உலவ விடுதலும் ஆகியவற்றால் உண்மை காண்பதில் ஏற்படும் சிக்கல்.

அருணகிரிநாதர்பால் தோற்ற சம்பந்தாண்டானது சூழ்ச்சியால் பிரபுட தேவராயரது வேண்டுகோளுக்கிணங்கி, விண்ணுலகி

லுள்ள பாரிசாத மலரைக் கொணரும் பொருட்டுத் தமது உடலைத் திருவண்ணாமலைக் கோயிற் கோபுரத்தில் மறைத்துவிட்டு, அங்கு இறந்து கிடந்த கிளியுடலிற் புகுந்து, வானுலகு சென்றனர் எனவும், வருவதற்குள் அவர்தம் உடலைச் சம்பந்தாண்டான் கண்டு, அரசனுக்குக் காட்டி அரசனின் உடன்பாடு பெற்று, அதனை எரித்துவிட்டதாகவும், கிளிவடிவத்தோடு திரும்பிவந்த அருணகிரி நாதர், தம்முடல் எரிக்கப்பட்டதறிந்து, கந்தர் அநுபூதிபாடி, அதன் பின்னர் கிளியுருவமாகவே செந்தமிழ்க்கடவுள் மாட்டு அமர்ந்து விட்டனர் எனவும் ஆன்றோர் கூறுவர்.[6]

இவ்வரலாறு பொருத்தமில்லாக் கதையாகத் தோன்றுகிறது. வேண்டிய போது அடியார் வேண்டிய போகமதை வேண்ட தவறாது உதவும் முருகப் பெருமானின் அருள்பெற்ற அநுபூதிச் செல்வராகிய அருணகிரிநாதர் தாம் வேண்டிய பேரின்ப நிலையைப் பெறாது கிளிவடிவம் பெற்றார் எனல், இறைவனின் பேரருளுக்கும், அருணகிரிநாதரின் வாழ்வு உயர்வுக்கும், பக்தித் துறையில் ஈடுபடும் மாந்தரின் உணர்வுக்கும் சற்றும் பொருந்தாத வையாகும்.

மேலும் "சுகவெள்ள நிலைப் பொருளாயுள்ளது சிவபரம் பொருள் என்றும், அதனோடு சேரும் நாள் என்றோ?" என்றும் ஏங்குவதை/வேண்டுவதை நோக்கும்போது 'சுகம்' என்னும் சொல் பேரின்பப் பொருளாகிய இறைவனைக் குறிக்கிறதேயன்றிக் கிளியைக் குறிக்கவில்லை எனலாம்.

சுக வெள்ளத்தாணுவுடன் என்றுசேர்வேன்
(திருப். 209)

இக்கிளியுருவக்கதைக்குச் சான்றுகளாகக் கூறப்பெறுவன அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களில்,

பரவசம் தணிந்து உனைஉணர்ந்து, ஒரு
மவுனபஞ்சரம் மயில்தரும் சுகபதம் அடைந்து
இருந்து அருளு பொருந்துவது ஒரு நாளே
(திருப். 1151)

துகளில் சாயுச்சியக் கதியை, யீறற்ற சொற்
சுகசொரு பத்தை யுற்றடைவேனோ (திருப். 425)

எனவரும் பகுதிகளேயாகும். சுகம் என்ற வடசொல்லுக்கு இன்பம், எனவும் கிளி எனவும் பொருளுண்டு.

6. வ. சு. செங்கல்வராயபிள்ளை, திருப்புகழ், மூன்றாம் பாகம், அருணகிரிநாத சுவாமிகள் சரித்திர ஆராய்ச்சி, ப.19.

மேல் வரும் பாடல்களில் வந்துள்ள சுகபதம், சுகசொரூபம் என்னும் தொடர்கள் தவறாகப் பொருள் கொண்டு, இக்கதை உருவாக்கப்பட்டுவிட்டது என்பது வெள்ளிடைமலை.

திருக்கோணமலைத் திருப்புகழில்

திருக் கோணா மலைத் தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயிலில் கிளிப்பாடு பூதியில் வருவோனே
(திருப். 432)

என்னும் குறிப்பைப் பார்த்தே இக்கதை தோன்றியிருக்கக் கூடும். ஈண்டு, கிளிப்பாடு பூதி யென்பது, திருக்கோணமலைக் கோயில் கோபுர நிலையில் உள்ள ஓரிடமே ஆகும். எனவே அருணகிரிநாதர் கிளிவடிவெடுத்ததாகச் சொல்வது பொருந்தாது.

எனவே, அருணகிரிநாதர், முருகனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றுப் பலவகையான உபதேசங்களையும், அருள்நலங்களையும் பெற்று, திருப்புகழ் முதலான திருவருள் நூல்களால், முருகனைத் தலங்கள் தோறும் சென்று தரிசித்துப் பாடி, அவனுடைய திருவடியின்கண் தலைப்பட்டுப் பெறும், பேரா இன்பப் பெருவாழ்வாம் சிவசாயுச்சிய நிலையைப் பெற்றவர் என்பதே, அவர் வாழ்வின் நிறை நிலையாகும்.[7]

இவ்வாறு ஆய்வில் எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காணப் பெறுதல் வேண்டும்.

விரிவான நிலையில் இனிச் செய்யப்பட வேண்டிய ஆய்வுகள்

பக்தி இலக்கியங்களில் காணப்பெறும் பாட்டல்களின் ஓசைநயம், அணிநலம், சொல்லமைப்பு, பொருள் நோக்கு முதலானவற்றைக் கூர்ந்து நோக்கி, ஆய்வாளர்கள் ஆய்வு செய்தல் நன்மை தரும்.

1. பக்தி இலக்கியங்கள் காலந்தோறும் யாப்பு வகைகளில் மாற்றமும் வளர்ச்சியும் பெற்று வந்துள்ள முறைகளை ஆய்தல்.
2. அவற்றுள் காணப்பெறும் புராண இதிகாசக் கதைக் கூறுகளை எடுத்துரைத்து, அவற்றின் அடிப்படை உண்மைகளைப் புலப்படுத்துதல்.
3. அன்புநெறியே சிவநெறி; அதுவே தமிழர் நெறி என்பதை நிறுவுதல்.

---

7. சு. திருநாவுக்கரசு, திருப்புகழில் மெய்ப்பொருளியல் (ஆய்வேடு) சென்னைப் பல்கலைக் கழகம், 1987, பக் 34-35.

4. சிவவழிபாட்டுநெறிகள் காலந்தோறும் வளர்ச்சி பெற்றுவந்த நிலையை ஆய்தல்,

5. பக்தி இலக்கியங்களை, வடிவம், உள்ளடக்கம், உணர்த்தும் முறை ஆகிய பலகோணங்களில் ஆய்தல், இவ்விலக்கியங்கள் காட்டும் சமய ஒருமைப்பாடு, சமுதாய ஒருமைப்பாடு ஆகிய வற்றை விளக்குமுகமாக, மக்களுக்கு ஒருமைப்பாட்டுணர்வை ஊட்டுதல்.

6. இலக்கிய வகைமையிலும், தத்துவநோக்கிலும், உளவியல் கூற்று வகையிலும், சரியை முதலான நால்நெறி நோக்கிலும் ஆராய்தல்.

7. அடியார்களின் குறிக்கோள், வாழ்க்கை முறை, தொண்டு நிலை, பக்தித்திறம், குருலிங்க சங்கம வழிபாட்டுமுறை ஆகியவற்றை ஆய்தல்.

8. சமயச் சின்னங்களான திருநீறு, உருத்திராக்கச் சிறப்புகளை யும், மந்திரங்களின் விழுப்பத்தினையும் இலக்கியங்களின் துணைகொண்டு நிறுவுதல்.

9. தத்துவமும் சமயமும் மனித வாழ்வின் இரு கண்களென நிலை நாட்டுதல்.

10. நாடு, மொழி, இனம், கடந்த நிலையில் சமயத்தை அணுகி ஓர் ஒருமைப்பாடு கண்டு காட்டுதல்.

11. பக்தி இலக்கியங்களிலுள்ள இசைக்கூறுகளை ஆய்தல்,

12. பக்தி இலக்கியங்களில் காணப்படும் கலை வகைகளாகிய சோதிடம், சிற்பம், மருத்துவம், ஓவியம், நடனம், கட்டிடம், வானியல், இசை முதலானவற்றை ஆய்தல்.

13. பக்தி இலக்கியங்களைத் தேடியறிந்து அச்சேற்றுதல்; ஆய்தல்

14. நம்பிக்கைகள், பழம்பெரும் பண்பாடுகள், கோயில் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பக்தி இலக்கியத் துணைகொண்டு வெளியிடுதல்.

15. ஒவ்வொரு பழம்பெருஞ் சிறப்பு வாய்ந்த தலத்துக்கும், திருக்கோயில் வரலாறுகள், வழிபாட்டு முறைகள், ஆகிய வற்றை அவ்வத் தலபுராணங்கள், கல்வெட்டுகள், செப்பேடு கள், வரலாற்றுக்குறிப்புகளைக் கொண்டு, ஆய்ந்து வெளியிடுதல்.

16. பக்தி இலக்கியங்களை வைதிக நோக்கில், ஆகம நோக்கில் ஆய்தல்.

17. பக்தி இலக்கியங்கள் தோன்றிய காலச் சூழல், சமுதாய அமைப்பு முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்தல்.

18. பக்தி இலக்கியங்கள் தண்டமிழின் மேலாந்தரம் ஆமாறும் ஒரு வாசகம் ஆமாறும் ஆராய்ந்து வெளிப்படுத்துதல்.

19. சமுதாய நன்மைக்குப் பக்தி இலக்கியங்கள் ஒல்லும் வகையால் உதவுவதை எடுத்துக்காட்டி, மக்கள் நன்னெறியொழுகப் பயன்படுமாறு ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுதல் வேண்டும்.

சித்தர்

இரா. மாணிக்கவாசகம்

பக்தி இயக்கம் பற்றி ஆராய்வதைப் போலச் சித்தர் பற்றி விரிவாக ஆய்வதில்லை. பதினெண் சித்தர் என்பது உண்மையா? சிவன், வரலாற்று நாயகனா? கற்பனைப் பாத்திரமா? சிவனை முதல் சித்தன் எனக் கூறிட இயலுமா? இத்தகைய வினாக்களுக்கு ஆய்வறிஞர் விடை கண்டாக வேண்டும்.

முன்னுரை

இறையுணர்வு மிக்கோரைப் பக்தர் எனவும் சித்தர் எனவும் இருவகையினராகப் பிரிக்கலாம். முன்னவர் இறைஉருவ வழி பாட்டில் நம்பிக்கையுடையவர்; பின்னவர் இதனைச் சாடுபவர். சுருங்கச் சொன்னால் முன்னவர் புறத்தவம் பயில்பவர், பின்னவர் அகத்தவம் பயில்பவர்.

தமிழ்மொழியைப் பொருத்தவரை இவ்விரு பிரிவினாலும் நன்மையே அடைந்துள்ளது என்பது மறுக்கமுடியாத—மறக்க முடியாத உண்மையாகும். தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பக்தர் இயக்கமும், சித்தர் இயக்கமும் நிகரற்ற இடம் பெற்றிருப்பது இதற்குச் சான்று.

இவ்விரு இயக்கங்களில் காலத்தால் முந்தியது எது என்பதில் இலக்கிய வரலாற்று அறிஞர்களிடையே எவ்விதக் கருத்து வேறு பாடும் இல்லை. ஏனெனில் எல்லோருமே பக்தி இயக்கத்தை முதலிலும் சித்தர் இயக்கத்தைப் பின்னருமே வைத்து எழுதி வருகின்றனர்.[1] மேலும் பக்தி இயக்கம் பற்றி ஆராய்வதைப்போலச் சித்தர்கள் இயக்கத்தைப் பற்றி விரிவாக ஆராய்வதில்லை; காரணம் அவர்கள் இலக்கியங்களில் மந்திரம், மருந்து, யோகம், ஞானம் முதலிய பல துறை பற்றி மறைபொருள் நிறைந்த பாடல்கள்

1. சுப்பிரமணிய பிள்ளை கா. இலக்கியவரலாறு பாகம் II, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, பக். 5 - 10

மிகுதியாக உள்ளன. இவ்விரு துறைசார்ந்த இலக்கியங்களை ஊன்றி ஆராய்ந்தால் சித்தர்கள் இயக்கமே காலத்தால் மிகவும் பழமையானதென விளங்கும். அத்துடன் மக்கள் நல்வாழ்வுக்குப் பெரிதும் தொண்டாற்றியது என்பதும் தெளிவாகும்.

சித்தர் இயக்கம்

சாதி, சமயம், உருவவழிபாடு ஆகியவற்றை மறுத்தல் கொள்கையின் மூலமும், உயிர் இரக்கம், கருணை - ஆகியவற்றை வலியுறுத்தல் கொள்கையின் மூலமும்; ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைக்கு வழிகோலியவர்கள். இயற்கையில் கிடைக்கும் மரம், செடி, கொடி - ஆகியவற்றின் பல்வேறு உறுப்புக்களை, நோய், மனிதர் உடல் - ஆகியவற்றின் இயல்பறிந்து பயன்படுத்திய தன் மூலம் நோய்த்தடுப்பும் நோய் நீக்கமும் அறிவுறுத்தியவர்கள், வைத்தியத்தோடு நில்லாமல் யோகம், ஞானம் - இவற்றால் மரண மிலாப் பெருவாழ்வுக்கு வழிகாட்டியவர்கள். மந்திரம், தந்திரம், யந்திரம் - இவற்றால் ஆன்மலாபம் பெறுவதற்கு உணர்த்தியவர் கள். நவபாஷாணங்களையும் மருந்தாக்கும் ரகசியமும் தாழ்ந்த உலோகங்களை உயர்ந்ததாக்கும் ரசவாதவித்தையையும் அறிந்த வர்கள். இத்தனையையும் மக்கட் சமுதாயத்திற்குத் தந்த ஓர் இயக்கம் உலகில் உண்டென்றால் அது நமது நாட்டுச் சித்தர்கள் கண்டதாகத்தான் இருக்கமுடியும் எனத் துணிந்து கூறலாம்.

பதினெண் சித்தர்

இவ்வியக்கத்தில் பங்குகொண்ட சித்தர்களின் எண்ணிக்கை அளவில. இருப்பினும் உலகியல் வழக்கினும் இலக்கிய வழக்கினும் 'பதினெண் சித்தர்' எனக் குறிக்கும் மரபு நெடுநாட்களாக இருந்து வருகிறது.

சித்தர்கள்தான் பதினெண்பே ராத்தாள் சொன்ன
செயலெல்லாம் கண்டுணர்ந்து தெளிந்திட்டார்கள்[2]

பாடுவார் பதினெண்போர் நூல்களெல்லாம்
பாலகனே இத்தயிலம் கொண்டு சாதி[3]

வாதநூல் அதிதம் பதினெண்போர் சித்தர்
வசனித்த நூல்களும் பலிதம்[4]

---

2. ஞானவெட்டியான் 1500, பாடல் 229
3. அகத்தியர் பரிபாஷை 500, பாடல் 100
4. புலத்தியர் கற்பம் 300, பாடல் 54

மூலரொடு பதினெண்போர் பரநாதாக்கள்[5]
துலங்குமந்தப் பதினெட்டுச் சித்தரையா
தொல்புவியில் சொல்லாமல் மறைத்தார்[6]

இவை சித்தர்கள் பாடல்களில் காணலாகும் சான்றுகள். இவர்கள் குறிக்கின்ற பதினெண்மர் யாவர் என்பதில் தற்போது கருத்து வேறுபாடு நிலவுகிறது. இவ்வாறு வரையறை செய்ய வேண்டியதன் தேவை என்ன என்பதும் ஆராயவேண்டியுள்ளது. ஒருவேளை இவ்வியக்கம் தோன்றிய காலத்தில் 18 பேர் இருந்திருக்கலாம். இவர்கள் தலைவர்கள் நிலையிலோ அன்றிக் குறிக்கத்தக்க சிறப்பு மிக்கவர்களாகவோ இருந்திருக்கவேண்டும். அல்லது இவ்வியக்கம் (School of thought) சார்ந்த பிரிவினர் 18 பேர் இருந்திருக்கலாம். ஆனால் அகத்தியரின் சௌமியசாகரம் 1200 என்னும் நூலுள் 18 பேர் பற்றிய புதிய தகவல் ஒன்று காணப்படுகிறது.

ஆமென்ற என்பே றகத்திய னாகும்
அருளினோ மென்னுடைய சிஷ்பதி னெண்போர்
தோமென்ற தென்பொதிகை தென்கயிலை சீடர்
தேறினாரிருவர் பெருமை தேசமதில் சொல்வார்
வாமென்ற சித்தர் நவசித்தராகும்
அருளினோமதில் மூவர்என்சீடர்
பாமென்ற பதினெட்டு பேர்க்குமவர் தான்
பான்மை குரு மூன்று பேர்

எனும் பாடலிலும் இதனை அடுத்து வரும் பாடல்களிலும் 'தம் சீடர் மரபினர் பதினெண்மர் என்றும், அவருள் மூவர் தலைமைச் சீடர் என்றும் கூறப்பட்டுள்ளன. கூட்டைமுனி - இவர் மாணவர் சுந்தரமூர்த்தி - இவர் மாணவர் பிரமரிஷி - இவர் மாணவர் சொரூபானந்தர் - இவர் மாணவர் சோதி ரிஷி - இவர் மாணவர் வேதவியாசர் - இவர் மாணவர் பராசரர்-இவர் மாணவர் திருமூலர்-இவர் மாணவர் போகர் - இவர் மாணவர் கொங்கணர் - இவர் மாணவர் புண்ணாக்கீசர் - இவர் மாணவர் மச்சமுனி - இவர் மாணவர் கருவூரார் - இவர் மாணவர் இடைக்காடர் - இவர் மாணவர் அழுகண்ணர் - இவர் மாணவர் தொழுகண்ணர் - இவர் மாணவர் ஏமநாட்டுச் சித்தர் - இவர் மாணவர் கோரக்கர் என விரிவாக 28 பாடல்களில் கூறப்பட்டுள்ளனர். இப்பதினெட்டுப்

5. மச்சமுனி பெருநூல் 250, பாடல் 2
6. யாகோபு வைத்திய வாத சூத்திரம் 400, பாடல் 179

பேரில் புலத்தியன், தேரையர், யூகிமுனி ஆகிய மூவர் முதன்மை யானவர் எனவும் அறிகின்றோம்.

ஏறக்குறைய இதே கருத்தினை அகத்தியரின் கௌமதி நூல் 400-லும் காணமுடிகிறது.

'பேறுபெற் றோர்என் சிசுக்கள் பதினெண்பேர்'[7]

என்பது அவ்வரி. இவ்விரு நூல்கள் தவிர வேறு சித்தர் பாடல் களில் இதுபோன்ற கருத்து கூறப்படவில்லை. எனவே இக் கருத்தை உறுதிப்படுத்தும் வகையில் வேறு அக, புறச் சான்றுகள் உள்ளனவா என அறிஞர்கள் ஆராய்தல் வேண்டும்.

சிவனே தலைவன்

இனி இச்சித்தர்களின் இயக்கத்தின் தோற்றம் பற்றித் தெளிவான சான்றுகளுடன் அறியமுடியவில்லை என்றாலும் சிவனே தலைவனாக இருந்திருத்தல் வேண்டும் எனத் தோன்று கிறது.

இன்றைய அரசியலில் ஒருதலைவரைப் பின்பற்றியோ, அல்லது ஒரு கொள்கையைப் பின்பற்றியோ கட்சிகள் இயங்கி வருகின்றன. இதே நிலை பண்டு சமயங்களிலும் இருந்திருத்தல் வேண்டும். முகமது நபியைப் பின்பற்றுபவர்கள் முகமதியர் எனவும், ஏக கிறித்துவைப் பின்பற்றுபவர்கள் கிறித்துவர் எனவும் ஜொராஸ்டியரைப் பின்பற்றுபவர்கள் ஜொராஸ்டிரியன் எனவும் வழங்கப்படுவதுபோல சிவனை வழிபடுவோர் சைவர் எனவும், சக்தியை வழிபடுவோர் சாக்தர் எனவும், விஷ்ணுவை வழிபடுவோர் வைஷ்ணவர் எனவும் வழங்கப்பெற்றனர்.

எனவே சிவன் ஒருகாலத்தில் ஓர் இயக்கத்தின் தலைவனாக இருந்தான் என்பது தெளிவாகிறது.

ஒரு பனிமலையின் உச்சியில் இருந்து உருண்டுவரும் பனிக்கட்டி கீழே வரவர இடையில் உள்ள பனித்துளிகளையெல்லாம் அணைத்துக்கொண்டு பனிப்பாறையாக வரும். அதுபோலவே முன்னர் ஒருகாலத்து வாழ்ந்த வரலாற்று நாயகனாகிய சிவன் பற்றிய செய்திகள் - ஆரம்பகால நிகழ்ச்சிகள் - பின்னர் தோன்றிய சமயவாதிகள், நாயன்மார்கள், உரையாசிரியர்கள் ஆகியோர் கற்பனைகலந்து உருமாறிப் பல்வேறு புராணக்கதைகளாக எழுந்தன. இதனால் வரலாற்று நாயகன் கற்பனைக் கதாபாத்திர மானான்.

---

7. அகத்தியர் கௌமதிநூல் 400, பாடல் 381

'சிவன் குமரன் முதலியவர்கள் மக்களுள் உயர்ந்தவரால் வணங்கப்படும் நிலை எய்தியவர்கள் எனக் குறிக்கிறார்.[8]

அறிஞர் அனவரத நாயகம் பிள்ளையும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டு, 'சிவன், குமரன் என்று வழங்கப்படும் தெய்வங்கள் முற்கால மக்களுள் சிறந்தவராய் இருந்திருத்தல் வேண்டும் என்றும் அவர்தம் ஞானத்தாலும் ஆற்றலாலும் பெருமைபெற்று நாளடைவில் வழிபாடு கொள்ளத்தொடங்கி இறுதியில் அவர் சரித்திரம் முழுவதும் மறைய தெய்வங்களாயினார் என்று கொள் வதற்குப் பல ஆதாரங்களுண்டு' என்று கருதுகிறார்.[9]

'தமிழ் இந்தியா' என்னும் நூலில், சிவன் என்று பெயர் சூடும் மரபு சமுதாயத்தில் இருந்ததாக ந.சி. கந்தையா பிள்ளையும் கூறுகிறார்.[10]

'சிவன் உடல்வலிமையுடன் மனவலிமையும் பெற்றவராக விளங்கியதோடு வானசாத்திரம், மருத்துவம் முதலிய பலகலை களிலும் வல்லவராய் விளங்கினார் எனவும், கோடைக்காலங்களில் இமயமலையில் தங்குவதும் குளிர் காலங்களில் வேறு இடங்களுக் குச் செல்லும் பழக்கமாகக் கொண்ட சிவன் ஏழை எளியவர் பிணியாளர் இவர்களுக்குப் பெருந்தொண்டு புரிந்தார் எனவும், இவ்வாறு தம் ஆற்றலாலும் அறிவாலும் மக்களுடைய வணக்கத் திற்கு உரியவரானார் எனவும் இவர் இமயமலையை ஆண்ட அரசனது மகளை மணந்தார்' எனவும் போஸ் என்பவர் கருதுகிறார்.[11]

மறைமலையடிகள், கே. குருதத், சி. சிவராம மூர்த்தி முதலிய ஆராய்ச்சியாளர்களும் [12] இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.

---

8. கனகசபை பி. 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர், ப. 230
9. அனவரதநாயகம் பிள்ளை, எஸ்., சைவசித்தாந்த வரலாறு, ப.3
10. கந்தையாபிள்ளை, ந. சி, தமிழ் இந்தியா, ப. 153
11. Bose D. N. and Halder H, Tantras : Their Philosophy occult secrets pp. 31-32
12. (a) Maraimalai Adigal, Ancient and Modern Tamil Poets, p. 40
    (b) Guru Datt, Hindu culture, p. 121
    (c) Sivaramamurthy, C., Nataraja in art, thought and literature, National Museum, New Delhi, 1974, p. 36.

ஆனந்த மார்க்கத்தின் தலைவரான ஆனந்த மூர்த்தியின் ஆராய்ச்சிக்குறிப்பினை இங்குக் காண்பது மிகவும் பொருந்தும்.[13]

பத்தொன்பதாம்நூற்றாண்டின் பெருஞ்சித்தரான இராமலிங்க அடிகளாரின் மகாஉபதேசக் கருத்தானது மேற்காட்டிய அத்தனை கருத்துக்களுக்கும் மணிமகுடம் போல் விளங்குகிறது.

'கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்யலோகாபதி என்றும் பெயரிட்டு இடம், வாகனம், ஆயுதம், வடிவம் முதலியன வும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பதுபோல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். தெய்வங்களுக்குக் கைகால் முதலியன இருக்குமோ என்று கேட்பவர்களுக்குப் பதில் சொல்ல தறியாமல் விழிக்கிறார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண் டிருந்தவர்களும் உண்மையை அறியாது அப்படியே கண்களை மூடிக்கொண்டு கூறியிருக்கிறார்கள். ஆனால் ஆதியில் அதை மறைத்தவன் ஓர் வல்லவன், அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய பூட்டை ஒருவரும் திறக்கவில்லை'.[14]

சித்திவளாகத்தில் சன்மார்க்கக்கொடி ஏற்றிய உடன் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒருபகுதியே மேலே காட்டியது. இதன்மூலம் அடிகளார் புராண இதிகாசங்கள் அத்தனையும் குழூஉக்குறி என்கிறார்.

---

13. Anandamurthy, Sri Sri, Namah Shivaya Shamtaya, Ananda Margā Prachara Sangam, Calcutta 1985, p 5
Sadasiva who was born into this world about 7000 years ago and who by his holy birth consecrated as it were, each and every dust particle of this earth and utilized this whole life for the sole purpose of advancing the course of universal welfare. Remember I have not said 'human welfare' because in our world not only are there humans, there are also birds and animals, trees and plants. Shiva belongs to all and for all living beings. He gave His all, Hence the people called him Sada Shiva - Sada means 'always' and Shiva - as I have said earlier means 'welfare'. So Sada Shiva means one whose only vow of existance is to promote the all round welfare of all living beings.

14. இராமலிங்க அடிகளார், உபதேசப்பகுதி ப. 131 (பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு)

எனவே, சிவனைப் புராண நாயகனாகக் கொள்வதைக் காட்டிலும் வரலாற்று நாயகனாகக் கொள்வது பொருந்தும்.

இனிச் சித்தர்கள் இலக்கியங்கள் மூலமும் சிவனே முதல் சித்தன் என்பதற்கான சான்றுகளைக் காணலாம்.

பொதிகையிலே எனைப்பார்க்கச் சிவனும் வந்தார்
பூரணனே தெய்வமென்று போற்றிச் செய்து
இதமார்கக் கற்பமுறை யாவும் கேட்டேன்[15]

சுகமாக நாகமது தரித்த ஈசன்
சுந்தரிக்குச் சொல்ல என்பால் சூட்டினார் பார்[16]

நீகேளு புலத்தியனே கற்பமார்க்கம்
நின்மலமாம் சதாசிவனார் எனக்குச் சொன்னார்[17]

சாரிந்த நாற்பத்து முக்கோணத்தைச்
சதாசிவனார் வகுத்தபடி சாற்றினேன்[18]

சருகுமுனி எனும்பேர் சிவன் தந்தார் பாரே[19]

மதியான குருமுனிதான் சொன்னநேர்மை
நாரியுமை பாகனார் அருளால் சொன்னார்[20]

சிவனார் உரைத்த மொழி பரிவாய்ச் சொன்னார்[21]

பாதிமதி அணிந்தவர்தான் சொன்னதிது
பதியான வியாளி அறிவான் பாரே[22]

சொல்லவே தேவிக்குச் சதாசிவன்தான்
சொல்லிடவே தேவியும் நந்திக்குச் சொல்ல[23]

தாரணிந்த ஈசனன்று ஆயிக்குச் சொல்ல
தாயான சஸ்வரியும் நந்திக்குச் சொல்ல[24]

---

15. அகத்தியர் கற்ப முப்பூ குறுநூல் 100, பாடல் 48
16. அகத்தியர் வைத்திய வல்லாதி 600, பாடல் 385
17. அகத்தியர் த்ட்சா விதி 200, பாடல் 50
18. அகத்தியர் பரிபூரணம் 400, பாடல் 69
19. அகதியர் சௌமியசாகரம் 1200, பாடல் 77
20. யாகோபு வைத்தியவாத சுருக்கம் 400, பாடல் 37
21. தேரையர் 1001, பாடல் 653
22. யூகிமுனி வாதாங்க தீட்சா விதி 300, பாடல் 260
23. தன்வந்திரி வைத்திய சிந்தாமணி 150, பாடல் 3
24. போகர் புவன கோசரம், பாடல் 1

மேற்கண்ட வரிகள் ஒத்த கருத்துக்களை மிகப்பரவலாகச் சித்தர் இலக்கியங்களில் காணலாம்,

எனவே, சித்தர்கள் இயக்கத்தின் தலைவன் சிவன் என்பது, உறுதியாகிறது. சித்தர்களின் சிவன், பக்தர்களாகிய சம்பந்தர் முதலியோர் பாடிய சிவனின் வேறுபட்டவன் அல்லன், இருவரும் ஒருவரே. சிவபிரான் எனவும், சிவபெருமான் எனவும் பிற்காலத்தி யோரால் குறிக்கப்பெறும் சிவனைத் தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி எனப்போற்றி வணங்கத் தொடங்கினர்.

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரும் ஆமே[25]

சித்தர் தலைவனாகிய சிவனிடம் உபதேசம் பெற்றவரிகள் பட்டியலைத் திருமூலர் மேற்கண்ட பாடலில் குறிக்கின்றார் நந்திகள் நால்வர் என்பவர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற் குமார் ஆகியோர் என்று கூறும் மரபு உள்ளது. நந்தி என்ற பெயரில் வேறு யாரேனும் இருக்கிறார்களா என்றும் பார்க்க வேண்டும். ஏனெனில் மேற்காட்டிய நால்வர் பெயரும் சித்தர் இலக்கியங்களில் காணப்பெறவில்லை. ஆனால் அகத்தியரைச் சிவயோக மாமுனி என்றும், பாம்பாட்டியைப் பதஞ்சலி என்றும், புலிப்பாணியரை வியாக்ரமர் என்றும் குறிக்கும் மரபு உண்டு. திருமூலரும் தம்மை எண்மரில் ஒருவராகக் குறிக்கிறார்.

பாரப்பா மூலவர்க்கம் சொல்வேன்
பரிவாக நந்தியென்ற நாமம் நால்வர்
சீரப்பா சிவயோக முனிதா னொன்று
சிறப்பான பதஞ்சலி வியாக்ரமர் இரண்டு
நேரப்பா மூலகுரு வோடே எட்டு
நேராக நந்தியுட பிள்ளை யென்பார்
பேரப்பா மூலகுரு பிள்ளைகேளு
பேரானமாலாங்கன் பிள்ளைதானே
பிள்ளையென்ற கஞ்சமலைச் சித்தரோடு
பிரமனோடு இந்திரனும் சோமனப்பா

25. திருமந்திரம் - குருபரம்பரை பாடல்

தள்ளைசென்ற காலாங்கி யுடனேசேளு
சார்ந்து நின்ற ருத்திரனோ டேழுபேரும்
மூள்ளையென்ற காலாங்கி மூர்த்திக் கன்று
உத்தமனே அறுபத்து நாலுபேர்
தள்ளையென்ற முதல்தீட்சை அய்யாபோகர்
அறுபத்து மூன்றுபேர் பிறகுதானே[26]

கொங்கணரின் இவ்விரு பாடல்களும் திருமூலரின் பாடல்களை முழுமையும் ஒத்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்சமலை யானொடு
இந்த எழுவரும் எனவழி யாமே[27]

இப்பாடலில் திருமூலர், தம் மாணாக்கர் பற்றிக் கூறுகின்றார். எனவே சிவனின் மாணாக்கர் எண்மர் என்பதும், மூலர் மாணாக்கர் எழுவர் என்பதும் விளங்கும்.

சிவனது காலம்

இனி, சிவனதுகாலம் தெளிவாக வரையறை செய்யமுடியாப் பழையது. இராமன் சீதையை மீட்டுவரும்போது சிவனை வழி பட்ட இடத்தைக் காட்டியதாக இராமாயணம் மூலம் அறிகிறோம். கிருஷ்ணன் மகாபாரதப் போரின் போது 12ஆம் நாள் இரவு அர்ச்சுனனிடம் சிவனை நோக்கி வேள்வி செய்யச் சொன்னான் என்பதாலும், இராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் காலத்தால் முற்பட்டவர் சிவன் என்பது தெளிவாகிறது. இராமரது காலம் கி.மு. 4400. இவரது காலத்திற்கு 1300 ஆண்டுகளுக்குப் பிற்பட்டவர் கிருஷ்ணன்[28]. எனவே சிவன் மேற்சொன்ன இருவருக்கும் காலத்தால் முற்பட்டவர் என்பது தெளிவு.

முதற்சங்கம் கடல்கொண்ட குமரி நாட்டில் பஃறுளி ஆற்றங் கரையில் இருந்த தென்மதுரையில் நடைபெற்றது என்றும் அதன் காலம் கி.மு. 10490 என்றும் அறிஞர் பெருமக்கள் கருது கின்றனர்[29]. இச்சங்கத்தைத் தோற்றுவித்ததுடன் தலைவராகவும்

26. கொங்கணர் வாக்கியம் - முதல்காண்டம், பாடல் 409-410
27. திருமந்திரம் - குருபரம்பரை பாடல் 4
28. Mythology to History through Astronomy - Seminar Papers Published by N.I.A. Publications, Pollachi, 1980
29. மேற்படி. 262

இருந்தவர் சிவன் ஆதலின் சிவனது காலம் இதற்கு முந்தைய தாகவும் இருக்க இடமுண்டு.

இத்தனைப் பழமைச் சிறப்புடைய சிவன் காலத்தால் பழைய எந்தச்சங்க இலக்கியங்களிலும் குறிக்கப்பெறவில்லை என்பது வியப்புக்குரியதாகும். ஆனால் குறிப்பாக உணர்த்தும் மரபினைப் பரவலாகக் காணமுடிகிறது.

முக்கட் செல்வன்	:	புறம் 6, 55, அகம் 181, முருகு 153 கலி 2, 104
கரை மிடற்றண்ணல்	:	புறம் 1, 6, 55
காரி உண்டிக்கடவுள்	:	மலைபடு 82-83
தாழ்சடையன்	:	புறம் 1
புரமெரித்தோன்	:	புறம் 55
கொன்றைமாலையன்	:	புறம் 1, கலி 150
ஆலமர்கடவுள்	:	புறம் 198

மேலே குறிக்கப்பெற்ற அத்தனையும் சிவனைக் குறிப்பனவே. என்ன காரணத்தினாலேயோ சிவன் என்னும் பெயரால் குறிக்காமல் இத்தகைய குறிப்பால் குறிக்கும் மரபினைப் புலவர் கையாண்டனர் என்பது வியப்பளிப்பதாகும். 'சேயோன் மேய மைவரையுலகம்' எனத் தொல்காப்பியம் குறிப்பது[30] சிவனையே யாதல் வேண்டும். பின்னரே முருகனுக்கு ஆகியிருத்தல் வேண்டும். சிவன் பண்டு தியானம் கருதி மலையைத் தேர்ந்தவன். தென்னகத்தில் பொதியமும், வடக்கில் கைலையும் அவன் சேர்ந்த மலைகள். பொதுவாக மனித சிந்தனை செல்லா இடங்களிலும், மனிதநடமாட்டம் இல்லாஇடங்களிலும் இன்றும் தூயதுறவிகளின் நடமாட்டத்தைக் காணலாம். காரணம் அவர்களின் தியானத் திற்கும் யோகத்திற்கும் எவ்விதத்தடையும் வாராது. அண்ட பிண்ட சஞ்சாரங்களுக்கு ஏற்ற சூழல் அதுவே. பிறரது சிந்தனையோ, மனோ அலையோ அவர்களது முயற்சியைப் பாதிப்பதில்லை. மேலும் அவர்கள் விரும்பிய நிலையை உடனே அடைய முடியும் என்பதால் பண்டுமுதல் இன்றுவரை இம்மரபு இருந்து வருகிறது. சிவன் புலித்தோலையும் யானைத்தோலையும் உடுத்தியவன் என்பதிலிருந்து பனிக்காக இவ்வாடைகளைத் தேர்ந்தான் என அறிகிறோம். சாம்பலைக் தண்ணீரில் குழைத்து உடம்பெல்லாம் பூசிக்கொள்ள எப்படிப்பட்ட குளிர் பாதிப்பும்

30. தொல்காப்பியம் - அகத்திணை இயல் 5

ஏற்படாது. சிவன் இப்பழக்கம் மேற்கொண்டவன். காலப் போக்கில் சாம்பல் சமயச்சின்னமாகிய திருநீறாகியது. தியானம், யோகம், கல்பம் போன்ற முறைகளைக் கையாள சாத்வீக உணவையே - காய் - கனி - இலை முதலியனவற்றையே - கொள்ளு தல் வேண்டும். சிவன் மேற்கொண்ட உணவுமுறை இதுவே. சிவனை வழிபடுவோர் சைவர் எனப்பட்டதுபோல, உணவில் சிவன் கண்ட முறையும் காலப்போக்கில் ''சைவம்'' ஆனது.

காலப்போக்கில் சாத்திர நூல்களின் பிறப்பும், தோத்திரப் பாடல்களின் தோற்றமும், சடங்குகள் சம்பிரதாயங்கள் முதலியன தோன்றுவதற்கும் மிகுவதற்கும் காரணங்களாயின. சித்தர்களின் சைவம் - பக்தர்களின் சைவமாக மாறியது. சித்தர்களின் சிவன், பக்தர்களின் சிவனானான். சித்தர்களின் தத்துவ முடிபுகளான சித்தாந்தம் சைவசமய வண்ணம் தீட்டப்பெற்ற சாத்திர நூல் களாக உருவெடுத்தன. 'ஆன்மீகவாதிகளான சித்தர்களுக்கும் 'சமயவாதிகளான' பக்தர்களுக்கும் இடைவெளி அதிகமானது. பொருள் புரியாமல் தூக்கி எறியப்பட்டோ, அன்றிப் பயனற்ற நாத்திகப்பாடல் அல்லது பண்டாரப்பாட்டு என்றோ அக்கறை இல்லாமல் விட்டதால் கரையானுக்கும் காலவெள்ளத்திற்கும் இரையான சித்தர் பாடல்கள் முழுமையும் கிடைத்திருக்குமே யானால் அவர்களைப்பற்றிய உண்மையான வரலாற்றைத் தெளிவாகக் கணிக்க உதவியாக இருந்திருக்கும். ஸ்ருதி, ஸ்மிருதி என இரண்டு உண்டு - ஒன்று குருவீடமிருந்து மாணவர் நேரே கேட்பது, இது ஸ்ருதி எனப்பெறும். பல தலைமுறைகள் செவி வாயிலாக வருவது ஸ்மிருதியாகும். தற்போது கிடைக்கின்ற சித்தர் பாடல்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவை, ஆகவே தான் அவர்கள் பாடல்களில் மிக அண்மைக்காலச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. பொதுவாகவே ஒரு செய்தி செவிவழியாக வருமே யானால் பல்வேறு காலங்களில் பல்வேறு வடிவங்களைப்பெறும். அவரவர்கள் தத்தம் கற்பனைக்கேற்றவாறும், கல்வி அறிவுக் கேற்றவாறும் கூட்டியும் குறைத்தும் கூறுவது இயல்பு. சித்தர் இலக்கியங்களில் காணப்பெறும் சொற்பொருள் ஆட்சியானது இவர்களது காலத்தை ஆராய்கின்ற ஆய்வாளர்களைப் பெரிதும் குழப்புகிறது. தற்போது காணப்பெறும் கவிதைக்குச் சொந்தக் காரர்கள் யாரோ! ஆனால் கருத்துக்குச் சொந்தக்காரர்கள் சித்தரிகளே. எந்தச் சித்தனும் உட்கார்ந்து கொண்டு ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதவில்லை. ஸ்ருதி - ஸ்மிருதியாகவே கருத்துக்கள் வளர்ந்தன, எனவே காணப்பெறும் சொல்லாட்சி

கொண்டு எந்தச் சித்தரது காலத்தையும் கணிக்கக்கூடாது. கணிப்பதும் தவறான ஆராய்ச்சியாகப் போகும். மேலும் சித்தர்கள் காலம்கடந்துவாழும் மறை அறிந்தவர்கள். அவர் களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. அவர்கள் ஏகாமல் வாசனையைக் கொன்றவர்கள். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்து உடம்பையும் உயிரையும் வளர்த்தவர்கள். ஆதலின் இவர்களின் காலத்தைக் கணித்துக் கூறமுடியாது என்பதையும் உணரவேண்டும். விரும்பும் வரையிலும் பஞ்ச பூதத்தால் ஆகிய இத்தூல வடிவுடன் உலாவிப் பின்னர் சீவ சமாதியாய் ஒடுங்குபவர் கள் என்னும் உண்மையையும் அறிதல் வேண்டும். ஆனால் அறிஞர் பலரும் இவர்கள் காலத்தைக் கி.பி. 14, 15, 16, 17 ஆகிய நூற்றாண்டுகளாக வரையறுத்துக் கூறுகின்றனர்[31]. இவர்கள் அத்துணைபேரும் சித்தர் இலக்கியங்களில் காணப்பெறும் மொழி நடையை மட்டும் ஆதாரமாகக் கொண்டு அவ்வாறு கூறியுள்ளனர்.

எனவே சிவனின் காலம் எதுவோ அதுவே அவனைப் பின் பற்றிய சித்தர்களின் காலமும் ஆகும். சங்க காலத்திற்கு மிக முன்னர் - குமரிக்கண்டம் கடல்கோளுக்கு இரையாவதன் முன்னர் சித்தரான சிவன் வாழ்ந்திருத்தல்வேண்டும். முன்னர்க் குறிப்பிட்ட கி.மு. 10,490 ஆம் ஆண்டுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும். அப்போதிருந்த உலக அமைப்பே மிகவும் வேறுபட்டதாக இருந்திருக்கவேண்டும். கம்போடியா, தாய்லாந்து, ஜாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய நாடுகளில் மட்டுமல்லாது எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலும் சிவன் தொடர்பான சிலைகள் கண்டெடுக்கப்பெற்றுள்ளன என அறிகிறோம். இது பற்றிய விரிவான ஆழ்ந்த ஆராய்ச்சி தேவையாகிறது. மறைந்த குமரிக்கண்டம் பற்றிய வரலாறு, தொன்மையான நாகரிகம் உடைய நாடுகளின் சமூகவியல் பற்றிய வரலாறும் விருப்பு வெறுப்பு இன்றிக் கிடைக்குமேயானால் உண்மை வெளியாகும்.

---

31. 14ஆம் நூற்றாண்டு - ராதாகிருஷ்ணபிள்ளை, முன்னும் பின்னும், ப. 56

15ஆம் நூற்றாண்டு - Meenakshisundaram Pillai T.P., Tamil Plutarch (Foot note) p 4

16, 17-ஆம் நூற்றாண்டு - Neelakanda Sastri K.A., Culture and History of the Tamils, p. 119

(a) Srinivasa Iyengar M., Tamil Studies, p. 205

(c) Caldwell, Dravidian Comparative Grammar, p. 205

முடிவுரை

இக்கட்டுரையில் தமிழக வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும் குறிக்கத்தக்க இடம்பெற்ற பக்தி இயக்கம் பற்றியும் சித்தர் இயக்கம் பற்றியும் சுருங்கக் கூறப்பெற்றது.

பதினெண் சித்தர்கள் பற்றிப் பரவலாக இருந்துவரும் கருத்தினை ஆதாரங்களுடன் காட்டப்பெற்றது.

சிவனே சித்தர்கள் தலைவன் என்னும் கருத்தோடு, காலப் போக்கில் இவ்வரலாற்று நாயகன் எங்ஙனம் கற்பனைப் படைப்பு ஆனான் என்பது பற்றி அறிஞர் கருத்துக்கள் சில கூறப்பெற்றன.

சித்தர்கள் பாடல்களில் காணப்பெறும் சொல்லாட்சி முதலியன கொண்டு அவர்கள் காலத்தைக் கணிப்பது தவறாகும். அவர்கள் தற்போது காணப்பெறும் கவிதைக்குச் சொந்தக்காரர்கள் இல்லை. கருத்துக்குத்தான் சொந்தக்காரர்கள்; தற்போது உள்ள பாடல்கள் அனைத்தும் ஸ்மிருதியேயன்றி ஸ்ருதி அல்ல; சிவனது காலம் எதுவோ அதுவே சித்தர்கள் காலம்; சிவனது காலம் கி.மு. 10,490; இதுபற்றி மேலும் ஆராய்தல் வேண்டும் ஆகிய கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளன.

இசுலாமிய இலக்கியம்

பீ. மு. அஜ்மல்கான்

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழிலக்கியங்களைத் தன்னகத்தே பெற்றதன் பயனாக, பரந்துபட்ட ஆய்வுக் களத்தைப் பெற்றுள்ளது இசுலாமியத் தமிழிலக்கியம். அதன் முழு ஆய்வுக் களத்தையும் சுட்டிக்காட்டத்தக்க வகையில் முழுமையான ஒரு இலக்கிய வரலாற்று நூல் தேவைப்படுகிறது. இசுலாமியத் தமிழ்ப் புலவர்களின் இலக்கியப் பணி ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்ட நிலையில் ஆய்வு நிகழ்த்துவதற்குரிய ஆய்வுக் களங்களைப் பெற்றுள்ளது.

இசுலாம் எங்கள் வழி, இன்பத்தமிழ் எங்கள் மொழி; இலக்கியம் எங்கள் விழி என்ற முப்பெரும் கருத்துக்களின் மொத்த உருவமே இசுலாமியத் தமிழிலக்கியம். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழிலக்கியங்களைத் தன்னகத்தே பெற்றதன் பயனாகப் பரந்துபட்ட ஆய்வுக் களத்தைப் பெற்றுள்ளது இசுலாமியத் தமிழிலக்கியம். இக் கட்டுரை இசுலாமியத் தமிழிலக்கியங்களின் ஆய்வுக்களத்தையும் இசுலாமியத் தமிழிலக்கியங்களுக்குத் தமிழிலக்கிய வரலாற்றில் எத்தகு இடம் அளிக்கப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தின் இசுலாமியத் தமிழிலக்கியத் துறையால் வெளியிடப்பட்டுள்ள 'இசுலாமியத் தமிழிலக்கிய நூல் விவரக் கோவை' என்னும் நூல் இசுலாமியத் தமிழிலக்கியங்களின் விரிந்துபட்ட ஆய்வுப் பரப்பினைச் சுட்டிக் காட்டுகிறது. ஆனால், இதற்கு முன் வெளிவந்துள்ள தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி அறிய உதவும் வகையில் அமைந்த தமிழிலக்கிய வரலாற்று நூல்கள் மட்டும் இசுலாத்தைப் பொறுத்த வரையில் மேற்குறித்த உண்மைநிலை உணராமல் அமைந்திருப்பது மறுக்க முடியாததாகும். தமிழிலக்கிய வரலாறு தொடர்பாக இலங்கையிலும், தமிழகத்திலும் வெளிவந்துள்ள பல

நூல்கள் சமயங்களுக்குரிய முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டும் போது இசுலாத்திற்குரிய இடத்தைக் காண்பதில் வெற்றிபெற வில்லை.

கற்பிட்டி காசிச் செட்டி அவர்கள் 1959ஆம் ஆண்டு தமிழ் புளூடாக் (Tamii Plutarch) என்னும் ஆங்கில நூலை எழுதி வெளி யிட்டார். இதில் நூற்றித்தொண்ணூற்றேழு தமிழ்ப் புலவர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. இவ்வெண்ணிக்கையில் ஒரு முசுலீம் தமிழ்ப் புலவரின் பெயர்கூட இடம்பெறவில்லை. இதேபோல் 1916இல் 'தமிழ்ப் புலவர் சரிதத்'தை ஆ. குமாரசாமிப் புலவர் எழுதி வெளியிட்டுள்ளார். இவ்விலக்கிய வரலாறு பற்றிய நூலிலும் முசுலீம் புலவர்கள் பற்றிய செய்தி ஒரு வரிகூட குறிக்கப் படவில்லை. இதேபோன்று புலவர் வரிசைத் தொகுப்பாகக் க. சபாபதி நாவலரின் 'திராவிடப் பிரகாசிகை' 1899இலும், மானிப்பாய் ஆ. முத்துப்பிள்ளையின் 'ஈழ மண்டலப் புலவர்' 1914இலும், சி. கணேசையரின் 'ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்' 1920இலும் வெளிவந்தன. இவை யாவற்றிலும் முசுலீம் புலவர்களின் ஒரு பெயர்கூட இடம்பெறவில்லை. இவ்வாறே தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய வி. செல்வநாயகமும் மற்றும் சிலரும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட விரிந்துபட்ட இலக்கியப் பரப்பினைப் பெற்றுள்ள இசுலாமியத் தமிழிலக்கியங்களின் முழுமையான ஆதிக்கத்தை அறியாமை காரணமாகச் சுட்டிக் காட்ட இயலவில்லை.

இசுலாமியத் தமிழிலக்கியங்களின் அறியாமைக்கு ஒரு காரணம் கூறுவது உண்டு. முசுலீம்கள் படைத்துள்ள தமிழிலக்கி யங்களின் அறபு மொழியை மணிப்பிரவாளமாகப் பாவித் துள்ளனர். அதன் காரணமாக அவைகளுக்குரிய இடமளிக்கப்பட வில்லை என்பர். இக்கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. காரணம் எந்தவொரு இலக்கியமும் அதனுடைய உள்ளடக்கக் கருத்துக்களுக்கேற்ப உருவ அமைப்பில் சிற்சில மாற்றங்களைப் பெறுவதுண்டு. இவ்வகையில் இசுலாமியத் தமிழிலக்கியங்களின் உள்ளடக்கம் என்பது பெரும்பாலும் அறபு நாட்டின் வரலாற்றுச் செய்தியையும் அல்குர்ஆனின் கருத்துக்களையும், பெருமானார் நாயகம் (சல்) அவர்களின் சிந்தனைச் செயல்களையும் இன்னோர் அன்ன பிற சமயப் பெரியோர்களுடன் தொடர்புகளையும் நவில்வ தாகஇருப்பதால் முசுலீம் புலவர்கள் தாம் பாட எடுத்துக்கொண்ட படைப்பிற்கேற்ற கருத்துப் பின்னணியையும் காலப் பின்னணியை

யும் தம் இலக்கியப் படைப்பில் வலுப்பெறச் செய்வதற்காக அறபுச் சொற்களைப் பயன்படுத்துவதை ஒரு இலக்கிய உத்தியாகப் பயன்படுத்துகின்றனர் எனலாம். எனவே, இசுலாமியத் தமிழிலக்கியங்களில் அறபு கலந்திருக்கிறது; இது இடர் தருகிறது; அதனால் அவை பற்றிய செய்திகளை அறிய இயலவில்லை என்ற கூற்று தவறானதாகும்.

எனினும், முறையாக, இசுலாமியத் தமிழிலக்கியங்கள் இசுலாமியரால் வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தப்படவில்லை என்ற உண்மையையும் இங்கு ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

இந்நிலை நீங்கிட இனி நமக்கு வேண்டுவது இசுலாமியத் தமிழிலக்கியங்களின் முழு ஆய்வுக் களத்தையும் சுட்டிக்காட்டத் தக்க வகையில் எழும் முழுமையான ஒரு இலக்கிய வரலாற்று நூலே. இத்தகு இசுலாமிய இலக்கிய வரலாற்றினை உருவாக்கும் பணியில் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் இசுலாமியத் தமிழிலக்கியத் துறை முனைந்திருப்பது இங்குக் குறிப்பிடற்பாலது.

இனி, இசுலாமியத் தமிழிலக்கியங்களின் ஆய்வுக் களத்தின் சுருக்கத்தைத் தொகுத்துக் காண்போம். இவ்விலக்கியங்கள் அனைத்தையும் தமிழுலகிற்கு அறிமுகம் செய்விப்பதே தற்போது நம் முன்னே உள்ள ஆய்வுப்பணியாகக் கருதப்படுகிறது. இசுலாத்தின் பயனாய் தமிழிலக்கிய உலகில் ஏற்பட்டுள்ள இலக்கியங்கள் ஒவ்வொன்றையும் இங்குக் கால வரிசைப்படிக் காண முயல்வது இயலாததாகும். எனினும், அவற்றின் தொகுப்புக்களைப் பின்வரும் ஏழு தலைப்புக்களுள் அடக்கலாம்.

1. தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள்
2. இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள்
3. இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
4. இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்கள்
5. இசுலாமியத் தமிழ் ஞான இலக்கியங்கள்
6. இசுலாமிய அறபுத் தமிழிலக்கியங்கள்
7. பிற இசுலாமியத் தமிழிலக்கியங்கள்.

இத்தலைப்புக்களுள் அடங்கும் வெவ்வேறான இலக்கியங்கள் பற்றிய ஆய்வுப் பணிகள் இதுவரை நடைபெறவில்லை. ஒருசில ஆய்வுகள் மட்டுமே குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன. அவை அந்தந்தத் தலைப்புக்களுள் தரப்பெற்றுள்ளன.

1. தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள்

இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் தோன்றிய முதல் பக்தி இலக்கியங்களையே இங்குத் தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள் என்று குறிக்கின்றோம். இசுலாமியத் தமிழிலக்கியங்களின் ஆரம்பக்கால நிலையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் காணப்படினும், இன்று இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றின் தொடக்கம் பல்சந்தமாலை என்னும் தமிழிலக்கியத்தின் மூலமே நிகழ்ந்துள்ளது சான்றாதாரங்களுடன் கண்டறியப்பட்டுள்ளது. இதன் காலத்தை அறுதியிடும் டாக்டர் உவைஸ், டாக்டர் அஜ்மல்கான் ஆகியோர் பல்வேறு சான்றாதாரங்களின் அடிப்படையில் கி.பி. 12ஆம் நூற்றாண்டு என வரையறை செய்கின்றனர்.

இங்கு, தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள் என்ற நிலையில் பல்சந்தமாலைக்கு அடுத்த நிலையில் யாகோபுச் சித்தர் பாடல்கள் (15ஆம் நூற்றாண்டு). ஆயிரமசலா (கி.பி. 1572), மிகுராஜ் மாலை (கி.பி. 1590), திருநெறி நீதம் (கி.பி. 1613), கனகாபிஷேக மாலை (கி பி. 1648), சக்கூன் படைப்போர் (கி.பி. 1686), முதுமொழி மாலை (17ஆம் நூற்றாண்டின் இறுதி) முதலான ஒன்பது இலக்கியங்கள் இடம் பெறுவதாக அவற்றின் கால எல்லையடிப்படையில் வரையறை செய்யலாம். ஆக இசுலாமியத் தமிழிலக்கிய வளர்ச்சியின் 12-ஆம் நூற்றாண்டு முதல் 17ஆம் நூற்றாண்டு வரையுள்ள ஆறு நூற்றாண்டு கால இடைவெளியில் தோன்றியுள்ள மேற்சொன்ன பத்து இலக்கியங்கள் மட்டுமே தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்களாகக் கொள்ளத்தக்கன.

இசுலாமியத் தமிழிலக்கிய வளர்ச்சியில் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இலக்கியங்களுள் மேற்குறிப்பிட்ட தொடக்கக்காலத் தமிழிலக்கியங்களைத் தவிர்த்த ஏனைய அனைத்தும் பெரும்பாலும் 18, 19, 20-ஆம் நூற்றாண்டுகளிலேயே தோன்றியுள்ளன என்பது ஈண்டுக் குறிப்பிடற்பாலது. இந்த மூன்று நூற்றாண்டு காலங்களே இசுலாமியத் தமிழ் இலக்கிய ஆக்கத்தின் பொற்காலமாகத் திகழ்ந்தன. 'இசுலாமியத் தமிழிலக்கிய வரலாறு தொகுதி-1' என்னும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழக நூல் தொடக்கக் கால இசுலாமியத் தமிழிலக்கியங்கள் பற்றிய தொகுப்பு ஆய்வினைச் சுட்டிக்காட்டுவதாக அமைகிறது. எனினும், தனிநிலையில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

இசுலாமியத் தமிழிலக்கிய வளரீச்சி நிலையைத் தமிழ் இலக்கியங்களின் பெரும் பிரிவுகளுக்கேற்ப அடுத்தடுத்து வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்திக் காட்டலாம்.

2. இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள்

முசுலீம் புலவர்களின் தமிழ்க் காப்பியப் பங்கேற்பு தமிழிலக்கிய வரலாற்றில் பெரும் முக்கியத்துவமும், சிறப்பும் வாய்ந்ததாகும். எந்தவொரு குறிப்பிட்ட சமயமும் தமிழுலகிற்கு அளித்திடா எண்ணிக்கை அளவில் இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. கனகாபிஷேக மாலையின் மூலமாகக் காப்பிய உலகில் அச்சாரமிடத் தொடங்கிய இசுலாமியத் தமிழ்க் காப்பியப் பிரிவு கிட்டத்தட்ட பதினைந்திற்கும் மேற்பட்ட காப்பியங்களைப் பெற்று வளர்ந்துள்ளது. கிடைத்துள்ள டாக்டர் உவைஸ் அவர்களது Muslims' Tamil Epics என்னும் நூல் இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களின் பல்வேறு உணர்ச்சி நிலைகளையும் விரிவாக ஆராய்கிறது.

கனகவிராஜரின் கனகாபிஷேகமாலை (கி. பி. 1648)யைத் தொடர்ந்து உமறுப்புலவரின் சீறாப்புராணம் (17ஆம் நூற்றாண்டின் இறுதி), கேசாதி நயினாரின் திருமணக்காட்சி (கி. பி. 1710), பனியகுமது மரைக்காயரின் சின்னசீறா (கி.பி. 1730), வண்ணக்களஞ்சியப் புலவரின் இராஜநாயகம் (கி.பி. 1808), சேகனாப்புலவரின் குத்பு நாயகம் (கி.பி. 1809), வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் (கி.பி. 1814), பத்றுத்தீன் புலவரின் முஹியித்தீன் புராணம் (கி.பி. 1816), சேகனாப் புலவரின் திருமணிமாலை (கி.பி. 1816), புதூர் குஷ்ஷாம் (கி.பி. 1821) வண்ணக்களஞ்சிய புலவரின் தீன் விளக்கம் (கி.பி. 1821), ஐதூறூசு நயினார் புலவரின் தவமணிமாலை (கி.பி. 1865), சேகனாப்புலவரின் திருக்காரணப் புராணம் (கி.பி. 1863), குலாம் காதிறு நாவலரின் நாகூர் புராணம் (கி.பி. 1882), ஆரிபு நாயகம் (கி.பி. 1894) முதலான பதினைந்து இசுலாமியத் தமிழ்ப் பெருங்காப்பியங்களைக் காணலாம். இவை அனைத்தும் முழுக்க முழுக்க தமிழிலக்கிய காப்பிய மரபுகளுக்கேற்ப அமையப்பெற்றனவாகும். இக் காப்பியங்கள் ஒவ்வொன்றும் விரிவான முனைவர் பட்ட ஆய்விற்குரிய ஆய்வுக் களத்தைப் பெற்றுள்ளன.

மேலே குறிப்பிட்டுள்ள பதினைந்து இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் தவிர்த்து இன்னும் சில இசுலாமிய இலக்கியங்களில்

காப்பிய இலக்கணங்கள் சில அமையப் பெற்றிருப்பதை நாம் காணலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்கன, குஞ்சுமூசுப் புலவரின் இறசூல் படைப்போர், முகியித்தீன் லெப்பையின் சாதுலி நாயகம், கேசாதி நயினார் புலவரால் இயற்றப்பட்ட திரு மணக்காட்சி, முகம்மது நூருத்தீன் புலவரால் எழுதப்பட்ட மூசாநபி புராணம், பக்கீர் மதாறுப் புலவரது இராஜமணி மாலை போன்றவற்றைக் கூறலாம். இவ் இலக்கியங்களில் இலக்கண நூல்கள் குறிப்பிடும் காப்பிய விளக்கங்கள் அனைத்தை யும் காண்பதரிதாகும்,

இசுலாமியக் காப்பியங்கள் அனைத்தும் அதன் கருவிலும் பின்புலத்திலும் காப்பியக் கதையோட்டத்திலும் இசுலாமிய வரலாற்றினை மையமாகக் கொண்டு அமைந்திருப்பதால் வரலாற்றுக் காப்பியங்கள் என்ற தகுதியைப் பெறுகின்றன. இவ்வொற்றுமை இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் அனைத்திலும் காணப்படுவதாகும்.

காவிய நாயகர்கள் என்ற நிலையில் இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள் காணப்படும் பிறிதொரு சிறப்புக்கூறு அனை வருமே இசுலாமிய மார்க்கப் பெரியோர்களாக இருப்ப தாகும். எந்தவொரு சாதாரண மானுடனையும் பாட்டுடைத் தலைவராக இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் எதுவும் பெற வில்லை. இறைத் தூதுவர்களையும் இறைநேயச் செல்வர் களையுமே பாட்டுடைத் தலைவர்களாக இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் பெற்றுள்ளன. காவிய நாயகர்களையும் அவர்களின் வரலாற்றுப் பின்புலத்தையும் ஒப்பிட்டு மேற்கொள்ளப்படும் ஆய்வும் பயனுடையதாக அமையும்.

இசுலாமியத் தமிழ்க்காப்பியங்களுள் ஒரே ஆசிரியர் இயற்றியுள்ள அதிகமான காப்பியங்கள் என்ற வரிசையில் முதன்மை பெறுபவர் சேகனாப் புலவர் ஆவர். இவர் குதுபு நாயகம், திருமணிமாலை, புதுகுஷ்ஷாம், திருக்காரணப் புராணம் என்னும் நான்கு காப்பியங் களை இயற்றியுள்ளார். இவருக்கடுத்த நிலையில் வண்ணக் களஞ்சியப் புலவர் இராஜநாயகம், குத்புநாயகம், தீன் விளக்கம் என்ற மூன்று காப்பியங்களையும் படைத்துள்ளார். சேகனாப் புலவர் போன்று ஒருவரே நான்கு தமிழ்க் காப்பியங்கள் படைத்த தமிழ்ப் புலவர்கள் வேறு ஒருவருமில்லை. இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள் அதிகமான செய்யுள் எண்ணிக்கையில் காவியம் இயற்றியுள்ள பெருமையும் சேகனாப்புலவரையே சாரும். இவரது

புதுகுஷ்ஷாம் காப்பியமே அனைத்து இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களுள்ளும் அதிகமான செய்யுள் எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. காவிய ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களது பணியை மதிப்பிடும் வகையிலும் ஆய்வு மேற்கொள்ளப் படலாம். சேகனாப்புலவரின் புதுகுஷ்ஷாம் ஆய்வு மட்டும் முனைவர் பட்ட ஆய்வ்ற்காக மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந் துள்ளது.

பொதுவாக இசுலாமியத் தமிழ்க் காப்பியங்கள் அனைத்திலும் காவியக் கதையமைப்பில் இன்பச் சுவை, ஏனைய பிற தமிழ்க் காப்பியங்களோடு ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. காரணம் இறைத் தூதர்கள் பற்றியோ இறை நேயச் செல்வர்கள் பற்றியோ அல்லது மறை மாண்புகளைப் பற்றியோ எடுத்துரைக் கும்போது முசுலீம் புலவர் இசுலாம் என்ற எல்கை=எல்லைக் கோட்டில் நிறுத்தப்படுகின்றனர். அதனால் அற்புதக் கற்பனை களுக்கும் புனைந்துரைகளுக்கும் எல்லை மீறிய இன்பச் சுவை பற்றிய வர்ணனைகளுக்கும் இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களில் இடமில்லாமல் போகின்றன. இவை எல்லை மீறிச் செல்லு மானால் பாடுபொருளுக்கும் பாடப்படும் காவியத் தலைவர் களுக்கும் ஏனைய மாந்தர்களுக்கும் உரிய மாண்புகள் குன்றிவிடும். இத்தகு வரன்முறை இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களை ஏனைய பிற தமிழ்க் காப்பியங்களிலிருந்து வேறுபடுத்துகின்றன. எனவே, காப்பியங்களின் உள்ளடக்கப் பொருள்களைப் பிரித்தாராயும் பணியும் சிறப்புடைத்து.

காவியக் கதைப் போக்குகளில் அனைத்து இசுலாமியத் தமிழ்க் காப்பியங்களிலும் தமிழ்க் காப்பியக் கட்டமைப்புகளுக்கேற்ப கனவுகள், கிளைக்கதைகள், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள், காப்பிய உவமைகள் அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

மொத்தத்தில் தமிழ்க் காப்பிய உலகில் இசுலாமிய சமயம் அதிகமான எண்ணிக்கைகளில் காப்பியங்களை அளித்திருப்பதுடன் தமக்கென மட்டுமே சுட்டிக்காட்டத்தக்க காப்பிய கரு, பாவினம், முதலானவற்றையும் பெற்றுச் சிறக்கின்றது.

3. இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தலைப்புக்களைப் பெற்றுள்ள இசுலாமியத் தமிழிலக்கியங்களுள் சிற்றிலக்கியங்கள்

ஒரு பெரும் பிரிவாகக் காட்சி அளிக்கின்றன. எண்ணிக்கை அளவில் மூன்றில் ஒரு பகுதியாக இசுலாமியத் தமிழ் இலக்கியங்கள் சிற்றிலக்கியப் பிரிவினையே சார்ந்துள்ளன. இதுவரை எழு நூற்றுக்கும் குறையாத இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன, இவை பெரும்பாலும் கோவை, சதகம், கலம்பகம், அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ், தூது, பதிகம், இன்னிசை, குறவஞ்சி, தசரத்தினம், அலங்காரம், சரமகவி, பல் சந்தமாலை, வாயுரை வாழ்த்து, திருமண வாழ்த்து, ஒருபா ஒருபஃது, பஃறொடை, ஆற்றுப்படை, பள்ளு, சதுர்பிரபந்தம், மஞ்சரி முதலான இன்ன பிற தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளையே சார்ந்துள்ளன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒன்று முதல் இருநூறுக்கும் மேற்பட்ட இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங் களைக் காணலாம். இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவைப் பொறுத்தவரையில் இன்னும் முழுமையாக வெளியுலகிற்கு அறிமுகமே ஆகவில்லை.

இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கிய வடிவங்களுள் எண்ணிக்கை அளவில் மிக அதிகமான நூல்களைப் பெற்றிருப்பது மாலை என்னும் சிற்றிலக்கிய வடிவமே ஆகும். மாலை இலக்கிய வடிவத் தில் அமைந்த சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட இலக்கியங்களை இசுலாமியத் தமிழ் தன்னகத்தே பெற்றுள்ளது. இசுலாமியத் தமிழுலகில் தோன்றிய முதல் நான்கு நூல்களில் பல்சந்தமாலை, மிஃறாஜ்மாலை ஆகிய இரண்டும் மாலை என்னும் சிற்றிலக்கியப் பிரிவினைச் சார்ந்துள்ளன,

இசுலாமியத்தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அந்தந்தக்காலத் தமிழ்ச் சிற்றிலக்கியப் பிரிவுகளின் வடிவத்திற்கேற்ப யாப்பமைதிகளையும் ஏனைய பிற இலக்கிய வரையறைகளையும் பெற்றுள்ளன. வடிவம் என்ற நிலையில் இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களை ஏனைய பிற தமிழ்ச் சிற்றிலக்கியங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் இயல்பு அவற்றின் மொழியே ஆகும். இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அனைத்தும் அறபு, பாரசீக மொழிகள் கலந்த தமிழ் யாப்பமைதியைப் பெற்றுச் சிறக்கின்றன. இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் பாடுபொருள்கள் பெரும் பாலும் அறபு நாட்டு இசுலாமிய வரலாற்றையும், பின் புலத்தையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே, முசுலீம் தமிழ்ப் புலவர்கள் தம் சிற்றிலக்கியப் படைப்பிற்கு எடுத்துக்கொண்ட பாடுபொருளை நன்கு அறபு, பாரசீகச்

சொற்கள் கலந்த மொழியமைப்பைப் பயன்படுத்திக்கொண்டனர். இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் மொழி அமைப்பு ஆராய்வதற்குரிய சிறப்புடைய பகுதி ஆகும்.

இசுலாமியத் தமிழிலக்கியங்களை அவற்றின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பல்வேறான நிலைகளில் அணுகி ஆராயலாம். உள்ளடக்கம் என்ற நிலையில் அனைத்து இசுலாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களும் அவை சார்ந்துள்ள சிற்றிலக்கிய வடிவத்தின் இலக்கண வரையறைகளுக்கு ஏற்ப ஏதாவது ஒருவிதத்தில் இசுலாமியக் கருத்துக்களுடன் தொடர்புடையனவாக அமைந்துள்ளன. எனவே இசுலாமியச் சிற்றிலக்கியங்களை அவை சார்ந்துள்ள உள்ளடக்கத்தின் அடிப்படையில் பின்வரும் பத்துப் பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம்:

1. இசுலாமியச் சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களையும் நெறிகளையும் கூறுவன.
2. இசுலாமிய மார்க்க வரலாற்று நிகழ்ச்சிகளை எடுத்துரைப்பன.
3. பெருமானார் நபிகள் நாயகம் (சல்) அவர்களைத் தலைவராகக் கொண்டு படைக்கப்பட்டன.
4. இறைநேயச் செல்வர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டன.
5. புலவரை ஆதரித்த புரவலரிகளைத் தலைவராகக் கொண்டன.
6. இசுலாமியப் புண்ணிய தலங்களைப் புகழ்ந்துரைப்பன.
7. அகப்பொருள் பற்றியன.
8. இசுலாமிய விழாக்களில் மட்டுமே படிப்பதற்காக இயற்றப் பெற்றவை.
9. குறிப்பிட்ட நிகழ்வுகளில் கடைப்பிடிக்க வேண்டிய வற்றைப் பாடுபொருளாய்க் கொண்டவை.
10. இவையல்லாத பிற.

சிற்றிலக்கியம் என்ற நிலையில் தமிழ் எல்கைப் பரப்பில் ஒரு சிறப்பிடம் வகிக்கத்தக்க வேறுபட்ட இலக்கிய வடிவத்திலமைந்த எண்ணற்ற இலக்கியங்களை இசுலாமியத் தமிழிலக்கியப் பிரிவு பெற்றுள்ளது. இவை அனைத்தும் விரிவான ஆய்வுக் களங்களைப் பெற்றுள்ளன.

4. இசுலாமியத் தமிழிலக்கிய வடிவங்கள்

'சிறப்பு இலக்கிய வடிவங்கள்' என்று சொல்லத்தக்க அளவில் சில இசுலாமியத் தமிழிலக்கியங்கள் அமைந்துள்ளன. அவை கிஸ்ஸா, முனாஜாத்து, நாமா, படைப் போர், மசாலா முதலான இலக்கிய வடிவங்கள் ஆகும். இத்தகு இலக்கியப் பிரிவுகள் இசுலாமியக் கருத்துக்கள் அடங்காத பிற நிலைக் கருத்துக்களைக் கொண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் எங்கும் காணப்படவில்லை என்பதால் இவற்றை இசுலாமியத தமிழுக்கேயுரிய சிறப்பிலக்கிய வடிவங்களாகக் கொள்ளலாம்.

இவற்றுள் படைப் போர் என்னும் ஒரே ஒரு இலக்கிய வகை மட்டுமே தமிழ்ப் பெயரைப் பெறறமைந்துளளது. இப்படைப் போர் இலக்கிய வகையும் அறபு மொழியில் இப்னுல உமருல் வாக்கிதி என்பவரால் இயற்றப்பட்ட கிதாபுல் மஹாசி (போர் களின நூல்) எனனும் நூலினை மூலனோடியாகக் கொண்டு எழுந்ததேயாகும். தமிழிலகிய வரலாற்றில் போர் இலக்கியம் எனறு சொல்லத்தக்க பரணி இலக்கியங்களிலிருந்து முழுக்க முழுக்க உருவ உள்ளடக்கங்களில படைப் போர் இலக்கியங்கள் வேறுபட்டு ஒரு தனிநிலை புதுவகை இலக்கியப் பிரிவாகத் திகழ்கிறது. படைப் போர் இலக்கியங்களுக்கு அடிப்படையாக வுள்ள போர்ச் செய்திகள் முழுவதும இசுலாமிய மார்க்க வரலாற்றில் இடம்பெற்றவையே. பெருமானார் நபிகள நாயகம், ஆவாகள வாழ்வுடனை தொடர்புடைய பலவேறு வரலாற்றுச் சிறப்பிடம் பெறறுளள நிகழ்ச்சிகளும படைப் போர் இலக்கியங் களில சுட்டிககாட்டப்பட்டுளளன. இசுலாம் இவவுலகில பரவத் தொடங்கிய காலத்திலிருந்து வேரூனறிய காலம் வரையில் எதிர் கொணட போர்க களஙகள் எணணறறவையாகும். அவறறுள் சிலவறறிற்கே முசுலீம் தமிழ்ப் புலவர்கள படைப்போர் என்னும் இலக்கியப் பிரிவினகீழ் இலகிய உருவமளித்து தமிழக மக்களிடதது இசுலாமிய மார்க்க வரலாறறுப போர்களை அறிமுகம் செய்வத் துள்ளனர். பிஎச்.டி. பட்டதிற்காக, படைப் போர இலகியங்கள் பறறிய ஆய்வு ஒனறு நிகழ்ததப்பட்டுள்ளது. இசுலாமியத தமிழ் இலகிய வடிவங்களான ஐந்து பிரிவுகளும தனித்தனியே விரிவான டாக்டரீ பட்ட ஆய்விற்கு மேற்கொள்ளத்தக்க செய்திகளை யுடையன. அத்துடன் இவைகளை அவற்றின் மூலங்களுடன் ஒப்பிடும பணி விரிவாக நிகழ்த்தப்பட வேணடிய பகுதியாகும.

5. இசுலாமியத் தமிழ் ஞான இலக்கியங்கள்

ஞானம் என்ற சொல்லுக்கு அறிவு, கல்வி, பரஞானம், தெளிவு, நல்லொழுக்கம் என்று பல்வேறாகப் பொருள் கூறுவர், இறைவனை அடைவதற்கு வழிவகை செய்யும் இறைஞானத்தையே இச்சொல் குறிப்பதாக எண்ணுகிறோம். இசுலாமிய ஆத்ம ஞானம் தஸவ்வுஃப் அல்லது ஸூஃபித்துவம் என்று அழைக்கப்படுகிறது. இந்நெறியில் தோன்றும் ஆத்ம ஞானியை 'ஸூஃபி' என்பர். தமிழில் ஸூஃபியை முசுலீம் சித்தர், ஆத்ம ஞானி, இறைநேயர் என்று கூறலாம்.

இத்தகு இறைநேயச் செல்வர்களின் இலக்கிய ஆக்கம் இசுலாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க எல்லைப் பரப்பினைப் பெற்றுத் தனிப்பெரும் பிரிவாக உருவாகியுள்ளது. தமிழகத்தில் தோன்றிய இசுலாமிய ஸூஃபிகள் தங்களது அருட் பெரும் ஞானத்தைத் தமிழ் மரபுடன் இணைத்து இலக்கிய உருவம் அளித்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் குணங்குடி மஸ்தான், தக்கலை பீர்முகம்மது சாகிபு, கோட்டாறு, செய்குத் தம்பி, ஞானியர் சாகிபு, காலங்குடி மச்சரேகைச் சித்தர், ஐயம்பேட்டை அப்துல்கனி சாகிபு, கோடைநகர் ஷெய்க் முஹையித்தின் மலுக்கு முதலியார், வாலை மஸ்தான், காயல் செய்யிது முகம்மது காதிரி, கணியபுரம் ஷெய் கனா, ஷெய்கு உதுமான் ஒலி, மேலப்பாளையம் முஹையித்தின் பஷிரொலி, கோட்டாறு செய்கு பாவா, பாவா செய்கு சுலைமான், காயலம்பதி ஹம்சாலெப்பை. செய்யது அலி வாலை குரு முஸ்தான், மணவாள புரம் ஆழ்வார் திருநகரி செய்கு முஹம்மது அப்துல்லா முதலானவர்களாகும். இவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறான எண்ணிக்கையில் ஞான இலக்கியங்களைத் தமிழுலகிற்குப் படைத்தளித்துள்ளனர். ஞான இலக்கியங்களைன் தொகுப்பும் அவற்றின் பகுப்பும் பற்றிய ஆய்வு நிகழ்த்துவதற்கு ஒரு ஆய்வுக் குழு முனைந்து செயல் பட்டால் மட்டுமே முடியும்.

இசுலாமிய ஞான இலக்கியங்களின் தனிநிலை ஆய்வுடன் இவற்றை ஏனைய சித்தர்களின் பாடல்களுடன் ஒப்பிட்டும் ஆய்வு மேற்கொள்ளப்படுமானால் இசுலாமிய சூஃபி மரபிற்கும் தமிழ்ச் சித்தர்களின் மரபிற்குமிடையே காணப்படும் பல்வேறான ஒற்றுமைகள் நன்கு புலப்படும். இவ்வகையில் 'குணங்குடி மஸ்தான் பாடல்களும் தாயுமானவர் சுவாமிகள் பாடலும் ஓர் ஒப்பாய்வு' என்னும் பிஎச்.டி. ஆய்வு குறிப்பிடற்பாலது.

6. இசுலாமிய அறபுத் தமிழிலக்கியங்கள்

இசுலாத்தின் அறபு மொழிக்குரிய முக்கியத்துவத்திற்கு அடிப்படைக் காரணம் இசுலாமியர்களின் ஏகோபித்த புனித மறைநூலாம் அல்குர்ஆன் இவ்வுலகிற்கு அல்லாஹ்வால் அருளப் பட்டது அறபு மொழியில் என்பதேயாகும். எனவே இசுலாத்தின் ஏகோபித்த இறை வணக்கத்தையும் அதன் கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் அறபு மொழிக்கும் உன்னத சிறப்பிடத்தை அளித்தே வந்தனர்.

இசுலாமியத் தமிழிலக்கியப் பிரிவில் தமக்கெனச் சுட்டிக் காட்டத்தக்க எல்லைப் பரப்பினைக் கொண்ட அறபு-தமிழில் கருத்துப் பரிமாற்றம் தமிழ் மொழியினடிப்படையில் அறபு எழுத்துக்களைப் பயன்படுத்தி நடைபெற்றது. அறபு மொழியில் இல்லாத தமிழ் உச்சரிப்புக்களான ள, ழ, ட, போன்ற ஒலிகளைப் பிரதிபலிக்க அதற்கு இணையான ஒத்த உச்சரிப்பைக் கொண்ட அறபு எழுத்துக்களுடன் புள்ளிகளைச் சேர்த்துப் புதிய குறியீடு களையும் அறபுத் தமிழ் எழுத்தாளர்கள் அமைத்துக் கொண்டனர். அறபுத் தமிழில் இலக்கியம் படைத்தவர்கள் அறபு மொழி போன்றே வலமிருந்து இடமாகவே எழுதினர். இம்முறையின் கீழ் இசுலாமியத் தமிழ்ப் புலவர்கள் உரைநடை நூல்களுடன் கவிதை நூல்களையும் யாத்து வெளியிட்டுள்ளனர்.

அறபுத் தமிழின் தோற்றத்தில் இலங்கையைச் சார்ந்த தமிழ்ப் புலவர்களும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றனர். இவர்களது பணி பற்றித் தனியாக மதிப்பிடலாம். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் ரசூல் மாலையையும், ஷெய்கு முஸ்தபா மீஸன் மாலையையும் இயற்றியுள்ளனர். மீஸன் மாலையில் அமைந்துள்ள பாடல்கள் முழுவதும் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. இசுலாமியத் தமிழிலக்கியத்தில் முதன்மை அங்கமான அறபுத் தமிழில் குர்ஆன் தொடர்பாக எட்டு நூல்களும், அண்ணல் நபி நாயகம் அவர்களின் வரலாறு தொடர்பாகத் பதினொரு நூல்களும், மார்க்க நெறி முறைகளை விவரிப்பவைகளாக நாற்பது நூல்களும், இசுலாமிய சரித்திரங்களைச் சார்ந்தவைகளாக இருபத்தைந்து நூல்களும் மெய்ஞ்ஞான இலக்கிய வகையில் இருபத்தாறு நூல் களும், பிற இசுலாமியச் சமயச் செய்திகளைச் சார்ந்து நாற்பத்தாறு நூல்களும் தோன்றியுள்ளன. எண்ணிக்கை

அளவிலும் இசுலாமியக் கருத்துக்களடங்கிய நிலையிலும் அறபு-தமிழ் இலக்கியங்கள் இசுலாமியத் தமிழில் முக்கிய இடம் பெறுகின்றன.

7. பிற இசுலாமியத் தமிழிலக்கியங்கள்

மேற்குறித்த பிரிவுகளுள் அடங்காத ஏனைய அனைத்து இசுலாமியத் தமிழிலக்கியங்களையும் இப்பிரிவின்கீழ் அடக்கலாம். இதில் சிறப்பாக இடம்பெறத்தக்கன, தற்காலத் தமிழிலக்கியங்களான சிறுகதை, நாவல், நாடகம் முதலான இலக்கியப் பிரிவுகள் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலப் பகுதிக்குப் பின்பே முசுலீம் சமூக வாழ்க்கையையும் இசுலாமிய மார்க்கக் கருத்துக்களையும் உள்ளடக்கமாகப் பெற்ற சிறுகதை, நாவல், நாடகங்கள் வரத் தொடங்கின, இத்தகு இலக்கிய ஆக்கத்திற்குப் பெரும் பங்காற்றியிருப்பவை முசுலீம் பத்திரிகைகள் என்பதை இங்குச் சுட்டிக்காட்டவேண்டும்,

முசுலீம் தமிழ்ச் சிறுகதைகளின் தொடக்க கால எழுத்தாளர்களாக மதுரைப் புலவர் மு. சு. மு, காதிர் முகியித்தீன் மரைக்காயர், டி. எம். ஆர். மசூலி சாகிப், பா. தாவூத்பாஷா முதலானவர்களைக் குறிப்பிடலாம், இவர்களது காலம் 1935 முதல் 1940 வரையிலான குறுகிய காலமே. அடுத்த நிலையில் 1950இன் பின் இசுலாமியத் தமிழ்ச் சிறுகதை ஆக்கத்தில் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. முசுலீம் முரசு, மணிவிளக்கு, பிறை ஆகிய முசுலீம் பத்திரிகைகளின் பங்கு இக்காலக்கட்டத்தில் குறிப்பிடற்பாலது. இதன்பின் குறிப்பிடத்தக்க இசுலாமியச் சிறுகதை எழுத்தாளர்கள் ஜமீலா, திருச்சி ரசூல், மகுதூம், ஆர். பி. மல்லாரி, வி. நூர்முஹம்மது, ஷேக்கோ, ஜெயெம் மஹதி, கவுஸ், சாரணபாஸ்கரன், ஜே. எம். சாலி, கா. அப்துல் இன்னோரன்னவர்களாவர்.

இவர்களது சிறுகதைகளுக்குரிய பின்னணியாகத் தமிழக முசுலீம் மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளும், சடங்குமுறைகளும் அமைந்தன. இத்தகு பின்னணிகளுக்கு இலட்சிய நோக்கு அமைக்க, பொன்மொழிகளையும் பெருமானார் நபிகள் நாயகத்தின் வாக்குகளையும் தம் கதைகளில் பயன்படுத்திக் கொண்டனர்.

இசுலாமியத் தமிழ் நாவல்கள் என்ற பிரிவு இன்றைய நிலையில் பல்லோராலும் தனிப்பிரிவாக எண்ணிப் பார்க்கப் படாமல் உள்ளது. அத்தகு நாவல்கள் வெளியுலகிற்குச் சரியாக அறிமுகமாகாததே காரணம் ஆகும். முதல் தமிழ் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்திற்கு அடுத்த நிலையில் வெளியிடப் பட்டது இலங்கை எழுத்தாளர் முகம்மது காசிம் சித்தி லெப்பை யின் அசன்பே சரித்திரம் என்னும் நாவலாகும். ஆனால், இது தமிழிலக்கியத்தில் பெரிதும் மறக்கப்பட்ட ஒன்றாகும். இந்நாவல் இசுலாமியத் தமிழிலக்கிய நாவல் உலகில் முதல் நாவலும் நாவல் உலகின் இரண்டாவது நாவலுமாகும்.

கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டுக் கால நாவல் இலக்கியப் பின் புலத்தை இசுலாமியத் தமிழ் நாவல்கள் பெற்றுள்ளன எனலாம். நாவல் எழுத்தாளர்களுள் என். பி. அப்துல் ஜப்பார், ஹஸன், மஹதி, சித்தி ஜுசாதா பேகம், ஜேயெம். டி. வி. துபாஷ் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுள் ஆசிரியர் ஹஸன் மஹ்ஜூபின், புனித பூமியிலே. மேற்கு வானம், சிந்து நதிக் கரையினிலே, சொர்க்கத்தின் கன்னிகை ஆகிய பல நாவல்களை எழுதியுள்ளார். இசுலாமியத் தமிழ் நாவல்களை வரலாற்று நாவல்கள், சமூக நாவல்கள், மர்ம நாவல்கள், மொழிபெயர்ப்பு நாவல்கள் என்ற நான்கு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்திக் காணலாம்.

இசுலாத்தில் பொதுவாக நாடகக் கலைக்கு வரவேற்பு கிடையாது. காரணம், நாட்டியம், நாடகம், போன்றவை இசுலாமிய மார்க்க நெறிக்கு மாறுபட்டவையாகும். எனினும், முசுலீம் எழுத்தாளர்கள் இசுலாமிய நெறியை எளிய முறையில் பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டிட நாடக இலக்கிய அமைப்பை யும் பயன்படுத்திக் கொண்டனர். இத்தகு முறையில் எழுந்த நாடகங்களுள் குறிப்பிடத்தக்கன: அப்பாசு நாடகம், அலாவுதீன் நாடகம், கபுகரகு நாடகம், ரூபி நாடகம், தையார் சுல்தான் நாடகம், அலி பாதுஷா நாடகம், வால் கௌஹத் நாடகம் முதலானவைகளாகும். இவற்றுள் கபுகரகு நாடகம் சாந்தரூபி நாடகம் ஆகிய இரண்டும் நாட்டுத் தெருக்கூத்து முறையில் அமைந்துள்ளன.

முசுலீம் நாடக இலக்கியங்களுள் இசைப்பாடல்கள் மிக மிகக் குறைவாக அமைந்து, உரையாடல் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

இவற்றுள் இசைப்பற்று பெரிதும் வலியுறுத்தப்படுகிறது. இசுலாமிய நாடக இலக்கியங்களுள் ஆசிரியர்களின் ஆழ்ந்த மார்க்கப் பற்றும், அவற்றைப் பரப்புவதில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும் நன்கு வெளிப்பட்டுள்ளன.

தமிழிலக்கியப் பிரிவு ஒவ்வொன்றிலும் தங்களது பங்கை நிலைநாட்டியுள்ள முசுலீம் தமிழ்ப் புலவர்களின் இலக்கியப் பணி, ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கும் மேற்பட்ட நிலையில் ஆய்வு நிகழ்த்துவதற்குரிய ஆய்வுக் களங்களைப் பெற்றுள்ளது எனின் அது மிகையாகாது.

கிறித்தவம்

சூ. இன்னாசி

கிறித்தவ இலக்கியங்களை மொழியமைப்பு, இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் எனப் பாகுபடுத்தலாம். கிறித்தவ சமயச் சொற்களின் அகராதி ஒன்று தொகுக்கப்பெறின் பயனுடையதாக இருக்கும். கிறித்தவத் தமிழ் இலக்கியப் பரப்புக்கான சான்றாதாரக் கருவி நூல்கள் இல்லையே என்ற குறையை நீக்க வேண்டும்.

தமிழில் தோன்றியுள்ள இலக்கியங்களில் சமயத்தின் பிடிப்பு குறிப்பிடத்தகுந்தது. சமய வரலாறு தெளிவாக உள்ள காலப் பகுதியில் தோன்றிய இலக்கியங்கள் சமயங்களின் அடிப்படையி லேயே பெரும்பாலும் தோன்றியுள்ளன. அவற்றின் எண்ணிக்கை யும் பரப்பும் அவ்வச் சமயச் செல்வாக்கிற்கேற்ப மிகுதியாக உள்ளன. இந்நிலையில் தமிழகக் கிறித்தவர் தொகை பிற சமயத்தவர் தொகையை நோக்க மிகவும் குறைவு. கல்வி நிறுவனங்கள் பலவற்றிற்குக் கால்கோளிட்ட பெருமையும், சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகள் பலவற்றிற்கு உரமிட்டு வளர்த்த சிறப்பையும் பெற்றிருந்தும் இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் குறைந்தவராகவே கிறித்தவர் வாழ்ந்துள்ளனர்.

சமய விழாக்களில் விவிலியமும் மறையுரைகளுமே இன்றி யமையாதனவாயின. அவற்றைக் கூறுதற்குரியோர் அருளடி யார்களே என எண்ணினர். பொதுமக்களுக்கும் இலக்கியப்படைப் பாளர்கட்கும் அங்குப் பெரும்பாலும் வாய்ப்பில்லை. இலக்கிய வளர்ச்சியில் கவனமின்மையால் அதனை ஆயும் போக்கிலும் அவரிடையே குறைவு காணப்படுகிறது.

கிறித்தவ இலக்கியங்களைக் கிறித்தவர் தெளிவாக அறிந்தி ருத்தல் குறைவு. இலக்கியப் பயிற்சியுடையார் ஒரு சிலர் அறிந்திருப்பர். அவ்விலக்கியப் பயிற்சியுடையார் கிறித்தவ இலக்கியப் பயிற்சியிலும் மேம்பட்டு, சைவ வைணவ இலக்கியப்

பயிற்சியுடையோராய் இருப்பர். அதற்கான வாய்ப்புகள் அவர் கட்கு உண்டு, அந்த அளவிற்கு சைவ, வைணவ இலக்கியப் புலமையாளரிடம் கிறித்தவ இலக்கியப் புலமையைக் காண்டல் அரிது. இதற்கு மிகப் பெரிய அறிஞரும் விதிவிலக்கில்லை. ஆதலின் கிறித்தவ இலக்கியக் களங்களைத் தேர்ந்து ஆய்வது, கிறித்தவத்திற்குச் செய்யும் பணியன்று; தமிழுக்குச் செய்யும் தொண்டாகும். கிறித்தவ இலக்கியக் களங்களை மொழியமைப்பு இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனப் பாகு படுத்தலாம்.

மொழியமைப்பில் சொற்கள், அவற்றுக்கான பொருள்கள், சொற்கள் தொடரும் முறை ஆகியவற்றை அகராதிகள், சொற் களஞ்சியங்கள், இலக்கணங்கள் போன்றவை புலப்படுத்துகின்றன. முதல் தமிழ் அகராதி வீரமாமுனிவர் படைத்த சதுரகராதி. இவ்வகராதிகளின் பதிப்புக்களும் பயனும் பற்றிப் போதிய ஆய்வுகள் நிகழவில்லை. முதன் முதல் தமிழகராதியைப் பற்றிய முழுமையான ஆய்வு இக்கட்டுரையாளரால் மேற்கொள்ளப் பட்டது. தமிழ் முதல் அகராதியின் செம்மைப் பதிப்பும் இவரால் கொண்டுவரப்பட்டுள்ளது. அது போன்று பிற அகராதிகள் பற்றிய மேலோட்டமான கட்டுரைகள் வந்துள்ளனவேயன்றி அவைபற்றி முழுமையான ஆய்வு வந்ததாகத் தெரிந்திலது. பிற அகராதிகளின் மறுபதிப்புகள் புகைப்படப்படிகளாக மீண்டும் வந்துள்ளனவேயன்றி அவற்றைச் செம்மைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிலது. அகராதிகளை ஆக்கியோர் அவ்வக் காலச் சூழ்நிலையில் தம்மால் இயன்றதைப் பாராட்டும் வகையில் செய்துள்ளனர். ஆயினும் தற்கால நெறிகட்கு ஏற்ப அவற்றைப் படைத்துள்ளனரா என ஆயும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

சொற்களஞ்சியங்கள் பல்லோர் கூட்டுறவால், பல்லாண்டு முயன்று தொகுக்கப்படுவன. அவ்வகையில் சென்னைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்றுள்ள தமிழ் லெக்சிகன் குறிப்பிடத் தகுந்தது. ஆயினும் அதன் சொற்களைத் தொகுக்கும் பொழுதும், அச்சிடும் பொழுதும் கிறித்தவ இலக்கியப் பயிற்சியுடையார் எவரும் அக்குழுவில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிந்திலது. அப் பணியில் உழைத்தோர் ஐவரிஞர் பெருமக்களேயாயினும் அவருக்கும் கிறித்தவ இலக்கியப் பயிற்சி குறைவாகவே இருந்துள்ளதாகத் தோன்றுகிறது.

வீரமாமுனிவர் தம் தேம்பாவணியில் புதிய சொல்லாக்கங்கள், சொற்களுக்குரிய புதிய பொருள்கள், கிறித்தவச் சமயச் சொற்கள் ஆகியவற்றைக் கையாண்டுள்ளார். அவற்றுள் எதுவும் தமிழ் லெக்சிகனில் காணப்பட்டிலது. அவ்வாறே பிற கிறித்தவப் புலவோருடைய படைப்புக்களில் காணப்படும் புதிய சொற்கள், புதிய பொருள்கள் ஆகியவற்றைக் கண்டு சொற்களஞ்சியங்களில் அவற்றை இடம் பெறச் செய்தாலன்றி, முழுமை பெற்ற தமிழ்ச் சொற்களஞ்சியங்களாக அவற்றைக் கருதுதற்கில்லை. தமிழ் அகராதிப் படைப்புகள் குறித்தும், அவற்றைப் படைத்தோர் குறித்தும் கருத்து வேறுபாடுகள் உண்டு. சான்றாக வீரமாமுனிவர் படைத்த அகராதிகள் குறித்து 6 என்றும், 7 என்றும், 8 என்றும் பல்வேறு வகையாகக் கணக்கிட்டுள்ளனர். அதற்குக் காரணம் பல்வேறு நூலகங்களில் காணக்கிடக்கும் நூற்பட்டியல்களே. ஆனால் இதுவரை அறிய வந்தவை மூன்றே ஆகும். நூற்பட்டியல்கள் காட்டும் நூற்குறிப்புகள் குறித்து ஆய்ந்து உறுதிப்படுத்தும் முயற்சி வேண்டப்படுகிறது. சான்றாக, பாரீசில் உள்ள தேசிய நூலகத்தில் வீரமாமுனிவர் பெயரில் தமிழ்-பிரெஞ்சு அகராதியின் கையெழுத்துப்படி உள்ளதாக அந்நூற் பட்டியல் சுட்டுகிறது. கட்டுரையாளர் அதனை நேரடியாகப் பார்த்த பொழுது முகப்புப்பக்கத்தில் வீரமாமுனிவர் தொகுத்த நெறிகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டது என்னும் குறிப்பிருக்கிறது. தொடக்கத்தில் வீரமாமுனிவர் என்ற பெயரைப் பார்த்ததும் வீரமாமுனிவர் தொகுத்தது என்னும் முடிவுக்கு வந்துவிட்டனரி போலும். கட்டுரையாளர் அந்நூலகப் பொறுப்பாளருக்கு இதனைச் சுட்டிக் கடிதம் எழுதியதன் காரணமாகத் தற்பொழுது அந்நூலகப்பட்டியலில் கட்டுரையாளர் இப்படிக் கருதுகிறார் என்று தட்டச்சுச் செய்து ஒட்டி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறே வெளிநாட்டு நூலகங்களில் உள்ள நூல்கள் அனைத்தையும் இலக்கண, இலக்கியப் பயிற்சியுடையார் பார்வையிடுங்கால் பல புதிய உண்மைகள் தெரிய வரலாம்.

பிற சமயச்சார்பான சில அகராதிகள் வெளிவந்துள்ளன. அவ்வாறே கிறித்தவச் சமயச் சொற்களின் அகராதி ஒன்று தொகுக்கப் பெறின் பயன் உடையதாக அமையும்.

ஐரோப்பியருக்குத் தமிழ் இலக்கணங்களை அறிமுகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டோர் கிறித்தவரே. தமிழ்

இலக்கணத்தை அவரறிந்த ஐரோப்பிய மொழிகளில் எழுதி வெளியிட்டுள்ளனர். அவ்வாறு தொடக்கத்தில் வெளியிட்டுள்ளவர்களில் குறிப்பிடத்தக்கோர் அன்றீக்கு அடிகளார், சீகன்பால்கு, பல்தேயுஸ் போன்றாராவர். ஆயினும் அவர்தம் நூல்கள் பார்வைக்குக் கிட்டில, அவை மேனாட்டு நூலகங்களில் எங்கேனும் இருக்கலாம். அந்நாட்டிலுள்ள தமிழாய்வாளர்கள் அவற்றைத் தேடிப் பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

வெளிவந்துள்ள இலக்கண நூல்களின் குறை நிறைகளைப் பற்றி மேலோட்டமான பார்வைகள் நடந்துள்ளன. முழுமையாக மதிப்பிடச் சில தடைகள் ஏற்படுகின்றன. சான்றாக வீரமாமுனிவர் இலத்தீன் மொழியில் செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், திறவுகோல் ஆகியவற்றை எழுதியுள்ளார். அவற்றுள் செந்தமிழ் இலக்கணமும், கொடுந்தமிழ் இலக்கணமும் தமிழரல்லாதோரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையிலேயே இலத்தீன் மொழியறியாதோரி ஆய்வுகளை நிகழ்த்த வேண்டியுள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் எவ்வளவில் தமிழ் இலக்கணப் புலமை பெற்றிருந்தனர் என்பது தெரிந்திலது. தமிழும் இலத்தீனும் அறிந்துள்ள அருளடியார்கள் தற்பொழுதும் சிலர் உள்ளனர். அவர்கள் தமிழில் மறுமொழிபெயர்ப்புச் செய்தால் தமிழுக்குப் பயனுடையதாக அமையும். அவ்வாறே ஆங்கிலம் மட்டும் அறிந்தோர்கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்குத் திறவுகோல் என்னும் நூல் இலத்தீன் மொழியிலேயே உள்ளது. அதனை ஆங்கிலத்திலோ, தமிழிலோ மொழி பெயர்ப்புச் செய்தல் வேண்டும்.

வீரமாமுனிவர் எழுதிய தொன்னூல் விளக்கத்திற்கு அவரே உரையும் எழுதியுள்ளார். ஆயினும் தற்பொழுது அச்சு வடிவத்தில் காணலாகும் உரை முற்றிலும் அவருடையதன்று. வேதகிரி முதலியார் 1838இல் திருத்தியும் கூட்டியும் செய்ததாகும். அவர் தம் மூலவுரை மட்டும் யாது எனத் தேடிக்கண்டு பதிப்பித்தல் வேண்டும். சென்னையில் உள்ள கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் அதன் கையெழுத்துப் படி உள்ளது. ஆயினும் இடையிடையே உள்ள நூற்பாக்கள் சிலவற்றுக்கு உரியவை காணப்படவில்லை, பாரீசிலுள்ள தேசிய நூலகத்தில் உள்ள ஓலைச் சுவடியைப் பார்வையிட்ட பொழுது அதனோடு யாப்பருங்கலக்காரிகையுரையும் இணைக்கப்பட்டுத் தொன்னூல் விளக்கவுரை எனவைக்கப்

பட்டுள்ளது. தொன்னூல் விளக்கப்பகுதியிலும் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் கிட்டாத பகுதிகள் கிடைக்கவில்லை. ஆதலின் அப்பகுதிகளைத் தேடிக் கண்டுபிடித்து வீரமாமுனிவரது உரை மட்டும் யாதென அறிந்தால் ஆய்வுக்குத் துணை நிற்கும். கிறித்தவர் படைத்துள்ள அகராதி, இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு விவரங்கள் பற்றித் 'தமிழியல்' என்னும் நூல் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறையால் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

இயற்றமிழ் என்னும் பகுதியைச் செய்யுள் வகைகள், உரை நடை வகைகள் என இருகூறாக்கலாம், செய்யுள் வகையில் பிரபந்தங்கள் என்று சுட்டப்படுகின்ற இலக்கிய வகைகளை அடக்கலாம். உரைநடை வகையில் புதினம், சிறுகதை போன்ற வற்றை அடக்கலாம்.

கிறித்தவ இலக்கியங்களைப் பொறுத்தவரை சான்றாதாரக் கருவி நூல்கள் போதிய அளவில் இல்லை, சில ஆண்டுகளாகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை வழியாகச் சில நூல்கள் வெளிவந்துள்ளன. 'கவிதைச்செல்வம்' என்ற நூலில் நானூற்று எழுபதுக்கு மேற்பட்ட நூல்கள் பற்றிய விவரங்கள் தக்க விளக்கங் களுடனும் பாகுபாட்டுடனும் இடம் பெற்றுள்ளன. அத்துறை சார்பில் வெளிவந்துள்ள 'புதினப் படைப்புகள்' என்னும் நூலில் கிறித்தவர் படைத்துள்ள 91 புதினங்கள் பற்றி ஆரயப்பட்டுள்ளது, 177 புதினங்களின் வெளியீட்டு விவரப்பட்டியல் இணைக்கப்பட் டுள்ளது.

கிறித்தவக் கவிதைப் படைப்புகளில் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் போன்ற காப்பியங்கள் விரிவாக ஆயப் பட்டுள்ளன. 20ஆம் நூற்றாண்டுக் காப்பியங்கள் என்ற பெயரில் தமிழ்ச்சுடர்மணிகள், திருவவதாரம், இயேசுகாவியம் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பிற காப்பியங்கள் கிறித்தவ அறிஞராலேயே ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் நூற்பட்டியல்களை மட்டுமே பார்த்துச் சிலவற்றைக் காப்பியங்கள் என்று முடிவிற்கு வருகின்றனர். காவியம் என்ற பெயர் பெற்று விட்டதால் காப்பியம் என்றோ, புராணம் என்ற பெயர் பெற்றி ருப்பதால் புராணம் என்றோ கூறுதல் அவ்வளவு பொருத்தமுடைய

தாகத் தோன்றவில்லை. கிறித்தவக் காப்பியங்களைப் பட்டிய லிட்டு அவை பதினேழு என ஒருவர் சுட்டுகிறார். அவற்றுள் ஆதி நந்தவனப்பிரளயம், ஆதி நந்தவன மீட்சி போன்றவை கீர்த்தனை நாடகங்களேயன்றிக் காப்பியமல்ல. மற்றவற்றுள், சில விவிலியச் செய்திகளைக் கவிதை வடிவில் கூறுவனவே. ஆதலின் அவற்றை எவ்வகை இலக்கியமாகக் கருதலாம், அவ்விலக்கிய இலக்கணம் அந் நூல்களுக்கு எவ்வெவ் வகையில் பொருந்தும் எனவெல்லாம் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

இதுவரை புதினங்களைப் பற்றி வெளிவந்துள்ள ஆய்வு நூல்களில் கிறித்தவர் படைப்புகள் அதிகமாக இடம் பெற்றில. வேதநாயகம் பிள்ளை, ஹெப்சிபா ஜேசுதாசன், டி. செல்வராஜ், ஜசக் அருமைராஜன் போன்ற ஒரு சிலர் பற்றிய ஆய்வுகள் வந்துள்ளன. ஏறத்தாழ கிறித்தவப் புதினப்படைப்பாளர்கள் அறுபதுக்கு மேற்பட்டோர் புதினங்களை வெளியிட்டுள்ளனர். சென்னையில் வாழ்ந்த செல்வராசு ரெட்டியார் 1920-27ஆம் ஆண்டுகட்கிடையில் எட்டுப் புதினங்களைப் படைத்துள்ளார். ஆய்வாளர்கள் தம் நூல்களில் அவர்க்குரிய இடத்தை வழங்கிலர். அந்நூல்கள் ஆய்வாளருக்குக் கிட்டாமை ஒரு காரணமாகலாம். மேனாட்டு நூலகத்தில் அவருடைய படைப்புகள் உள்ளன. அவரையும் பிற கிறித்தவர் படைப்புகளையும் ஆயும் முயற்சியும் அவற்றின் தரத்தை மதிப்பிடும் பணியும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு சில படைப்பாளர்களை மட்டுமே மனத்திருத்தி ஆயும் போக்கும், அவர்களுக்குள்ள வாய்ப்பு, வசதிகளின் செல்வாக்கே அவற்றிற்கு அடிப்படையாய் அமைவதும், தற்கால ஆய்வுலகில் பொதுவாகக் காணக்கிடைப்பன. எந்நூலாயினும் அதனைப் பார்வையிட்டு அதன் நிறைகுறை கண்டு, கொள்ள வேண்டுமாயின் கொண்டு, தள்ள வேண்டுமாயின் தள்ளுவதுதான் உண்மை ஆய்வுக்கு வழிவகுக்கும்.

கிறித்தவர் எழுதியுள்ள சிறுகதைத் தொகுப்புகள் பற்றிய கருவி நூல் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறையால் வெளிவர இருக்கின்றது. அதன்கண் 105 கிறித்தவர்கள் படைத்த ஐந்நூற்றுக்கு மேற்பட்ட கதைகளின் மதிப்பீடுகள் இடம் பெற்றுள்ளன. கிறித்தவ இதழ்கள் பற்றிய கருவி நூலும் முடியும் நிலையில் உள்ளது. கிறித்தவருடைய நாட்டுப்புறவியல் ஈடுபாடு, கலைபண்பாட்டுக் கூறுகள் ஆகியவை பற்றிய இரு கருவி நூல் களைக் கொணர முயற்சி மேற்கொள்ளப்படும். பின்னர்

சிறித்தவத் தமிழ்க் களஞ்சியம் ஒன்றும் வெளியிடத்திட்டமிடப் பட்டுள்ளது. இவை வெளிவரின் சிறித்தவத் தமிழ் இலக்கியப் பரப்புக்கான சான்றாதாரக் கருவி நூல்கள் பற்றிய குறை தீரும்.

இசைத்தமிழ் என்னும் பகுப்பில் சிறித்தவருடைய வழி பாட்டிற்குரிய பாடல்கள், கீர்த்தனைகள், அம்மானை, சிந்து, தாலாட்டு, புலம்பல் ஆகிய வடிவங்கள் இடம் பெறும். ஆபிரகாம் பண்டிதரின் கருணாமிருத சாகரம் இசைத்தமிழ் வரலாற்றில் தனியிடம் பெறத்தக்கது. வேதநாயகம் பிள்ளையின் கீர்த்தனை கள், வேதநாயக சாஸ்திரியாரின் சாஸ்திரக்கும்மி, அந்தோணி முத்துப்பிள்ளையின் இரட்சணிய சிந்து போன்றவை ஆய்வுக் குள்ளானவையாகும். பிறவற்றை ஆய்வுகட்கு மேற்கொள்ளலாம். இவ்வடிவங்களில் வெளிவந்தவை பற்றிய விவரங்கள் கவிதைச் செல்வம் என்னும் நூலில் காணக்கிடக்கின்றன.

செய்யுள், கீர்த்தனை, உரைநடை ஆகிய வடிவங்களில் நாடகத்தமிழ் வெளிப்படும். கீர்த்தனை வடிவ நாடகத்தில் சிறித்தவர் படைத்தவையாக ஆறு நாடகங்கள் காணப்படுகின்றன. சிறித்தவருடைய நாடகங்கள் பற்றிப் பொதுவாக டாக்டர் பட்ட ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது. கீர்த்தனை நாடகங்களுள் தேம்பாவணிக் கீர்த்தனை மட்டுமே ஆயப்பட்டுள்ளது. பிற கீர்த்தனை நாடகங்கள் தனித்தனியே ஆய்வதற்குரியன.

சிறித்தவ அறிஞர் சிலர் தங்கள் ஆய்வுகளில் சில புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளனர். பேராயர் அருளப்பாவின் திருக்குறள் உரையும், தெய்வநாயகத்தின் விவிலியம், திருக்குறள், சைவசித்தாந்த ஒப்பாய்வும் அவற்றுள் குறிப்பிடத்தக்கன. தமிழகப் பல்கலைக்கழகங்களில் உள்ள திருக்குறள், சைவசித்தாந்த ஆய்வுத்துறைகள் அந்நூல்களின் வன்மை, மென்மைகளை ஆய்ந்து வெளிப்படுத்துவது அவர்கட்குரிய கடன் மட்டுமன்று; தமிழுக்குச் செய்யும் தொண்டுமாகும். அத்துறைகளேயன்றி அத்துறைகளில் ஆழ்ந்த புலமைமிக்கார் ஆய முன்வரினும் வரவேற்கத்தக்கதே.

பாரதிதாசன்

அரங்க. இராமலிங்கம்

இன்றுவரை நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட நூல்கள் புரட்சிக் கவிஞரின் படைப்புகள்பற்றி வெளிவந்துள்ளன. கவிஞரின் படைப்புகள் காலநிரல்படிப் பதிப்பிக்கப் பெறாமையின் கருத்துக்குழப்பம் நிகழ்கிறது. இனி, கவிஞரைப் பற்றி கட்டுரையோ நூலோ எழுத விரும்புவோர் களப்பணி மூலம் சான்றுகளைத் திரட்டிக் கவிஞரின் வாழ்க்கை பற்றியோ அவர்தம் படைப்பு பற்றியோ புதிய உண்மைகளை உரைத்தல் வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வாலாற்றில் தமக் கென்றதோர் தனியிடத்தைத் தம் தகுதியால் தக்கவைத்துக் கொண்ட பெருமை புரட்சிக் கவிஞருக்கு உண்டு. தம்மை அடியொற்றி மிகப்பல கவிஞர்கள் தோன்றுகின்ற அளவிற்கு ஒரு கவிதைப்பரம்பரையைத் தோற்றுவித்த சிறப்புக்குரியவர். பாட்டுக்கு வேந்தராகப் பலர் இருக்கலாம்; ஆனால் புரட்சிக்கு வித்திட்ட படைப்புக்குச் சொந்தக்காரராக இவர் பொலிவதால் இவரைப் புரட்சிக் கவிஞர் என்றே புகலுதல் பொருத்தமுடையதாகும்.

புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு நிறைவினையொட்டிக் கடந்த இரண்டாண்டுகளில் மிகுதியான ஆய்வுகள் கவிஞர் பற்றியும் கவிஞரின் படைப்புகள் பற்றியும் நிகழ்ந்துள்ளன. இன்றுவரை நூற்றைம்பதிற்கும்[1] மேற்பட்ட நூல்கள் புரட்சிக் கவிஞரின் படைப்புகள் பற்றி வெளிவந்துள்ளன. புரட்சிக் கவிஞர் பற்றி எழுதப்பெற்ற கட்டுரைகள் பல நூல் வடிவம் பெற்றுள்ளன. எம்.ஃபில்., பிஎச். டி., பட்டங்களுக்காக எழுதப்பெற்ற ஆய்வுரை களும் நூல்களாக வெளிவந்துள்ளன. எனவே பாவேந்தர் பற்றியும் அவர்தம் படைப்புகள் பற்றியும் நூல்வடிவில் வெளி

---

1. இராமலிங்கம், அரங்க, பாரதிதாசன் படைப்புகளில் நகைச்சுவை, (இரண்டாம் பதிப்பு. 1991) பக். 147-158

வந்துள்ளவற்றை மட்டும் சான்றாதாரமாகக் கொண்டு இக் கட்டுரையின் கருத்துரை அமைகிறது.

ஆய்வுச் சிக்கல்கள்

புரட்சிக் கவிஞரின் பாடல்களை ஆய்வு செய்வோர் கீழ்க்கண்ட சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

1. கவிஞரின் படைப்புகள் காலநிரல்படிப் பதிப்பிக்கப் பெறாமையின் கருத்துக் குழப்பம் நிகழ்கிறது.

   (முல்லைக்காடு என்னும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள பல பாடல்கள் கவிஞர் தொடக்க காலத்தில் எழுதியவை ஆகும். 1948ஆம் ஆண்டில்தான் முல்லைக்காடு முதல் பதிப்பாக வெளியிடப்பெற்றது. அதற்கு முன்பே கவிஞரின் படைப்புகளில் செம்பாதிக்குமேல் நூல்வடிவம் பெற்றுவிட்டன.)

2. கவிஞரின் குறிப்பிட்ட சில பாடல்கள், பாரதிதாசன் பன்மணித்திரள், பாரதிதாசன் கவிதைகள் நான்காம் தொகுதி, முல்லைக்காடு, புகழ் மலர்கள், நாள்மலர்கள் ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளன.

3. பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள பல படைப்புகள் தனி நூலாகவும் வெளியிடப் பெற்றுள்ளன.

4. பாரதிதாசன் கதைகள் என்னும் நூல் ஞாயிறு பதிப்பகத்தாரால் 1955 ஆம் ஆண்டும் முத்துமணிப் பதிப்பகத்தாரால் 1961ஆம் ஆண்டும் வெளியிடப்பெற்றது. பின்னர் இக்கதைகளைக் கழித்தும் கூட்டியும் 1980ஆம் ஆண்டுப் பூம்புகார் பிரசுரம் 'ஏழைகள் சிரிக்கிறார்கள்' என்னும் பெயரில் நூலாக வெளியிட்டது. பாரதிதாசன் கதைகளில் இடம் பெற்றிருந்த சில துணுக்குகளோடு மேலும் பலவற்றைச் சேர்த்துச் 'சிரிக்கும் சிந்தனைகள்' என்னும் பெயரில் 1981ஆம் ஆண்டுப் பூம்புகார் பிரசுரம் வெளியிட்டது. பாரதிதாசன் கதைகள் என்ற ஒரு நூல் ஏழைகள் சிரிக்கிறார்கள், சிரிக்கும் சிந்தனைகள் என இரண்டு நூலாகப் பதிப்பிக்கப் பெற்று விட்டது.

5. தொடக்க காலத்தில் கவிஞரைப் பற்றித் தமிழ் அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் நூலாக/மலராக வெளிவந்தன. பின்னர் அக்கட்டுரைகள், பல்வேறு பதிப்பகங்கள் கவிஞரைப் பற்றி வெளியிட்ட நூல்களில் இடம் பெற்றன.

6. முல்லைப் பதிப்பகம் (சென்னை), பாரதிதாசன் பதிப்பகம் (புதுவை), செந்தமிழ் நிலையம் (இராமச்சந்திரபுரம்), பூம்புகார் பிரசுரம் (சென்னை) ஆகிய பதிப்பகங்கள் கவிஞரின் நூலை வெளியிட்ட பதிப்பகங்களில் குறிப்பிடத் தக்கவைகளாகும். பதிப்பக உரிமையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகப் பல பாடல்கள் பல நூல்களில் மேற்குறிப்பிட்ட பதிப்பகங்களின் பதிப்புகளில் இடம் பெற்றன.

இதுவரை சுட்டிக்காட்டப்பெற்றவை ஆய்வாளருக்குத் தடையாக இருப்பவை- காலநிரல்படிக் கவிஞரின் படைப்புகள் பதிப்பிக்கப்பெறுமாயின் இத்தடைகள் நீங்கிவிடும். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பாரதியாரின் பாடல்களை மா. ரா. போ. குருசாமி அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பித்திருப்பதைப் போன்று பாவேந்தரின் பாடல்களையும், படைப்புகளையும் பதிப்பிக்கும் முயற்சி நிகழும்போது இத்தகைய தடைகள் நீங்கிவிடும்.

இதுவரை நிகழ்ந்தவை

நூல் வடிவில் (150) வெளிவந்துள்ளவற்றுள் பெரும்பாலானவை ஆர்வத்தின் காரணமாகவும், கவிஞரின் பாடல்களைப் பாராட்டும் முறையிலும் எழுதப்பெற்றவை. பாரதிதாசன் பாடல்களில் இயற்கை[2], பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்[3], பாரதிதாசன் கதைப்பாடல்கள்[4], பாவேந்தரின் இதழ்ப்பணி[5], பாரதிதாசன் நாடகத்திறன்[6], தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன்[7], பாரதிதாசன் நாடகங்கள்—ஓர் ஆய்வு[8], இந்திய விடுதலை

---

2. டாக்டர் நசீம்தீன், பி. பாரதிதாசன் பாடல்களில் இயற்கை, (மதுரை, 1973).
3. செல்வராசன். மா., பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவிஞர், (சென்னை, 1979).
4. இளங்கோ, ச.சு.. பாரதிதாசன் கதைப்பாடல்கள்' (சென்னை, 1978).
5. அண்ணாத்துரை, மா., பாவேந்தரின் இதழ்ப்பணி (சென்னை, 1990).
6. எழிலரசு, கூ.வ., பாரதிதாசன் நாடகத்திறன். (சென்னை, 1983),
7. வீராசாமி, தா, வே,, தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன், (சென்னை, 1981).
8. இளங்கோ ச.சு., பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு. (சென்னை. 1990).

இயக்கத்தில் பாரதிதாசன்[9], பாரதிதாசன் படைப்புத் திறன்[10], என ஏதேனும் ஒரு இலக்கை மையமாக வைத்து எழுதப்பெற்ற நூல்கள் மட்டுமே குறிப்பிட்ட பொருளை முழுமையாக ஆய்ந்து கருத்துகளை நல்குகின்றன. பெரும்பாலான நூல்கள் பல்வேறு காலக் கட்டங்களில் / சூழல்களில் எழுதப்பெற்ற கட்டுரைகளின் தொகுப்பாக அமைந்துள்ளன.

முல்லை முத்தையா[11], மன்னர் மன்னன்[12], முருகு சுந்தரம்[13] கோவேந்தன்[14], ச.சு. இளங்கோ[15], கோ. கிருஷ்ணமூர்த்தி[16] ஆகியோர் எழுதிய நூல்கள் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்ளத் துணை செய்கின்றன.

பாரதிதாசன், வால்ட்விட்மன் - இருபெரும் புரட்சிக்கவிஞர்கள்[17], பாரதியும் பாரதிதாசனும்[18], பாரதிதாசன் பார்வையில் பாரதி, பாரதிதாசனும் ஷெல்லியும்[19], பாரதிதாசன்[20] போன்ற நூல்கள் ஒப்பாய்வு அடிப்படையில் எழுதப்பெற்றவை.

9. இளவரசு இரா. இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசன், (திருச்சி, 1990)
10. இராமநாதன் ந. பாரதிதாசன் படைப்புத்திறன், (சென்னை, 1989).
11. முத்தையா, முல்லை., புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வாழ்க்கையில் ருசிகரமான நிகழ்ச்சிகள், (சென்னை, 1942)
12. மன்னர்மன்னன், கறுப்புக்குயிலின் நெருப்புக்குரல், (விழுப்புரம், 1985)
13. சுந்தரம், முருகு., பாவேந்தர் நினைவுகள் (1979)
14. கோவேந்தன், என் நினைவுகளில் பாவேந்தர் (1983), பாவேந்தம (1985)
15. இளங்கோ. ச. சு., பாரதிதாசன் பார்வையில் பாரதி, (சிவகங்கை, 1982)
16. கிருட்டிணமூர்த்தி, கோ. பாரதிதாசன் வாழ்க்கை வரலாறு, (சென்னை, 1991)
17. பரமேஸ்வரன்,பா , பாரதிதாசன் வால்ட்விட்மன் இரு பெரும் புரட்சிக் கவிஞர்கள், (ஓர் ஒப்பிலக்கிய ஆய்வு), (சென்னை, 1987)
18. கலகசபாபதி, பாரதியும் பாரதிதாசனும்,
19. சுவாமிநாதன், பாரதிதாசனும் ஷெல்லியும், 1972.
20. கடிகாசலம்,ந.. (பதி) பாரதிதாசன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991.

ஒப்பாய்வு நிலையில் நிகழ்ந்துள்ள ஆய்வுகள் மிகக் குறைவு எனலாம்.

எம்.ஃபில், பிஎச் டி., உயர்நிலை ஆய்வு ஆகிய பட்டப்பேற்றிற் காகச் செய்யப்பெற்ற ஆய்வுகள் ஆய்வுப் போக்கில் செய்திகளைத் திரட்டித் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இனிச் செய்ய வேண்டியது

கவிஞரைப் பற்றிக் கட்டுரையோ, நூலோ எழுத விரும்புவோர் களப்பணி மூலம் சான்றாதாரங்களைத் திரட்டிக் கவிஞரின் வாழ்க்கை பற்றியோ, அவர்தம் படைப்பு பற்றியோ புதிய உண்மை களை உரைத்தல் வேண்டும். தேய்ந்துபோன ஒலித்தட்டைப் போல அனைவருக்கும் தெரிந்த பாடல்வரிகளை எழுதி அதற்கு விளக்கம் தந்து நூலெழுதும் போக்கு மாறவேண்டும்.

புரட்சிக்கவிஞரின் படைப்புகள் பற்றிப் பின்வரும் தலைப்பு களில் ஆய்வு மேற்கொள்வதற்கு இடமிருக்கிறது.

1. கவிஞரின் படைப்புகள் காலநிரல் வரிசையில் பதிப்பிக்கப் பெற, ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
2. பாவேந்தரின் வாழ்க்கை வரலாறு முழுமையாகக் கால நிரல் படி ஒளிவு மறைவின்றி எழுதப்படல் வேண்டும்.
3. கவிஞரின் கடவுள் கொள்கை
4. கவிஞரும் இந்திய விடுதலையும்
5. பாரதிதாசனாரின் நடை (கவிதை, உரைநடை)
6. பாவேந்தரின் உத்தி (உணர்த்தும் திறம்)
7. பாவேந்தரின் உரைநடை இலக்கியங்கள்
8. பாரதிதாசனாரின் சிறுகதைகள்
9. பாரதிதாசனாரின் கட்டுரைகள்
10. பாவேந்தரின் இலக்கியக் கொள்கை
11. பாரதிதாசனார் போற்றிய இலக்கிய மரபுகள்
12. புரட்சிக்கவிஞரின் பெண்மை
13. பாவேந்தரின் உவமை நலம்
14. கவிஞரின் சிறுவர் இலக்கியம்
15. கவிஞரைப் பற்றிய ஒப்பியல் பார்வைகள்
16. பாவேந்தர் பாடல்களில் நாட்டுப்புறக் கூறுகள்
17. பாவேந்தரின் இசைப்பாடல்கள்
18. பாவேந்தர் படைப்புகளில் இயற்கை
19. புரட்சிக் கவிஞரின் செந்தமிழ் வளர்க்கும் சிந்தனைகள்
20. பாவேந்தரின் பொதுவுடைமைக் கருத்துகள்
21. புரட்சிக் கவிஞரின் பகுத்தறிவுக் கருத்துகள்

சிறுகதை

இராம. குருநாதன்

எழுபதுகளுக்குப் பிறகு சிறுகதை ஆய்வுகள் ஓரளவு வளர்ந்துள்ளன, மாற்றுப் பார்வையிலும், புதிய தடயங்களை உணர்த்தும் போக்கிலும் காணப்படும் ஆய்வேடுகள் மிகமிகக் குறைவே. புதியவகை அணுகு முறையில் சிறுகதை ஆய்வுப்பொருளைத் தெளிவு செய்ய முயல வேண்டும். சிறுகதைகளில் மேல்நாட்டுத் தாக்கம் பற்றித் தமிழில் ஆய்வு இதுகாறும் வரவில்லை.

சிறுகதை அழகான கலைவடிவம்; உணர்வின் மெல்லிய இழை; ஒரு நேர்த்தியான நெசவு; ஏனைய இலக்கியக் கலைவடிவங்களை விட நுட்பமானது; ஒவ்வொரு நல்ல சிறுகதையும் கவித்துவம் நிறைந்தது என்பர். அவ்வுணர்வை ஏற்படுத்தும் எழுத்தை எழுதுவதும் கடினம்தான்! 'எழுத்து தேகாப்பியாசம் அல்ல; எழுத்து; வயலில் பாடுபடுகிற மாதிரி' எனச் சிறுகதைக்குரிய இயல்பினை வண்ணதாசன் குறிப்பிடுவது ஏற்புடையதே. சிறுகதை பற்றிய ஆய்வுக்குக் கூட அத்தொடர் பொருந்தும்.

தமிழில் சிறுகதை ஆய்வுகள், புதினங்களை நோக்கக் குறைவே. புதினச் செல்வாக்கும், அதன் பரப்பும் களனும் புதின ஆய்வுப் பெருக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம். ஆயின், அண்மைக் காலங்களில் எழுபதுகளுக்குப் பிறகு, சிறுகதை ஆய்வுகள் ஓரளவு வளர்ந்துள்ளன.

புதுமைப்பித்தனையும், கு. பா. ராவையுமே நெஞ்சிலும் நினைவிலும் போற்றி அவர்கள் இட்டுச் சென்ற தடத்தைப் பின் பற்றி உலா வருகிறார்கள் இன்றைய சிறுகதை ஆசிரியர்கள்.

இன்றைய சிறுகதைகள் தேசிய எல்லை கடந்து, உலகளாவிய பெருமையுடையதாய்த் திறனாய்வாளர் பார்வையில் தோன்றி யுள்ளது. தமிழில் இருஷ்ணன் நம்பி எழுதிய 'மருமகளின் ஓட்டு'

என்னும் சிறுகதை இந்திய அளவில் மிகச் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை தினமணியில் கார்லோஸ் எழுதிய கட்டுரையிலிருந்து அறிகிறோம் (தினமணி 10-05-89). மகாகவி பாரதியின் மறைவுக்குப்பின்னர், கடந்த எழுபது ஆண்டுகளில் தமிழ்ச் சிறுகதையின் தரமும் வளமும் உலக மதிப்பினை எட்டி விட்டன என்று ஆனந்தவிகடனில் (30-12-90) ஒரு சிறு கட்டுரை எழுதியிருந்தார். இக்கருத்துகளை எண்ணிப் பெருமைப்படும் சமயத்தில் தமிழ்ச் சிறுகதைகளின் ஆய்வேடுகளின் தரம் பற்றியும் எண்ணவேண்டியுள்ளது.

ஆய்வேடுகள் அனைத்தையும் பார்க்க இயலாது போயினும், கிடைத்தவற்றைக் கொண்டு ஆராய்கின்ற பொழுது அவற்றின் போக்கினைக் கண்டு கொள்ளலாம்.

தனிமனிதரின் படைப்புகள், குறிப்பிட்ட காலக்கட்டம், குறிப் பிட்ட இயக்கம் அல்லது அமைப்பு முதலிய வகைகளில் ஆய்வேடுகள் வந்துள்ளனவே தவிர, மாற்றுப் பார்வையிலும், புதிய தடயங்களை உணர்த்தும் போக்கிலும் காணப்படும் ஆய்வேடுகள் மிகமிகக் குறைவே.

''ஒரு குறிப்பிட்ட கால எல்லையில் குறிப்பிட்ட ஒரு சிறுகதை ஆசிரியரின் சிறுகதைசளை ஆய்வது ஒரு வகை. பலதரப்பட்ட, பல இடங்களில் தோன்றிய பல்வேறு இயல்புகளுடன் கூடிய படைப் பாளர்கள், பல்வேறு இதழ்கள் மூலம் புலப்படுத்தும் சிறுகதைகளை' ஒட்டுமொத்தமாக ஆயும் நோக்கில் அமைவது மற்றொரு வகை' எனச் சிறுகதை ஆய்வு நிலைகளில் அமையும் இருவகைகளை இலச்சியச் சிந்தனைப் பரிசுக் கதைகள் என்ற பொருளில் டாக்டர் பட்டத்திற்கான ஆய்வேட்டை அளித்த கனகராஜ் என்பவர் குறிப் பிடுவர் (ப.7). இந்த இருநிலைகளுக்கும் அப்பாற்பட்டுப் பலவிதப் புதிய பார்வைகளும் அணுகுமுறைகளும் ஆய்வுக எதிர்பார்ப்பாக விளங்குகின்றன.

தமிழ்ச் சிறுகதைகளில் ஆய்வேடுகளை அளித்த முன்னோடிகள் மா. இராமலிங்கம், முருகரத்தனம், மீனாட்சி முருகரத்தனம் முதலியோராவர். மா. இராமலிங்கம், விடுதலைக்கு முன் உள்ள சிறுகதைகளை ஆய்ந்தார். புதுமைப்பித்தன் கதைகளை முருக ரத்தனமும், கல்கியின் சிறுகதைகளை மீனாட்சி முருகரத்தனமும் ஆய்ந்தனர். எழுபதுகளின் இறுதியில் அகிலன் சிறுகதைகள் குறித்து சு. வேங்கடராமனும், கு.பா.ரா சிறுகதைகள் பற்றி

இரா. மோகனும் ஆய்வு செய்தனர். எண்பதுகளில் மேலும் சிறு கதை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன; ஆய்வுப் பணிகளும் தொடர்கின்றன.

எண்பதுகளில் எம்.ஃபில், பிளச்.டி. ஆகியவற்றிற்காகத் தமிழ கத்துப் பல்கலைக் கழகங்களிலும், கேரளப் பல்கலைக் கழகத்திலும் சிறுகதை ஆய்வினை மேற்கொண்டோர் கிட்டத்தட்ட ஐம்பது ஆய்வாளர்கள் ஆவர். புதின ஆய்வாளர்களை நோக்க ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு இருக்கலாம். இவர்களில் ஆய்வு செய்து முடித் தோரும், செய்து கொண்டிருப்போரும் அடங்குவர். இவற்றுள் சில ஆய்வேடுகளே நூல்வடிவம் பெற்றுள்ளன. ஆய்வேடுகளைக் கடந்து தமிழ்ச்சிறுகதைகள் குறித்த நூலாராய்ச்சிகள் மிகக் குறை வாகவே வெளிவந்துள்ளன. கடந்த ஐந்தாண்டுகளில் வெளிவந்த ஒரு சில நூல்களுள் சிறப்பான நூல்களாக எவற்றையும் கருத இயலவில்லை. குறிப்பிடத்தக்க நூல்களாகச் சிட்டி, சிவபாத சுந்தரம் இணைந்து எழுதிய தமிழ்ச்சிறுகதையின் வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலையும், சி.சு. செல்லப்பாவின் 'மணிக் கொடி சிறுகதை முன்னோடிகள்' என்ற நூலையும் கருதலாம்.

ஆய்வேடுகள் பெரும்பாலும் ஒருவழிப் பாதையிலே செல்வன வாய் உள்ளன. முன்னோர் செய்த பொருளைப் பொன்னேபோல் போற்றிக் காக்கும் மரபு ஆய்வுலகிலும் புகுந்துவிட்டது. முன்னவர் ஒரு பொருள் பற்றி ஆய்ந்திருக்க, பின்னவர் மூன் ஆய்வேட்டின் பதிவுகளைத் தன் ஆய்வேட்டில் உள்ளடக்கம் செய்து கொள்வது இன்றைய ஆய்வுலகில் மிக இயல்பாகிவிட்டது.

கதைக்கரு, கதைப்பின்னல், கதைமாந்தர் பண்புநலன், உத்தி முதலிய பழைய உள்ளடக்கங்களையே வலம் வந்து கொண் டிருக்கும் போக்கினைப் புனைகதைத் திறனாய்வுகளில் காண முடிகிறது. அதேபோல் முன்னர் உள்ள ஆய்வேடுகளில் குறிக்கப் பட்டுள்ள அடிக்குறிப்பு நூல்களையே பின்னர் வரும் ஆய்வாளர் பலரும் எடுத்தாளுவதைக் காண்கிறோம். சிறுகதை ஆய்வு எனில், எட்கர் ஆலன்போ, நதானியேல், ஹாவ்த்ரோன், பிராண்டர் மாத்யூஸ். கெம்ப்ட்டன், லாரென்ஸ் பெரின். பிரிச்ராப்ட் சீயேன் பெலோய்ன், பேட்ஸ், ப்ராங் ஓ கான்னர் முதலியோரின் நூல்களையே பலரும் திருப்பித் திருப்பி எடுத்தாண்டு வருகின்றனர். இவற்றிலிருந்து நிறைய மேற்கோள் காட்டிவிட்டோம் என்று மன நிறைவு பெற்றுவிடுவதில் பெருமைப் பட என்ன உள்ளது? புதிய

சிந்தனை, புதிய நூல்களின் வருகை, இவற்றைச் சிறிதும் எண்ணாது உழுத சால் உழுது ஆய்வுப்பட்டம் பெற்றுவிடும் போக்கு வளர்வதும், அதனை வளர்ச்சி பெற வைப்பதும் நிகழ் கால ஆய்வுலகில் இயல்பாகிவிட்டது.

தமிழ்ச்சிறுகதை ஆய்வினை முனைவர் பட்டத்திற்காக முனைந்து எழுதுவது ஒருபுறமிருக்க, படைப்பாளர் பார்வையிலும், நூல் திறனாய்வோர் பார்வையிலும் அவ் வாய்வு வேறுபடுகின்ற நிலையை எண்ணாமலிருக்க இயலவில்லை. ஆய்வு என்பது முடிந்த முடிபன்று அது வளர்ச்சி உடையது. சுந்தர ராமசாமி 'வீடு' என்ற பல்சுவைத் தொகுப்பு நூலில் 'விமரிசனம்' என்ற கட்டுரை எழுதி யுள்ளது இங்கே நினைவுகூரத்தக்கது. 'கல்வி நிலையங்களுக்கு எதிரான தன் மனநிலை' எனக் குறிப்பிட்டுக் கொள்ளும் அவர், கீழ்க்கண்டவாறு திறனாய்வுப் பார்வை செலுத்துகிறார்,

1. ஒரு படைப்பை வாழ்க்கை அனுபவத்தின் முழுமையை நோக்கி நகர்த்தவே ஒரு விமர்சனம் பிரயத்தனப்பட வேண்டும்.

2. ஒரு விமர்சகன் தன்னுடைய வாழ்க்கை அனுபவத்தைப் பிரதானப்படுத்தியே ஒரு படைப்பை மதிப்பிடப் பிரயாசை எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. தன் அனுபவத்தைப் புரிந்துகொள்ளவும் அதன் வரையறை யைத் தெரிந்து கொள்ளவும் வேறு பரிமாணங்களை உணரவும் அவன் அறிவுலகின் முழு வீச்சையும் துணையாக ஏற்றுக் கொள்ளும் மனந்திறந்த பார்வை கொண்டவனாக இருக்க வேண்டும். இந்நிலையிலும் அவன் படைப்பை அனுபவத்தோடு தொடர்புபடுத்துபவனாக இருக்கிறானே அன்றி, படைப்பை அறிவோடு தொடர்புபடுத்துபவனாக இல்லை.

4. எந்த மகோன்னத படைப்பும் வாழ்வின் ஒரு பகுதியாகவே இருக்கிறது. எனினும் முழுவாழ்வின் சாராம்சத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்மைதான் அந்தப் படைப் பின் உன்னதமாகும். இந்த உன்னதம் முழு வாழ்வையும் ஸ்பரிசிக்க மேற்கொள்ளும் பாய்ச்சலை விமர்சனம் கண்டு சொல்ல வேண்டும். இந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதே விமர்சனத்தின் தர்மமாகும்.

5. இதுபோன்ற சீரிய நோக்கங்களுக்கு ஒரு படைப்பு இடம் தரவில்லை என்றால், அது தன் எழுத்துருவத்தைத் தாண்டி

வரத் திராணியற்றது என்றால் அது படைப்பு அல்ல. பிண்டம் தான். படைப்புக்குரிய சலனம் அதனிடம் இல்லை.

சுந்தர ராமசாமி இங்கு என்ன சொல்கிறார் என்பதில் குழப்பம் தான் மிஞ்சும், ஆனால் அவருடைய கண்ணோட்டம்; கல்வி நிலையங்களில் செய்யப்படும் ஆய்வேடுகளின் தரத்தை உறுதி செய்தற்குரிய அளவுகோலாக அவருக்குப் பயன்பட்டுள்ளது.

புனைகதைகளில் என்னென்ன உள்ளன என்று பட்டியலிடுவது ஆய்வுப் போக்குக்கு முற்றிலும் எதிரானது; பயனற்றது என்பது சுந்தர ராமசாமியின் வாதம். இதில் உண்மை இல்லாமல் இல்லை. புள்ளிவிபரங்களாக ஆய்வேடு அமைந்துவிடக் கூடாது; ஆய்வாளரும் புள்ளிவிவரத் தகவல் தருபவராகவும் ஆகிவிடக் கூடாது என்பது சில ஆய்வேடுகளால் தெரியவருகின்றன.

புதிய வகை அணுகுமுறையில் சிறுகதை ஆய்வுப்பொருளைத் தெரிவு செய்ய முயல வேண்டும். சில ஆய்வேடுகள் ஓரளவு இந்த அணுகுமுறையில் அமைந்துள்ளன. ரகுநாதன் சிறுகதைகளில் சமுதாய முரண்பாடு, 1960-80 சிறுகதைகளில் அலுவல் மகளிர் பிரச்சினைகள், தமிழ்ச் சிறுகதைகளில் திருமணத்திற்கு முந்திய காதல் உறவுகள், சிறுகதைகளில் சோதனை முயற்சிகள், சிறுகதையின் அமைப்புமுறை, சிறுகதையில் அங்கதம், இலக்கியச் சிந்தனைப் பரிசு கதைகள் முதலிய ஆய்வுத் தலைப்புகள் ஓரளவு புதிய தடயங்களாக ஆய்வுலகில் தென்படுவது பாராட்டத்தக்க முயற்சி.

சிறுகதை பற்றிய ஆய்வுகள் புதிய தடம் நோக்கிச் செல்ல வேண்டும். அவற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வழிகளை இனி ஆராயலாம்.

புதினம், சிறுகதை ஆகிய இரு வடிவங்களையும் படைக்கும் படைப்பாளர்களின் படைப்புகளை ஆராயும்போது, அந்தப் படைப்பாளர் படைத்தளிக்கும் சிறுகதைகளுக்கும், புதினத்திற்கு மிடையே உள்ள நுட்பம் அல்லது நுட்பமின்மை, தனித்திறன் அல்லது திறனின்மை, இவற்றை எடுத்துக் காட்டும்படியான ஆய்வு வரவில்லை. தமிழில் கல்கி, அகிலன், செகசிற்பியன், நா. பார்த்தசாதி. கோவி. மணிசேகரன், ஜெயகாந்தன் முதலிய முன்னோடிகளும், சி. ராஜநாராயணன், அசோகமித்திரன், பாலகுமாரன், சுஜாதா, நாஞ்சில்நாடன், பூமணி, வண்ணநிலவன், சா. கந்தசாமி, விட்டல்ராவ் (நாகராஜன்), ஜெயந்தன், பிரபஞ்சன் முதலியோரும் இருவகை வடிவங்களில் எழுதிவந்தனர்; எழுதிவருகின்றனர்.

இரு கலை வடிவங்களைக் கையாள்வதில் இவர்களின் வெற்றி எதில் அடங்கியுள்ளது என்பதை ஆராய்ந்துரைக்கலாம். அத்தகைய ஆய்வு, சிறுகதை ஆராய்ச்சிப் போக்கில் கதையின் கட்டுமானம், சொல்லும் முறை பற்றிய நுட்பங்களை அறிய உதவும்.

இயக்கம் அல்லது அமைப்பு பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவோர். (மணிக்கொடி, விகடன், கலைமகள் ஆகிய இதழ்களின் காலக்கட்டம் இலக்கியச் சிந்தனை, இலக்கிய வீதி, செம்மலர் இலக்கிய வட்டம் பிற) சான்றாக மணிக்கொடி காலக்கட்டத்தில் அதில் எழுதிவந்த ஒவ்வொரு படைப்பாளரும் அந்த இயக்கத்தின் மற்றவரிலிருந்து முழுவதுமாக வேறுபட்டுக் கதைகள் படைத்ததை நுட்பமாகக் காட்ட இயலும். அதே போல், அதே காலக்கட்டத்தில் கல்கி எவ்வளவு தூரம் மணிக்கொடி எழுத்தாளர்களிடையே மாறு பட்டுள்ளார் என்பதைச் சுட்டலாம். வணிகம், மிகைக்கற்பனை வாதம் முதலிய போக்குகளில் தனக்கென ஒரு மரபையே உருவாக்கிச் சென்றதையும் எடுத்துக் காட்ட வேண்டும். மணிக் கொடி எழுத்தாளர்கள் பற்றிய பார்வை அப்போதுதான் முழுமை யாக நமக்குக் கிட்டும்.

கல்கி, புதுமைப்பித்தன், அகிலன், கு பா.ரா முதலியோர் பற்றிய ஆய்வுரைகள் மீண்டும் பரிசீலனைக்கு உள்ளாவதில் வியப் பில்லை. கலையின் வளர்ச்சியே மீறல்தான். மீறலிலிருந்துதான் புதுப்புது கலை உருவங்களும் பிறக்கின்றன எனக் கூறும் கி. ராஜ நாராயணன் கூற்றை (சுப்ரபாரதிமணியன்-மாறுதடம் ப. 6) ஆய்வுரைகளுக்கும் உளப்படுத்தலாம். ஆய்வு ஒரு தொடர்ச்சி தானே? அதில் மாறலும் மீறலும் குறுக்கிடாதிருக்குமா?

புதுமைப்பித்தன் சிறுகதைகளை ஆய்வு செய்துள்ள முருக ரத்தனத்தின் பார்வை மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது. முருகரத்தனம் தன் சொந்தக் கருத்தையும், உணர்வையும் வெளிப் படுத்தியதால் நடுநிலைமை இல்லாததாகக் குற்றம் சாட்டப் படுவதை எண்ண வேண்டும் (த.சி.வ.வ. பக். 126-127).

கு.பா.ரா சிறுகதைகள் பற்றி ஆயும்பொழுது அவர் பாலியல் சிந்தனையைத் தனித்தன்மையில் வடித்துக் காட்டியுள்ளார் என்பதை விடவும், அதற்கு அப்பாற்பட்டு அவருடைய இலட்சிய வாதம், வாழ்வைப் பற்றிய நிதானம், அதனை மாற்றியமைக்கும் முயற்சி, வேற்றுமைகளைக் களைதல் முதலிய சிந்தனைகளின் வார்ப்பில் ஆய்வு செய்யப்படவேண்டும். இரா. மோகனின் ஆய்வு

இவ்வகையில் குறிப்பிடத்தக்க பரிணாமத்தைக் காட்டியது. இருப்பினும் கு.பா. ராவின் சிறுகதைத்திறனை மாறுபட்ட கோணத்திலும் ஆராய வாய்ப்புண்டல்லவா?

(பாடுபொருளான உள்ளடக்க ஆய்வுகளே படைப்பிலக்கிய ஆய்வுலகில் மிகுதி. சிறுகதையில் அமைந்துள்ள உருவம் அல்லது வடிவம் பற்றிய ஆய்வு இன்னும் செய்யப்படவில்லை.)

வடிவ ஆய்வு சிறுகதையில் இன்றியமையாதது. சிறுகதையில் வடிவ வளர்ச்சி, தேய்மானம், திளைத்தல் முதலியவற்றை வரலாற்று நோக்கிலோ, உத்திமுறை அமைப்பிலோ ஆய்வு செய்யலாம். அதேபோல் (கதைப்பின்னல் பற்றிய முழுத் தனித் திறனாய்வு இதுவரை செய்யப்படவில்லை. சிறுகதையில் கதைப் பின்னல் ஆங்காங்கே பகுதி பகுதியாக ஆராயப்பட்டுள்ளதே தவிர, தனி ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை,) கதைப்பின்னல் சிறுகதையில் நேர்த்தியானதாக (ingenious plotting) அமைவதாகும். படைப்பாளரின் அருமைப்பாடு இதில் துலங்க வல்லது. 'மேனாடுகளில் சென்ற நூற்றாண்டுகளில் சிறுகதைப் பண்புகளின் அதிகம் வற்புறுத்தப்பட்டது கதைப்பின்னலின் நேர்த்தியையே என ரெய்டு (The Short story, Ian Reid. p 3) குறிப்பிடுவதை நோக்க அதன் சிறப்புத் தன்மை விளங்கும்,

சமூக அமைப்பும் அதன் கட்டுக்கோப்பும் காலத்திற்கு ஏற்ப மாறுதலடைந்து வருகின்றன. அவற்றை எதிரொலிக்கும் படைப்புகளிலும் அவ்வாறே. இவற்றின் பின்னணியில் தனிமனிதனின் அகப்புறப் போராட்டச் சித்திரிப்பு அகமன உணர்வுகள் இவற்றை வெளிப்படுத்தும் ஆய்வுகள் தனித்தனியே வெளிவரவேண்டும். அதேபோல், அன்பின் நேயம் மனித உணர்வுகளில் இழையாகப் பின்னிவந்துள்ள முறை சிறுகதைகளில் ஒரு பரிணாம வளர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளது. இப்போக்கை வரலாற்று முறையிலும், சமூகப் படிநிலை வளர்ச்சியாக அணுகுமுறையிலும் ஆய்தற்கு இடமுண்டு.

பெண்மனத்தைத் துல்லியமான மெல்லிழைகளில் படைத்தளிக்கும் ஆண்படைப்பாளர்களையும், ஆண் மனத்தை அளந்து கணித்தறியும் பெண்படைப்பாளர்களையும் சிறுகதைகளில் உளவியல் வழி எடுத்துக்காட்டுவதும் கூட ஒரு புதிய முயற்சியாகும்.

சிறுகதையில் தொனி மிகவும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தத்துவார்த்தக் கருத்துகள் பூடமாகத் தெரிவிக்கப்பட்ட காலம்

இருந்தது. எளிமையான நடையில் நடப்பியல் நிகழ்ச்சிகளை அப்படியே காட்டும் போக்கும், தந்துவங்களைவிட்டு வாழ்வின் இயல்புகளை உண்மையின் நிகழ்ச்சிகளாக வடிக்கும் போக்கும் அண்மைக்காலச் சிறுகதைகளில் அதிகம் இடம்பெற்றுள்ளன.

தொடக்க காலச் சிறுகதைகளில் கனமான செய்திகள் பரிமாறப்பட்டதற்கும், காலப்போக்கில் எளிய முறையில் இவை சொல்லப்பட்டதற்கும் ஒரு பரிணாமம் உண்டு. இதனை ஆய்வாகக் காட்ட இயலும்.

பேச்சுத்தமிழ், சிறுகதை ஆய்வில் முழு ஆய்வாக இடம் பெற்ற தில்லை. மொழிநடையை ஓர் உத்தியாகப் பயன்படுத்தும் போக்கு சிறுகதையில் உண்டு. நிகழ்காலச் சிறுகதைகளில் எளிமையும், தொடரமைப்பும், நிறுத்தற்குறிகளும் கூட உணர்வோட்டத் திற்குத் தகுந்தவாறு மாறியுள்ளன. இது ஒரு புறம். மொழிநடையில், உணர்ச்சிக்கு மாறுபட்டதாக விளங்கி வாசகனுக்கு விளங்காத வகையில் உத்திகளைப் பயன்படுத்துவதும் உண்டு. இது மற்றொருபுறம். படைக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல், சில புதிய சாதனைகள் புரிவதும், சிரமப்பட்டு அறிவு பூர்வமாகச் சில செய்திகளை அலசி அறிந்து அவற்றை இலக்கியச் சாதனைகளாக மாற்றுவது. இதில் முதல்வழியைப் பின்பற்றுகிற வர்களை முதல்வழியைப் பின்பற்றுகிற சக்தியுள்ளவர்களாகக் கருத வேண்டும்.'' எனக் க.நா.சு கருத்துத் தெரிவிப்பது (சா. கந்த சாமி எழுதிய கிழக்கு பார்த்த வீடு-முன்னுரை ப. VII) அறிவு ஜீவிகளுக்காக எழுதப்படும் கதைகளையும், மொழிநடையையும் உள்ளிட்டதாகும்.

இதற்கு மாறான போக்கில், சு. சமுத்திரம் ஒருமுறை குறிப் பிட்டது நினைவிற்கு வருகிறது. ''ஒரு பத்தாவது பையனுக்கோ, கிராமத்தில் எங்கோ ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு வாசிக்கும் பெண்ணுக்கோ புரியும்படியாக எழுதுவது தான் எழுத்து; மற்ற தெல்லாம் பம்மாத்து. அந்தப் பம்மாத்து வேலைகளை நான் செய்யத் தயாராக இல்லை'' எனக்குறிப்பிடுவதிலிருந்து எளிமை, படித்தால் புரிந்து கொள்ளக் கூடிய இயல்பு இவற்றை வெளிப்படுவ தாகச் சிறுகதையின் தன்மையும், மொழிநடையும், உத்தியும் அமைய வேண்டும் என்பதையே காட்டுகின்றன.

'ரீது புதிது' என வ.வே.சு. ஐயர் குறிப்பிட்டது வடிவ உணர்வையே என்பர் சிவபாத சுந்தரம் (இலக். இந். 1987

முன்னுரை) இந்த வடிவம் படைப்பாளரிடையே வேறுபடுவதுண்டு. சுப்ரபாரதிமணியன் சிறுகதையான 'ஒவ்வொரு ராஜாதமாரிக் குள்ளும்' பலவித பார்வைக்கு ஆளாவதை இங்கே சுட்டிக் காட்டலாம். இதில் வடிவம் இல்லை எனச் சுஜாதா கூறியுள்ளார். கதை கூறுவதில் புதிய உத்தி திறமையாகக் கையாளப்பட்டுள்ளதாக இக்கதையைக் கருதுகிறார் ஜெயமோகன். இக்கதையில் வடிவம் நுட்பமாக உள்ளதையும், சுஜாதா பார்வையிலிருந்து தான், மாறுபடுவதாகவும் எடுத்துரைக்கிறார் சு. வேங்கடராமன்.

பார்வைகள் மாறுபட்டிருப்பினும் கூட கூர்மையான ஆய்வு நடுநிலை இகவாமல் பார்த்துக் கொள்வது ஆய்வாளரின் கடமை.

சிறுகதைப் பங்களிப்பில் இதழ்களின் பணி குறிக்கத்தக்கது இதுவும் இரு நிலைகளை உடையது. செல்வாக்கு உடையதாக விளங்கும் மக்கள் பத்திரிகைகளில் வெளிவரும் சிறுகதைகள் சிற்றேடுகளில் வெளிவருபவை என இரு போக்குகள் உள்ளன திறனாய்வாளர் நோக்கில் சிற்றேடுகளில் வெளிவரும் கதைகள் பாராட்டுக்குரியனவாக உள்ளன. இலக்கியச் சிந்தனைப் பரிசுக் கதைகளில் கணையாழியில் வெளிவந்த கதைகள் பாராட்டுப் பெறும் இதழ்களில் முன்னணியில் உள்ளது. இதற்கு அடுத்த படியாக, தாமரை, செம்மலர் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கின்றன 'குறைந்த விநியோகமுள்ள கணையாழி போன்ற மாத இதழ்களை விமர்சகர் பெரிதும் பாராட்டுவதைத் தி.க. சிவசங்கரன் குறிப்பிட்டுள்ளார் (த சி.வ வ.ப. 293), ''தமிழின் சிறந்த எழுத்தாளர்கள் என்று பிற மொழிகளில் அறியப்படுகிறவர்களில் பலர் பெருவாரித் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் கூட எழுதியிருக்காதவர்களே'' எனக் கார்லோஸ் (தினமணி 10-05-89) கருத்துத் தெரிவித்திருப்பதும் எண்ணத்தக்கது.

உத்திமுறையிலான சோதனை முயற்சிக்கு உள்ளாகும் கதைகளை, மக்களை வெகுவாகக் கவர்ந்திருக்கும் இதழ்கள் வெளியிட முடியாதுதான். எப்போதாவது எதிர்பாராதவாறு வந்து விடுவதும் வியப்பே! வாசகர்களுக்கு எதைத் தர வேண்டும் என்று தீர்மானிக்கிற போக்கு அத்தகைய மக்கள் பத்திரிகைக்கு இருப்பதால் தரமிக்கவற்றை வெளியிடத் தயங்குகிறது. இதனையறிந்து ஆய்வினைத் தர வேண்டும். கருத்துகளைத் தயங்காது வெளிப்படுத்த வேண்டும்.

சிறுகதைகளில் மேல்நாட்டுத் தாக்கம் பற்றித் தமிழில் ஆய்வு இதுகாறும் வரவில்லை. தொடக்ககாலப் படைப்புகளில் தாக்கம்

இருப்பது சுட்டப்பட்டுள்ளதே தவிர விரிவான தனி ஆய்வு இல்லை. இந்நோக்கிலும் ஆய்வு நிகழ்த்தப்பெறுதல் நல்லது. (புதுமைப் பித்தன்/மாப்பசான் பற்றிய ஒப்பீட்டுக் கருத்துக் கட்டுரை புதிய பார்வையில் அமைந்துள்ளது. த.சி.வ.து)

தமிழில் தரமிக்கச் சிறுகதை ஆய்வுகள் வெளிவர வேண்டும் என்ற வேட்கை விதைக்கப்பட்டுள்ளது. புதிய புதிய பார்வைகள், புத்தம் புது அணுகுமுறைகள் வெளிவருவது நிகழ்கால இலக்கியக் கொள்கையும், புதிலக்கிய உலகிற்கும் வேண்டப்படுவதாகும்.

குறுநாவல்

சு. வேங்கடராமன்

குறுநாவல் பற்றிய தனியான, முழுமையான ஆய்வு இதுவரை நிகழவில்லை. நாவல்களைப் பற்றிய ஆய்வில் குறுநாவல் பற்றிய ஆய்வும் இடம்பெற்றது. குறுநாவல் குறித்த வரைவிலக்கணம் முதலில் கண்டறியப்பட வேண்டும். அனைத்துத் தரப்பு குறுநாவல்களையும் தொகுத்து, தரம் பிரித்து ஆராய ஆய்வாளர்கள் முன்வர வேண்டும்.

நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பற்றிய அறிமுகமும் மதிப்பீடும்

குறுநாவல் அல்லது குறும்புதினம் என்று அழைக்கப்படும் நாவல் இலக்கிய வகை பற்றித் தனியான ஆய்வு - தனிப்பட்ட ஆசிரியரின் குறும்புதினங்களையோ அல்லது ஒரு காலக்கட்ட, ஒரு இலக்கிய இதழில் வெளியான குறுநாவல்களைப் பற்றியோ - முழுமையான ஆய்வு இதுவரை நிகழவில்லை. ஆனால், நாவல்களைப் பற்றிய ஆய்வில் குறுநாவல் பற்றிய ஆய்வும் இடம் பெற்றது. தனிப்பட்ட படைப்பாளியின் நாவல்கள் பற்றிய ஒட்டு மொத்தமான ஆய்வில், அவர்களின் குறுநாவல்கள் பற்றிய ஆய்வும் இடம்பெற்றுள்ளது. இந்த வகையில் ஜெயகாந்தன்[1], ராஜம் கிருஷ்ணன்[2], நா. பார்த்தசாரதி[3], கல்கி[4], தி. ஜானகிராமன்[5],

---

1. (அ) ந. அறிவழகன். ஜெயகாந்தன் நாவல்களில் சமுதாயப் பார்வை, சென்னைப் பல்கலைக்கழகம் 1981.
   (ஆ) கரு. முத்தையா. செயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு, மதுரைப் பல்கலைக்கழகம், 1979.
   (இ) ம. திருமலை, செயகாந்தன் - தகழி சிவசங்கரம் பிள்ளை நாவல்கள் ஒப்பாய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1981.
2. தி.கு. நடராசன், ராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்மைக் கோட்பாடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1981.
3. எஸ். கமலம், நா. பார்த்தசாரதியின் சமூக நாவல்களில் பாத்திரப்படைப்பு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1989.

அகிலன்[6], நீல. பத்மனாபன்[7], பிரதிபா ராஜகோபாலன்[8], லா. ச. ரா[9]., ந. பிச்சமூர்த்தி[10], கி. ராஜநாராயணன்[11], ரகுநாதன்[12] ஆகிய படைப்பாளிகளின் நாவல்கள், படைப்புக்கள் பற்றிய ஆய்வேடுகளில், அவர்களின் குறுநாவல்கள் பற்றிய மதிப்பீடுகள் நிகழ்ந்தமையைச் சான்றாகச் சுட்டலாம். லட்சுமி, சூடாமணி ஆகிய இருவரின் படைப்புக்களை ஒப்பிட்டுள்ள ஆய்விலும்[13], நாவல்களில் இடம்பெற்றுள்ள கருப்பொருள் அடிப் படையிலான வரதட்சணை சிக்கல், சமூகச் சிக்கல், சமூக மதிப்புக்கள்[14] ஆகிய மதிப்பீடுகளிலும் குறுநாவல்கள் ஆராயப் பட்டுள்ளன. இவையன்றி கதைமாந்தர் படைப்பு பெண்கள் சித்திரிப்பு[15] ஆகிய நிலைகளிலும் குறுநாவல்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மொழிநடை பற்றியும் சில ஆய்வுகள் மேற்கொளளப்பட்டுள்ளன.

4. ப. தண்டபாணி, கல்கியின் சமூக நாவல்கள், பாரதியார் பல்கலைக்கழகம், 1989.
5. மு மாணிக்கம், தி. ஜானகிராமன் நாவல்கள், மதுரை காமராசர் பல்கலைகழகம், 1976.
6. ப. விசயலட்சுமி, அகிலன் நாவல்கள் - ஓர் ஆய்வு, கேரளப் பல்கலைக்கழகம், 1976.
7. கோ. இந்திராபாய், நீல. பத்மனாபன் நாவல்களில் மொழி நடை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1979.
8. ம. நடராசன், பிரதிபா ராஜகோபாலன் படைப்புக்கள், சென்னைப் பல்கலைக்கழகம், 1986.
9. அபிபுல்லா, லா.ச. ராமாமிர்தத்தின் படைப்புக்கள், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1982.
10. க. மீனாகுமாரி, ந. பிச்சமூர்த்தியின் படைப்புக்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1985.
11. ச. பாரதி, கி. ராஜநாராயணனின் படைப்புக்கள். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1988.
12. மாலதி, ரகுநாதனின் படைப்பிலக்கியங்கள், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1984
13. இரா. சித்ரலேகா, லட்சுமி-சூடாமணி நாவல்களில் பெண் களின் வாழ்க்கைச் சிக்கல், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1983,
14. சேதுமணி மணியன், தமிழ் நாவல்களின் மதிப்புகள், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1986.
15. செயராணி ராசதுரை, தமிழில் பெண் நாவல் ஆசிரியர் களின் சமுதாயப் பார்வை, பாரதிதாசன் பல்கலைக் கழகம், 1988.

பொதுவான மதிப்பீடு என்ற நிலையில் குறுநாவலின் வடிவம், அவற்றின் கதைப்பொருள், மாந்தர் படைப்பு, வெளிப்பாட்டு உத்திகள், நடை என்ற பாகுப்பாட்டில் பெரும்பாலான ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. குறுநாவலின், வரைவு இலக்கணம் பற்றி இலக்கியத் திறனாய்வாளர்கள் (ஆங்கிலம், ஆங்கிலம் வழி தமிழ்) கூறுகின்ற இலக்கணத்தை விளக்கி, அதை அப்படியே பொருத்திக் காட்டுகின்ற முறையில் இவ்வாய்வுகள் அமைந்துள்ளன. தமிழில் இதுகாறும் வெளிவந்துள்ள அல்லது தங்களுடைய ஆய்வு எல்லைக்குள் அடங்கக்கூடிய குறுநாவல்களை அடிப்படையாகக் கொண்டு, அந்த இலக்கிய வகைக்கு இலக்கணம் காணும் முயற்சி இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை. விளக்கவியல் ஆய்வு என்ற வகையிலே இவை நின்றுவிடுகின்றன. முதலில் நிகழ்ந்த ஒருசில ஆய்வேடுகளை முன்மாதிரியாகக் கொண்டு, அதே அச்சில் வார்த்தெடுக்கும் வாய்ப்பாட்டு ஆய்வேடுகளாக இவை நின்று விட்டன. தாங்கள் தேர்ந்த படைப்பாளியின் தனித்தன்மையையோ, கலை இலக்கியக் கொள்கையையோ, அவரிகளின் குறுநாவல் தரத்தையோ மதிப்பீடு செய்து, புறவய நிலையில் கோட்பாடுகளை உருவாக்கும் ஆய்வாக இவை அமையவில்லை. படைப்பாளி செய்த அத்தனையும் பாராட்டுக்குரியவை என்று போற்றும் மனப்பதிவு முறையே (Impressionistic Criticism) மேலோங்கியுள்ளது. மேலும், குறுநாவல் வடிவம், எழுதப்பட்ட நிலை, இதழில் வெளியான நிலை (எழுத்துப் பிரதிக்கும் அச்சுப் பிரதிக்கும் இடையிலான உருச் சிதைவு அல்லது வடிவச் சேர்க்கை என்ற வளர்சிதை மாற்றம், அவற்றில் வெளியீட்டு ஊடகத்தின் பங்கு), வாசகர்கள் அதை வரவேற்ற நிலை என்பவை பற்றியதான மதிப்பீடுகள் இந்த ஆய்வில் நிகழவில்லை. குறுநாவல் தானா அல்லது நீண்ட சிறுகதையா அல்லது நாவலின் சுருக்கமா என்பவை பற்றியதான வடிவ - மதிப்பீடும் இவ்வாய்வேடுகளில் மேற்கொள்ளப்படவில்லை.

குறுநாவல்களின் கருப்பொருள் பற்றிய ஆய்வில், ஓரளவிற்குச் சமூகவியல் பண்பாட்டு மானுடவியல் அடிப்படையில் மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகையில் லட்சுமி, சூடாமணி பற்றிய ஒப்பீடு, தமிழ் நாவல்களில் சமூக மதிப்புக்கள், ஜெயகாந்தன் நாவல்களில் சமுதாயப் பார்வை, கி. ரா. வின் படைப்புக்கள், பெண் நாவலாசிரியரின் சமுதாயப் பார்வை ஆகியன குறிப்பிடத் தக்கன. சமூகவியல் அணுகுமுறையும், பண்பாட்டு மானுடவியல்

அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன. சமூகவியல் அணுகு முறையில், மார்க்சியத் திறனாய்வுக் கோட்பாடுகள் பெரிதும் பின்பற்றப்பட்டுள்ளன. கால வளர்ச்சியும், படைப்பாளியின் ஆளுமை வளர்ச்சியும் மதிப்பிடப்பட்டுள்ளன. சமூகவியலார் கூறும் கோட்பாடுகள் விளக்கப்பட்டு, நடப்பியல் வாழ்க்கையோடு பொருத்திக் காட்டப்பட்டு, யதார்த்தமாக அவை வளர்ந்துள்ள வளர்ச்சி மதிப்பிடப்படுவது இவ்வகை ஆய்வேடுகளின் தனிச் சிறப்பாகும். வெறும் விளக்க ஆய்வு என்ற நிலையிலிருந்து, பல்துறை ஆய்வுக்குத் (Multi Disciplinary Research) தமிழாய்வு வளர்ச்சி பெற்றுள்ளதை இவை காட்டும்.

கதைமாந்தர் பற்றிய ஆய்வுகள் மாந்தர் படைப்பு, படைப் பாக்க நெறிகள் என்பவற்றை விளக்குவதாகவே அமைந்துள்ளன. இ. எம், பார்ஸ்டர் காலக் கோட்பாடுகளே மேல்வரிச் சட்டமாகப் பின்பற்றப்பட்டுள்ளன. மாந்தர்களுக்கும் சமூகத்திற்குமான உறவு என்ற நிலையில் சமூகவியல் அணுகுமுறை பின்பற்றப்பட வில்லை. அதேபோல, படைப்பாக்க நெறிகளுக்குரிய அழகியல் கோட்பாடுகள், தொல்படிமவியல் கோட்பாடுகள் இனங்காணப் படவோ, பொருத்திப் பார்க்கப்படவோ இல்லை. 'ஜயகாந்தனின் நாவல்களின் சமுதாயப் பார்வை' என்ற ஆய்வேட்டில் மட்டும் மார்க்சிய சமூகவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. மாந்தர் படைப்பாக்கத்திற்கு அடிப்படையாக அமையும் உளவியல் கோட்பாடுகளைக் கண்டறியும் நோக்கில் 'நா. பா. வின் சமூக நாவல்களில் மாந்தர் படைப்பு' என்னும் ஆய்வேடு குறிப்பிடத் தக்கது. பெண்கள் சித்திரிப்பு என்னும் தலைப்பில் அமைந்துள்ள ஆய்வேட்டில், பெண்களின் சிக்கல்கள், பெண் உரிமை, பெண் நிலை வாதம் என்ற நிலைப்பாடுகள் அமைந்துள்ளன. இவற்றின் அடுத்த கட்டமாக பெண்ணிய நோக்கில் இவை ஆராயப்பட வேண்டும். குறிப்பாக, படைப்பாளர்களின் சார்பு. ஆளுமை, வளர்ச்சி, கொள்கைப்பிடிப்பு என்ற நிலைகளில் மதிப்பிட்டு அவர்கள் போலிப் பெண்ணியவாதிகளா, பெண் அனுதாபிகளா, மெய்யான பெண்ணியவாதிகளா எனத் தரம் பிரித்துப் பார்க்கும் ஆய்வு முயற்சி இனி மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆய்வுச் சிக்கல்களும், அவற்றிற்கான தீர்வுகளும்

பொதுவாக, தற்காலப் படைப்பிலக்கிய ஆய்வுகளில் காணப் படும் சிக்கல்களே, இத்தலைப்பிலும் அமையும். தலைப்பு தேர்வதில் தெளிவான நோக்கமின்மை, கருதுகோள் ஒன்றை

உருவாக்கிக் கொள்ளாத தன்மை, போதுமான, சரியான, முழுமையான, நம்பகத்தன்மை வாய்ந்த சான்றாதாரங்களைத் தேர்வு செய்யாமல், சரியான அணுகுமுறையோ, கோட்டுபாடுகளோ இல்லாத தன்மை, விவாதப் பாங்கின்மை, அளவை நெறியின்மை ஆகிய சிக்கல்களே குறும்புதின ஆய்வேடுகளிலும் காணப்படுகின்றன. இதற்கு அடிப்படையான காரணம் ஆய்வாளர்களுக்கு முறையான இத்தகைய அணுகுமுறை, கோட்பாடு பற்றிய பயிற்சி இன்மையாகும். வகை தொகை செய்வதும், தகவல்களை அடுக்குவதும் பொருத்தமான - பொருத்தமில்லாத - மேற்கோள்களைச் சொல்லுவதுமே ஆய்வேடாக நின்றுவிடுகிறது. ஒவ்வோர் இலக்கிய வகைக்கும் துறை ஒழுங்கு சார்ந்த அணுகுமுறைகளும் அதற்கேற்ப தெறிகளும் இங்கு வேண்டற்பாலன.

இத்தகைய பொதுப்படையான சிக்கல்களேயன்றி, குறும்புதின இலக்கிய வகை சார்ந்த ஆய்வுச் சிக்கல்கள் தனியாக உள்ளன. குறும்புதினங்கள் குறித்த வரைவிலக்கணம் முதலில் கண்டறியப்படவேண்டும். தமிழில் வெளிவந்துள்ள குறுநாவல்களுக்கு முறையான ஆவணப் பதிவு (Documentation) இதுவரை நிகழவில்லை. வெளியான இதழ், காலம், எழுதியவர், நூலான விவரம், பொருள் வகைப்பாடு என்ற நிலையில் இது அமைதல் வேண்டும். அடுத்த நிலையில் படைப்பாளர் எழுதிய எழுத்துப் படிக்கும், அச்சுப்படிக்கும் இடையிலான உருமாற்றங்கள் காணப்பட வேண்டும், தமிழில் படைப்பிலக்கியத் துறையில் இது மிக முக்கியமான ஓர் ஆய்வாகும். நம்முடைய பணபாட்டு உருவாக்கத்தில் பெரும் வணிகப் பத்திரிகைகள் தம்முடைய விற்பனை, பொருள் நோக்கத்திற்கு ஏற்ப இலக்கிய வடிவத்தை உருமாற்றம் செய்து, வாசகர் களுக்குத் தருகின்றன. சமூகவியல் நோக்கில் இவ்வாறு ஆராய்வதற்கு வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு வெளிப்பட்ட அச்சுப்படிகளை - குறுநாவல் வடிவை - வாசகர்கள் எவ்வாறு ஏற்கின்றனர், படைப்புக்களின் தரம் யாது என்று துல்லியமாகக்கணக்கிட, அதன் அடிப்படையில் முடிவு காண வேண்டும். பெரும்பாலும் நம்முடைய வணிகப் பத்திரிகைகள், குறுநாவல்களைச் சிறப்பிதழ்களில் - பண்டிகை நாட்களில்-மட்டுமே வெளியிடுகின்றன. இலவச இணைப்பு, சிறப்பு மலர் இவற்றில் பக்க நிரப்பிகளாகவே குறுநாவல்கள் வெளியிடப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளில் குறுநாவலின் வடிவ இலக்கணம் ஏதும் உண்டா என்ற மிகப் பெரிய சிக்கல் நம்முன் உள்ளது. பக்க

நிரப்பிகளாக அமையும் இவற்றில் நிகழ்ச்சிகளாலான கோபுரக் கதைப்பின்னல், வாய்ப்பாட்டு வடிவமாக அமைகிறது. காரண - காரியத் தொடர்பின்றிச் செயற்கையான, திரைப்படத் தாக்கம் பெற்ற கதை வடிவம் இவற்றின் அடிப்படை பண்பாகும். இத்தகைய குறுநாவல்களில் வெளிப்பாட்டு உத்திகள் என்று புதிதாக எவற்றையும் இனங்காண முடியாது. மாறாக, வாசகனை மிகுதியும் சிந்திக்க விடாது, பொழுதுபோக்குப் பகுதிகளையே முதன்மைப்படுத்தி, அனைத்து நிலைகளிலும் எளிமையான - மலினப்படுத்தப்பட்ட - குறுநாவல் வடிவத்தை (இதே வடிவ அமைப்பு எந்தவித மாறுதலுமின்றி நாவலிலும், சிறுகதையிலும் கூட) இவை கொண்டு இலங்கும். பெரும் முதலீடு செய்து, பத்திரிகைத் தொழிலை நடத்தும் நிறுவனங்களுக்கு, பக்க வரையறைக்குள் எந்த இலக்கிய வடிவத்தையும் தம் விருப்பம் போல் வணிகப் பொருளாக்கும் வித்தை நன்கு தெரியும். இப்போது நம்மைப் போன்ற ஆய்வாளர்களுக்கு, இத்தகைய வணிகப் பத்திரிகை உற்பத்தி செய்யும் குறுநாவல் வடிவம் மிகப் பெரிய சிக்கலாகும்.

இத்தகைய வணிக எழுத்துக்களை இனங்கண்டு, தரம் பிரித்து, மதிப்பிட நமக்குத் தெரியவேண்டும். எதிர்மறைமுகத்தான், குறுநாவல் வடிவம் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு இவை சான்றுகளாகும். இவற்றைத் தரவுகளாகக் கொண்டு உற்பத்தி, பரவு தன்மை, வாசகனின் சுவை உணர்வை மழுங்கச் செய்யும் வாய்ப்பாட்டுக் கூறுகள், உருவச் சிதைவு ஆகியவற்றைச் சமூகப் பின்னணியுடன் ஆராயவேண்டும். இவற்றைத் தரம் பார்த்து மதிப்பிடவேண்டும். இவற்றைக் கொண்டு வணிகப் பத்திரிகையின் குறுநாவல் எழுத்துக்களை, அவற்றின் பண்பு அடிப்படையில் பொதுமைப்படுத்த முடியும். அத்துடன், பத்திரிகை விற்பனைக்கு ஏற்ப எவ்வாறு தரம் குறைகிறது (குறுநாவலின் தலைப்பு, படைப்பவரின் புனைபெயர், அவற்றிற்கான ஓவியம் அல்லது புகைப்படம், இரண்டு, மூன்று வாரங்களுக்குத் தொடர்கதை போல - மினி தொடர்கதை - வெளியிடும்போக்கு என்பன) என்பதை அடிப்படைச் சான்றுகளுடன் நிறுவவேண்டும்.

இந்தக் குறுநாவல்களில் கதைப்பொருள் பெரும்பாலும் பரபரப்பையும், உணர்ச்சித் தூண்டலையும் மையமிட்டுள்ளது. மிகப் பெரிய சிக்கல்களை மிக எளிதாகக் கொச்சைப்படுத்தி, மலினப்படுத்தும் போக்கும் இங்கு நாம் அறியவேண்டியது.

பாலுணர்வு, வன்முறை, திரைப்பட ஆதிக்கம், கொலை, கொள்ளை ஆகிய சமூகக் குற்றங்கள் என்பவற்றை மீண்டும் மீண்டும் இக்கதைகள் முன்வைக்கின்றன. கதைப்பொருள் தேர்வு, வெளிப்படுத்தும் முறை என்பவற்றை மதிப்பிட, அதற்கான சமூகப் பின்னணிகளை ஆராயவேண்டியுள்ளது. குறுநாவலுக்குக் கதைப் பொருளைத் தேர்வு செய்யும் முறையில் மிக எளிதான, மேலோட்டமான முறையில் சமூகக் சிக்கல்களை முன்வைக் கின்றன; சிக்கல்களுக்குத் தீர்வு சுட்டப்படுவதில்லை; பொருளாதார வேறுபாடு, இளைஞர் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், பெண்கள் பிரச்சினைகள், மது, போதைப்பொருள் இவற்றால் விளையும் தீமைகள் ஆகிய பல்வேறு சமூகப் பிரச்சினைகளை மேலோட்டமாகவும், வக்கிரமாகவும், போலித்தனத்துடன் படைப்பது, சமரசம் செய்துகொள்ளும் தீர்வு, குறுநாவல் நெடுகிலும் அப்பட்டமாகச் சமூகத் தீமைகளை விளக்குதல் - முடிவில் மட்டும் அற உபதேசம் என்ற நிலைகளில் இத்தகைய குறுநாவல்களில் வாழ்க்கைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆய்வாளர்களுக்கு இவற்றைச் சரியாக உணர்ந்து கொள்ளத் தெரிய வேண்டும். நம்முடைய கலாச்சார உருவாக்கத்தில், இந்தக் காலக்கட்டத்தில், பத்திரிகைகள் தம்முடைய வணிக நோக்கத்திற் காகத் தீவிரமான கவனத்திற்குரிய ஒன்றைத் துண்டு துண்டாகக் காட்டுவதும், மலினப்படுத்துவதுமான முயற்சி தொடருகிறது. படிக்கும் வாசகர்களை ஆழமாகச் சிந்திக்க விடாமல், அறியாமை யில் வைத்திருப்பதே இவர்களின் நோக்கம். ஆகவே, படைப்பாளி உளவியல், வாசகர் உளவியல், படைப்பு உளவியல் என்ற நிலை களிலும், சமூக, பண்பாட்டுப் பின்னணிகளிலும் இவற்றை ஆராய வேண்டியுள்ளது. மேலும், இவற்றின் பரவுதன்மை, எளிதில் வாசகர்கள் நம்பிவிடுகிற படைப்பாக்க நெறி, இவற்றை வரவேற்றுப் போற்றும் வாசகரி மனநிலை, இப்படைப்புக்களால் வெளிப்படுத்தப்படும் சமூகத் தீமைகள் கற்பிக்கும் உணர்வுகளை அனுபவிக்க முனையும் மனநிலை என்பவற்றை நாம் ஆராய வேண்டும்.

இந்த நிலைக்கு மாறாகச் சிறு பத்திரிகைகள் - இலக்கியப் பத்திரிகைகள் - குறுநாவல் வடிவத்தைக் கலைநயம் குன்றாமலும், ஆழமான சமூக, தனிமனிதப் பிரச்சினைகளை முன்வைத்து நீண்ட விவாதங்களை எழுப்பி, பிரச்சினைகளுக்குத் தீர்வு சுட்டப்படுவ தாகவும் குறுநாவல்களைத் தொடர்ந்து வெளியிடுகின்றன. இவற்றில் குறுநாவல் வடிவச் சிதைவின்றி வெளிப்படுவதால்

இந்தச் சான்றுகளைக் கொண்டே தமிழ்க் குறுநாவல் இலக்கிய வகைக்கு அடிப்படை இலக்கணம் வகுக்கவேண்டும். பெரும் பாலான சமயங்களில், சிறுபத்திரிகைகளில் வெளிவரும் குறுநாவல் களைப் படித்துப் புரிந்துகொள்வதற்குத் தீவிரமான சிந்தனை நாட்டமும், இலக்கியம், மொழி, உளப்பகுப்பாய்வியல், சமூகவியல், பண்பாட்டு மானுடவியல் போன்ற பிற துறை அறிவும் தேவைப் படுகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம், இந்த இதழ்களில், இலக்கியப் படைப்பு, சமரசம் செய்துகொள்ளாமல் தீவிரத் தன்மையுடன் வெளிப்படுவது ஆகும். ஆனால் நம்முடைய இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் சிறுபத்திரிகைகளின் வாசகர்கள் மிகவும் குறைந்தவர்கள். இந்தச் சிறு வட்டத்தைத் தாண்டி இவை வெளிவருவதில்லை. இந்தப் படைப்பாளிகளும், பல சமயங்களில் வாசகனை மருட்டுவது போல இருண்மை நிலையில், மூறுக்கிக் கொண்டதாக மொழியைக் கையாளுகின்றனர். இதன் விளைவாகச் சிறுபத்திரிகைகளில் வெளிவரும் குறுநாவல்கள் பரவு தன்மை, படிதன்மை குறைந்து நிற்கின்றன. கல்வித் துறை சாராத திறனாய்வாளர்கள் இவற்றை மீண்டும் மீண்டும் பாராட்டினாலும். இத்தகைய குறுநாவல்கள் உள்ளடக்கத்தில் எவ்வளவு வலிமையும் செறிவும் கொண்டிருந்த போதிலும் வெளிப் பாட்டிலும் மொழி ஆளுகையிலும் காணப்படும் தெளிவின்மை காரணமாகச் சரியான கவனம் பெறாமல் போய்விடுகின்றன.

இப்போது நம் முன் உள்ள பிரச்சினை இந்த இரு வேறு நெறிகளே. வணிகப் பத்திரிகைகளில் வெளிவரும் குறுநாவல்கள் எழுத்துக்கள்காக நின்றுவிடுகின்றன. சிறுபத்திரிகைகளில் வெளி யாகும் குறுநாவல்களில் படிதன்மைக் குறைவு காரணமாக அவற்றின் இலக்கியத் தரம், இலக்கணமாக அமையும் ஆழமும் நேர்த்தியும் கவனம் பெறாமல் போய்விடுகின்றன, கல்வித் துறை ஆய்வாளர்கள் இவற்றைக் கணக்கில் கொண்டு அனைத்துத் தரப்புக் குறுநாவல்களையும் தொகுத்து, தரம் பிரித்து, ஆராய முன்வர வேண்டும்.

இனிச் செய்யப்பட வேண்டிய ஆய்வுகள்

குறுநாவல் இலக்கிய வடிவத்திற்கு இலக்கணம் கண்டறியப்பட வேண்டும். தமிழில் இதுவரை வெளிவந்துள்ள (பத்திரிகை களிலும் தொகுப்புக்களிலும்) குறுநாவல்கள் அனைத்தும் முறை யாகத் தொகுக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, ஆவணப் பதிவு ஆன பின்னரே இது இயலும் என்றாலும் சிறந்த, பல்வேறு

திறனாய்வாளர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்ற குறுநாவல் களை அடிப்படையாக வைத்துக் குறுநாவல் இலக்கணத்தைத் தற்காலிகமாக அமைத்துக் கொள்ளலாம். குறுநாவல் வடிவம், அதில் ஆளப்படும் உத்திகள், பாத்திரப்படைப்பு, படைப்பாக்க நெறி என்பவற்றைக் கண்டறியவேண்டும். அடுத்த நிலையில் இக் குறுநாவல்களில் உள்ளடக்கமாக அமையும் சமூகப் பிரச்சினைகள், தனிமனிதப் பிரச்சினைகள், அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றை ஆராயவேண்டும். தனித்தும், ஒப்பிட்டும் காலமுறைப்படியும் ஆராயவேண்டும். காலந்தோறும் எந்த வகையான சிக்கல்கள் பெரிதும் முன்வைப்பட்டன, அவற்றிற்கான சமூகக் காரணங்கள் எவை என்பவற்றை மதிப்பிடலாம். ஒரே சிக்கலைப் பல்வேறு ஆசிரியர்கள் எவ்வாறு படைத்துள்ளனர்? ஒரே ஆசிரியருக்குள் வளர்ச்சி உள்ளதா? பத்திரிகைகளுக்கேற்பச் சிக்கலைப் படைப்ப திலும் சுட்டுவதிலும் வேறுபாடுகள் உள்ளனவா? இருப்பின் அதற்கான காரணங்கள் யாவை? என்பன மதிப்பிடப்பட வேண்டும்,

அடுத்த நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுடன் ஒப்பிடும் முயற்சி மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு ஒப்பிடும் போதுதான் ஒவ்வொரு படைப்பாளியின் தனித்தன்மை, குறுநாவல் வடிவத்தின் தன்மை உணர்ந்து அந்தப் படைப்பாளி அதனை ஆண்டுள்ள திறன், தரவேறுபாடு, அவருடைய பங்களிப்பு ஆகியவற்றைக் கண்டறியலாம். மேலும் கால வளர்ச்சிக்கு ஏற்பவும், ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்பவும், ஒரு படைப்பாளியின் பங்களிப்பு மதிப்பிடப்படவேண்டும். இன்று மிகவும் தேவையான ஒரு பணி தரவேறுபாடு கண்டறிவதாகும். அத்துடன் பல்வேறு அணுகுமுறைகளும் திறனாய்வுக் கோட்பாடுகளும் பிற துறை அறிவும் வளர்ந்துள்ள இன்றைய சூழலில், அவற்றின் துணையுடன் குறுநாவல் ஆய்வை மேற்கொள்ளவேண்டும்.

குறுநாவலா அல்லது நாவலா என்று ஒரு படைப்பைப் பகுத் தறிய ஆய்வாளருக்குத் திட்டவட்டமாகத் தெரியவேண்டும். கருப் பொருள் தேர்வு, அதற்கேற்ற வெளிப்பாட்டு வடிவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சிறுகதையிலிருந்தும், நாவலிலிருந்தும் வேறுபட்டதாக, தனித்தன்மை வாய்ந்ததாகக் குறுநாவல் அமை கிறது. பக்க அளவைக் கொண்டு அது தீர்மானிக்கப்படுவதில்லை. வெளிவந்துள்ள திறனாய்வு நூல்களில் குறுநாவலிற்கான வரை விலக்கணம் இடம்பெறவில்லை என்பதற்காகவோ அல்லது

அவற்றில் தவறாகச் சொல்லப்பட்டிருந்தாலோ ஆய்வாளர் அதையே பின்பற்றவேண்டும் என்பதில்லை. மாறாக, இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் என்ற அடிப்படையில், இதுகாறும் வந்துள்ள குறுநாவல்களை அடிப்படையாகக் கொண்டு அதன் வரையறையை ஆய்வாளர் காண முயலவேண்டும். குறுநாவலுக் கும் நாவலுக்கும் இடையேயுள்ள வேறுபாடு பக்க அளவு என்று கூறுவது தவறான கருத்து. அதை வலியுறுத்துவது போல, கலைக் களஞ்சியம், அகராதி, திறனாய்வு நூல்கள் அவ்வாறு கூறுகின்றன என்று விளக்குவது தவறான வழிகாட்டலாகும். இத்தனைக்கும் மேலாக, படைப்பாளியைச் சார்ந்து குறுநாவலா, நாவலா என்று வகைப்பாடு செய்ய முயல்வது அகவயப்பட்ட திறனாய்வாகிறது. ஆய்வாளர் தாமே நடுநிலைமையில் நின்று புறவயமாக வரையறை காண முயலவேண்டும்.

இதுகாறும் நடந்துள்ள குறுநாவல் ஆய்வுகளைப் பற்றி மேலே கண்டோம், பொதுவாகக் கல்வித் துறை ஆய்வுகள் விளக்க ஆய்வு களாகவும், பட்டியலிடுவதாகவும், ஒரே அச்சில் வார்த்தெடுப்பதா கவும் அடிக்கடிக் கூறப்படுகிறது. தர வேறுபாடு கண்டறிய உதவும் வண்ணம் அடிப்படைக் கூறுகளைக் கல்வியாளர்களே உருவாக்க முடியும். திறனாய்வுக் கோட்பாடுகள், துறை அறிவு, ஏற்ற அணுகுமுறை என்பவற்றால் தற்சார்பற்ற, புறவயமான திறனாய் வையும் மதிப்பிடலையும் ஆய்வாளர் மேற்கொள்ளவேண்டும். கடந்த சில ஆண்டுகளில் சட்டைப் பை நாவல், குறைந்த பக்கங் களில் வாரந்தோறும் வெளியாகும் மர்ம, துப்பறியும், கொலை, கொள்ளை, வன்முறை போன்ற கலாச்சாரச் சீரழிவு எழுத்துக்கள் மிகுதியாக வரும் நிலையை வெளிச்சமிட்டுக் காட்டி அவற்றைப் புறந்தள்ள வேண்டிய துணிவும் ஆய்வாளருக்கு இன்றியமையாதது. பெரும்பாலும் உள்ளடக்கப் பகுப்பாய்வு நிலையிலே ஏராளமான ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அடுத்த நிலையில் குறுநாவல் வடிவம், வெளிப்பாட்டு உத்தி ஆகியவை பற்றிய ஆய்வுகள் நிகழவேண்டும். மேனாட்டுக் குறுநாவல் கோட்பாடுகளை அப்படியே பொருத்திப் பார்க்கும் முயற்சிகளோடு, தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப தனித்தன்மை களைக் கண்டறியும் ஆய்வுகள் மேற்கொள்ளவேண்டும். ஒருகாலக் கட்டத்தின் போக்குகளை உருவாக்கிய குறுநாவல்கள் பற்றிய ஆய்வும், பிற இந்திய மொழிகளோடு ஒப்பிடும் ஆய்வும் மேற் கொள்ளப்படவேண்டும். நம்முடைய தொன்மையான இலக்கியப் பின்னணி, வரலாற்றுப் பின்னணி, புராண மரபுக் கதைகளின்

தாக்கம், வாய்மொழிக் கதைத் தாக்கம் என்ற நிலைகளில் குறுநாவல்களில் கதை கூறும் உத்திகளும், கதைப் பொருண்மையும் ஆராயப்பட வேண்டும். இந்த ஆய்வுகள் பொதுமைப்படுத்தும் பாங்கிலும், கோட்பாடுகளை உருவாக்கும் நிலையிலும் அமைய வேண்டும்.

அணுகுமுறைகள்

குறுநாவல் பற்றிய ஆய்வுகள், விளக்க ஆய்வுகளாகவே உள்ளன. ஆய்வு மூலங்களைத் தொகுப்பது, வகைப்படுத்துவது, மேற்கோள்களுடன் விளக்குவது என்ற நிலையிலே இவை நின்று விடுகின்றன. புதியன காணும் முயற்சி, தரவேறுபாடு கண்டறிவது, குறுநாவல் இலக்கிய வகைக்குரிய தனித்தன்மையுடைய ஒழுங்கு முறையை உணராத ஆய்வுப் போக்கே காணப்படுகிறது. அடுத்த கட்ட நிலையில் குறுநாவல்களின் உள்ளடக்கத்தை ஆராயச் சமூக வியல் கோட்பாடுகள், மார்க்சிய, காந்தீய தத்துவங்கள் சார்ந்த திறனாய்வு அணுகுமுறைகள் வேண்டற்பாலன. வடிவவியல் அணுகுமுறையில் அமைப்பு பற்றிய கோட்பாடுகள் அறியப்பட வேண்டும். பெண்ணியக் கோட்பாடுகளை அறிந்து குறுநாவல்கள் எழுப்பும் பெண்கள் சிக்கல்களை ஆராயவேண்டும். பரபரப்பான, பத்திரிகைகளின் விற்பனைக்கு உணர்ச்சித் தூண்டலை மையமிட்ட போலிப் பெண்ணியப் படைப்பாளர்களை இனங்காணவும், அவற்றின் தரவேறுபாடுகளைக் கண்டறியவும் ஆய்வாளர்கள் முன்வரவேண்டும். பத்திரிகைகளில் இடம்பெறும் குறுநாவல்களின் படங்கள், கதைத் தலைப்பு, உரையாடல் மொழியில் பிறமொழிக் கலப்பு என்ற நிலைகளில், குறுநாவல் வடிவம் சிதைவதை 'மினி' தொடர்கதையாகக் குறுநாவல் வெளிப்படும் தன்மையை ஆராய இதழியல் சார்ந்த உத்திமுறைகளும், சமூகவியல் பண்பாட்டு மானுடவியல் சார்ந்த அணுகுமுறைகளும் தேவை.

வெகுஜன இதழ்களில் வெளியாகும் குறுநாவல்களின் உள்ளடக்க அமைப்பை அடிப்படையாகக் கொண்டு, ஒரே மாதிரியான உருவாக்கங்கள் படிப்பவர் மனத்தில் ஏற்படுமாறு அமைவதை ஆராயவேண்டும். இதற்குச் சமூகவியல், அரசியல், உளப்பகுப்பாய்வியல் உள்ளிட்ட அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன. பெரும்பாலான குறுநாவல்களில், கதை சொல்லும் திறன் என்பது வெறும் உரையாடலாக - அரட்டை அடிப்பது போல - அமைவதைக் காணமுடிகிறது. குறுநாவல் இடம்பெறும் இதழின் ஏனைய பகுதிகளான தலையங்கம், கேள்வி - பதில்

போன்ற படைப்பிலக்கியம் அல்லாத பகுதிகளிலும், அவ்விதழில் வெளியாகும் விளம்பரங்களிலும் ஆளப்படும் மொழிநடைக்கும் குறுநாவலின் மொழிநடைக்கும் வேறுபாடு இல்லை. இன்னும் சொல்லப்போனால் கதைக்கருவிற்கு ஏற்ப பின்புலம், வாழ்க்கைச் சூழல் என்பவற்றிற்கு ஏற்ப - மொழி அமையவேண்டும் என்பது போய் எல்லா இடங்களிலும் ஒரே படித்தான மொழியைக் காண முடிகிறது. படைப்பிலக்கியத்திற்கு வேண்டிய சூழல் இக்குறு நாவல்களில் எதார்த்த உலகிலிருந்து சூழல் நீக்கம் பெற்று அந்தரத்தில் நிற்கும். குறுநாவல் உரையாடல்களில், கதை எடுத்துரைத்தலில். தலைப்பிடலில் எங்கும் நீக்கமற ஆங்கிலக் கலப்பு உள்ளதை உணரலாம். அவ்வாறு எழுதுவதே சரி என்று வாதிடும் போக்கும் இங்கு உண்டு. தமிழ் உணர்வை, பண்பாட்டுச் சூழலைத் திட்டமிட்டு எதிர்க்கும் போக்கும், மறைமுகமாகப் பிறிதொரு கலாச்சாரப் போக்கைத் திணிக்கும் மனநிலையும் மொழியின் மூலம் செய்யப்படுகிறது. இதனைச் சரியாக ஆராய, சமூக மொழியியல், நடையியல் கோட்பாடுகள் தேவை.

வெகுஜன இதழ்களில் வெளிவரும் பெரும்பாலான குறுநாவல் கள் ஒரே மாதிரியான கதைச் சம்பவங்கள், கதைமாந்தர்கள், கதைப்பின்னல் கொண்டு விளங்கும். இவற்றைப் படிக்க உயர்ந்த கலைப்படைப்பைப் புரிந்துகொள்ளத் தேவையான ஆழ்ந்த வாசிப்பு, ஈடுபாடு கவனஞ்சிதறாமை என்பன தேவையில்லை. சுருங்கக்கூறின் இவை வாய்ப்பாட்டு உருவாக்கங்கள்; அமைப்பியல் கோட்பாட்டு அடிப்படையில் இவற்றை ஆராயவேண்டும்.

பெரும்பாலான குறுநாவல்களில் மீண்டும் மீண்டும் சொல்லப் படும் கருப்பொருள் சில வகைக்குள் அடங்கிவிடும், மாறாக வறுமை, பொருளாதார வேறுபாட்டு அடிப்படையில் உள்ள நடப்பியல் பிரச்சினைகள் இக் குறுநாவல்களில் மிகுந்த கவனத் துடன், கதைப்பொருள் ஆக்கப்படாமல் தவிர்க்கப்படுகின்றன. வன்முறை, பாலுணர்வு என்பவை தவிர, இந்த உலகில் வேறு எதவும் கதைப்பொருள் இல்லை என்பது போன்ற மயக்கத்தை இந்தக் குறுநாவல்கள் ஏற்படுத்துகின்றன. வன்முறை, காதல், பாலுணர்வுச் சித்திரிப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு படைக்கப்படும் குறுநாவல்களில், மிக விரிவாக வருணித்து, படைப்பின் இறுதியில் அற உபதேசம் செய்கின்றனர். இதனால் ஏற்படும் விளைவு பாரதூரமானது. வாசகர் உளவியல், வாசகர் வரவேற்புக் கோட்பாடு, நல்ல இலக்கிய உளவியல் ஆகிய

கோட்பாடுகளடங்கிய பல்துறை அணுகுமுறை மூலம் இவற்றை ஆராயவேண்டும். குறுநாவலாசிரியர் கதையின் இறுதியில் எழுப்பிய அற உபதேசத்திற்கு எதிராகக் குறுநாவல் முழுவதிலும் சொல்லியுள்ள தீமையான அனுபவத்தை, அது தீமை என்று உணராமலே தாமும் ஒரு முறை அனுபவித்துப் பார்க்கவேண்டும் என்ற மனநிலை பாதிப்பிற்கு இக்குறுநாவல்கள் காரணமாக அமைவதை ஆய்வாளன் கண்டறிய முடியும். நம்முடைய வாழ்க்கையே இத்தகைய சமூகக் குற்றங்களும் வன்முறையும் தான் என்ற தவறான மயக்கத்தை இவை வெற்றிகரமாக வாசகர்களிடம் பரப்புவதையும் கண்டறியலாம்.

வாசகர்களிடம் உள்ள பலவீனமான உணர்வுகளைத் தேர்வு செய்து, அவற்றையே குறுநாவல் கதைப்பொருளாக்கி, மிகவும் தரக்குறைவான படங்களுடன் அச்சிட்டு, இவற்றையே மக்கள் விரும்புகிறார்கள் என்று வாசகர் கடிதங்கள் மூலம் பரப்புகின்றனர். இந்த எதிர்க்கலாச்சாரமே, மக்கள் கலாச்சாரமாகப் பரப்பப்படுகிறது. குறுநாவல்களின் உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்யும் ஆய்வாளன், சமூகவியல், அரசியல், பொருளாதாரம், பண்பாட்டு உருவாக்கம் இலக்கியப் பங்களிப்பு ஆகிய நிலைகளில் இதனை ஆராயவேண்டும். இதற்கு மாற்றாகச் சிறுபத்திரிகை என்ற தளத்தில் இயங்கும் குறுநாவல் படைப்பு மெய்யான கலாச்சாரக் கூறுகளை இலக்கியத் தரத்துடன் தொடர்ந்து தந்து வரும் போதிலும் அவை குறுகிய வட்டத்திற்குள் வளைய லருவதைக் கண்டுணர்ந்து, அவை பெருநெறியாக - பொதுமக்கள் கலாச்சாரமாக - உருப்பெற கல்வித்துறை ஆய்வுகள் உதவவேண்டும். சமூக மாற்றமே இதற்கு வழி என்றால் மாற்றத்திற்கு உதவுமாறு அடுத்த தலைமுறையினருக்குத் தரமான படைப்பிலக்கியம் சென்று சேரும் பொறுப்பைக் கல்வித் துறை ஆய்வு புறக்கணிக்க இயலாது.

முடிவுரை

குறிப்பிட்ட ஆசிரியர் ஒருவரின் குறுநாவல்களை விளக்க ஆய்வாக ஆராயும் போக்கை விடுத்து, அமைப்பை ஆராய்வது, வடிவ இலக்கணம் காண்பது, கருப்பொருள் - வாழ்க்கைச் சிக்கல்களை ஆய்வது, வெளிப்பாட்டு உத்திகளை ஆய்வது. சிறுபத்திரிகைகளில் வெளியாகும் குறுநாவல்களை ஆய்வது, வெகுஜன இதழ்களில் வெளியாகும் குறுநாவல்களின் வாய்ப்பாட்டு வடிவத்தை அமைப்பியல் ரீதியாக ஆய்வது, இதழியல் உத்திகளை அறிவது, ஒப்பீடு செய்வது ஆகிய நிலைகளில் இனி ஆராயவேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. தமிழண்ணல், முத்தையா, இ., தமிழியல் ஆய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், இ. ப. 1988

2. திருமலை, ம., தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு, மதுரை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1987

3. முத்தையா, கரு., செயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு, தேவகோட்டை, முத்துமீனாள் பதிப்பகம், 1980

4. சந்திரசேகரன், ச. (ப.ஆ.), பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிகைகளின் பங்கு, விழுப்புரம், சரவண பாலு பதிப்பகம். 1989 (ஆ. மார்க்ஸின 'மாத நாவல் இதழ்கள், என்னும் கட்டுரை மட்டும், பக். 34-69).

கவிதை நாடகம்

ஏ.என். பெருமாள்

கவிதை நாடகங்களின் இலக்கியக் கோட்பாடுகள் குறித்து ஆராய்ந்தாக வேண்டும். கவிதை நாடகக் கட்டுக்கோப்பு மீறலின் காரணங்களை நன்கு அறிந்து அவை பற்றியும் ஆராயலாம். கவிதை நாடகங்களிலான கற்பனைப் பாத்திரங்களின் பெயர்களும் ஆய்வுக்குரியனவே. கவிதை நாடகங்களுக்கு வியப்பு, கோபம், வீரம் போன்றவை நயமூட்டுகின்றனவா என்பதையும் ஆராய முற்படவேண்டும்.

கவிதை நாடக வளர்ச்சி

தமிழ் நாடக அரங்கில் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை பண்ணிசைப் பாடல்களால் உருவாக்கப்பெற்ற இசை நாடகங்களே நடிக்கப்பட்டு வந்தன. தமிழ் மக்கள் அவற்றை மிகவும் விரும்பிச் சுவைத்து மகிழ்ந்தனர். ஆங்கிலக் கல்வி பரவப்பரவ மேனாட்டு நாடக அமைப்பு முறையைக் கற்றோர் விரும்பத் தலைப்பட்டனர். அதைப் பின்பற்றிப் பலவகை நாடகங்களைத் தமிழ் மரபைக் கடந்து எழுதத் தொடங்கினர். கவிதை நாடகம் அவ்வாறு தமிழ் நாடகவானில் தோன்றிய ஒரு வகையாகும்.

சுந்தரம்பிள்ளை படைத்த 'மனோன்மணீயம்' 1991-ஆம் ஆண்டு வெளிவந்ததிலிருந்து தமிழில் கவிதை நாடக வளர்ச்சித் தொடங்கியது. அதைத் தொடர்ந்து, 1903 ஆம் ஆண்டு பரிதிமாற் கலைஞர் புறநானூற்றுப் பாடல் தழுவலாக மான விஜயம் நாடகத்தை எழுதினார். பின்னர் பல கவிதை நாடகங்கள் அறிஞர் சிலரால் இலக்கியநயம் கொண்டதாக உருவாக்கப்பட்டன. அவை ஆய்வுச் சிந்தனைக்கு ஏற்ற அளவில் தரத்தாலும் தன்மையாலும் சிறந்து காணப்படுகின்றன.

மேனாட்டுக் கவிதை நாடகங்கள் பல பேரறிஞரின் திறனாய்வுக்கு உட்பட்டு உலகப் புகழ் பெற்றிருப்பது போன்று பெரும் சிறப்பு பெறும் தரமான நாடகங்கள் தமிழில்-தோன்றாமல்

இல்லை. ஆனால் இன்னும் அவற்றின் செம்மையும் சீர்மையும் சரியான முறையில் அறிஞரின் ஆய்வுக் கண்ணால் நோக்கப் பெற்று மதிப்பிடப்படவில்லை. பல நிலையில் தமிழ்க் கவிதை நாடகங்கள் பற்றி சிறப்பாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இலக்கிய நோக்கும் இயம்பிடு பொருளும்

சிறந்த நோக்கமும் சீரிய கொள்கையும் இடத்தாலும் காலத்தாலும் வெல்ல முடியாத அரிய பெரிய கருத்துக்களும் கவின் மலர்களாய்க் கூடிக் குலாவுவது இலக்கியப் பூங்காவாகும். தோன்றிய இடத்தையும் காலத்தையும் கருத்தோட்டத்தில் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ சுட்டிச் செல்லும் தன்மையை இலக்கியத்தில் காணமுடியும்.

தமிழில் வெளிவந்துள்ள கவிதை நாடக இலக்கிய நோக்கங்களைத் தெளிவாகக் காண முயலவேண்டும். ஆழமான சிந்தனைக்கு அருமையான விருந்தளிப்பது பெரும் புலவரின் படைப்புக்களை. கவிதை நாடகமான புலவர் உள்ளம் 'புத்திக்கு விருந்தளிக்கும் புலமை வாழ்வு'[1] என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

இலக்கியத்தைப் படிப்போர் மலரில் தேனுண்ணும் வண்டு போல் சுவைத்து மகிழ வேண்டும் என்பது யோகி சுத்தானந்த பாரதி கூறும் கருத்து.[2] வாழ்வின் இன்ப துன்பங்களை இணையாக விளக்கி மனிதனின் நல்வாழ்வுக்கு வழிவகுப்பது இலக்கியம் என்பது பால்மதி நாடகம் காட்டும் குறிப்பு.[3]

வேங்கையின் வேந்தன் நாடகம் நல்ல நூல் பற்றிக் கூறும் போது அதற்கு இன்சுவை மிக்க கவிதை நடையும், உட்பொருள் செறிவும், கற்பனைக் கலவையும், உலக வழக்க விளக்கமும், புதுமை

---

1. பாலசுந்தரம், புலவரி உள்ளம், கா. 2, ப. 10.
2. யோகி சுத்தானந்த பாரதி, காலத்தேர். II. 2, ப, 51.
   மதுமலர் கண்ட வண்டுபோ லானேன்!
   கவிமுன் இயற்கை கனவென நின்றாள்!
3. ஏ.என். பெருமாள், பால்மதி. I. 3, 14-18.
   இலக்கிய மென்ப இந்நில மாந்தரின்
   வாழ்வினைப் படமாய் விளக்கிக் காட்டி
   இனபச் சுவையை இனிதாய்ப் பரப்பி
   துன்பக் காட்சியைத தூவி
   மன்னும் வாழ்வை மதித்துக் காட்டலாம்!

யும் இருக்க வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கிறது.[4] உணர்வுக்கு எட்டும் உண்மைப் பொருளைத் தாங்கி இலக்கியம் மலர வேண்டும் என்பது 'பெரிய வெற்றி' நாடகம் நவிலும் கருத்து.[5]

இலக்கியத்தைப் பற்றிக் கூறியுள்ள பலதரப்பட்ட கருத்துக்களை மனதில் கொண்டுக் கவிதை நாடகங்களின் இலக்கியக் கோட்பாடுகள் குறித்துச் சிந்திக்கலாம். மேனாட்டு நாடகத் தரத்துடன் இவற்றை ஒப்பிட்டு மதிப்பீடு செய்து பல தர நிர்ணயத் தன்மைகளைக் கண்டுணரலாம். வருங்கால நாடகப் படைப்புச் செம்மைக்கு இத்தகைய ஆய்வு நன்கு உதவும்.

நாடக நோக்கம் பொதுமைத் தன்மை கொண்டு விளங்குகிறதா என்பதை அறிய வேண்டும். சில நாடகங்களின் நோக்கம் குறுகிய எல்லை கொண்டதாக இருக்கலாம். நாடு, மொழி, சமூகம், சமயம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்கும். ஆகையினால் மாந்தப் பொதுமைக்கு ஒவ்வாது சுருங்கித் தோன்றும். இத்தகைய நாடகங்கள் அவற்றுக்கு உரிய எல்லைகளுக்குள் அடங்கிச் சுணங்கிவிடும்.

ஆன்ம ஈடேற்றத்துக்கு வழிசமைக்கும் பரந்த நோக்கம் ஊடிணைப்பாக மனோன்மணீயம் நாடகத்தில் காணப்படுவதில் பொதுமை நோக்கும், சைவ சமய சிந்தனை பரவலாக விதைக்கப் பெற்றுள்ளதில் குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்கும் நோக்கமும் தோன்றுவதைப் பார்க்கலாம். காதலின் தன்மை, பேராசை மனத்தில் எழும் கொடுஞ் சிந்தனைகள், சிந்தித்து உணராத பேதையரின் அவலநிலை, வீரத்தின் விளக்கம். தன்னடக்கச் சான்றோரின் மேனிலைகள், சாதனை, சதியின் கோரம், மெய்யுணர்வின் மேன்மை போன்றவை பொதுமை இயல்புகளைக் கொண்டு இந்த நாடகத்தின் சிறப்புக்கு வழியமைக்கின்றன.

---

4. சுந்தரராசன், வேங்கையின் வேந்தன் 1. 3, 20-28.

கவிச்சுவை ஓசை கணித்திட வேண்டும்
உரிக்காத வாழைப் பழம்போல் உட்பொருள்
குறிப்பு மொழிகளால் மறைத்தல் வேண்டும்
சிறந்த கற்பனைத் தேன்கவி தைகள்
சிறுத்த பட்ட மில்லை அவைகள
உலக வழகெனும் உயர்நீள் கயிற்றில்
உலவும் பட்டம் மற்று மொன்று
புதுமை வேண்டும் எதுகையில் மோனையில்
கருத்திலே! நீரிவை கருத்தில் கொள்வீர்!

5. பெருமாள், பெரிய வெற்றி, I, 2. ப, 43.

ஒருவருக்கொருவர் கற்பித்துக்கொள்ளும் ஏற்றத்தாழ்வுகள் மானிடத்துவத்துக்குப் பொருந்தாத பொருளற்ற கட்டுப்பாடுகள் என்பதை விளக்க முயலும் மாநலன் நாடகம் பொதுமை நோக்கைக் காட்டுகிறது. தேர்தல் முறைகேடுகள், கல்லூரியை மாணாக்கர் புறக்கணித்தல் போன்றவை குறுகிய எல்லை நோக்குகளாக உள்ளன.

அனிச்ச அடி நாடகம், பற்றினால் மனிதன் படும் பாட்டை அவலக் காட்சியாக விரித்துக் காட்டுகிறது,

> உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே
> இறவினால் பெறுவது எண்ணிலா இன்பமே[6]

என்று கூறுவதில் மனிதமனத்தின் பொது இயல்பு மெய்ம்மை தோன்ற சுட்டப்படுகிறது. இத்தகைய இயல்பைத் தவிர்க்க இயலாது மனமானது தவியாய்த் தவித்து நொந்து நலிந்து அவலத் தீயின் வெம்மை தாங்காது வெந்து நீறாவது நாடக ஓட்டத்தில் நன்கு காட்டப்படுகிறது. நாடகக் கதை நிகழும் காலமான சங்க கால நடைமுறை வழக்கங்கள், வாழ்க்கை இயல்புகள் போன்றவை கால எல்லைக்குக் கட்டுப்பட்டுள்ளன.

அரங்கசாமியின் கனகை நாடகம் கணவனை இழந்தோளின் அவல நிலையைக் கண்ணீர்க் குழம்பாக அள்ளித் தருகிறது. இந்த அவலக்காட்சி சமூகக் கட்டுப்பாட்டாலும், மரபுவழிச் சிந்தனையாலும் எழுந்ததாகவே தோன்றுகிறது. இதில் பொதுமை நோக்கம் குன்றிக் காணப்படுவதை உணரலாம்.

புலவர் உள்ளம், புரவலர் உள்ளம், நெடுமானஞ்சி போன்ற நாடகங்கள் சங்க கால வாழ்க்கை முறைகளை விளக்கும் பாங்கில் அமைந்துள்ளன. விசுவநாதம், மறைந்த மாநகர் ஆகியவை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டும், வேங்கையின் வேந்தன், முல்லை மாடம் போன்றவை வரலாற்றுக் கற்பனைகளாகவும் மான விஜயம், புகழேந்தி நாடகங்கள் பண்டை இலக்கியக் கருத்துக்களைத் தழுவிக்கற்பனை முலாம் பூசப்பெற்றும் காணப்படுகின்றன. பெரிய வெற்றி, மாபெரும் அறம் ஆகியவை மரம் நடுவதின் சிறப்பை மிக உயர்வாகக் கூறுவதுடன் அறிவுரைகளை மிகுதியாக வீசுகின்றன.

இத்தகைய நாடகங்களின் முதன்மை நோக்கங்கள் விளக்கப் படும் கதைகளுக்குப் பொருந்துமாறு கட்டுப்படுத்தப் பெற்றவை

---

6. ஆ. பழனி, அனிச்ச அடி, IV. 1, 148-149.

களாகவே அமைகின்றன. இந்தக் கட்டுப்பாட்டைத் தவிர்க்க இயலாது. பல மொழிகளில் இவ்வாறுள்ள நாடகங்கள் எழுதப் பெற்றுள்ளன. வேறு பல சிறப்புகளால் அவை புகழ் பெறுவதையும் காணலாம்.

நாடக நோக்கத்தை நன்கு அறித்து அதன் சிறப்பை மதிப் பிட்டுக்காண வேண்டும். ஒன்றுக்கு அதிகமான நோக்கம் இருக்க லாம். அவற்றின் முக்கியத்துவத்தையும் பெருத்தத்தையும் கண்டறிய வேண்டும். நாடகச் சிறப்பு அதன் நோக்கத்தில் மிகுதி யாக உள்ளது.

நாடக நோக்கத்தை அறிந்தால் மட்டும் போதாது. ஆசிரியர் விரும்பியவாறும் மக்களுக்கு நன்கு புரியுமாறும் அந்நோக்கம் தொழிலாகவும் அழுத்தமாகவும் விளக்கம் பெற்றுள்ளதா என்ப தைக் கண்டறிய வேண்டும். மக்கள் அதை எளிதாகக் கண்டு பயனடைவது தேவை.

சமூகத்துக்குப் பயன்படாதவை இலக்கியத்தில் இடம்பெறு வதைச் சரியானதாகவோ முறையானதாகவோ கருத முடியாது. அவை வீண் சேர்க்கையாகவே அமையும். பொதுவாக இன்று வரை மலர்ந்துள்ள தமிழ்க் கவிதை நாடகங்கள் நோக்கத் தெளி வுடன் ஏதாவது ஒரு நிலையில் மக்களுக்கும் பயன்படும் முறையில் படைக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

கட்டுக்கோப்பு முறை

நோக்கத்தைச் சிறப்பாகவும் சுவையாகவும் விளக்க நாடகம் ஒழுங்கான கட்டுக்கோப்புடன் அமைய வேண்டும். கட்டுக்கோப்பு முறையில் ஒழுங்கற்ற நாடகம், வழி தவறிய கப்பல் கரை சேரத் தவிப்பது போல் சரியான முடிவிற்கு வரமுடியாமல் தத்தளிக்க வேண்டிய சிக்கலுக்குள் அமிழ்ந்து தவிக்கும்.

நாடகவியல் நூல்கள் கட்டுக்கோப்பு முறைகளை விதிகளாக அமைத்துக் கூறுகின்றன. முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என ஐம்பிரிவுகளுடன் நாடகக் கட்டுக் கோப்பு அமைய வேண்டும் என்பது நாடக இலக்கண விதி. பெரும்பாலான கவிதை நாடகங்கள் இவ்விதியைப் பின்பற்றியே கட்டமைக்கப் பெற்றுள்ளன. நெடுமானஞ்சி நாடகம் இப்பிரிவுகளைச் சரியாக ஏற்றுத் தனது அங்கப் பிரிவுகளை வகுத்துள்ளது. வேங்கையின் வேந்தன், காலத்தேர், காமஞ்சரி, மனோரமணீயம், பனிமொழி,

பால்மதி, மாநலன், கனகை, அம்பாபலி, முல்லைமாடம், மான விஜயம், புகழேந்தி, தமயந்தி, ஆபுத்திரன் போன்று பல நாடகங்கள் ஐம்பிரிவு விதிக்குப் பொருத்தமாகவே பின்னப்பட்டுள்ளன.

மறைந்தமாநகர் நாடகம் வரலாற்றுப் பின்னணியில் அமைந்த கருத்து விளக்கப் படைப்பாகும். இதில் ஐம்பிரிவு அமைப்பு முறையில் சிக்கல் இருப்பதாகத் தோன்றுகிறது. வரலாற்று நாடகமான புகழேந்தியில் இத்தகைய சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை,

மாபெரும் அறம், பெரியவெற்றி ஆகிய நாடகங்களில் அமைப்பைவிட நவில் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றுள்ளன. ஆகையினால் கட்டுக்கோப்பு விதிமுறைகள் சரியாகக் கவனிக்கப்பட்டதாகக் கருத முடியவில்லை.

அனிச்ச அடி நாடகத்தில் கட்டுக்கோப்பு விதிமுறைகள் உரிமையுடன் மீறப்பட்டதாகத் தோன்றுகிறது. அது ஈரடுக்குக் கட்டுக்கோப்பாக உள்ளது. கதை வளர்ச்சிக்கு இவ்வமைப்பு மிகத் தேவையாகவும் பொருத்தமாகவும் காணப்படுகிறது.

காமக் களிமகன் கோமஸ், வீல நாடகம் ஆகிய மொழிமாற்று நாடகங்களின் அமைப்பு ஐம்பிரிவு முறைக்கு ஒத்ததாக இருக்கவில்லை. மூலமொழி நாடகத்துக்குப் பங்கமில்லாத முறையில் இவை மொழிமாற்றம் செய்யப்பெற்றுள்ளதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நா. காமராசன் புதுக்கவிதை நடையில் அமைத்துள்ள சராசரிகள் நாடகம் கட்டுக்கோப்பு விதிமுறைகளைக் கடந்து துணுக்குக் கோவையாகக் கட்டப்பட்டுள்ளது, பலதரப்பட்ட மக்களிடையே பலவிதமாக நடக்கும் தவறுகள் துணுக்குகளாக இணைக்கப் பட்டுள்ளன. சமூகத்தில் சராசரி வாழ்க்கையில் காணப்படும் தவறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும் என்ற ஆசிரியரின் நோக்கம் வலிமையுற்று நாடகப் படைப்புக்கென அமைக்கப்பெற்ற விதிமுறைகளை உரிமையுடன் மீறுவதைத் தவறாகக் கருத முடியாது.

நாடகத்தைப் பின்னுவதற்குப் பலவிதமான விதிமுறைகள் நாடகவியலில் குறிக்கப்படுகின்றன. மேற்கோள், தனிமொழி கனவு, கடிதம், விளக்கம், முற்சுட்டல், பின்காட்டல், மறைத்தல் திறத்தல், நாடக முரண், திருப்புமுனை போன்ற உத்திகளைத் தேவைக்குத் தக்கவாறு புகுத்தி நாடகங்களைக் கட்டிக் கோப்பதைக் காணலாம்.

ஆசிரியர்கள் நாடகங்களை எவ்வாறு தொடங்கி எப்படி முடிக்கின்றனர் என்பதை நுட்பமாகக் கண்டுத் தொடக்கம் முடிவுகள் அவ்வாறு அமையும் காரணம் பற்றிச் சிந்திதகலாம்.

கவிதை நாடகக் கட்டுக் கோப்பு விதிமீறலின் காரணங்களை நன்கு அறிந்து அவற்றைப் பற்றி ஆழமாக ஆய்ந்து சிந்திக்க வேண்டியது மிகத் தேவையாகும். விதிக்கட்டுப்பாடு, படைப்பின் சிறப்பைச் சிதைத்துவிடக் கூடாது. விதி மீறல் நாடகத் தன்மையைக் கெடுத்துவிடக் கூடாது.

பாத்திரப் படைப்பு முறை

பாத்திரங்களின் உரையாடலும் செயற்பாடுமின்றி நாடகம் இயங்காது. ஆகையினால் பாத்திரப் படைப்பு மிகச்சிறந்த இடத்தை வகிக்கிறது. நாடகத் தேவையைக் கருதியே பாத்திரங்களை இணைக்க வேண்டும்.

பாத்திர எண்ணிக்கை அளவு மீறியும் குறைந்தும் இருக்கக் கூடாது. மனோன்மணீயம் நாடகத்தில் இடம்பெறும் 44 பாததிரங்களில் 14 மட்டுமே பெயர் சுட்டப்படுவன. 30 பேர் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட செயல், தேவை கருதி குறுகிய பங்காளராக வந்து போவோர். பெயர் குறிக்கப்படுவோரில் இருவர் மட்டுமே பெண்கள் என்பது அறியத்தக்கதாகும்.

மறைந்தமாநகர் நாடகத்தில் வரும் 90 பாத்திரங்களில் அறுவர் பெண்கள். இது ஒரு பாத்திர எண்ணிக்கை மிகுந்த நாடகம். கூறும் வரலாற்று உண்மைகள் இவ்வளவு பாத்திரங்களை ஏற்கின்றன என்றாலும் நாடகப் படைப்புக்குப் பொருத்தமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

கற்பனை நாடகங்களின் ஆசிரியர்கள் பாத்திரங்களுக்குப் சூட்டியுள்ள முறை ஆய்வுக்கு உரியதாகத் தோன்றுகிறது. புகழ்ந்தி போன்ற வரலாற்று நாடகங்களில சில கற்பனைப் பாததிரங்களை இணைத்து அவற்றுக்குப் பெயர் கொடுத்துள்ள பாங்குச் சிந்திக்கத் தக்கதாக உள்ளது.

பாத்திரப் படைப்பு, பண்பு இணைப்பு, உரையாடல் முறை ஆகியவற்றில் பல உத்திமுறைகளை ஆசிரியர் நுட்பமாகக் கையாண்டுள்ளனர். அவற்றை நன்கு உணர்ந்து காண வேண்டியது தேவை.

பாத்திரங்களைத் துணையாகக் கொண்டு நாடக ஆசிரியர்கள் தங்களது கருத்துகளைச் சமூக நலனுக்காக வெளியிட்டுள்ளனர். இவ்வாறு செய்வதின் தேவை, பொருத்தம் ஆகியவற்றை அறிந்து கூற வேண்டும்.

நாடகப் பாத்திரங்களைத் தரம் பிரித்து வகைப்படுத்தி விதி முறை வகுத்துள்ளனர். அந்த விதிமுறைகள் காக்கப்பட்டுள்ளனவா, மீறப்பட்டுள்ளனவா என்பதைக் காரணகாரியங்களுடன் கண்டறிய வேண்டும்.

தலைவன், தலைவி, முரணன் போன்றோரை முக்கிய பாத்திரங்களாகக் கருதுவது மரபு வழக்கம். இத்தகையோர் இன்றி, சராசரிகள் போன்ற நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. இது பற்றியும் ஆராய்தல் வேண்டும்.

தலைவன் யார், தலைவி யார் என்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய நாடகங்களும் உள்ளன. மனோன்மணீயத்தில் ஜீவகன், புருடோத்தமன், பால்மதியில் முருகன், பாலரசு, மாநலனில் நாதன், மாநலன், பனிமொழியில் நந்தாமணி, பனிமொழி ஆகியோர் இவ்வாறு சிந்திக்கத் தக்கவர்.

நாடக ஆசிரியர்கள் எந்த முறையில் பாத்திரப் படைப்பில் வெற்றியடைகின்றனர் என்பதை ஆய்வுக்கண் கொண்டு நோக்கி முடிவு செய்ய வேண்டும். உளவியலுக்கு ஒப்பப் பாத்திரங்கள் படைக்கப் பெற்றுள்ளனவா என்பதும் வாழ்வியல் உண்மை களுக்குத் தக்கவாறு அவை செயல்படுகின்றனவா என்பதும் ஆய்ந்து அறியத் தக்கதாகும்.

நாடகச் சுவைகள்

நாடகத்தில் பல்வேறு சுவைகளும் பரவிக் காணப்பட வேண்டும். மனித வாழ்வு இன்ப துன்பச் சுவைகளின் கலவையாக அமைகிறது. வாழ்வை எடுத்துக்காட்டும் நாடகங்கள் இந்தச் சுவைகளை இயல்பாகக் காட்ட வேண்டும். இவை தவிர நகை, இளிவரல், வீரம், கோபம், அச்சம், வியப்பு போன்ற சுவைகளையும் அளவோடு கொண்டு அமைவது சிறப்பு.

சுவைகளை ஆசிரியர்கள் எந்த அளவுக்கு-என்னென்ன உத்தி முறைகளைப் பயன்படுத்தி எவ்வாறு புகுத்தித் தங்கள் படைப்புக் களைச் சுவைபெறச் செய்திருக்கிறார்கள் என்பதை ஆய்ந்து-அறிய

வேண்டும். நகைச்சுவைக்காகத் தனிக்காட்சிகளையும் பாத்திரங்களையும் இணைக்கும் முறை பற்றி ஆராயலாம்.

கனகை, அனிச்சஅடி, மறைந்த மாநகர் போன்ற நாடகங்கள் அவலத்தின் கொள்கலமாக அமைவதினால் நாடகத்தின் தரம் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பது பற்றிச் சிந்திக்கலாம். துன்பியல், இன்பியல் நாடகங்களில் அமைந்துள்ள சுவை வேறுபாடுகள் குறித்துச் சிந்திக்கலாம்.

எழுச்சி ஊட்டும் சுவையான வீரம் நாடக ஆக்கத்திற்கு உதவும் பாங்கை மதிப்பிடலாம். இளிவரல், அச்சம் ஆகிய சுவைகள் நாடகத்தில் மிக அருகி வருவதன் காரணத்தை ஆராயலாம். கோபம், வியப்பு, வீரம் போன்றவை நாடக நயத்தைப் பெருக்கும் போக்கைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். சுவைகளை நாடக ஆசிரியர் இயல்பாக ஊட்ட வேண்டும். சுவைப்பெருக்கில் கவிதை நாடகம் சிறப்பாக அமைந்துள்ளதா என்பதை அறிய வேண்டும்.

மொழிநடை

கவிதை நாடகங்களில் கையாளப்பெற்றுள்ள யாப்பு வகைகள் பற்றி அறிந்து அவற்றின் சிறப்புக்களை மதிப்பிட்டுக் காண வேண்டும். இடையிடையே இசைப்பாடல்களை நுழைத்து நாடக நயம் பெருக்கும் பாங்கை அறிவது சிறப்பு.

நீண்ட உரையாடல், தனிமொழி, அறிவுரை கூறல் ஆகியவை நாடக ஓட்டத்துக்குத் துணையாகும் போக்கில் அமைந்துள்ளனவா என்பதை ஆராய வேண்டும். நடை சிறந்து நாடகம் விளங்க ஆசிரியர்கள் கையாண்டுள்ள முறைகள் பற்றி ஆராயலாம்.

முடிவுரை

தமிழில் பல கவிதை நாடகங்கள் வெளிவந்திருந்தாலும் அவற்றின் உண்மையான தன்மைகளை இன்னும் உலகுணரச்செய்யவில்லை. பல கோணங்களில் அவை ஆராயப்படுதல் வேண்டும். பல்வேறு ஆய்வு அணுகுமுறைகளைக் கொண்டு அவற்றை நோக்க வேண்டும். இதுவரை அறியப்படாத பல சிறப்புக்கள் நுட்ப ஆய்வின் பயனாக வெளிவர அறிஞர் முயல்வது கடமையாகும்.

வாழ்க்கைவரலாற்று இலக்கியம்

பா. புவனேசுவரி

புகழ்பெற்ற சான்றோர்களை உலக மக்கள் முற்றிலும் உணரும்படிச் செய்யும் உரைநடை இலக்கியமாக வாழ்க்கைவரலாற்று இலக்கியம் வளர்ச்சி கண்டுள்ளது. பெருஞ்சிறப்புப் பெற்றவர்களே நூலுக்குரியோர் என்ற இன்றைய போக்கு மாறவேண்டும். வாழ்க்கைவரலாறுகளை ஆய்வுசெய்து அன்னார்வாழ்வுவழிச் சமுதாயத்தின் பலதிறத்தார்க்கும் கிடைக்கும் செய்தி யாது என்று நிறுவ வேண்டும்.

முன்னுரை

மனித வாழ்வின் காலக் கண்ணாடியாக, வாழ்வியல் அனுபவங்களின் பிழிவாக விளங்குவதோடு, மனித சமுதாயத்திற்குக் குறிக்கோள் வாழ்வின் தன்மைகளை விளக்குவதாய், அறநெறி கூறுவதாய் அமைவது வாழ்க்கைவரலாற்று இலக்கியம்.

இலக்கியம் கவிதை, உரைநடை எவ்வடிவு பெற்றதேனும் அதன் முடிந்த பயன் சமுதாயத்திற்கு நன்னெறி வகுப்பதாகவே உள்ளது. புனைவின்றியும், புனைவுடனும் உண்மை நவிலும் போக்கில் அமையும் இலக்கியங்கள் எக்காலத்தார்க்கும் உரிய உணர்வொப்புமையுடன் கருத்தொப்புமையும் கூடி விளங்குவதாய் காலத்தால் அழியாத சிறப்பினை உடையதாகிறது. கற்பனையாகப் புனையப் பெறும் கவிதை, காவியம், சிறுகதை, நாடகம், புதினம், புதுக்கவிதை எதுவாயினும் அது உண்மையின் அடிப்படையில் எழுந்தது என்பதனை யாரும் மறுக்கவியலாது. உண்மையின் வெளிப்பாடாய் விளங்கி அறநெறி காட்டாவிடில் அவ்விலக்கியம் நீடு நிலைத்திருக்கவும் இயலாது, புனைவு இலக்கியங்களே இவ்வாறெனின் உண்மை வாழ்வை உள்ளது உள்ளபடி உண்மைப் பெயர்களுடனும் காலக்குறிப்புகளுடனும் தெளிவாக விளக்கும் வாழ்க்கைவரலாற்று இலக்கியங்கள் நீடு வாழ் இலக்கியங்களாகவும், சமுதாயத்திற்குப் பயன்படும் சீரிய இலக்கியங்களாகவும் திகழ்கின்றன எனலாம்.

தோற்றம்

நிகழ்ச்சிகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் ஆர்வமே முதன் முதலில் எழுத்து வளர்ச்சிக்கு வித்திட்டது என்றும், மொழி வளர்ச்சி இதன் அடிப்படையிலேயே நிகழ்ந்தது என்றும் மொழி யியலார் கூறுகின்றனர்.[1] மொழியின் தோற்றமே இவ்வாறாயின் மொழியின் இலக்கியக் கூறுகள் அனைத்தும் வாழ்க்கை நிகழ்ச்சி களைச் சமுதாயத்திற்கு உணர்த்தும் அடிப்படையில் எழுந்தனவே எனலாம். மனிதன் சூழலை ஊன்றி, உணர்ந்து, துய்த்து அந்த அனுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளவே இலக்கியங்களைப் படைத்தான். அத்தகு இலக்கியங்களில் தலையாயது வாழ்க்கை வரலாற்று இலக்கியம்.

> இலக்கிய வகைகள் அனைத்திலும் தலைமை சான்றது வாழ்க்கை வரலாற்று இலக்கியமே[2]

வாழ்க்கைவரலாற்று நூல்கள் தன் வரலாறு, பிறர் வாழ்க்கை வரலாறு என்று இருகைப்படுகின்றன. தம்மையே புகழ்ந்துரைக் கவும், தம் செயல்களை நேர்மையானவை என்று கூறிக் கொள்ளவும், தம் இனிய அனுபவங்களை நினைவுகூரவும், பிறருக்கு வழிகாட்டவும், தம்மைத் தாமே ஊக்குவித்துக் கொள்ளவும் தன்வரலாறுகள் படைக்கப் பெறுகின்றன. நன்றி யுணர்ச்சியைக் காட்டவும், அன்புணர்வாலும் சான்றோருடன் ஒருங்கிணைத்துத் தம்மை வெளிப்படுத்தவும் வாழ்க்கை வரலாறு கள் எழுகின்றன.

இலக்கியத் தன்மை

புகழ்பெற்ற சான்றோர்களை உலக மக்கள் முற்றிலும் உணரும்படிச் செய்யும் ஓர் உரைநடை இலக்கியமாக இவ் வாழ்க்கைவரலாற்று இலக்கியம் வளர்ச்சி கண்டுள்ளது. இவ் விலக்கியம் உண்மை நிகழ்ச்சிகளைத் தொகுத்து இலக்கியச் சுவைபடத் தரும் இயல்பியல் வகையைச் சார்ந்தது.

அனுபவங்கள், கதை, காவியம், சரிதம், சரிதை, சரித்திரம், சிந்தாமணி, தரிசனம், நிகழ்ச்சிகள், நினைவுகள், புராணம், வாழ்க்கைக்குறிப்புகள், வாழ்வு, விளக்கம், விஜயம், லீலை, ஜீவியம்

---

1. மு. வரதராசன், மொழி வரலாறு, ப. 227.
2. எடுத்தாளப்பெற்றது; சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப. 17.

போன்ற பல பெயர்களால் அழைக்கப் பெறும் இவ்வாழ்க்கை வரலாறு முதன் முதலில் சரித்திரம். சரிதை என்ற பெயரிலேயே வழங்கி வந்தது. வாழ்க்கை வரலாறு என்ற பெயரை உ.வே. சாமி நாதையரால் பெற்றது.[3]

மொழிவளம், வருணனைகள், வடிவம் இவற்றால் இவ் வாழ்க்கைவரலாற்று இலக்கியங்கள் சிறப்புப் பெறுகின்றன. இவ் விலக்கியம் உலகிற்கு நன்னெறி காட்டுவதால் அறவிலக்கிய மாகவும், காலக் குறிப்புகளுடன் கூடிய உண்மை நிகழ்ச்சிகளைக் கூறுவதால் வரலாறாகவும், சிறப்பான கட்டமைப்புடன் சுவைபடத் தொகுக்கப் பெறுவதால் புனைமாகவும் கருத இடமளிக்கிறது. பெயர்களை மாற்றி உண்மைக் கதைகள் என்ற தலைப்பிலும் வாழ்க்கைவரலாறுகள் வெளிவருகின்றன. கற்பனைக் கதைகளைவிட வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களுக்கு இன்று வரவேற்புள்ளது.

இலக்கிய வடிவங்கள்

நாட்குறிப்புகள், நினைவுக் குறிப்புகள், நிகழ்ச்சிகளின் தொகுப்புகள், தனியொருவர் வாழ்க்கை, பலருடைய வாழ்க்கை வரலாற்றுத் தொகுப்புகள், ஒருவருடைய வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டம், ஒரு மனிதனின் பல்வேறு வளர்ச்சி நிலைகள், கடிதங்கள் என்ற பல வடிவங்களோடு இவ்விலக்கியம் படைக்கப் பெறுகிறது.

வரலாற்றின் வரலாறு

நடுகல்லில் பெயரும் பீடும் எழுதும் பழக்கம் இருந்ததாகத் தொல்காப்பியம் உணர்த்துகின்றது.[4] புறநானூற்றுப் பாடல்கள் இயற்றிய ஔவையார் அதிகனின் வரலாறு படைத்தவராகவும், கபிலர் பாரியின் வரலாறு படைத்தவராகவும் உள்ளனர். பெருஞ் சித்திரனார் பாடல்கள் அவரை ஒரு தன்வரலாற்றாசிரியராக்கி யுள்ளது. சிலம்பில் இளங்கோவின் வாழ்க்கை வெளிப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் தேவந்தியும் மணிமேகலையில் சுதமதியும் தன் வரலாறு உரைக்கின்றனர். மெய்க்கீர்த்திகள் அரசர் வரலாறு கூறுவன. திருத்தொண்டர்தொகை, திருத்தொண்டர் திருவந் தாதி, பெரியபுராணம் ஆகியவை சிவனடியார் வாழ்க்கை

---

3. ச.சிவகாமி. தமிழ் வாழ்க்கைவரலாற்றிலக்கியம், ப. 4.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 5 : 24.

வரலாற்றுத் தொகுப்புகள் எனலாம். வரலாற்று வஞ்சி, உலா, பரணி, பிள்ளைத்தமிழ் ஆகிய இலக்கியங்களில் வாழ்க்கை வரலாற்றுப் பண்பு சிறுகச் சிறுக வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது. தமிழ் நாவலர் சரிதையும் ஆனந்தரங்கம் பிள்ளை நாட்குறிப்பும் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களே.

காலட்சேபம், வில்லுப்பாட்டு, கதை என்ற பெயர்களில் வாழ்க்கை வரலாறுகள் கிராமியப் புனைவினைப் பெற்றிருப்பினும், வாழ்க்கை வரலாற்று இலக்கியம் உரைநடையில் எழுதப் பெறுவதே சிறப்புடைத்து. தமிழுக்கு இவ்விலக்கிய வகை மேனாட்டாரின் கொடை எனலாம். 1902, 1904களில் வெளியான தா. ச. துரைசாமியின் தொண்டைநாட்டுச் சிற்ரட்டர் என்ற நூலே முதல் வாழ்க்கை வரலாறு என்ற கருத்து மறுக்கப்பட்டு 1868இல் சோமசுந்தர அடியவர் எழுதிய அச்சுதானந்த சுவாமிகள் வரலாறே தமிழின் முதல் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்று ஏற்கப்பட்ட முடிவு அண்மைக்கால ஆய்வின் பயன்.[5]

நூல் வரிசை

தமிழ்மொழியில் வாழ்க்கைவரலாற்று நூல்களை ஆண்டு வரிசையில் 1974இல் சாலினி இளந்திரையன் தொகுத்தளித்துள்ளார். 1985இல் வாழ்க்கைவரலாற்று நூல்கள் ஆயிரத்து எழுநூற்றுத் தொண்ணூறும், தன்வரலாற்று இலக்கியங்கள் நாற்பத்தி நான்கும், மொழிபெயர்ப்பு வாழ்க்கைவரலாறுகள் இருநூற்று அறுபத்திரண்டும், மொழிபெயர்ப்புத் தன்வரலாறுகள் முப்பத்தைந்தும் ச. சிவகாமியால் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. புதிய நூல்கள் இன்னும் எழுந்தவாறே உள்ளன.

நூலுக்குரியோர்

அரசர்கள், அரசியல்தலைவர்கள், சீர்திருத்தச்செம்மல்கள், தியாகிகள், நீதிபதிகள், தலைமையமைச்சர்கள், புதிய சித்தாந்தங்களை உருவாக்கியவர்கள், பெருந்தலைவர்கள், முதலமைச்சர்கள், வல்லரசர்கள், வள்ளல்கள், வழக்கறிஞர்கள், விடுதலைப் போராட்ட வீரர்கள், வீரச்சிறுவர்கள் ஆகிய அரசியல் ஆட்சித் துறை சேர்ந்தவர்களும் இற்றைநாள் எழுத்தாளர்கள், உரையாசிரி

5. தமிழ் வாழ்க்கைவரலாற்றிலக்கியம், ப. 49.

யர்கள், சாசனத்தமிழ்க்கவிகள், நாடக ஆசிரியர்கள், பல சமயம் சார்ந்த புலவர்கள், பெண்பாற்புலவர்கள், பேராசிரியர்கள், வரையறுத்த கால எல்லைக்குட்பட்ட புலவர்கள், வேற்று மொழிப் புலவர்கள் போன்ற இலக்கியவாதிகளும், பல்வேறு துறைகளின் சாதனையாளர்கள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் ஆகியோரும் வரலாற்று இலக்கியத் தலைவர்களாகின்றனர்.

பெருஞ்சிறப்புப் பெற்றவர்களே நூலுக்குரியோர் என்ற இன்றைய போக்கு மாற வேண்டும். உலகிற்குப் பயன்படும் நன்னெறியில் வாழ்க்கை நிகழ்த்திய யாரும் வரலாற்றுத் தலைவர் ஆகலாம். இவ்விலக்கியம் நீதியுரைக்க வேண்டாம் என்று அறிஞர் கூறுகின்றனர். ஆனால் இலக்கியம் இலக்கியமாக அதனகண் பொதிந்துள்ள அறவுரைகளும் துணைபுரிகின்றன.

> தொண்டுக்குப் பிறவி பயன்படல் வேண்டுமென்பது எனது வேட்கை[6]

என்கிறார் திரு.வி.க.

> ஒரு மனிதன் பிறந்தது முதல் இறந்தது வரை உள்ள பகுதியே வாழ்க்கை வரலாறு நுவலும் பொருளாகையால் அவனும் அவன் நாட்டிச் சென்ற நினைவுமே முதன்மைப் படுத்தப்படவேண்டும்—கோலியர்[7]

நூலமைப்பு

பிறப்பு, பெற்றோர், நூற்றலைவரின் குறிக்கோள்கள், சூழல், போராட்டங்கள், பண்புகள். அவர் சார்ந்த துறை பற்றிய செய்திகள், பொன்னுரைகள், பிறர் கூற்றுகள், இறப்பு இவற்றை உள்ளடக்கி நூல் அமைகின்றது. தன்வரலாறுகளில் நூற்றலைவரின் முடிவு அமைதற்கியலாது. நூற் பயன், நன்றி பாராட்டவும், உயர்ந்தோரை உலகிற்கு அறிமுகப்படுத்தவும், அறமுரைக்கவும் வாழ்க்கைவரலாறுகள் எழுகின்றன.

---

6. திரு. வி. கலியாண சுந்தரனார். திரு. வி.க, வாழ்க்கைக் குறிப்புகள், ப. 19.
7. எடுத்தாளப்பெற்றது; சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், ப. 39.

இலக்கியக் கொள்கைகள்

வாழ்க்கை வரலாற்றுக்கு நாடு, இனம், மொழி வேறுபாடின்றி யாரும் தலைவர் ஆகலாம். இந்நூலின்கண் உண்மை நிகழ்ச்சிகள் இடம்பெற வேண்டும். நிகழ்ச்சிகள் விடுபடாமல் சுவைபெறப் புனையப்பெறல் வேண்டும். நூல் சமுதாயத்திற்கு ஒரு நன்னெறியைக் காட்டுவதாக அமைய வேண்டும். நூலாசிரியர் நூற்றலைவரினும் சிறந்தவராக இருப்பினும் நூற்றலைவர் சிறப்புகளே வெளிக்கொணரப்படல் வேண்டும்.

ஆய்வுகள்

தமிழில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே வாழ்க்கைவரலாற்று இலக்கிய மறுமலர்ச்சி தோன்றி நூற்றுக் கணக்கான நூல்கள் அத்துறையில் வெளிவந்திருந்தும் அங்கொன்றும் இங்கொன்றுமான சில கட்டுரைகளைத் தவிர இத்துறையைப் பற்றிய ஆய்வு எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை.[8]

அறைதோறும் சிறந்தோரைக் குழு குழுவாக ஆய்வு செய்தல் என்ற போக்கு எங்கும் உள்ளதே தவிர இலக்கியத்தினை வகைமைப்படுத்தி ஆயும் போக்கு அதிகமாக இல்லை. வாழ்க்கை வரலாற்று இலக்கியத்தினை 1. சுருக்க வரலாறு (வாழ்கைக் குறிப்புகள்), 2. ஆய்வு முறை வரலாறு (ஆய்வுக்குப்பின் காணும் வரலாற்றுச் சுருக்கங்கள்), 3. ஒருசார்பான (புகழுரைகூறும்) வரலாறு, 4. வரலாற்றுக் கற்பனை (சாண்டில்யனின் கனவு மாடம் போன்ற வரலாற்றுப் புதினங்கள்) 5. சுவைமிளி வரலாறு இவையே வாழ்க்கைவரலாற்று இலக்கியமாகக் கொள்ளத்தக்கவை என்று பகுத்துள்ளனர்.[9]

வாழ்க்கைவரலாற்று இலக்கியங்களை நேரிடையாக ஆய்வுக் குட்படுத்துகின்றவர் வெகுசிலரே. இத்தகு ஆய்வு இன்று அருகியே உள்ளது. ஆனால் வாழ்க்கைவரலாறு தொடர்பான ஆய்வுகள் என்று பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

வரலாற்றுக் குறிப்புகள்

இலக்கிய வரலாறு படைக்கின்றவர்கள் தரும் புலவர் வரலாறுகளும் வாழ்க்கைவரலாறுகளே. இவைகள் ஆய்வின்

8. மேற்படி ப. 9,
9. மேற்படி ப. 13.

முடிவில் கண்ட வரலாறுகளாக விளங்குகின்றன. புலவர், அறிவிகள் போன்றோர் வரலாறு காண்போர் அதற்கான மூலங் களைக் கல்வெட்டுகள், இலக்கிய அகச்சான்றுகள், செவிவழிச் செய்திகள், கர்ண பரம்பரைக் கதைகள், நாட்டு வரலாறு இவற்றில் கண்டு நிகழ்ச்சிகளைத் தொகுக்கின்றனர். செய்திகளின் உண்மை களைக் கண்டறிந்து, களைவன களைந்து நல்லன தேர்ந்து அளிக்கும் போக்கில் இச்சுருக்கங்கள் அமைகின்றன. இவைகளை ஆய்வினால் கிடைத்த இலக்கியங்கள் எனலாம். இவ்வகை ஆய்விற்கு டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், மது. ச. விமலானந்தம், மு. அருணாசலம் போன்றோர் இலக்கிய வரலாறு களைச் சான்றுகளாகக் காட்டலாம்.

கால ஆய்வுகள்

காலக்குறிப்புகளோடு நாட்டு வரலாறு எழுதுவதில் மிகவும் பின்தங்கியவர்கள் தமிழர்கள். நாட்டு வரலாறே இங்ஙனமாயின் தனிப்பட்டோர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை எழுதுவதில் அவர்கள் காலத்தைக் குறிப்பிட்டு எழுதியிருக்கலாம் என்ற எதிர்பார்ப்புக்கு இடமே இல்லை. புலவர், அரசர் போன்றோர் வரலாறுகளை எழுதுகின்றவர், காலத்தை வரையறுப்பதில் இடர்ப்படுகின்றனர். எனவே அவர்கள் கால ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டி யுள்ளது. எனவே கால ஆய்வுகள் பெருக ஆரம்பித்தன ஒவ்வொரு வரும் தங்கள் ஆய்வுகளாலும், புதிய விளக்கங்களாலும் தாங்கள் கூறும் காலத்தினை நிலைநிறுத்த முயல்வதால் எது உண்மை என்பது அறிய இயலாததாகிறது. ஆனால் வாழ்க்கை வரலாற்று அடிப்படையில் பல வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கொண்டு செய்யப் பெறும் இவ்வாய்வுகளும் வாழ்க்கைவரலாற்று ஆய்வுகளே, ஆனால் நேராய்வுகள் அல்ல. (கம்பர் காலம், எம் ஏ , ஆய்வேடு, 1959). இக்கால ஆய்வுகள் பொருத்தமானவைகளா என்று ஆய்வு செய்வதும் உண்டு (இளங்கோவன், வையாபுரிப்பிள்ளையின் கால ஆராய்ச்சி, எம்.ஏ. ஆய்வேடு, 1971).

ஆய்வாளர்கள் காட்டும் வாழ்க்கைக் குறிப்புகள்

பல்வேறு இலக்கியங்களை ஆய்வு செய்யும் ஆய்வாளர்கள் இலக்கியப் படைப்பாளர்களைப் பற்றிய ஒரு வரலாறு படைக் கின்றனர். இவர்கள் தரும் செய்திகளும் இவர்களுடைய ஆழ்ந்த ஆய்வின் பயனாகக் கிடைப்பனவே. பெரும்பான்மை ஆய்வேடுகள் இவ்வாழ்க்கை வரலாறுகளைக் கொண்டுள்ளன.

சான்றுகள்

1. அம்மூவனார் பாடல்கள், லலிதா, கே., எம்.ஏ. ஆய்வேடு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1971; 2- அரிசில்கிழார் பாப்பா., எஸ், எம்.ஏ. ஆய்வேடு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1969; 3. அவ்வையார், தங்கம்மாள், எம்.ஏ. ஆய்வேடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1968. 4. ஆவூர் மூலங்கிழார், இராஜகோபாலாச்சாரி, ஆர்., எம்.ஏ. ஆய்வேடு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1969.

ஆய்வாளர்கள் வாழ்க்கைவரலாற்றையே தொகுத்து ஆய்வேடாக அளிப்பதும் உண்டு. 1. திருமங்கை ஆழ்வார் வாழ்க்கை வரலாறும் அருள் மொழிகளும், நம்மாழ்வார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம். 2. வ.உ.சியின் வாழ்க்கைவரலாறும் இலக்கியப் பணிகளும், சங்கரவள்ளிநாயகம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1985.

வாழ்க்கை வரலாற்று இலக்கிய வரலாறுகள்

சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கிய வரலாற்றினை 1973இல் ஆய்வேடாக அளித்ததுடன் 1974இல் நூலாகவும் வெளியிட்டுள்ளார். இதன்கண் தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியத் தோற்றத்தையும் வளர்ச்சியையும் முறையாக விளக்கி, தன் வரலாறும் ஓர் இலக்கியப் படைப்பாக மிளிர முடியும் என்று பல்வேறு வகைகளில் நிறுவியுள்ளார்; தமிழின் தன்வரலாற்று நூல்களை மதிப்பீடு செய்கின்றார்; தமிழில் வெளிவந்துள்ள சிறந்த வாழ்க்கை வரலாற்று நூல்களைப் பற்றி விளக்கமாக எழுதியிருப்பதுடன் உரைநடை வடிவமைப்பினைப் பெற்றுள்ள இந்த வாழ்க்கைவரலாற்று இலக்கியம் மிகக் குறுகிய காலத்திலேயே தமிழில் சிறப்பாக வளர்ந்து செழித்திருக்கும் பாங்கினைப் புலப்படுத்துகின்றார்.

சிவகாமி, இவ்வாழ்க்கை வரலாற்று இலக்கியம் பற்றி நுணுகிதாக ஆய்ந்து, தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் என்ற தலைப்பில் 1985இல் வெளியிட்டுள்ளார்.

இந்நூலின்கண் வாழ்க்கை வரலாறு என்பதனை விளக்கி, சங்க காலம் முதல் இன்று வரையிலான இவ்விலக்கிய வரலாற்றினைச் சுட்டி, இதன் வகைமைகளை ஆய்ந்து அளித்துள்ளார். இதுவரை இவ்விலக்கியங்கள் எவ்வாறு அமைந்துள்ளன, இனி எவ்வாறு அமையவேண்டும் என்பன போன்ற கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒப்பாய்வு நோக்கில் வாழ்க்கைவரலாறுகள்

இலக்கிய ஒப்பாய்வியல் இக்காலத்து வளர்ந்து வருகின்ற ஒரு துறை. இரு இலக்கியங்களை ஒப்பிடும்போது அவ்விரு இலக்கியப் படைப்பாளர்களைப் பற்றியும் ஒப்பிட ஒப்பாய்வாளர் முயல்கிறார். அத்தகு ஒப்பீடுகளில் படைப்பாளர்களின் வாழ்க்கைகளையும் ஆய்வாளர் ஒப்பிடுகிறார். அவர்களின் வாழ்க்கைச் சூழல்கள், கருத்தொப்புமைகளையும், வடிவ ஒப்புமைகளையும் தோற்றுவிக்கின்றன என்று நிறுவ இவ்வாழ்க்கை வரலாறுகள் ஆய்வாளருக்குத் துணை புரிகின்றன. சான்றுகளாகத் திருவள்ளுவர் வேமனர் ஒப்பாய்வினையும் (என். தர்மாரெட்டி. திருவேங்கடவன் பல்கலைக்கழகம், 1981), திருவள்ளுவர் காந்தியடிகள் ஒப்பாய்வினையும் (நா. மெய்ப்பொருள், பாரதிதாசன் பல்கலைக்கழகம்) சுட்டலாம். இத்தகு ஒப்பாய்வுகளில் இலக்கியக் கோட்பாடுகளும் ஒப்பிடப்படுகின்றன. சி. நயினார் முகமது, மஸ்தான்சாகிபு பாடல்கள் ஒரு திறனாய்வு என்ற ஆய்வேட்டில் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986) தாயுமானவர் பாடல்களுடன் மஸ்தான் சாகிபின் பாடல்களை ஒப்பிட்டு ஆய்ந்து அளித்துள்ளார். வாழ்க்கை வரலாற்றின் ஒற்றுமை வேற்றுமைகள், அதனால் ஏற்பட்ட கருத்தொற்றுமை, வேற்றுமைகள் இவை ஆய்வு செய்யப்பெறுகின்றன. சாமுவேல்தாசன், பாரதியார், வள்ளத்தோள் இருவருடைய வாழ்க்கைப் பின்னணிகள், சமுதாய நோக்கு இவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். சாந்தியடிகள் - திரு. வி.க. - ஓர் ஒப்பாய்வு என்ற தலைப்பில் மகாலிங்கம் ஆய்வு செய்துள்ளார் (சென்னைப் பல்கலைக்கழகம், 1980). ஒருவர் வரலாறே இருவேறு மொழிகளில் அமைந்துள்ள திறத்தையும், வேறுபாடுகளையும் ஆய்வதும் ஒப்பாய்வே. சான்றாகச் சி. லில்லிபாயின் கண்ணப்ப நாயனார் வரலாறு - ஒப்பாய்வு (தமிழ், தெலுங்கு) என்ற ஆய்வேட்டைச் சுட்டலாம் (திருவேங்கடவன் பல்கலைக்கழகம்).

நாட்குறிப்பு இலக்கிய ஆய்வுகள்

நாட்குறிப்புகளும் வாழ்க்கைவரலாறுகளே என்ற கருத்தை அனைவரும் ஒப்புவர். இந்நாட்குறிப்பு இலக்கிய ஆய்வுகளும் வெளிவந்துள்ளன. நா. செயப்பிரகாசம், மறைமலையடிகளின் இலக்கியப் படைப்புகள் என்ற ஆய்வேட்டில் அவருடைய கடிதங்களையும் நாட்குறிப்புகளையும் ஆய்விற்குட்படுத்தியுள்ளார் (சென்னைப் பல்கலைக்கழகம்). சீனிவாசனின் ஆனந்தரங்கம் பிள்ளையின் நாட்குறிப்பு - இலக்கண ஆய்வு (கேரளப் பல்கலைக்

கழகம்) நாட்குறிப்புகளின் ஆய்வில் ஒரு புதிய கோணத்தைக் காட்டுகின்றது. வி.ஜோதி, ஆனந்தரங்கம்பிள்ளையின் நாட்குறிப்பு ஓர் ஆய்வு என்ற தலைப்பில் முழு ஆய்வுசெய்துள்ளார் (அண்ணா மலைப் பல்கலைக்கழகம்).

நேராய்வுகள்

வாழ்க்கைவரலாறுகளும் வாழ்க்கை வரலாறு குறித்த ஆய்வு களும் பெருகியுள்ளன எனினும் வாழ்க்கைவரலாற்று இலக்கியத் தையே நேராய்விற்கு எடுத்துக்கொண்டு ஆய்வு செய்கின்றவர் சிலரே. கண்ணதாசன், அறிஞர் அண்ணாதுரை, மு. வரதராசன், திரு.வி. கலியாணசுந்தரனார், மறைமலையடிகளார் போன் றோரை ஆய்வு செய்கின்றனர். அன்னாரின் படைப்புகள் வழி அவர்களை அணுகுகின்றனரேயன்றி வரலாறுகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள்வழி அணுகுவதில்லை. அவ்வாறே அணுகினும் அன்னாரின் படைப்பிலக்கியங்களுக்குத் துணைபுரியும் நிகழ்ச்சி களையே ஏற்று ஆய்கின்றனர். இப்போக்கு மாற்றம் பெற வேண்டும்.

வாழ்க்கை வரலாறுகளையே ஆய்வுசெய்து அன்னார் வாழ்வு வழிச் சமுதாயத்தின் பலதிறத்தார்க்கும் கிடைக்கும் செய்தி யாது என்று நிறுவவேண்டும். இலக்கிய வடிவம், நடை, மொழி ஆகியவை விளக்கமாக ஆய்வுபெறல் வேண்டும்.

எவ்வெவ்வகைகளில் ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் இக்கட்டுரையின்கண் எடுத்துக் காட்டப்பெற்றிருப்பி னும் அவை அனைத்தும் நேராய்வுகள் அல்ல, நேராய்வுகள் அருகியே உள்ளன.

நேராய்வு பெற்ற வாழ்க்கைவரலாறுகள் சிலவே. ஆய்வு செய் வோர் வாழ்க்கைவரலாற்றுத் தலைவரின் வாழ்வின் பல கோணங் களைக் கண்டு ஆய்ந்து வெளியிடுகின்றனர். தன்வரலாறு, வாழ்க்கைவரலாறு இரண்டுமே நேராய்விற்குட்படுத்தப்படு கின்றன.

1. திரு.வி. க.வாழ்க்கைக் குறிப்புகள், வி.கே. வனசாட்சி, சென்னைப் பல்கலைக் கழகம். 1980, தன் வரலாற்றாய்வு.

2. உ.வே. சாமிநாதய்யர் எழுதிய பிறர் வாழ்க்கை வரலாற்று நூல்கள், இரா. வாசுதேவன், மதுரைக் காமராசர் பல் கலைக்கழகம், 1985. வாழ்க்கை வரலாற்று ஆய்வு.

ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

வாழ்க்கைவரலாறுகள் அனைத்துமே புகழுரைகளாக உள்ளன. இப்புகழுரைகளைக் களைந்து உண்மையறிய வேண்டியுள்ளது. வரலாற்றுக்குரியோரும் மனிதரே. அவர் குறை நிறைகளுக்குமுரியவர் என்பதனை மறத்தல் கூடாது. அவருடைய குறைகள் கூட அவருடைய வாழ்க்கைகைச் சூழலைப் பாதித்திருக்கலாம். அவற்றை எடுத்துக்கூறின் உலகம் நன்னெறியில் செல்லும். வரலாற்றுத் தலைவரின் குறைகள், வரலாற்று இலக்கியங்களில் மறைக்கப்பட்டு விடுகின்றன. ஈடுபாடு,பரிவுணர்ச்சி இவற்றால் நூலாசிரியர் வரலாற்றுத் தலைவருக்குப் புகழாரம் செய்தல் தவிர்க்கப்பட வேண்டும். இன்றேல் ஆய்வாளர் உண்மை காணல் இயலாது. நண்பரின் உயர்வுநவிற்சியும், பகைவரின் இழிவு நவிற்சியும் தவிர்க்கப்பெற, தன் வரலாறு எழுதலே சிறந்தது என்ற திரு.வி. கலியாண சுந்தரனாரின் கருத்து ஒப்பு நோக்குதற்குரியது[10].

தன் வரலாற்று நூல்களிலும் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இவை தன் மேம்பாட்டுரைகளாக அமைந்து விடுகின்றன. தம் குறைகளை மறைப்பதுடன் பிறரைக் குறை கூறுவதும், தாம் பட்ட துன்பங்களுக்கெல்லாம் பிறரே காரணம் என்று கூறுவதும் தன் வரலாறுகளில் காணப்பெறும் குறைகள், தம் தவறுகளை மறைக்கும் தற்காப்பு உணர்ச்சியும், விரும்பத்தகாத, நாணத்தக்க நிகழ்ச்சிகளைத் தவிர்த்து விடும் போக்கும் தன் வரலாறுகளில் தலைதூக்கி நிற்கின்றன.

நாட்குறிப்புகள் அல்லது காலக்குறிப்புடன் கூடிய நிகழ்ச்சிக் குறிப்புகள் இவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கை வரலாறு எழுதும் பழக்கம் பலருக்கும் இருப்பதில்லை, பலர் நாட்குறிப்பே எழுதுவதில்லை, எனவே காலத்தை அறுதியிட்டுக் கூற இயலாத நிலையில் வெறும் செய்தித் தொகுப்புகளே கிடைக்கலாம்.

வரலாற்றுத் தலைவர், அவருடைய உற்றார் செல்வாக்குக் கருதிக் குறைகளைச் சுட்ட இயலாத அச்சம் ஆய்வாளருக்கு ஏற்படலாம்.

புறச்சான்றுகளைத் தேடும்போது இலக்கிய அகச் சான்றுகளுக்கு மாறான செய்திகளும் கிடைக்கலாம்.

---

10. திரு. வி. க. வாழ்க்கைக்குறிப்புகள், ப. 7.

ஆசிரியர் புகுதல் வாழ்க்கைவரலாறுகளில் இயல்பான ஒன்று. உ.வே. சாமிநாதையரிடம் இக்குறை இருந்தது. நூலாசிரியர் தம் விருப்பு வெறுப்புகளை நூற்கண்காட்டியிருக்கலாம்.

உடன் காலத்தவர், உறவினர்கூறும் செய்திகள், செய்தித்தாள், நாட்டு வரலாறு ஆகிய நம்பத்தகுந்த மூலங்களை ஒப்பிட்டுச்செய்திகளின் காலம் உண்மை இவற்றை ஆய்ந்து, புனைவுகளைக் களைந்து மெய்ப்பொருள் காணும் துணிவுடன செயல்பட்டால் ஆய்வாளர் அவருடைய அணுகுமுறைக்கேற்ற ஆய்வினை நல்ல முறையில் செயலாக்கலாம்.

எதிர்கால ஆய்வுகள்

சமுதாய நோக்கில்

சமுதாயத்தில் ஏற்பட்ட சில மாற்றங்களையும் சிக்கல்களையும் எதிர்த்துப் போராடியவர்கள் வாழ்க்கைவரலாறுகளை ஆய்வதன்வழி அக்காலச் சமுதாயம் அத்தகு சிக்கல்களால் எவ்வெவ்வகைகளில் இன்னலுற்றது என்று அறிய இயலும். ஈ.வே. இராமசாமிப் பெரியார் வாழ்க்கையை விளக்கப் பல்வேறு வாழ்க்கைவரலாற்று நூல்கள் எழுந்துள்ளன. பெரிய மனிதர் பெரியார், பெரியார் இராமசாமி, பெரியார் ஒருசரித்திரம் போன்ற வற்றைச் சான்றுகளாகக் காட்டலாம். தீண்டாமை ஒழிப்பு. பகுத்தறிவு வாதம், மொழியுணர்ச்சி இவற்றைக்கொள்கைகளாகக் கொண்ட ஒரு கட்சியின் தலைவராக விளங்கி அவர் எத்தகைய விழிப்புணர்ச்சியை ஊட்டினார்? அதற்கு முன்னர் சமுதாயம் எந்நிலையில் இருந்தது? இவருடைய அறக்கொள்கைகளால் எத்தகைய மாற்றங்கள் பெற்றது? என்பன போன்ற ஆய்வுகள் நிகழ்த்தலாம். இவரைப் போன்றே சமுதாய வளர்ச்சிக்குப் பாடுபட்ட சீர்திருத்த வாதிகளின் வாழ்க்கை வரலாறுகள் ஆய்வுக்குட்படுத்தப்படலாம். பெரியாரும் அரசியலும் ஓர் ஆய்வு (அ. முத்துச்சாமி, சென்னைப் பல்கலைக்கழகம், 1981) என்ற ஆய்வேடு ஒரு தகுந்த சான்று.

மொழித்துறையில்

அரசியல் மாற்றங்களாலும், வேற்றார் படையெடுப்புகளாலும் இயல்புத்தன்மை மாறிய மொழியின் தூய்மையைக் காக்க அரும் பணி புரிந்தோர், புத்திலக்கியங்களுக்கு வழிகோலியவர்கள், மொழியியல் போன்ற புதுத்துறைகளில் முயன்றவர்கள் வாழ்க்கை வரலாறுகளும் (பெரும் புகழுக்கு உரியவைகளாக இல்லாதிருந்த போதும்) ஆய்விற்குரியனவே.

திரு. வி. கலியாண சுந்தரனார், மறைமலை அடிகள், பரிதிமாற் கலைஞர் போன்றோர் வாழ்க்கைச் சரிதங்களை ஆய்வு செய்யும் போது அவர்கள் கால மொழிநிலை, மொழித் தூய்மைக்காக இவ் வறிஞர்கள் எத்தகு குறிக்கோள்களை மேற்கொண்டனர்? வாணாள் முழுவதும் எங்ஙனம் போராடினர்? இத்தனித்தமிழ் இயக்கத்தினை எதிர்த்தோர் யார்? அவ்வெதிர்ப்புக்கான பின்புலம் யாது? எதிர்ப்பும் ஏற்பும் எவ்விகிதத்தில் இருந்தன? இயக்கத்தின் பயன் யாது? இவை போன்ற நோக்குகளில் ஆய்வுசெயின் மொழித் துறைக்குச் சிறப்பான ஆய்வுகள் கிடைக்கும்.

சான்று : மறைமலை அடிகளாரும் தனித்தமிழ் இயக்கமும் - ஓர் ஆய்வு, இரா. திருவேங்கடம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1981.

வரலாற்று நோக்கில்

சமயப் புரட்சியாளர், அரசியல் தலைவர், சமயத் தலைவர் வாழ்க்கைவரலாறுகளை வரலாற்று நோக்கில் ஆய்வு செய்யலாம்.

உளவியல் நோக்கு

சிலர் வாழ்க்கையில் படிப்படியாக மனமாற்றம் பெற்று உயர்கின்றனர். இவர்களின் மனவளர்ச்சி எங்ஙனம் ஏற்பட்டது? இதற்கான சூழல், பின்புலங்கள் யாவை என்ற ஆய்வினையும் மேற்கொள்ளலாம். இத்தகு ஆய்விற்கு எடுத்துக்காட்டாக நா. இலக்குமணப் பெருமாளின் 'சுப்பிரமணிய பாரதியாரின் ஆன்மீகச் சிந்தனைகள்' என்ற ஆய்வேட்டைச் சுட்டலாம். (மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1985). இதன்கண் பாரதியாரின் ஆன்ம ஞான முதிர்ச்சிக்கான வரலாற்றுச் சூழல் ஆய்வு செய்யப் பெறுகின்றது.

இத்தகு வளர்ச்சி நிலைகளை எல்லோர் வாழ்க்கை வரலாற்றிலும் காண இயலும். மனிதராகப் பிறந்தவர் மனித நிலையில் உயர்ந்து விளங்குவதற்குரிய இவ்வளர்ச்சிநிலை ஆய்வு, மக்களை ஊக்குவிக்கும் ஒன்று. காந்தியடிகள், கண்ணதாசன் போன்றோர் வாழ்க்கை வரலாறுகள் இத்தகு ஆய்விற்கு இடமளிப்பன.

விடுதலைப்போராட்ட வீரர் வ.உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் அரசியல் இலக்கியம் இரு துறைகளிலும் புகழ் பெற்றவர். இவருடைய மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் இவ்விரு நிலைகளில்

இவரை ஒளிரச் செய்தவை. இளமை முதல் இவருடன் இணைந்த் நின்ற இவ்விரு உணர்வுகளும் இருவேறு காலங்களில் வெளிப்பது டுள்ளன. ஒருங்கிணைந்து இவருடன் வளர்ந்த இவ்விரு உணர்வு களின் சிறப்புகளையும், அவை வெவ்வேறு காலக்கட்டங்களில் வெளிப்பட்டதற்கான சூழல்களையும் ஆய்வு செயின் அக்காலக் கட்டங்களுக்குட்பட்ட சமுதாய அரசியல் மொழி நிலைகளும் இவருடைய மனநிலையின் மாற்றங்களும் வெளிப்படும். இராஜ கோபாலாச்சாரியார், பண்டிதநேரு போன்றோர் இங்ஙனம் பல துறை வல்லுநர்களாகத் திகழ்ந்தவர்கள்.

நாட்டுப்புற இலக்கியத்துறை

தற்காலத்தில் நாட்டுப்புறவியல் கிளைத்துச் செழித்துள்ளது. கவிதை வடிவில் விளங்கும் தனிமனிதர் வரலாறுகள் இவ் விலக்கியங்களில் பொதிந்துள்ளன. கு. அய்யரு தந்துள்ள 'எட்டு நாட்டுக் கள்ளர் தலைவர் புன்னைத் தேவர்' என்ற ஆய்வேடு (மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1987) இத்தகு வாழ்க்கை வரலாற்று ஆய்வுக்கு ஒரு சான்று. இவ்வகை வரலாறுகளில் ஒரு குறிப்பிட்ட சாராரின் பேச்சு வழக்கு, பழக்கவழக்கங்கள், கொள்கைகள், அம்மக்களிடையே வரலாற்றுத் தலைவருக்கிருந்த செல்வாக்கு, அதற்கான காரணங்கள் போன்ற ஆய்வுகள் மொழி, இலக்கிய, சமுதாயப் பார்வைகளுடன் செய்யப் பெறின் நலம் பயக்கும்.

இலக்கியத் தலைவர் சார்ந்திருந்த துறை குறித்த ஆய்வு

இலக்கியத் தலைவர் ஒரு துறையை அல்லது பல்வேறு துறை களைச் சார்ந்தவராக இருக்கலாம். இவரால் இவர் சார்ந்த துறையும், அத்துறையால் இவரும் பெற்ற வளர்ச்சி நிலைகள் ஆய் விற்குரிய களமாகலாம்.

சான்று : பெரியாரும் அரசியலும் ஓர் ஆய்வு, அ. முத்துசாமி, சென்னைப் பல்கலைக்கழகம், 1981.

ஒரு குறிப்பிட்ட மனிதரால் ஒரு புதிய துறையே தோற்றம் கொண்டிருக்கும். அவர் அத்துறையின் அறிமுகத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் எவ்வாறு பாடுபட்டார் என்பதும் ஆய்வுப் பொருளாகலாம். அச்சுக் கலையை முதன்முதலில் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய அண்டிறீக்கி அடிகளாரின் வரலாற்றாராய்ச்சி இத்தகைய ஒன்று.

இலக்கண ஆய்வு

புதிதாக அறிமுகம் ஆகும் ஓர் இலக்கியம் வளர்ச்சி அடையும் போது அதற்கான இலக்கணமும் வரையறுக்கப்பட்டு விடுகின்றது. எழுதப்பட்ட இலக்கியங்களின் இலக்கணங்களைக் கொண்டுப் புதிய இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. எனவே வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களின் பொது இலக்கணக்கூறுகள் ஆய்வு செய்யப் பெறுதல் வேண்டும். ஓர் இலக்கியத்தின் இலக்கணம் என்பது அதனுடைய வடிவம், மொழி, பகுப்புகள், வன்மைகள் ஆகியவற்றைக் கொண்டது. இத்துறையில் ஆய்வுகள் வெளிவரின் வாழ்க்கை வரலாற்று இலக்கிய வளர்ச்சியும் சிறப்புற அமையும்.

இலக்கியக் கொள்கைகள்

ஒரு தனிமனிதன் வாழ்ந்த வாழ்வை மீண்டும் உயிரிப்பித்துக் காட்டுவதே வாழ்க்கை வரலாற்று இலக்கியம்.[10]

ஒருவனின் மரணம் என்பது அவனுடைய வாழ்வின் ஒரு பகுதியே. எனவே எவர் ஒருவரும் மரணமடையுமுன் அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று இலக்கியம் படைக்க முடியாது.[11]

இவை போன்ற வாழ்க்கை வரலாற்று இலக்கியக் கொள்கைகள் இலக்கிய உலகில் உள்ளன. தமிழ் வாழ்க்கை வரலாற்று இலக்கியக் கொள்கைகளும் வரையறுக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவ்வகை ஆய்வு மேற்கொள்ளப்படின் வரையறுத்த கொள்கைகளுடன் இவ்வகை இலக்கியம் செழிக்கும்.

புதிய தலைப்புகள்

1. மொழித்துறை
   1. புதிதாகத் தமிழ் கற்ற ஐரோப்பியர்
   2. ஐரோப்பியரும் சுவடியியலும் (எல்லீசு)
   3. அச்சுக்கலையும் ஐரோப்பியரும் (அண்டிறீக்கி அடிகளார், தத்துவ போதக சுவாமி)
   4. அறிஞர் வாழ்வும் மொழியியலும் (தேவநேயப் பாவாணர், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்)
2. அரசியல்
   1. அரசியலில் திரைக்கலைஞர் தாக்கம் (அறிஞர் அண்ணாதுரை, மு. கருணாநிதி, எம்.ஜி. இராமச்சந்திரன்)

---

10. எடுத்தாளப் பெற்றது; சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம். ப. 43.

2. கலைஞர் வளர்ச்சியில் திரைப்படத்துறை
(அறிஞர் அண்ணாதுரை, எம்.ஜி. இராமச்சந்திரன், மு. கருணாநிதி)
3. புதுக்கவிதைப் படைப்பாளரும் திரையிசைத் துறையும்
(வைரமுத்து, கண்ணதாசன்)
4. கவிஞர் வளர்ச்சியில் திரைப்படங்கள் (கண்ணதாசன்)
5. அரசியலும் பெண்பாலாரும்
(அன்னை கஸ்தூரி, அன்னிபெசன்ட் அம்மையார், இந்திராகாந்தி)

3. இலக்கியத்துறை

1. சிறுகதைகளில் வாழ்க்கையின் எதிரொலி
(கு- அழகிரிசாமி, புதுமைப்பித்தன்)
2. புதினங்களில் காணலாகும் அனுபவக் கூறுகள்
(அகிலன், கோவி. மணிசேகரன)
3. அரசியல்வாதியும் இலக்கியப் படைப்புகளும்
(சி.ஆர். இராஜகோபாலாச்சாரியர், ஜெயகாந்தன்)
4. உரைநடையில் புதுமை கண்டவர்
(ஆறுமுக நாவலர், மறைமலையடிகள், திரு. வி. கலியாண சுந்தரனார்)

4. சமயம்

1. சமய இலக்கியப் படைப்பாளரின் தொண்டு
(திருவாவடுதுறை ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை)
2. சமயச் சொற்பொழிவாளரும், சமயவளர்ச்சியும்
(கிருபானந்தவாரியார், கிரிதாரி பிரசாத்)
3. கிறித்துவ சமயத் தொண்டர்களின் பணி
(தத்துவ போதக சுவாமி, துறவி இன்னாசி)
4. இசுலாமிய சமயத் தொண்டர்
(இறைத்தூதர், சையித்இப்ராகிம், திருச்சி, முதற்பதிப்பு, 1962)
(இறைநேசர், சையித்இப்ராகிம், திருச்சி, முதற்பதிப்பு, 1963)
5. சமயத் துறையில் பெண்பாலார்
(அல்லை சாரதாமணி அம்மையார், அன்னை தெரசா)

5. பிற துறைகள்

1. கல்வி வளர்த்த சான்றோர்
(அழகப்பர், காமராசர், பச்சையப்பர்)
2. புதிய கருத்துகளை அறிமுகப்படுத்தியவர்
(கால்மாக்ஸ், ப்ராய்ட் - ஒப்பாய்வு செய்ய இடமளிக்கும் தலைப்புகள்)
3. உழைப்பால் உயர்ந்தவர்
(தொழிலதிபர் வரலாறுகள்)

4. அறிவியல் அறிஞரும் வாழ்க்கைச் சூழலும்
(சர். சி.வி. இராமன் போன்றோர் வரலாறுகள்)

5. வள்ளல்களும் அறக்கட்டளைகளும்
(பச்சையப்பர், அழகப்பச் செட்டியார்)

ஆய்வு நெறிகள்

1. வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றாயினும் பலவாயினும் தேடிப் பெறுதல்.

2. எடுத்துக்கொண்ட தலைப்பிற்கேற்ற செய்திகளை வரலாற்று நூல்களில் இருந்து தொகுத்தல்

3. வாழ்க்கை வரலாற்றுத் தலைவர் (உயிரோடு இருப்பின்), அவருடைய உறவினர், நண்பர், உடன் காலத்தவர்களையும், அவர் கொள்கைகளை எதிர்த்தவர்களையும் நேர் காணல்.

4. வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொகுத்தல்.

5; கடிதங்களை முயன்று சேர்த்தல் (செய்தித்தாள்களில், நூல்களில் வெளிவரும் கடிதங்களைச் சேர்க்கலாம். ஆனால் தங்களிடம் உள்ள ஆய்வாளருக்கு, கடிதங்களைக் கொடுத்துதவ யாரும் முன் வருதல் இல்லை).

6. பதிவு செய்த சொற்பொழிவுகளைத் தொகுத்தல்

7. படைப்பாளரின் படைப்புகளில் சான்றுகள் காணல்.

8. ஆய்விற்குத் துணையான நிகழ்ச்சிகள் விடுபடாமல் சேர்த்தல்.

9, வாழ்க்கைவரலாற்று நூலில் காலம் சரிவர கணிக்க முடியாதவற்றைப் புறச்செய்திகள் கொண்டு நிலைநாட்டல்.

10. ஒருவருக்கு வெற்றிகளும், தோல்விகளும் கிடைத்திருக்கும். தலைவரின் குறைகள்கூட அத்தோல்விகளுக்குக் காரணிகளாக இருந்திருக்கலாம். அவற்றை அஞ்சாது சுட்டல்.

11. வெற்றிகளில் வாழ்க்கைத் தலைவருக்குத் துணையாக நின்றவர்கள் யார்? அவர்களுடைய பங்கு யாது? என்று நிறுவுதல். (ஆனை கொன்றவன் ஒருவன் பரணிபெற்றவன் ஒருவன் என்ற நிலை எந்நாளும் உண்டு என்பதனை ஆய்வாளர் மறத்தல் கூடாது.)

இவற்றை ஆய்வாளர் முறையாகப் பின்பற்றினால் அவருடைய ஆய்வு சிறக்கும்.

முடிவுரை

வாழ்க்கை வரலாற்று இலக்கிய ஆய்வு குறைவாகவே உள்ளது. இவ்வாய்வு வளர்ச்சி பெறுவதுடன் நெறிப்படுத்தப்படல்வேண்டும். நேராய்வுகள் பெருக வேண்டும். ஆய்வாளர்களின் உரிமைகள் கட்டுப்படுத்தப்படாமல் அவர் சுதந்திரமாக இயங்க வேண்டும். ஆய்வாளர் சமுதாய மொழி அரசியல் மனவியல் வரலாற்று இலக்கண நோக்குகளில் ஆய்வினை மேற்கொள்ளலாம். வாழ்க்கை வரலாற்று இலக்கியங்களைப் போன்றே ஆய்வுகளும் பெருகினால் இலக்கியங்களில் உள்ள ஒரு சில குறைகளும் தவிர்க்கப் பெற்று அவை புதிய ஒளியுடன் தழைக்கத் தொடங்கும்.

துணை நூல்கள்

1. இராமலிங்கம் பிள்ளை, வெ., என் கதை, சென்னை, மூ. ப 1955.
2. கண்ணதாசன், வனவாசம், சென்னை, மறு. ப 1958.
3. கலியாணசுந்தரனார், திரு. வி., திரு. வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், சென்னை, இ ப 1969,
4. சாமிநாதய்யர், உ.வே., என் சரித்திரம், சென்னை, இ. ப 1982.
5. சாலினி இளந்திரையன், வாழ்க்கை வரலாற்று இலக்கியம், சென்னை, மு. ப 1974,
6. சிவகாமி, ச., தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. மு, ப 1985
7. சுப்ரமணியன், சுகி,, பெரிய மனிதர் பெரியார், நார்த்தாம் பூண்டி. மு. ப 1982,
8. பெரியகருப்பன், இராம. (இ.பெ.) தமிழண்ணல் (பு.பெ.), இ. முத்தையா, தமிழியல் ஆய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், இ. ப 1988.
9. வரதராசன், மு , மொழி வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 1966.
10. விமலானந்தம், மது.ச, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை, மு. ப 1987.
11. வேணு, ஏ.என், பெரியார் ஒரு சரித்திரம், சென்னை. மு.ப 1980,
12. ...பெரியார் இராமசாமி (தொகுப்பு), ஈரோடு, 1960.
13. ...தொல்காப்பியம், பொருளதிகாரம். கழக வெளியீடு, சென்னை, 1974.
14. ஆய்வேடுகள், சென்னைப் பல்கலைக்கழகம்.
15. Annie Thomas, Dissertations on Tamilology. Inter-national Institute of Tamil Studies, Madras. 1977.

பயண இலக்கியம்

ச. சிவகாமி

தமிழில் 1889இல் தனித்த இலக்கிய வகையாக உருக்கொண்ட பயண இலக்கியத்தின் பக்கம் ஆய்வாளர் பார்வை மட்டும் சரிவர செலுத்தப்படவில்லை; மிகச் சில ஆய்வுகளே நிகழ்த்தப்பட்டுள்ளன. படைப்பாளர் யார் என்பதை விட, படைப்பு எத்தகையது என்பதில் ஆய்வாளர் அக்கறை காட்டுதல் கடமை. பயண இலக்கியத்தின் பொதுத் தன்மைகளை வரையறுப்பதாய், உலக நாடுகளில் மகளிர் நிலை, புனிதப் பயணம், பயண இலக்கியமும் வாழ்க்கை வரலாற்றிலக்கியமும் போன்ற தலைப்புகளில் ஆய்வு மேற்கொள்ளலாம்.

I

தமிழில் 1889இல் தனித்த இலக்கிய வகையாக உருக்கொண்ட பயண இலக்கியம் பன்முக வளர்ச்சியுடன் வளம் பெற்றுள்ளது. சிறு சிறு கட்டுரைகளாகவும், நாட்டுப்புற இலக்கிய வடிவங்களிலும் முகங்காட்டிய இவ்வகைக்கு, சேலம் பகடாலு நாயுடு தம் 'ஸ்ரீ ஆரிய திவ்ய தேச யாத்திரை சரித்திரம்' எனும் நூலால் முழு உருவங் காட்டினார். உரைநடை யிலக்கியத்துள் இயல்பு நிலையில் அமையும் பயண இலக்கிய நூல்கள் நீதியிலக்கியம்-போன்று இரட்டைப் பயனுடையன. இலக்கிய இன்பம் நல்குவதுடன் பொது அறிவுக் கருத்துகளை ஏராளமாக வெளிப்படுத்தும் இவ்வகை ஆய்வுலகிற்குப் பேரிடனாக, பல களங்கட்கு ஊற்றாகத்திகழ்கிறது. ஆய்வாளர் பார்வை இப்பக்கம் சரிவர செலுத்தப்படவில்லை. மிகச் சில ஆய்வுகளே நிகழ்த்தப்பட்டுள்ளன.

நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் பயண நூல்கள் எனும் எம் ஃபில் பட்ட ஆய்வேடு (இரா. ஞானபுஷ்பம்) இவ்வகையில் முகிழ்த்த முதல் மலராகும். தொடர்ந்து இதன் ஆய்வாளரே தமிழில் பயண இலக்கியம் எனும் முனைவர் பட்ட ஆய்வேட்டையும் நல்கியுள்ளார். பயண இலக்கிய ஆய்வு முன்னோடிகளுள் ஒருவரான இவர், தமக்கு முன் எழுத்துள்ள ஆய்வுக்கட்டுரைகளின்

துணையோடு குறிப்பிடத்தக்க ஆய்வை யளித்துள்ளார். பயணம் மேற்கொள்வோர் கொள்ளும் நோக்கத்திற்குத் தக நூல்களைப் பகுத்து ஆய்ந்துள்ளார். ந, வேலுசாமியின் 'பயண நூல் வழிப் பண்பாடு (ஆசிய நாடுகள் அளவில்)' ஆய்வேடு புதியதொரு பாதையை இவ்வாய்வில் காட்டியுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியரின் நூல்கள் (சோ. சிவபாதசுந்தரத்தின் பயண இலக்கியம் ஒரு பார்வை- அ. பிறைமதி; பயண இலக்கியம்-மணியன் உத்திகள்-இரா. வள்ளி; ஒரு பத்திரிகையாளரின் மேலை நாட்டுப் பயண அனுபவங்கள்-ஓர் ஆய்வு-செ. ஏழுமலை) குறிப் பிட்ட இடத்தைப் பற்றிய ஆய்வு (இலங்கைப் பயண நூல்கள்-முத்து விஜயாள்) எனப் பிற சில எம். ஃபில் பட்ட ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன. மற்றும் சில ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்க லாம். இவற்றை நோக்க, பல கோணங்களில் பலவாகப் பெருகிக் கொண்டிருக்கும் இவ்வகை யிலக்கியத்திற்கு எழுந்த ஆய்வுகள் மிகக் குறைவே என்பது வெளிப்படை. ஆய்வாளருக்கு அரும்பெருஞ் சுரங்கமாய்ப் பயண இலக்கியம் பரந்துள்ளது.

II

பொருள் புலப்பாட்டிலோ, காலக் கணிப்பிலோ, இலக்கண வரையறையிலோ, நூல் பற்றாக்குறையிலோ அன்றிக் கிடைப் பருமையிலோ எனப் பிறவாகப் பிற பல-துறைகளில் எழும் ஆய்வுச் சிக்கல்கள் ஒப்பு நோக்க இதனுள் குறைவே. எனினும் ஆய்வு நெறியில் பொதுவானதாக அமையும் சில குறைபாடுகளை இவண் கருதலாம். ஆய்விற்குத் தலைப்பு தேர்தல் இவற்றுள் குறிப்பிடத் தக்க ஒன்று. ஒருபார்வை, ஓர் ஆய்வு என்பன போன்ற சொற்களை நீக்கியும், மிக நீண்டமையும் தலைப்புகளைச் சுருக்கிச் செவ்வை யாகவும் தரல் சிறப்புடையது. ஆய்வின் நோக்கமும் போக்கும் தெளிவாகத் தலைப்பினுள் புலப்பட நிற்றல் வேண்டற்பாலது. பைடப்பிலக்கியங்களின் தலைப்பு சுற்பாரைக் கவர்ந்து படிக்கத் தூண்டுவதுபோல், ஆய்வாளரின் ஆய்வுத்திறம் ஒளிரும்படியாகத் தலைப்பினையமைத்தல் சாலச் சிறந்தது.

பரந்துபட்டமையும் ஆய்விற்கென நூல்களைத் தனித்துத் தேர்தலும் ஆய்வாளரின் திறனை, ஆய்வுத் தேர்ச்சியைப் பறை சாற்றக் கூடியது. ஆய்வு நோக்கிற்குப் பல்லாற்றானும் பொருந்தி யமைவன; வெளிச்சத்திற்கு வரவேண்டியன; தனித்துவத்தை நிலை நிறுத்துவன; புதிய முடிபுகளுக்கு, விளக்கங்களுக்குத் தளமளிப்பன

எனச் சிறப்புறும் நூல்கள் தவறாது உட்படுத்தப்பட வேண்டும். குறிப்பாகத் தற்கால இலக்கியங்களில் இவற்றை நினைவில் கொள்ளுதல் - படைப்பாளர் யார் என்பதைவிட, படைப்பு எத்தகையது என்பதில் ஆய்வாளர் அக்கறை காட்டுதல் கடமை.

தற்காலம் படைப்பிலக்கியங்களை ஆய்தலில் பிறிதொரு குறைபாடும் உணர்த்தத் தக்கது. ஆய்வாளருக்கு வேண்டிய விருப்பு வெறுப்பற்ற நடுநிலை, ஆய்வுப் பொருளின் நிறையைப் போற்றுவதோடு குறையை எடுத்துக்காட்டுதலும் இடம்பெற வேண்டும். காழ்ப்புணர்ச்சி கடியப்படல் போன்றே ஒருபுறஞ் சார்தலும் விலக்கப்படவேண்டும்; கண்ட குறைகளை மறைக்காது நேர்மையுடன் சுட்டும் துணிபு இன்றியமையாதது.

ஆய்வேடுகள் நூலாக்கம் பெறும்பொழுது அதில் ஏதேனும் குறைபாடுகள் சுட்டப்பட்டிருப்பின் அவற்றை நீக்கியும், கால இடைவெளியில் பெற்ற வளர்ச்சியை இணைத்தும் செம்மையாக்கி வெளியிடல் சிறப்பு; ஆய்வாளர் கடமையுமாம்.

III

பல்நோக்கம், பல்துறையினர், பல்வேறு இடங்கள், பல் கோணப் பார்வைகள் எனும் பன்மை நிலை பயண இலக்கிய ஆய்விற்குப் பெருந்துணையாகிறது. மற்றும் பயண இலக்கிய வகைமைகள்; ஒரு சில ஆய்வு முயற்சிகளே தோன்றியுளதேனும் இவற்றால் எண்ணற்ற ஆய்வுகள் இத்துறையுள் எழுவதற்கு வாய்ப்பாகின்றது. ஆய்வுத்துறையின் வளர்ச்சி முழுவளவில் இதில் பயன்பட இடனுளது, பொதுநிலை ஆய்வுகள், தனித்தநிலை ஆய்வுகள், ஒப்பியல் ஆய்வுகள், பிறதுறையிணைவு ஆய்வுகள் எனப் பல வகைமைகளால் அவை விரிகின்றன,

பயண இலக்கியத்தின் பொதுத் தன்மைகளை வரையறுப்பதாய்ச் சில எழலாம். பயண இலக்கியத் தோற்றுவாய் மட்டுமே இதுவரை ஆய்வாளர் சிலரால் விளக்கப்பட்டுளளன. அமைப்பு உள்வீடு, வெளியீடு எனப் பல நிலைகளில் வளர்ந்துள்ள வளர்ச்சி காணும் வரலாற்றாய்வு ஒரு நிலை. உத்திகள்—குறிப்பாகப் பயண இலக்கியத்துள் மட்டுமே பின்பற்றியுள்ள தனித்த உத்திகள் -வடிவ, வெளியீடு, பொருள் உத்திகள் என இதுவும் விரித்தற்குரியது. பயண இலக்கிய வகைமைகட்கேற்பப் பொருட் பகுப்பாய்வும் தனித்த ஆய்விற்குரியது மட்டுமின்றி இன்றியமையாததும் கூட. பயண இலக்கியக் கொள்கைகளை வரையறுத்தல், நோக்கமும் பயனும்

காட்டல், வகைமைகளின் இயல்பு வரையறை செய்தல் எனப் பலவாறாக ஆய்தல் பயண இலக்கியத்தை மேம்படுத்தவும் உதவும். மேனாட்டார் தந்துள்ள விளக்க வரைவுகள் இவ்வகை ஆய்வு களுக்குத் துணை செய்யும்.

பயணப்பட்டறிவுகள், இலக்கியமாகக் கருக்கொள்ளும் இயல்பும் தனித்து நோக்கப்படலாம். இலக்கியக் கூறுகள் இதனுள் சிறப்பிடம் கொள்ளும்.

தேர்ந்த சில, பல பயண நூல்களின் துணை கொண்டும் பல ஆய்வுகள் நிகழ்த்தலாம். பொதுவாக எல்லா நூல்களிலும் படைப் பாளர் தாம் சென்ற நாடுகளில் மகளிர் நிலை பற்றிய எண்ணங் களைத்தந்துள்ளனர். அவற்றை மட்டும் தொகுத்து உலக நாடு களில் மகளிர் நிலை என ஆய்தல் பயனுள்ள கல்வியாகும். தமிழ் மகளிரோடு ஒப்பு நோக்குதற்கும், சமூகவியற் கல்விக்கும் இத்தகை யன உறுதுணையாகும், இதுபோன்றே தொழிலாளர் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ள வியலும்.

தமிழர் பாரெல்லாம் பரந்த பெருமையுடையவர், இன்றைய சூழலில் அயல் நாடுகளில் வாழும் தமிழரின் தகுதிநிலை, வாழ்வியல் முறைகள், செய்யும் பணிகள், தமிழ்மொழியின், இயன்றால் இலக்கியத்தின் நிலை, தமிழகத்தோடு, இந்தியாவோடு கொண் டுள்ள உறவு முதலானவற்றைப் பயண இலக்கியங்களின் வழி ஆய்ந்துரைத்தல் இயலும்; இன்றைய சூழலில் தேவையான ஆய்வும் ஆம். தரம் தாழ்ந்த நிலையில் வாழும் பீஜித் தீவு போன்ற நாடு களில் அதற்குரிய காரணங்களையும் ஆய்ந்து, மேம்படற்கான வழி முறைகளைக் காட்டல் பயனுடைத்து.

பயண இலக்கியம் முழு வடிவம் கொள்ளு முன் தோன்றிய முன் வரைவுகளான கட்டுரைகள், நாட்டுப்புறப்பாடல் வடிவங்களில் கும்மி, சிந்து என அமைந்த பயணக் குறிப்புகளும் தனித்த ஆய்வுக் களனாகின்றன.

குறிப்பிட்ட காலக்கட்டத்துள் தோன்றிய நூல் கொண்டும் பொதுநிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்படலாம்.

ஒரு நாட்டின் புவியியல், வரலாற்றியல், தொழில், அரசியல், மக்கள் தொகை, வேளாண்மை, கனிப்பொருட்கள், பொருளாதார நிலை, பழங்குடியினர், கலைகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், அந்நாட்டிற்கேயுரிய தனித்த பெருமைக்குரியவையான

விலங்குகள், தாவரங்கள், விழாக்கள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள்... எனப் பல செய்திகளைப் பயண இலக்கியப் படைப்பாளர் தருவது பயண இலக்கியம் பொழுது போக்கு இலக்கியமல்ல; பொது அறிவுக் களஞ்சியம் என உறுதி செய்வதாம். எனவே பயண இலக்கியம் தரும் பொது அறிவுச் செய்திகள் தனித்த ஆய்விற்கு இடமளிக்கின்றன.

அகன்ற ஆய்வாக மட்டுமின்றி ஆழ் ஆய்வாகவும் அமையும் நிலையில் தனித்த நிலையின அமைகின்றன. நெ.து. சுந்தர வடிவேலு, மணியன், சோ. சிவபாத சுந்தரம் இவர்களின் பயண இலக்கியப் படைப்புகளின்மீது தனித்த ஆய்வுகள் தோன்றியுள்ளமை போன்று பிறரிலும் குறிப்பாக சாவி, பரணீதரன். பி.வி.ஆர். இருதயநாத், ராஜம் கிருஷ்ணன் போன்றோர் மீதும் இவ்வாய்வு படரலாம். படைப்புகளின் எண்ணிக்கை மட்டுமின்றிப் படைப்பில் தனித்துவம் குறித்தும் ஆய்வு செய்யலாம். அருண் போன்ற படைப்பாளிகள் ஒரிரு நூல்கள் படைத்திருப்பினும் தனித்த ஆய்விற்குரிய சிறப்புடையோரே.

இலங்கைப் பயண ஆய்வுகள் போன்று, ஒவ்வொரு நாடும் தனித்து நோக்கத்தக்கன. இத்தகு ஆய்வுகள் தாய் நாட்டோடு ஒப்புநோக்குதற்கும் களனாகின்றன. குறிப்பாகச் சமூகவியல் கல்விக்கு அடித்தளமான வாழ்வியற் செய்திகள், நம்பிக்கைகள். பழக்க வழக்கங்கள், சமயநிலை... போல்வன விளக்கம் பெறும். இனங்களின் வரலாறு காணவும், ஒற்றுமை வேற்றுமைகளுக்குக் காரணமறியவும், சிறப்பு நோக்கவும் பயன்படும்.

பயண இலக்கியங்கள் தரும், கல்வியாளர் பயணம், அரசியலார் பயணம், காட்சியாளர் பயணம், இதழாளர் பயணம், கலைஞர் பயணம்... என்பனவான வகைமைகள் ஒவ்வொன்றும் தனித்த ஆய்விற்குரியன. ஒவ்வொன்றின் பொருட்பகுப்புகளும், வெளியீட்டு உத்திகளும், அவ்வத் துறைச் செய்திகளும், அதன் வல்லுநர் பற்றிய விளக்கங்களும், தமிழோடு, தமிழரோடு ஒப்புநோக்கலும், படைப்பாளரில் தனிச்சிறப்புடையோரை அளவிடுதலுமாக இவ்வாய்வு விரிந்து மேன்மையுறும்.

இவ்வியல்புடை ஆய்வுகளில் புனிதப் பயணங்களாக அமையும் நூல்கள்-ஆய்வுப் பெருக்கத்திற்கு வழிவகுக்கின்றன. இவற்றின் வழிக் கோயில் வரலாறுகள், புராணக்கூறுகள், நோன்புகள் மற்றும் விழாக்கள், சிற்பம், ஓவியம் முதலான கலைகள், சமயத் தத்துவ

விளக்கங்கள், சமயச் சான்றோர் வரலாறுகள்... எனப் பல ஆய்வுகள் எழுதல் சிறப்பாகும். பழம் பெருமையுணர்தல்; விளங்காதன விளக்கமுறல்; பண்பாட்டு வரலாற்றினால் மறைந்த உண்மைகள் புலப்படல்... எனப் பல பயன்கள் இவற்றால் பெறுதற்கு இடனுண்டு.

உலக நாடுகளில் கல்வி, தொழில், வேளாண்மை, அறிவியல் முன்னேற்றம்... என இயலும் தனிக் கூறுகளையும் தொகுத்து, நமது நெறிகளுடன் இணைத்து ஆய்தலும் ஏற்புடையதே. உள் நாட்டுப் பயணங்களைத் தனியே தொகுத்தும் ஆய்வு செய்யலாம். இவ்வகை ஆய்வுகளில் இடப்பகுதி கொண்டும், இனங்கள் கொண்டும் வேற்றுமை ஒற்றுமைகளை யணுகலாம். வேற்றுமை களுக்கிடையே இனப்பண்பாடுகள் இந்தியப் பண்பாடாக இணையு மாற்றைத் தெளிவுபடுத்தி நாட்டொருமைப்பாட்டிற்குத் துணை நிற்கலாம். உள்நாட்டுப் பயணங்களுள்ளும் மாவட்ட வாரியாக அமையும் தமிழகப் பயணங்களை மட்டுமே ஆய்வுக் களனாகக் கொண்டு பல்வேறு துறைகளிலும் தமிழகத்தின் முதன்மையை, வளர்ச்சியை, மாற்றத்தை, வீழ்ச்சியை விளக்கும் ஆய்வும் உடனடித் தேவையாகும். இதன் வழித் தமிழ்ப்பண்பாட்டின் வரலாறையும், பழமையையும், பிற இனப் பண்பாட்டுக் கலப்பால் பெற்ற மாற்றத்தையும் தெளிவாக வலியுறுத்தவும் இயலும்.

இற்றை ஆய்வுலகில் ஒப்பியலாய்வு தனிச்சிறப்புப் பெறுகிறது. ஒப்பாய்வுக் களங்களுக்குப் பயண இலக்கியம் மிக்க பயன் பாடுடையது. இன்று வளர்ந்துவரும் பிற துறைகளோடான, அத்துறை சார்ந்த அணுகுமுறைகளோடு அமையும் ஒப்பாய்விற்கு மிகப் பொருத்தமான துறையாகப் பயணம் அமைகிறது. இவ் வகையில் வரலாறு, அரசியல், சமூகவியல், தொல்லியல், பொருளியல் என்பன பெரும் பங்கேற்கின்றன. சிறப்பாகச் சமூகவியல் அணுகுமுறையில் உலக நாடுகளின் நம்பிக்கைகள்; பழக்க வழக்கங்கள்; விழாக்கள்; வழிபாடு என்பன ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வாக விரிந்த நிலையில் காண்பதற்கு இடனளிப்பது.

இதனுள் ஊர்ப்பெயராய்வுகளும், மொழியாய்வுகளும் குறிப்பிடத்தக்கன. பிற பயண நூல்களைவிட, புனிதப் பயண நூல்களில் ஊர்ப்பெயராய்வு பெருமை பெறுகிறது. இன்னும் சற்று விளக்கமாகக் கூறின் தமிழ் ஊர்ப்பெயராய்வுகள் இந்நூல் களையும் கருவி நூல்களுள் ஒன்றாக உட்படுத்தும் பொழுதுதான் முழுமை பெறும். பயண நூல் படைப்பாளரில் பலர் பிறமொழி

களில் மருவி வழங்கும் தமிழ்ச் சொற்கள் மற்றும் தமிழ்ச் சொற் களாகக் கருதத்தக்க பிறமொழியில் காணும் சொற்கள் பலவற்றை யும் சுட்டியுள்ளனர். இவற்றைக் கொண்டு மொழியாய்வு மேற் கொள்ளல் தமிழின் பெருமைக்கு அரண் செய்யும்.

பலதிறப்பட்டவர் பயணம் மேற்கொள்கின்றனர். எழுத் தாளர் மட்டுமின்றிப் பிறரும் தம் பயணப் பட்டறிவினைப் பிறருக்கு வழங்குதலில் முனைந்துள்ளனர். எனவே அவரவர்க்குரிய மொழிநடையால் பயண நூல்கள் உலா வருகின்றன; மொழியியல் ஆய்விற்கு அடிக்கல்லிடுகின்றன. மொழியியல் ஆய்வில் விருப்புடை யோருக்கு இவை பெரு விருந்தாகும். பல திறப்பட்டவர், பலவித நோக்கங்களுடன் பயணம் செய்வதால் - உளவியற் கல்வியில் ஈடுபாடுடையோர் உளவியலணுகுமுறை மேற்கொள்வதற்கும் வாய்ப்புள்ளது. இதனால் படைப்பாளரின் உள்ளத்தையும் வெளிக் கொணரும் சுவையான ஆய்வு வெளிப்படலாம்.

பிற இலக்கிய ஒப்பியல் ஆய்வும் இதன்பாற்படத்தக்கன. பயண இலக்கியம் வாழ்க்கைவரலாற்றோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டமைகிறது. இரண்டிலும் அமையும் ஒப்புக் கூறுகளைத் தனி ஆய்வாக நோக்கவியலும். புனிதப்பயணங்களில் தல புராணங்களின் தனித்த இடத்தைச் சிறப்பிக்கும் ஆய்வும் மேற்கொள்ளப்படலாம். இவை தவிர பயண இலக்கியப் படைப்பில் பெருமையுற்றிருக்கும் இருவேறு படைப்பாளரை ஒப்பிட்டும் ஆயலாம். பல கோணங்களில் படைக்கப்படுதலால் இத்தகு ஆய்வுகளும் பலவாகப் பெருகக் கூடும்.

நலம் பாராட்டல், திறனாய்தல், விளக்கந்தரல் என நின்ற தமிழாய்வு இன்று பலவாகப் பரந்தும், அகன்று ஆழ்கல்வியாக வளர்ந்தும் சிறப்புற்றுள்ளது. இலக்கிய அறிவு மட்டும் போதாது தமிழாய்வாளர்க்கு; பல்துறையறிவு அடிப்படை நிலையிலேனும் தேவை என்ற நல்லதொரு சூழல் தமிழாய்வு உலகில் தோன்றி யுள்ளமை தமிழாய்வு வளர்ந்து வளம் பெற்றுக் கொண்டிருப்பதை நவில்கிறது

பயண இலக்கிய ஆய்வுக்குச் சில தலைப்புகள்

1. தமிழ்ப் பயண இலக்கியம் - பொது நோக்கு
2. பயண இலக்கிய வரலாறு
3. பயண இலக்கியக் கோட்பாடுகள்
4. பயண இலக்கிய மொழிநடை

5. பயண இலக்கிய உத்திகள்
6. பயண இலக்கியப் பொருட் பகுப்பாய்வு
7. பயண இலக்கியம் - நோக்கமும் பயனும்
8. உள்நாட்டுப் பயண இலக்கியங்கள்
9. பயண இலக்கியங்களில் தமிழர் பண்பாடு
10. பயண இலக்கியங்கள் வழி உலக நாடுகளில் தமிழர்
11. பயண இலக்கியங்கள் காட்டும் உலக மகளிர் நிலை
12. பயண இலக்கியங்கள் காட்டும் உலகத் தொழிலாளர் நிலை
13. பயண இலக்கியங்கள் வழி அமெரிக்கா; ரஷ்யா; சீனா...
14. பயண இலக்கிய வரலாற்றில் பரணீதரன், சோமலெ...
15. சமய வளர்ச்சியில்/பணியில் புனிதப் பயணங்களின் பங்கு
16. பயண இலக்கியங்கள் புலப்படுத்தும் கல்வி, வரலாறு,
17. பயண இலக்கியமும் உளவியலும்
18. பயண இலக்கியமும் சமூகவியலும்
19. பயண இலக்கியத்தில் மானிடவியல்
20. பயண இலக்கியத்தில் ஊர்ப் பெயர் ஆய்வு
21. பயண இலக்கியத்தில் கலைகள்
22. புனிதப் பயணங்களும் தலபுராணங்களும்

பயணம் இலக்கியம் பற்றிய ஆய்வேடுகள்

இலங்கைப் பயண நூல்கள்— ஓர் ஆய்வு, முத்து விஜயாள், அண்ணா மலைப் பல்கலைக் கழகம், (எம்.ஃபில்)

ஒரு பத்திரிகையாளரின் மேலை நாட்டுப் பயண அனுபவங்கள்—ஓர் ஆய்வு, செ. ஏழுமலை, சென்னைப் பல்கலைக் கழகம், (எம். ஃபில்)

சோ. சிவபாத சுந்தரத்தின் பயண இலக்கியம்—ஒரு பார்வை, அ. பிறைமதி, பாரதிதாசன் பல்கலைக்கழகம். (எம். ஃபில்)

தமிழில் பயண இலக்கியம், ஏ. பப்பு சுவாமி, சென்னைப் பல்கலைக் கழகம் (முனைவர்)

நாட்டு விடுதலைக்குப் பிறகு தமிழ்ப்பயண இலக்கியம், இரா. ஞான புஷ்பம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வழி சென்னைப் பல்கலைக் கழகம், (முனைவர்) நூலாக்கம் கண்டது.

நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் பயண நூல்கள், இரா. ஞான புஷ்பம், சென்னைப் பல்கலைக் கழகம். (எம். ஃபில்)

பயண இலக்கியம்—மணியன் உத்திகள், இரா, வள்ளி, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், (எம். ஃபில்)

பயணநூல் வழிப் பண்பாடு (ஆசிய நாடுகள் அளவில்) ந, வேலு சாமி, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் (முனைவர்)

துணைநூற்பட்டியல்

தமிழ் இலக்கியக்கொள்கை-9, ச.வே. சுப்பிரமணியன் & ச. சிவகாமி (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984

தமிழ் இலக்கிய வகையும் வடிவும், ச.வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை; 1984

தமிழில் பயண இலக்கியம், இரா. ஞானபுஷ்பம், தேன்மழைப் பதிப்பகம், சென்னை, 1990 (முனைவர் பட்ட ஆய்வேடு)

தமிழியல் ஆய்வு, இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்), மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்; மதுரை, இ.ப; 1988

Literary Heritage of the Tamils, S. V. Subramanian & N. Ghadigachalam, International Institute of Tamil Studies, Madras, 1981.

கட்டுரை

ஜான். ஆசீர்வாதம்

சங்க காலத்தில் முற்றிலுமாகப் புதையுண்டு போயிருந்த கட்டுரை இலக்கிய வகை சிலப்பதிகாரக் காலத்தில் இலைமறைக் காயாய்த் திகழ்ந்து சிறிது தலைத்காட்டத் தொடங்கிற்று. இலக்கிய வரலாற்றில் கட்டுரைகளின் வளர்ச்சி பற்றிய காலம் என்று 19ஆம் நூற்றாண்டைக் குறிப்பிடுவது பொருந்தலாம். எந்த ஒரு கட்டுரையையும் வடிவ ஆராய்ச்சி, பொருள் வள ஆராய்ச்சி என்ற இரண்டு பொதுநிலைகளில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தலாம்.

கட்டுரை, கதை, புதினம், நாடகம், கடிதம் என்று அனைத்துமே உரைநடை இலக்கியத்தைச் சார்ந்தன என்றாலும் கட்டுரையே உரைநடையின் தலைவாயில். தலைவாயிலின்வழி நுழைந்தாலன்றி ஒரு இல்லத்தின் நிலையை முழுவதுமாக அறிய முடியாது எனலாம். அதுபோல் கட்டுரை இலக்கியத்தின் தன்மை களை அறிந்தாலன்றி உரைநடை இலக்கியத்தின் இயல்பை முழுவதுமாக அறியஇயலாது. கவிதைக்குப்பின் பிறந்தது கட்டுரை. ஆனால் கவிதைக்கும் முன் அமையவேண்டிய ஒன்று. இக்கருத்தை எல்லா இலக்கியங்களுக்கும் பொதுமைப்படுத்தியுள்ளனர் அறிஞர்.[1]

தமிழில் கவிதை முன்தோன்றியமைக்குக் காரணம் உண்டு. பழங்கால நிலையில் ஓலைச் சுவடிகளும் எழுத்தாணிகளும் எழுதும் கருவிகளாக விளங்கின. ஒரு அங்குல இடமே எழுத்துக்களமாக அமைந்த நிலையில், சொல்லுவனவற்றை அடிவரையறை செய்து இரண்டடி நான்கடிகளில் சொல்லும் தேவை இருந்தது. நீண்டு அகன்ற வெள்ளைக் காகிதங்கள் அன்று புழக்கத்திலிருந்திருந்தால் திருவள்ளுவர் அறம் போன்ற வலியுறுத்தப்பட வேண்டியவற்றை பத்துக் குறள்களான இருபதே அடிகளில் கூறி நின்றிருக்க மாட்டார். பக்கம் பக்கமாக அறங்குறித்து எழுதிச் சென்றி

---

1. It is doubtless that prose preceeded Poetry, but as a developed literary form it is later than Poetry- Velayudam, P. V., Early Malayalam Prose, University of Kerala, Trivandrum, 1973

ருப்பார். மேலும் அக்காலத்துக் கல்வி முறையும் முழுவதுமாக மனனம் செய்வதை மூலநெறியாகக் கொண்டிருந்தமையால் அடிவரையறைகள் எழுத்துத் துறையில் முக்கியமாயின. விரித்துரைக்கின்ற நூலாசிரியன் மாணவரிடைச் செல்வாக்கிழக்கும் நிலை இருந்திருக்க வேண்டும். கடுகைத் துளைத்து குறுகத்தரித்து ஏழ் கடலைப் புகட்டிய வள்ளுவரின் பாணியே அவர்தம் குறள் நூல் செல்வாக்குற மூல காரணமாகத் திகழ்ந்திருக்க வேண்டும். 'உறுபசியும் ஓவாப் பிணியும் சேராதியல்வது நாடு'—என்று ஏழே சீர்களில் ஒரு நாட்டையே வள்ளுவர் வருணித்திருக்க, பட்டினம் ஒன்றின் வருணனைக்கே பல நூறு அடிகள் எடுத்துக்கொண்டவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் (301 அடிகள் கொண்ட நூலில் 217 அடிகள் பட்டின வருணனை). குறளைப் பாடம் செய்த ஒரு மாணவன் பட்டினப்பாலையைப் பாடம் செய்யும்போது மெய்யாகவே ஒரு பாலையைக் கடந்த அனுபவத்தை உணர்ந்திருப்பான். உருத்திரங்கண்ணனாரின் நெடுவரிகள் அவன் கண்களை உறுத்தியிருக்கும். இவ்வாறு சுருக்கிக்காட்டவேண்டிய காரணங்களினாலேயே கவிதை முன் தோன்றியது. இக்கட்டிலிருந்து ஒருவகை விடுதலைப்பாடே உரைநடையும் கட்டுரையும் எனலாம்.

கவிதைத் துறையின் வளர்ச்சிவேகமே உரைநடையைத் தோற்றுவித்தது. கவிதைக்கு அடிமைப்பட்டுக் கிடந்த உரைநடை, கவிதையை அடிமைப்படுத்தும் அளவிற்கு அதனுடைய வளர்ச்சியின் வேகம் இருந்தது. ''மூற்காலச் செய்யுளுக்கு உரைநடை அடிமை, இக்காலத்துச் செய்யுள் உரைநடைக்கு அடிமை என்று பொருத்தமுடன் குறித்தார் ஓர் அறிஞர்''[2] மடைதிறந்த வெள்ளம் விரைந்தோடிப் பரந்து பாய்வது போன்றது இது எனலாம்.

உரைநடையும் கட்டுரையும்

செய்யுள் உரைச் செய்யுளானது; பிறகு உரையிடையிட்ட செய்யுளானது; அதன் பின்னர் உரையானது என்று இந்த வளர்ச்சிப் படிகளைக் குறித்து நாம் பேசலாம்.[3] தொகைப் பாட்டின் காலத்திலேயே கட்டுரை இலக்கிய வகைக்குக் கால்கோள் நடந்துவிட்டதெனலாம்.

---

2. தமிழ் உரைநடையின் வளர்ச்சி - சிந்தனைக் களஞ்சியம், ப. 441
3. தமிழ் வியாசங்கள், பக். 71-72

'உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்...' என்று தொடங்கும் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனின் புற நானூற்றுப் பாடலை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொண்டால் அப்பாடல் கவிதை வடிவில் காணப்பட்டாலும், ஒவ்வொருவரியும் எழுவாயும் பயனிலையும் நிரலே அமைந்த உரைநடை வாக்கிய மாகவே விளங்குவதை அறியலாம். வரிவரியாகக் கவிதையாக அமைந்த அந்தப் பாடல் முழுவதையுமே தொடர்ந்த தொடர் களாக அமைந்த கட்டுரைபோல் எழுதினாலும்கூட அதன் பொருள் சிதையவில்லை.

> உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்று. பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுளளும் சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும். ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும். வேற்றுமை தெரிந்த நாற்பாலுளளும் கீழ்ப் பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன் கண்படும்,

கட்டுரை எழுதுவது போலவே அமைகிறது மேற்சொன்ன செய்யுள். 'கல்வியின் சிறப்பு' என்று வேண்டுமானால் கட்டுரைத் தலைப்பும் வைக்கலாம். மேற்கண்ட பாடலில் - 'பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே', 'மேற்பால் ஒருவனும் அவன் கட்படுமே' என்று அடிகளின் இறுதியில் வரும் ஏகார சுற்றசையே அவற்றைச் செயயுளடிகளாக நிறுத்தியுளளனவே தவிர பிற நிலையில் அவை உரைநடைத் தொடர்களாகவே தென்படுகின்றன. மன்னோ, கொல்லோ என்று வரும் அசைகள் பொதுவாக எந்த ஒரு பொருள் குறித்தும் நிற்பனவல்ல. ஒலிநயத்திறகென்றே அமைகின்றன.[4]

கலித்தொகை 37ஆம் பாடலின் ஒரு பகுதி ஒரு சிறுகதை யாகவே அமைகிறது. ''ஊசல் ஊர்ந்து ஆட ஒரு ஞான்று வந்தானை, ஐய சிறிது எனனை ஊககி எனக கூற அவன ஊக்க, கை நெகிழ்வு பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பில்''. கலித்தொகை 51 ஆம் பாடல் முழுவதுமே ஒரு கதை. வரி ஒழுங்கில் எழுதப்பட்ட ஒன்றே அதனைச் செயயுளாகியது.

---

4. இராமலிங்கம், மா., புதிய உரைநடை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1980

"அன்னையும் யானும் இருந்தோமா; இல்லீரே உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு அன்னை அடற்பொற் சிரகத்தால் வாங்கி சுடரிழாய்! உண்ணு நீர் ஊட்டிவா என்றாள். யானும் தன்னை அறியாது சென்றேன். என்னை வளைக்கை பற்றி நலிய தெருமந்திட்டு, அன்னாய் இவன் ஒருவன் செய்தது காண் என்றேன். அன்னை அலறிப் படர்தர உண்ணாது நீர் விக்கினான் என்றேன். அன்னையும் தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக் கடைக்கண்ணால் கொல்வான் போல் நோக்கி நகைக் கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்."

இது போன்ற பாடல்களெல்லாம், படிக்கும்போது ஒரு கதையையோ அல்லது கட்டுரையையோ படிக்கின்ற உணர்வினையே தருகின்றன. இவற்றை உரைச் செய்யுள்கள் எனலாம். இவ்வாறு சங்க காலத்தின் செய்யுள்களினுள்ளேயே உரைப் பாங்குப் புதைந்திருக்கக் காணுகிறோம். இதனால் கட்டுரை என்பது முழுவதுமாக மிகப் பிற்காலத்திலேயே கருக்கொண்டு நின்ற ஒரு இலக்கிய வகை என்று சொல்லிவிடுவதற்கில்லை. கட்டுரையின் விரிவான நிலை மற்றும் முன்னுரை நிறைவுரை தலைப்பு என்கிற வடிவத்தோற்றங்களே பிற்காலத்தில் வந்தவை. எழுத்துச் சாதனச் சிக்கல் ஒன்றாலேயே நீண்ட கட்டுரைகளும் சிறுசெய்யுட்களாக அடைத்து வைக்கப்பட்டன. சங்க கால நிலையில் கட்டுரை செய்யுளுள் மறைந்திருக்க அடுத்து வந்த காப்பியங்களின் நிலையில் கட்டுரை நேரில் தோன்றியும் தோன்றாதிருந்த நிலை இருந்தது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளான சிலப்பதிகாரத்தை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

> உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் உரை
> சாலடிகளருள்[5]

உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளான சிலப்பதிகாரத்தில் கட்டுரை என்ற சொல் நேரடியாக ஆங்காங்கே காணப்படுவதை அறிகிறோம்.

> கோட்டியில் கட்டுரை கேட்டனன் யாரினை[6]
> காவியக் கண்ணார் கட்டுரை எடுக்குநர்[7]

---

5. சிலப்பதிகாரம், பதிகம் 87-81
6. மேற்படி, பதிகம் 54
7. மேற்படி 14 : 138

கட்டுரையாட்டி.[8]

உலவாக் கட்டுரை பலபாராட்டி[9]

காப்பியத்தின் 23ஆம் காதையாகிய மதுரைக் காண்டத்தின் இறுதிக் காதை, கட்டுரை காதை என்றே பெயர் கொண்டு உள்ளது. மேலும் காப்பியத்தின் இறுதிப்பகுதியில் கட்டுரை, நூற் கட்டுரை என்ற பகுதிகள் அமைகின்றன.

இவ்வாறு உரைநடையும் செய்யுளுமாக இணைந்து அமைகின்ற காவிய வகையினை வடமொழியாளர் 'சம்பூகாவியம்' என்று தனிப் பெயரிட்டழைக்கின்றனர். கவிமணி அவர்கள் ஆசியஜோதி என்ற பெயரில் வழங்கிய சித்தார்த்தர் கதையை மிதலைக் கவிஞர் ஒருவர்[10] யசோதரா என்ற பெயரில் சம்பூகாவி மாக வழங்கியுள்ளது இந்திய இலக்கியத்தில் புகழ் பெற்று விளங்குகிறது.

சங்க காலத்தில் முற்றிலுமாகப் புதையுண்டு போயிருந்த கட்டுரை இலக்கிய வகை சிலப்பதிகார காலத்தில் இலைமறைக் காயாய்த் திகழ்ந்து சிறிது தலைகாட்டத் தொடங்கிற்று எனலாம்.

19ஆம் நூற்றாண்டை இதனால் இலக்கிய வரலாற்றில் கட்டுரைகளின் வளர்ச்சி முற்றிய காலம் என்று குறிப்பிடுவது பொருந்தலாம். கட்டுரையின் தோற்றக் காலம் என்று குறிப்பது சரிதானா என்பது ஐயப்பாட்டிற்குரியது,

கட்டுரை எனுஞ்சொல்

கட்டுரை எனும் சொல், பொருள் பொதிந்த வார்த்தை, பழமொழி, புனைந்துரை, பொய், வியாசம் என்று பல பொருள் களைத் தருவது.[11] இலக்கிய வழிவில் அது வியாசம் என்ப தாகும்.

கட்டுரையின் வளர்ச்சி வேகங்கண்டது மிகவும் பிற்காலத்தி லேயே என்றாலும், கட்டுரை எனும் சொல் கவிதைக் காலமாகிய முன்னோடிக் காலத்திலேயே புழக்கத்திலிருந்துள்ளது. ஆனால் அக்காலை ஒரே பொருளில் இச்சொல் வழங்கப்படவில்லை,

---

8. மேற்படி 23 : 23
9. மேற்படி 2 : 73 81.
10. மைதிலி சரண்குப்த
11. தமிழிலக்கிய வகையும் வழிவும், ப. 656

பழமைக் கட்டுரை பல பாராட்டியும்[12]

உலவாக் கட்டுரை பல பாராட்டியும்[13]

என்று செய்யுட் குறிப்புகளில் கட்டுரை எனும் சொல் நலம் பாராட்டாகிய பொருள் பொதிந்த உரை என்ற பொருள்படுகிறது.

வழுவில் சாபம்;
பட்டனையாதலின் கட்டுரை கேணீ''[14]

கோட்டமில் கட்டுரை கேட்டனன்[15]

என்று வரும் செய்யுட் குறிப்புகளில் கட்டுரை என்பது வரலாறு என்ற பொருளைத் தந்தது.

காவியங் கண்டார் கட்டுரை எடுக்குநர்[16]
கட்டுரையாட்டியேன்[17]

என்பன போன்று வருமிடங்களில் கட்டுரை என்பது ஒரு தனிச் சொல் என்றுங்கூடப் பொருள் தந்து நிற்கிறது.

கட்டுரை வகையும் கரந்துறை கணக்கும்[18] என்று வரும் மணிமேகலைக் குறிப்பில் 'கட்டுரை' என்பது தொகுத்துச் சொல்லும் ஆற்றலைக் குறிக்கிறது.

இவ்வாறெல்லாம் பொருள் பொதிந்த உரை, வரலாறு, தனிச் சொல் என்று கட்டுரை என்பதற்கு இலக்கியங்களிலேயே பல பொருள் காட்டப்படுவது தெரிகிறது. உரைக்காரர் காலத்தில் 'கட்டுரை' என்பது இலக்கணம் என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டுள்ளது—

மணிமேகலையு மொரு மரப்பெயருள்
கருதுங் காஞ்சியெனுங் கட்டுரை[19]

இவை ஐந்து சந்தியும் நாட்டிய கட்டுரை[20]

---

12. மணிமேகலை 25 : 170
13. சிலப்பதிகாரம் 2 : 81
14. மேற்படி 23 : 170
15. மேற்படி பதிகம் : 54
16. மேற்படி 14 : 138
17. மேற்படி 23 : 27
18. மணிமேகலை 2 ; 25
19. மணிமேகலை உரைப்பதிப்பு. 2ஆம் பதிப்பு, ப. 191
20. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரம் உரை, ப. 83

மேற்சொன்ன குறிப்புகளுள் ''கட்டுரை வகையும் கரந்துறை கணக்கும்''[21] என்று வரும் மணிமேகலைக் குறிப்பே இன்று கட்டுரை என்பது வழங்கும் பொருள் கொண்டு விளங்குகிறது. இக்குறிப்பில் நமக்கு இரண்டு செய்திகள் புலப்படுகின்றன.

ஒன்று 'கட்டுரை வகையும்' என்றமையால் கட்டுரைகளின் பல வகைகள் நிலவின என்று தெரிகிறது. அடுத்து இங்கே கட்டுரை என்பது கணக்கு வகையோடு வைத்துக் குறிக்கப்பட்டதால், எண்ணும் எழுத்தும் எக்காலும் இணைத்துக் கூறப்படும் மரபிருந்த மையால் எழுத்துக் கட்டுரையும் வாய்மொழிக் கட்டுரையும் கூட இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. தொகுத்துக்கூறும் தொன்மைக் காலக் கட்டுரைகளும் செய்யுள் வடிவிலேயே இருந்திருக்க வேண்டும்.

இக்காலத்தில் கட்டுரை கட்டுப்பாடுடைய ஒரு வகை உரை நடை என்ற பொருளிலேயே இயங்கி வருகிறது.

கட்டுரையாவது யாது?

கட்டுரையே உரைநடை இலக்கியத்தின் மெய்யான வடிவம். கதை, புதினம், நாடகம், என்பன உரைநடையை விட்டுச் சற்று விலகிப்போன இலக்கிய வடிவங்களே. இவற்றிற்கு உரைநடை ஒரு கருவி மட்டுமே. கட்டுரையில்தான் உரைநடையின் முழுமை யும் ஈடுபடுத்தப்படுகிறது. வடமொழியாளர் கட்டுரையை, 'நிபந்த்' என்றனர், 'பந்த்' என்பது 'கட்டு' என்ற பொருளைத் தருவது; நிபந்த் என்பது கட்டவிழ்ந்த நிலையைக் குறித்தது. வடமொழியாளர் கட்டுரையையும் காவியவகையிலேயே சேர்த்த னர். காவ்யங்கள் இரண்டு வகை என்றனர். அவைகள் கத்; பத் அதாவது உரைநடைக் காவியம், பாட்டுக் காவியம் என்பன. உரைநடைக் காவியத்திலேயே நாடகம், கதை, கட்டுரை ஆகியன சேர்கின்றன.

ஆங்கிலத்தில் எஸ்ஸே (Essay), காம்பொஷிஸன் (Composition) என்ற சொற்கள் கட்டுரையைக் குறித்தன. 'எஸ்ஸே' என்பதில் வரும் சே (say) என்பதே 'சொல்' என்ற பொருளு டையது. இதனால் எஸ்ஸே தொகுத்துச் சொல்லுவதைக் குறித்தது. அவ்வாறே Composition என்பதில் வரும் 'Compose' என்பது சேர்த்துக் கட்டுதலைக் குறிப்பது. வடமொழியாளர் கட்டுரையையும் காவியம் என்றது போலவே ஆங்கிலத்தில் 'Pope'

21. மணிமேகலை 2 : 25

என்பவரின் 'Essay on Man' என்ற கட்டுரை கவிதை வடிவிலேயே உளதாம். இன்றைய நிலையில் தமிழில் கட்டுரை என்பது முன்னுரை, உடலுரை, நிறைவுரை என்ற அங்கங்கள் கொண்டு முழு உரைநடையில் இருக்க வேண்டும் என்ற பொதுவான விதி உள்ளது. எனினும் கட்டுரையின் அளவு நிர்ணயிக்கப்படவில்லை. இது அனைத்து மொழிக் கட்டுரைகளுக்கும் பொதுவான விதியாகவே விளங்குகிறது. லாக் (Lock) என்ற மேலை நாட்டவர் எழுதிய தத்துவக் கட்டுரையொன்று 400 பக்கங்கள் கொண்டு விளங்குகிறதாம். இது போன்று நெடுங்கட்டுரையை நூல் என்று குறிக்கும் மரபே தமிழில் உண்டு. 1892இல் தமிழில் வெளிவந்த சத்தியபிரகாசிகை - என்ற உரைநடை 622 பக்கங்களைக் கொண்டிருந்தது. இது நூல் என்றே அழைக்கத்தக்கது,[22] நூலென்றழைப்பதா கட்டுரை என்றே புகல்வதா என்று இத்தகு நெடுங்கட்டுரைகளால் எழுந்த சிக்கல் தீர்க்கவே இக்காலத்தில் கட்டுரை வரையறையைச் சொல் எண்ணிக்கைக் கணக்கில் செய்யும் முறை கையாளப்படுகிறது. ஆயிரம் சொற்களில் இருக்க வேண்டும், இரண்டாயிரம் சொற்களில் இருக்க வேண்டும் என்று வரையறுக்கும் முறை உள்ளது. எனினும் இது துல்லியமான வரையறையாகாது. 'ஆ' என்பது போன்ற வியப்புக் குறிகளும், 'ஓ' என்பது போன்ற வினாக் குறிப்புகளும் ஒரேழுத்தாக நிற்க சொல்வகையில் வைத்து எவ்வாறு எண்ணுவது என்பது போன்ற சிக்கல்கள் உருவாகலாம். ஆக இன்றைய நிலையிலும் கட்டுரைக்கு அளவு வரையறை இல்லை என்றே சொல்ல வேண்டும். எழுதும் பொருளை ஆராய்ந்து திட்டமிட்டு அதற்கேற்ப கட்டுரையினைப் படைத்தால் கட்டுரை தன்னைவிலேயே ஒரு முழுமை பெற்று விடும். பக்க அளவுப் பிரச்சினை அப்போது எழாது. அதனால் கட்டுரை எழுதும்போது கருத வேண்டியது இதுதான் :

> கட்டுரை ஒரு நீகழ்ச்சியைச் சித்திரிப்பதாக இருக்கலாம். அது கதையாகி விடக் கூடாது. கட்டுரையில் ஒரு உரையாடலும் அமையலாம். ஆனால் நாடகமாகி விடக் கூடாது. கட்டுரை ஆசிரியரின் மெய்யான தன்மையை வலியுறுத்துவதாக இருக்கலாம். ஆனால் ஆராய்ச்சியாகிவிடக் கூடாது. எதிர்மாறான இந்த வரைமுறையால் இறுக்கப்பட்டுக் கட்டுரை தனக்கென்று ஒரு வடிவத்

22. ஞானச் சந்திர ஜான்சன், தேசோபகாரி (இதழ்), ஆகஸ்ட் 1990, ப.12

தையும் பெற்று ஒருவயான வடிவத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.[23]

கவிதையும் கட்டுரையும்

கட்டுரை உரைநடை இலக்கியத்தைச் சேர்ந்தது. கவிதை சந்த வழியைச் சேர்ந்தது. கவிதை கற்பனைக்கு முழு இடம் வழங்குவது. உரைநடையைச் சேர்ந்த கட்டுரை கற்பனைக்கு மிகுந்த இடம் தருவதல்ல. இதுபோன்ற வேறுபாடுகளை வைத்து உரைநடையைக் கவிதையோடு வேறுவேறு விதமாக ஒப்பிட்டு அறிஞர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். உரை நடைக்கு அவர்கள் சொல்லும் இயல்புகள் கட்டுரைக்கும் பொருந்தும்.

கவிதை ஜெட் விமானம் என்றால் உரைநடை மின்சார இரயில்.[24] மொழி கவிதை வடிவில் வெளிப்படும்போது மலை நீர் வீழ்ச்சியைப் போன்றது. உரைநடையாகும்போது அமைதியான நீரோட்டம். கட்டுரையாகும்போது ஒரு வரம்பில் தேக்கப்பட்ட ஏரி நீர் போன்றது. கவிதையை விடவும் கட்டுரை பொதுமக்கள் தொடர்பு மிகுதியும் கொள்ளுகிறது, உரைக்காரர் என்ற தரகர் களின் தேவை கட்டுரைக்கு உண்டாவதில்லை. கவிதையின் விளைவு கற்பனை இன்பமாகும். கட்டுரையின் விளைவு அறிவின்பமாகும்.[25]

வடிவ அமைப்பில் இவ்விரண்டிற்கும் உள்ள பளிச்சென்று புலப்படும் ஒரே வேற்றுமை. கவிதையை மடக்கி மடக்கி எழுது கிறோம். உரைநடையை நெடிதே எழுதிச் செல்லுகிறோம்.[26] தற்காலத்துச் சில புதுக் கவிதைகளைப் பொறுத்த மட்டில் இது முழுவதும் பொருந்துகிற கருத்தாகும். முழு நீள உரைநடைத் தொடர் ஒன்றே மடக்கி மடக்கி எழுதின அளவிலேயே புதுக் கவிதை வடிவம் பெற்று விடுகிறது.

கட்டுரையும் பிற உரைநடை இலக்கியங்களும்

கட்டுரை மட்டுமன்றி நாடகமும், சிறுகதையும், புதினங்களும் உரைநடை வகையில் சேர்கின்றன. ஆயினும் கட்டுரையே அனைத்தையும் முன் நின்று நடத்துவது.

---

23. புதுத்தமிழ் முதல்வர்கள், ப. 79
24. புதிய உரைநடை, ப. 7
25. மேற்படி ப. 8
26. மேற்படி ப. 8

கட்டுரை யதார்த்தமானது. கதை முற்றிலும் கற்பனையோடு கூடியது. கதையாசிரியன் விண்ணிலும் விடியா இருளிலும் நினைத்தவற்றைக் கண்டெழுதும் கற்பனைப் பலன் கொண்டவனாய் விளங்குகிறான். கட்டுரையாளன் கட்டுரையை வடிவமைப்பதிலும், திட்டமிடுவதிலும் கற்பனையைப் பயன்படுத்தினாலும் பொருள் பங்கீட்டில் உண்மையோடு ஒன்றிக் கொள்ள வேண்டியவனாகிறான். இதனால் கதையைக் கனவு என்றால் கட்டுரையை நனவு எனலாம். கதையின் விளைவுகளை விடவும் கட்டுரையின் விளைவு நேரடியானது, கதைகள் நீதியை உரைத்தாலும் நேரடியாக உரைப்பதில்லை. முழுப் பொழுதுபோக்கிற்காகக் கதைகள் உண்டு. வெற்றுப்பேச்சுப் பேசுவதைக் கதைத்தல் என்ற வழக்கு இருக்கிறது. வெறும் பொழுதுபோக்கான கதைப் படைப்புகளை வைத்தே இவ்வழக்கு உருவாயிருக்க வேண்டும். கட்டுரையின் எந்த ஒரு வகையிலும் பொழுதுபோக்கு என்ற பேச்சுக்கு இடமில்லை. கட்டுரை என்பது ஒரு இல்லத்தின் பலகணி போன்றது. உள்ளிருந்து புறங்காணவும் புறமிருந்து உட்காணவும் அமையும் கருவியாகும். கட்டுரை இலக்கியம் என்ற நூலுக்கான அணிந்துரை பின்வருமாறு அமைகிறது:

"இக்கட்டுரைத் தொகுப்புகள் சங்க இலக்கியந் தொட்டுப் பாரதியார் பாட்டு வரை பரந்துபட்ட தமிழிலக்கியத்தின் விரி பெருங்காட்சியை (Panoramic View) ஆசிரியரின் கட்டுரைப் பலகணி வாயிலாகக் காணும்போது உண்டாகும் உவகை பெரிது". [27]

கட்டுரை ஆய்வின் பயன்கள்

இலக்கியங்களின் ஏனைய வகைகளின் பயன்களை விடவும் கட்டுரை ஆய்வின் பயன்கள் மிகுதி எனலாம். கவிதை, கதைகள், நாடகங்கள் ஆகியன கற்பனைக்கு இடந்தரும் அளவிற்குக் கட்டுரை இடம் தருவதில்லை. யதார்த்தமான கருத்துப் பரிமாற்றம் கட்டுரையில் மிகுதி. இதனால் சிந்தனை வளர்ச்சிக்கான பயிற்சி ஒரு கட்டுரை ஆய்வினாலேயே மிகுதியும் கிடைக்கிறது.

இதழ்களின் தலையங்கங்கள், செய்தி அறிக்கைகள், நூல் விமர்சனங்கள், சான்றோரின் கடிதங்கள் இவை யாவும் கட்டுரை வடிவிலேயே அமைகின்றன. அதனால் சிறந்த கட்டுரை வடிவம் பற்றிய பயிற்சி, மேற்சொன்ன படைப்புகள் சிறப்புற அமைய

27. சஞ்சீவி, ந. அணிந்துரை, கட்டுரை இலக்கியம்,

உதவும். கட்டுரைகளை ஆராய்ந்து அவற்றின் தராதரத்தை உறுதிப்படுத்திச் சொல்லுவதும் ஒருவிதத்தில் கட்டுரைப் பயிற்சியே ஆகும். இப்பயிற்சி தரமான கட்டுரைகள் வடிவமைய வழிகாட்டியாக முடியும். இதனால் கட்டுரை ஆய்வு மிக உயர்ந்த ஒரு இலக்கியத் தொண்டாகும்.

கட்டுரை அமைப்பிலேயே பல்வேறு நடைகள் கையாளப்படுகின்றன. கட்டுரையாராய்ச்சியாளர் அந்த நடைவகைகளை வேறுபடுத்திக் காட்ட வல்லவராகிறார். அவற்றை அடிப்படையாக வைத்துப் புது நடைமுறைகள் உருவாக்கப்படலாம். அல்லது பழைய நடைமுறைகளையே சீர்திருத்தி உரைநடை இலக்கியத்தை மேலும் அணிபெறச் செய்யலாம். மறைமலையடிகள் காலம் தொட்டு உரைநடையில் தனித்தமிழ் நடைப்பயிற்சி ஒரு இயக்கம் போல் செயல்பட்டு இலக்கியத்திற்கு ஆக்கம் தேடித்தந்து வந்தது. அத்திசையிலேயே மேலும் கருத்தைச் செலுத்தி அம்முயற்சி முழுமைபெற இக்காலக் கட்டுரை ஆய்வுகள் உதவமுடியும்.

கதை, நாடகம் முதலிய இலக்கிய வகைகளை எடுத்துக் கொண்டால் கட்டுரையில் தரப்படும் அளவிற்கு அவற்றில் நடைச் சிறப்புத் தரப்படுவதில்லை என்றே சொல்லலாம். கதை முதலியவற்றில் கற்பனைவெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுகிற நிலையில் கதைப் போக்கே முன் நிலைபெறுகிறது. நாடகம் முதலிய நிலையான ஒரு நடையை வைத்து அமைய முடியாதன. கூற்றுகளுக்கேற்ப நடைகளில் மடை மாற்றம் நிகழும். இதனால் முழுமையான நடை ஆராய்ச்சிக்குக் கட்டுரைகளே உகந்தவை. கட்டுரை ஆய்வுகளின் மூலமே முழுநிலையில் மொழிநடையைப் புதுப்பித்தலில் உதவ முடியும்.

கட்டுரைகள் அளவில் பெருகும்போது அவைகளை நூல்களாகத் தொகுக்கிறோம். சீர்பெறாத மொழிநடைகள் நூல்களையும் முழு அளவில் பாதித்துவிடும். இந்த அபாயத்தைக் கட்டுரை ஆராய்ச்சியின் மூலம் அதன் அடித்தளத்திலேயே தடுத்துவிடலாம். ஒரு நூல் அமைப்பில் நுவல் பொருளின் பிழையின்மை, பத்தி பிரித்தல், பதிப்பாசிரியர் உரை, பக்கமிடுதல், என்பன பல்வேறு படிகளாக அமைகின்றன,[28] கட்டுரைகளிலேயே இந்த ஆய்வை நிகழ்த்தி அதன் வாயிலாகச் சிறந்த நூல்கள் வடிவமைப்புப் பெற உதவ முடியும்.

---

28. எழுத்தாளரும் பதிப்பாளரும்.

ஒரு நூலின் சிறப்பிற்கு அதற்கு வழங்கப்படும் முன்னுரை அணிந்துரை போன்றவை மூலமாகும். காப்பியத்திற்குப் பாயிரம் போன்று நூலுக்குப் பாயிரமாக அமைவன இவை. நூலாசிரியரையும் விஞ்சிய ஒருவரே நூலுக்கு முன்னுரையோ, அணிந்துரையோ வழங்குகிறார். நூலாசிரியருக்கும் ஆசிரியர் ஆகிறார் இவர். இத்தகைய முன்னுரைகளும் அணிந்துரைகளும் உயர்ந்தவகை நடைச் சிறப்புடைய கட்டுரை வடிவாகவே எதிர்பார்க்கப்படுகின்றன. பல்வேறு கட்டுரை வடிவங்களையும், நடைமுறைகளையும் புடம்போட்டுக் கண்ட ஒரு கட்டுரையாராய்ச்சியாளரால் மட்டுமே சிறந்த அத்தகைய கட்டுரைகளை வழங்கவும் முடியும், இதனால் சிறந்த கட்டுரையாராய்ச்சியாளர், சிறந்த அணிந்துரையாளர் ஆகிறார். சிறந்த கட்டுரையாராய்ச்சியாளரே சிறந்த முன்னுரையாளரும் ஆகிறார்,

அறிஞர் பெர்னார்ட்ஷா தம் நாடகங்களைவிட நீண்ட முகவுரைகளை வழங்கும் வழக்கமுடையவராய்த் திகழ்ந்தாராம். அவரது முகவுரைகளின் தொகுப்பே கூட ஒரு தனி நூலாயிற்று. The Complete Bernard Shaw Prefaces என்ற பெயரில் அத் தொகுப்பு நூல் சிறப்புப் பெற்றது.[29]

காலந்தோறும் நூல் அமைப்புகள் மாறுகின்றன. முன்னுரைகள், முகவுரைகள், அணிந்துரைகள் என்பனவும் அவற்றிற்கேற்ப மாற்றம் பெற்றாக வேண்டும். கட்டுரையாராய்ச்சி இக்கோணத்தில் மிகுதியும் உதவ முடியும்.

தமிழில் சிலம்புச் செல்வரின் தலையங்கங்கள் தனிநூலாகவே வெளிவந்துள்ளன.[30] இதுபோன்றவற்றை ஆராய்ந்து அவற்றின் சிறப்புகளை எடுத்துக் காட்டி கட்டுரையாய்வாளர் இதுபோன்ற சிறந்த தலையங்க இலக்கியங்கள் உருவாக உதவலாம்,

திரு. வி.க. வின் முன்னுரைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.[31] இதுபோன்ற ஆய்வுகளுக்கு இது முன்னோடியாகும். அதற்குக் கையாளப்பட்டுள்ள நெறிமுறைகளைக் கட்டுரையாய்வாளர் பின்பற்றலாம்.

சீரிய சிந்தனைகளும், அறிவுரைகளும் நேரடியாகப் பரப்பப்படுவதுகட்டுரை இலக்கியத்தில்தான்.கதைகளில் ஓவியங்களும்,நாடகங்

29. யான் கண்ட மு.வ., ப. 143.
30. சிலம்புச் செல்வரின் தலையங்க இலக்கியம்.
31. திரு.வி.க, ஒரு பல்கலைக் கழகம், ப. 145

களில் காட்சிகளும் உரையாடல்களும் எளிதில் வாசகரைக் கவர்ந்து செய்தியை உணர்த்தும்போது கட்டுரைகள் சொல்லளவிலேயே ஓவியங்களையும் காட்சிகளையும் அமைத்திட வேண்டிய நிலையில் உள்ளன. இந்த உத்தி கையாளப்படாத நிலையிலேயே சில கட்டுரைகள் பொலிவிழந்து போகின்றன. வாசகருக்கும் கதையில் ஏற்படும் சுவை கட்டுரையில் இல்லாமல் போகிறது நச்சுக்கதை இலக்கியங்கள் ஒட்டுமொத்தமாக இலக்கியங்களையே பாழ்ப்படுத்தும் நிலை உருவாகியுள்ளது, இந்த நிலையில் சிறந்த ஆழ்ந்த கட்டுரை ஆய்வுகளும் அதனால் இலக்கியச் சீர்திருத்தமும் தேவையான ஒன்றாகிறது.

உரைநடையில் இலக்கணம் மற்றும் நடையியல் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இன்னின்ன கூறுபாடுகளைப் பெற்றவைதான் சிறந்த சட்டுரைகள் என்று இவைகளை வைத்து நிதானிப்பது அவ்வளவு எளிதல்ல. ஒவ்வொரு கட்டுரையாளரும் தமக்குரிய சிறப்பான சொல்லாட்சியாலும், பொருள் உணர்த்தும் திறத்தாலும் எழுத்துரையில் ஏற்றம் கொண்டுவர முயலுகின்றனர். கதைகள் நிகழ்வுகளிலேயே அழகு என்ற உறுப்பு ஒன்றினுள் தம்மை மாய்த்துக் கொள்ளுகின்றன.[32] கட்டுரை ஆய்விலேயே நடையின் பல்வேறு மடை மாற்றங்கள் புலப்படுகின்றன. இதனால் கட்டுரை ஆய்வு மொழிவளர்ச்சிக்கும் உதவ முடியும்.

கட்டுரை ஆராய்ச்சியின் வகைகள்

பொதுவாகக் கட்டுரைகளை ஒன்பது வகைகளாகப் பிரிக்கின்றனர், தருக்க முறை, திறனாய்வு முறை; வருணனை முறை நாடக முறை, விளக்க முறை; எடுத்துரை முறை சொற்பொழிவு முறை, தத்துவ முறை எள்ளல் முறை என்பன அவை. தொடர்ந்து கட்டுரைகளை வழங்கும் ஒரே கட்டுரையாளரின் கட்டுரைகளிலேயே இந்த ஒன்பது வகைகளையும் பகுத்துக் காண முடியும். எடுத்துக் காட்டிற்காக இங்கே பாரதியாரின் கட்டுரைகளை எடுத்துக் கொள்ளலாம்.

பெண்—ஆண் அடிமை என்ற பொருள் குறித்த பாரதியாரின் சந்தனத்தீவு என்ற கட்டுரை தர்க்க முறையில் அமைந்தது. அவரது 'சிதம்பரம்' என்ற கட்டுரை வருணனை முறையில் அமைந்தது. கொட்டைசாமி என்ற கட்டுரை நாடக முறையிலானது 'ஓநாயும் வீட்டு நாயும்' ஒரு கதை போன்று அமைந்தது. இது எடுத்துரை முறைக்கு உகந்த சான்றாகும்.

32. பாரதி நடையியல், ப, 16,

இவ்வாறு ஒரே கட்டுரையாளரின் கட்டுரை வகைகளைப் பிரித்தெடுத்து அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டு, கட்டுரைகளை அவற்றின் தகுதிக்கேற்றவாறு வகைப்படுத்தலும், எந்த ஒரு கட்டுரையில் கட்டுரையாளரின் தனித்தன்மை புலப்படுத்தப்படுகிறது? எந்த ஒரு கட்டுரையில் அவரது நடையெழில் மிளிர்கிறது? என்றெல்லாம் ஆராய்வது கட்டுரை ஆய்வின் ஒருவகை.

மனித குலத்திற்கு நேரடியாகப் பயன்படும் இலக்கிய வகை என்ற முறையில், கட்டுரை யுறுப்புக்களை மட்டும் மனித உறுப்புக்களின் பெயர்களை வைத்துச் சுட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது, ஒருவனை முதலில் அடையாளம் காட்டுவது தலையும் முகமும். இதற்கேற்ப ஒரு கட்டுரைக்கு அமையும் பெயரைத் 'தலைப்பு' என்கிறோம், கட்டுரையின் முற்பகுதி முகவுரை அல்லது முன்னுரை எனப்படுகிறது. இவ்வாறு கட்டுரையின் உறுப்புகளில் கண்ணோட்டம் செலுத்திக் கட்டுரை ஆய்வு நிகழ்த்தும் முறை மற்றொரு முறை.

பல்வேறு கட்டுரைகளின் மொழிநடைகள் மீது மட்டும் கண்ணோட்டம் செலுத்தியமையும் கட்டுரை ஆய்வும் சிறந்த ஒன்றாகும். இது மிகுந்த சிக்கல் நிறைந்ததும் இடர்ப்பாடுடையதும் ஆகும்.

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டிற்குக் கட்டுரை சமர்ப்பித்த அறிஞர் ஒருவர் தமது அனுபவத்தைக் கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்கிறார் : "20ஆம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை" என்பது கட்டுரையின் தலைப்பு. சமதர்ம சிந்தனை இழையோடியிருந்ததை மொத்தமாக உணர்ந்தேன். அதனை மையமாகக் கொண்டு நாலாயிரம் சொற்கள் என்ற வரம்பில் கட்டுரையமைய வேண்டியிருந்தது"[33]. இவ்வாறு கட்டுரைகள் உருவமைப்புப் பெறுவதால், உருவான கட்டுரைகளை வைத்து அவை கருக்கொண்டமைந்துள்ள பொருளை எட்டிப்பிடிக்கும் முறையிலும் கட்டுரை ஆய்வு நிகழ்த்துவது இன்னொரு முறை.

கட்டுரையின் அளவு குறித்து இன்னும் தெளிவான முடிவு எடுக்கப்படவில்லை. ஒரு நிகழ்ச்சி :

ஆசிரியர் ஒருவர் ஒருநாள் வகுப்பில் மாணவர்க்குக் கட்டுரைப் பயிற்சி அளித்தார். 'கிரிக்கட் விளையாட்டு' என்பது அவர் மாணவர்க்கு எழுதப்பணித்திருந்த கட்டுரையின் தலைப்பாகும்,

---

33. கட்டுரை ஆய்வு (நூல்) முன்னுரை.

வெகுவிரைவில் ஒரு மாணவர் கட்டுரையை முடித்துவிட்டார். வியப்புற்ற ஆசிரியர் கட்டுரையைச் சோதனையிட்டார். ஒரே ஒரு வரியில் கட்டுரை அடக்கப்பட்டிருந்தது.[34]

ஒருவகையில் பொருட் குற்றமற்ற ஒரு கட்டுரையே அது. ஆசிரியர் அத்தகையதோர் தலைப்பை வழங்கியமைக்காகத் தம்மையே நொந்துகொள்ள வேண்டியிருந்தது. கட்டுரையின் அளவு முறை குறித்து ஆய்வதும் ஒருமுறை ஆய்வாகலாம்.

படைப்பாளர் ஒருவர் தாமே தமது படைப்பில் முன்னுக்குப் பின் முரண்படுவது என்பது இலக்கியத்திற்கு இயல்பு என்றே ஒரு நிலையாக உண்டானது.

நீடியவரக்கர்சேனை; நீறுபட்டொழிய வாகை சூடிய சிலை யிராமன் தோள்வலி கூறவந்த கம்பநாடரே கூட "ஆயிரம் இராமரி நின்கேள் ஆவரோ" என்று பரதனைக் குறிக்கையில் முரண்பட்டு விடுகிறார். நளவெண்பாவில் அன்னத்தைக் கையில் பிடித்து வைத்து நளன் கூறுகிறான்—இளநங்கையராம் எழில் மாதரின் நடையும் உன் நடையும் எவ்வாறு ஒத்துள்ளன என்பதைக் காண் பதற்கே அன்னமே உன்னைப் பிடித்தேன்—என்கிறான். அவ்வாறு காண்பதற்கு அன்னத்தை நடக்கவிட்டல்லவா நளன் கண்டிருக்க வேண்டும்? இவ்வாறு புகழேந்தி முரண்படுகிறார்.

'ஏற்பது இகழ்ச்சி' என்ற அவ்வை அடுத்த ஆத்திசூடியிலேயே 'ஐயம் இட்டுண்' எனும்போது முரண்படுகிறார். ஊழின் பெருவலி யாவுள—என்ற திருவள்ளுவர்—ஊழையும் உப்பக்கம் காண்பர்—எனும் போது முரண்படுகிறார். ஜாதிகள் இல்லையடி என்ற பாரதி காக்கை குருவி எங்கள் ஜாதி எனும்போது முரண்படுகிறார். இவ்வாறு கட்டுரையாளர் முரண்படுவதுண்டு. இவ்வாறு முரண் பாடுகளை ஆராய்ந்து அவற்றின் காரணங்களையும் புலப்படுத் துவது கட்டுரை ஆய்வில் ஒரு சுவையான முறையாக அமையலாம்.

கட்டுரை நடை ஆராய்ச்சி

பல்வேறு வகைப்பட்ட கட்டுரை ஆராய்ச்சி வகைகளுள் நடை ஆராய்ச்சியே சிக்கல் நிறைந்ததும் இடர்ப்பாடுடையதுமாகும். பொதுவாக உரைநடை இலக்கியத்தை அதன்வேறுபட்ட இயல்பு களை வைத்து ஏழுவகையாகப் பிரிக்கின்றனர் அறிஞர்.[35]

---

34. இன்று மழையானபடியால் கிரிக்கட் விளையாட்டு இல்லை.
35. தமிழியல் ஆய்வு (கட்டுரை), ஆராய்ச்சி நெறிமுறைகள்.

1. ஆசிரிய வழி உரைநடை — திரு.வி.க., மு.வ. உரைநடை
2. காலவழி உரைநடை — சங்க கால நடை
3. மொழிவழி உரைநடை — மணிப்பிரவாள நடை, கல்வெட்டு நடை
4. கருத்துவழி உரைநடை — தத்துவ விளக்க நடை, நீதி விளக்க நடை
5. நிலவழி உரைநடை — பாஞ்சாலி; வைதாபி, கௌடி,
6. செயல்வழி உரைநடை — நீதிமன்ற நடை, அரசு அறிக்கைகள்
7. பண்பு வழி உரைநடை — பல்சுவை விஞ்சிய உரைநடை நகைச்சுவையூட்டும் உரைநடை

கட்டுரை நடை ஆராய்ச்சியின்போது கட்டுரை மேற்சொன்ன வகையுள் எந்த நடையில் செல்லுகிறதென்று காணலாம்.

கட்டுரை என்பது எளிய நடையில் இருக்க வேண்டும் என்பர் சிலர். மாறாகக் கட்டுரைக்கு உரியது கடின நடையே என்பாரும் உளர். சிலர் அணிவகைகளைக் கட்டுரையில் புகுத்துதல் முறை என்பர். சிலர் அணியுடன் இயம்புவதை விரும்பமாட்டார்கள். நடையாராய்ச்சியில் இந்த மாறுபட்ட நிலைகள் சிந்திக்கப்பட்டு உகந்த மொழிநடை எது என்று தீர்க்கமாகக் கூறுதல் தேவை மாகும். மொழிநடையை 11 வகைகளாகப் பிரிப்பவர் உளர்.[36] அவையாவன—கார்க்கிக நடை, வருணனை நடை, பகுத்துக்கூறும் நடை, இலக்கிய நடை, வசை நடை, வெளிப்பாட்டு நடை, ஆராய்ச்சி நடை, தர்க்க நடை, வரலாற்று நடை, நியாய விவரண நடை, ஜம்பநடை என்பன.

நடை என்பது என்ன ?

கருத்தை அழகு செய்வது, தகுந்த இடத்தில் தகுந்த சொல், பெயரடைகளால் அழகு செய்வது, படைக்கும் கலைத்திறன். பாஷையின் போக்கு, இவ்வாறு ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு விளக்கத்தை இதற்கு வழங்கியுள்ளனர்.[37]

கட்டுரை நடையாராய்ச்சியில் கட்டுரை ஆய்வாளர் இக் கருத்துக்களையெல்லாம் கருத்திற்கொண்டு மேற்செல்லவேண்டிய வராகிறார்,

---

36. திரு. வி.கவின் நயத்தகு நடை ப. 17.
37. திறனாய்வு அணுகுமுறைகள், ப. 277

கட்டுரைக்கு மொழிநடை உயிர் மூச்சானது. அதில் கருத்துச் செலுத்திச் சிக்கல் தீர்க்கும் ஆய்வே அனைத்திலும் மேலான ஆய்வாதல் முடியும்.

கட்டுரை ஆய்வின் நெறிமுறை

கட்டுரை ஆராய்ச்சி என்பது எளிதன்று. உரைநடையில் அமைவது கட்டுரை. காலத்திற்கேற்ப மாறிவருவது மொழிநடை. ஒரே நடை நாடு முழுவதும் நிலவுவதும் இல்லை, இடத்துக்கிடம் பேச்சு மொழியில் ஏற்படும் மாற்றங்கள் எழுத்து நடையையும் பாதிப்பன. அந்நிலையில் கட்டுரைக்கு ஆதாரமான நடை ஆராய்ச்சியிலேயே சிக்கல் உருவாக வழியுண்டு. இக்கால உரை நடைச் செலவைக் குறித்து அறிஞர் ஒருவர் கூறுகிறார்:

> தற்கால உரைநடைச் செலவை அளந்து மதிப்பிடுவது அவ்வளவு எளிதல்ல; இந்த நூற்றாண்டில்தான் உரை நடைக்குக் கால் முளைத்தது என்றாலும் தமிழ் உரை நடையை வேகமாகப் பரப்பி அது போன்ற துறை எதுவுமில்லை என்ற நிலைக்கு வளர்ந்திருக்கிறோம்.[38]

ஒரு கட்டுரையைப் புடமிடுவதென்றால் முதல் நிலையில் அதன் அழகை வெளிக்கொணர்வதாகவே முடியும், ஒரு நல்ல கட்டுரை அமைவது எவ்வாறு என்பதற்குப் பாரதியாரே இலக்கணம் தந்துள்ளார். கட்டுரைக்கான பொருள் தேர்வு குறித்து அவர் கூறியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது. (மக்களுக்குப்) ''பழக்கமில்லாதவிஷயம் குறித்து எழுதினால் சொல்லத்தளிக்கும்'' - என்றார் அவர். தலைப்பு கவர்ச்சியாக இருக்கவேண்டும் என்பது பாரதியாரின் கருத்து.

கதை, கவிதைபோல் கட்டுரை சுகப்பிரசவமல்ல. இதனால் கவர்ச்சிப்பட்ட கதை, கவிதை ஆகியவற்றின் தன்மையைக் கட்டுரையில் புகுத்துவதை அவர் ஆதரிக்கிறார். பாரதியாரின் ஒரு கட்டுரையின் தலைப்பே ''நெல்லிக்காய் கதை'' என்று கதையின் பெயரில் அமைகிறது. 'சாரல்' என்ற தமது கட்டுரையின் மேற் கோள்களை அவர் கதை வடிவிலேயே தருகிறார்.[39]

கட்டுரை குறித்துப் பாரதி மேலும் கூறுவதாவது :

---

38. சிந்தனைக் களஞ்சியங்கள் ப. 441

39. செயராமன். நா., முருகானந்தம், தி.. பாரதி உரைநடை ஆய்வு, (கருத்தரங்கக் கட்டுரைக்கோவை) பாரதிதாசன் பல்கலைக் கழகம், கோவை, ப. 90

'சொல்லவந்த விஷயத்தை மனதில் நன்றாகக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு கொண்டதே கோலம் என்றில்லாமல் நடைநேராகச் செல்ல வேண்டும். கம்பர் கவிதைக்குச் சொன்ன தெளிவு, எளிமை, தூய்மை, ஒழுக்கம் இவை நான்கும் நிறைந்து இருக்க வேண்டும்.''[40]

கட்டுரை ஆராய்ச்சியில் கீழ்க்கண்ட படிகள் கருதத்தக்கன—

1. கட்டுரைக்குத் தலைப்பிடல்
2. கட்டுரையைத் தொடங்குந்திறம்
3. பல்வேறு செய்திகளை அடுக்கிக் கோவைப்படுத்தும் முறை
4. கருத்துக்களை ஒன்றோடொன்று பொருத்திக் காட்டல்
5. மேற்கோள்களைப் பயன்படுத்தல்
6. முன்னிலை மொழியையும் தன்மைக் கூற்றையும் பயன் படுத்தல்
7. சிறுதலைப்புகளாகப் பிரித்துள்ளமை
8. கட்டுரையை முடிக்குந்திறம்
9. இயைபு

இந்தப் படிகளின்படி பாரதியாரின் 19 கட்டுரைகளை ஒருசேர ஆராய்ந்துள்ள ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை, ஆராய்ச்சிக்கெல்லாம் முன்மாதிரியாகக் கொள்ளத்தக்கது.[41]

இவ்வாறே தேவநேயப்பாவாணரின் 'கட்டுரை வரைவியல்'[42] என்ற நூல் கட்டுரை வடிவமைப்புக்கு மட்டுமன்றிக் கட்டுரை ஆய்விற்கும் வழிகாட்டியான நூலாகும். பாவாணர் இந்நூலுக் கிட்டிருந்த பெயரே ''கட்டுரை கசடற'' என்பது. செந்தமிழ்ச் செல்வியில் தொடர்ந்து அன்னார் எழுதிவந்த வேர்ச்சொற் கட்டுரைகளும் உறுதுணையாகத்தக்கன.[43]

திரு. வி.கவின் உரைநடையை ஆராயப்போந்த ஓர் அறிஞர் அவர் பயன்படுத்திய செந்தமிழ்ச் சொற்கள் வரையில், பிள்ளை, என்றன, ஈண்டு, அந்தோ, எத்தமீ, என்னே, நோக்குழி, ஓர்க என்பனவற்றைக் குறித்துக் காட்டி அவரது கட்டுரைகளில் இவை தொடர்ந்து வருவதைச்சுட்டிக்காட்டி, அவரது தனித்தன்மைகளுள்

---

40. மேற்படி.
41. பாரதியாரின் கட்டுரை வடிவம் (கட்டுரை) ப. 79
42. தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள்,
43. செல்வி, சிலம்பு 33; 40; 44; 45; 46; 47; 49; 50

ஒன்றாக அதனை நிறுவியுள்ளார்.[44] கட்டுரை ஆய்வில் இது போன்ற நுட்ப முறைகள் கையாளப்படல் வேண்டும்.

இதுவரையில் நிகழ்த்தப்பட்டுள்ள சில ஆய்வுகள்

கட்டுரை ஆய்வென்பது ஆழமானது. முயற்சியும் மிகுதியான உழைப்பும் வேண்டப்படுவது. இருந்தபோதிலும் அம்முயற்சியில் துணிந்து இறங்கி உழைத்துச் சிறந்த வெற்றி கண்டவர்கள் உண்டு. அவ்வாறான மிக அண்மை காலத்துச் சில ஆராய்ச்சித் தலைப்புகளும், அவற்றின் ஆய்வாளர் பெயர்களும், ஆய்வு நிகழ்ந்திய காலமும் குறித்த பட்டியல் பின்வருமாறு:-[45]

எண்	ஆய்வுக்கட்டுரையின் தலைப்பு	ஆய்வாளர் பெயர்	இடம்	ஆண்டு
1.	தமிழ் நாளிதழ்க் கட்டுரைகள்	இராசரத்தினம் சேவியர்	மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்	—
2.	பாரதியார் கட்டுரைகள்—ஓர் ஆய்வு	சுப்பிரமணியக் கவ்ராயர்	"	1981
3.	பாரதிதாசன் கட்டுரைகள் —ஓர் ஆய்வு	மதியழகன்	"	—
4.	பாரதியார் கட்டுரைகளில் பெண்மை	விஜயசாந்தி.எம்.	சென்னைப் பல்கலைக் கழகம்	—
5.	டாக்டர் மு வ.வின் முன்னுரைகள்—ஓர் ஆய்வு	தமிழரசி. ரா.மா	"	1979
6.	ஆனந்தவிகடன், கல்கி தலையங்கங்கள்	இராசாராம்	மதுரைக் காமராசர் பல்கலை	
7.	ஆனந்தவிகடன் ஆசிரிய உரைகள்	இராணி. மா.	"	1986
8.	பாரதியின் இந்தியா இதழ்க் கட்டுரைகள்	சுபாஷ்போஸ்	பாரதியார் பல்கலைக்கழகம்	—
9.	சுப்பிரமணியம் பாரதியார் கட்டுரைகள்— ஓர் திறனாய்வு	இராசாராம்	மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்	—
10.	தமிழில் கட்டுரை இலக்கியம்	பொன்னம்மாள்	தில்லிப் பல்கலைக்கழகம்	

44, சண்முகம், இரா., திரு. வி.க. ஒரு பல்கலைக் கழகம்.

45. தமிழியல் ஆய்வு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1988.

இவ்வாறாக இதுவரையில் நிகழ்ந்துள்ள கட்டுரை இலக்கிய ஆய்வுகளை நோக்குங்கால் பெரும்பாலான ஆராய்ச்சிகள் பாரதியாரின் கட்டுரைகள்மேல் நிகழ்ந்துள்ளதை அறிகிறோம். இதழ்க் கட்டுரைகள் மேல் சென்றுள்ள கண்ணோட்டமும் மிகுதி.

பொதுவில் இதே காலக்கட்டத்தில் நிகழ்த்தப்பட்டுள்ள கவிதை ஆராய்ச்சியோடு ஒப்பிடும்போது கட்டுரை ஆராய்ச்சி மிகவும் குறைவே. மிகப் பேரளவில் நிகழ்ந்துள்ள கவிதை ஆராய்ச்சி மட்டும் எண்ணிக்கையில் 43 ஆகும்.[46] கவிதையாராய்ச்சியில் நான்கில் ஒரு பங்கு என்ற நிலையிலேயே கட்டுரை ஆராய்ச்சி நிகழ்ந்துள்ளதென்பதை ஓரளவு கண்டறியமுடிகிறது.

இதுவோ கட்டுரைகளின் காலம். கட்டுரை இலக்கிய வளர்ச்சி வேகங்கண்டு வருகிறது. கட்டுரைகள் எழுத்து நிலையோடு அமையாமல் நூல்வடிவில் வெளிவந்து கொண்டிருப்பவையும் மிகுதி. கட்டுரை ஆய்வு, கட்டுரை இலக்கியம், கட்டுரை கற்கண்டு, கட்டுரைப் பெட்டகம், கட்டுரைக் கதம்பம், கட்டுரைக் கற்பகம்[47] என்று ஒரே ஆசிரியர் எழுதிக் குவித்து வெளிக்கொணர்கிற நூல்கள் புற்றீசல் போல வெளிவருவது வியப்பிலாழ்த்தாமலில்லை.

அந்த அளவிற்குக் கட்டுரை ஆய்வுகள் நிகழவில்லை. அதற்கான காரணங்களை ஆராய்வதும் ஒரு முக்கியமான பணியாகும். இலக்கியம் வியாபாரப் பொருளாக்கப்பட்டு விட்டது முதற் காரணமாகும். இலாப நோக்கில் மக்களைக் கவரும் துப்பறியும் பொய்க் கதைகள், பாலியல் செழித்த படைப்புகள் மலிந்துவிட்ட நிலையில், வாசகருக்கு இலக்கியச் சுவை நுகரும் பயிற்சி மாற்று வழியில் வழங்கப்பட்டு வருகிறது. கட்டுரையாளர்களும் பாரதி குறித்தவாறு கட்டுரை இலக்கியத்தைப் பொதுமக்கள் செய்தியாக்காது தங்கள் பேரறிவைக் காட்டும் கருவியாக்கிக் கொள்வதும் மக்கள் இரசனையின் திசை மாற்றத்திற்குத் துணைபோகிறது.

கதைகள் முதலியவற்றிற்கு ஓவியங்கள் முதலியன துணை நின்று கவர்ச்சியை மிகுதியாக்குகின்றன. கட்டுரைகளிலும் தொடர்புடைய ஓவியங்களை இணைத்து ஆரோக்கியமான வகையில் சுவைப்படுத்த முயலலாம். கலைக் களஞ்சியம் என்று

46. மேற்படி, பக். 165-169
47. சோமசுந்தரம், அரு.

விளங்குகின்ற மஞ்சரி திங்களிதழ் கட்டுரை ஒன்றிற்கு அழகிய ஓவியம் ஒன்றை இணைத்து வெளியிட்டிருந்ததை இங்கு மாதிரி யாகக் காட்டலாம்.[48] ஆயினும், கட்டுரையின் மூச்சாக அமைவது கருத்தே. கருத்தை வேடிக்கையான முறையில் வெளியிடத் 'துணுக்கு' எனும் ஆயுதப் பிரயோகம் வலுவுடன் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் கருத்து மழை பொழிந்து தள்ளுகிற நீண்ட கட்டுரைகள் மக்களால் வரவேற்கப்படவில்லை. துணுக்கு களுக்கே மேலும் கவர்ச்சி முலாம் பூசிய புதுக்கவிதைகள் வேறு வாசகர் உலகை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றன. இவ்வாறு பல நிலைகளிலும் கட்டுரை இலக்கியத்திற்கான வாசகர் வட்டம் வெகுவாகக் குறைந்துகொண்டு வரும் நிலையில் கட்டுரை ஆராய்ச்சியும் மந்தப்படுகிறது.

புதுமை, மக்களைக் கவரவல்லது. ஆதலின் இதுவரையில் தொடப்படாத பொருள்களைத் தொட்டாய்வது மக்களை ஈர்க்க வல்லது. அதன் வழி கட்டுரையாளர்க்கும் கட்டுரை ஆராய்ச்சி யாளர்க்கும் ஊக்கம் கிடைக்க வழியுண்டு. இந்த நோக்கில் ஆய்வுக்குத் தேர்வு செய்யப்படும் தலைப்புகளின் மீது முதற் கவனம் செலுத்துவது தேவையானதாகும்.

கட்டுரை தொடங்குமிடம் முன்னுரை. அதனால் அதன் அமைப்பில் கருத்தைச் செலுத்துதல் கட்டுரையாளரின் கடமை யாகும். மு.வ. நாவல்களின் வெற்றிக்கு அவர் அவற்றைத் தொடங் கும் பாணியைச் சிறப்பாகக் குறிப்பிடுவர். சில எடுத்துக் காட்டுகள் :

> சென்னையில் பச்சையப்பன் கட்டடத்திலிருந்து பாரி முனை வரையில் ஒருவர் நடந்துபோனால் அவருக்கு வாழ்க்கையில் பெரும்பகுதி விளங்கியது என்று கூற லாம்.[49]
>
> அந்தப் படத்தைக் கண்டதும் என் உள்ளத்தில் ஒருவகை ஒளி வீசியது என்றே நான் நம்புகிறேன். அப்போது பெற்ற புதிய உணர்ச்சி இத்தகையது என்று என்னால் கூற முடியவில்லை.[50]

---

48. ஜாண் ஆசீர்வாதம்; பரிபாஷைகள் (கட்டுரை) மஞ்சரி, கலைமகள் காரியாலயம், சென்னை
49. கரித்துண்டு
50. மலர்விழி

பாலாற்றங் கரையில் நானும் சந்திரனும் கைகோர்த்து உலாவிய நாட்கள் எங்கள் வாழ்விலேயே பொன்னான நாட்கள்.[51]

ஜேன் ஆஸ்டின் (Jane Austen) என்ற ஆங்கில நாவலாசிரியர் ஆறு நாவல்களை எழுதியுள்ளார். அத்தனையும் புகழ்பெற்றவை. அத்தனையும் தொடக்கத்திற்குப் பெயர் பெற்றவை. கிரெய்க் எனும் அறிஞர் அவர்தம் படைப்புகளை ஆராயும்போது அவற்றின் தொடக்கங்களை வெகுவாகப் புகழ்ந்துள்ளார்.[52]

கட்டுரையின் தொடக்க வரிகளே எடுப்பாக அமைதல் வேண்டும். முற்காலத் தமிழிலக்கியங்களில் படைப்பின் தொடக்கச் சொல்லே மங்கலமாக அமைதல் வேண்டும் என்ற முறை ஒரு விதி போலவே பின்பற்றப்பட்டது. 'உலகம்' என்ற சொல்லை மங்கலச் சொல்லாகக் கொண்டு சொல்லி வைத்தது போலவே முற்காலப் புலவர்கள் 'உலகம்' என்ற சொல்லை வைத்து இலக்கியங்களைத் தொடங்கினர். அவ்வாறான விதி கட்டுரைக்கில்லை என்றாலும் அமங்கலச்சொல் முதலியனவற்றை முதலில் பெய்தல் தவறானதே. பாரதியாரின் கட்டுரைகளின் தொடக்க வரிகள் சிலவற்றை முன் மாதிரியாகக்கொண்டுப் பின்பற்றலாம்.

> "காலை பத்து மணி இருக்கும். நான் ஸ்நானம் செய்துப் பூஜை முடித்துப் பழம் தின்று பால் குடித்து வெற்றிலை போட்டு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு செய்தித் தாளில் ஓரிரண்டு வார்த்தைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்" (சிதம்பரம்)

ஒரு சிறுகதையைச் சொல்லத் தொடங்குவது போல் ஆரம்பவரிகளைத் தொடங்குகிறார். படிப்போர்க்கு மேற்கொண்டு என்ன நிகழுகிறது என்ற ஆர்வத்தை உண்டு பண்ணுவதாக அமைகிறது தொடக்கம்.

> காக்க நின்னருட் காட்சியலிலாலொரு போக்குமில்லை
> —தாயுமானவர்.

(அமிர்தம் தேடுதல்)—செய்யுளடியை வைத்துத் தொடங்குகிறது.

"மதுரையிலே ஒரு சாஸ்திரியார் நேற்று மாலை இறந்து போனதாகச் சொல்லப்பட்டது. அவர் திரும்ப வருவாரா?!' (புனர்ஜன்மம்)

---

51 அகல் விளக்கு

52 யான் கண்ட மு.வ., ப. 58

—புதிர்போடுவதுபோல் அமைகிறது.

"பணமில்லாதவர் பிணம் என்று பழமொழி சொல்கிறது"
(செல்வம்)

—பழமொழியைக் கொண்டுத் தொடங்குகிறது.

"இராமகிருஷ்ணர் நீயுண்டு நீயுண்டு நீயுண்டு நானில்லை நானில்லை" என்று ஜெபம் பண்ணினால் அவர் பொதுமை வாதியா? (உழைப்பு)—வினாப்பாங்கில் தொடங்குகிறது.

கட்டுரையின் அற்றத்தை முடிவுரை என்று பெயரிட்டு அழைக்கிறோம், எதற்கும் முடிவு கூறுவது அவ்வளவு எளிதன்று. அதனால் நிறைவுரை என்பதே சாலவும் நன்றாம். கட்டுரைச் செய்திகளில் சுருக்கமாக இது அமைகிறது. சொற்சிக்கனம் இதில் கருதப்படும். நிறைவுரைப் பகுதியைப் படித்த அளவிலேயே கட்டுரையின் தலைப்பு ஊகித்து அறியப்படத்தக்க வகையில் இப் பகுதி அமையும். கட்டுரையின் தொடக்க வரிகளைப் போலவே இறுதி வரிகளும் சிறப்பு வாய்ந்தவை.

பாரதியாரின் கட்டுரைகள் மாதிரிவைத்தே இதனையும் ஆராயலாம்.

> "பரிபூர்ண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல் உனக் குள்ளிருந்து தெளிந்த அறிவும் சீர்த்தன்மையும் சக்தியும் மென்மேலும் பொங்கி வரும். உன் இஷ்ட சித்திகளெல் லாம் நிறைவேறும், இது சத்தியம். அனுபவத்திலே பார்" (பாரத தேசத்தில் ஒவ்வொருவரும் செய்வதற்குரிய தியானம்)
>
> "கவலை மனிதனை அரித்துக்கொன்று விடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்" (உடம்பு)

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் பாரதியின் கட்டுரைகளில் இறுதி வரிகளாக அமைந்தவை. கட்டுரைக்கு முத்தாய்ப்பாய் அவை அமைவதைக் காணுகிறோம்.

இனி ஆராயத்தக்க சில முக்கியமான தலைப்புகள்

அறிவியல் நோக்கில் கட்டுரைகள்
கட்டுரை வடிவங்கள்—ஒரு கண்ணோட்டம்
கவிஞர்களின் கட்டுரைகள்

தமிழ்க் கட்டுரையில் கலைக் கண்ணோட்டம்
கவிதைகளும் கட்டுரைகளும் – ஒரு ஒப்பீடு
இன்றைய கட்டுரைகளில் சமுதாயத் தாக்கம்
வாசகர் பார்வையில் கட்டுரை
கருத்தும் கட்டுரையும்
இக்காலக் கட்டுரைத் தலைப்புகள்—ஒரு ஆய்வு
கட்டுரை நீதிகள்
கட்டுரைகளும் கடிதங்களும்—ஒரு ஒப்பீடு
கட்டுரைகளும் நகைச்சுவையும்
இன்றைய கட்டுரைகளில் தனி மனிதச் சிந்தனைகள்
கட்டுரை நடையியல் ஆய்வு
கட்டுரைகளின் அணிநலன்
இக்காலக் கட்டுரைகளில் தமிழ்
கட்டுரைகளும் தத்துவங்களும்
இருபதாம் நூற்றாண்டுக் கட்டுரைகளில் மனித நேயம்
டாக்டர் மு.வ. வின் முன்னுரைகள்
பயணக் கட்டுரைகள்—ஓர் ஆய்வு
கட்டுரையில் வருணனையின் பங்கு
கட்டுரைகளில் கதை சொல்லும் பாங்கு
காலத்திற்கேற்ற கட்டுரைத் தலைப்புகள்
கட்டுரைகளில் கூற்றுகள்
கட்டுரையும் அங்கதமும்
கட்டுரைகளும் மொழிபெயர்ப்பும்
உரைகளும் கட்டுரைகளும்
கட்டுரைகளில் சொல் விளக்கம்
இருபதாம் நூற்றாண்டுக் கட்டுரையில் திருக்குறள் தாக்கம்
கவிதை கதை கட்டுரை
இக்காலச் சமயச் சார்புக் கட்டுரைகள்
விமர்சனக் கட்டுரைகள்
இருபதாம் நூற்றாண்டின் எள்ளல் கட்டுரைகள்
இலக்கிய வளர்ச்சியில் கட்டுரையின் பங்கு
கட்டுரைகளில் உவமை நயம்
கட்டுரைகள்—கட்டமைப்பு
கட்டுரைகளும் சமுதாயச் சீர்திருத்தங்களும்
நாட்டுப்பணியில் கட்டுரை
இரங்கல் கட்டுரைகள்
மக்களாட்சி உரிமைகளும் கட்டுரைகளும்.

கட்டுரை ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள்

கவிதை அல்லது கதைகள் என்கிற இலக்கிய வகைகளைப் பொறுத்த வரையில், படைப்பாளன் கற்பனையைக் கருவியாகக் கொள்ளுவதால் ஆய்வில் சொல்லப்படும் விமர்சனங்கள் படைப் பாளனை நேரடியாகப் பாதிப்பதில்லை. படைப்பாளனும் கற்பனை என்று காட்டிக் குறைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள வழியுண்டு. கதைக்குக் கண்ணுண்டா? மூக்குண்டா? என்பதே பழமொழி. அவ்வகையில் கதாசிரியனுக்கு இந்த வாய்ப்பு இன்னும் அதிகம். கட்டுரையாராய்ச்சியோ நேரடியாக ஒரு கட்டுரையாளனைப் பாதிப்பது. ஏனென்றால் ஒரு இலக்கியப் படைப்பை ஒரு திறனாய் வாளன் பார்க்கும் பார்வைக்கும் ஒரு வாசகர் பார்க்கும் பார்வைக் கும் படைப்பாளனே அதைப் பார்க்கும் பார்வைக்கும் வேறுபாடு இருக்கிறது. திறனாய்வாளன் அதன் கருவாகவே மாறி நின்று படைப்பின் பல பகுதிகளையும் மிக நுட்பமாக அறிந்து அதன் குறைநிறைகளைச் சொல்லிவிடுகிறான்.[53]

கட்டுரைஎன்பது பிரதானமாக ஆசிரியனின் சொருபம் அல்லது தனித்தன்மையின் வெளிப்பாடே ஆகும்.[54] இந்நிலையில் ஆய் வாளருக்குக் கட்டுரையாளரின் முகம் எதிர் நிற்குமாகலின் ஆய்வின் வேகம் தடைப்பட வழியுண்டு. கற்பனையை முழு அளவில் தாங்கும் கதையாசிரியரும் கூட தற்காப்பிற்காக, கதையில் வரும் நிகழ்ச்சிகள் முழுக்கற்பனையே, அவை யாரையும் எந்த விதத்திலும் குறிப்பனவல்ல" என்ற உறுதி மொழியை முற்படச் செய்து கொள்ளும் வகை உண்டு, கட்டுரை ஆய்வாளரும் கட்டுரை ஆய்வின்போது "நான் இங்கு உரைப்பனவெல்லாம் முழு ஆய்வு அடிப்படையிலேயே. யாரையும் எந்தவிதத்திலும் பாதிக்கும் நோக்கம் கிடையாது" என்ற உறுதிமொழியை எடுத்துக் கொள்வதே இது போன்ற சிக்கல் தீர்க்கும் வழியுமாகலாம்.

நிறைவுரை

கட்டுரை ஆய்வென்பது எளிதானதல்ல. எனினும் அணுகு முறையை வைத்து அதனை எளிமைபடுத்த இயலும். திட்டமிட்ட ஆராய்ச்சியாயின் கட்டுரை ஆராய்ச்சியும் நுகர்வோர்க்கு விமர்சனம்போல் சுவையினை வழங்க முடியும். எந்த ஒரு கட்டுரை யையும் வடிவ ஆராய்ச்சி, பொருள் வள ஆராய்ச்சி என்ற இரண்டு

---

53. தற்காலத் தமிழிலக்கியம். ப. 221
54. இலக்கியமும் விமர்சனமும், ப. 201

பொது நிலைகளில் ஆராய்ச்சிக்குட்படுத்தலாம். வடிவ ஆய்வில் தலைப்பு முன்னுரை, உடலுரை, கட்டுரையை முடித்த திறம் என்ற இவற்றின் தன்மைகளை நிதானிப்பதோடு மொழிநடை முதலியன பற்றியும் ஆராய்தல் நிகழும். தலைப்பு என்ற ஒன்றை எடுத்துக் கொண்டால் மட்டுமே தேர்ந்த ஆய்வாளர் மிக ஆழமான மற்றும் அகலமான ஆய்வை நிகழ்த்த முடியும். கட்டுரைக்கு ஒரு முத்திரை போன்றது தலைப்பு. அதனை வகைப்படுத்தலே ஆராய்ச்சியின் முதல் நிலை ஆகலாம். அவை நுவல இருக்கும் பொருளுக்குத் தக்க அவற்றை வகைப்படுத்தலாம். சில தலைப்புகளும் அவை வகைப்படுத்தப்பட்டுள்ள முறைகளும் இங்குத் தரப்படுகின்றன:

தலைப்பு	பொருள் வகை
காலண்டரீ வேட்டை	எதனைப் பற்றியது?
சைக்கிள் புராணம்	வழக்குச் சொல்
என்னதெரிகிறது?	கேள்வி
கழுதையும் நாயும்	உம்மை
கட்டு மூட்டை	ஏவல்
சத்தியம்	பண்பு
கல்யாண மண்டபம்	இடம்
தயவுசெய்து திருடுங்கள்	புதுமையாக
துக்கக் கலை	மெய்ப்பாடு
வரவேற்புகள்	வினை
ஏகாம்பரம்	பாத்திரங்கள்
சட்டம் சட்டமே	உறுதிப்பாடு
தியாகி	பண்பாடு[55]

பொருள் வள ஆராய்ச்சியில் முற்போக்குச் சிந்தனைகள், நீதிகள், ஆகியவற்றோடு கட்டுரையின் பயன், விளைவு அல்லது தாக்கம் குறித்தும் சிந்திப்பது சிறப்பானது. அவ்வகையில் குறிப்பிட்ட கட்டுரையை இறந்துபட்டது, உயிரோட்டமுள்ளது, காலத்திற்குப் பொருந்தாதது, காலத்திற்குப் பொருந்துவது என்ற முடிபுகளுள் ஏதேனும் ஒன்றினுள் கொண்டு நிறுத்தலாம். இதற்கு ஒரு கட்டுரையை அதே தன்மையிலமைந்த வேறு ஒரு கட்டுரை யோடு ஒப்பிட வேண்டுவதும் தேவையானதாகும்.

கட்டுரை ஆய்விற்கு ஆய்வாளரின் இலக்கிய அறிவு மட்டும் போதாது. பல்துறை அறிவும் அவருக்குத் தேவைப்படுகிறது.

---

55. தமிழிலக்கிய வகையும் வடிவும், ப. 662

அகராதிக்கு அப்பாற்பட்ட சொல்லாட்சியோடும் அவருக்கு அறிமுகம் தேவைப்படுகிறது. கதையோ, புதினமோ போலல்லாது கட்டுரை என்பது நடப்பியலை மிகுதியும் ஒன்றியமைவது கட்டுரையாதலின் சம காலத்துச் சமுதாயம் பற்றியதோர் தெளிவான கண்ணோட்டமும் கட்டுரையாராய்ச்சியாளருக்குத் தேவைப்படுகிறது. இது போன்ற சூழ்நிலைகளில் அமையும் கட்டுரைக்கு அதனை உருவாக்கும் கட்டுரையாளர் மக்கள் நடுவே புழக்கத்திலுள்ள வழக்குச் சொற்கள், தொடர்கள், பழமொழிகள் ஆகியவை உள்ளிட்ட ஒரு தனிநடையைப் பயன்படுத்தியிருக்கக் கூடும். அகராதிக்கும் புறம்பான சொல்லாட்சி அறிவு இருந்தாலன்றி இது போன்ற கட்டுரைகளை ஒரு ஆய்வாளர் முழுநிலையாக ஆராய்ந்திட முடியாது.

இலக்கியங்களுக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பு வெகுவாக விரிசல் கண்டு வருகிற காலம் இது. நச்சுக் கதையிலக்கியங்கள், ஆபாசம் மலிந்த திரைப்படங்கள் ஆகியன மக்களை இலக்கியத் தொடர்பிலிருந்து வேறுபடுத்தி வருகின்றன. இந்த நிலையில் சமுதாயக் கரிசனை, சீர்திருத்தம் முதலியவற்றை நேரடியாகச் சொல்லும் வாய்ப்புடைய கட்டுரை இலக்கியம் மட்டுமே இந்நிலை மாறுவதற்கானதோர் சீரிய செயலினைச் செய்திட முடியும். கட்டுரையாய்வாளர்களின் ஆய்வுகள் அத்தகைய முறையில் கட்டுரைகளைப் படைக்கும் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் முறையில் அமைதல் வேண்டும்.

சொல்லிலே உணர்வும், நடையிலே எளிமையும் சிந்தனையிலே தெளிவும் சிறந்த கட்டுரைக்கு இலக்கணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.[56] இவ்விலக்கணங்களை மட்டும் கருத்தில் கொள்ளுதல் போதாது. கட்டுரையாளரின் தனித்தன்மையையும் விமர்சிப்பது தேவையானதாகவும், கட்டுரைக்கெதிர் மற்றொரு கட்டுரை போலல்லாமல் கட்டுரையாய்வு வருணனைகளையும் வீண் விளக்கங்களையும் குறைத்ததாய் சீரான செய்திகளின் தொகுப்பாகத் திகழ்தல் வேண்டும்.

> "பாரதியாரின் கட்டுரைகள் அளவில் சிறியனவாகவும் ஆனால் ஆற்றல் மிகுந்தனவாகவும் உள்ளன. நடைமுறை வாழ்க்கைக்குப் பல்வேறு பொருள்களைத் தரவல்லனவாகவும் உள்ளன.[57]

---

56. திருநாவுக்கரசு எ., பாரதியார் கட்டுரைகள், வானதி பதிப்பகம் : பதிப்புரை
57. உரைநடைத் தமிழ், பக். 120-122

போன்ற ஆய்வுக் குறிப்புகள் கட்டுரையாளருக்குத் துணையாக லாம்.

கட்டுரை இலக்கியம் வளம் பெறவேண்டும் என்பதே கட்டுரை யாய்வின் நோக்கம். அது நிறைவேறும் வகைக்குத் துணைபுரியும் எந்த ஒரு ஆய்வினையும் வெற்றியுடையதாகக் கொள்ளலாம்.

துணை நூற்பட்டியல்

அடியார்க்கு நல்லார் : சிலப்பதிகாரம் உரை : உ. வே, சா. பதிப்பு, கழக வெளியீடு, 1979.

இராமலிங்கம், மா., புதிய உரைநடை; தமிழ்ப் புத்தகாலயம்; சென்னை, 1980.

இளங்குமரன், இரா.. தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வு கள் : உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் : சென்னை 1985.

இளங்கோவன், மா. ரா., 'சிலம்புச் செல்வரின் தலையங்கக் காப்பியம், பாரி நிலையம், சென்னை, 1978,

இளங்கோவன், மா. ரா., திரு. வி.கவின் நயத்தகு நடை; பூங்கொடிப்பதிப்பகம், சென்னை, 1985.

இராமசாமிப் புலவர் சு. அ. எழுத்தாளரும் பதிப்பாளரும் கழகம் : 1947.

கோதண்டராமன். பி., இலக்கியமும் விமர்சனமும், மணிவாசகர் நூல் நிலையம், சிதம்பரம். 1962.

சஞ்சீவி, ந., கட்டுரை இலக்கியம். பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1985.

சண்முகம், இராம., விநாயகமூர்த்தி, திரு. வி. க, ஒரு பல்கலைக் கழகம்; மணிவாசகர் நூல் நிலையம்: சிதம்பரம். 1983,

சாமிநாதன், உ. வே. மணிமேகலை (உரைப் பதிப்பு) 1921.

சாலை இளந்திரையன். புதுத்தமிழ் முதல்வர்கள். தமிழ்ப் புத்தகாலயம் சென்னை, 1972.

ஞானசந்திர ஜான்சன், தேசோபகாரி (இதழ்) ஆகஸ்டு 1990, கன்னியாகுமரி பேராயம் வெளியீடு, நாகர்கோவில்,

சுப்பிரமணியன், ச. வே. தமிழிலக்கிய வகையும் வடிவும் தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1984.

சுந்தர கலிவரதன், உரைநடைத் தமிழ். பாலச்சந்தர் பதிப்பகம், புதுவை, 1985.

சுந்தரமூர்த்தி, இ , 'பாரதி நடையியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985.

செயராமன், ரா., முருகானந்தம், தி., பாரதி உரைநடை ஆய்வு பாரதியார் பல்கலைக் கழகம், கோவை,

செந்தமிழ்ச் செல்வி : (திங்களிதழ்) கழக வெளியீடு.

சோமசுந்தரம், அரு. கட்டுரை ஆய்வு (நூல்) பொன்முடி பதிப்பகம் : காரைக்குடி, 1985.

தமிழண்ணல் : தமிழியல் ஆய்வு, காமராசர் பல்கலைக் கழகம், 1988.

தண்டாயுதம், இரா., தற்காலத் தமிழிலக்கியம் (நூல்) தமிழ்ப்புத்தகாலயம் : சென்னை, 1983.

திருநாவுக்கரசு,எ., பாரதியார்கட்டுரைகள், வானதிபதிப்பகம், சென்னை, 1981.

திருமணம் செல்வக் கேசவ முதலியார், தமிழ் வியாசங்கள், சென்னை, 1945.

பகவதி, கு. (பதி) திறனாய்வு அணுகுமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989.

மாணிக்கம், வ. சுப., தமிழ் உரைநடையின் வளர்ச்சி (கட்டுரை) சிந்தனைக் களங்கள், மணிவாசகர் நூல் நிலையம், சிதம்பரம், 1975.

மஞ்சரி (திங்களிதழ்), கலைமகள் காரியாலயம், சென்னை, நவம்பர், 1990.

மோகன், இரா., யான் கண்ட மு. வ. (நூல்) சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1975.

வரதராசன், மு., கரித்துண்டு

" அகல்விளக்கு

Velayudam, P. V., Early Malayalam Prose (Book), University of Kerala, Trivandrum, 1973.

உசாத்துணை நூல்கள்

உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை-முதல் மாநாட்டுக் கருத்தரங்குக் கட்டுரைகள்-முதல் பாகம்-வேலூர்: 1983.

சக்திவேல், நூற்றாண்டுத் தமிழ் உரைநடை, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1985.

சிதம்பரநாதன், ஆய்வியல். சுபா பதிப்பகம், நாமக்கல், 1987.

சுப்பிரமணியன், ச. வே., கடிகாசலம், ந , உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்?, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980.

சுப்பிரமணியன், ச. வே. (பதி) தமிழாராய்ச்சி நெறிமுறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985.

சோமசுந்தரம், அரு., கட்டுரைக் கதம்பம் பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1985.

சோமசுந்தரம், அரு., கட்டுரை இலக்கியம், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1985.

பட்டாபிராமன், கா. மொழிபெயர்ப்புக் கலை, வசந்த செல்வி பதிப்பகம், தருமபுரி, 1989.

புருஷோத்தமன் : யோகீசுவரன் : கல்லூரிப் பொதுக் கட்டுரைகள், செந்தில் பதிப்பகம், 1977.

ராஜபாரதி, நீங்களும் எழுதலாம், சந்திரா பதிப்பகம், சென்னை, 1987.

வரதராசன், மு., மொழியியல் கட்டுரைகள், பாரி நிலையம், சென்னை, 1973.

சிறுவர் இலக்கியம்

பூவண்ணன்

1960இல் வெளியான குழந்தை இலக்கிய வரலாறு என்னும் நூல் தான், சிறுவர் இலக்கியத்தைப் பற்றிய, ஆய்வுக் கண்ணோட்டத்தில் அமைந்த முதல் நூலாகும். குழந்தை இலக்கியம்—ஒரு மதிப்பீடு எனும் நூலை, குழந்தை எழுத்தாளர் சங்கம் 1976இல் வெளியிட்டது. பெரியோர் இதழ்கள் வளர்த்த சிறுவர் இலக்கியம் என்பது இதுவரை தொடாத ஆய்வுக் களமாக அமைகிறது. வானொலி நிலையம் வளர்த்த சிறுவர் தமிழ் என்பது மற்றொரு ஆய்வுக் களமாகும்.

விடிவெள்ளி

"ஒரு சிறுவன் என்பவன், இப்போது எவற்றையெல்லாம் நீங்கள் தொடங்கியிருக்கிறீர்களோ, அவற்றையெல்லாம் தொடரப் போகிறவன்; அவன் உங்கள் நகரங்களையும் மாநிலங்களையும் நாடுகளையும் ஆளப்போகிறவன்; உங்கள் கோயில்களிலும் பள்ளி களிலும் பல்கலைக் கழகங்களிலும் இடம் பெற்று அவற்றின் பொறுப்புகளை ஏற்கப் போகிறவன்; நீங்கள் படைத்துள்ள எல்லா நூல்களையும் மதிப்பிட்டுப் பாராட்டப் போகிறவன் அல்லது பழிக்கப் போகிறவன், அவனே" என்று கூறுகிறார் ஆபிரகாம் லிங்கன்.[1]

நாளைய உலகை ஆள்பவர் இன்றைய சிறுவரே என்னும் லிங்கனின் கருத்தைத்தான், பாவேந்தரின்,

இன்று குழந்தைகள் நீங்கள்—எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்[2]

என்னும் பாடலும், குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின்,

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே

---

1. லிங்கன் மேற்கோள், பூவண்ணன், சிறுவர் இலக்கிய வரலாறு, ப. 4
2. பாரதிதாசன், இசையமுது, ப. 19

நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்[3]

என்னும் பாடலும் வலியுறுத்துகின்றன.

சிறுவர்களின் முக்கியத்துவத்தைக் கூறும் மேற்கண்ட கூற்று களே சிறுவர் இலக்கியத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்து கின்றன. இன்றைய சிறுவர் சிறந்தவராய் விளங்காவிடில் நாளைய சமூகம், நாளைய நாடு சிறப்புற அமையாது. அதுபோலவே இன்றைய சிறுவர் இலக்கியம் சிறப்புறாவிடில், நாளைய பெரியோர் இலக்கியம் சிறப்புறாது.

எனினும் படைப்பிலக்கியப் பணி மேற்கொண்ட பலராலும் ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ள சிலராலும் சிறுவர் இலக்கியம் புறக்கணிக்கப்பட்டு வருவது வழக்கமாகி வந்தது. அண்மைக் காலத்தில்தான் ஆய்வு மாணவர் சிறுவர் இலக்கியத்தை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டனர்.

இதுவரை வந்துள்ள ஆய்வுகள்

சிறுவர் இலக்கியத்தைப் பற்றிய—ஆய்வுக் கண்ணோட்டத்தில் அமைந்த முதல் நூல் 1960இல் வெளிவந்த 'குழந்தை இலக்கிய வரலாறு' என்பதே. இந்திய மொழிகளில் இப்பொருள் பற்றிக் கூறும் முதல் நூலும் இதுவே. இதில்தான் தொல்காப்பியம் சொல்லும் பிசியும் பொருள் மரபில்லாப் பொய்மொழியும் சிறுவர் இலக்கியக் கூறுகள் என எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அகநா னூற்றின் 54ஆம் பாடலில் உள்ள,

முகிழ் நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்
பொன்னுடைத் தாலி யெம்மகன் ஏற்றி
வருகுவை யாயின் தருகுவன் பால்[4]

என்னும் பகுதி, அந்தக் காலத்தின் சிறுவர் நாட்டுப் பாடல் ஒன்றின் ஒரு பகுதி என்பதையும் முதன் முதலாக எடுத்துக் காட்டப்பட்டதும் இந்நூலிலேதான்.

இதே நூலை விரிவுபடுத்தி 60க்குப் பின்னுள்ள வரலாற்றையும் உள்ளடக்கிச் 'சிறுவர் இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பில் 1980இல் வெளியிடப்பட்டுள்ளது.

---

3. அழ. வள்ளியப்பா, மலரும் உள்ளம். முதல் தொகுதி பிஎபக்க அட்டையில் அச்சிட்டுள்ள பாடல்

4. அகநானூறு, 54 மாற்றூர்க் கிழார் மகனார் கொற்றனார் கொற்றனார் பாடல்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் தனது வெள்ளிவிழா ஆண்டில் குழந்தை சிறுவர் இலக்கிய வல்லுநர் பலரைக் கொண்டு, சிறுவர் கதைகள், பாடல்கள் முதலிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதச் செய்து, ''குழந்தை இலக்கியம் ஒரு மதிப்பீடு'' என்னும் நூலாக 1976இல் வெளியிட்டது, சிறுவர் இலக்கிய ஆய்வு பற்றிய முதல் தொகை நூல் இதுவே.

1979இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கல்கி நினைவு அறக் கட்டளைச் சொற்பொழிவினைக் குழந்தைக் கவிஞர் வள்ளியப்பா நிகழ்த்தினார். அச்சொற்பொழிவு 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்னும் பெயரில் 1981இல் வெளிவந்தது.

மேலே குறிப்பிட்ட மூன்றும் பல்கலைக் கழக ஆய்வுப் பட்டத்துக்காகச் செய்யப்படாத சிறுவர் இலக்கிய ஆய்வுநூல்களாகும்.

சில சிக்கல்கள்—தீர்வுகள்

அ. தலைப்பு

சிறுவர்களுக்கான கதை, பாடல் முதலியவற்றை ஆங்கிலத்தில் Children's Literature என்று குறிப்பிடுகின்றனர். இதையே தமிழ்ப் படுத்தி, 'குழந்தை இலக்கியம்' என்று குறிப்பிட்டு வந்தனர்; வருகின்றனர். குழந்தை என்னும் சொல் பள்ளி செல்லும் பருவத்துக்கு முந்திய குழந்தைகளுக்கே பொருத்தமாக இருக்கிறது. வயதுக்கேற்ப சிறுவர் இலக்கியத்தைப் பிரிப்பவர்களும், 5—8 வயதினர், 9—12 அல்லது 9—14 வயதினர் என்று பிரிக்கின்றனர். இவ்விரு பிரிவினரையும் குழந்தைகள் என்று குறிப்பிடுவதைவிடச் சிறுவர்கள் என்று குறிப்பிடுவது பொருத்தமல்லவா?

அதனால்தான் கட்டுரையாளரின் குழந்தை இலக்கிய வரலாறு என்னும் நூலின் மறு பதிப்பு சிறுவர் இலக்கிய வரலாறு எனத் தலைப்பிட்டு வெளியிடப்பட்டுள்ளது. எந்த தலைப்பு ஏற்றது என்பது இன்னும் விவாதத்திலேயே உள்ளது.

ஆ. நீதி இலக்கியம்

ஔவையார், அதிவீரராம பாண்டியர் முதலியோர் இயற்றிய ஆத்திசூடி போன்ற நீதி நூல்களைச் சிறுவர் இலக்கியத்தின் தொன்மை நூல்கள் எனப் பலர் கருதுவர். பல்லாண்டுகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இக்கருத்து, அண்மைக் காலத்தில் மறுக்கப்பட்டுள்ளது. ஆத்திசூடி முதலியன சிறுவர்க்குரியன அல்ல

என்றும் ஔவையாரும் அதிவீரராமரும் தம் நீதி நூல்களைச் சிறுவரை நினைத்து எழுதவில்லை என்றும் கூறுகின்றனர். ஆத்தி சூடி போன்றவை சிறுவர் நூல்களா? அல்லவா?—இது இப்போதைய வினா.

இந்த விவாதம் பிறர் கவனத்தைக் கவருமாறு செய்தவர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா. அவர் தம் கல்கி நினைவுச் சொற்பொழிவுகளில் (வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம் என்னும் நூலில்) இக்கருத்தை வெளியிட்டார்.

ஆத்திசூடியில்,

தையல் சொல் கேளேல்
மோகத்தை முனி
வீடு பெறநில்

எனவும், கொன்றை வேந்தனில்,

ஒருவனைப் பற்றி ஓரகத்திரு
பிறன் மனை புகாமை அறம் எனத் தகும்

எனவும், வெற்றி வேற்கையில்,

விலைமகட்கு அழகு தன்மேனி மினுக்குதல்

எனவும், உலகநீதியில்

கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்

எனவும் கூறப்பட்டுள்ளன.

இவற்றிலிருந்தே இப்பாடல்கள் குழந்தைகளுக்காகவே பாடப் பெற்றவை அல்ல என்பது புலனாகும்"[5] என்று கூறுகிறார் வள்ளியப்பா.

வள்ளியப்பாவின் 'வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம்' என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய ம.ப. பெரியசாமித்தூரன் இக்கருத்தை ஏற்றுக்கொண்டு, "அறம் செய விரும்பு" போன்ற ஔவையார் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்ற நூல்கள் குழந்தை இலக்கியம் ஆகா என்று துணிச்சலோடு கூறியவர் நம் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா தான். நானும் இக்கருத்தை முற்றிலும் ஆமோதிக்கிறேன்"[6] என்று குறிப்பிட்டுள்ளார்.

---

5. அழ. வள்ளியப்பா, வளர்ந்து வரும் குழந்தை இலக்கியம், பக். 10, 11
6. மேற்படி ப. IX

வள்ளியப்பா எடுத்துக் காட்டிய, சிறுவருக்குப் பொருந்தாத நீதிநூல் மேற்கோள்களை மேலே கண்டோம். 'ஆறுவது சினம்' என்பதே சிறுவருக்குப் தெரியாத உயர்ந்த நீதி என்கிறார் தூரன்.

"ஆறுவது சினம் என்பது மிக உயர்ந்த நீதி. அதை எய்துவது மிகக் கடினமானது. அதன் பொருளை உணர்ந்து வாழ்க்கையில் கடைப்பிடித்தால் அதுவே இன்ப வீடாகும். இந்த நீதி எவ்வளவு தான் உயர்ந்ததென்றாலும் குழந்தை எவ்வாறு புரிந்து கொள்ளுமோ, அறியேன்"[7] என்று கூறுகிறார்.

'ஆறுவது சினம்' என்னும் வரியின் சொற்கள் கடினமானவை என்று தூரன் கூறவில்லை. கருத்தே கடினமானது என்கிறார். இவர் கூற்றுப்படி 'கோபம் கூடாது' என்பதைக் கூறும் கதைகளும் பாடல்களும் சிறுவர்க்குப் பொருந்தாதவையாகின்றன.

வள்ளியப்பா 'அழகு' என்னும் பாடலில் 'பெண்ணுக்கு அழகு கற்பு'[8] என்று பாடுகிறார். இந்த வரி, வள்ளியப்பா 'கொன்றை வேந்தன் சிறுவர் இலக்கியம் அன்று' என்பதற்குச் சான்றாய் எடுத்துக்காட்டிய 'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு' என்னும் கருத்தோடு ஒத்ததே அன்றோ!

சிறுவர் பருவத்துக்குப் பொருந்தாத சில கருத்துகள் இருப்பதால் ஆத்திசூடி முதலியன சிறுவர் நூல்கள் அல்ல என்பதும் அவற்றை ஔவையார் முதலியோர் சிறுவரை நினைத்துப் பாடவில்லை என்பதும் ஏற்கத்தக்கன அல்ல. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய அரிச்சந்திர புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய நூல்களைப் புரட்டிவிட்டு, ஆத்திசூடி—கொன்றை வேந்தனைப் புரட்டிப் பார்த்தால், ஔவையார் அவற்றைச் சிறுவர்களை நினைத்தே சிறுவர்களுக்காகவே எழுதினார் என்பது புரியும். அதிவீரராம பாண்டியர் இயற்றிய காசிக்கண்டம், நைடதம், திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய நூல்களைப் பார்த்து விட்டு, அவரே இயற்றிய வெற்றி வேற்கை என்னும் நறுந்தொகையைப் பார்த்தால், பாண்டியர் பாடல்களை நினைத்தே நறுந்தொகை வழங்கினார் என்பது புரியும்.

---

7. மேற்படி ப. IX
8. மலரும் உள்ளம். முதல் தொகுதி, ப. 60

ஔவையார், அதிவீரராமர் போன்ற பெரும்புலவர்கள் சிறாரிடம் கொண்ட பேரன்பினால்—அக்கறையினால் அவர்களுக்குப் புரியும் எளிய நடைக்கு இறங்கி வந்து அரிய நீதிகளை அருளிச் சென்றனர். அதை மறுப்பதோ மறைப்பதோ அறமாகாது.

சிறுவர்க்காக நீதி நூல்களை வழங்கிய இப்புலவர்கள் பெரியவர்களுக்கான நீதிகளை இவற்றில் ஏன் சேர்த்தார்கள் எனும் வினா பிறக்கும். இதற்கு, 'சிறுவர் இலக்கிய வரலாறு' நூல் அளித்த விடையினை முன் வைக்கிறேன்.

''சிறுவர்க்கு நீதி போதனை செய்வது வீட்டுத் தோட்டத்தில் பயிர் செய்வது போல. வீட்டுத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகளில் சில விதைகள் சில வாரங்களில் பயன் தரும். சில விதைகள் சில மாதங்களில் பயன் தரும். சில விதைகள் சில ஆண்டுகளில் பயன் தரும். கீரை சில வாரங்களிலும், கத்தரி, வெண்டை முதலியன சில மாதங்களிலும், தென்னை பனை மா முதலியன சில வருடங்களிலும் பயன் தரும், இந்த விதைகளைப் போலவே சிறுவராக இருக்கும் போது பயன்படும் நீதிகளையும், இளைஞராக மாறும் போது பயன்படும் நீதிகளையும், சிறுவர் இல்லத் தலைவராக—பெரியவராக மாறும் போது பயன்படும் நீதி களையும் ஔவையும் அதிவீரராமரும் கொடுத்திருக்கிறார்கள். அந்நீதிகள் இருப்பினும் அவை சிறுவர் நூல்களே! அவற்றை எழுதிய புலவர்களும் குழந்தைக் கவிஞர்களே''[9].

ஆத்திசூடி முதலியன சிறுவர் நூல்கள் அல்ல என்னும் தமது கூற்றுக்குப் பக்கபலமாக வள்ளியப்பா எடுத்துக் காட்டியது, மு. வ.வின் மேற்கோளையே. வள்ளியப்பாவின் சொற்பொழிவு 1979இல் நிகழ்ந்தது. அவர் காட்டும் மு. வ.வின் மேற்கோள் 1972 இல்வெளியான மு. வ.வின் 'தமிழ் இலக்கிய வரலாறு' நூலில் இடம் பெற்றுள்ளது.

மு. வ. இந்நூலின் இறுதிப் பகுதியில்—352 பக்கம் உள்ள நூலின் 350 ஆம் பக்கத்தில்—குழந்தைப் பாடல்கள் குறித்து எழுதியுள்ளார். அதில் பாரதியாரின் குழந்தைப் பாட்டுகள் பற்றிக் குறிப்பிட்டு விட்டு,

''பாரதியார், அவ்வையாரைப் பின்பற்றிக் குழந்தைகளுக் காகப் 'புதிய ஆத்திசூடி' இயற்றினார். ஆனால், அவ்வையாரின்

---

9. பூவண்ணன், சிறுவர் இலக்கிய வரலாறு. ப. 84

ஆத்திசூடியும் குழந்தை இலக்கியம் என்று கொள்ள முடியாது. பாரதியாரின் புதிய ஆத்திசூடியும் அவ்வாறு கொள்ள முடியாது. அவற்றில் குழந்தைகளின் அறிவுக்கு எட்டாத ஆழ்ந்த கருத்துகள் உள்ளன, சிறு சிறு சொற்களால் சில தொடர்களால் அமைந்த மை பற்றிச் சிறுவர்களின் இலக்கியம் என்று சொல்லிவிட முடியாது. அவற்றின் வடிவம் மட்டுமே குழந்தை இலக்கியத்திற்கு உரியது. அவற்றின் பொருள் குழந்தை மனதுக்கு எட்டாதது''[10] என்கிறார்.

மு. வ. சிறுவர் இலக்கியத்தை நன்கு உணர்ந்தவர், பெரியோர் இலக்கியத்தைப் பிழையற உணாந்தவர். மு வ. தம் இலக்கிய வரலாறு நூலில் 'காப்பியங்கள்' என்னும் பகுதியில் ஔவையாரைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். ஔவையார் பலர் என்பதைக் குறித்த பிறகு ஆத்திசூடி வழங்கிய ஔவையாரைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''அவர் (கூழுக்குப் பாடிய ஔவையார்) சிறு பிள்ளைகளின் வாழ்விலும் இன்பம் கண்டவர். சிறுவர்களுக்காக அவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன் எனனும் நூல்கள் இன்றும் சிறுவர்களால் படித்துப் போறறப்படுகினறன. ஆத்தி சூடியும் கொன்றை வேந்தனும் தெரியாதவர்கள்-சில அடிகளாவது மனப்பாடம் இல்லாதவர்கள்—தமிழரில் இல்லை. அடுத்த நிலையில் வளரும் பள்ளி மாணவர்களுக்காக அவர் இயற்றிய நூல்கள், மூதுரை, நல்வழி ஆகியவை. இவை எல்லாம் நீதி களை வற்புறுத்துவன; வாழ்க்கை உண்மைகளை எடுத்துரைப்பன, நீதிகளையும் உண்மைகளையும் சிறு சிறு சொற்றொடர்களில் ஆழ்ந்த பொருள் உடையனவாகத் தெளிவுபெற எடுத்துரைப்பதில் இவர் நிகரற்றவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியாரும் இவருடைய முறையைப் பின்பற்றி, இவர் நூலின் பெயரையே போற்றி, 'புதிய ஆத்திசூடி' இயற்றினார் எனறால், இவர் காட்டிய வழி எவ்வளவு போற்றப்பட்டு வந்திருகிறது என்பதை உணரலாம்.[11]

மு. வ.வின் இக்கூற்று, நூலின் 172ஆம் பக்கத்தில் உள்ளது. இக்கூற்றைப் படித்தால், அவர் ஆத்திசூடி முதலியவற்றைச் சிறுவர் நூல்கள் என்று கருதினார் என்பது புரியும். அவற்றில்

10. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 350, 351
11. மேறபடி ப. 172

'ஆழ்ந்த பொருள்' இருப்பதை அறிந்தே அவ்வாறு கூறியுள்ளார் என்பது தெளிவு.

நூலின் சரிபாதியில் இவ்வாறு கூறும் மு. வ., நூலின் இறுதியில் இக்கூற்றுக்கு முரணாகக் கூறுவது ஏன்? இருவேறு காலத்தில் வெளியிட்ட இருநூல்களில் இவ்வாறு முரணான கருத்துகள் இருக்கலாம். ஒரே நூலின் இடையிலும் முடிவிலும் இருவேறு பட்ட கருத்துகள் தோன்றக் காரணம் யாதோ? ஒருவேளை இவ்விரு கருத்துகளில் ஒன்றுதான் மு. வவுக்குச் சொந்தமானதோ?

இ. பாரதியார் — கவிமணி இருவரில்
சிறுவர் பாடலை முதலில் எழுதியவர் யார்?

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சிறுவருக்காகப் பாடல் எழுதிய கவிஞர்களைப் பற்றிக் குறிப்பிடும் அனைவரும் முதலில் பாரதியாரையும் பின்னர் கவிமணியையும் குறிப்பிடுவர். அவர்தம் பாடல்களை விளக்கும் போதும் முதலில் பாரதியாரின் பாப்பாப் பாட்டை விளக்கிப் பின்னரே கவிமணியின் பாடல்களை விளக்கப் புகுவார்கள். பாரதியாரே முதலில் சிறுவர்க்காகப் பாப்பாப் பாட்டைப் பாடினார் என்றும் பின்னர் பாரதியாரைப் பின்பற்றிக் கவிமணி சிறுவர் பாடல் எழுதினார் என்றும் இரா. இளவரசு குறிப்பிடுகிறார்.[12]

பாரதியார் 1882இல் பிறந்தார். கவிமணி 1876இல் பிறந்தார். கவிமணி காலத்தால் பாரதியாருக்கு முற்பட்டவர். பாரதியார் பாப்பாப் பாட்டை 1915இல் எழுதி 'ஞானபானு' என்னும் இதழில் வெளியிட்டார். 'புதிய ஆத்திசூடி'யை அதற்கு ஓராண்டு முன்னர் தான் வெளியிட்டார். ஆனால் கவிமணி 1901ஆம் ஆண்டே சிறுவர் பாடல்களை எழுதத் தொடங்கிவிட்டார். இது 'மலரும் மாலையும்' நூலில் இடம் பெற்றுள்ளமை, மு. சண்முகம் பிள்ளை எழுதிய 'கவிமணி வாழ்க்கை நிகழ்ச்சிகள்' என்னும் குறிப்பால் தெரிகிறது. எனவே பாரதியார் பாப்பாப் பாட்டைப் பாடுவதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே கவிமணி சிறுவர் பாடல் இயற்றிவிட்டார். இக்கருத்தினைத் 'தற்காலத் தமிழ் இலக்கிய முன்னோடிகள்' என்னும் தொகை நூலில், கவிமணி பற்றிய கட்டுரையில் காணலாம். இது எந்த அளவு உண்மை என்பதை ஆய்வாளரி

12. இரா இளவரசு, பாரதியின் பாப்பாப் பாட்டு, புலமை இதழ், சூலை—செப்டம்பர் 1974

கண்டறிய வேண்டும். கவிமணியின் சிறுவர் பாடல் 1895க்கு முன்பே வெளியாகியுள்ளதா என்பதை அறிதல் வேண்டும் இருபதாம் நூற்றாண்டில் சிறுவர்பாடலுக்கு வித்திட்டவர் பாரதியாரா, கவிமணியா என்பதை உறுதிப்படுத்த இது உதவும்.

செய்ய வேண்டிய சில ஆய்வுகள்

சிறுவர் இலக்கியம் இன்னும் முழுமையாக ஆய்வு செய்யப் படாத களமாகவே திகழ்கிறது. வள்ளியப்பாவின் சிறுவர் இலக்கியத்தையும் இருவர் ஆய்ந்து முனைவர் பட்டம் பெற்றுள்ள னர். இது போல தங்கமணி, நெ.சி. தெய்வசிகாமணி, புவனை கலைச் செழியன், பூவை அமுதன் போன்றோரின் படைப்புகளைத் தனித்தனியே ஆய்வு செய்யலாம்.

சிறுவர்க்குரிய சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள் என்று பொதுவான தலைப்புகளை ஆய்வுப் பொருளாகக் கொள்ளலாம்.

சிறுவர் பாடல்கள்தாம் பெரும்பாலும் பலருடைய கவனத் தைக் கவர்கின்றன. பெரியோர்க்கான புதுக்கவிதை இலக்கியத் தைப் பற்றிப் பேசும் போது, 'முதலிலிருந்தே புதுக்கவிதை எழுதி வரும் கவிஞர்களின் புதுக்கவிதைகளை விட மரபுக்கவிதை எழுதி வெற்றி பெற்றவர்கள் எழுதும் புதுக்கவிதைகள் சிறப்பாக உள்ளன'[13] என்பார்கள். இது போலவே தொடக்கத்திலிருந்தே சிறுவர் பாடல்கள் எழுதிவரும் வள்ளியப்பா, தணிகை உலகநாதன் போன்ற கவிஞர்களைவிட, முதலில் பெரியோர்க்காகக் கவிதைகள் இயற்றிப் புகழ் பெற்றவர்கள், பின்பு சிறுவர்க்காக எழுதும் கவிதை களில் புதிய பொருள், புதிய சந்தங்கள் மிகுதியாக உள்ளன. கவிமணி, பாரதிதாசன், தமிழ்ஒளி ஆகியவர்களின் சிறுவர் பாடல்களால் இவ்வுண்மையை உணரலாம், இவ்விருவகைக் கவிஞர்களின் கவிதைகளை ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

இந்த நூற்றாண்டில் சிறுவர் இலக்கியம் செத்துவிடாமல் கட்டிக்காத்த பெருமை பெரியோர் பத்திரிகைகளுக்கும், வானொலி நிலையத்துக்கும் உண்டு.

சிறுவர் இதழ்கள் அதிகம் இல்லாத குறையைப் பெரியோர் இதழ்களில் இடம் பெற்ற சிறுவர் பகுதி போக்கிவந்தது, கலைமகள்,

13. அழ. வள்ளியப்பா, மு.கு.நூ. ப. 37

ஆனந்த விகடன், கல்கி, சுதேசமித்திரன் வாரஇதழ் முதலியன சிறுவர் பகுதிகளை இதழ் தோறும் வெளியிட்டுச் சிறுவர் இலக்கியத்தை வளர்த்தன. இப்பகுதிகளில் வெளிவந்த கதைகள் - பாடல்கள் முதலியவற்றில் பெரும்பாலானவை நூலாக வெளிவரவில்லை. விகடனில் சிறுவர் பகுதியில் அதன் துணையாசிரியர் கோபால கிருஷ்ணன் 'முத்து' என்னும் புனைபெயரில் எழுதிய 'ராஜகுமாரி மனோரமா' முதலிய சிறுவர் தொடர்கதைகள் மிகச் சிறப்பானவை. கலைமகள் சிறுவர் பகுதியில் தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் எழுதிவந்ததாகத் தெரிகிறது. சிறுவர்களிடையே பெரும்புகழ் பெற்றுள்ள பாடல் இது:-

சங்குச் சக்கரச் சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடு மாம்
சிங்குச் சிங்கென ஆடு மாம்
உலகம் மூன்றும் அளக்குமாம்—அது
ஓங்கி வானம் பிளக்குமாம்
கல கல வெனச் சிரிக்குமாம்—அது
காணக் காண இனிக்குமாம்

இதை இயற்றியவர் பெரும் பேராசிரியர் ரா. இராகவையங்கார்,[14] கவிமணியின் சிறுவர் பாடல்கள் பல கலைமகளின் சிறுவர் பகுதியில் வெளிவந்துள்ளனவாம்.

எனவே 'பெரியோர் இதழ்கள் வளர்த்த சிறுவர் இலக்கியம்' என்பது இதுவரை எவரும் தொடாத ஆய்வுக்களமாக அமைகிறது.

1947இல் தொடங்கிய சிறுவர் இதழ்களின் பெருக்கம்—ஒரு வகையான திடீர் எழுச்சி 1952இல் அடங்கி ஒய்ந்து விட்டது. அதன் பின்பு 'கண்ணன்' மட்டுமே சிறுவர்க்குரிய தரமான இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் சிறுவர் இதழ் செய்ய வேண்டிய பணியினைச் சென்னை வானொலி நிலையம் செய்தது. வானொலி அண்ணா அமரர் ரா. அய்யாசாமி அப்போது சிறுவர் நிகழ்ச்சிக்குப் பொறுப்பேற்று, சனிக்கிழமை தோறும் 'முத்துக் குவியல்' என்னும் தலைப்பிலும், ஞாயிறுதோறும் 'பாப்பா மலர்' என்னும் தலைப்பிலும் இரு நிகழ்ச்சிகள் வழங்கினார். 'பாப்பா மலர் மலரும் நேரம் பறந்து வருவீரே' என்று வானொலி

14. 'கலைமகள்' சனவரி. 1981 இதழில் பெ.நா. அப்புஸ்வாமி எழுதிய 'கலைமகள் வளர்ந்த கதை'.

அழைக்கும் முன்னே வானொலிப் பெட்டியின் முன்னே சிறுவர் கூடி, அந்நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்தனர். இரண்டு நிகழ்ச்சி களையும் இரண்டு சிறுவர் இதழ்கள் என்றே சொல்லலாம். சென்னை வானொலியின் சிறுவர் நிகழ்ச்சி வரலாற்றில் அய்யா சாமியின் காலம் ஒரு பொற்காலமாகும். எனவே அய்யாசாமி, சென்னை வானொலியில் வழங்கிய 'சிறுவர் இலக்கியம்' என்னும் தலைப்பில் ஆய்வு செய்யலாம். வானொலி நிலையம், நிசழ்ச்சிகளின் கைப்படிகளைப் பாதுகாத்து வருகிறது என்றே நம்புகிறேன், இதுபோலவே 'திருச்சி வானொலி நிலையம் வளர்த்த சிறுவர் தமிழ்' என்றும் ஆய்வு மேற்கொள்ளலாம்.

ஆய்வாளர் பார்வை படியாத மற்றொரு சிறுவர் இலக்கியப் பிரிவு, "சிறுவர் இதழ்கள்". சிறுவர் இதழ்களைப் பத்திரப்படுத்தி வைத்திருப்போர் அரிதே. குழந்தை எழுத்தாளர் சிலர் தம் படைப்பு வெளிவந்த ஏடுகளை மட்டும் பாதுகாத்து வருவதை அறிவேன். 'சிறுவர் இதழ்கள்' சுவையான ஆய்வுக்களமாகும். அதில் நுழைந்தால் பலப்பல புதிய செய்திகளைக் காணலாம். பெரியோர் இதழ்களில் கொள்கைக்காக என்று ஏடுகள் இருப்பதைப் போலவே சிறுவர் இதழ்களிலும் சில ஏடுகள் இருந்தன என்பது இந்தத் தலைமுறையினர்க்குத் தெரியுமா?

புதுக்கோட்டையிலிருந்து பொன்னி இதழை வெளியிட்ட நிறுவனம். சிறுவர்க்காக முத்து என்னும் இதழை நடத்தியது. இதன் ஆசிரியர் நாரா. நாச்சியப்பன். இது பகுத்தறிவுக் கொள்கை யைப் பறைசாற்றிய பாலர் பத்திரிகை. இதில் அறிஞர் அண்ணா, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் படைப்புகள் இடம் பெற்றிருந்தன. இந்த இதழில் பாவேந்தர் குறள் சினிமா என்னும் ஒரு புதுப் பகுதியைச் சிறுவர்க் காக வழங்கினார்.

1949-50இல் விடுதலை நாளேட்டின் சென்னை நகர விற்பனை யாளராக இருந்தவர். பாலசுப்பிரமணியம். அவர், குஞ்சு என்னும் சிறுவர் வார இதழை வெளியிட்டார். இந்த இதழ் திராவிடக் கழகத்துக் கொள்கையைச் சிறுவர்க்கு எடுத்துச் சொன்னது. 1949இல் இக்கட்டுரையாளரின் முதல் படைப்பு இந்த இதழில் தான் வெளிவந்தது.

இன்று மகளிர்க்காகத் தனியே இதழ் இருப்பது போல சிறுமியருக்காகச் சிறுமி என்னும் தனி வார இதழ் வெளிவந்தது.

புதுக்கோட்டையிலிருந்து வி.எஸ். நடேசன் என்பவர் ஓரணா (ஆறுகாசு) விலையில் பாலர் மலர் என்னும் மாதம் இருமுறை இதழையும், அரையணா (மூன்று காசு) விலையில் டமாரம் என்னும் வார இதழையும், காலணா (ஒன்றரை காசு) விலையில் சங்கு என்னும் வாரம் இருமுறை இதழையும் ஒரே நேரத்தில் வெளியிட்டார். இம்மூன்று இதழ்களுக்கும் தம் பெயரை வெளிப் படுத்தாமல் ஆசிரியராக இருந்து பணியாற்றியவர் வள்ளியப்பா.

காலணா விலையில் வந்த இதழ்களில் புதுவையிலிருந்து வெளி வந்த மயில் குறிப்பிடத்தக்கது. இதில் கவியோகி சுத்தானந்த பாரதியாரின் எழுத்துகள் தொடர்ந்து இடம் பெற்றன.

தம்பிடி விலையிலும் ஒரு சிறுவர் இதழ் வெளிவந்தது. தம்பிடி யின் மதிப்பு இன்றைய ஒரு காசுக்கும் குறைவு. அரைக்காசுதான் தம்பிடி. அரைக்காசுக்கு 'மாமா' என்னும் சிறுவர் வார இதழ் ஒன்று வெளியானது. சிறுவர் இதழ்களில் இதுவே மிகமிக விலை குறைவான இதழ், இந்த விலையில் வேறு இதழ்கள் வந்தனவா என்பது தெரியவில்லை.

இந்த இதழ்கள் யாவும் 1947க்கும் 52க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டுக்காலத்தில் வெளிவந்தவை. முயன்று தேடினால் இவை கிடைக்க வாய்ப்பு உண்டு. ஆய்வாளர்கள் களப்பணியுடன் கூடிய ஆய்வாக இதை மேற்கொள்ளலாம். இப்போதும், இவற்றைத் தேடிக்கண்டு ஆய்வு செய்யாவிட்டால், 1840 இல் வந்த பால தீபிகை, 1849இல் தோன்றிய 'சிறுபிள்ளைகளின் நேசத்தோழன்' போன்ற சிறுவர் இதழ்களைப்பற்றி இப்போது பெயரைத் தவிர வேறு விவரம் தெரியாமல் நாம் திண்டாடுவது போல, பாலர் மலர் முதலிய ஏடுகளைப் பற்றியும் ஏதும் அறியாத நிலையில் நாம் திண்டாட நேரும்.

சிறுவர் இதழ்கள், குறிப்பாக 1947-52 ஆண்டுகளில் வெளியான வைபற்றி ஆய்வு மேற்கொள்ளல் இன்றியமையாததாகும்.

சிறுவர் சிறுகதைகளையும் சிறுவர் நாவல்களையும் தொகுத் துப் படித்துப் பார்க்கும் ஆய்வாளர் திகைத்துப் போவர் என்பது மிகையன்று. பெரியோர் சிறுகதைத் தொகுதிகளைப் போல – நாவல்களைப் போல வகையிலும் தரத்திலும் அவை உயர்ந்தவை; ஆய்வுக்கு உரியவை.

சிறுவர் இலக்கியத்தை ஆய்வுப் பொருளாகக் கொள்பவர்தாம் இந்நூல்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. 'தமிழில் சமூக நாவல்கள்' என்னும் தலைப்பில் ஒருவர் ஆய்வு செய்யப் புகுந்தால், அவர் சிறுவர் சமூக நாவல்களையும் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டும். தமிழில் வரலாற்று நாவல்களைப் பற்றி ஆய்வு செய்தால், சிறுவர்க்குரிய வரலாற்று நாவல்களையும் ஆய்வு செய்ய வேண்டும். 'ரேவதி' என்னும் புனைபெயரில் எழுதும் ஈ. எஸ். ஹரிஹரன் எழுதிய, பாண்டிய பரதன், கார்வண்ணன் கண்ட கனவு, சிறை மீட்ட செல்வன் ஆகிய சிறுவர் வரலாற்று நாவல் களையும், கட்டுரையாளர் எழுதிய புலவர் மகன், பல்லவமல்லன், ஆளப்பிறந்தவன் ஆகிய சிறுவர் வரலாற்று நாவல்களையும், பெரி யோர்க்கான வரலாற்று நாவல்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சிறுவர் வரலாற்று நாவல் துறை எவ்வளவு வளம் பெற்றிருக்கிறது என்பது தெரியும்.

'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' என்றார் வள்ளுவர். சிறுவர் இலக்கியம் எனக்கொண்டு அதை ஆய்வாளர் தள்ளாமை வேண்டும். சிறுகதை, நாவல், வாழ்க்கை வரலாறு, நாடகம், கவிதை, காப்பியம் முதலிய பொதுத் தலைப்புகளில் ஆய்வு செய்யும் போது அத்தலைப்புகளில் அமைந்த சிறுவர் நூல்களையும் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டும்.

நாட்டார் பாடல்கள்

வீ. அரசு

தமிழில் நாட்டார் வழக்காற்றியல் துறையும் புதிய கோணங்களில் வளர்ந்து வருகிறது. நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வுகள் மொழியியல் மற்றும் மானிடவியல் அணுகுமுறைகளிலும் நிகழ்ந்து வருவதைக் காண முடிகிறது. இந்திய மொழிகளின் மையம் போன்ற அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் தன்னார்வக்குழுக்களும் தமிழ் நாட்டார் வழக்காற்றில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

தமிழில் ஒவ்வொரு பயில்துறையும் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் புதிய பரிமாணங்களோடு வளர்ச்சி பெற்று வருகின்றன. நாட்டார் வழக்காற்றியல் துறையும் புதிய பரிமாணத்தோடு வளர்ந்து வருகிறது. தமிழில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப் போக்குகளை, குறிப்பாக நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வுப்போக்குகளைக் கவனத்தில் கொள்ளும்போது பின்கண்ட சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

1. நாட்டார் வழக்காறுகளை எழுதப்பட்ட இலக்கியத்தை அணுகுமுறையிலேயே அணுகும் தன்மையைக் காணமுடிகிறது. குறிப்பாக நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வு அணுகுமுறைகளில் எழுதப்பட்ட இலக்கிய அணுகுமுறை மேற்கொளளப்படுவதைக் காண முடிகிறது.

எழுதப்பட்ட இலக்கியத்தைச் சுவைக்கும் இரசனை முறையும், எழுதப்பட்ட இலக்கியத்தின் யாப்பு விதிகளையும், நாட்டார் பாடல்களில் ஏற்றிப் பார்க்கும் தன்மையைக் காண முடிகிறது.

2, மானிடவியல், மொழியியல் ஆகிய பயில்துறைகளோடு நெருக்கமான தொடர்புடையது நாட்டார் வழக்காற்றியல்துறை. மேற்குறித்த துறைகளில் பயிற்சி, இத்துறைத் தொடர்பான ஆய்வுக்குப் பெரிதும் உதவும். ஆனால் நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வில் மேற்குறித்த துறைகளில் பயிற்சியின்றி, பாடல்

களை விளக்கவுரைப் போக்கில் ஆய்வு செய்வதைக் காண முடிகிறது.

3. 1980ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஆய்வாளர் தமிழ் நாட்டார் வழக்காற்றியலில் ஆர்வங் காட்டி வருகின்றனர். இத்தன்மை, தமிழ் நாட்டார் வழக்காற்றியலுக்கு அளிக்கும் பங்களிப்பையும், குறிப்பாக நாட்டார் பாடல்கள் ஆய்விற்குக் கிடைக்கும் பங்களிப்பையும் மதிப்பிடல் தேவையாகும்.

கடந்த 120 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டார் பாடல்கள் தொகுப்பு நடைபெற்று வருவதைக் காண முடிகிறது. அப்பாடல்கள் குறித்த, அந்தந்தக் கால வளர்ச்சியில் மதிப்பீடுகளும் செய்யப்பட்டுள்ளன. இவ்விதம் செய்யப்பட்டவை, மேற்குறித்த சிக்கல்களை எவ்வகையில் எதிர்கொண்டுள்ளன? என்பதை விவாதிப்பது தேவையாகும். இதன் மூலம் இத்துறையில் ஈடுபடுவோர், அத்தன்மைகளைக் கவனத்தில் கொள்ள இயலும்.

உ. வே. சா. காலம் தொடங்கி, நாட்டார் பாடல்களை அணுகிய பெரியவர்கள் அனைவரும் அவற்றை எழுதப்பட்ட இலக்கியத்தைச் சுவைக்கும் போக்கிலேயே சுவைப்பதையும், மதிப்பிடுவதையும் காணலாம். தொடக்க கால நாட்டார் பாடல்கள் தொகுப்பு ஒன்றிற்கு முன்னுரை எழுதிய சி. சுப்பிரமணியம் பின்வருமாறு கூறுகிறார் :

''நாட்டுப்பாடல்கள் சிலவற்றிற்கு ஆதியில் இலக்கிய வடிவம் இருந்திருக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். அவை, சிதைந்த காப்பியங்களின் துணுக்குகள் அல்லது உருமாறிய தனிப்பாடல்கள் என்பது அவர்களது அபிப்பிராயம்'' (செ. அன்னகாமு. 1960 சிறப்புரை)'' மேலும், தொடக்க காலத்தில் இப்பாடல்களை மதிப்பீடு செய்த மு. அருணாசலம் பின்வருமாறு கூறுகிறார் :

''மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையர், ஞானியார் சுவாமிகள், திரு. வி. கலியாணசுந்தரனார், டி. கே. சிதம்பரநாத முதலியார் போன்ற பெரியவர் தொடர்பினாலும், வையாபுரி பிள்ளையவர்களிடம் நீண்ட காலம் இடையறாது செய்து வந்த பணியினாலும், 1935-1944 ஆகிய கால எல்லையில் தமிழ் ஆராய்ச்சியில் இலக்கிய இலக்கண உண்மைகளைக் காண்பதைவிட, இலக்கிய இன்பம் நுகர்வதிலேயே என் உள்ளம் பெரிதும் நாடுபட்டி

ருந்தது. அவ்வீடுபாட்டின் விளைவாக நான் எழுதிய கட்டுரைகள் பல... வாய்மொழிப் பாடல்களின் அநுபவத்தை வெளியிடும் கட்டுரைகளைக் கொண்டது இந்நூல்'' (1977 : முகவுரை).

மேற்குறித்த செய்திகள் தமிழ் அறிஞர் - நாட்டார் பாடல் களை 'எழுதப்பட்ட இலக்கியச்சுவை'யோடு அணுகியதை உறுதிப் படுத்துகிறது. இத்தன்மைகள், தொடக்க காலத்தில் நடைமுறை யில் இருந்தமை இயல்பான ஒன்றே. ஆனால், நாட்டார் வழக் காற்றியல் துறை தொடர்பான வரையறைகள் ஓரளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ள இன்றைய சூழலிலும் அத்தன்மைகளை நடைமுறைப் படுத்துவதை ஏற்றுக்கொள்ள இயலாது. தமிழில் தொடக்க காலம் முதல் மிகுதியான நாட்டார் பாடல்களைத் தொகுத்தும், அவை குறித்து எழுதியும்வந்த கி. வா. ஜ. போன்றவர்களும் இவ்வகை யான அணுகுமுறைக்கு உட்பட்டே இருந்தனர்.

நாட்டார் வழக்காறுகள், சமூகத்தில்... எப்பொழுதும் ஆளும் அரசு விதிகளுக்கு உட்பட்டவை அன்று. திட்டவட்டமான விதிகளை உருவாக்கி அதன் அடிப்படையில் எழுதப்படும் இலக்கிய உருவாக்கத்திலிருந்து அடிப்படையில் வேறுபட்டவை; குறிப்பாக நாட்டார் பாடல்கள். ஆப்பிரிக்க மக்களிடம் காணப் படும் நாட்டார் வழக்காறுகளில் எதிர்ப்புணர்வுக்கூறுகள் மிகுதி யாகக் காணப்படும். ஏனெனில், பழங்குடி மக்களுக்கான தன்மை களை ஆழமாகப் பெற்ற அம்மக்களிடம், நாகரிக வளர்ச்சியடைந்த ஐரோப்பியர்கள் தொடர்பு கொள்ளும்போது, ஐரோப்பியத் தன்மைகளை ஏற்றுக்கொள்ள அந்த மக்கள் முன்வருவதில்லை. இதனை அவர்களது நாட்டார் வழக்காறுகள் காட்டுகின்றன. தமிழ்ச்சூழலில் வளர்ச்சியடைந்த செவ்வியல் இலக்கிய மரபு உண்டு. ஆனால் அவற்றிலிருந்து அடிப்படையில் மாறுபட்டு உருவாகும் நாட்டார் பாடல்களில், ஆப்பிரிக்க வழக்காறுகளில் உள்ள அளவிற்கு எதிர்ப்புணர்வுத் தன்மைகளைக் காண இயலாது. ஏனெனில் செவ்வியல் இலக்கியச் செல்வாக்கு நாட்டார் பாடல் களிலும் நாட்டார் பாடல்களின் செல்வாக்கு செவ்வியல் இலக்கி யங்களிலும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகுதி. இதனால் நாட்டார் பாடல்களையே செவ்வியல் இலக்கிய உருவாக்கத்தி லிருந்து அணுகுவது தவறாகும், இத்தன்மை தமிழ்ச் சூழலில் நாட்டார் பாடல்களை ஆய்வுசெய்வோர் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

எழுதப்பட்ட இலக்கிய அணுகுமுறை, நாட்டார் பாடல்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழில் மிகுதியாக இருப்பதைக் காணலாம். இத்தன்மை ஆறு.அழகப்பன் தொடங்கிப் பல்கலைக்கழக ஆய்வுகளில் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அத்தன்மையான ஆய்வுகள் எழுதப்பட்ட இலக்கிய அடிப்படைகளை, நாட்டார் பாடல்களில் ஏற்றிப் பார்க்கின்றன, அடிப்படையான வேறுபாடு தொகுப்பில் மட்டுமே கூள்ளது. ஆய்வில் மேற்கொள்ளப்படவில்லை. (இவ்வகையான பல்கலைக் கழக ஆய்வேடுகள் - பட்டியல் பின்னிணைப்புஒன்றில் காண்க.)

தமிழ் மரபின் பழமை போற்றும் அணுகுமுறை என்பது தமிழர்களின் இனப்பெருமை பேசுதல்; இக்கால இலக்கியம் பற்றிய வரையறை போன்ற பல கூறுகளும் செயல்பட்டுவருவதைக் காண முடியும். இத்தன்மையால் தமிழின் நவீனத்துவ வளர்ச்சிப் பின் தங்குவது பலதுறைகளில் நிகழ்ந்து வந்துள்ளது. இத்தன்மை நாட்டார் பாடல்கள் ஆய்விலும் நிகழ்ந்து வருகிறது. இதனை ஆய்வாளர் கவனத்தில் கொள்ளவேண்டும். அடிப்படைகளே முக்கியம். மரபின் செல்வாக்குகளை, காலவளர்ச்சியோடு இனங் கண்டு, தேவையற்றவைகளைக் கைவிடுதல் தேவை.

மேலும், பழமை பாராட்டும் இலக்கிய அணுகுமுறையோடு நாட்டார் பாடல்களை அணுகுவதால், பல கூறுகளில் அவற்றை இரண்டாம்தரத்தில் அணுகும் தன்மையையும் காண முடியும். மேற்குறித்த ஆய்வுப் போக்கிற்கு ஓரளவு இத்தன்மையும் காரண மாகும். நாட்டார் வழக்காறுகள், பாமரர்கள், கிராமப்புறம் ஆகியவற்றோடு இணைக்கப்பட்டு, அவைகளின் பொருளாதார, பண்பாட்டுப் பின்னடைவுகளோடும் இணைத்துப் பார்க்கப்படு கிறது. இது அடிப்படையில் தவறாகும். ஏனெனில் நாட்டார் வழக் காறுகள் என்பது, அங்கீகரிக்கப்பட்ட அரசு நெறிகளுக்கு இணை நிலையில் உருப்பெறுபவை. ஒருவகையில் அங்கீகரிக்கப்பட்ட அரசு விதிகளுக்கு எதிரானவையும் கூட. இதனைக் கவனத்தில் கொண்டு, அவற்றை நாட்டார் வழக்காறுகள், மக்கள் வழக்காறு கள், ஆட்சி எந்திரங்களின் விதிக்கு எதிரான வழக்காறுகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு அணுக வேண்டும். இப்படி அணுகினால் மேற்குறித்த தன்மைகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பில்லை.

எழுதப்பட்ட இலக்கியத்தின் யாப்பு விதிகளை முதன்மைப் படுத்தி நாட்டார் பாடல்களை அணுகும் போக்கும் காணப்படுகிறது. அண்மையில் சென்னைப் பல்கலைக்கழக ஆய்வேடு (த. கனகசபை. நாட்டுப்புறப்பாடல்களின் கட்டமைப்பு, 1990) ஒன்றும் அவ்வகையில் படைக்கப்பட்டது. கி.வா.ஜ. போன்றோரும் அத்தன்மையோடு நாட்டார் பாடல்களை அணுகியுள்ளனர். பிற்காலத்தில் அவர் அத்தன்மையை ஓரளவு மாற்றிக் கொண்டதைக் காணமுடிகிறது. (பார்க்க : செ. அன்னகாமு. ஏட்டில் எழுதாக் கவிதைகள் : மதிப்புரை : 1960)

நாட்டார் பாடல்கள், இயைபுத்தன்மையோடு (Improvisation) பணித்தளம் மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் ஆகியவற்றில் உருவாக்கப்படுகின்றன. இதுவே எழுதப்பட்ட இலக்கியத்திலிருந்து, இவை அடிப்படையில் வேறுபடுவதை உறுதிப்படுத்தும். இத்தன்மை கவனத்தில் கொள்ளாமல் யாப்பு விதிகளைப் பொருத்துவது, அவற்றின் அடிப்படைத்தன்மைகளுக்கு முரண் பட்டதாக அமையும்.

1930கள் தொடங்கி 1960 வரை தமிழில் தொகுக்கப்பட்ட நாட்டார் பாடல்கள், அடிப்படையில் இதழியல் தேவை மற்றும் இலக்கிய இரசனை ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டிருந்தன. இந்தப் போக்கின் நீட்சி 1960களுக்குப்பின் நிகழ்ந்த நாட்டார் பாடல்களின் ஆய்வுகளில் இடம் பெற்றதை மேலே விவாதித்தோம்; ஆனால் 1960களுக்குப்பின் வேறு ஒருவகையான தொகுப்பும் ஆய்வும் நாட்டார் பாடல்களில் மேற்கொள்ளப் பட்டதையும். அவற்றின் செல்வாக்குப் பல்கலைக்கழக ஆய்வுகளில் நிகழ்ந்திருப்பதையும் காணமுடிகிறது. 'சாந்தி', 'சரசுவதி', 'தாமரை' போன்ற இதழ்கள் நாட்டார் பாடல்கள் மற்றும் கதைகளை, மக்களின் சமூக வரலாறு மற்றும் வாழ்வியல் வெளிப்பாடுகளாகக் காணத் தொடங்கின. இக்காலச் சூழலில் கலை இலக்கியப் பெருமன்றம் என்ற அமைப்பை பா. ஜீவானந்தம் முன்னின்று உருவாக்கினார். அந்த அமைப்பு நாட்டார் பாடல்களைத் தொகுப்பதற்கான குழு ஒன்றை அமைத்தது. அதன் செயலராக நா, வானமாமலை தேர்வு செய்யப்பட்டார். இதன் விளைவாகத் 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' (1964) போன்ற தொகுப்புகள் வெளிவந்தன. இந்தப் பின்புலத்தில் நிகழ்ந்த நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுகள் முன்பு சொன்ன தன்மைகளிலிருந்து வேறுபட்டதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நா. வானமாமலை, இந்திய அளவில் இத்துறையில் செயல் படும் சங்கர் சென்குப்தா, சுனீத்குமார் சட்டர்ஜி போன்றவர் களுடன் தொடர்பு கொண்டு, தமிழில் இத்துறையின் ஆய்வு வளர்ச்சிக்கு வழி கண்டார். இத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டும் தமிழில் ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின (பின்னிணைப்பு. 2 காண்க). பாடல் தொகுப்புகளும் இவ்வகையில் தொகுக்கப்பட்டு வெளிவருவதைக் காண முடிகிறது. நா. வானமா மலை உள்ளிட்டவர்கள்-தொகுத்த தொகுப்புகளிலிருந்து (பார்க்க: பா. ரா. சுப்பிரமணியம் : 1975, 30-53) மேலும் வளர்ச்சிபெற்ற தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. இவ்வகையில், கொங்கு நாட்டுப் புறப் பாடல்களைத் தொகுத்து வெளியிடும் க. கிருட்டிணசாமி குறிப்பிடத்தக்கவர். இத்தன்மையில் முரண்பட்டுத் தொடக்க காலத் தொகுப்புகளைப் போன்று இன்றும், பல தொகுப்புகள் வெளிவருவதையும் காணலாம். (பார்க்க. பின்னிணைப்பு மூன்று).

நாட்டார் பாடல்கள் குறித்த ஆய்வுகள் மற்றும் தொகுப்புகள் மேற்குறித்த தன்மைகளில் நிகழும் தமிழ்ச் சூழலில், மொழியியல் மற்றும் மானிடவியல் அணுகுமுறைகளிலும் நிகழ்ந்து வருவதைக் காண முடிகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆய்வுகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. பேராசிரியர் வி. ஐ. சுப்பிர மணியம் கேரளப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கிய ஆய்வுகளும் வளர்ச்சிக்கு வழிகண்டவை. பா. ரா. சுப்பிரமணியத்தின் ஆய்வு இவ்வகையில் பெரிதும் குறிப்பிடத்தக்கது. (1975). மொழிவடிவம், பொருள், சூழல் அடிப்படைகளைக் கொண்டு இவ்வகை ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகை ஆய்வில், தாலாட்டு, ஒப்பாரி போன்ற வடிவங்களே பெரிதும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. அனைத்து வடிவங்களையும் இவ்வகையில் ஆய்வு செய்வது தேவை. தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் நாட்டார் வழக்காறுகளை, குறிப் பாகப் பாடல்களை மானிடவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்திருப்பது மிகவும் குறைவாகும். வருங்காலத்தில் இக் கண்ணோட்டத்தில் ஆய்வுகளை நிகழ்த்த முன் வரவேண்டும். இவ்வகை ஆய்வு நிகழாமைக்குக் காரணம், பல்கலைக்கழகப் பாடத் திட்ட முறைகளும், அதற்கான அடிப்படைப் பயிற்சி இன்மையுமே யாகும்.

1980ஆம் ஆண்டுகளில் 'இந்திய மொழிகளின் மையம்' போன்ற அமைப்புகளும் பல்கலைக்கழகங்களும், தன்னார்வக்குழுக்

களும் தமிழ் நாட்டார் வழக்காற்றில் ஈடுபட்டுவருவதைக் காண முடிகிறது. தென்னிந்திய மொழிகளில் விரிவான ஆய்வுகள் - இவ் வகையில் நடைபெற்று வருகின்றன. ஆலன் டண்டீஸ், ஸ்டூவர்ட் பிளாக்பர்ன், பீட்டர் கிளாஸ், ஏ. கே. இராமானுசம், ஜவகர்லால் ஹண்டு போன்றபலர் இத்துறையில் ஈடுபட்டுவருபவர்களில் குறிப் பிடத்தக்கவர்கள். இவர்களது ஆய்வுகளில் நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுகள் மிகவும் குறைவு. மார்கரெட் டி. எக்னர் என் பவர், செங்கற்பட்டிற்கு அருகில் உள்ள புக்காதுறை என்ற ஊரில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் பாடல்களை 'அழுகைப் பாடல்கள்' என்று கொண்டு குறியியல் (Semiotics) அடிப்படை யில் ஆய்வு - செய்துள்ளார். (பார்க்க : Another Harmony. 294)

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் உருப்பெற்றுவரும் பல்வேறு கோட்பாடுகள் அடிப்படையில் மேற்குறித்தவர்களின் ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுகளுக்குப் பல நிறுவனங்கள் உதவி செய்து வருகின்றன. இவ்வகை ஆய்வுகள் - தமிழர்களின் சமூக உளவியல் மற்றும் பண்பாட்டு வரலாறுகளை அறிய உதவக் கூடும்: ஆனால் இவ்வாய்வு நிகழ்த்துவோரின் நோக்கங்கள் பற்றிய அக்கறை மிகவும் தேவையாகும். பிரிட்டிஷ் காலனிய ஆதிக்க காலத்தில் இந்தியாவின், தமிழகத்தின் பண்பாடு மற்றும் வாழ்க்கை முறைகளில் ஐரோப்பிய மதங்களின் செல்வாக்கு கொண்டுவரப்பட்டன. அவற்றில் பல கூறுகள் நமது வளர்ச்சிக்கு வழி கண்டன. அவ்வகை வளர்ச்சிகள் இயல்பானவையும்கூட; ஆனால் அதனால் ஏற்பட்ட தீங்குகள் ஆழமானவை. இன்றைய சூழலில், புதிய காலனிய ஆதிக்க முயற்சிகள் உலகம் முழுவதும் நடைமுறையில் நிகழ்ந்து வருகின்றன, தமிழகத்தின் சமூக உளவியல் குறித்த ஆராய்ச்சி மூலம், தமிழர்களின் மீதான பண்பாட்டுக் காலனிய (Cultural Colinization) ஆதிக்கம் செலுத்தவும் வாய்ப்புண்டு. கொரியா, வியட்நாம், சராக் போன்ற நாடுகளில் இவ்வகையான ஆதிக்கங்கள் ஏற்பட்டுள்ளன. தமிழகத் தில் நடைபெறும் மேற்குறித்தவர்களின் ஆய்வுகளை வெறும் கல்வியியல் நடைமுறைகளாக (Academic research) மட்டும் நாம் வரவேற்கும் அதே வேளையில் அரசியல் நோக்கங்களிலும் அக்கறை கொள்ள வேண்டிய தேவையுமுண்டு. அவ்வகை ஆய்வின் மேற்குறித்த தன்மைகளை மதிப்பிடுவதற்கு இன்னும் கால நீட்டிப்புத் தேவை. பல்கலைக்கழகங்களில் நாட்டார் வழக்

காற்றியல் ஆய்வுகளில் ஈடுபடுவோர் மேற்குறிப்பிட்ட தன்மைகளையும் கவனத்தில் கொள்வது தேவையாகும்.

சான்றாதார நூற்பட்டியல்

1. அகத்தியலிங்கம், ச. & ஆறு இராமநாதன் (பதி) — நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை தொகுதி I & II இந்திய நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலைநகர், 1987

2. இராமநாதன், ஆறு. — வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை அறிமுகமும் ஆய்வுகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988

3. ஞானப்பிரகாசம், வி.மி.—க.ப. அறவாணன் (பதி) — நாட்டுப்புற இலக்கியப் பார்வைகள், பாரிநிலையம், சென்னை, 1974

4. கருணாகரன், சி. இரா. பாக்கியலட்சுமி (பதி) — நாட்டுப்புறவியலாய்வு நெறி முறைகள். இந்திய நாட்டுப்புற வியல் கழகம், அண்ணாமலை நகர், 1989

5. கேசவன், கோ. — நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம், புதுமைப் பதிப்பகம், திருச்சி, 1986

6. கோவைகிழார் — எங்கள் நாட்டுப்புறம், அம்மன் புக் கம்பெனி, கோவை, 1990

7. சக்திவேல், சு. — நாட்டுப்புறவியல் நூலடைவு, மணிவாசகர் பதிப்பகம், 1988

8. சுப்பிரமணியன், ச.வே.(பதி) — தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1979

9. சுப்பிரமணியன், பா. ரா. — தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1975

10. முத்துகுமாரசாமி, ஏம். டி. — பிற்கால அமைப்பியலும் குறியியலும், தமிழ்த்துறை ஆய்வு மையம், தூய சவேரியர் கல்லூரி, பாளையங்கோட்டை, 1988

11. வரதராசன், செங்கோ — மேற்குத் தமிழக நாட்டுப்புற வியல் - ஓர் ஆய்வு, எண்.சி.பி.எச், சென்னை, 1988

12. லூர்து, தே. — நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981

13. ———— — நாட்டார் வழக்காற்றியல் - கவ ஆய்வு, பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1986

14. ஜார்ஜ், பு. தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள். தொகுப்பும் வகைப்பாடும், சென்னைப் பல்கலைக் கழகம் நாட்டார் வழக்காற்றியல் பெருஞ் சான்றிதழ் ஆய்வேடு, 1990

பின்னிணைப்பு 1

எழுதப்பட்ட இலக்கிய அணுகுமுறையோடு நாட்டார் பாடல்களை ஆய்வு செய்த ஆய்வேடுகள் :

1. 1961 ஆறு. அழகப்பன் - A Critical Study of Folksongs
2. 1977 சு. சண்முகசுந்தரம் - திருநெல்வேலி மாவட்ட நாட்டுப் புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு.
3. 1980 குருவிக்கரம்பை சண்முகம் - கொடிக்கால் ஏற்றப் பாடல்கள்.
4. 1984 மீ. அ. மு. நாசீர்அலி - திருச்சி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்.
5. 1986 சகோ. ஜான்மேரி : கிறித்தவப் பாரம்பரியப்பாடல்கள்.
6. 1990 ந. இளங்கோ, நாட்டுப்புறப்பாடல்களும் அகப்பொருள் மரபும்.
7. 1990 விசயலட்சுமி, கோவை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்.

பின்னிணைப்பு : 2

நா. வானமாமலையின் அணுகுமுறைப் போக்கில் உருப் பெற்ற ஆய்வேடுகள்:

1. 1979 - இ. பாலசுந்தரம் - சமத்து நாட்டார் பாடல்கள்.

2. 1982 - வி. சரசுவதி, நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு.
3. 1982 - ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்.
4. 1982 - பி. புஷ்பம், சாதி அடிப்படைத் தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களில் ஒற்றுமை வேற்றுமைகள் (திருநெல்வேலி மாவட்டம்).
5. 1983 - சே. நிர்மலாபாய் - A Critical study of Folk songs of Kanyakumari District.

பின்னிணைப்பு : 3

நாட்டார் பாடல்களை எப்படித் தொகுப்பது என்ற முறையியல் போக்கில் அமையாத நாட்டார் பாடல் தொகுப்புகள்:

1. 1972 - ஆறு . அழகப்பன், தாலாட்டு ஐநூறு
2. 1977 - மு. வை. அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள்
3. 1980 - சு. சண்முகசுந்தரம், தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள்
4. 1981 - மெ. சுந்தரம், நாட்டுப்புறப்பாடல்கள்
5. 1982 - கோ. பெரியண்ணன், இராமியப் பாடல்கள்
6. 1683 - மா. வரதராஜன், தமிழக நாட்டுப்பாடல்கள்
7. 1985 - முத்து. எத்திராசன், நயமிகு நாட்டுப்புறப்பாடல்கள்
8. 1985 - மா. வரதராஜன், தமிழகத் தெம்மாங்குப் பாடல்கள்
9. 1990 - (பதி) ப. ச. ஏசுதாசன், ச. சோமசுந்தரம். நாட்டுப்புறப் பாடல்கள்.

(குறிப்பு : மேற்குறித்த பின்னிணைப்புகளில் கொடுத்த பட்டியல் முழுமையன்று)

நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும்

பா. வளன் அரசு

நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும் பழந்தமிழில் பண் பாட்டுக் கூறுகளையும் சமுதாயச் சிக்கல்களையும் வரலாற்று எச்சங் களையும் மொழியியல் அடிப்படைகளையும் பெற்றுள்ளன. கதைப் பாடல்களின், பாடவேறுபாடுகளைத் தெளிவதற்கு நிகழ்த்துதல் என்ற கோட்பாட்டு ஆய்வு பெருக வேண்டும். வரலாற்றியல், சமூகவியல், அமைப்பியல், அடிப்படையிலும் தமிழ்க் கதைப்பாடல்களை ஆய்வு செய்ய இடமுண்டு.

முன்னுரை

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் கூறுகளை விளக்கும் வரலாற்று அறிவியலே நாட்டுப்புறவியல் ஆகும். பண்பாட்டு இன வியலாம் நாட்டுப்புறவியல் என்னும் சொல்லாக்கம் பத்தொன்ப தாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரான வில்லியன் சான்தாமசு (1803-1885) அவர்களால் உருவாயிற்று. 1846ஆம் ஆண்டு 'எத் தீனியம்' இதழுக்கு அவர் எழுதிய மடலில், மக்களின் நாகரிகச் சின்னங்களைப் பற்றிய அறிவு என்னும் பொருள்தரும் இரு சொற்களை (Folk-lore) இணைத்துப் பயன்படுத்தினார்.[1] 1851 ஆம் ஆண்டு நாட்டார் வழக்காற்றியல் நூல் வெளிவந்தது.[2] சமுதாயப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், எண்ணங் கள், ஏட்டில் எழுதாத வாய்மொழி இலக்கியங்கள், எழுத்தில் பொறிக்கப் பெறாத பழமொழிகள், மக்கள் நாவில் நடமாடும் விடுகதைகள் ஆகியவற்றை நாட்டுப்புறவியல் குறிக்கும் என்பர் அகத்தியலிங்கம்[3]. 'புலன்' என்னும் வனப்புடைய இலக்கியமாகத்

1. Emrich Dungan, California Folklore Quarterly. p. 365
2. John Steinbug, The Dialect and Folklore of Northa--mptonshire, 1851.
3. ச. அகத்தியலிங்கம், நாட்டுப்புறவியல் இதழ், 1983, ப. 5

தொல்காப்பியரால் கூறப்பட்ட நாட்டுப்புறவியல் சேரி மொழியால் அமையும் பாக்களின் செப்பத்தை ஆராயாமல், உணர்த்தப்படும் கருத்துப் பொருளை மட்டுமே ஏற்றுக் கொள்வதாகும். மாந்தர் தம் மாண்பினைப் புலவர் பெருமக்கள் கதையாகவும் நீதி நூலாகவும் நல்குவர்.[3] ஆனால் மனிதனின் குற்றங்குறைகளை நாடோடிப் பாக்கள் நவிலும், விழுமிய கற்பின் ஒழுக்கத்தைக் காப்பியம் பாடும்; கூடா ஒழுக்கத்தை நாட்டுப்பாடல் சித்திரிக்கும், அறிவாலும் திருவாலும் இளமையாலும் ஒத்த இருவர் பற்றிப் பாவலர் பாடுவர். ஆனால் அறுபது அகவைக் கிழவர் மூன்றாவது மனைவியாகப் பத்து வயதுப் பெண்ணைக் கட்டிக்கொள்வதை நாடோடிப் பாட்டு எடுத்துக்காட்டி, கெக்கலி கொட்டுகிறது என்பர் கி. வா. சகந்நாதன்.[4] திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தார் 'நாடோடிக் கலை' என்று கூறிவந்ததைக் கண்டித்தும், "நாட்டுப்புறக் கலை" என்று மாற்ற வற்புறுத்தியும் தமிழகப் புலவர் குழு இருபதாண்டுகளுக்கு முன்னர் முடிவெடுத்தது.[5]

1. வீறுமிகு கூறுகள்

நாட்டுப்புறவியலில் வாய்மொழி வழக்குகளை, பேச்சு - பாடல் - கதைப் பாடல் - கதை - கவிதை - புராணக் கதை - மரபுக் கதை - பழமொழி - விடுகதை - இசை என்று பத்து வகைகளாகக் கூறுவர். மறைந்துவரும் நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான உடுக்கர் கலை, துறவிவேடம் பூண்டு, திருவோடு தாங்கி, நிலையாமைக் கருத்துக்களையும் அறச்செயல் தொடர்பான கதைகளையும் பாடி நிகழ்த்தும் கலையாகும். சித்தர்பாடல், கருணன் கதை, சிறுத்தொண்டன் கதை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். அசதியைக் குறிக்கும் 'உறக்கச் சடவு' முதலிய வட்டார வழக்குச் சொற்கள் நாட்டுப்புறக் கதைப் பாடல்களுள் இடம் பெறுகின்றன. மக்களிடையே வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் கதைப் பாடல்களைத் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு செய்வது நாட்டுப்புறவியல் அறிஞர்தம் கடமையாகும்.

1. 1. கதையும் கதைப்பாடலும்

தமிழகத்தில் வழங்கிவரும் நாட்டுப்புறக் கதைகளை மனிதக் கதைகள், விலங்குக் கதைகள், மந்திரக் கதைகள், தெய்வக் கதை

---

4. கி.வா. சகந்நாதன், நாடோடி இலக்கியம், சென்னை, 1967, ப. 26
5. பாவேந்தர், குயில் இதழ் 11-10-1971, ப. 26

கள் என நான்காகவும் கதைப்பாடல்களைப் புனைகதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் வரலாற்றுக் கதைப்பாடல்கள், புராண புனைகதைப் பாடல்கள் என நான்காகவும் பகுத்துள்ளார் நா. வானமாமலை. மறைபொருளிலிருந்து விடுவிக்கப் பட வேண்டிய செய்தியாகிய விடுகதைகளை நாட்டுப்புற விடுகதைகள், இலக்கிய விடுகதைகள் என இரண்டாகப் பகுப்பர் ச. வே. சுப்பிரமணியன். அவரே இவ்விடுகதைகளைப் பயன் அடிப்படையில் விளக்க விடுகதைகள், நகைப்பு விடுகதைகள்' கொண்டாட்ட விடுகதைகள், பொழுதுபோக்கு விடுகதைகள் என மேலும் நால் வகைப்படுத்துவர். மனித சமுதாய வரலாற்றை அறிய இவ்விடு கதைகள் பெரிதும் துணைபுரிந்துள்ளன.

1, 3. ஆய்வு முறைகள்

தமிழ் நாட்டுப்புறக் கதைகள் பற்றிச் சத்தியமூர்த்தியும் (1985) தமிழ் - கன்னட நாட்டுப்புறக் கதைகள் குறித்துக் கார்லோசும் (1986) குமரிமாவட்ட நாட்டுப்புறக் கதைகள் தொடர்பாகத் தானிபாயும் (1989), மதுரை மாவட்ட நாட்டுப்புறக் கதைகள் பற்றி அய்யனாரும் (1990) முறையே சென்னை, பெங்களூர், கேரளம், மதுரை ஆகிய பல்கலைக்கழகங்களில் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். நாட்டுப்புறவியல் துறை பல்கலைக்கழக அளவில் தஞ்சை, புதுவை, மதுரை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. பாளையங்கோட்டை தூய சவேரியர் தன்னாட்சிக் கல்லூரி, அமெரிக்க போர்டு நிறுவனத்தின் உறுதுணையுடன் நாட்டுப் புறவியல் சிறப்புற மூன்று தொடர் கருத்தரங்குகளை நடத்தி யுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பல்வேறு நாட்டுப்புற அளவாய்வு (Survey) அறிக்கைகளை உருவாக்கித்தருகிறது. சமூகக் கதைப்பாடல்கள் பற்றிய ஆய்வுத் திட்டத்தைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சக்திவேல் மேற்கொண்டுள்ளார். நாட்டுப்புறவியல் ஆய்வு நெறிமுறைகள் தொடர்பான புத்தொளிப் பயிற்சி (Refresher course) நல்கவும் முயன்று வருகின்றன. புதுவைப் பல்கலைக்கழகம் நாட்டுப்புறக் கதைத் தொகுப்புத் திட்டம் தீட்டி, தமிழில் நாட்டுப்புறக் கதை வகைகள் அனைத்தையும் தொகுத்தும் வகுத்தும் வெளியிட ஆவன செய்து வருகிறது. வீரமாமுனிவரின் தேம்பாவணியில் (1726) ஐந்து வழக் காற்றுக் கதைகள் இடம் பெற்றுள்ளன.[6] அவர் எழுதிய பரமார்த்த குருவின் கதைகள் (1743) ஐம்பத்து நான்கு மொழிகளில் பெயர்த்

6. பா. வளன் அரசு, தேம்பாவணித்திறன், பக். 218-219

திதழுதப்பட்ட பெருமை பொருந்தியதாகும். வீராசிசாமி நாயக்கர் தொகுத்த மயில் இராவணன் கதை (1867) முதல் ஆசார்யா மொழி பெயர்த்த வாழ்வியல் நீதிக் கொத்து என்னும் பஞ்ச தந்திரக் கதைகள் (1990) வரை நாட்டுப்புறக் கதைகள் பல தொகுக்கப்பட்டுள்ளன.[7] தமிழக நாட்டுப்புற வரலாற்றுக் கதைப் பாடல்கள் (சத்தியபாமா), நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் பற்றிய சமூகவியல் திறனாய்வு (சீலா ஆசீர்வாதம்), பாரதக் கதைப் பாடல்கள் (பூங்குன்றன்), கட்டபொம்மன் கதைப் பாடல்கள் (மாணிக்கம்) ஆகியவை கதைப்பாடல் ஆய்வில் உள்ள குறிப்பிடத் தக்கவை எனலாம். நாட்டுப்புறக் கதைப்பாடல்களைப் பதிப்பிக் கும் பணியில் தந்தையாகப் புகழத்தக்க நா. வானமாமலை கட்டபொம்மு கதைப்பாடல் (1971), கட்டபொம்மு கூத்து (1971), கான்சாகிபு சண்டை (1972), காத்தவராயன் கதைப் பாடல் (1972), முத்துப்பட்டன் கதை (1972) ஆகிய ஐந்து நூல்களை வழங்கியுள்ளார். வள்ளியம்மன், பார்வதியம்மன், வெங்கலராசன், சின்னத்தம்பி, சங்கிலிபூதத்தார் ஆகியோர் கதைகளை ஆறுமுகப் பெருமாள் வெளியிட்டுள்ளார். ஆங்கிலத் தில் வெளிவந்த கதைப்பாடல் நூல் (Ballad Poetry, 1976) வாயிலாகக் கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும் தெளிவாயின. நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோட்பாட்டைத் தமிழில் வழங்கிய பெருமைக்குரியவர் தே. லூர்து.[8] அறுபதின்மர் இந்நாளில் நாட்டுப்புறவியல் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். நாளிது வரை நாட்டுப்புறக்கதைகள் பற்றி முப்பத்து மூன்று நூல்களும் நாற்பது கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. நாட்டுப்புறக்கதைப் பாடல்கள் தொடர்பாக நூற்றிருபது நூல்களும் நாற்பது நூல் களும் நாற்பது கட்டுரைகளும் ஒளிதந்துள்ளன என்பர் சு. சக்திவேல்.[9]

2. ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

நாட்டுப்புற இயலின் வகைகள் பதினைந்து என்பர் சு. சண்முகசுந்தரம்[10]. பாடல்கள், கதைகள், ஆடல்கள்,

---

7. 'நாட்டுப்புறவியல்' இதழ் (1987-88), பக். 203-207
8. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், பக். 61-81
9. க. சக்திவேல், தமிழக நாட்டுப்புறவியலின் வரலாறு, 'நாட்டுப்புறவியல்' 1983, ப. 94
10. சு. சண்முகசுந்தரம், மூங்கில் இலை மேலே, பக். 4-11

கூத்துகள், பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள், விளையாட்டுகள், தேவதைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கைவினைக் கதைகள், நடையுடை பாவனைகள், சடங்குகள், புராண இதிகாசங்கள் என அவை அமைந்துள்ளன. நாட்டுப்புறக் கதைகளையும் கதைப்பாடல்களையும் தொகுத்தல், வகுத்தல், பதிப்பித்தல், ஆராய்தல், பயன்படுத்துதல் ஆகிய ஐந்து நிலைகளில் பேண வேண்டும். ஆய்வாளர்தம் ஐவகைப் பணிகளும் முறையாக நிறைவேற அயராது செயலாற்ற வேண்டும். பெரும் பாலோர் பதிப்பிக்கும் பணியுடன் நிறைவு பெற்று விடுகின்றனர். சுவடிகளைப் பதிப்பிக்க முடியாது. ஆய்வுப் பணியில் இடைமுறிந் தோரும் உள்ளனர். மக்கள் வாழ்க்கைக்குப் பயன் தரும் முறையில் அவற்றைத் தொகுத்துப் பதிப்பிக்கும் பணியைப் பல்கலைக்கழகங் களும் அரசும் மேற்கொள்ள வேண்டும்.

2. 2. நாட்டார் கதைகள் (Folk-tales), பழமரபுக் கதைகள் (Legends), புராணக் கதைகள் (Myths) ஆகிய மூன்றும் தொடர் புடையவை : எனினும் நுட்ப வேறுபாடுகளை உடையவை. அவற்றைக் கண்டுணர்ந்து பயன்படுத்துவதில் ஆய்வாளர்க்கு அவ்வப்போது சிக்கல்கள் நேரக்கூடும். தொகை வகை செய்து வழிகாட்டுவோர் விழிப்பாக இருந்தால், தெளிவுறக் காப்பகங்களில் பேணிப் போற்றச் செய்யலாம். அமைப்பியலில் வாய்பாட்டு ஆய்வுமுறையும் தொடர்பாட்டு ஆய்வு முறையும் தொடர்ந்து துலங்க வேண்டும்.

2.3. நாட்டுப்புறவியல் கருத்தரங்குகள் சென்னை, தார்வார், மைசூர் ஆகிய இடங்களில் 1974 ஆம் ஆண்டு நிகழ்ந்தன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய கருத்தரங்கம் தமிழக நாட்டுப் புறவியல் ஆய்வுநூல் (1977) வெளிவரப் பெரிதும் துணைபுரிந்தது. மைசூர், அண்ணாமலைநகர், காந்திகிராமம், மதுரை, சென்னை, புதுவை ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்க நூல்கள் நூல்வடிவில் எல்லோர்க்கும் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

2.4. 'சிக்கலைத் தேர்வு செய்' என்று ஆய்வு சூடி (14,) வாயிலாக அறிவுறுத்துவர் தமிழண்ணல். புதுவை பல்கலைக் கழகம் நாட்டுப்புறக் கதைகள் தொடர்பாக நடத்திய கருத்தரங்கம் (1990) ஆய்வுச் சிக்கல்கள் பலவற்றை விரிவாக அலசி ஆராய்ந் துள்ளது, ஆய்வுச் சிக்கல்களும் கருதுகோள்களும், மாந்தர்

உறவுநிலை, பெண்களின் சிக்கல்களும் எதிர்கொள்ளும் முறைகளும், பாலியல் நிலை, முறையற்ற உறவுகள், மரபு மீறல்கள், அமைப்பியல் சமன்பாடுகள், கட்டமைப்பு ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

2,5. உலக நாடுகளிலேயே இந்தியா தான் நாட்டுப்புறக் கதைகளில் முதலிடம் பெற்றுள்ளது. பஞ்சதந்திரக் கதைக் கூறுகள் ஈசாப்புக் கதையிலும் அரபுக் கதையிலும் விளங்குகின்றன, பிற நாடுகளில் உள்ள நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்து மொழிபெயர்த்து வழங்குவது ஒப்பியல் ஆய்வுகளுக்கு வழி வகுக்கும்.

2 6. சோவியத்துக் கடல் அகழ்வாய்வறிஞர் அலெக்சாந்தர் கொந் தரட்டனாவு அரபிக்கடல், இந்துமாக்கடல், பசிபிக்கு கடல் நீருக்குள் ஆய்வுகள் மேற்கொண்டவர். பழைய வரலாற்றை ஊகித்துணர நாட்டுப்புறக் கதைகள் பயன் தருகின்றனவாம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரி கடற்பாலம் ஒன்று தமிழகத்துடன் ஆப்பிரிக்காக் கண்டத்தையும் ஆசுதிரேலியா வையும் இணைத்திருந்ததாம், 'மாக்கடல் மருமம்' (Riddles of the Three Ocean) என்னும் நூல், நாட்டுபுறக்கதைகள் சமுதாயம் திரித்து மறைத்து வைத்திருக்கும் உண்மைகள் என்று விண்டுரைக்கிறது. நாட்டுப்புறக் கதைகள் பழங்கால மக்களின் சமூக அமைப்பையும் பழக்கவழக்கங்களையும் தெளிவுறுத்துகின்றன. சில நாட்டுப்புறக் கதைகள் காலப் போக்கில் பழமொழிகளாக உருவாகியுள்ளன.

3. கதைப்பாடல்கள்

ஒரு கதையாகவும் பல உட்கதைகள் கொண்ட கூட்டுக் கதையாகவும் விளங்கும் கதைப்பாடல் (Ballad) வாய்மொழி யாகப் பரவுவது. 'அம்மானை வரி' மகளிர் விளையாட்டு நேரத்தில் பாடும் பாடலாகும், வினாவிடையாகப் பாடப் படுவது 'அம்மானை மடக்கு' என்பரி. 'அம்மானைப் பாட்டு, நாட்டுப்புறக் கதைப்பாடலைக் குறிக்கிறது. கதைப்பாடல் வழிபாடு, வணக்கம், வரலாறு, வாழ்த்து ஆகிய நான்கு கூறுகள் கொண்டது. பொருளாலும் நடையாலும் பெயரா லும் மக்களுக்கே உரியதான கதைப்பாடல் சிறுகதை போன்று

தனி நிகழ்ச்சிகளையும் நாடக உத்திகளையும் பெற்று விளங்கும்.[11]

3.1. மூவகைக் கதைப்பாடல்கள்

புராணக் கதைப்பாடல்களுள் அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு, திரௌபதி குறம், மதனகாமராசன் கதை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வரலாற்றுக் கதைப்பாடல்களுள் இராமப்பய்யன் அம்மானை, சிவகங்கை அம்மானை, கட்டபொம்மன் கதை, கான்சாகிப் சண்டை, வீணாதிவீணன் கதை, அண்ணன்மார் சுவாமி கதை ஆகியவை சிறப்புமிக்கவை. சமூகக் கதைப்பாடல்களுள் நல்லதங்காள் கதை, முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை, மதுரைவீரன் கதை, ஈனமுத்துப்பாண்டியன் கதை ஆகியவை செல்வாக்கு மிக்கவை.

3.2. அம்மானை : முதல் கதைப்பாடலாகிய இராமப்பய்யன் அம்மானை பதினேழாம் நூற்றாண்டில் திருமலைநாயக்கரின் தளவாயாகத் திகழ்ந்த வீரனின் வெற்றிச் சிறப்பினை விரித்துரைக்கிறது. இறைவனை வழிபட்ட பிறகு போருக்குப்புறப் பட்டுச் செல்லுதல், போரில் சிறைபட்டோரைச் சித்திரவதை செய்தல், மன்னன் இறந்தால் அரசி உடன்கட்டை ஏறுதல் போன்ற மக்கள் வாழ்வியற் கூறுகளை விளம்புகிறது. மனித உறவையும் மானிட உணர்வையும் புரிந்துகொண்டு, பொய்ம்மையினையும் குறுகிய செயல்களையும் வெற்றியினை யும் எதிர்த்து வெற்றிபெற்ற வீரன் வரலாறு முத்துப்பட்டன் கதைப் பாடலாக மிளிர்கிறது. வீரகாவியங்களாகிய கதைப் பாடல்கள் மானிடப் பண்பின் வீறுகளையும் சமூகச் சீர்கேடு களையும் புலப்படுத்துகின்றன. சமூகவியல் மொழியியல், வரலாறு ஆகிய பல்வேறு துறைகளுக்குப் பெரிதும் துணை புரிவது கதைப்பாடல் எனலாம்.

வரலாற்றுக் கதைப்பாடல்களுள் வீரமாமுனிவரின் கித்தேரியம்மாள் அம்மானை நாட்டுப்புறக்கல்விக் காப்பியம் என்று சொல்லத்தக்க அளவில் தனிச் சிறப்புடன் திகழ்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டில் இறைப்பற்றையும் திருமறை உணர்வையும் பக்திப் பெருக்கையும் வளர்த்திடும் குறிக்கோ

11. The Standard Dictionary of Folklore, Mythology and Legend, p. 106

ளுடன் மக்கள் செல்வாக்கு மிக்க வீராங்கனையாகிய கித்தேரி யாளின் வாழ்வியலை வீரமாமுனிவர் வழங்கியுள்ளார். பிரக லாதன் கதையினை இரணியன்வதைப் படலம் வாயிலாக வெளியிட்டுக் கம்பர் பெருமை சேர்த்தது போன்று, இத்தேரி யம்மாள் அம்மானையினை வீரமாமுனிவர் எழுதி விழுமிய புகழ் பெற்றுள்ளார்.

3.3. மீண்டுவரல் : கதைப் பாடல்களில் ஒரு பகுதி முதன்முறை இடம்பெற்று மீண்டும் அப்பகுதி மாற்றம் ஏதுமின்றி இடம் பெறுவதே 'மீண்டுவரல்' ஆகும் என்பர் பௌரா.[12] இலக்கியங் களில் வந்த செய்தி மீண்டும் வந்தால் 'கூறியது கூறல்' என்னும் குற்றம் ஆகும். முன்வரும் சொல்லோ, பொருளோ மீண்டும் வந்து பயனும் நயமும் நல்குமாயின் 'பின்வருநிலையணி' ஆகும். நாட்டுப்புறச் சமூகக் கதைப் பாடல்களில் மீண்டுவரல் குறித்து வை,தி. நடராசன் கட்டுரையொன்றில் விளக்கம் வழங்கி யுள்ளார். குமரி மாவட்ட வில்லிசைப்பாக்களில் - குறிப்பாக உடையார் கதை, கோவலன் கண்ணகி கதை, பிச்சைக்காரன் கதை ஆகியவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு ஆராய்ந் துள்ளார். ஒரு சொல், தொடர், வரி, பகுதி என்னும் வகையில் அவை மீண்டுவரல் குறிக்கப்பட்டுள்ளன. 'நாட்டுப்புறப் பாடல்களில் திரும்ப வரல் பண்பு' என்னும் கட்டுரைவாயிலாக அசை, சொல், தொடர், அடி, பொருள் ஆகியவை மீண்டுவரல் குறித்து எழுதியுள்ளார் சு. சண்முகசுந்தரம். அவர் சுட்டிக் காட்டியிருப்பது போன்று, மீண்டுவரலின், காரணங்களும் விளைவுகளும் ஆராயப்பட வேண்டும்.

3.4. தலைவர் வாழ்வியல்

கதைத் தலைவர் வாழ்வின் கட்டமைப்புக் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'கதைப்பாடல்களில் தலைவர்' பற்றி ஆராய்ந்த அமெரிக்கர் ஆலன் தண்டிசு இயேசு கிறித்துவின் வாழ்க்கை வரலாறு பற்றி விளம்பியுள்ளார். கனடாவைச்சார்ந்த பிரெண்டாஸுக்கு அண்ணன்மார் சுவாமி கதைத் தலைவர் பற்றி ஆராய்ந்துள்ளார். மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் சரசுவதி வேணுகோபால் சட்டத்தை மீறிய தலைவர் (Outlawed Hero) வாழ்வு குறித் தும் எழுதியுள்ளார். மதுரைவீரன் கதையினை ஆராய்ந்

12. C. M. Bowra, Heroic Poetry, p. 254

துள்ளார். கதைத் தலைவர் வாழ்வின் கட்டமைப்புக் கூறுகளாகப் பத்துச் செய்திக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. தாய் கன்னியாகவும் தந்தை இறைவனாகவும் அமைதல். இயற்கைக்கு மாறாகப் பிறத்தல், குழந்தைக்கு விலங்கு உணவூட்டுதல் - ஆட்டிடையர் வந்து காணுதல் - புராண உருவினர் வளர்த்தல் போன்ற குழந்தைவளர்ப்பு முறைகள், இளமையிலேயே வலிமையும் துணிவும் வாய்ந்தவராக விளங்குதல், புண்படாத உடல் பெற்றிருத்தல், பிற அரக்கருடன் போரிடல், பேரபாயம் கடந்து கன்னியொருத்தியைக் கைப்பிடித்தல், கீழுலகுக்கும் சென்றுவரல், தன் நாட்டிலிருந்து வெளியேறல் இளமையிலேயே உயிர் துறத்தல் ஆகிய கதைப்பாடல் தலைவர் இயல்புகளை மதுரைவீரன் சுவாமி கதையுள் ஆராய்ந்தவர் சரசுவதி வேணுகோபால். இது போன்று பல வேறு கதைப்பாடல்களை ஆராய்வது விரும்பத்தக்கதும் வேண்டற்பாலதும் ஆகும்.

4. விரிவாகச் செய்யத்தக்க ஆய்வுகள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக வந்துள்ள 'தமிழில் கதைப்பாடல்' என்னும் நூல் அசுவமேதயாகக் கதை முதல் சகதீசுவரி அம்மன் கதை வரை இருநூற்று நாற்பது கதைகளைச் சுட்டிக் காட்டுகிறது.[13] மானிடவியலின் சிந்தனைக்கு மிகுந்த பயன் நல்கும் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. அமைப்பு முறை கதைப்பின்னல்முறை, வாழ்வியல் முறை. சமுதாயக் கூறு, வரலாற்றுச் செய்தி என விழுமிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ''நாட்டுப்புற மக்களின் இன்பப் பொழுது போக்காகவும் கொண்டாட்ட நிகழ்ச்சிக்காகவும் எளிமையாக இனிய இசைப்பாடல் அமைப்பில் வாழ்வியலையும் வரலாற்றையும் புராணத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற கதைப்பாடல்கள் சுவையான சிற்றிலக்கியங்களாக அமைகின்றன''.[14]

4.1. சிற்றிலக்கியங்களாக வடிவம் பெற்றுள்ள அம்மானை, மாலை, படைப் போர், தூது, குறம் ஆகியவற்றைத் தனித் தனியே விரிவாக ஆராய்தல் விரும்பத்தக்கதாகும். நாட்டுப்புற இலக்கியம் ஏட்டில் எழுதப்பட்டு, மக்களால் ஏற்றுக் கொள்ளப்

13. அ.நா. பெருமாள், தமிழில் கதைப்பாடல், பக். 259-64
14. மேலது, ப. 258

பெற்றுப் போற்றி மகிழும் தரமும் திறமும் வாய்ந்தவையாக விளங்கும் வரலாற்றுப் பின்னணி போன்றவை குறிப்பாகப் புலப் படுத்தப்பெற வேண்டும்.

4.2 திரைப்படமும் நாட்டுப்புறவியலும்

திரைப்படங்களில் நாட்டுப்புறவியல் பெற்றுள்ள செல்வாக்கு மற்றும் தாக்கம் பற்றியும் விரிவாக ஆராயப்பெற வேண்டும். பழந்தமிழ் இலக்கியக் கருத்துக்கள் அடிப்படையில் உருவான பழைய திரைப்படப் பாடல்களுக்கும் நாட்டுப்புறப்பாடல்களைச் சிற்சில இடங்களில் சிதைத்தும் சில இடங்களில் மெருகேற்றியும் பயன்படுத்திவரும் புதிய திரைப்படப் பாடல்களுக்கும் உள்ள வேறு பாடுகள் நுணுகி ஆராய்வது விரும்பத்தக்கது.

4.3. கோட்பாடுகள்

அமெரிக்காவின் இந்தியானாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் தார்சன் குறிப்பிட்டுள்ள வரலாற்று நிலவியல், வரலாற்று மீட்டுரு வாக்கம், இலட்சியம், செயல்திறம், உளவியல் ஆய்வு, அமைப்பியல் வாய்மொழி வாய்பாடு, கலப்புப் பண்பாடு, நாட்டார் பண்பாடு, மக்கட் பண்பாடு, அரை உலகம், சூழ்நிலை ஆகிய பன்னிருவகைக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் விரிவாக ஆராயலாம்.

5. அணுகுவதற்குரிய ஆய்வு நெறிமுறைகள்

'நாட்டுப்புறவியலாய்வு நெறிமுறைகள்' குறித்து இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம் வெளியிட்டுள்ள நூல் தரவுகளைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்திடவும் மேற்கொள்ளத்தக்க அணுகுமுறைகள் பற்றி அறிந்திடவும் பெரிதும் துணைபுரிகிறது. நாட்டுப்புறவியல் துறையில் பல்வேறு இலக்கியம் மற்றும் கலை வகைகளை ஆராயும் நெறி முறைகளை விரித்துரைப்பர்.[15] அமைப்பியல் அணுகுமுறை, சமுதாயவியல் அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, காலவரலாற்று அணுகுமுறை, மொழி யியல் அணுகுமுறை, குறிப்பிட்ட கால அடிப்படை அணுகுமுறை, கருத்துப் பரிமாற்ற அணுகுமுறை என்னும் ஏழுவகை அணுகுமுறை கள் (Methods) குறிப்பிடத்தக்கவையாகும், மொழியமைப் பினையும் சமுதாய அமைப்பினையும், பொருளமைப்பினையும் பகுத்துக்கொண்டு உரிய கோட்பாடுகளைப் பயன்படுத்தி

15. இ. சி. கருணாகரன் & இரா. பாக்கியலட்சுமி, நாட்டுப் புறவியல் ஆய்வு நெறிமுறைகள், பக். 140-151

முடிவு காண வேண்டும். வழக்கிழந்த இலக்கியக் கூறுகளை இக் காலத்திற்கேற்பப் பயன்படுத்தத் துணைபுரிவது கால அடிப்படை அணுகுமுறை. மொழி, இலக்கிய, சமுதாய, பண்பாட்டு வரலாறு களைத் தெளிவுபடுத்தவும் வரையறை செய்யவும் குறிப்பிட்ட கால அடிப்படை (Synchronic) அணுகுமுறை ஏற்புடையதாகும். கருத்துப் புலப்பாட்டு நெறிமுறையில் கருத்தமைப்பும் பயன்பாடும் தொடர்புபடுத்தப்பட்டு மிகுந்த ஆற்றலுடன் விளங்கச் செய்வ தால், கருத்துப் பரிமாற்ற அணுகுமுறை பெரிதும் பயனுள்ளதாகப் போற்றப்படுகிறது.

6. தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளத்தக்க புதுத் தலைப்புகள்

நாட்டுப்புறக் கதைகளும் கதைப்பாடல்களும் பழந்தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளையும் சமுதாயச் சிக்கல்களையும் வரலாற்று எச்சங்களையும் மொழியியல் அடிப்படைகளையும் பெற்றுள்ளன. நாட்டுப்புறவியல் ஆய்வுத் தொடர்பான நூல்கள் ச.வே. சுப்பிர மணியன் (1979), சு. சக்திவேல் (1983), அ.நா. பெருமாள் (1987), தே. லூர்து (1988). சி. கருணாகரன் (1989) ஆகிய பெருமக்களால் வழங்கப்பட்டுள்ளன. "தமிழ்க் கதைப்பாடல்களை வகைப்படுத்தும் போது பெருங் குழப்பமே காணப்படுகிறது" என்பர்.[16] கதைப் பாடல்களின் பாடவேறுபாடுகளைத் தெளிவதற்கு நிகழ்த்துதல் என்ற கோட்பாட்டு ஆய்வு பெருக வேண்டும். "நிகழ்த்துதல் கோட்பாட்டு ஆய்வு பெருகினால் பல்வேறு சிக்கல்கள் விடுவிக்கப் படும்" என்பர்; மேலும் "வரலாற்றியல், சமூகவியல், அமைப்பியல் அடிப்படையிலும் தமிழ்க் கதைப் பாடல்களை ஆய்வு செய்ய இடமுள்ளது" என்பார் தே. லூர்து.[17]

1. தமிழ்க் கதைப்பாடல்களின் கோட்பாடுகள்
2. தமிழ்க் கதைப்பாடல்களும் பண்பாட்டுக் கூறுகளும்
3. தமிழ்க் கதைப்பாடல்கள் காட்டும் சமுதாயச் சிக்கல்களும் தீர்வுகளும்
4. தமிழ்க் கதைப்பாடல் வாயிலாக அறியலாகும் வரலாற்று உண்மைகள்
5. கதைப்பாடல்களின் கட்டமைப்பும் உள்ளீடும்
6. கதைப்பாடல்களில் வில்லுப்பாட்டின் செல்வாக்கு
7. கதைப்பாடல்களும் அம்மானை இலக்கியமும்

---

16. தே. லூர்து, நாட்டார் வழக்காறுகள், ப. 86
17. மேலது, ப. 121

8. கதைப்பாடல்களும் மாலை இலக்கியமும்
9. கதைப்பாடல்களும் குறவஞ்சி இலக்கியமும்
10. கதைப்பாடல்களும் மொழிநடைக் கூறுகளும்
11. கதைப்பாடல்களும் புராணக்கூறுகளும்
12. கதைப்பாடல்களும் சமுதாய நம்பிக்கைகளும்

நிறைவுரை

வாய்மொழிக் கதைகளும் கதைச் சிந்தனையாக உணர்ச்சி வெளிப்பாட்டில் அமையும் கதைப் பாடல்களும் காலந்தோறும் நின்று நிலவும். இடைக்காலத்தில் வேற்றரசர் ஆட்சியில் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த கதைப்பாடல்கள் வரலாற்றுக் கூறுகளையும் வீரர்தம் அரும்பெருஞ் செயல்களையும் விளம்பும் கருவூலங்களாக அமைந்துள்ளன. பதினாறாம் நூற்றாண்டிலிருந்து மக்களின் செல்வாக்கு மிக்க பொழுது போக்குக் கருவியாக வழங்கிவரும் கதைப்பாடல்கள் தென்பாண்டிச் சீமையில் மிகுதியாக அமைந்துள்ளன. வீடுகளிலும் வேலைபார்க்கும் பணிக்களங்களிலும் உருவாகிய கதைப்பாடல்கள் விழாக்காலங்களில் அமைப்பாலும் கலைத் தன்மையாலும் மாற்றமும் ஏற்றமும் பெற்றன எனலாம். "கலையே வளர், தொழில்மேவிடு கவிதைபுனை தமிழா!" என்னும் பாவேந்தர் மொழியினை நினைவுகூர்ந்து, வழக்கிழந்த பழந்தமிழ் நலத்தையும் வாழ்வுபெறும் புதுப்புனைமைக் கூறுகளையும் வேணிக் காத்து வளர்த்துப் பயனடைவோம்.

நாட்டுப்புறக் கதைகள் தொகுப்பு

1867 - வீராச்சாமி நாயக்கர், மயில் இராவணன் கதை
1871 - வீராச்சாமி நாயக்கர், விக்கிரமாதித்தன் கதை
1873 - சி. மாணிக்க முதலியார், கதாமஞ்சரி
1876 - வீராச்சாமி செட்டியார், விநோதரச மஞ்சரி
1886 - நடேச சாஸ்திரி, திராவிட மத்திய காலக் கதைகள்
1886 - நடேச சாஸ்திரி, தக்காண பூர்வக் கதைகள்
1890 - Kingscots & Natesa Sastri-Folk Tales in Southern India
1891 - நடேச செட்டியார், விநோதரசமஞ்சரி
1897 - நடேச சாஸ்திரி, Folklore in Southern India
1897 - இராசேந்திரம் பிள்ளை, பூலோக விநோத கதைகள்
1918 - ————தக்காண பூர்வக் கதைகள்
1933 - கஸ்தூரி அய்யங்கார், பஞ்சதந்திரக் கதைகள்
1951 - தாண்டவராய முதலியார், கதா மஞ்சரி
1952 - அ.லெ. நடராசன், சசாப்பு கதைகள்

1952 - வாணன், உலக நாடோடிக் கதைகள்
1952 - அரு. இராமநாதன், மரியாதை இராமன் கதைகள்
1953 - அனவரத விநாயகம், பஞ்சதந்திரக் கதைகள்
1954 - கா. அப்பாத்துரை, நாட்டுப்புறக் கதைகள்
1954 - இராமச்சந்திரன், தெக்கமராண் கதைகள் (தமிழாக்கம்)
1955 - இராமையா, தெனாலிராமன் கதைகள்
1957 - இ.அ. பக்தவச்சலம், தெனாலிராமன் கதைகள்
1957 - அ.லெ. நடராசன், அரபுக் கதைகள்
1957 - சு.அ. இராமசாமி புலவர், தென்னாட்டுப் பழங்கதைகள் (4 தொகுதிகள்)
1958 - அரு. இராமநாதன், இராயர் அப்பாஜி கதைகள்
——————— தெனாலிராமன் கதைகள்
——————— மதனகாமராசன் கதைகள்
——————— செட்டியாரின் தந்திரக் கதைகள்
1958 - பழநியப்பன், மரியாதைராமன் கதைகள்
1958 - பழநியப்பன், இராயர் அப்பாஜி கதைகள்
1958 - நடேச சாஸ்திரியர், திராவிட நாட்டுக் கதைகள் (சிரஞ்சீவி தொகுப்பு)
1958 - சு.அ. இராமசாமிப்புலவர், தென்னாட்டுப் பழங்கதைகள் (5,6 தொகுதிகள்)
1959 - சி.மு. ஆறுமுகம் செட்டியார், தமிழ்நாட்டுக் கதைகள்
1960 - சீனி வேங்கடசாமி, புத்தர் ஜாதகக் கதைகள்
1961 - கே. நடராசன்
1962 - செளரி, அழியாக்கதைகள் (2 பகுதிகள்)
1962 - நாரா. நாச்சியப்பன், பஞ்சதந்திரக்கதைகள் (1-5 பகுதிகள்)
1963 - மணிஜி, மதிவளர்க்கும் கதைகள்
——————— புத்திமான் பலவானாவான்
——————— போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து
1964 - வை, கோவிந்தன், தமிழ்நாட்டுப் பழங்கதைகள்
1964 - வை. கோவிந்தன், பழங்காலக் கதைகள்
1964 - வை. கோவிந்தன், ஈசாபு குட்டிக் கதைகள்
1966 - ———மயில் இராவணன் கதை
1966 - சி. இராசநாராயணன், தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்
1966 - அரு. இராமநாதன், அரு. முத்தையா } மன மோகனக் கதைகள்
1967 - கல்பனா, 1001 இரவு அராபியக் கதைகள்
1967 - சி. சின்னப்ப பாரதி, தமிழக கிராமியக் கதைகள்

1967 - நாக. சண்முகம், நன்னெறிபுகட்டும் நகைச்சுவைக் கதைகள்
1968 - சு.அ. இராமசாமிப்புலவர், விநோதக் களஞ்சியம்
1968 - எல்லார்வி. குழந்தைகளுக்கான நாடோடிக் கதைகள்
1968 - எஸ்.கே. சுவாமி, போதிசத்துவர் கதைகள்
1969 - மு.சு. அருள்சாமி, ஈசாப்புக் கதைகள்
1969 - நாக. முத்தையா, மரப்பாச்சியின்கதை (தமிழாக்கம்)
1969 - நெ. சி. தெய்வசிகாமணி, பீர்பால் கதைகள்
1969 - K.A. Seethalakahmi, Folk-tales of Tamil Nadu
1969 - அ.லெ. நடராசன், ஈசாப்புக் கதைகள்
1970 - எஸ். லீலா, பஞ்சதந்திரக் கதை
1970 - சாமிவடிவு, பன்னிருநாட்டுக் கதைகள்
1970 - எச்.எம்.பி. முகைதீன், அவாந்தி கதைகள்
1970 - வை. கோவிந்தன், பாரதநாட்டுப் பாட்டி கதைகள்
1970 - பஞ்சாலகேசன், தேவலோக யாத்திரை (தமிழாக்கம்)
1974 - வாண்டுமாமா. குழந்தைக் கதைகள்
1974 - இரா. கிருஷ்ணய்யர், நவரத்தினமாலை (தமிழாக்கம்)
1974 - தி. செல்வக்கேசவராய முதலியார், அராபிக் கதைகள்
1974 - கிருத்திகா, குட்டிப்பாட்டி கதைகள்
1975 - அ.லெ. நடராசன், பஞ்சதந்திரக் கதைகள்
1976 - அ.லெ. நடராசன், ஈசாப்பு நீதிக் கதைகள்
1977 - கி. இராசநாராயணன், தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள்
1977 - கி. ம.ர. பக்தவச்சலம், தெனாலிராமன் கதைகள்
1977 - மே. ச. பரதன், மதனகாமராசன் கதைகள்
———————— மரியாதைராமன் கதைகள்
1977 - அ.லெ. நடராசன், அலாவுதீனும் அற்புதவிளக்கும்
1978 - சி.எஸ். சுப்பிரமணியம், ஆர்மீனிய நாடோடிக் கதைகள்
1978 - பூவண்ணன், முல்லாநசீருதின் கதைகள்
1978 - அ.நா. பெருமாள், நாட்டார் கதைகள்—1
1978 - (குமுதம்), அம்மா அப்பா கேட்ட கதை
1979 - இரா. இளங்குமரன், தமிழ்நாட்டுப் பழங்கதைகள்
1979 - சரசுவதி இராமநாதன், பிரெஞ்சு நாடோடிக் கதைகள்
1979 - சரசுவதி இராமநாதன், மலைநாட்டு நாடோடிக் கதைகள்
1979 - கி. இராசநாராயணன், தமிழ்நாட்டுக் கிராமியக் கதைகள்
1979 - வீர. வேலுசாமி, தமிழ்நாட்டுச் சிறுவர் நாடோடிக் கதைகள்
1979 - அர. சண்முகம், சிறுவர் கிராமியக் கதைகள்
———————— சிறுவர் நாடோடிக் கதைகள்
1980 - க. கிருட்டிணசாமி, கொங்கு நாட்டுப்புறக் கதைகள்

1980 - ஆர். பொன்னம்மாள், பாட்டி சொன்ன கதைகள்
1981 - மே. பரதன், 1001 இரவு அராபியக் கதைகள்
1982 - அ.லெ. நடராசன், தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள்
1982 - முகவை இராசமாணிக்கம், தமிழக நாடோடிக் கதைகள்
1982 - அமிர்தராசு, பன்னாட்டுக் கதைகள்
1984 - சு. சண்முகசுந்தரம், தமிழக நாட்டுப்புறக் கதைகள்
1984 - கி. இராசநாராயணன், தாத்தா சொன்ன கதைகள்
1984 - மாத்தளை சோமு, இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள்
1984 - வி.எஸ். சுப்பிரமணியம், கிரேக்க நாடோடிக் கதைகள்
1985 - Roy Chaudhury, Best Loved Folk-tales of India
1986 - Mugavai Rajamanickam, Folk-tales of Tamil Nadu
1986 - ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக் கதைகள்
1986 - முல்லை முத்தையா, தெனாலிராமன் விகடக் கதைகள்
1986 - முல்லை முத்தையா, மரியாதைராமன் தீர்ப்புக் கதைகள்
1986 - முல்லை முத்தையா, அப்பாஜி யுக்திக் கதைகள்
1987 - Kamil Zvelebil, Two Tamil Foik-tales
1987 - P. Raja, Folk-tales of Pondicherry
1990 - ஆசார்யா, வாழ்வியல் நீதிக் கொத்து எனும் பஞ்சதந்திரக் கதைகள் (தமிழாக்கம்)

தேர்ந்த துணையாகு நூற்பட்டியல்

1, அ. அறிவுநம்பி, 1989 — நாட்டுப்புறக் களங்கள் ஆமதன் நூலகம், திருவள்ளுவர் திருநகர், காரைக்குடி

2. ஆறு. இராமநாதன், 1978 — தமிழில் புதிர்கள்-ஓர் ஆய்வு, சமுதாயச் சிற்பிகள் வெளியீட்டகம், புவனகிரி

2.2. 1986 — நாட்டுப்புறக் கதைகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்

2.3. 1989 — வரலாற்று நிலவியல் ஆய்வு முறை அறிமுகமும் ஆய்வுகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

3, இ. கருணாகரன் & இரா. பாக்கியலட்சுமி, 1989 — நாட்டுப்புறவியலாய்வு நெறி முறைகள், இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர்

4, கோ. கேசவன் 1985 கதைப்பாடல்களும் சமூகமும், தோழமை வெளியீடு, கும்பகோணம்

4.2. 1988 நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம், புதுமைப்பதிப்பகம், திருச்சிராப்பள்ளி

5. க. கைலாசபதி, 1979 சமூகவியலும் இலக்கியமும், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை

6. தி.சி. கோமதிநாயகம், 1979 தமிழ் வில்லுப்பாட்டுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை

7. வை. கோவிந்தன் 1986 தமிழ்நாட்டுப் பழங்கதைகள், நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை

8. சக்திக்கனல், 1985 அண்ணன்மாரி சுவாமி கதை, விசயா பதிப்பகம், கோயம்புத்தூர்

9. சு. சக்திவேல், 1983 நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்

10. சு. சண்முகசுந்தரம் 1980 நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்

10.2, 1988 திருநெல்வேலி மாவட்ட நாட்டுப் புறப்பாடல்களில் சமுதாய அமைப்பு, காவ்யா, பெங்களூர்

11. சரசுவதி வேணுகோபால் & மு. இராமசாமி, 1979 களஆய்வில் சில அனுபவங்கள், தாமரை வெளியீடு, மதுரை

12. சரசுவதி வேணுகோபால் 1981 தமிழக நாட்டுப்புறவியல், தாமரை வெளியீடு, மதுரை

13. பி.எல். சாமி, 1983 தமிழ் இலக்கியத்தில் நாட்டார் பண்பாடு, வானதி பதிப்பகம், சென்னை

14. ச.வே. சுப்பிரமணியன், (பதி) 1973 தமிழ்நாட்டுப்புறவியல் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

15. சி.எஸ். சுப்பிரமணியம், 1984 கிரேக்க நாடோடிக் கதைகள், நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை

16. ஆ. தசரதன், 1988 அழிப்பாரிகதைப் பாடல்கள் பயோனியர் புத்தகப் பணியகம், சென்னை

17. தி. நடராசன், 1976 குருசாமி கதை, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை

17.2. 1977 வன்னியடி மறவன் கதை, வேங்கடேசுவர அச்சகம், மதுரை

17.3. 1978 கட்டபொம்மு கும்மிப்பாடல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

18. வை, தி. நடராசன், 1975 அயோத்திகதை, இராசேசுவரி வெளியீடு, நாகர்கோவில்

19. நவநீதி கிருட்டிணன், 1975 கண்ணகி கதை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை

20. நெல்வாய்சங்குப்புலவர், 1983 மதனகாமராசன் கதைகள், பைலட்டு பதிப்பகம், சென்னை

21. ஏ.என். பெருமாள். 1983 வெள்ளைக்காரன் கதை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

22. அ.நா. பெருமாள். 1986 நாட்டார் கதைகள், சோபிதம் நாகர்கோவில்

22.1. 1987 தமிழில் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

23. முல்லை முத்தையா, 1987 தெனாலிராமன் விகடக்கதைகள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை

24. கி. இராசநாராயணன், 1985 தமிழ்நாட்டு நாடோடிக் கதைகள், நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை

25. சி. உருக்குமணி, 1988 பேயோட்டும் உடுக்கடிப் பாடல்கள்-ஓர் ஆய்வு, சமந்தா பதிப்பகம், க. புதுப்பட்டி

26. தே. லூர்து, 1981 நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பாரிவேள் பதிப்பகம் திருநெல்வேலி-7

26.2. 1986 நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு, பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி-7

1988 நாட்டார் வழக்காறுகள், மணி வாசகர் பதிப்பகம், சென்னை

27. நா, வானமாமலை, 1971 வீரபாண்டி கட்டபொம்மு கதைப்பாடல் மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை

27.2, 1971 காத்தவராயன் கதைப்பாடல், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை

27.3. 1972 கான்சாகிபு சண்டை, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை

குறிப்பிடத்தக்க ஆங்கில நூல்கள்

1. Shiela Asirvatham (1983), The Sociology of Tamil Folk Ballads (Unpublished Ph.D. Thesis) Kerala University.

2. Brenda Beck (1987), Journal of Indian Folkloristics. 1 : 1 pp. 26-39

3. David Buchan (1972). The Ballad and the Folk, Routledge & Hegan, Paul. London.

இதழ்களும் மொழிவளர்ச்சியும்

தூ. சேதுபாண்டியன்

ஒரு மொழியின் வளர்ச்சியை அளவிடுவதற்கு எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம் ஆகிய மூன்றும் கருவிகளாகக் கருதப் படுகின்றன. தமிழில் கலைச்சொல் அகராதி உடனடித் தேவையாகிறது. மருத்துவ இதழ்கள், வேளாண் இதழ்கள் என ஒட்டுமொத்தமான ஆய்வினை மொழி வளர்ச்சி நோக்கில் மேற்கொள்ளலாம். சிறு பத்திரிகைகளின் சொல்லாக்கம் பற்றியும் ஆராயலாம்.

ஆய்வுலகில் எந்த ஒரு துறையும் பிறதுறைகளின் நிழல் தன்மீது படாமல் வளர்ந்து வந்தது கடந்தகாலம். ஆனால் இன்றோ எந்த ஒரு துறையின் எல்லைக்குள்ளும் தமிழ் ஆய்வுகள் தம்மைச் சுருக்கிக் கொள்வதில்லை. அதனாலேயே தமிழ்த் துறைகள் பல தமிழியல் துறைகளாகத் தம் பெயரை மாற்றிக் கொண்டுள்ளன. இச்சூழலில் தமிழோடும், தமிழனோடும் தொடர்புடைய துறைகள் பல தமிழ்த் துறைக்குள் வந்து இணைவதைத் தவிர்க்கவியலாத நிலை உருவாகிவிட்டது. அத்தகைய துறைகளில் ஒன்றுதான் இதழியல் துறை.

தமிழ்த் துறையில் இருந்துகொண்டு இதழியல் ஆய்வுமேற் கொள்ளுவோருக்கும், தகவல் தொடர்புத்துறை (Communication department)யில் இருந்துகொண்டு இதழியல் ஆய்வு மேற்கொள்ளுவோருக்கும் இடையில் சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. தமிழ்த்துறையில் உள்ளோர் செய்யும் இதழியல் ஆய்வுகளில் தமிழ்த்துறையோடு நெருங்கிய தொடர்புடைய இலக்கியங்களை ஆய்வது போன்றே இதழியல் ஆய்வுத் தலைப்புக்களையும் எடுத்துக் கொண்டுள்ளனர். சான்றாக ஆனந்தவிகடன் சிறுகதைகளில் வாழ்வியல் (1987), துக்ளக் இதழ்களில் அங்கதம் (1986) என்ற தலைப்புகளைக் கூறலாம். இதழியல் ஆய்வு மேற் கொண்டோரி பலர் இதழ்களின் அமைப்பை, பக்க ஒழுங்கு அமைப்பை, இதழ்களில் அமைந்துள்ள பாடுபொருளான கதை

கட்டுரை, துணுக்குகள் ஆகியவற்றை, இதழ்கள் சித்திரிக்கும் சமூகச் சிக்கல்களை, சமூக மதிப்புகளை, மகளிரின் சிக்கல்களை, இதழ்களின் இடம் பெறும் விளம்பரங்களை, இதழ்களின் தலையங்கங்களை, இதழ்கள் பயன்படுத்தும் உத்திகளை ஆராய்ந்துள்ளனர். இவ்வாறு பல ஆய்வுகள் இதழ்களைத் தனியாகப் பகுத்து ஆராய்ந்துள்ளன.

இதுபோன்றே மொழியியல் துறையிலும் ஆட்சித்துறையிலும் தமிழ்ப்புதுமையாக்கம், ஆட்சியியல் கலைச் சொற்கள் ஓர் ஆய்வு, இக்காலத் தமிழில் சந்தி போன்ற மொழியியல் ஆய்வுகள் தனி மொழியியல் ஆய்வுகளாக இடம் பெற்றுள்ளன. மொழியினுடன் இதழியல் இணைந்து இதழ்களும் மொழி வளர்ச்சியும் என்ற பொருளில் அமைந்த ஆய்வுகள் தமிழில் மிக மிகக் குறைவே எனலாம்.

மொழி வளர்ச்சி என்றால் என்ன? என்ற வினாவிற்கு ஒரு தெளிவான வரையறையை உருவாக்கிக் கொண்டோமானால் மொழிவளர்ச்சியில் இதழ்களின் பங்கு என்பது குறித்துச் சிந்திப்பதற்கு மிகவும் துணையாயிருக்கும். மொழி வளர்ச்சி என்ற தொடரை மொழியியலறிஞர்தம் கருத்தையே துணையாகக் கொண்டு விளக்கலாம்.

ஒரு மொழியின் வளர்ச்சியை அளவிடும் கருவிகளாக 1. எழுத்துருவாக்கம் (graphization) 2. நிலைபேறாக்கம் (Standardization) 3. புதுமையாக்கம் (Modernization) என்ற மூன்று அளவுகோல்களைக் கூறுவார் மொழியியல் அறிஞர் ஃபெர்கூசன். எழுத்துருவாக்கம் என்பதில் எழுத்துச்சீர்திருத்தமும் அடங்கும்.[1] எழுத்துக்களின் மாற்று வடிவங்களை அச்சடித்தலுக்கு ஏற்ப எளிமையாய், சீர்மையுடையதாய் மாற்றந்தருதலே எழுத்துச் சீர்திருத்தமாகும். தேவையற்ற வடிவங்களைக் குறைப்பதும், தேவையான சில புதிய ஒலிகளைக் குறிப்பதற்குத் தேவையான புதிய வரிவடிவங்களை உருவாக்கிக்கொள்வதும் எழுத்துருவாக்கத்தில் அடங்கும்.

நிலைபேறாக்கம் என்பது ஏற்கனவே வழக்கில் உள்ள இரண்டு வழக்குகளில் மக்களுக்குப் புரியும்படியான, மக்கள் வழக்கில் பெரிதும் பின்பற்றப்படும் வழக்கினை நிலைபெறச் செய்வது ஆகும்.

---

1. Language Problems of Developing Nations, p. 28.

மொழியில் புதுமையாக்கம் என்பது அறிவுலக வளர்ச்சித் துறைகளில் பெருகி வரும் கருத்துக்கள் அனைத்தையும் ஒரு மொழியினால் விளக்கும் திறன் பெறும் வகையில் சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல். புதிய தொடர் அமைப்புக்களை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

இந்த மூன்று அளவுகோல்களையும் பயன்படுத்தி ஒரு மொழியின் வளர்ச்சியைக் கணக்கிடலாம்.

மொழி வளர்ச்சியைப் பற்றிச் சிந்தித்தவர்கள் சிலர். இம் மொழிவளர்ச்சிச் சிந்தனை முப்பதுகளிலேயே தந்தை பெரியார் அவர்களிடம் காணப்பட்டது. ஓர் இனம் வளர்ச்சியடைய வேண்டுமானால் அந்த இனத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்குரிய கருவியான மொழியும் வளரவேண்டும் என்பது ஈ. வே. ராவின் கருத்தாகும். அதனாலேயே அவர் முப்பதுகளிலேயே எழுத்துச் சீர்திருத்தத்தை வலியுறுத்தி வந்தார். இதுபோலவே மாணிக்க நாய்க்கர் அவர்களுக்கும் மொழி வளர்ச்சி பற்றிய சிந்தனை இருந்தது என்பது சில புதிய ஒலிகளை எப்படி ஆய்த எழுத்தைக் கொண்டு உருவாக்கிக் கொள்ளலாம் என்ற அவரது விளக்கத்திலிருந்து தெரிய வருகிறது. அன்று தொடங்கி இன்றுவரை பல அறிஞர்களிடம் மொழி வளர்ச்சிச் சிந்தனை தொடர்ந்து இருந்து கொண்டிருப்பதை உணர முடிகிறது. இம்மொழி வளர்ச்சி பற்றிய சிந்தனை சிறுபான்மையினரிடமே காணப்படுவது, குறிப்பிடத் தக்கது. அவ்வப்போது இவர்கள் பல கட்டுரைகளையும் சில நூல்களையும் எழுதியுள்ளனர். ஆனால் இவர்கள் இதழ்களுடன் மொழி வளர்ச்சியை இணைத்துப் பார்க்கவில்லை. இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே இதழியல் ஆய்வுகள் பெருகத் தொடங்கின, இந்தச் சூழலிலேயே இதழ்களும் மொழி வளர்ச்சியும் இணைத்துச் சிந்திக்கப்பட்டன. இவ்விருதுறையையும் இணைத்துச் சிந்தித்தவர்கள் மிகச் சிலரே. இந்த வரிசையில் முதல் ஆய்வேட்டை வழங்கியவர் (1978) தங்க. மணியன். இவருடைய ஆய்வேடு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டது. அவருடைய ஆய்வேட்டின் தலைப்பு பத்திரிகைத்தமிழ் (The Language of Tamil Dailies) என்றமைந்திருந்தாலும், பத்திரிகைத் தமிழின் அமைப்பை விளக்குவதோடு நின்றுவிடாமல் தமிழ் மொழி வளர்ச்சியில் தமிழ்ப் பத்திரிகைகளின் பங்கு என்ற ஓர் உள் தலைப்பில் மிகத் தெளிவாக மொழி வளர்ச்சி என்பதே - மொழிகள் அடையும் - மொழிகள் ஏற்றுக்கொள்ளும் மாற்றம்தான்

என்றும், மொழிபெறும் மாறுதல்களே மொழி வளர்ச்சியாகும் என்றும் விளக்கியுள்ளார். மொழி வளர்ச்சிக்கான அடிப்படை அளவுகள் எழுத்துருவாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம் என்பதையும் விளக்கிப் பின்னர் ஒவ்வொரு பகுதியாகத் தமிழ்ப் பத்திரிகைகளின் நிலையை விளக்கிச் செல்கின்றார். எழுத்துரு வாக்கம் என்ற பகுதியில் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், துணைக் குறியீடுகளைக் குறைத்தல், ஜ, ஸ, ஹ போன்ற புதிய ஒலிகளை ஏற்றல், மொழிமுதல் எழுத்துக்கள், மொழி இறுதி எழுத்துக்கள் இவற்றில் சில மாற்றங்களைக் காலத்தின் தேவை கருதி ஏற்றல் போன்றவற்றைப் பத்திரிகை களின்கண் உள்ள சான்றுகளைக் காட்டி விளக்கியுள்ளார்.

நிலைபேறாக்கம் என்ற பகுதியில் எழுத்து நிலையில் நிகழ்ந்த நிலைபேறாக்கம், சொல்லளவில் நிகழ்ந்த நிலைபேறாக்கம், தொடரமைப்பில் ஏற்பட்ட நிலைபேறாக்கம் ஆகியவற்றைச் சான்றுகாட்டி விளக்கிச் செல்கின்றார்.

புதுமையாக்கம் என்ற பகுதியில் சொல்லாக்கம் பற்றிக் கூறிப் புதுச் சொல்லாக்கம். செய்து கொள்ளும் முறைகளாகக் கடன் வாங்கலையும், அதன் வகைகளாக மாற்றமின்றிப் பிற மொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளுதல் (Loan Word) தமிழ்ப்படுத்தி ஏற்றுக் கொள்ளுதல், ஒட்டுக்களைச் சேர்த்துப் புதிய சொற்களை உருவாக்கிக் கொள்ளுதல், புதிய சொற்களை உருவாக்குதல், மொழியில் மேற்கொண்டுள்ள தொடர் நிலையில் உள்ள உறுப்பு களின் வரிசைமாற்றம் போன்றவை தமிழ்ப் பத்திரிகைகளில் இடம் பெற்றுள்ளமையைத் தெளிவாக விளக்கிச் செல்கிறார்,

எளிமையாக்கம் என்ற பகுதியில் எழுத்து நிலையில் நிகழ்ந்த எளிமையாக்கம், சொல்லாக்கம் நிலையில் நிகழ்ந்த எளிமை யாக்கம், புணர்ச்சி நிலையில் நிகழ்ந்த எளிமையாக்கம் என்று எளிமையாக்கத்தை விளக்குகிறார். இறுதியில் பொருள் நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை சொற்பொருள் விரிதல், பொருட் சிறப்புறல், பொதுப் பொருட் பேறு, வழக்கில் சொல் வழக்காறு படுதல், உயர்பொருட்பேறு, இழிபொருட்பேறு என்று வகைப் படுத்தி விளக்கியுள்ளார்,

இறுதியில் ஆய்வு முடிவுகளைத் தொகுத்துரைத்துள்ளார்.

இத்துறையில் வேறு முனைவர் பட்ட ஆய்வேடுகள் ஏதும் வந்ததாகத் தெரியவில்லை. இதன் பின்னர் இதுபோன்ற மொழி

வளர்ச்சியையும் இதழ்களையும் இணைத்துப் பார்த்து எம்ஃபில் பட்ட ஆய்வேடுகள் சில வெளிவந்துள்ளன. அவை யாவும் ஒரு குறிப்பிட்ட இதழை அடிப்படைச் சான்றாதாரமாகக் கொண்டு அல்லது இரண்டு மூன்று இதழ்களை மட்டும் எடுத்துக்கொண்டு எழுதப்பட்டவையாக அமைந்துள்ளன.

பாரதியார் பல்கலைக் கழகத்தில் பி. எம். பழனிசாமி என்பவரால் உருவாக்கப்பட்ட 'கொங்கு நாட்டு வேளாண்மை இதழ்கள்—செய்தித் தொடர்பு மற்றும் கருத்தியல் பகுப்பாய்வு' என்ற ஆய்வேடு குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அவ்வாய்வேட்டின் உள்தலைப்புகளுள் ஒன்று இதழ்களில் மொழி நடை என்பதாகும். அவ்வுட்தலைப்புக்குள் ''மொழி வளர்ச்சியில் வேளாண் இதழ்களின் பங்கு'' என்ற ஒரு பகுதியை அமைத்து எழுதியுள்ளார். இப்பகுதியில் வேளாண் கலைச்சொல்லாக்கம் செய்யும் முறைகளில் மொழிபெயர்ப்பைக் காட்டிலும் ஒலிபெயர்ப்பே அதிகம் காணப்படுகின்றன என்ற கருத்தைக் கூறியுள்ளார். வேளாண் இதழ்களில் இவ்வாய்வாளர் எடுத்துக்கொண்ட மூன்று இதழ்களில் வளரும் வேளாண்மை, ஏர் உழவன் ஆகிய இரண்டு இதழ்களில் மட்டும் எழுத்துச்சீர்திருத்தம் பின்பற்றப்படுகின்றது என்றும் மூன்றாவது இதழான செய்தி மடல் என்னும் இதழில் இன்னும் 1978ஆம் ஆண்டில் தமிழக அரசு ஆணையின் படியான குறைந்த அளவு எழுத்துச் சீர்திருத்தம்கூட இடம்பெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார். இவ்விதழ்களில் மருந்து, உரம், பொறியியல், புதிய பயிர் ரகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடும்போது கிரந்த எழுத்துக்கள் மற்ற பொது இதழ்களைவிட அதிகம் பங்கு வகிக்கின்றன. புதிய சொற்களை உருவாக்குதல், மற்ற மொழிச் சொற்களை நடைமுறைப்படுத்தல், முன்னொட்டு, பின்னொட்டு போன்றவற்றை இணைத்தல், எளிய முறையில் கலைச்சொற்களை உருவாக்குதல் போன்ற மொழி வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ளன இவ்விதழ்கள் என்ற செய்திகள் இவ்வாய்வேட்டில் இடம் பெற்றுள்ளன. இந்த ஆய்வேட்டின் இறுதியில் மொழிபெயர்க்கப் பட்ட 42 கலைச்சொற்களையும், ஒலிபெயர்க்கப்பட்ட 117 கலைச் சொற்களையும் பின்னிணைப்பில் கொடுத்துள்ளார் ஆய்வாளர். நுண்ணுயிரி உரம் (Bio-fertilizers), நச்சுயிரி (Virus), தழைச்சத்து (Nitrogen), வளர்ச்சித்தடுப்பான்கள் (Inhibitors), பயிர்வளர்ச்சி ஊக்கிகள் (Plant growth Regulator) போன்றவை மொழி பெயர்க்கப்பட்ட கலைச்சொற்களாகும். எண்டோசல்ஃபான், அக்ரிமைசின், அட்ராடால்ப் போன்றவை ஒலிபெயர்க்கப்பட்ட

கலைச்சொற்களாகும். கலைச்சொற்கள் பட்டியல்கள் தனித் தனியே அகர வரிசைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

தினமணி இதழில் செய்தி மொழிபெயர்ப்பு (1979) என்ற தலைப்பில் அமைந்த மற்றொரு எம்ஃபில் ஆய்வேடும் இதழியலை யும் மொழி வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வேடாகும். இந்த ஆய்வை மேற்கொண்டவர் வே. சசிகலா என்பவர். இவர்தம் ஆய்வேட்டை மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் வழங்கியுள்ளார். இவ் ஆய்வேடு, ஆய்வு அறிமுகம், இந்திய இதழியல் துறையில் மொழி பெயர்ப்பு வரலாறு, தின மணியில் மொழிபெயர்ப்பு, ஒலி - சொல் - வாக்கிய நிலையில் மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்புப் பிழைகள், முடிவுரை என்ற தலைப்புகளில் அமைந்துள்ளது. இந்த ஆய்வில் செய்தி வழுவாமல் மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது என்பதும், தமிழ்ப் படுத்துவதில் வரையறை இல்லை என்பதும், ஆங்கில, வடமொழிச் சொற்கள் மிகுதியும் கடன் வாங்கப்பட்டுள்ளன என்றும் கருத்துக் கூறப்படுகிறது. இறுதியில் மொழிபெயர்க்கும் முறையில் ஒரு சீர்மைவேண்டும் என்பதற்காக நடை நூல் ஒன்று உருவாக்கப் பெற்றுப் பின்பற்றப்படுதல் நல்லது என்றும் பரிந்துரைக்கிறார். இந்த ஆய்வேடு நேரடியாக மொழி வளர்ச்சி குறித்துப்பேசவில்லை. எனினும் மொழி வளர்ச்சிக்கு அடிப்படையான மொழிபெயர்ப்புப் பற்றிப் பேசியிருப்பதும் ஒரு வகையில் மொழிவளர்ச்சிக்குத் துணை புரிவதேயாகும்.

''மக்கள் தகவல் தொடர்பியல் கலைச் சொற்களின் விளக்கமும் கலைச் சொல்லாக்கச் சிக்கல்களும்'' என்ற தலைப்பில் அமைந்துள்ள மற்றொரு எம்ஃபில் ஆய்வேடு லோ. மணிவண்ணன் என்பவரால் (1990) மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வேடு முன்னுரை, இதழியல் கலைச்சொற்கள், வானொலிக் கலைச்சொற்கள், தொலைக் காட்சிக் கலைச்சொற்கள், விளம்பரக் கலைச்சொற்கள், கலைந் சொல்லாக்கச் சிக்கல்கள், முடிவுரை என்ற அமைப்பில் அமைந் துள்ளது. இந்த ஆய்வேட்டின் பின்னிணைப்புப் பகுதியில் இதழியல் கலைச்சொற்கள் 168உம், வானொலிக் கலைச்சொற்கள் 90உம், தொலைக்காட்சிக் கலைச்சொற்கள் 65உம், விளம்பரக் கலைச் சொற்கள் 122உம் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் கலைச்சொற்களை வகைப்படுத்துவதில் சரியான அடிப்படை பின்பற்றப்படவில்லை.

'மாலை முரசு நாளிதழ் - பன்முக வெளியீடு - இதழியல் ஆய்வு' என்ற தலைப்பில் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் வழங்கப்பட்ட எம்.ஃபில் ஆய்வேடும் மொழிநடை என்ற உள் தலைப்பில் மாலைமுரசு நாளிதழ் பயன்படுத்தும் மொழி பற்றிப் பேசுகிறது. இந்த ஆய்வேட்டை எழுதியவர் தமிழரசி என்பவர். இவர் சி.பா. ஆதித்தனார் எழுதிய பத்திரிகை எழுத்தாளர் கையேடு என்பதை அடிப்படையாகக் கொண்டே மாலைமுரசில் மொழி யமைப்பு அமைந்துள்ளது என்று விளக்குகிறார். சொற்கள், தொடர்கள் ஆகியவை அனைவருக்கும் புரியும் விதத்தில் அமைத்துப் பிற மொழிச் சொற்கள் மிகக்குறைந்த அளவிலேயே இந்நாளிதழில் இடம்பெற்றுள்ளன. ஒரு சொற்றொடரினை எட்டு சொற்களாலேயே அமைத்தல் வேண்டும். சொற்றொடரி களைப் பிரித்துப் போட்டு எளிமையாக எழுதுதல் - சிறுசிறு தொடர்களாக அமைத்தல் ஆகியவை இந்நாளிதழின் மொழிக் கொள்கையாம். இந்த நாளிதழில் பேச்சுமொழிச் சொற்களை அதிகம் பெய்து எழுதுகின்றனர். மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் சொற்கள் கொச்சைத்தன்மை நீக்கப்பட்டு எழுதப் படுகிறது. ஆங்கிலச் சொற்கள் என்றாலும் மக்கள் பயன்படுத்தும் சொற்களாக இருந்தால் அவற்றையே பயன்படுத்துகிறது. சான்றாகக் கலெக்டர், டிரைவர், போலீஸ் என்ற சொற்களுக் குரிய மாவட்ட ஆட்சியாளர், ஓட்டுநர், காவலர் என்ற தமிழ்ச் சொற்களைக் காட்டிலும் ஆங்கிலச் சொற்களுக்கே முதலிடம் தருகின்றனர். எழுத்து நிலையிலும் சில சீர்திருத்தங்களை எளிமை நோக்கிப் பயன்படுத்துவதை இந்நாளிதழில் காணலாம்.

ஔவையார் என்பதை அவ்வையார் என்றும்,
கௌரி என்பதை கவுரி என்றும்,
சௌகார் என்பதை சவுகார் என்றும்
மௌண்ட்ரோடு என்பதை மவுண்டு ரோடு என்றும்

வௌவால் என்பதை வவ்வால் என்றும் எழுதுவதை இந் நாளிதழில் காண முடிகிறது. பாமரர்களை மனதிற்கொண்டு எளிய நடையினைக் கையாள்கிறது மாலை முரசு. மக்களுக்குப் புரியும் எளிய நடையில் எழுதினால் அனைத்து மக்களும் விரும்பிப் படிப்பர். மொழிநடையும் கூட பன்முக வெளியீடுகளின் உத்தி களில் ஒன்றே என்று முடிக்கிறார். இவ்வாய்வேட்டின் பின்னிணைப்பில் நூற்றுக்கு மேற்பட்ட இதழியல் கலைச் சொற் களையும் அதற்கு மூலமான ஆங்கிலச் சொற்களையும் அகர

வரிசையில் கொடுத்துள்ளார், சான்றாகச் சில சொற்களைக் காணலாம் :

முகப்பு—Lead
முந்துசெய்தி—Scoop
பரபரப்பூட்டல்—sensational
விளையாட்டுச் செய்தி—sports news

'நாளேடுகளில் செய்திப் புலப்பாடு' என்ற எம்ஃபில் ஆய்வேடு அ. வெலிங்டன் பிரான்சிஸ் பிரபாகர் என்பவரால் எழுதப்பட்டுள்ளது (1988). இவ் ஆய்வேட்டில் முன்னுரை, நாளேடுகள் ஓர் அறிமுகம், செய்தித்தாளின் அமைப்பு, செய்திப்புலப்பாட்டு உத்திகள் ஓர் ஒப்பீடு, இரு நாளேடுகளின் மொழி நடை, முடிவுரை என்ற உள் தலைப்புக்களில் அமைந்துள்ளது. இந்த ஆய்வேட்டில் தினமலர், தினகரன் ஆகிய இரண்டு நாளேடுகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதன்கண் இரு நாளேடுகளின் மொழிநடை என்ற பகுதி, மொழி வளர்ச்சி தொடர்பான செய்திகளைப் போகிற போக்கில் குறிப்பிட்டுச் செல்கிறது. தினமலர் நாளிதழ் மொழியில் எழுத்துச் சீர்திருத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், தினகரன் நாளிதழில் எழுத்துச் சீர்திருத்தத்தைப் பின்பற்றவில்லை என்றும் குறிக்கிறது, ஃ என்ற ஆய்த எழுத்தை இரண்டு ஏடுகளும் பயன்படுத்தவில்லை. தினமலரைவிடத் தினகரன் நாளிதழில் புதுச்சொல்லாக்கம் மிகுதியாக இடம் பெற்றுள்ளன என்பன போன்ற செய்திகள் இவ்வாய்வேட்டில் கூறப்படுகின்றன.

'செந்தமிழ்ச் செல்வியில் பாவாணர் கட்டுரைகள்' என்ற தலைப்பில் வெளிவந்த எம்ஃபில் ஆய்வேடு நேரடியாக இதழ்களும் மொழி வளர்ச்சியும் பற்றிப் பேசுவதாக இல்லை எனினும் கூட இலட்சுமணனால் (1990) எழுதப்பட்ட இவ்வாய்வேட்டின் உள்ளடக்கத்தில் பாவாணரின் சொல்லாக்கக்கட்டுரைகள், பாவாணரின் இலக்கணக் கட்டுரைகள், மொழியாய்வுக் கட்டுரைகள் முதலியன இடம் பெற்றிருப்பதால் இவ்வாய்வேடு பற்றிய செய்தியும் இங்குக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாய்வேடு முற்றிலும் பாவாணரைப் பாராட்டும் வகையிலே அமைந்துள்ளது எனில் மிகையாகாது.

'1960-க்குப்பின் அச்சகத் தமிழின் போக்கு' என்ற தலைப்பில் பே. ஞானசேகரன் அவர் எழுதியளித்த எம்ஃபில் ஆய்வேடு (1988) வரலாற்று நோக்கில் அமைந்த மொழி வளர்ச்சிச் சிந்தனையுடன்

கூடிய ஓர் ஆய்வேடாகும். இவ்வாய்வேடு திருமணம், பூப்பு, காதணி விழா, புதுமனைபுகுதல், மணிவிழா, தொடக்க விழா போன்ற விழாக்கள் தொடர்பான அழைப்பிதழ்களில் இடம் பெறும் தமிழ் மொழியின் தன்மை 1960க்குப் பின் எப்படி மாறி யுள்ளது என்று விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாய் வேட்டில் அழைப்பிதழ்களில் இடம்பெறும் நிறைந்த பிழைகள் சுட்டிக்காட்டப்பட்டு அவை தீர்க்கப்பட வேண்டும் என்று கூறுகிற வகையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வில் 1960க்குப் பின்னர் வடமொழிக்கலப்பு குறைந்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்தக் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் 1960க்கு முன்னால் உள்ள அழைப்பிதழ்களில் உள்ள சில வடமொழிக் கலப்புற்ற தொடர்களையும், அவற்றிற்கு இணையாகத் தற்காலத்தில் பயன் படும் தனித்தமிழ்த் தொடர்களையும் அடுத்தடுத்துக் கொடுத் துள்ளார் ஆய்வாளர். சான்றாகச் சிலவற்றைக் காணலாம்.

1960க்கு முன்னர்	இக்காலத்தில் (1960க்குப் பின்னர்)
விவாஹ சுபமுகூர்த்தப்பத்திரிகை	— திருமண அழைப்பிதழ்
சுபதினத்தில்	— நன்னாளில்
ஜேஷ்ட குமாரன்	— மூத்த மகன்
கனிஷ்ட புத்திரன்	— இளைய புதல்வன்
சௌபாக்கியவதி	— திருநிறைச்செல்வி
ருதுமங்களஸ்நான விழா	— பூப்பு நன்னீராட்டு விழா
கர்ணபூஷண பத்திரிகை	— காதணி விழா அழைப்பிதழ்
கிருஹப்பிரவேச பத்திரிகை	— புதுமனை புகுவிழா

அச்சகத் தமிழின் போக்கினை உற்றுநோக்கினால் முற்கால அழைப்பிதழ்களையும் இக்கால அழைப்பிதழ்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மொழியின் வளர்ச்சியினை உணர முடிகிறது. மொழித் தூய்மையும்கூட மொழி வளர்ச்சியின்பாற்பட்ட ஒன்றேயாகும் என்பதும் அறியத்தக்கது.

இதுகாறும் குறிப்பிடப்பட்ட ஆய்வேடுகள் தவிர மொழி வளர்ச்சிப் பற்றி எழுதப்பட்ட பல கட்டுரைகளும் சில நூல்களும் வெளிவந்துள்ளன. செ. வை. சண்முகம் எழுதியுள்ள Aspects of Language Developments in Tamil, எழுத்துச்சீர்திருத்தம் ஆகிய நூல்களும் கருணாகரனின் Studies in Tamil Socio-linguistics, Linguistic Convergence ஆகிய நூல்களும் மொழி வளர்ச்சி பற்றிய கோட்பாடுகளை விளக்குகின்றன.

வா. செ. குழந்தைசாமியின் எழுத்துச்சீர்திருத்தம், அறிவியல் தமிழ் ஆகிய நூல்கள், ராதா செல்லப்பனின் முனைவர் பட்ட ஆய்வேடான Development of Tamil as a Language of Science ஆகியவை முறையே எழுத்துச் சீர்திருத்தத்தையும். கலைச் சொல்லாக்க முறைகளையும் பேசுகின்றன.

இவை தவிர மொழியியல், தமிழ்க்கலை, களஞ்சியம், போன்ற கல்விசார் நிறுவனங்களிலிருந்து வெளிவரும் இதழ்களில் அவ்வப் போது வெளிவந்துள்ள கலைச் சொல்லாக்கம் பற்றிய கட்டுரைகள், கலைக்கதிர் போன்ற அறிவியல் தொடர்பான இதழ்களில் வெளி வந்துள்ள கலைச்சொல்லாக்கம் தொடர்பான கட்டுரைகள் ஆகிய வையும்கூடத் தமிழ் வளர்ச்சிக்குத் துணை நிற்பனவே.

இத்துறையில் செய்ய வேண்டியவை—உடனடியாகச் செய்ய வேண்டியவை—எனச் சிலவற்றைக் கூறலாம்.

1. தமிழில் உருவாக்கப்படும் கலைச்சொற்கள் அனைத்தும் உள்ளடங்கியது என அகராதி ஒன்று தொகுக்கப்படுதல் வேண்டும். அவை துறைவாரியாகப் பிரிக்கப்பட்டுத் தொகுக்கப் படுமாயின் எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பெரிதும் துணை யாயிருக்கும்.

2. துறைவாரி வருகின்ற இதழ்களைப் பகுத்துக்கொண்டு மருத்துவ இதழ்கள், வேளாண்மை இதழ்கள் என்றவாறு ஒட்டுமொத்தமான ஆய்வுகளை மொழி வளர்ச்சி நோக்கில் மேற்கொள்ளலாம்.

3. ஒவ்வொரு உருவாகப்பட்ட கலைச்சொற்களுக்கும் இடையி லான நிலைபேறாக்கம் குறித்த ஆய்வும் உடனடித் தேவை யாகும்.

4. சிறு பத்திரிகைகள் என்று அழைக்கப்படும் தமிழ்ப்பாவை, தென்மொழி, தமிழ்ப்பொழில் போன்றவற்றிலும் கூடப் பாவாணரின் வழி வந்த தமிழறிஞர் கலைச்சொல்லாக்கம் செய்கின்றனர், அவற்றில் ஏற்புடைமை குறித்த ஆய்வு ஒன்றும் உடனடித் தேவையாகும்.

5. எழுத்துச் சீர்திருத்தம் குறித்த,அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான ஒரு ஆய்வும் இன்றைய உடனடித் தேவை யாகும்.

2. Sociolinguistics p. 52

6. கல்விசார் நிறுவனங்கள் வெளியிடும் இதழ்களை ஒப்பிட்டு அவற்றிடையே மொழிநிலையில் ஒரு நிலைபேறாக்கத்தைத் தோற்றுவிக்கும் வகையில் ஆய்வு மேற்கொள்ளுதல் வேண்டும்.

துணை நூற்பட்டியல்

1. Bright, W., Sociolinguistics, The Hague and Paris, 1966
2. Fishman, J. A., (Ed) Language Problems of Developing Nations, Newyork. 1968
3. Karunakaran, K, Studies in Tamil Sociolinguistics Malar Patippu, Annamalai Nagar, 1978
4. Karunakaran, K., Linguistics Convergence, All India Tamil Linguistics Association, Annamalainagar. 1980
5. Shanmugam S. V., Aspects of Language Development in Tamil, All India Tamil Linguistic Association, Annamalai Nagar, 1983

இதழியல்

இரா. காசிராசன்

தமிழில் சுமார் ஆயிரம் இதழ்கள் வெளிவந்துள்ளன. 34 இதழ்கள் பற்றி மேற்கொள்ளப்பட்ட எம்ஃபில், முனைவர் பட்ட ஆய்வேடுகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. இதனால் இதழ்களைப் பற்றிய ஆய்வுகள் இன்னும் எந்த அளவு வரவேண்டும் என்ற உண்மை பெறப் படுகின்றது.

இதழ்களும் இதழியல் ஆய்வுகளும் இலக்கிய வளர்ச்சிக்கு எந்த அளவிற்குப் பயன்பட்டுள்ளன என்பதைக் கண்டறியும் முயற்சியே கட்டுரையின் நோக்கம். இதற்கு எம்ஃபில், பிஃஎச்டி ஆய்வுகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அதிலும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் கிடைத்துள்ள ஆய்வேடுகள் மட்டுமே மதிப்பிடப் பெறுகின்றன. இவற்றில் பல மதுரைக் காமராசர் பல்கலைக்கழக ஆய்வேடுகள். ஒருசில சென்னை, கேரளப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கப்பட்டவை.

ஆய்விற்காக அறியப்பட்ட பி.எச்டி. ஆய்வுகள் ஏழு, இக் கட்டுரைக்காகத் திரட்டப்பட்ட எம்ஃபில் ஆய்வேடுகள் 88; தவிர, சென்னைப் பல்கலைக்கழக 'மக்கள் தகவல் தொடர்பியல் துறை' சார்பாக வெளியான எம்ஃபில் ஆய்வேடுகள் 17; பட்ட மேற் படிப்பு (எம்.ஏ) ஆய்வுகள் 60; பட்டப்படிப்பு (பி.ஜெ) ஆய்வுகள் 46 ஆகியனவும் கருத்தில் கொள்ளப்பட்டன. மேலும் கோவை, பு. சா. கோ. கல்லூரி மக்கள் தகவல் தொடர்பியல் துறை வழி யாகக் கொடுக்கப்பட்ட பட்டமேற்படிப்பு ஆய்வுகள் 21உம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

தகவல் தொடர்புத்துறை சார்ந்த மேற்குறித்த ஆய்வேடு களில் ஒருசில மட்டுமே இதழியல் தொடர்பானவை: இவற்றில் எம்ஃபில் 3; பட்டமேற்படிப்பு 17; பட்டப்படிப்பு 24; பு.சா.கோ. பட்டமேற்படிப்பு 8-ஆகியவை மட்டுமே இதழியல் தொடர்

பானவை. இவற்றில் ஒருசிலவே இலக்கியநோக்கில் செய்யப்பட்ட ஆய்வுகள். 'கலைமகள் - ஓர் ஆய்வு, திரு. வி.க.வின் இதழியல்பணி, தேவநேயப்பாவாணரின் இதழியல்பணி, மறைமலை அடிகள்' லக்ஷ்மி நாவல்கள் ஆகிய ஐந்து பட்டமேற்படிப்பு ஆய்வுகள்; சிறு கதையும் அதன் வளர்ச்சியும், கல்கியின் இதழியல் பணி ஆகிய இரு பட்டப் படிப்பு ஆய்வுகள், இலக்கிய நோக்கில் செய்யப்பட்டன வாகத் தெரிகின்றன.

தகவல் தொடர்பியல்துறை சார்பான நூல்கள் 34இல் 30 நூல் கள் இதழியல் தொடர்பானவை. இவற்றில், குடியரசு இதழ்களில் பாரதிதாசன் கவிதைகள், பத்திரிகைக்குக் கதை கட்டுரை அனுப்க எழுதுவது எப்படி ஆகிய இரண்டு மட்டுமே இலக்கியத் தொடர் பானவை. 'பத்திரிகை மொழிநடை' நூல், மொழியியல் தொடர் பானது.

டாக்டர் பட்ட ஆய்வில், 'எழுத்து இதழும் புதுக்கவிதை இயக்கமும்' என்பதும், சத்தியபாமாவின் 'தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் தீபம் இதழின் பங்கு' என்பதும் இலக்கிய வளர்ச்சி நோக்கிய ஆய்வாகும். தவிர, 'குமுதத்தின் இதழியல் உத்திகள்.' 'தமிழ் இதழ்கள் காட்டும் மகளிர் நிலை' இரண்டிலும் இலக்கியத் தொடர்பான செய்திகள் தனித் தலைப்புகளில் ஆராயப்பட் டுள்ளன. 'மாத இதழ் மஞ்சரி—ஓர் ஆய்வு' என்பதிலும் இதற்கென ஓர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எம்.ஃபில் பட்ட ஆய்வேடுகளில் 26 ஆய்வேடுகள் இலக்கியத் தொடர்பானவை. எஞ்சிய ஆய்வுகளில் 23 ஆய்வேடுகள் பொது நிலையில் இதழியல் உத்தி பற்றி அமைவதோடு இலக்கியம் பற்றி ஆய்வுகளையும் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளன. ஆக 88 ஆய்வேடு களில் 49 ஆய்வேடுகள் இலக்கியங்களை ஆராய்கின்றன. இவற்றில் 34 வகை இதழ்கள்—அமுத சுரபி, ஆனந்த விகடன், இதயம் பேசு கிறது, இராஜம், ஒம்சக்தி, கல்கண்டு, குயில், குங்குமம், குடியரசு, குமுதம், சக்தி, சுமங்கலி, செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, செம் மலர், ஞானபூமி, தாமரை, கிறிஸ்தவக் கல்லூரி இதழ், தினகரன், தினத்தந்தி, தினமணி, தினமணிச்சுடர், தினமலர், நம்வாழ்வு, பூந்தளிர், மங்கை, மங்கையர் மலர், மணிக்கொடி, மதிநா, மாலை முரசு, முஸ்லீம் முரசு, ராணி, ஜூனியர் விகடன், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் - ஆய்வுக்குத் தளமாக அமைகின்றன. தவிர, சிறுவர் இதழ்கள், வேளாண்மை இதழ்கள் ஆகியன பொருளடிப்படை யிலான பொது இதழியல் ஆய்வுகளாக அமைவன.

இவற்றில் குயில், செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, மணிக் கொடி, தாமரை, குடியரசு ஆகியன இலக்கிய நிலையிலான அழுத்த மான இலக்கிய இதழ்கள், சக்தி, நம்வாழ்வு, மதிநா, முஸ்லீம் முரசு, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் ஆகியன சமய இதழ்கள். இவற்றோடு மகளிர் இதழ், நாள்-வார, மாத இதழ்கள், இங்கு ஆய்வுக்கு அடித் தளமாகின்றன.

இவ்வாய்வுகளில், கவிதை, சிறுகதை, ஒருப்க்கச் சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை, துணுக்குகள், இலக்கியக் கட்டுரை கள் முதலான இலக்கியப் படைப்புகள் ஆராயப்படுகின்றன. இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகள் பற்றிய மதிப்பீடும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில், கம்பராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம் பற்றிச் செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வியில் வெளியான கட்டுரைகள் மதிப்பிடப்பட்டு வகைப்படுத்தப்பட் டுள்ளன. அதோடு பாவாணர்தம் கட்டுரைகளும் மதிப்பிடப்பட்டுச் சில வகையில் பகுத்துரைக்கப்படுகின்றன. ஆயின் இவ்வாய்வுகளில் எல்லாம் மேற்கண்ட கட்டுரைகள் பலவற்றைத் துணிந்து நிறை— குறை சுட்டுகின்ற அளவில் எந்த ஆய்வும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இங்குக்கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை, அவை வெளியான ஆண்டு, இதழ்' ஆசிரியர், அதன் உள்ளடக்கம்— இவை பற்றிய வெறும் பட்டியலாக மட்டுமே அமைந்து, ஆய்வாளர் தம் மதிப்பீடு இடம்பெறாது போய்விடுகின்றது. செந்தமிழ் | கம்பராமாயணக் கட்டுரைகள் 275; ஆசிரியர் 39; திருக்குறள் கட்டுரைகள் 71; ஆசிரியர் 49; சிலம்புக் கட்டுரைகள் 76- என்று பட்டியல் தருவதோடு செந்தமிழ் இதழ்க்கட்டுரை ஆய்வுகள் நின்று விடுகின்றன. அதோடு 'செந்தமிழ் இதழில் சிலப்பதிகாரக் கட்டுரை கள்' என்ற ஆய்வு - படிக்கின்ற போக்கில், இது சிலப்பதிகாரக் கட்டுரைகள் பற்றித்தான் பேசுகின்றனவா? அல்லது ஆய்வாளர் தம் சொந்தக் கருத்தாகச் சொல்லுகிறாரா என்ற குழப்பநிலை படிப்பவருக்கு ஏற்படும் வண்ணம் அமைந்துள்ளன.

பாவாணர் கட்டுரை பற்றிய மதிப்பீட்டில் எழுத்து, சொல் பற்றிய கட்டுரைகளே மிகுதி என்றும், தமிழ் முதல்மொழி என்ற கருத்தாக்கம் கட்டுரைகளின் தொனியாகிறது என்று குறிப்பிடு வதும் திறனாய்வாளர் மதிப்பீடாக அமைகிறது. செந்தமிழ்ச் செல்வியில் 1986க்குப் பிறகு திருக்குறள் கட்டுரைகள் வரவில்லை என்பதை ஆசிரியர் குறிப்பிடுவதோடு, எந்தக் காலக் கட்டங்களில் மிகுதியான கட்டுரைகள் வந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

அதோடு, இவற்றில் முதல் கட்டுரை எழுதியது யார் - மிகுதியான கட்டுரை எழுதியது யார் என்ற பட்டியல் தரப்படுகிறதே தவிர யார் சிறந்த கட்டுரைகள் எழுதியுள்ளார் என்ற விவரம் தரப்பட வில்லை. அப்படிப்பட்ட ஒரு மதிப்பீட்டைத் தர வேண்டும் என்ற சிந்தனைகூட ஆய்வாளருக்கு இல்லை என்பது வெளிப்படுகிறது.

இலக்கிய நிலையிலான ஆய்வுகளில், அமுதசுரபி சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் சிக்கல்கள், ஆனந்த விகடன் சிறுகதைகளில் சமூக மதிப்புகள், ஆனந்த விகடனில் புதிய ஆத்திசூடிக் கதைகள், இதழ்ச் சிறுகதைகளில் அலுவல் மகளிர் சிக்கல்கள், செம்மலர் இதழ்ச் சிறுகதைகள், தினமணிக்கதிர் சிறுகதைகள், தினமலர் வார மலர்ச் சிறுகதைகளில் சமுதாயச் சிக்கல்கள், பத்தாண்டுகளில் தாமரையில் வெளிவந்த சிறுகதைகள், ராணி இதழ்ச் சிறுகதைகள் ஆகிய 11 ஆய்வுகள் சிறுகதைகள் பற்றியன.

1986இல் அமுதசுரபியில் வெளியான 105 சிறுகதைகளில் கூட்டுக் குடும்ப முறையில்தான் சிக்கல்கள் அதிகம்என்றும், அதிலும் நடுத்தர வர்க்கத்திடமே மிகுதி என்றும் சுட்டப்பெறுகிறது. திருமணம் பொருளாதாரச் சிக்கலாக உருவாகியிருப்பதை இக்கதைகள் காட்டுகின்றன; வரதட்சணைக் கொடுமை பற்றிப் பெண் எழுத்தாளர்கள் மிகுதியாக எழுதியுள்ளனர் என்கிறார். ஆனந்த விகடன் சிறுகதைகள் 253இல் பெற்றோர் விருப்புடன் நடக்கும் மணம் பற்றிய கதையே இல்லை; 34 கதைகள் மகளிர் சிக்கல் பற்றிப் பேசுவன; அரசியல்வாதிகளைக் கதைகளில் வெளியிட வில்லை; பாலுணர்ச்சி தூண்டும் கதையே இடையாது; நடப்பியல் சிக்கல்களான சீனித்தட்டுப்பாடு, தேர்தல், விபத்து - தொடர்பான கதைகள் 23. அரசு நிறுவனங்கள், மருத்துவ மனைகள் பற்றிய சீர்கேடு சுட்டும் கதைகள் உண்டு; ஆனால் தனியார் நிறுவனம் - மருத்துவமனைச் சீர்கேடுகள் பற்றிய கதைகள் இல்லை.

குங்குமம் இதழ்ச் சிறுகதை ஆய்வில் மாமி-மருமகள் உறவு முறை பற்றிய கதைகள் குறைவு; அரசியல் மாற்றம் சார்ந்த கதைகள் இல்லை. வேலையில்லாச் சிக்கல் பற்றிய கதைகளும் இல்லை. அதேபோன்று அறிவியல் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய கதைகளும் இவ்விதழில் இடம் பெறவில்லை என்பது சுட்டிக்காட்டப் பெறுகின்றது. இவ்விதழ்க்கதைகள் இலக்கியத் தரம் பெறவில்லை என்ற மனோன்மணி கருத்தும் இங்கு நோக்கத் தக்கது.

செம்மலர் இதழ்ச் சிறுகதைகளில் காதல், கல்யாணம் பற்றிய பேச்சே இல்லை; தொழிலாளர் சிக்கல், நலிவுற்றார் இழிநிலை

இவையே கதைப்பொருளாக அமைந்துள்ளன. மங்கையர் மலரிச் சிறுகதைகள் 111இல் 33-கதைகள் மகளிர் சிக்கல் பற்றியன என்ற கருத்துத் தரப்படுகிறது.

'துணுக்கு' பற்றிய ஆய்வுகள் அதனை இலக்கிய ஆய்வாகவே ஏற்கின்றன. இதன் நோக்கம் 64% அறன் வலியுறுத்தல்; 36% பொழுது போக்கு என்கிறார் வேம்புலு. துணுக்குகளில் விகடன் அரசியலுக்கும், குமுதம் பாலுணர்ச்சிக்கும் முதன்மை தருகின்ற துணுக்குலகு இலக்கியம் (Light Literature) என்ற கருத்தாக்கமும் இங்குக் காணப்படுகிறது. மங்கையர் மலர்த் துணுக்குகளில் சமையல் குறிப்பு பற்றியன மிகுதி; அடுத்த நிலையில் அமைவன வீட்டுப் பொருளை வீணாக்காமை பற்றியன. வரதட்சிணை, சாதி ஒழிப்பு; திருமணம் தொடர்பான துணுக்குகள் மங்கையர் மலரில் இல்லை; அதோடு நகைச்சுவை, திரைப்படம், அரசியல், இலக்கியம் தொடர்பான துணுக்குகளும் இவ்விதழில் இடம்பெற வில்லை என்பார் ஆய்வாளர்.

கவிதை பற்றிய ஆய்வு மிகக் குறைவு; பாரதிதாசனின் குயில் இதழ் இளங்கவிஞர்களை ஊக்குவித்தது; இந்தி எதிர்ப்பு, விடுதலை, சாதி மறுப்பு, தமிழ்—தமிழன் தொடர்பான கவிதை வெளியாயின. குடியரசு இதழ்க் கவிதைகள் சமய - ஆரிய சாதி எதிர்ப்பு, பெண் விடுதலை, தீண்டாமை, பொதுவுடைமை, திராவிட நாடு, தமிழ், தன்மதிப்பியக்கம் (சுயமரியாதை) தொடர்பானவை. இதில் 157 கவிஞர்கள் 329 கவிதைகளைப் படைத்துள்ளனர். பிற இதழ்க் கவிதைகள் வெறும் விளம்பரத்திற்காகப் பயன்படுத்தப்படுவனவே. விழாக்காலப் பக்க நிரப்பிகளாகக் குங்குமம் இதழ்க் கவிதைகள் இடம் பெறுவதாகக் குறிப்பிடுகிறார் ஆய்வாளர்; அதோடு துணுக் கின் மாற்று வடிவாகவும் இவை இடம்பெறுகின்றன. நாடகமும் விழாக்காலப் பக்க நிரப்பிகளே. இவை சிறுகதைகளின் போலியாக வருவன.

நாவல் பற்றிய ஆய்வு இவற்றில் குறைவு. காரணம் பெரும் பாலான இதழியல் ஆய்வுகள் ஓராண்டு கால இதழ்களை மட்டும் எடுத்துக் கொள்வதால் அவற்றில் பல முற்றுப் பெறாத நாவல்கள் இடம்பெற்று விடுகின்றன. எனவே நாவல்பற்றிய ஆய்வு இங்குச் சிறப்புப் பெறவில்லை.

இசுலாம் தொடர்புடைய இலக்கியப் படைப்புகளே மதிநா, முஸ்லீம் முரசு இதழ்களில் வெளிவந்துள்ளன. இவற்றில் பெண்

விடுதலை, விதவை மணம், வரதட்சிணைக் கொடுமைபற்றிய கதைகளும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மேற்கண்ட ஆய்வுகள் மூலம் அறியப்பட்ட கருத்துக்களில் குறிப்பிடத்தக்கவை அவற்றில் இடம்பெறும் பட்டியல்கள்; கதை கவிதை, கட்டுரை பற்றிய பட்டியல்கள். இவற்றைவிட முக்கிய மானவை இதழ்கள் பற்றிய பட்டியல்; மதிநா இதழ்பற்றிய ஆய்வில் இசுலாம் சமயச் சார்பான தமிழ் இதழ்கள் 95 பற்றியும் - பிற பகுதியிலிருந்து வெளிவரும் 26 இதழ்கள் பற்றிய பட்டியலும் குறிப்பிடத்தக்கது. கொங்கு நாட்டு வேளாண்மை இதழ்பற்றிய ஆய்வில், 70 வேளாண்மை இதழ்கள் பற்றிய பட்டியல் இடம்பெறுகின்றது அதோடு அவர் 300 வேளாண்மை இதழ்கள் இருக்கின்றன என்றும் குறிப்படுகிறார்.

மேலும், 9, 10-11-1990இல் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறையும் சிறுபத்திரிகை இயக்கமும் இணைந்து நடத்திய 80களில் படைப்பிலக்கியக் கருத்தரங்கிற்கு வந்திருந்த பொள்ளாச்சி நசன் என்பவர் (ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றுபவர் - தமிழாசிரியர் அல்ல) 200 இலக்கிய இதழ்களைப் பார்வைக்காக வைத்திருந்தார். 938வகை இதழ்களைச் சேகரித்து வைத்துள்ளதாகவும் அவர்குறிப்பிட்டார், இவற்றில் 250, இலக்கிய இதழ்கள், கருத்தரங்கிற்கு வந்தபொழுது ஏறத்தாழ புதிய 20வகை இதழ்கள் அவருக்குக் கிடைத்தனவாகவும் குறிப்பிட்டார். ஆக ஏறத்தாழ 1000-க்கும் மேற்பட்ட இதழ்கள் தமிழில் வெளிவந்திருக்கின்றன என்பது தெரியவருகிறது. இவற்றில் 34 இதழ்கள் மட்டுமே இங்கு ஆராயப்பட்டுள்ளன. இதனால் இதழ்கள்பற்றிய ஆய்வுகள் இன்னும் எந்த அளவு வளரவேண்டும் என்ற உண்மை பெறப்படுகின்றது.

இணைப்பு—I

எம்.பில் ஆய்வேடுகள்

அ) மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

1 அச்சகத் தமிழ். ச. அங்கயற் கண்ணி, 1987.
2 அச்சகத் தமிழின் போக்கு 1960-க்குப்பின்
பே. ஞானசேகரன், 1988.
3 அமுதசுரபி (1986) இதழியல் பார்வை, ஜே. நிர்மலா, 1987.
4 அமுதசுரபி சிறுகதைகளில் காணப்படும் சமுதாயச் சிக்கல்கள், அ. இளங்கோ, 1987.

5 அழைப்பிதழ்கள் வாழ்த்து மடல்களில் அச்சகத் தமிழ், சு. இராமகிருஷ்ணன், 1988.

6 அழைப்பிதழ்களில் மொழி நடையும் அவை காட்டும் சமுதாய நிலையும்: க. முத்துவேல், 1987.

7 ஆனந்த விகடன் ஆசிரிய உரைகள்: மா. இராணி, 1988.

8 ஆனந்த விகடன்—ஓர் இதழியல் பார்வை: கே. பகவதி பெருமாள், 1986.

9 ஆனந்த விகடன்—குமுதத்தில் தலையங்கங்கள்: (1987 சூன் முதல் டிசம்பர் வரை)—இதழியல் பார்வை, எஸ். நளினகுமாரி, 1988.

10 ஆனந்த விகடன்—கல்கி இதழ்களில் தலையங்கங்கள் பழ. இராஜாராம், 1988.

11 ஆனந்த விகடன் சிறுகதைகளில் சமூக மதிப்புக்கள்: (1980-ஆம் ஆண்டு) பி. பார்வதி, 1981.

12 ஆனந்த விகடனில் புதிய ஆத்திசூடிக் கதைகள்—ஓர் ஆய்வு ப. முருகேசன், 1988.

13 ஆனந்த விகடனில் மகிழ்வித்தல் கூறுகள்: ஏ. முருகன், 1987.

14 ஆனந்த விகடனில் விளம்பரங்கள்: எஸ். மீனா, 1987.

15 இதயம் பேசுகிறது—உள்ளடக்கப் பகுப்பாய்வு: மு. நிர்மலா, 1988.

16 இராஜம் இதழ்களில் துணுக்குகள்: (1987-சனவரி முதல் டிசம்பர் வரை) இரா. சரோஜினிதேவி, 1988.

17 இரு தமிழ் நாளிதழ்களில் அறிவித்தல், அறிவூட்டல், மகிழ்வூட்டல்—ஒரு கண்ணோட்டம் (தினமணி & தினத்தந்தி) ஜா. அஞ்சலி சுலோச்சனா, 1981.

18 ஓம் சக்தி—ஓர் ஆய்வு (1985 சனவரி—டிசம்பர்) ப. செல்வராஜ் 1988.

19 கல்கண்டு—முத்தாரம் உள்ளடக்கப் பகுப்பாய்வு, அ. ஐயப்பன், 1989.

20 கல்கண்டு வார ஏடு (1986) பொருளாய்வு: மா. காளிமுத்து, 1989.

21 குங்குமம் இதழ்ச் சிறுகதைகள் (1986, ஓர் ஆய்வு, ஜா. எட்வின் ஜூலியஸ், 1987.

22 குமுதம் இதழ்ச் சிறுகதைகள் ஓர் ஆய்வு (1987 சூலை-டிசம்பர்) வே. இரவீந்திரநாத், 1988,

23 குமுதம் வார இதழ் விளம்பரங்கள் (1985-ஆம் ஆண்டு) ஓர் ஆய்வு, தே. அன்னக்கிளி, 1987.

24 குமுதம் (1987) விளம்பரத் தமிழ் ஓர் ஆய்வு, த. லாறன்ஸ், 1988.

25 சக்தி (1986) இதழியல் ஆய்வு, கா. சகாயஜோன் ஆப் ஆர்க், 1987

26 சிற்றூர் வானொலி கேட்குநர், மு. நடராசன், 1990

27 செந்தமிழ் இதழ்களில் கம்பராமாயணம் கட்டுரைகள்—ஓர் ஆய்வு, த. பரிமளம், 1990

28 செந்தமிழ் இதழ்த் திருக்குறள் கட்டுரைகள் —மதிப்பீடு, சு. முருகன், 1989

29 செந்தமிழ் இதழில் வெளிவந்த சிலப்பதிகாரக் கட்டுரைகள் ச. வடிவுடைநாயகி, 1989

30 செந்தமிழ்ச் செல்வி இதழில் திருக்குறள் கட்டுரைகள் மதிப்பீடு: கா. ர.ா. இந்துமதி. 1989

31 செந்தமிழ்ச் செல்வியில் பாவாணர் கட்டுரைகள், க. இலட்சுமணன், 1990

32 செம்மலர் இதழ்ச் சிறுகதைகள்—ஓர் ஆய்வு: (1985-ஆம் ஆண்டு) சி. பாத்திமா பிரேமா குமாரி, 1987

33 ஞான பூமி (1983) மாத இதழ் ஆய்வு: வி. வேணுகுமார், 1987

34 தமிழ் இதழ்களில் வாசகர் கடிதம், சு. மாலதி, 1989

35 தமிழ் இதழ் விளம்பரங்களில் சமுதாயத் தாக்கம் ஆ. ஆனந்தன், 1981

36 தமிழ் நாளிதழ்களில் முதற்பக்க ஒழுங்கமைப்பு முறை, மா. குமார். 1988

37 தமிழ் நாளிதழ்களில் வழக்கு விபத்துச் செய்திகள், மு. நூர்ஜஹான், 1981

38 தமிழ் வார இதழ்களில் துணுக்குகள், ச. வேம்புலு, 1980

39 தமிழில் சிறுவர் இதழ்கள்—ஓர் ஆய்வு, எம். சுப்புலக்குமி, 1980

40 திசை முத்துவின் துணுக்குகள்—ஓர் ஆய்வு: சி. ஆறுமுகம், 1987.

41 திராவிடர் கழகத்தின் தெருவோர வாசகங்கள், மா. செயபால், 1987

42 திருநெல்வேலி நகர்ப் பகுதியில் (டவுன்) அச்சகத்தமிழ் - ஓர் ஆய்வு, எஸ். பால்ராஜ், 1988

43 தினமணி இதழில் செய்தி மொழி பெயர்ப்பு, வே. சசிகலா, 1979

44 தினமணிக் கதிர் சிறுகதைகள் ஓர் ஆய்வு, இரா. கலைச் செல்வன், 1988

45 தினமணிச்சுடர் ஓர் ஆய்வு, இ. இசக்கியம்மாள், 1981

46 தினமணியில் தலையங்கம், நா. லலிதா, 1989

47 தினமணியில் மதிப்புரை, ஆ. நாகராஜன், 1990

48 தினமலர் நாளிதழ் இதழியல் பார்வை (1986 சூலை- டிசம்பர்), ஆர். விஜயகுமாரி, 1987

49 தினமலர் வாரமலர் சிறுகதைகளில் சமுதாயச் சிக்கல்கள் (1986 சூலை-டிசம்பர்), மா. மனோன்மணி, 1987

50 தினமலர் வாரமலர்த் துணுக்குகள், த. அனந்தபெருமாள், 1986

51 தொலைக்காட்சிச் செய்திகள், சீ. வள்ளியம்மை, 1989

52 நம் வாழ்வு—இதழியல் பார்வை, எஸ். சுலோசனா, 1980

53 நாளேடுகளில் செய்திப்புலப்பாடு, (தினமலர்-தினகரன் 1987 நெல்லை பதிப்பு), அ. வெலிங்டன் பிரான்சிஸ் பிரபாகர், 1983

54 பத்தாண்டுகளில் (1961-70) தாமரை இதழில் வெளிவந்த சிறுகதைகள்—ஒரு திறனாய்வு, மு. பழனி, 1985

55 பாரதிதாசன் குயில் இதழ்கள்—உள்ளடக்கப் பகுப்பாய்வு, ஏ. ஜெனார்த்தனம், 1988

56 பூந்தளிர் (1987) இதழியல் பார்வை, மா. கார்த்திகேயன், 1988

57 மக்கள் தகவல் தொடர்பியல் கலைச் சொற்களின் விளக்கமும் கலைச் சொல்லாக்கச் சிக்கல்களும், கோ. மணிவண்ணன், 1990

58 மக்கள் தகவல் தொடர்பில் வானொலி (மகளிர் நிகழ்ச்சிகள்), மு. இராமலெட்சுமி, 1988

59 மக்கள் தகவல் தொடர்பில் வானொலி (பண்ணை இல்ல ஒலி பரப்பு பிரிவு) இரா. ருக்மணி, 1988

60 மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்களில் வானொலி (இளைய பாரதம்), சு. சத்தீஸ்வரி, 1988

61 மங்கை—சுமங்கலி இதழ்களில் கட்டமைப்பும் உள்ளடக்கமும் ஓர் ஒப்பீடு, ப. பெரியசாமி, 1989

62 மங்கை மாத இதழ் (1986) இதழியல் பார்வை, இ. கீதா சார்லஸ், 1987

63 மங்கையர் மலர் இதழியல் பார்வை, இரா. முத்துசெல்வம், 1987

64 மங்கையர் மலர் சித்திரிக்கும் அலுவல் மகளிர் சிக்கல்கள், மு. சுப்பம்மாள், 1988

65 மங்கையர் மலரில் துணுக்குகள் (1986), ஜே. ஹீராபாய் சாந்த குமாரி, 1988

66 மதிநா (1983-1984) இதழியல் ஆய்வு, எம்.ஏ. சமது, 1986

67 மதுரை நகர வானொலி நேயர்கள், தி.சி இராச சேகரன், 1990

68 மதுரை வானொலி நாடகங்கள்—ஓர் ஆய்வு, உ. மனோன்மணி, 1989

69 மாலை முரசு நாளிதழ்—பன்முக வெளியீடு : இதழியல் ஆய்வு, டி. தமிழரசி, 1986

70 முஸ்லீம் முரசு (1987) இதழியல் ஆய்வு, பி. ஜெய்னாபால் பேகம், 1988

71 ராணி இதழ்ச் சிறுகதைகள் (1985) ஓர் ஆய்வு, கே. இராம நாடார், 1987

72 ராணி வார இதழில் மகிழ்வுக் கூறுகள், (1986 சூலை-டிசம்பர்) ஈ. டொனலிங்கம், 1988

73 வானொலிச் செய்தி அறிக்கை, கு. பரமேஸ்வரி, 1990

74 வானொலி தொலைக்காட்சி விளம்பரங்கள் ஒப்பீடு, இ. பொன்னுலட்சுமி, 1990

75 விளம்பரத் தமிழ்—கலைமகள், (1986 செப்டம்பர் - ஆகஸ்டு 1987) கா. சுப்பிரமணியன், 1988

76 விளம்பரத் தமிழ்—மங்கை (1987), ப. அல்போன்சான், 1988

77 ஜூனியர் விகடன் (1985) இதழியல் பார்வை, எஸ், இராமன், 1986

78 ஜூனியர் விகடன்—தினமணிக்கதிர் வார இதழ்களில் துணுக்குகள், (1987 சனவரி - சூன் 87) ஜாஸ்மின ஆசீர், 1988

79 ஜூனியர் விகடனில் சமுதாய உணர்வுகள், மா. ஞானம், 1986

80 ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயத்தில் ஆன்மீகச் சிந்தனைகள், (1986 சனவரி - டிசம்பர்) மு. அமலா, 1987

ஆ) சென்னைப் பல்கலைக் கழகம்

1 குடியரசு இதழ்க் கவிதைகள், கு.ரா. இளங்கோவன், 1984

2 தமிழியல் ஆய்வு வரலாறு—சென்னைக் கிறித்தவக் கல்லூரி இதழ், ச. ஸ்ரீமதி, 1990

இ) கேரளப் பல்கலைக் கழகம்

1 செல்வாக்குப் பெற்ற தமிழ் வார இதழ்களில் வாசகரைக் கவரும் காரணிகள். த. ஜெஸி ஆகனெஸ், 1982

ஈ. M. Phil — MADRAS UNIVERSITY MASS COMMUNI —CATION DEPT.

1. Doordarshan Kendra, Madras - A study, T. Premnath, 1984.

2. National Development through Electronic Media, V. S. Shitharthan, 1984.

3. 'Advertising through Radio' — A case study of the Commercial Broadcasting of All India Radio, Madras, N. Mathiyalagan, 1983.

4. Radio Broadcasting in India — A Study. Noor Ahmed khan Durrani, 1984.

5. Portrayal of women in Advertising in the print Media, D. Sumathy, 1984.

6. Public Relations in Insurance section - Life Insurance Corporation of India - A Study, P. Govindaraja, 1984.
7. Integrated use of Folk Media for Mass Communication Puppet Theatre - A Model. D. Boopathy, 1983.
8. Press information Bureau - Historical study, Suman Sharma, 1985.
9. Public Relations in Modern Society. S. Backiyarajan, 1984.
10. Evalution of some Major Determinant in Organizationa. Communication' - H. Ashazadha Abdulla khan, 1984.
11. The Economic viability of a Small Tamil Newspaper Fol Madurai District - A Study, S. Kalaivani, 1985.
12. Economics of District News papers, G. Ravindran, 1983r
13. Political propaganda in T. N., C. Asokan, 1986.
14. Position of women in Tamil Nadu - A Study, Chandrika, 1986
15 The Role of Communication in promoting Tourism in Tamil Nadu, W. B. Mala, 1986.
16 1984 Genaral Election as covered in 'India Today' - An Analysis, K. Palanisamy, 1986.
17. Organisational Communication, D. Ravindran, 1986

இணைப்பு II

பி. எச். டி ஆய்வேடுகள்

அ) மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்

1 எழுத்து இதழும் புதுக்கவிதை இயக்கமும், வள்ளியம்மாள், 1982.
2 குமுதத்தின் இதழியல் உத்திகள், தொ. மனோன்மணி, 1983.
3 தமிழ் இதழ்கள் (1979) காட்டும் நிலை, சசிரேகா, 1984.
4 தமிழ் இதழ்களில் மதிப்புகள், சு. தனரர்சு, 1980.
5 தினத் தந்தியின் இதழியில் உத்திகள், ஆ. சாந்தா, 1980.

ஆ) கேரளப் பல்கலைக் கழகம்

1 மாத இதழ் மஞ்சரி—ஓர் ஆய்வு, சு. இராமன், 1989.

இணைப்பு III

நூல்கள்

1 அச்சுக்கலை, ம.சு. சம்பந்தன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-1
2 இதழியல், இ. இராஜா, பாரித்திபன் பதிப்பகம், மதுரை, 1981

3 இதழியல், இரா. கோதண்டபாணி, கற்பகம் நூலகம், மதுரை, 1980

4 இதழியல் உத்திகள், எஸ். கலைவாணி, ஸ்ரீபராசக்தி வெளியீடு, குற்றாலம், 1982

5 இதழியல் ஓர் அறிமுகம், ஆ.பி. அந்தோணிராசு, ஆரோக்கியம் பதிப்பகம், திருச்சி-3.

6 இதழியல், நோக்கு, மா. ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1981

7 இதோ தமிழ் இதழ்கள், வீரமா முனிவர் தமிழ் ஆய்வுக் கழகம், இலயோலா கல்லூரி, சென்னை, 1972

8 இதோ தமிழ் இதழ்கள், வி. பி. ஞானப்பிரகாசம், உமா அச்சகம், திருநெல்வேலி, 1980

9 இதோ தமிழ் இதழ்கள், யூரிக & லேவ், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1984

10 இந்திய இதழ்கள், மா. சா. இளங்கோவன், பழனியப்பா பிரதாஸ், சென்னை 1980

11 ஒரு நாளிதழ் உருவாகிறது, ஆ. தமிழரசி, சங்கப்பலகை வெளியீடு, மதுரை, 1989

12 குடியரசு இதழ்களில் பாரதிதாசன் கவிதைகள், ச. சு. இளங்கோ, ஏரக வெளியீடு, மதுரை, 1982

13 செய்தி இதழ்களின் கதை, பி. வி. கிரி, கழக வெளியீடு, சென்னை, 1977

14 செய்தி உலகம், பழனி. அரங்கசாமி, முத்தமிழ் நிலையம், மதுரை, 1975

15 செய்திக்குப்பின் - பத்திரிகை இயல், எஸ். வேம்புஸ்வாமி தமிழ் எழுத்தாளர் கூட்டுறவு அச்சகம், சென்னை-5.

16 செய்திகள், எம். செல்லையா, ஏசியன் அச்சகம், சென்னை, 1978

17 தகவல்துறை ஏகாதிபத்தியம், யூரிக & லேவ், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 1981

18 தமிழ் இதழ்கள், சோமலெ, சென்னைப்பல்கலைக்கழகம், 1975.

19 தமிழ் இதழ்களில் சமுதாய உணர்வு, ஆ. சிவக்கண்ணன், பரணி அச்சகம், மதுரை, 1985

20 தமிழ்ப் பத்திரிகைகள், க. குளத்தூரான், கேரளப்பல்கலை கூட்டுறவு அச்சகம், திருவனந்தபுரம் 1975

21 தமிழ்ப் பத்திரிகைகள். க. பட்டபிராமன், அருணோதயம், சென்னை. 1982

22 தொலைக்காட்சி, எஸ். எஸ். ராமசாமி, ஜனசக்தி, சென்னை, 1987

23 தொலைக்காட்சிக் கலை, வெ. நல்லதம்பி, வள்ளுவர் வெளியீட்டகம், சென்னை, 1983

24 நாள் கிழமை திங்கள் இதழ்கள் - விளக்க வரிசை, இராமசாமிப் புலவர். கழக வெளியீடு, சென்னை 1961

25 பத்திரிகைக்குக் கதை கட்டுரை துணுக்கு எழுதுவது எப்படி? ரமணியன், பாரதி பதிப்பகம், சென்னை, 1984

26 பத்திரிகைத் தமிழ், தங்கமணியன், மாணிக்கப் பதிப்பகம், திருச்சி, 1978

27 பத்திரிகை மொழிநடை, தங்கமணியன்.

28 பதிப்புக்கலை, அ. வீநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம். மதுரை, 1979

29 பதிப்பு பார்வை, அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை, 1983

30 முதல் நாளிதழ்கள் மூன்று. மா. ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம், சென்னை, 1982

31 முற்காலத் தமிழ் இதழ்கள் ஓர் அறிமுகம், மா. ரா. இளங்கோவன், சேகர் பதிப்பகம். சென்னை, 1980

32 விளம்பரம், இரா. முத்தையன். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், திருச்சி, 1978

33 விளம்பரக் கலை, அ. விநாயகமூர்த்தி, பாலமுருகன் பதிப்பகம், மதுரை.

34 ஜனநாயகத்தில் பத்திரிகைப்பணி, ஏ. ஜி. வேங்கடாச்சாரி. இளங்கோ பதிப்பகம், சென்னை, 1967.

வானொலி-தொலைக்காட்சி

ந. கடிகாசலம்

ஆளுங்கட்சிச் சார்பாக பயன்படுத்தப்பட்டு வரும் வானொலியும் தொலைக்காட்சியும் இன்று ஆய்வுப் பொருளாகியிருப்பதில் வியப்பில்லை. ஆயினும் தமிழில் இதழியல் குறித்து பெருமளவில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பது போல வானொலி—தொலைக்காட்சி குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. தமிழ்மொழி வளர்ச்சிக்கு இவையிரண்டும் ஆற்றவேண்டிய அரும்பணி பற்றி எடுத்துக்கூறும் வகையில் ஆய்வு அமையலாம்.

முன்னுரை

மக்கள் தொடர்புச் சாதனங்களில் வானொலியும் தொலைக் காட்சியும் சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகின்றன. இந்தியா போன்ற மக்களாட்சி நாடுகளிலும் இவை அரசியல் நிலையில் சிறப்பான பங்கு வகிக்கின்றன. ஆளுங்கட்சிக்குச் சார்பாகப் பயன்படுத்தப்படும் வானொலி — தொலைக்காட்சியும் இன்று ஆய்வுப் பொருளாகியிருப்பதில் வியப்பில்லை. இத்துறையில் இதுவரை நடைபெற்றுள்ள நடைபெற்றுவரும் ஆய்வு, இனி ஆய்வு மேற்கொள்வதற்கான களங்கள், அவற்றுக்கான அணுகுமுறைகள் ஆகியவற்றை மிகச் சுருக்கமாக இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

நடைபெற்று வரும் ஆய்வு

தமிழில், இதழியல் குறித்த ஆய்வு பெருமளவில் மேற் கொள்ளப்படவில்லை. எனினும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி, பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் ஆகியவற்றில் வானொலி-தொலைக்காட்சி பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப் பிடத்தக்கது.

''தமிழ்ச் சமுதாயத்தில் இளைய பாரத நிகழ்ச்சிகளின் தாக்கம்'' எனும் தலைப்பில் பிஎச்.டி., பட்டத்திற்காக ஆய்வு

நடைபெற்று வருகிறது. சென்னை வானொலி நிலையத்தில் நிகழ்ச்சி நிர்வாகியாகப் பணியாற்றி வரும் திரு. ந. முருகன் (சேயோன்) இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார். பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தில் ஆய்வாளராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள இவர் சென்னை வானொலி நிலைய இளையபாரத நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பியிருக்கிறார்.

இளைஞர்களுக்கான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கென்று தனி அலைவரிசை ஒதுக்கியுள்ள வானொலி நிலையம் உலகிலேயே ஆல் இண்டியா ரேடியோ ஒன்றுதான், சென்னை, டெல்லி பம்பாய், காஷ்மீர் வானொலி நிலையங்களில் இளையபாரத நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகிறது.

சென்னைத் தொலைக்காட்சி நிலையம் தயாரித்து ஒளிபரப்பி வரும் நாடகங்கள் குறித்து மூவர் ஆய்வு செய்கின்றனர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஆய்வாளர் காவேரி தினகர்ராஜ், ''தொலைக்காட்சித் தமிழ் நாடகங்கள் (1989-90)'' எனும் தலைப்பில் பிஎச்.டி.. பட்டத்திற்காக ஆய்வு மேற்கொண்டுள்ளார். ஐந்து ஆண்டுகளில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களை இவர் ஆராய்ந்து வருகிறார்.

''தொலைக்காட்சி நாடகங்களில் குறியீடு'' எனும் தலைப்பில் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சென்னைத் தொலைக்காட்சி நிலையம் ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சிகளில் ஒன்றாக நாடகம் விளங்குகிறது. இதன் காரணமாகத்தான் தொலைக் காட்சி நாடகங்கள் பற்றி இருவர் ஆய்வு செய்யத் தொடங்கி யுள்ளனர் எனலாம்.

தொலைக்காட்சி நாடகங்கள் சமுதாயச் சிக்கல்களை எவ்வாறு அலசுகின்றன/அணுகுகின்றன என்பது காவேரியின் ஆய்வு அடிப்படை நோக்கம் ஆகும். வரதட்சணைக் கொடுமை பல நாடகங்களுக்குக் கருப்பொருளாக இருந்து வருகிறது. சமுதாயச் சிக்கல்களைத் தொலைக்காட்சி நாடகங்கள் பிரதி பலிக்கின்றனவா என்பது ஒரு கேள்வி. சில நாடகங்களைக் காணும்போது, இயற்றை எந்த அடிப்படையில் தேர்வு செய்தார் கள் என்று கேட்கத் தோன்றுகிறது.

'தொலைக்காட்சி நாடகங்களில் குறியீடு' பற்றி மதுரைக் காமராசர் பல்கலைக் கழக ஆய்வு பேசுகிறது.

வானொலி—தொலைக்காட்சி பற்றிய மேற்குறித்த ஆய்வு முடிவடையாத நிலையில் அவற்றை மதிப்பீடு செய்வதற்கில்லை.

ஆய்வுக் களங்கள்

ஆல் இண்டியா ரேடியோவைப் (ஆ. இ. ரே.) பொறுத்த அளவில், உள்நாட்டு ஒலிபரப்பு தவிர, தென்கிழக்கு ஆசிய நேயர்களுக்கான தமிழ் ஒலிபரப்பும் நடைபெறுகிறது. புதுதில்லியிலிருந்து இது ஒலிபரப்பாகிறது. பல நிகழ்ச்சிகளை ஆ.இ.ரே ஒலிபரப்பி வந்தாலும் நேயர்கள் விரும்பிக் கேட்கும் நிகழ்ச்சிகள் என்று இரண்டு/மூன்று நிகழ்ச்சிகளை மட்டுமே கூற இயலும். கோடிக் கணக்கில் செலவழித்து நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பினாலும் அனைத்து நிகழ்ச்சிகளுமே நேயர்களைக் கவர்ந்திழுப்பதாகக் கூறிவிடுவதற்கில்லை.

அரசாங்கத்தின் கட்டுப்பாடும் தலையீடும் இதற்கு முதன்மைக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. ''பிரசார் பாரதி'' மசோதா மூலம் ஒரு கழகம் நிறுவப்பட்டுத் தன்னாட்சி உரிமை வழங்கப் பட்டால் ஆ. இ. ரே. செயற்பாடு சிறந்து விளங்கக் கூடும்.

இந்நிலையில், வானொலி தொடர்பாக ஆய்வதற்குப் பின் வருவனவற்றைக் களங்களாகக் கருதலாம்:

1) ஆ.இ. ரேடியோவின் (தமிழ்ச்) செய்தி ஒலிபரப்பு—மொழி நடை—சமுதாயத் தாக்கம்
2) ஆ.இ. ரேடியோவில் திரை இசையின் செல்வாக்கு ; (திரைகானம். நேயர் விருப்பம் முதலியன)
3) மாவட்டச் செய்தி மடல்கள். நோக்கமும் பயனும்
4) ஆ.இ. ரேடியோவும் தேசிய ஒற்றுமையும்
5) ஆ.இ. ரேடியோவும் அரசியல் தலையீடும்
6) ஆ.இ. ரேடியோவின் இலக்கியப் பணி
7) ஆ. இ. ரேடியோவின் தொழிலாளர்க்கான நிகழ்ச்சி—ஒரு கண்ணோட்டம்
8) ஆ. இ. ரேடியோவும் பிற வானொலி நிலையங்களும்:
   அ) ஆ.இ.ரே & இலங்கை வானொலி
   ஆ) ஆ.இ.ரே & பீகிங் வானொலி
   இ) ஆ.இ.ரே & பிபிசியின் தமிழோசை
   ஈ) ஆ.இ.ரே & வெரித்தாசு வானொலி

வெளிநாட்டுக்கான ஒலிபரப்பினை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு அமையலாம். சில வெளிநாடுகளிலிருந்து தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன என்பது இந்தியாவில் இன்னும் பலருக்குத் தெரியவில்லை.

9) உலக வானொலி நிலையங்களில் ஆ. இ. ரேடியோவின் இடம்: தமிழ் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் பரந்துபட்ட தலைப் பாகத் தோன்றினாலும் ஆ. இ. ரே. பற்றிய உண்மையான மதிப்பீட்டுக்கு இது பெரிதும் துணை நிற்கும்.

10) ஆ.இ. ரேடியோவும் சமுதாய விழிப்புணர்வும்

11) ஆ.இ. ரேடியோவும் சிறுவர்க்கான நிகழ்ச்சிகளும்

12) ஆ.இ. ரேடியோவின் கல்வி ஒலிபரப்பு

13) ஆ.இ. ரேடியோவும் மகளிருக்கான நிகழ்ச்சிகளும்

14) ஆ.இ. ரேடியோவும் உரைச் சித்திரமும்

15) ஆ.இ. ரேடியோவின் மொழி பெயர்ப்புப் பணி,

இனி, தொலைக்காட்சி பற்றி மேற்கொள்ளக்கூடிய ஆய்வு :

1) தொலைக்காட்சி வழங்கும் செய்திகளின் மொழிநடை—மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்.

2) தமிழ் நாடக வரலாற்றில் தொலைக்காட்சி நாடகம் பெறுமிடம்

3) தொலைக்காட்சி நாடகங்களும் சமூகச் சிக்கல்களும்

4) தொலைக்காட்சியில் திரைப்படங்களின் செல்வாக்கு

5) தொலைக்காட்சியின் கல்விப்பணி

6) தொலைக்காட்சியின் இலக்கியத் தொண்டு

7) தொலைக்காட்சியும் அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகளும்

8) தொலைக்காட்சியின் மகளிர் மேம்பாட்டுப் பணி

9) பொழுதுபோக்குக் கருவிகளில் தொலைக்காட்சி பெறுமிடம்

10) தொலைக்காட்சியும் வேளாண்மை நிகழ்ச்சிகளும்

அணுகுமுறைகள்

வானொலி—தொலைக்காட்சி பற்றிய ஆய்வுக்குத் துணிச்சல் தேவைப்படுகிறது. நடுநிலைமை என்பது இவ்விரண்டிலும் அடிக்கடி காணாமல் போய்விடுவதால், உண்மையான மதிப்பீடாக ஆய்வின் போக்கு அமைவதற்கு ஆய்வாளர்கள் துணிந்து முன்வர வேண்டும்.

உலகில் மக்கள்தொகையில் இரண்டாமிடம் பெற்றுள்ள இந்தியா, ஒலிபரப்பு/ஒளிபரப்பில் முன்னணியில் இல்லை. அதிகார வர்க்கத் தலையீடும் அளவுக்கு மீறிய கட்டுப்பாடும் சுதந்திரமாகச் செயல்படவிடாமல் கலைஞர்கள் தொழில்நுட்ப வல்லுநர்களின் கரங்களில் கைவிலங்கினை மாட்டி விடுகின்றன.

பொது நிலையில், வானொலி—தொலைக்காட்சியின் நோக்கம் நிறைவேறுகிறதா, பயன் விளைகிறதா என்பதை அடிப்படையாகக் கொண்டு, எந்த ஒரு ஆய்வுத் தலைப்பையும் அணுகுதல் வேண்டும்.

ஒப்பீட்டு நிலையில் ஆய்வு மேற்கொள்ளலாம். பிபிசி ஒலி பரப்பும் ஒளிபரப்பும் முன்மாதிரியாக அமைகின்றன. அவற்றோடு இந்திய வானொலி—தொலைக்காட்சி நிலையங்களின் செயற் பாட்டை ஒப்பிட்டு ஆராயலாம்.

களப்பணி என்ற நிலையில், நிகழ்ச்சி ஒலி/ஒளிபரப்பாகும் பகுதிகளில் வசிக்கும் நேயர்களை நேரில் கண்டு உரையாடி, அவர் களிடமிருந்து பெறும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வுப் போக்கை அமைத்துக் கொள்ளலாம்.

ஒலி/ஒளிபரப்பின் எதிர்காலச் செம்மைக்கான வழிமுறை களைத் திட்டவட்டமாக வெளிப்படுத்தும் வகையில் ஆய்வுத் தலைப்பை அணுகலாம்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு இவையிரண்டும் பொதுநிலையில் ஆற்ற வேண்டிய அரும்பணி/தொண்டு பற்றி எடுத்துக்கூறும் வகையில் ஆய்வு அமையலாம்.

ஆற்றல் மிக்க இவ்விரண்டு மக்கள் தொடர்புக் கருவி களும் மக்களுக்குத் தொல்லை தராத கருவிகளாக மாறுவதற் கான வழிவகைகளைத் திட்டவட்டமாக எடுத்துரைக்க ஆய்வாளர் தயங்கவே கூடாது. இவற்றின் சில நிகழ்ச்சிகள், விழலுக்கு இறைத்த நீராக இருப்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறவேண்டும்.

சீனாவில், ஒரு விளையாட்டுப் போட்டியை நேரடியாக ஒலி/ ஒளி பரப்பும்போது சீனமொழியில் ஆங்கிலக் கலப்பின்றி வர்ணனை செய்கின்றனர். தமிழில் இவ்வாறு முழுமையாக நிறைவு தரும் வகையில் செய்ய இயலவில்லையே? 'தமிழால் முடியும்' என்று பேசுவதால் பயனில்லை. இவ்விரண்டு கருவிகளும் இத்துறையில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கான துறைச் சொற்களை உருவாக்க வேண்டியது நமது முதற் கடமையாகும்.

முடிவுரை

இன்று இலக்கணம், இலக்கியம் என்றில்லாமல் பல்வேறு புதுப்புதுத் தலைப்புகளில் தமிழில் எம்.ஃபில்/பிஎச்.டி, பட்டங்களுக் காக ஆய்வு மேற்கொள்ளப்படுவது மகிழ்ச்சிக்கு உரியது. வானொலி—தொலைக்காட்சி பற்றியும் மேலும் பல ஆய்வு நிகழ வேண்டும் என்பது இன்றைய நிலையில் மிக இன்றியமையாது தேவைப்படுகிறது.

சைவத் திருமடங்கள்

பழ. முத்தப்பன்

சைவத்திருமடங்கள் பொதுமக்களோடு நெருங்கிய தொடர்புடையன வாகும். மொழிக்கும் சமயத்திற்கும் பெரிதும் தொண்டாற்றி வருகின்றன. சைவத் திருமடங்கள் பற்றிய ஆய்வுகள் மிகச் சிலவே நடைபெற்றுள்ளன. பெருமளவில் ஆய்வுகள் நிகழுமேயானால் தமிழக வரலாற்றின் சில சிறப்புச் செய்திகள் வெளிச்சத்திற்கு வரும். சிறு சிறு மடங்களை ஒன்று சேர்த்து காலவரையறை, சமய அமைப்பு வட்டார அமைப்பு, வழிபாட்டுமுறை அமைப்பு எனப் பலவாறாக ஆய்வுகள் செய்யப்பெறலாம்.

தமிழ் இலக்கிய, இலக்கண, சிறுகதை, நாவல்களில் ஆய்வு செய்வதும், ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதும் இன்றைய தமிழ் உலகில் பல்கிப் பெருகியுள்ளன. இந்நிலையில் மக்கள் தொடர் புடைத் துறைகளில் எதிர்வரும் ஆய்வுகள் நிகழுமானால் மானிட வாழ்வியலுக்குப் பயன் கிட்டும். இலக்கிய ஆய்வுகள் மொழி வளர்ச்சிக்குத் துணை செய்வதுபோல், மக்கள் தொடர்புத்துறை ஆய்வுகள் வரலாற்றிற்கும்—மக்கள் வாழ்வியல் வளமைக்கும்—நாகரிகப் பரிமாற்றத்திற்கும் துணை செய்யும் என்பது உறுதி.

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கும் நிலையில்—மக்கள் ஒன்று கூடிப் பழகுவதற்கு வாய்ப்பளிக்கும் துறைகளில் தமிழ் நிறுவனங்கள், சமயத் திருமடங் கள், விளம்பரத் துறைகள், பொதுநலத் தொண்டு நிறுவனங்கள், குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. இவற்றில் சைவத் திரு மடங்கள் பொது மக்களோடு நெருங்கிய தொடர்புடையனவாகும். ஒரு குறிப்பிட்ட திருமடத்தில்—குறிப்பிட்ட சமயச் சார்புடைய வர் ஒன்று கூடி—அத்திருமடத் தலைவரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டு, அவரைப் போற்றி வணங்கி வாழத் தலைப்படு கின்றனர். அங்குச் சமயம் என்ற ஒன்று பலதரப்பட்ட மக்களை

பொருளாதார ஏற்றத் தாழ்வுக்கு அப்பால் திருமடங்களில் கூட்டு விக்கின்றன. தமிழகத் திருமடங்கள் மக்கள் கூடிட இந்நிலையில் பெரிதும் பணிசெய்கின்றன.

மடம் என்ற சொல் தொடக்கத்தில் துறவி ஒருவரின் குடிலைக் குறித்துப் பின்னர் பலர் வாழும் இடத்தைக் குறிக்கத் தலைப் பட்டது. ஒருமையுணர்வு பெற்று உயர்நிலை பெறமுயன்ற அருளாளர் தொடக்க காலத்தில் மலைக் குகையில் வாழ்ந்தனர். அத்தகைய துறவியரின் அருள்நலம் கண்டும், ஆற்றல் கண்டு வியந்தும் துறவியர் பெற்ற அருள் நலத்தைத் தாமும் பெறவேண்டி, அத்துறவியரைச் சார்ந்து வாழத் தலைப்பட்டோர் குகையை அடுத்து வாழத் தலைப்பட்டனர். குகையை/மலையை அடுத் துள்ள பகுதிகளில் தழை முதலியவற்றால் வேயப்பட்ட குடிலை அமைத்து அவற்றிற்குப் பர்ணசாலை எனப் பெயரிட்டு வாழ்ந்தனர். இப்பர்ணசாலைகள் காலப்போக்கில் கட்டிடக் கலை வளர்ச்சியைப் பெற்று மடங்களாக எழிலுற்றன. இலக்கியங் களில் இத்துறவியர் இருக்கைகள் அறவோர் பள்ளியாகவும் குறிக்கப்பெற்றன.[1]

மடம் என்ற சொல்லுக்கு முனிவர் வாழிடம் என்று நிகண்டு நூலாகிய பிங்கலம் குறிப்பிடுகிறது. செந்நைப் பல்கலைக் கழகப் பேரகராதி நைஷ்டிக பிரம்மச்சாரிகளும், சந்நியாசிகளும் ஆகிய ஆசாரியர் வாழுமிடம் என்று குறிப்பிடுகிறது. தமிழ்க் கலைக் களஞ்சியம் "ஆதியில் மடம் என்பது துறவி ஒருவரின் குடில் என்றே பொருள் பட்டது. பின்னர் பல துறவிகளின் குடில்கள் கூட்டத்தைக் குறிப்பதாயிற்று. சாகுந்தல நாடகத்தில் கண்ணுவ முனிவரின் ஆச்சிரமம் அத்தகையது. நாளடைவில் பல துறவிகள் ஒன்று சேர்ந்து வாழும் இடம் மடம் என்பதாக ஆயிற்று" எனக் குறிக்கிறது. இத்தகைய விளக்கங்களைக் கொண்டு பார்க்கும் போது மடம் என்ற சொல் துறவியரும் அவரைச் சார்ந்து ஒழுகும் சீடரும் வாழுகின்ற இடம் என்ற பொருளுடையது என்று கொள்வது பொருத்தமுடையதே ஆகும்.

திருமூலர் காலந்தொட்டு தமிழகத்தில் திருமடங்கள் நிலவியதை வரலாறு நமக்குத் தருகிறது. திருமூலர் காலத்தில் ஏழுமடங்கள் இருந்ததும் திருமந்திரத்தால் அறிய முடிகிறது.[2]

---

1. சிலப்பதிகாரம், 5-20,
2. திருமந்திரம், குருமட வரலாறு, பாடல். 101

சமயாச்சாரியரும், சந்தானாசாரியரும் தமிழகத்தில் தோன்றிய பின்னர் சைவத் திருமடங்கள் தமிழகத்தில் பல்கிப் பெருகின. சைவத் திருமடங்கள்போல் வைணவத் திருமடங்கள், சமணத் திருமடங்கள் அவ்வக் காலத்தில் தோன்றித் தமிழக மக்களை ஒன்று கூட்டின. இத்தகைய சமய மடங்களில் சைவத் திருமடங்களைப் பற்றிய ஆய்வுகளைச் சுருக்கித் தருவது இக்கட்டுரையின் நோக்கம்.

சைவத் திருமடங்கள்

''பல்லவர் காலத்தில் மடங்கள் சில இருந்து சமயக் கல்வியையும் ஒழுக்கக் கல்வியையும் மக்களுக்கு அளித்தன. அடியார்கள் தங்கும் இடங்களாக உதவின. அறச்சாலைகளாகவும் இருந்தன''.[3] பல்லவர் காலத்திற்குப் பிறகு சோழர் காலத்தில் மடங்கள் மிகப் பலவாகப் பெருகின. இறைவன் பெயரால், மன்னர்கள் பெயரால், சைவமடங்கள் விளங்கின. இவையுடன் சமய முனிவர்களாம் ஆசாரியர்கள் பெயரால் பல மடங்கள் விளங்கின. பல்லவர் காலத்தில் தோற்றம் கொண்டு, பிற்காலச் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் பல்கிப் பெருகிவளர்ந்த சைவத் திருமடங்கள், பிற இனத்தார், பிற சமயத்தார் ஆட்சிகளால் அவைகளின் மேலாண்மை குறையத் தொடங்கின. கி.பி. 13க்குப் பின் சைவ சமய சந்தானாசாரியாரின் தோற்றத்தால் மீண்டும் சைவத் திருமடங்கள் எழுச்சி பெறலாயின. திருக்கயிலாய மரபு மெய்கண்டாரால் தோற்றுவிக்கப்பட்டது. சைவத் திருமடங்களின் ஆட்சித் தமிழர்க்கு உரியதாயிற்று. திருவாவடுதுறை ஆதீனம், தருமையாதீனம் உள்ளிட்ட சைவத் திருமடங்கள் சிறப்புற்று விளங்கின. மடங்கள்—ஆதீனம் என்ற சொல்லால் வழங்கப் பெற்றன. ஆதீனம் என்ற வடசொல்லிற்குப் பொருள் 'உரிமை' என்பதாம். வடமொழி தமிழ்த்திரு மடங்களில் ஆதிக்கம் பெற மடங்கள் ஆதீனங்களாகின. கி.பி. 16க்குப் பிறகு இத்தகு ஆதீனங்கள் பெருமை பெறலாயின.

இத்தகைய சமய நிலையங்கள் சமூகப் பணிகளை இயற்றிடும் பெரிய சமூக நிலையங்களாகத் திகழ்ந்தன. மொழிக்கும், சமயத்திற்கும் தொண்டு செய்யும் முகத்தான் செந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தும், புதியவற்றைத் தோற்றம் பெறச் செய்தும், தமிழ்ப் பேரறிஞர்களைப் புரந்தும், கலைக்கு

3. சைவசமய வளர்ச்சி; மா. இராசமாணிக்கனார். ஔவை நூலகம், சென்னை, 1958; ப. 215.

ஏற்றம் தரத் திருக்கோவில்களைக் கட்டுவித்தும் இசைத் தேரறிஞர்களைக் காத்தும் வந்தன, வருகின்றன.

இதுவரை நிகழ்ந்த ஆய்வுகள்

மக்களுடன் தொடர்பு கொண்ட திருமடங்களில் சைவத் திருமடங்கள் பற்றிய ஆய்வுகள் மிகச் சிலவே நடைபெற்றுள்ளன.

1. திருவாவடுதுறை ஆதீனத்தின் சமய இலக்கியப் பணிகள்
   —கு. சுந்தரமூர்த்தி, 1982
2. தருமபுர ஆதீனமும் தமிழும்.
   —இரா. செல்வக்கணபதி, 1984
3. சமய மொழி வளர்ச்சியில் காசிமடத்தின் பங்கு.
   —மு. சிவச்சந்திரன், 1984

இம்மூன்று ஆய்வுகளும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அளிக்கப் பெற்றுப் பட்டம் பெற்றுள்ளன. திருக்கயிலாய பரம்பரையின் திருவாவடுதுறை ஆதீனம் மூத்த ஆதீனம் எனக் கருதுவது சைவ சமய மரபாகும். அம்மரபிற்கேற்பவே திருமடங்கள் பற்றிய ஆய்வுகளில் முதன் முதல் ஆய்வாக அவ்வாதீன சமய இலக்கியப் பணிகள் பற்றிய ஆய்வு நடந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பின்னர் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய தருமபுர ஆதீனத்தின் ஆய்வும், அதன் பின்னர் தருமபுர ஆதீனத்தின் சீடர்களைத் தலைமையாகக் கொண்டு 17ஆம் நூற்றாண்டில் தோற்றம் கொண்ட திருப்பனந்தாள் காசிமடம் பற்றிய ஆய்வும் நடைபெற்றுள்ளமை இயல்பாகவே சைவ மரபிற்கேற்பவே அமைந்து விளங்குகிறது.

வெளிவந்த ஆய்வுகள் பற்றிய சிறு அறிமுகம்

கு. சுந்தரமூர்த்தி ஆய்வு செய்த திருவாவடுதுறை ஆதீனத்தின் சமய இலக்கியப் பணிகள் என்ற ஆய்வேடு — திருமடங்களின் தோற்றமும் வளர்ச்சியும், திருமடங்கள் தோன்றிய காலத்திலிருந்த பின்னணிச் சூழல், திருவாவடுதுறை ஆதீனத்தின் தோற்றமும் வளர்ச்சியும், திருக்கயிலாய மரபு, ஆதீனக் குரு முதல்வர்கள், ஆதீன அடியவர்கள், ஆதீனப் புலவர்கள், ஆதீனத் திருக்கோயில்கள், ஆதீனச் சமயப் பணிகள், இலக்கியப் பணிகள் என்னும் பத்து இயல்களைக் கொண்டு விளங்குகிறது. இவ்வாய்வேட்டில் திருமடங்களின் தோற்றம் தெளிவாக விளக்கப் பெற்று ஆய்வு ஏடு என்பதனை மெய்ப்பிக்கிறது. தமிழக அரசியல் மாற்றங்களால் தமிழர்க்குரிய சமய உணர்வு, மொழி, பண்பாடு

முதலியவை குலைந்திருந்த காலத்தில் திருக்கயிலாய மரபு தோன்றியதை ஆய்வாளர் தெளிவாக இரண்டாவது இயலில் விளக்கியுள்ளார். இலக்கிய வரலாறு மொழி வளர்ச்சியை எவ்வாறு வரையறுத்துக் காட்டுமோ—அதுபோலத் திருக்கயிலாய மரபும், திருவாவடுதுறை ஆதீனம், அதன் கிளை மடங்கள் ஆகியவை ஆய்வாளரால் விவரிக்கப் பெற்று—சைவசமய வளர்ச்சி வரையறுத்துக் காட்டப் பெற்று—நான்காவது இயலில் ஆய்வுச் சிக்கல்கள் தெளிவாக்கப் பெற்றுள்ளன.

சமுதாயம், சமயம் இரண்டும் இணம்பிரிந்து காணப்படுவதல்ல. ஒன்றில் ஒன்று இணைந்துள்ளது என்பதில் இரண்டு கருத்து இருக்க இயலாது. இக்கருத்தை நடைமுறையில் நிகழ்த்திக் காட்டுவது திருமடச் செயல்முறைகள். திருவாவடுதுறை ஆதீன வளர்ச்சியில் சமுதாய அடியார்கள், தொண்டர்கள், பங்குபெற்று, திருமடத்தின் நிர்வாகத்தையும், சமயப் பணியையும் வளர்த்தமையை ஆய்வாளர் ஆறாவது இயலில் விளக்கி—சமய சமுதாய வரலாற்றைத் தந்துள்ளார். புலமைவாய்ந்தோர் தனித்தனியே வாழ்ந்து தம் பணிகளைச் செய்யும் பொழுது இலக்கியம் உருவாகிறது. அத்தகைய தனித்து வாழும் புலவர்களை ஒன்று சேர்த்து இலக்கியப் பணி செய்து வந்த தொன்மைத் தமிழ்ச் சங்கங்கள் போல, திருவாவடுதுறை ஆதீனம் சமயப் புலவரையும், தமிழ்ச் சான்றோரையும் ஒருங்கு கூட்டி ஆதரித்துக் காத்து வளர்த்தமையையும், சமயப் பணியில் மற்றொரு பகுதியான திருக்கோயில் கட்டிய பணியில் கலைகளை வளர்த்தமையையும் ஆசிரியர் ஏழு எட்டு இயல்களில் குறிப்பிட்டுத் தமிழ் வரலாற்றிற்குத் துணைபுரிந்துள்ளார். இப்பகுதியில் ஆய்வாளர் தமிழ்ப் புலவர் வரலாற்றில் இடம் பெறாது—குடத்தில் இட்ட விளக்காய்விளங்கிய சிறு சிறு புலவரை, சைவத் தொண்டரைக் குறித்திருப்பது ஆய்விற்கு முழுமை தருகிறது.

இறுதி இரண்டு இயல்களில் ஆதீன வரலாறு—தெளிவாக சமயப்பணி, இலக்கியப்பணி என்ற இரு அமைப்புகளால் அமைக்கப் பெற்று—வளரும் ஆய்வாளர்க்கு வழிகாட்டியாகவும், அதே நேரத்தில் : எடுத்துக்கொண்ட ஆய்வுக்குரிய செய்திகளைத் தந்திட்ட முயற்சியாகவும் விளங்குகின்றன. ஆய்வு ஏட்டினைப் பற்றிய கருத்து என்று உரைக்கும்போது, இவ்வாய்வேடு ஒரு சமய நிறுவனத்தின் வரலாற்றைத் தெளிவாகத் தருகின்றது என்ற மதிப்பீட்டைப் பெறுகிறது எனலாம்.

தருமபுர ஆதீனமும் தமிழும்

இரா. செல்வக்கணபதி ஆய்வேடு முன் ஆய்வேடு போலத் திருமடவரலாற்று ஆய்வாகவே திகழ்கிறது. இவ்வாய்வேடு தருமையாதீன வரலாற்றையும், அதன் தமிழ் வளர்ச்சிப் பணிகளையும் முழுமையான நோக்கில் ஆராய முற்பட்டிருக்கிறது. ஆய்வின் முதல் இதழில் சமண, பௌத்தத் திருமடங்கள் பற்றிய செய்திகளை ஆய்வாளர் தந்துள்ளமையும், சமயப் போராட்டங்கள், சமயத்தில் சாதிப் போராட்டங்கள், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றைத் தந்துள்ளமையும் முன் ஆய்வேட்டிலிருந்து ஆய்வு வளர்ந்துள்ளமையைக் காட்டுகிறது. ஆய்வு முடிபுகள் ஒரே மாதிரியாக அமைவதில்லை. அது மட்டுமல்லாது, ஆய்வு செய்யப்பட்ட ஒருபொருள் மற்றொரு ஆய்வில் வளர்ச்சியைப் பெறும் என்ற அமைப்பை—கு. சுந்தரமூர்த்தியின் ஆய்விலிருந்து—செல்வக் கணபதியின் இவ்வாய்வு வளர்ந்து—ஆய்வு வளர்ச்சிப் போக்கை நிலைநாட்டுகிறது.

அடுத்து தருமபுர ஆதீனம், ஆதீனக் குருபரம்பரை வரலாறு, ஆதீன அருள்நூல்கள், ஆதீனப் புலவர்கள், தமிழ் வளர்ச்சிப் பணிகள், ஆதீனத் திருக்கோயில்கள் என்ற பகுப்பில் இவ்வாய்வேடு அமைந்து விளங்குகிறது.

"ஆய்வு என்ற சொல்லின் அழகும் அகலமும் எல்லாத் துறைகளிலும் ஒரேமாதிரி இருப்பதில்லை ஆய்வு என்ற சொல்லைச் சமயத் துறையில் பயன்படுத்தும்போது அதன் எல்லைகள் வேறு, ஒருசில நம்பிக்கைகளை ஆய்வுக்கு அப்பாற்பட்டதாக வைத்து அதற்குமேல் ஆய்வு செய்வதுதான் சமயத்துறையில் ஒன்று"[4]; என்ற கூற்றிற்கேற்பத் தருமை ஆதீன நிறுவனராகிய குருஞான சம்பந்தரின் வாழ்வியல் நிகழ்ச்சிகளை நம்பிக்கை அடிப்படையில் இரண்டாவது இயலில் ஆய்வாளர் தந்துள்ளார். இந்நிகழ்ச்சிகளை நிறுவுவதற்குக் குருஞான சம்பந்தரின் இலக்கியச் சான்றுகளை—அகச் சான்றாகக் காட்டி ஆய்வாளர் சமய நம்பிக்கையை வலியுறுத்துவது ஆய்வுமுறையைக் காட்டுகிறது. ஆதீனத் தலைவரின் வரலாறுகளைத் தரும்போது, அவ்வப் பெரியாரின் அருளிச் செயல்களைத் தந்து செல்கிறார். அவை இலக்கியச் சான்றுகளாலும்—பட்டயச் செய்திகளாலும் நிறுவப்படும்போது ஆய்வாளரின் இலக்கியப் பயிற்சி நன்கு வெளிப்படுகிறது.

---

4. வ.செ. குழந்தைசாமி, ஆராய்ச்சி நெறிமுறைகள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1975, ப. 53, 54.

அறிவியல், பிறதுறை ஆய்வுகள் போல, தமிழ் ஆய்வு முடிவுகள் செய்முறைப் பயிற்சியால் வெளிப்படுத்த இயலாது. இலக்கியச் சான்றுகளால்தான் முடிவை நிலைநாட்ட முடியும் என்பதை இவ்வாய்வேட்டால் நன்கு அறியமுடிகிறது. எடுத்துக்காட்டாகத் திருமடத்தின் பதினான்காவது தலைவரைப் பற்றி எழுதும்போது, மழை பெய்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதைச் சுட்டலாம். பிற சமயம் சார்ந்த அதிகாரி நகையாடிட—அந்நகையாட்டத்தை வருத்தமாக்க ஆதீனத் தலைவர் பாடல்பாட மழை பெய்தது என்ற செய்திக்கு—ஆதீனத் தலைவரின் அற்புத நிகழ்ச்சிகளுக்குக் கிடைத்த இலக்கியச் செய்தியைச் சான்றாக்கி ஆய்வாளர் தம் கருத்தை நிலைநாட்டுகிறார்.

முன் ஆய்வுபோல இந்த ஆய்விலும், சமய, இலக்கிய வரலாறுகள் தரப்பெற்றுள்ளன. 'பண்டாரச் சாத்திரங்கள்' என்ற சமய இலக்கியத் தொகை பற்றிய விரிவான செய்தியும், ஆதீனத் தமிழ்ப் பணிபற்றிய செய்தியும் நல்ல தொகுப்பு நிலையைக் காட்டுகின்றன. பொதுவாக இவ்வாய்வேட்டின் மதிப்பு என்று கருதும்பொழுது, இவ்வாய்வேடு ஆதீனங்கள் எத்தகைய பணிகளைச் செய்தால் வரலாற்றில் இடம் பெறலாம் என்பதை நிறுவுகிறது எனலாம்.

சமய மொழி வளர்ச்சியில் காசிமடத்தின் பங்கு

மு. சிவச்சந்திரன் ஆய்வேடு திருப்பனந்தாள் மடத்தின் தொண்டுகளைப் பற்றிய ஆய்வாகும். இவ்வாய்வேடு முன் இரு ஆய்வேடுகளைப் பின்பற்றியே அமைந்திருக்கிறது. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய காசிமடம், இந்நாள்வரை செய்துள்ள அரும் பணிகளைப் பற்றிய தன் ஆய்வு எண்ணங்களை ஆய்வாளர் ஐந்து இயல்களில் தந்துள்ளார். இவ்வாய்வு ஒரு தனிப்பட்ட சைவ நிறுவனத்தைப் பற்றியதாக அமைந்தாலும் பெரும்பகுதி 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமய இலக்கியப் பணியாளர் குமரகுருபரரின் வாழ்வியல் ஆய்வேடு என்றே கூறலாம். இயல் இரண்டில் குமரகுருபரர் வரலாறும், இயல் நான்கில் அவரின் இலக்கியப் பணியும் விரிவாகத் தரப் பெற்றுள்ளன. இவ்வாய்வேட்டின் சிறப்பு—ஒருசீடர் மடம் என்ற அளவில் தருமபுர ஆதீனத்தின் சீடர் ஆகிய காசிமடம் தன் குருபீடத்தின் அளவிற்கு அதன் வழியில் பெரிய ஆதீனம் போல் பணிகள் செய்து தமிழகம் போற்றும் வண்ணம் செயல்படுகிறது என்பதை ஆய்வாளர் இறுதி

இயலில் நிலைநாட்ட முயன்றிருப்பதாகும். இவ்வாய்வேட்டை மதிப்பீடு செய்யும் பொழுது—குமரகுருபரரின் வழியில்—ஒரு சமய இலக்கியவாதியின் வழியில் சமயத்திருமடம் எத்தகைய பணி செய்ய இயலும் என்பதை நிறுவுகிறது என்ற அளவில் சிறப்புப் பெறுகிறது.

ஆய்வுச் சிக்கல்கள்

சமய நிறுவனங்கள் பற்றி ஆய்வு செய்யும் பொழுது சிக்கல்கள் பல எழத்தான் செய்யும் என்பது வெளிப்படை. முதல் சிக்கல் நிறுவனத்தின் தோற்றம் மானிடரால் நிகழ்ந்தது என்றாலும் இறைவனோடு தொடர்புடுத்தி வழக்கில் குறிப்பிடப் பெறும். ஆய்வாளர் இந்த இடத்தில் இச்செவிவழிச் செய்தியை எத்தகைய ஆதாரம் கொண்டு நிறுவுவது என்ற சிக்கலுக்கு உறுதியாக ஆளாவார். எடுத்துக்காட்டாகத் தருமை ஆதீனம் திருக்கயிலாயப் பரம்பரை என்பது மரபு வழியாகும். ஆதீனத் தலைவர்களைக் குறிக்கும் பொழுதெல்லாம் திருக்கயிலாய பரம்பரை என்ற அடை யிட்டுத்தான் வழங்குதல் வேண்டும். அத்தகு நிலையில் திருக் கயிலாய பரம்பரை — சிவபெருமானிடத்திலிருந்து — நந்தியம் பெருமான், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் என்ற அகச்சந்தான குரவர்களிடம் வளர்ந்து- பின்னர் மண்ணுலகில் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மெய் கண்டாரிடம் இடம் கொள்கிறது. மெய்கண்டாருக்குப் பின் மண்ணுலகச் சமய முனிவர்களாம் புறச்சந்தான குரவர்பால் திரு மடமரபு இடம் பெறுகிறது. இங்கு ஆய்வாளனுக்கு மெய்கண்டார் தான் சைவத் திருமடங்களுக்குத் தலைமையானவர் என்று நிறுவுவ தற்கு ஆவல் என்றாலும்—சமய மரபாகிய இறைவனிடத்திலிருந்து காட்டவேண்டும் என்பதை மீறக்கூடாது என்ற நிலைக்குத் தள்ளப் பட்டு—நிறுவமுடியாத ஆய்வு முடிவைக்கூற வேண்டிய சிக்கல் ஏற்பட்டுவிடுகிறது.

அடுத்து மண்ணுலகில் வாழ்ந்த திருமடமுனிவர் வாழ்வியல் அற்புதங்களைத் தம் ஆய்வில் ஆய்வாளன் குறிப்பிடவில்லை என்றால்—சமய உலகினர் அவ்வாயவை ஏளனம் செய்வதோடு, ஆய்வாளனைச் சமயமரபிற்கு எதிரானவன் என வண்ணம் பூசி, அவனைப் புறமாக்கி விடுகின்றனர். எனவே ஆய்வாளன் இலக்கிய நிகழ்வுகளில் காணப்பெறுகின்ற இயற்கை இறந்த நிகழ்ச்சிகளைப் போல—திருமட ஆய்வுகளில் அற்புத நிகழ்ச்சிகளைக் குறித்து— அவற்றைத் தள்ளவும் முடியாமல் நிறுவவும் முடியாமல் தடுமாறு உளத்தன் ஆகின்றான்.

அடுத்து, திருமட ஆய்வுகளில் ஒரு ஆதீனத்தைப் பற்றி ஆய்வு நிகழ்த்தும்போது மற்றொரு ஆதீனத்தைப் பற்றிக் குறிப்பிடவோ-ஒப்பிடவோ முடியாமல் தவிக்கும் நிலை ஏற்படுவதும் உண்டு. நாம் எடுத்துக் காட்டிய மூன்று ஆய்வுகளில் அவ்வப் ஆதீனத்தின் செய்திகள்தான்—தரப் பெற்றுள்ளனவே அன்றி—பிற ஆதீனத்தின் பணிகள் இடம் பெறவோ—ஒப்பிடப் படவோ இல்லை. ஏனெனின் ஒரு ஆதீனத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஆய்வாளன் பிற ஆதீனத்தைக் குறிப்பிட்டால் எந்த விதத்திலும் குறிப்பிட்ட பிற ஆதீனத்தின் பார்வைக்கு - கண்டனத்திற்கு ஆளாகி விடுகின்றான்.

இத்தகைய சிக்கல்களிலிருந்து ஆய்வாளன் விடுபடவேண்டுமானால் - ஆதீனத் தலைவர்கள் ஆய்வாளனுக்குக் கருத்து உரிமை வழங்கவேண்டும். சமய அறிஞர் உண்மை நிகழ்வுகளை - ஆதாரம் கிடைத்த நிகழ்வுகளை - ஆய்வாளன் கூறும் போது - கண்டனக்குரல்கள் எழுமானால், ஆய்வாளனின் உண்மை நிலையை உலகிற்கு எடுத்துக்காட்டி - ஆய்வாளனைக் காத்தல் வேண்டும். ஆய்வாளனும் தன் கருத்துக்களின் வன்மையைக் கருத்தில் கொண்ட பிற ஆய்வாளரைப் போலத் துணிவுடையனாய் விளங்குதல் வேண்டும்.

எதிர்பார்க்கும் ஆய்வுகள்

சைவத் திருமடங்களைப் பொறுத்தவரையில் தலைமை/பெரிய திருமடங்களைப் பற்றி ஆய்வுகள் செய்யப் பெற்றுள்ளன. சைவத் திருமடங்கள் பதினெட்டு, அதில் ஆய்வு செய்யப் பெற்றவை தவிர-காஞ்சிபுரம் ஆதீனம், சூரியனார் கோயில் ஆதீனம், சிதம்பரம் சிவப் பிரகாசர் ஆதீனம், பெருங்குளம் செங்கோலாதீனம், மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனம், நீலப்பாடியார் ஆதீனம், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், இராமேச்சுவர ஆதீனம், சொர்க்கபுர ஆதீனம். வேளாக்குறிச்சி ஆதீனம், சீகாழி வள்ளலார் ஆதீனம், வரணியாதீனம்; நாச்சியார் கோயில் ஆதீனம், துழாவூர் ஆதீனம், என்பன போன்ற ஆதீனங்கள் தமிழகத்தில் உள்ளன. இவற்றுள் சில பெயரளவில்தான் இப்பொழுது தெரியவருகின்றன. இத்தகைய திருமடங்கள் பற்றிய ஆய்வுகளும் நிகழுமானால் தமிழக வரலாற்றில் சில சிறப்புச் செய்திகள் வெளிச்சத்திற்கு வரும். மேலும் சமுதாயத் தொண்டுகள் பாராட்டப்பட இயலும்.

மேலும் நம் தமிழகத்தில் வீரசைவத் திருமடங்கள் ஒருகாலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கின. இன்று மயிலம் பொம்மபுர

ஆதினம், தமிழ்ப் பணியும், திருக்கோயில் பணியும் செய்து வருவது குறிப்பிடத் தக்கதாகும். எனவே தமிழகத்தில் வீரசைவத் திருமடங்கள் என்ற ஒரு ஆய்வு நிகழுமானால்—பிறமாநிலத்தார் பிறமொழியினர் தமிழகத்தில் பெற்ற செல்வாக்கு வெளிப்படும்.

மேலும் திருமடங்களுக்கும்—சமுதாய அறக்கொடையாளர்களுக்கும் அன்று தொட்டு இன்று வரை தொடர்புகள் உண்டு. செல்வம் படைத்தோரும்—செல்வர்கள் இல்லாதோரும் தங்கள் சொத்துக்களைத் (புதல்வர்கள் இல்லாதோர்) திருமடங்களுக்குத் தானமாக அளித்தல் உண்டு. இத்தகைய அறக்கொடைகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு நிகழுமானால் சமுதாய மக்களின் நாகரிகப் பண்பாடு வெளியாவதோடு—இன்று மறைந்திருக்கும் சில அறப் பணிகள் /கொடைகள் வெளிவர ஏதுவாகும். அத்துடன் சமய உணர்வுகள்—சமுதாயத்திலிருந்து வேறுபட்டவை அல்ல என்ற எண்ணம் வலுப்படுத்தப் பெற்று—சமய நிலையங்கள் எதிர்ப்புக்கு ஆளாகாமல் தொண்டுகள் புரிய இயலும்.

சைவத் திருமடங்களில் இடம் பெறும் வழிபாட்டு முறைகள்—ஆதினத் தலைவர்கள் தெரிந்தெடுக்கும் மரபு முறைகள், ஆதினங்களில் அடியார்கள் துறவு மேற்கொள்ள வேண்டிய தகுதிகள் ஆகியவை திருமடங்களுக்கிடையே சிறு சிறு வேறுபாடுகளைக் கொண்டிருக்கவே செய்கின்றன. அவை ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொள்ளப் பெற்று ஆய்வு செய்யப் பெறுமானால் துறவற மேன்மையும், சமய மரபுகளும் நெறியாக்கப் பெறும்.

சைவத் திருத்தலங்களுள் தில்லைத் திருத்தலம் குறிப்பிடத் தக்கதாகும். அத்திருத்தலத்தில் பல திருமடங்கள் உள்ளன. உமாபதி சிவாச்சாரியார் மடம், அம்பலத்தாடியார் மடம், குரு நமச்சிவாயர் மடம், அகோர சிவாச்சாரியார் மடம், ஆகம சிவாசாரியார் மடம், மௌனசாமி மடம், ஈசான்ய மடம், பொன்னம்பல சுவாமிகள் மடம் உள்ளிட்ட பதினேழுக்கும் மேலான திருமடங்கள் உள்ளன. இத்திருத்தலத்தின் மடங்கள் பற்றிய ஆய்வு வெளிவருமானால் இன்றைய ஆய்வு நிலையில் ஊர்ப் பெயர் ஆய்வுகள் போல, ஊர்கள் பற்றிய ஆய்வுபோல ஆய்வுக்களன் சிறப்புப் பெறும்.

மா. இராசமாணிக்கனாரின் சைவசமய வளர்ச்சி ஆய்வில் பெயர் அளவில் மட்டும் குறிக்கப் பெற்ற திருமடங்கள் பல வாகும். அவற்றில் ஆசிரியர் இறைவன் பெயர்கொண்ட மடங்கள்,

அரசர் சிற்றரசர் பெயர் கொண்ட மடங்கள் என்று பாகுபடுத்தி மடங்கள் பற்றிய விபரங்களைத் தந்துள்ளார். அவ்வடிப்படையில் மடங்கள் பற்றிய ஆய்வுகள் எழுந்து கள ஆய்வு செய்யப்பெறுமானால் சைவசமய வரலாற்றில் வெளிப்படாத செய்திகள் வெளிவரக்கூடும்.

குறிப்பிட்ட திருமடம் என்ற வரிசையில் திருவண்ணாமலை ஆதீனம் இன்றளவில் குறிப்பிடத்தக்கதாகவிளங்குகிறது. தவத்திரு குன்றக்குடி அடிகளாரைத் தலைமையாகக் கொண்டு விளங்கும், இவ்வாதீனம் பற்றிய ஆய்வு வெளிவருவது மிகச் சிறப்புடைத்து. திருமடங்கள் சமயத் தொண்டு மட்டும் ஆற்றுவதில்லை. சமுதாயத் தொண்டும் ஆற்றும் திறன் கொண்டவை என்ற கருத்து வலுப் பெறுவதற்கு இத்திருமட ஆய்வு இன்றியமையாததாகும்.

கி.பி. 1200இல் நடைபெற்ற குகையிடிக் கலகம் பற்றிய செய்திகள் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அக்கலகம் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை. இவ்வாய்வு நடைபெறின் சமயப் பூசல்களின் காரணங்கள், தமிழகத்தின் நிலை, அரசியல் நிலை ஆகியவை வெளியாகி வரலாற்று முறைமை பெரிதும் சீர்பெறும்.

இத்தகைய ஆய்வு முறைகள் முறையாக எழுமானால் குறிப்பிடத் தக்க வரலாற்று மாறுபாடுகள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உண்டு.

ஆய்வு நெறிமுறைகள்

1. திருமடங்கள் அல்லது சமய ஆய்வுகள் நிகழும்பொழுது சமய நம்பிக்கை முதன்மை பெறல் வேண்டும். அந்நம்பிக்கை இல்லாத ஆய்வு நடைபெறுவது ஆய்வால் தெளிவான செய்திகள் வெளிப்பட இயலாமல் போகும்.

2. பொதுவாக ஆய்வாளரின் விருப்பு வெறுப்புக்கள் இன்றி ஆய்வுகள் நடைபெறவேண்டும்.

3. சமய ஆய்வில் / திருமட ஆய்வில் எடுத்துக்கொண்ட தலைப்புக்கு ஏற்பக் கள ஆய்வு இன்றியமையாதது ஆகும்.

4. திருமட ஆய்வில் கள ஆய்வு இன்றியமையாதது. கள ஆய்வில் நேர்காணல் இன்றியமையாதது ஆகும். திருமடத்தின் பொறுப்பாளர், அடியவர் ஆகியவர்களை நேர் கண்டு செய்திகளைத் தரலாம். இக்கட்டுரையில் குறிப்பிட்ட 3 ஆய்வு

களிலும் இந்நேர்காணல் அமைப்பு காணப்பெற்றில. ''ஆய்வாளர் தகவலாளியை நேரே கண்டு உரையாடுவது பேட்டியாகும், நேரடியாகத் தகவல் தருபவர்களை மட்டுமின்றி—ஆய்வுப் பொருளுக்குத் தொடர்பான பலரையும் கண்டு உரையாடித் தகவல்களைத் தருவது பேட்டியுள் அடங்கும்.''[5] எனவே நேர்காணலில் பெறப்பட்ட செய்திகள் ஆய்வுகளில் இடம் பெறல் வேண்டும். இச்செய்திகள் இன்றைய ஆய்விற்குச் சான்றுகளாக அமைந்து ஆய்வின் சிறப்பிற்கு உறுதுணை புரியும்.

5. திருமடங்கள் பற்றிய ஆய்வில் தனிப்பட்ட திருமடத்தைப் பற்றிய ஆய்வு அத்திருமடத்தோடு தொடர்புடைய திருமடங்களின் செய்திகளையும் உட்கொண்டதாக அமைதல் வேண்டும்.

6. திருமட ஆய்வில் ஈடுபடுகின்றவர்கட்கு வரலாற்று உணர்வு தேவைப்படுகின்றது. திருமட ஆய்வுகள், சமூகஇயல் ஆய்வோடு தொடர்புடையது. எனவே சமுதாய ஆய்வாளர் சமூகத்தில் நிகழும் மாற்றங்களை முழுமையாக உணர்ந்து கொள்வதற்கும், சமூக அமைப்புகள், அதன் செயல்பாடுகள் ஆகியவற்றை உணர்வதற்கும், வரலாற்று அணுகுமுறை மிகவும் தேவை. இத்தகைய சமூக வரலாற்றை ஆய்வாளர் நன்கு உணர்ந்து கொண்டால் சமூக மாற்றத்திற்குத் திருமட நிகழ்வுகள் காரணமானவையா? என்ற உற்றுநோக்கம் வெற்றி பெற ஏதுவாகும்.

7. இக்காலத்தில் திருமடங்களின் பணி சமயப் பணியோடு மட்டும் நின்றுவிடாது கல்விப் பணியில் விரிந்துள்ளது. கல்விப் பணியில் திருமடங்களின் வருவாய்கள் செலவழிக்கப் படுகின்றன. அன்ன சத்திரம்ஆயிரம் நாட்டலைச் காட்டிலும் ஒரு ஏழைக்கு அறிவினைத் தருதல் நன்று என்பதைத் திருமடத்தின் தலைவர் உணர்ந்துள்ளனர். எனவே திருமடங்களின் கல்விப் பணியை வரையறுத்துச் சமூக இயல் பார்வையோடு ஆய்வில் குறிப்பிடல் வேண்டும்.

இத்தகைய நெறிமுறைகள் திருமடங்கள் பற்றிய ஆய்வில் நினைவில் கொள்ளத் தக்கன.

புதிய தலைப்புகள்

திருமடங்களின் ஆய்வுகள் அதிகமாக வெளிவர வேண்டும் இதனால் சமூகஇயல் ஆய்வுகள் வளர்வதற்கு இடம் உண்டு.

---

5. இலக்கிய நெறிமுறைகள். முத்து சண்முகம். முத்து பதிப்பகம், மதுரை, 1988, ப. 147.

சிறுசிறு மடங்களை ஒன்று சேர்த்துக் காலவரையறையாலோ சமய அமைப்பாலோ—வட்டார அமைப்பாலோ— வழிபாட்டு முறை அமைப்பாலோ ஆய்வுகள் செய்யப் பெறலாம்.

எடுத்துக்காட்டாக,

1. வடநாட்டில் நிறுவப்பட்ட தமிழகத் திருமடக் கிளைகள்.
2. வேதாந்தத் திருமடங்கள்,
3. வீரசைவத் திருமடங்கள்.

திருமடங்களின் சமுதாயப் பணிகள் தனியாக ஆய்வு செய்யப் பெறலாம்.

எடுத்துக் காட்டாக,

1. சிரவை ஆதீனத் தலைவர் சுந்தர சுவாமிகளின் சமுதாயப் பணிகள்.
2. குன்றக்குடி அடிகளாரின் சமூக இலக்கியப் பணிகள்.

இவைபோன்ற தலைப்புகளில் புதிய ஆய்வுகள் வெளிவருவது தமிழக வரலாற்றிற்குப் பெருந்துணை யாகும்.

முடிவுரை

சைவத் திருமடங்கள் பற்றிய ஆய்வுகள் சைவ வரலாற்றிற்கு மட்டுமல்லாது, தமிழகச் சமூகஇயல் வரலாற்றுக்குப் பொருந்துணை யாகும் என்பது உண்மை. சமயவாதிகள் சமுதாயத்திலிருந்து பிரிந்து பணிசெய்ய இயலாது. எனவே சமயவாதிகள், நிறுவனங் கள் பற்றிய ஆய்வுகள் சமுதாய வரலாற்றைத் தந்து நிற்கும்.

தனித்தமிழ்

நா. செயப்பிரகாசு

தனித்தமிழ் நோக்கமானது. பிற மொழி வெறுப்போ, எதிர்ப்போ-புறக்கணிப்போ அன்று. தமிழ் வாழத் தமிழ்ச்சொற்களின் அழிவகற்றி, தனித்தியங்கும் தன்மையைக் காப்பதேயாகும். திராவிட இயக்கத்தவர் காட்டிய தமிழார்வம் பல நல்ல தனித்தமிழ்ப் பெயர்களையும் சொற் களையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. அரிய தனித்தமிழ்ப் படைப்புகளும் சொல்லாக்க நெறிமுறைகளும் தமிழாய்வுக் களங்க ளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இன்று, எங்கும் ஆய்வு—ஒப்பாய்வு எனப் புதுப்புதுச் சிந்தனை களும், செயல்பாடுகளும் தோன்றி வருதலையும் வளருதலையும் காண்கிறோம். 'கலந்து' பேசுகிறார்கள்; கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தொடர்ந்து மேன்மேலும் உயர உயரச் செல்லும் அவர்களின் போக்கில் வீறுணர்ச்சியும் விரைவுணர்ச்சியும் விளங்குதல் காணலாம். ஆனால் அதே வேளையில், அடித்தளம் மறந்த நிலையில்—உண்மைக்களம் மறந்த நிலையில் நம்மவர் போக்கு, பொய்ப்போக்காகப் போய்விடுமோ என்னும் அச்சமும் அவ்வப்போது எழுகிறது. தமிழ் வளர்ச்சி, தமிழ் முயற்சி, தமிழ்ப் புரட்சி எனப் புதுப்புதுப் பெயர்களில், புதுப்புது முனைப்பில் தமிழையே தக்கவாறு பேணிக்காக்க மறந்து விடுவோமோ—தமிழ் நலம் துறந்து விடுவோமோ என்னும் தடுமாற்றமும் தோன்றுகிறது. பல்வேறு இனங்களை, மொழி களை, சமயங்களை, சமுதாயச் சூழல்களை, பழக்க வழக்கப் பண் பாடுகளை, உண்மைகளை, உணர்வுகளை உறவுகளைக் கண்டு—கலந்து—நடந்து வந்திருக்கும் தமிழ், இன்று நம் உள்ளங்களில்—இல்லங்களில், எண்ணங்களில், எழுத்துக்களில் இருக்கும் நிலை எண்ணிப் பார்க்கப்பட வேண்டிய தொன்றாகும். இவ்வெண்ணம், கடந்த கால வரலாற்றிலிருந்து கண்டெடுக்கும், உண்மைகளை உரைக்கும்; வருங்கால வளர் முறைகளையும் வழிமுறைகளையும் உணர்த்தும்.

ஒரு மொழியைத் தாங்கியிருக்கும் தளங்களில், கட்டிக் காக்கும் களங்களில் ஆய்வுக் களங்களும் அருமையுடையன. அவற்றின் வழியே. அரிய உண்மைகளும அழகிய உணர்வுகளும் கண்டறியப் படும்; காட்டி நிறுவப்படும். அவ்வாறு கண்டறியவும் காட்டி நிறுவவும் முதற் பெருந் துணையாவது மொழிநடையாகும். எனவே தமிழ்ஆய்வுக் களங்களைத் தாங்கி நிற்கும் தகைமை யுடையாயதும் தமிழ்; அவற்றை ஓங்கி உணர்த்தவும் உயர்த்தவும் உறுதுணையாவதும் தமிழ்; எனவே தமிழ் ஆய்வுக் களங்களில் தமிழ்—தனித்தமிழ் எண்ணிப் பார்க்கப்படவேண்டிய இன்றியமை யாததொன்றாகிறது. ஒழுங்கு என்றால் நல்லொழுங்குதான்! பண்பு என்றால் நற்பண்புதான்! உலகு என்றால் நல்லுலகுதான்! பேறு என்றால் நற்பேறுதான்! தமிழ் என்றால் நற்றமிழ்—தனித் தமிழ்தான்! எனினும், எங்கும் எதிலும் காலப்போக்கில் கலப்புகள் நேர்ந்ததால்—நிகழ்ந்ததால் எதையும் தனித்தும்—பிரித்தும் பார்க்க வேண்டியதாகிறது: காட்ட வேண்டியதாகிறது. அவ்வாறு தான் மொழியிலும் முரண்பாடுகள் நுழைந்தன; விளைந்தன. அந்த அடிப்படை வரலாற்றை முதலில் நினைவு கொள்வோம்.

மொழிக்கலப்பும், எதிர்ப்பும், தூயமொழி இயக்கங்களும் உலகெங்கிலும் காணப்படுகின்ற ஒன்று. தூய செம்மொழி இயக்கம், தூய அயர்லாந்து மொழி இயக்கம், தூய கிரேக்க மொழி இயக்கம், தூய ஆங்கில மொழி இயக்கம் தோன்றியுள்ளன. தூய ஆங்கில மொழிக்கழகம் ஒன்று 1918இல் அமைந்து இயங்கியது. பிரெஞ்சு மொழியிலும் கலப்பினை எதிர்த்துச் சட்டமியற்றப்பட்டுள்ளது. செர்மானியம், உருசியம், சீனம், துருக்கி ஆகியவற்றிலும் தூய மொழி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தி மொழியிலும் உருதுக் கலப்பு விலக்கப்பட்டு எளிய இந்தி வற்புறுத்தப்பட்டது திராவிட மொழிகளிலும் மொழித் தூய்மை காக்கப்படவும், மொழிக்கலப்பு விலக்கப்படவும் இயக்கங்கள் செயல்பட்டன.

இரு வேறு நாட்டு—மொழியினர் தம் உறவுகள். வாணிகத் தொடர்புகள். பன்னாகரிகக் கலப்புகள், படையெடுப்புகள், அயலவர் ஆட்சி வற்புறுத்தல்கள், ஒரு மொழியின் வளங்கள், வனப்புகள், பிறரை ஈர்த்திழுக்கும் இனிய எளிய கருத்துகள் சொற்றொடர்கள், சொல்லோவியங்கள், கவர்ந்திழுக்கும் கலை இலக்கியங்கள், கண்டுபிடிப்புச் செல்வங்களின் சிறப்பியல்புகள் மொழிக் கலப்பிற்கான வாயில்களும் வழிமுறைகளுமாகும். அறிமுகமாகும் அறிவியல், அரசியல், பொருளியல், திறனாய்வு,

ஒப்பாய்வு முதலான புதுத்துறைகளும்—இணையான சொற் காண முயலாச் சோம்பலும், ஆர்வமின்மையும், அடுத்ததை அப்படியே ஏற்றுக் கொள்ளும் விரைவுப் போக்கும் கூட மொழிக் கலப்புக்கு வழி செய்துவிடும். மொழிபெயர்ப்புகளைச் செம்மையாகவும், முழுமையாகவும், உண்மையாகவும் சரிவரவும் செய்யாமையும் மொழிக் கலப்புக்கு வித்திடும் வேறு நிலைகள். மாற்றார் மனத்தை மகிழ்விக்கும் மன நிலையும், தங்களுக்கிடையே தனித்துக் காட்டிப் பெருமை பேணும் மனப் போக்கும் மொழிக் கலப்பைத் தூண்டுகின்றன. (செயற்கையான—கரடுமுரடான, சுவையற்ற, எளிமையற்ற சுமையான சொற்சேர்க்கையும் மொழிக் கலப்பினுக்குத் துணை செய்கின்றன.) இவற்றுள் வழிமுறை எதுவானாலும் ஒரு மொழிநலனின் தனித்தன்மையைத் தகர்த்துக் கெடுக்கும் மொழிக்கலப்பு வரவேற்கக் கூடியதல்ல.

தமிழைப் பொறுத்த வரையில், முரஞ்சியூர் முடிநாகராயர் காலம் முதல் கி. பி. முதல் நூற்றாண்டு வரையிலான காலத்தையே தனித்தமிழ்க் காலம் என்கிறார் மறைமலையடிகள். அதனையடுத்துக் காலந்தோறும் பல்வேறு நிலைகளில் மொழிக் கலப்பு நடந்தது. தமிழகத்தைத் தமிழரே ஆண்டதும், தமிழரின் இயற்கையோடியைந்த வாழ்வும், கடவுட் கொள்கையும் மொழித் தூய்மையாயமைந்தன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னர் நிகழ்ந்த அரசியல், சமய, சமுதாய, இலக்கிய மாற்றங்கள் மொழிக் கலப்பிற்குக் கால் கோலிட்டன. மணிப்பிரவாளமொத்த கலப்பு நடைகளும் காலப்போக்கில் அறிமுகமாயின. இதனைக் 'கேள்வியின்பம் பயக்குமென்ற போலியெண்ணத்தில் பூத்த ஆபாச பாஷை'[1] எனப் பரிதிமாற்கலைஞர் குறிப்பிடுகிறார். தமிழ் முயற்சியாளர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, உ.வே. சாமிநாதய்யர் முதலான தமிழறிஞர்கள் கொண்டிருந்த வட மொழிப் புலமையும் பற்றும் அவர்களது நடையில் கலப்பைச் சேர்த்தன. திரு.வி.க இந்நிலையிலிருந்து மாறுபட்டுத் தனித்தமிழ் முயற்சியாளராக விளங்குகிறார்.

தனித்தமிழ் நோக்கமானது, பிற மொழி வெறுப்போ, எதிர்ப்போ, புறக்கணிப்போ அன்று. தமிழ் வாழத்—தமிழ்ச் சொற்களின் அழிவகற்றி, அவற்றின் தனித்தியங்கும் தன்மையைக் காப்பதேயாகும். தமிழின், தனித்தியங்கும் தகைமையை மெய்ப்

1. தமிழ் இலக்கிய வரலாறு, பக். 37-38.

பிப்பதே இவ்வியக்கத்தின் முதன்மை நோக்கமாயிருந்தது. மொழிச் சிதைவும் சீரழிவும் நாளடைவில் இனக்கேட்டுக்கும் எல்லைக்கேட்டுக்கும் இடந்தந்துவிடும் என்ற எண்ணமும் எழுந்தது. கருத்து முகிழ்வுக்கும், மலர்ச்சிக்கும், மணத்திற்கும் மொழிக்கலப்பு முரணானது என்பதும் மற்றொரு உண்மையாகும். மற்றும் மொழிக்கலப்பு காலப்போக்கில் மொழி சார்ந்த இனத்தின் பண்பாட்டுச் சீரழிவுக்கும் வழிகோலாகிவிடும் என்பதும் எண்ணத் தக்கதாகும். சிறந்த சிந்தனைகளின் சிதைவுக்கும், சிறப்பின்மைக்கும் மொழிக்கலப்பு இடந்தந்துவிடும். மொழியின் வளம் அழிக்கப்படுதலுடன், நாளடைவில் மொழியின் வறட்சிக்கும் வறுமைக்கும் அது வழியமைத்துவிடும். தமிழின் தன்னிலை கெடாத் தன்மையைப் போற்றிக் காக்கவே இவ்வியக்கம் எழுந்தது. தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போகாது, வழங்கிவர வகை செய்வதற்காகவே இவ்வியக்கம் முயன்றது. மொழிக் கலப்பென்பது வடசொற்கலப்பு என்பது மட்டுமல்ல; காலந்தோறும் மொழியில் கலக்கும் அனைத்துப் பிறமொழிச் சொற்கலப்பையும் அது குறிப்பதை மறத்தல் கூடாது. எனவே, இவ்வியக்கம் எந்த ஒரு தனித்த பிறமொழியையும் வெறுத்தல் அல்லது எதிர்த்தலென்பது பொருந்தாது. தமிழின்—தனியொரு மொழியின் தற்காப்பு மூயற்சியென்றே கருத்திற் கொள்ள வேண்டும்.

முதலில் தோன்றிய மக்கள் இலக்கியமாகவும், சமயஞ்சாரா இலக்கியமாகவும், பகுத்தறிவிலக்கியமாகவும் விளங்கிய சங்க இலக்கியங்களிலேயே தனித்தமிழ் போற்றப்பட்டதைக் காணலாம். நக்கீரர் வடமொழிச் சொற்களுக்கு இணையான தொடரை நற்றமிழில் கையாண்டார். (உத்தரம்—நாளொரு பெயரிய கோளமை விழுமரம்—நெ. 12; கர்ப்பகிரகம்—கருவோடு பெயரிய காண்பின் நல்லில்—நெ. 114) வடமொழிச் சிறுதனிச் சொல்லுக்குத் தமிழில் நீண்ட தொடர்களில் பொருளமையச் செய்தல் நடைமுறைக்கு எளிதாகாமற் போகவோ வடசொற்கள் காலப்போக்கில் அப்படியே கையாளப்பட்டன; கலக்கப்பட்டன. வடசொற்கள் தமிழின் எழுத்து மரபுக்கேற்ப உருமாறியும், மொழிமரபு தழுவியும், பருவியும், திரிந்தும் சங்கச் சான்றோரால் கையாளப்பட்டன. காப்பியங்களிலும் தனித்தமிழ் மரபு பின்பற்றப்பட்டது. சாமானியம், பிக்குணி என அயல் மொழிச் சொற்களைச் சாத்தனார் முறையோடு தமிழ் ஒலிப்படுத்தியுள்ளார். பிஷ்வர், தனித்

தமிழ் உணர்வும் மரபும் போற்றியவர்களில் கம்பரும் சேக்கிழாரும் குறிப்பிட்டு எண்ணத் தக்கவர்களாகின்றனர்,[2]

வடமொழியின் துணையின்றித் தனித்தியங்கும் தகைமை கொண்டது தமிழ் என்று நிறுவிய அறிஞர் கால்டுவெல்லின் கூற்று, தனித்தமிழ் இயக்கத்திற்கு மேலும் ஆக்கந்தந்தது. செய்யுள், உரைநடை, கதை, புதுக்கதை, நாடகம், மறைபொருளியல், வரலாறு என்னும் எத்துறைச் செய்திகளையும் தனித்தமிழில் எழுதலாம் என முயன்று முதலில் மெய்ப்பித்தவர் மறைமலை அடிகளார். அவர் வழியில் ஆர்வத்துடன் சேர்ந்து நின்று சிறப்புறச் செயலாற்றியவர் நீலாம்பிகையார். தமிழ்ச் சொற்களையும், சொற்றொடர்களையும் பிழையின்றி ஒலிக்க வேண்டுமென்பதில் முயற்சியின்மையும், பிற மொழிச் சொற்களையும் தொடர்களையும் அப்படியே எடுத்தாள்வதில் கொண்ட ஆர்வம், பிறமொழியைக் கலந்து பேசுதலே பெருமையெனக் கருதும் பேதைமையுணர்வு, பொருளையும் போலி வாழ்க்கையையுமே பெரிதாகப் போற்றும் பிழைபட்டபோக்கு ஆகியனவே மொழிக் கலப்பை ஊக்குவிக்கின்றன என்னும் கருத்தினர் அடிகளார். தமிழுணர்ச்சி மிக்கிருந்தால் தனித்தமிழ்த் தானாக வருமென்பதற்குப் பழந்தமிழர் முயற்சியை எடுத்துக்காட்டும் அடிகளார் (எடு. உருளைக்கிழங்கு, மிளகாய், வான்கோழி) புதுச் சொற்களை ஆக்கியும் அமைத்தும் பழஞ்சொற்களைப் புதுப்பித்தும், கையாண்டும் தம் தனித்தமிழ் முயற்சியைத் திறமுறச் செய்தார்.

படிப்பறிவற்ற எளிய மக்களின் சொற்பொருள் உணர்ந்து, கையாளும் பிற மொழிச் சொற்களுக்கான தனித்தமிழ்ச் சொற்கள் நன்கு வழக்காற்றில் வந்ததும் அவற்றைக் கற்றறிந்தோர் தம் ஏடுகளில்—எழுத்துக்களில் கையாண்டால் அச்சொற்கள் வாழும்; பிறமொழிச் சொற்கள் பின்னுக்குத் தள்ளப்படும். படிப்பறிவு பெற்றவர்களே மொழிக்கலப்பில் மிகுதியாக ஈடுபடுதல் உணரப்பட வேண்டிய உண்மை. மொழிக் கடனும், முரண்பாடான சொற் கலப்பும் மொழி வளர்ச்சியைத் தடுக்கும் முட்டுக்கட்டைகளே, சமய வாழ்விலும் சமுதாய வாழ்விலும் இலக்கிய வாழ்விலும் அக்கறையோடும் விழிப்போடும் இருந்தால் மொழிக்கலப்பைத் தவிர்த்துத் தனித்தமிழ்ப் போற்றலாம். சமயச் சடங்குகளில்,

---

2. இச்செய்திகளைத் தம் ஆய்வேட்டில் (தனித்தமிழ்—தோற்றமும் வளர்ச்சியும்) சாரதா நம்பியாரூரான் விரிவாக ஆய்ந்து விளக்கியுள்ளார்.

வழிபாடுகளில் ஆரியர்கள் பெற்ற ஆளுமை ஆட்சிமுறைகளிலும், படிப்படியாகப் பிற அனைத்து நிலைகளிலும் மொழிக் கலப்பிற்கு, குறிப்பாக வடமொழி – ஆங்கிலக் கலப்புக்கு வழியமைத்தது. படிப்பறிவில்லாப் பாமரனுக்கு முன், பகட்டு மொழி பேசிப் புரட்டு வழியில் பொருளீட்டும் நோக்கத்தினரால்—பொறுப்பு மிக்க பணிகளில் போய் ஒட்டிக் கொள்ளும் சுயநலமிகளால்—சூழ்ச்சிக் காரர்களால் வேண்டுமென்றே—திட்டமிட்டு மொழிக்கலப்பும், மொழிமயக்கும் செய்யப்பட்டன. பாமரனுக்கும் பரமனுக்கு மிடையே 'பாஷைகள்' மாற்றத்தால் பாவங்களே பெருகின. அங்கும் தெரிந்த மொழிகள் 'தேவபாஷைகள்' எனப்பட்டன. அயல்மொழிகள் கடவுள் நெறியைப் புரியவிடாமல் செய்ததா லேயே கடவுள் மறுப்பு இயக்கங்கள் இம்மண்ணில் தோன்றின என்னும் கருத்தும் இங்கு எண்ணத்தக்கது. இறைநெறியை உணரவும், இறையருளை எட்டவும் தாய்மொழியாம் தமிழ்மொழி வழிபாடே தக்கதென்னும் கருத்து, படிப்படியாக வளர்ந்தது. தமிழ் வழிபாடு, தக்கவர்கள் துணையோடு தற்காப்புக் கொள்ள வேண்டியிருந்தது. எனினும் எவ்வளவோ பேர் இருந்தும், தமிழர் தம் ஒற்றுமையின்மையையும், உறுதியின்மையையும் வடமொழி வழிபாட்டுக்கான எதிர்க்குரல் வேண்டிய அளவு எழுப்பப்பட வில்லை என்கிறார் மறைமலை அடிகளார்.[3] இருப்பினும், தமிழ்ப் பற்றாளரின் எதிர்ப்பும் எதிர்க்குரலும் அவ்வப்போது இந்த ஞாலவேனும் இல்லாமலிருந்தால், இன்னும் கூடுதலாகத் தமிழ் நிலை கெட்டு, வடமொழி ஆளுகையும்—வழிபாடும் மேலோங்கித் தமிழ் இலக்கியப் பண்பாட்டுப் பேரழிவே நடந்திருக்கும் என்பது உண்மை. பெயருக்கு முன்னால், 'ஸ்ரீ' எனப் போடுவதற்கு மாறாகத் 'திரு' எனப் போட வேண்டுமென்னும் கருத்தை யொட்டி, ரா. ராகவையங்கார், சோமசுந்தரபாரதியார், பண்டித மணி, நாட்டார், பாவாணர், பாரதிதாசன், பல மடத்துத் தலைவர் இவர்களுக்கிடையே நடந்த பெரும் போராட்டமே சான்றாகும்.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளை போன்றோரால் தமிழருமை உணர்த்தப்பட்டாலும், தனித்தமிழ் வளர்ச்சியிலும் முயற்சியிலும் மறைமலையடிகள், நீலாம்பிகையார், திரு.வி.க, நாவலர் சோமசுந்தரபாரதியார், உமாமகேசுவரப்பிள்ளை, பண்டிதமணி, வ.உ.சி. சுப்பிரமணியசிவா, இராமலிங்க சுவாமிகள், வேதநாயகம்

3. அ.கொ. ப 161-162

பிள்ளை, பரிதிமாற்கலைஞர், பாவாணர் ஆகியோர் குறிப்பிடப் பட வேண்டியவர். பிறமொழியைத் தாய்மொழியாகக் கொண்டுத் தமிழகத்தில் வாழும் பலர், தனித்தமிழ் ஈடுபாட்டாள ராயும் முயற்சியாளராயும் விளங்குதல் காணலாம். பாரதியின் மொழிப்பற்று, ஆங்கிலேய எதிர்ப்பு என்ற நிலையில் ஆங்கில எதிர்ப்பு என்ற அளவிலேயே அமைந்தது. அது தனித்தமிழ் என்ற அளவுக்குச் சிறக்கவில்லை; ''இயன்றவரை தமிழே பேசுவேன்; தமிழில் எழுதுவேன், சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்'' என்னும் பாரதியின் சொற்களும் இங்கு நினைக்கத்தக்கன. 'சுவை யெல்லாம் பிழிந்தெடுத்த தூயதமிழ் நடை பிடிக்கும்' என்னும் பாவேந்தர், தமிழியக்கம் தொடர்பான முயற்சிகளில் ஒரு தேக்கம் காட்டினார்.

.....அடிமைக் கிரண்டு
கைகள் மட்டும் கனிந்தருள் செய்க!
ஏன் எனில் கேட்க; இங்கதன் தேவை!
தனித்தமிழ்ச் சான்றோர் இனித்த மெய்மொழியாம்
கனிச்சுவைச் சாற்றில் களிக்கும் போது
மெய்பெறும் அன்பால் கையொலி எழுப்பவும்
நன்னடை கெடுக்கும் புன்னடைப் பேச்சாய்த்
தமிழெனப் பேசும் தரமில் மாக்களை
தாடையில் இரண்டடி சட்டென் றிடவும்
இறைவன் போன்ற ஈடில் அறிஞ
தருக இருகை அருள்கனிந் தெனக்கே[4]

என மொழிக் கலப்பைச் சாடியும், தனித்தமிழை வேண்டி விரும்பி யும் தமிழ் நெஞ்சங்கள் எண்ணவும், எழுதவும் அடிப்படையான தனித்தமிழ் வரலாறு; எல்லோர் நெஞ்சிலும் எப்போதும் நினைக்கப்பட வேண்டிய நீண்ட வரலாறாகும்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் இலக்கணக் கொத்து என்ற நூலினை எழுதிய சுவாமிநாத தேசிகர், 'அன்றியும் தமிழ் நூற்கு அளவிலை—ஒன்றேயாயினும் தனித் தமிழுண்டோ' எனக் கேட்ட திலிருந்து அன்றைய நூல்கள் அனைத்திலும் கலப்பிருந்ததைக் காட்டுகிறது. இதனையடுத்துப் படிப்படியாகத் தனித்தமிழ் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; தனித்தமிழ் உணர்வு வளர்ந்து மேலோங்கத் தொடங்கியது. 1915இல் சுப்பிரமணியசிவா

4. நா. உசாதேவி, தருக இருகை, கைகாட்டி இதழ் (13-2-72)

அவர்கள் நடத்திய ஞானபானு இதழில், 'உங்களால் தனித் தமிழில் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள்' என அழைப்பு விடுக்கப்பட்டது. 1938இல் தமிழகம் வந்த கால்டுவெல்லின் 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணமும்' இராபர்ட். டி. தோவிலி, எல்லிசு, வீரமாமுனிவர், போப் ஆகியோரின் முயற்சிகளும் தமிழின் தனித்தியங்கும் வல்லமையை எடுத்துக்காட்டி உறுதிப்படுத்தின. இக்காலத்திலிருந்த இசைத் துறைக் கலப்பினைச் சுட்டிக் காட்டி, இசைத்துறையில் தனித் தமிழின் தகைமைகளை நிறுவியவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர். அயோத்திதாச பண்டிதர் 'தமிழன்' என்றொரு தாளிகையை நடத்தித் தமிழுணர்வை மேலோங்கச் செய்தார்.

பரிதிமாற்கலைஞரின் 'தமிழ்மொழி வரலாறு' தமிழின் சிறப்பியல்புகளுக்கு விளக்கமாகவும் நற்சான்றாகவும் அமைந்தது. 1916இல் மறைமலை அடிகளாரால் தொடங்கப்பட்ட தனித்தமிழ் இயக்கம், தனித்தமிழ் முயற்சிகளுக்குப் புத்துயிர் ஊட்டிப் புது வாழ்வு தந்தது. முதலில் உடன்பட மறுத்த பண்டிதமணி, அடிகளாரின் தக்க மறுப்புரைகளையடுத்துத் தாமும் தனித்தமிழ் முயற்சிகளுக்கு உடன்பட்டு உழைத்தார். "வேற்றுமொழிப் பயிற்சியால் வெதும்பிய அன்பர்கள் தமிழ்ப் பொழிலை அடைவார் களாயின் அவ்வெப்பம் ஒழியப் பெற்று, செந்தமிழ் தட்பத்தால் இன்புறுதல் ஒருதலை" என்னும் பண்டிதமணியாரின், 'பண்பாடு, வானொலி' என்னும் சொல்லாக்க முயற்சியும் உதவியும் குறிப்பிடத் தகுந்தவை.[5]

தனித்தமிழில் பேசியும், எழுதியும், தமிழ் மரபுப் படியிலான தமிழ்த் திருமணங்களை நடத்தி வைத்தும் தனித்தமிழுணர்வை மேலும் தழைக்கச் செய்தவர் திரு.வி.க., த.வே. உமாமகேசுவர னாரின் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றமும், தமிழ்ப்பொழிலும், சுத்தானந்த பாரதியின் தமிழுணர்ச்சி நூலும், தமிழ்மணி சாமி. வேலாயுதம் அவர்களின் மொழியரசியும், நீலாம்பிகையாரின் தனித்தமிழ்க் கட்டுரைகளும் தனித்தமிழ்க் களங்களில் என்றும் நினைக்கத்தக்கன.

1937இல் இராசகோபாலாச்சாரியாரால் கட்டாய இந்தி தமிழகத்தில் கொண்டுவரப்பட்டதும் எழுந்த இந்தி எதிர்ப்புக்

5. இச்செய்திகளை 'பெருஞ்சித்திரனார் காவியங்கள்' என்னும் ஆய்வு நூலில் விரிவாக விளக்கி உள்ளார் சீனிவாசன்.

கிளர்ச்சியில் எண்ணற்றோர் சிறை சென்றனர். 1933இல் வேலூர் மாநாட்டில் தனித்தமிழ் நாடு பற்றிய திட்டம் தீட்டப்பட்டது. 1938இல் சென்னைக் கடற்கரையில் மறைமலையடிகள் தலைமையில், நாவலர் சோமசுந்தரபாரதியாரால் 'தமிழ்நாடு தமிழர்க்கே' அறிவிப்பு கொண்டுவரப்பட்டது. அதனை வழி மொழிந்தவர் பெரியார் ஈ.வே.ரா. 1939இல் நடந்த விளக்க விழாப் பொதுக் கூட்டத்தில் அமைந்த அறிஞர் அண்ணாவின் பேச்சு தனித்தமிழ் உணர்வு எங்கும் பரவத் துணை செய்தது. இக்காலத்தில், வெளியான மறைமலையடிகளாரின் 'இந்தி பொது மொழியா' நூலும், ஈரோட்டுக் 'குடியரசு' இதழும், 'விடுதலை' நாளிதழும், காஞ்சியின் 'திராவிட நாடும்', சென்னையின் திராவிடன் (என்.வி. என்.) ஏடும்,'தமிழ் உலகம்' ஏடும்(டி. எம். பார்த்தசாரதி) அண்ணாவின் (திராவிடர் நிலை, நல்லதீர்ப்பு, நாடும் ஏடும்) முதலான உரைப் பொழிவுகளும் தமிழரிடையே இன, மொழி யுணர்வு மேன்மேலும் பெருகி வளர வாய்ப்பளித்தன.

பாவேந்தர் பாரதிதாசனின் தமிழியக்கம் (1945) தனித்தமிழ் பாடல் நூலாக அமைந்து, அழுத்தமான, ஆழமான தனித்தமிழ்ப் பற்றிற்கும், எழுச்சிக்கும் துணை செய்தது.

1946இல் இராசகோபாலாச்சாரியாரின் அமைச்சரவை இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியது. இதனையெதிர்த்து, திராவிடர் கழகம் செய்த அறப்போரின் விளைவாக ஆட்சியாளர் அவர்தம் முயற்சியைக் கைவிட்டனர். 1947இல் அமைந்த இந்திய விடுதலை நாள் விழாக் கொண்டாட்ட முறைமையில் பெரியாருக்கும், அண்ணாவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. 1948இல் வெளியான இந்தி எதிர்ப்புப் பாடல்கள் என்ற நூலும், (1939) பாரதிதாசனின் இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடக நடப்புகளும் மொழி-இன-உணர்வை மேலும் பெருக்கின. 1949இல் அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், நாடு இனம் சார்ந்த தம் கொள்கைகளுடன் மொழி சார்ந்த உறுதியையும் கொண்டிருந்தது. இதனால், 1959 இல் ஆறாம் வகுப்பு வரை இந்தி கட்டாயப்பாடம் என்பது எதிர்ப்புக்குள்ளானதால், அது விருப்பப் பாடம் என்னும் மறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. 'தமிழ்நாடு' எனப் பெயர் வைக்க வேண்டி 1956இல் உண்ணா நோன்பு இருந்து இறந்த சங்கரலிங்க னாரின் பாராட்டு நாள் விழா நிகழ்ச்சிகள் மொழிப்பற்றை மேலும் பரப்பியது. 1957இல் தமிழகச் சட்ட மன்றத்தில் திராவிட

முன்னேற்றக் கழக 15 உறுப்பினர்களின் 'தமிழ் உறுதி மொழி' புதிய உறுதியையும், நம்பிக்கையையும் தந்தது.

1960இல் இந்தியக் குடியரசுத் தலைவரின் 'இந்தி ஆட்சி மொழி யாகும்' ஆணை, பெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு இடந்தந்தது. 1961இல், அரசுத்துறைகளில் இந்தி திணிக்கப்படுவது வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. 1962இல் 'ஆகாஷவாணி' வானொலியானது. 1963இல், 1965 முதல் இந்தி ஆட்சியாகும் சட்டம் 'லால் பகதூர் சாஸ்திரியால்' கொண்டு வரப்பட்டது. 1963 நவ. 17இல் இச்சட்டஎதிர்ப்பு-எரிப்புப் போரைஒடுத்து ஏராள மானவர் சிறைப்படுத்தப்பட்டும், அச்சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டது. 1965இல் கிளர்ந்தெழுந்த இந்தி எதிர்ப்புப் பெரும்போரில் தமிழறிஞர், பொதுமக்கள், மாணவர், பங்கு கொண்டு சிறை சென்றனர். தாங்களாகத் தீக்குளித்தும், காவலர் துப்பாக்கிச் சூட்டிலும் பலர் உயிர் துறந்தனர். இவற்றின் விளைவாக 1967இல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக அமைந்தது.

திராவிட இயக்கத்தவர்கள் காட்டிய தமிழார்வம் பல நல்ல தனித்தமிழ்ப் பெயர்களையும், சொற்களையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. படிப்படியாகப் பல்கலைக்கழகச் செயல்பாடு களிலும், பட்டமளிப்பு விழா-உரைகளிலும், ஆய்வேடுகளிலும் தமிழ் அமையத் தொடங்கியது. பல்கலைக்கழகப் பட்டங்களும் (புலவர்), அரசினர் அமைப்புகளும் (இயல், இசை, நாடக மன்றம்) தனித் தமிழ்ப் பெயர் பெற்றன. கல்லூரிகளில் தமிழ் பாடமொழி யாகவும், பயிற்று மொழியாகவும் ஆனது, உலகத் தமிழ் மாநாடு கள் நடத்தப்பட்டதும், சாலை, பாலங்களுக்கு நற்றமிழ் பெயர்கள் சூட்டப் பெற்றதும் தமிழப் பல்கலைக் கழகம் அமைந்ததும், தமிழ் வளர்ச்சி இயக்கத் துறைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவையும் தமிழுணர்ச்சியின் சீரிய வெளிப்பாடுகளாக அமைந்தன.

டி.எம். பார்த்தசாரதி, அலமேலு அப்பாதுரை, கி.ஆ.பெ. விசுவநாதம், இலக்குவனார், பெருஞ்சித்திரனார், ஜீவானந்தம், தெ.பொ.மீ., பா. வே. மாணிக்க நாயக்கர், கா. சு. பிள்ளை. சச்சிதானந்தம் பிள்ளை, சேதுப்பிள்ளை, சி.பி.ராமசாமி, அனினாசி லிங்கம், கருப்பையாபிள்ளை, மு.வ, ஜி.ஆர். தாமோதரன், ஆகி யோரும், அரசியல் துறையில் காமராசர், அண்ணா, மு. கருணாநிதி எம்.ஜி. இராமச்சந்திரன், அன்பழகன், நெடுஞ்செழியன் ஆகி யோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தாளமுத்து நடராசன், திருச்சி சின்னசாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், அரங்கநாதன், அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன், கோவை முத்து, ஏவிசி மாணவர் சாரங்கபாணி ஆகியோர் மொழிப்போரில் மாண்ட மறவர்களாவர்.

பின்னர், தமிழ்ப் பயிற்று மொழி மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றின் வழி தமிழ் வழிக் கல்விக்கான கருத்துகள் ஆராயப் பட்டன. அறிவியல் கலைச் சொல்லாக்க முயற்சியை மேற்கொண் டது கலைக்கதிர் இதழ். கலைச் சொல்லாக்கக் குழுக்கள் அமைக்கப் பட்டன, இவ்வாறு பல்லாற்றானும் தமிழ் முயற்சிகள் தழைக்கத் தொடங்கின.

இவ்வாறு பூத்து மலர்ந்த தனித்தமிழின் மலர்ச்சியிலும் வளர்ச் சியிலும் புதுமணம் பரப்பும் களமாகத் தமிழின் பல்துறைப் படைப் புகளும் அமைந்துள்ளன. தகுதி வாய்ந்த இத்துறைகள் தமிழ் ஆய்வுக் களங்களாக அமைய வேண்டியது முதல் தேவை. தமிழுணர்ச்சி போற்றித் தமிழ் வளர்ச்சிக்குத் துணையாகவும் தூண்டுகோலாகவும் இருந்த அத்துறைகள்-களங்கள் பற்றிக் காண்போம்.

நற்றமிழ் நாளேடுகள் தாளிகைகள்

கீழ்க்கண்ட ஏடுகளில் தனித்தமிழ்ப் படைப்புகள்-பல்துறை யிலும் வெளியாயின. ராய. சொக்கலிங்கத்தின் ஊழியன் காரைக்குடியிலிருந்து வெளியான குமரன், மதுரைத் தமிழ்ச் சங்கத் திலிருந்து வெளியான செந்தமிழ், கரந்தைத் தமிழ்ப் பெருமன்றம் வெளியிட்ட தமிழ்ப்பொழில், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் வெளியிட்ட செந்தமிழ்ச்செல்வி, பொன்னி, புலமை, தமிழ்க்குடிமகனாரின் அறிவு, கைகாட்டி, வி.பொ. பழனிவேலனா ரின் மாணாக்கன், தென்மொழி, முதன்மொழி, பூஞ்சோலை, மலைச்சாரல், தமிழ்ப்பணி, மறைமலை முரசு, தமிழ்ப்பாவை, தமிழ்ச் சிட்டு, தமிழம், வல்லமை, மீட்போலை, குறளியம், தமிழ்ச் சுடர், அமுதம், நெய்தல், நறுந்துணர் ஆகிய ஏடுகள் ஆய்வுக்குரிய வாகத்தக்க அரிய களங்கள்; அருமைக் களங்கள், காஞ்சி, திராவிடன், தேசாபிமானி, ஆனந்த போதினி, ஒற்றுமை, தமிழ் நாடு, தென்றல், முல்லை, வானம்பாடி, குயில் ஆகியவற்றிலும் நற்றமிழ்ப், படைப்புகள் வெளியாயின. தமிழ்ப்பறை, வண்ணச் சிறகு, முப்பால் ஒளி, நித்திலம், பாவேந்தர் குயில், தமிழியல், தமிழ் ஒளி, பகுத்தறிவு, தாமரை, தமிழியக்கம், குறள்நெறி, வேந்தம், எழுச்சி, மலர்ச்சி, முதல்மொழி, பாவை, வலம்புரி, செம்பரிதி,

தமிழிசை பற்றிய களங்கள்

திருவனந்தபுரம் லட்சுமணப்பிள்ளை இசைப்பாடல்கள், வள்ளலார், வேதநாயகர், முத்துத்தாண்டவர் பதங்கள், கோபால கிருட்டின பாரதியாரின் நந்தனார் கீர்த்தனை கவிதைப் பாடல்கள், அருணாசலக கவிராயரின இராம நாடகக் கீர்த்தனைகள், பாபநாசம் சிவன் பாடல்கள், காவடிச் சிந்து, திருப்புகழ் பாரதி யாரின பாடல்கள், பாரதிதாசனின் தேவருவி, இசையமுது, பாவாணரின் இசைத்தமிழ்க் கலம்பகம், இசையரங்கு இனனிசைக் கோவை, ஆகியன இங்குக களங்களாகின்றன.

கவிதை நூல்கள்

முன்னர்க் குறிப்பிட்டுள்ள ஏடுகளில் வெளியான தமிழ்க் கவிதைகளைக் கருதுதிற் கொள்வதுடன, அரிமா தென்னகனின புரட்சி மழலைப் பூககள், அருளியின நிறைமதன, அரிகிருட்டிணனின பாடற்பறவைகள், ஆ. கோவிநதராசலுவின அறிவியற பூக்கள், தமிழ்க் குடிமகனின் கவிதைக் கனிகள ஆகிய கவிதை நூலகளும் ஆய்வுக களங்களாகக் கருதத் தக்கவை.

சிறுகதைகள்

மணிமொழியின் கண்ணீர்த் துளிகள் (1975), தமிழமல்லனின விருந்து (1983) ஆகியன இங்கு நினைக்கத்தக்கன. முற்குறித்த நற்றமிழ் ஏடுகளில் அறிவு ஒளி, பழமலை, தமிழமலலன், நறகுமரன, குறளேந்தி, தமிழரசி, பாவலர், தேவமைந்தன. சக்திப்புயல், தமிழ் மாறன், செயசீலன், மாரி, அறவாழி. மணிமொழி, மகிழரசன, பொன்னையன், எழிலண்டன், த. அன்பழகன, சந்திரலேகா, செல்வராசு, தமிழ்வேந்தன், தாளமணி, நச்சினார்க்கினியன், இளஞ் சேரன், தமிழ்வேள் ஆகியோர் (தனித்தமிழ்ச் சிறுகதைகள்) எழுதி யுள்ளனர்.

புதினங்கள்

தி.நா. அறிவு ஒளியின் ஞாலம், கலையழகன், மெல்லிய காதல், நீ. தங்கவேலனின் வான்மதியின் திருமணம், அருளரின் லங்கா ராணி, மு.வ.வின் பெற்ற மனம், கயமை, செ. பன்னீர் செல்வத் தின் கனிமொழியின் காதல் மற்றும் உணர்வுகள் அழிவதில்லை ஆகியன இங்குக் கொள்ளத்தக்கன.

நாடகங்கள், பாவியங்கள், கட்டுரைகள் பிற

தமிழ்க்குடிமகனின் மனமாற்றம், முதல் பரிசு, தேரோட்டம், வாழவிடு, சேலம் வேலூர் நாராயணின் துறவியின் புதையல், உலக

நாதனின் அண்ணிமிஞிலி, பழனியின் அனீச்ச அடி, அன்னிமகள், பெருஞ்சித்திரனாரின் கொய்யாக் கனி (பாவிகம் 1955), ஐயை (சிறுகாவியம் 1968), பாவியக் கொத்து (1969), எண்சுவை எண்பது (1969), கற்பனை ஊற்று (1971), பள்ளிப் பறவைகள் (1972), மகடிகு வஞ்சி (1973), நூறாசிரியம் (1976), வாழ்வியல் முப்பது (1977), கனிச்சாறு (1979), தன்னுணர்வு (1977), பாவேந்தர் பாரதிதாசன் சுருக்க வரலாறு (1979) ஆகியன நற்றமிழ்க் களங்கள். தமிழ்க்குடிமகனின் மனங்கவர்ந்த மலேசியா, அந்தமானைப் பாருங்கள், பாவாணரும் தனித்தமிழும், செந்நீர்க் கடலில் ஈழத் தமிழன், பாவேந்தர் கனவு ஆகிய படைப்புகளும் நற்றமிழ் முயற்சியில் அமைந்தவை.

தனித்தமிழ் அடிப்படைக் கருவூலங்களாக அமைந்து விளங்கும், பாவாணரின் வடமொழி வரலாறு, தமிழ் வரலாறு, திருக்குறள் தமிழ் மரபுரை, தமிழ் கூடன் கொண்டு தழைக்குமா? என்பனவும் பாம்பன் சுவாமிகளின் தனித்தமிழ்க் காப்பு நூலும் இங்கு நினைக்கத்தக்கன. மறைமலையடிகளாரின் படைப்புகள் மேலமைந்த செய்யுள், கட்டுரை, புதுக்கதை, நாடகம், வரலாறு, மறைபொருளியல் என்னும் பல்துறைப் படைப்புகளும் தனித்தமிழில் அமைந்து தனிக்களமாகவே ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.[6]

தனித்தமிழ் முயற்சியில் தொண்டாற்றிய அமைப்புகளும் அவற்றின் பணிகளும் தனிக் களமாகத் தக்கன. பாவாணரின் உலகத் தமிழ்க் கழகம் (1968), சென்னையிலுள்ள தமிழியக்கம், திருவாரூரன் இயற்றமிழ்ப் பயிற்றகம், கோவையிலுள்ள சேரர் கொற்றம், தனித்தமிழ் வளர்ச்சிக் கழகம், திருநெல்வேலியின் தனித் தமிழ் இலக்கியல் கழகம், புதுச்சேரியின் தமிழ்க் காவற்குழு, புன் செய்ப் புளியம்பட்டியின் மறைமலையடிகள் மன்றம் ஆகியன. இளைஞர்க்குச் சொற்பயிற்சியையும், எழுத்துப் பயிற்சியையும் அளித்துத் தனித்தமிழ் முயற்சிக்கு ஊக்கந்தந்து உதவுகின்றன. இத் தகைய எழுச்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் அடுத்து இன்றைய தமிழ் ஆய்வுக் களங்களில் தனித்தமிழ் நிலை எவ்வாறுள்ளது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாகியுள்ளோம்.

ஆய்வுக்களம் எதுவாக இருந்தாலும் அதனை அணுகிக் காணும்-காட்டும், நடைநலம் குறித்த செய்திகளும் சிறப்பிடம் பெறுகின்றன. நடை, ஆய்வாளரின் பலகாலப் பயிற்சியாலும்

6. மறைமலை அடிகளாரின் இலக்கியப் படைப்புகள், சென்னை பல்கலைக் கழகம், 1980.

தேர்ச்சியாலும் மெள்ள மெள்ளப் படிந்து அமைவது ஒரு நிலை; ஆய்வுப் பொருளின் நிலைகளுக்கு ஏற்ப அமைவது மற்றொரு நிலை: ஆய்வாளர் தன் திறத்தையும் ஆய்வுப்பொருளின் அருமையையும் பொருத்தி ஆராய்ச்சி நெறிமுறைகளுக்கேற்ப அமைப்பது மூன்றாவது நிலை. இம்மூன்று நிலைகளிலும் தமிழ் ஆய்வாளர்கள் தனித்தமிழ்ச் சொற்களையும், சொற்றொடர்களையும் தம் ஆய்வேட்டில் கையாள வேண்டுமென்பதில் கருத்து மாறுபாடு இருக்க முடியாது; இருக்கக் கூடாது. தமிழ் நலம் காத்து, ஆய்வு நலமும்-பயனும் சிறக்கச் செய்வதே ஆய்வாளர் கடமையாகும். பிறமொழிச் சொற்களைக் கலவாமல் ஆய்வு நடையை அமைக்க வேண்டியது ஆய்வாளர் பொறுப்பாகும்.

செய்யுள் இலக்கியங்கள் என்ற நிலையில் பார்க்கும் பொழுது, சங்கச் செய்யுட்கள் தொடர்பான ஆய்வு, காப்பியங்கள் தொடர்பானவை, சமயஇலக்கியங்கள் சார்ந்தவை, சிற்றிலக்கியங்கள், பிற்காலச் செய்யுள் அல்லது பாடல் இலக்கியங்கள், புதுக்கவிதை எனப் பல நிலைகளில் ஆய்வுக்களங்கள் அமைகின்றன. இக்களங்களை, பிற மொழிச் சொற்கள் கலவாதவை; பிறமொழிச் சொற்கள் கலந்தவை என இருபெருங் களங்களாகப் பிரிக்கலாம். பிற மொழிச் சொற்கள் கலவாத செஞ்சொற்கள் ஆய்வில் ஈடுபடும் ஆய்வாளர்கள், ஆய்ந்து வெளிக் கொணரும் கருத்துகளின் வெளிப்பாடுகளில் தனித் தமிழ் நடையைப் போற்றிப் பின்பற்றுவது எளிதாகும். காப்பியங்கள் மற்றும் பிற்காலக் கலப்புச் சொற்கள் மிகுந்த செய்யுள் நூல்களை ஆய்வோரின் நினைவும் நிலையும், தம் முயற்சி தமிழ் முயற்சி என்பதை மறக்காமலும் இதிலிருந்து மாறுபடாமலும் இருந்தாலேயே நற்றமிழ் நடை இயல்பாகவே அமையும். அடிப்படைக் களங்களில் காணப்படும் பிற மொழிச் சொற்களைத் தம் ஆய்வேட்டில் அப்படியே ஓர் ஆய்வாளர் கையாளுவாரேயானால், அவ்வாய்வேட்டில் ஆய்வாளரின் திறமும் முயற்சியும் இல்லாததாகவே கருதப்படும். உண்பொருளில் கற்கள் கலந்திருந்தால்-களைய வேண்டியது கடமையாகும். ஆய்வுக் களங்களில் கலந்திருக்கும் பிற மொழிச் சொற்களுக்கு இணையான—தம் பொருள் புலப்பாட்டுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களைத் தம் ஆய்வேட்டில் கையாள வேண்டும். இதற்குத் தேவை ஆய்வாளருக்குப் பயிற்சி மட்டுமல்ல; பல சொற் தேர்ச்சியுமாகும். அவ்வாறில்லாமல், புதுக்கவிதை போன்ற கலப்பு நடைக் களங்களில் ஈடுபடும் இன்றைய ஆய்வாளர், தம் ஆய்வேட்டிலும் கலப்பு நடையைக் கையாள வேண்டியதில்லை. ஜனனம். பிரசவம். புஷ்பம், நட்சத்

திரம் போன்ற சொற்கள் தம் களங்களில் கையாளப்பட்டிருந்தால் ஆய்வாளர் அவற்றை அப்படியே தம் ஆய்வேட்டில் மீண்டும் திருப்பித்தர வேண்டியதில்லை. அடிப்படை நூலின் மையக் கருத்தை மட்டும் ஏற்றுக்கொண்டு, அவற்றுக்கிணையான மாற்றுச் சொற்களைத் தம் நடையில் தரலாம். அப்பிறமொழிச் சொற் களைத் தொடர்ந்து, தெரிந்தோ தெரியாமலோ அடுத்த தலை முறையினர்க்கும் அறிமுகப்படுத்துவது ஆய்வாளர் முயற்சியாகக் கூடாது. புதுக்கவிதைகளில், பிறமொழிச் சொற்களே, தம் கவிதைக்கான அழகையும் அழுத்தத்தையும் தருவதாகப் பெரும் பாலான படைப்பாளர்கள் கருதிக் கையாண்டு வருகிறார்கள். அவற்றுக்கிணையான அழகையும் அழுத்தத்தையும் ஆற்றலையும் தமிழ்ச் சொற்களாலேயே தர முடியும் என்பதை ஆய்வாளர் விளக்கி நிறுவலாம். ஆய்வாளர்களும் படைப்பாளர்களின் வழியிலேயே கண்களை மூடிக்கொண்டு அவர் போகிற பக்க மெல்லாம் போக வேண்டுமென்பதில்லை, மொழிநலனிலிருந்து நழுவியும் விலகியும் போக முற்படும் படைப்பாளரைத் தடுத்து நிறுத்தித் தமிழ் நலம் காட்ட வேண்டியதும்—காக்க வேண்டியதும் ஆய்வாளரின் கடமையாகும். மொழிநலனிலிருந்து விலகி முரண் படாமல் படைப்பாளரின் கருத்தும் உணர்ச்சியும் கற்பனையும் வடிவமும் கொள்ளப்படவேண்டும். எண்ணமும் எழுத்தும் இன்றி யமையாதவை என்றாலும், இரண்டிலும் மொழி மரபும், நலமும், தூய்மையும் கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

ஆய்வுக் களத்தின் தோற்றம் பல காலத்திற்கு முன்னரே தோன்றியிருக்கலாம்; அக்களத்தின் அடிப்படைகள் பல்வேறு மாற்றங்களைக் கண்டு வந்திருக்கலாம்; அல்லது வளர்ந்திருக்கலாம். இன்னும் வருங்காலத்தில் அது பல்வேறு பக்கங்களிலிருந்து வேறு வேறு நிலைகளில் பார்க்கப்படலாம். எனவே ஆய்வுக் களத்தின் அடிப்படை நற்கூறுகளையும், செய்திகளையும் மட்டும் அப்படியே எடுத்துக் கொண்டு, ஆய்வாளர் தன் திறத்தையும் குறிப்பாகத் தனித்தமிழ் ஈடுபாடென்னுங் கடமையையும் இணைத்து, இக்கால எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவண்ணம் வழங்க வேண்டும். ஆய்வாளர் எத்துறை சார்ந்த எப்பொருள் பற்றிய ஆய்வுக்களத்தைத் தேர்ந் தெடுத்திருந்தாலும் அவையனைத்தினுள்ளும் அமைந்திருக்க வேண்டிய அடிப்படை உணர்வும் கடனும் தனித்தமிழ் நடை யாகும். தனித் தமிழ் நடையென்பது ஏதோ தனியொரு முயற்சி யல்ல; அது நற்றமிழ் நடை என்பதையே குறிக்கும். நற்றமிழில் காணப்படாத களங்களும், காட்டப்படாத ஆய்வுக் கருத்துகளும்

நற்சூழலில் பிறந்து வளராத பிள்ளைகளைப் போன்றவையே. வெறும் ஆய்வுண்மையை அடைவதும் அறிமுகப்படுத்துவதும் மட்டுமே ஆய்வு நோக்கமானால், அது முழுமையான உண்மையான ஆய்வுப் பணியும் ஆகாது. நற்றமிழில் வழங்கப்படாத ஆய்வுண்மைகள் அழகும் பொலிவும் அற்றவை மட்டுமல்ல; அழுக்கும் அவலமும் நிறைந்ததாகவே அவை கருதப்படும். வேண்டிய, வெளிக்கொணரப்பட வேண்டிய கருத்துக்களில் முழுமையான உண்மையும், தெளிவும் உறுதியும் இல்லாதது மட்டுமல்ல; அவற்றில் வேண்டாத குழப்பங்களும் விரும்பத்தகாத—தவறான தகவல்களுக்கான வழி வகைகளும் சேர்ந்தமைந்து விடும். ஆய்வு நடையின் அடிப்படைகளுள் முதன்மையான தெளிவு என்பதே இல்லாமல், சிக்கலும் செயற்கையும் சேரக் கலப்பு நடை வழி செய்து விடும்.

முனைப்பும் முழுமையுமில்லா அரைகுறைப் படிப்பும், அழகும் அழுத்தமுமில்லா அக்கறையற்ற போச்சுமே தனித்தமிழ் தழைக்காமைக்கும், கலப்பு நடை விழைவுக்கும் வேண்டுதலுக்கும் இடந்தந்தன. எந்த ஒரு மொழியிலும் அழுத்தமான பிடிப்பும் அழமான படிப்பும், அறிவார்ந்த முனைப்பும் கொண்ட ஒருவன், தன் எழுத்திலும் பேச்சிலும் வேறெந்த ஒரு மொழியின் கலப்பையும், துணையையும் விரும்பமாட்டான். ஒரே மொழியில் தன் உளக் கருத்துகளையும், உயர் கருத்துகளையும் வாரி வழங்கும் வல்லமை அவனுக்கு இயல்பாக வாய்த்துவிடும். சொல்வளமும், கையாளும் செயல் வளமும். சிந்தனை வளமும் இல்லாமலிருந்தால்தான் இன்னொரு மொழிக்கலப்பை எதிர்பார்த்து நிற்க வேண்டியிருக்கும்; அப்போதும்—அதிலும் நிறைவில்லாமல்-நிலையில்லாமல் திக்கித் திணர வேண்டியிருக்கும்.

அண்மைக் காலத் தமிழ் ஆய்வறிஞரது பல ஆய்வு முயற்சிகளில்—ஆய்வேடுகளில் அதுவும் குறிப்பாகத் தமிழ் இலக்கண இலக்கியங் குறித்த ஆய்வேடுகளிலேயே தனித் தமிழ்க் கையாளுகையும் நற்றமிழ் நடையும் இல்லாமலிருப்பது கொடுமையானது; வேதனையானது. ஆய்வடிப்படைக்களம் தமிழாயிருந்தும், ஆய்வாளர் முயற்சியில் ஆர்வமும் திறனுமின்றிக் கலப்புநடை காணப்படும் அவல நிலை இருக்கையில், ஆய்வுக் களங்களே கலப்படக் களங்களாயிருக்கையில், தமிழ் ஆய்வுப்படைப்புகளின் அவல நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? களம், அண்மைக்காலக் கலப்புக் களமாக இருந்தாலும். ஆய்வாளர் அடிமனத்தில் அருந்தமிழ்ப் பற்றும் உணர்வும் இருந்தால் படைக்கப்படும் ஆய்வேட்டில் தனித்தமிழ் தழைத்தே சிறக்கும்.

நல்லதை நல்லதால் விளக்கி வற்புறுத்த வேண்டும். அது போன்றே நற்றமிழ் உணர்வுகளையும் உண்மைகளையும் நற்றமிழா லேயே விளக்கமுறச் செய்ய வேண்டும். தமிழைக் கெடுத்துக் குலைத்துத் தகுதிகளைப் பெருக்குவதாகச் சொல்வதும், செய்வதும் தற்கொலைக்குப் பின்னர், ஒப்பனையழகினை எண்ணிப் பார்ப்ப தைப் போன்றதே. அது உண்மைப் பயனும் உயரிய தகுதியும் ஆகாது. பிறதுறை ஆய்வுகளைக் காட்டிலும், கவிதை, செய்யுள் தொடர்பான ஆய்வுக் களங்களில் நற்றமிழ் நடை நலம் வாய்ந்த ஆய்வேடுகள் அமைய-அமைக்க, வாய்ப்புகளும், வழிமுறைகளும் மிகுதி. அதனை மேலும் வளப்படுத்தவும், வனப்பூட்டவும் இன்றைய இளம் ஆய்வாளர்கள் உறுதியுடன் முன்வந்து முனைய வேண்டும்.

உரைநடையில் அமையும் கட்டுரைகள், தன் வரலாறுகள், பயணக் கட்டுரைகள் ஆகிய ஆய்வுக் களங்களில் கலப்பு நிகழ வாய்ப்புள்ளது. பெயர்கள், ஊர்ப்பெயர்கள், போக்குவரத்து, வண்டிகள் ஆகியவற்றின் பிறமொழிச் சொற்களைத் தவிர்க்க முடியாமல் சிக்கல் நேரலாம். செயல்களைக் கையாள்வதிலும் கண்டுபிடிப்பதிலும் தமிழ்மொழி—ஒலி மரபுகளைக் கருத்திற் கொண்டு சீர்மையைச் செய்ய வேண்டும். அருகிலேயே அடைப்புக் குறிக்குள் சரியான வடிவத்தையும் தர வேண்டும். அரசும், அரசு சார்ந்த அமைப்புகளும் முயன்று தந்திருக்கும் அறிவியற் கலைச் சொல்லாக்கங்களைக்கூடக் கற்றறிந்த ஆய்வாளர் கையாளத் தெரியாமல் தயங்குவதும் தடுமாறுவதும் ஒரு குறையே. ஆய்வாள ரின் முயற்சியும், உழைப்பும். அவரவர் ஆய்வுக்களம் தொடர்பான புதியபுதிய சொற்களைக் கண்டறியும் போக்கில் அமையவேண்டும். அமைப்புகள் கண்டறிந்த சொற்களை விட்டுத் தன்போக்கில் தனியொரு சொல்லைக் காண்பதும் கையாள்வதும் வீண் உழைப் பாகவும் வெற்றுக் காலக் கழிப்பாகவும் அமைவதுடன், வேண்டாத குழப்பங்களையும் கொண்டு வந்து குவித்து விடும்.

தமிழ் ஆய்வுக் களங்களில் தமிழ் மண்ணுக்கும், மரபுக்கும், மொழிக்கும், வாழ்வுக்கும் ஏற்ற (திறனாய்வு) ஆய்வுச் சிந்தனை களை அளவு கோலாகக் கொண்டும், அடியொற்றியும் செயல் படுவது முதன்மையானது. பிற நாட்டு—பிற மொழியாளரின் செய்திகளையும் சிந்தனைகளையும் தம் ஆய்வுக் களங்களில் கையாளும்போது அவற்றின் பொருத்த முணர்ந்தே பொறுப்புடன் செயலாற்ற வேண்டும். அவற்றுக்கிணையான - அறிவார்ந்த-இயல்

பான நற்றமிழ் வழக்குகளையும் எண்ணிப் பார்த்தால் பண்பாடு—மொழிநலன் ஆகிய போக்குகளில் இடையூறு நேராது; செயற்கைத் தன்மைகள் சேரா. இயல்பான ஒட்டத்தைத் தவிர்க்கும்—தடுக்கும்-தகர்க்கும் எந்த ஒரு சொல்லும் நடையும் ஆய்வுக்களத்திற்கு அருமையைச் செய்யாது; அழகைச் சேர்க்காது.

கதைகள், புதுக்கதைகள், நாடகங்கள் ஆகியவற்றில் அமையும் ஆய்வுக் களங்களிலேயே பெரும்பாலும் அயன்மொழிச் சொற்கள் கலந்து வருதலைக் காணலாம்; இது கவலைக்குரியதும் ஆகும். கதைச் சூழலும் களச்சூழலும், அண்மைக்கால அறிவியல் சூழலையும் சொற்களையும் சார்ந்து அமைவதால் இச்சிக்கல் நேருகிறது. இத்தகு களங்களின் படைப்பாளர்களே முதல் தவற்றிற்கும் குற்றச்சாட்டுக்கும் இடமாகின்றனர். அவர்கள் செய்யும் தவற்றிற்கு மேலும் மெருகூட்டும் முயற்சியில் ஆய்வாளர் செயல்படுவது வேதனையானதும் விரும்பத்தகாததும் ஆகும். அவர்தம் படைப்பிலுள்ள அயன்மொழிச் சொற்களை, ஆய்வாளர் மென்பதப்படுத்தி - பிற மொழிச் சொற்களுக்கு மெய்மையும் மேன்மையும் சேர்த்து அவற்றைத் தமிழாக்கித் தம் ஆய்வேடுகளை அமைக்க வேண்டும்.

ஆய்வுக் களத்தில் ஆய்வாளர் கண்ட உண்மைகளை ஆய்வாளர், ஆய்வுக் களம் அமைந்துள்ள நடையிலேயே உரைக்களம் உணர்த்தவும் வேண்டுமென்பதில்லை. ஆய்வுக்களம் தோன்றிய காலத்திலிருந்து ஆய்வாளர் காலத்திற்கிடையேயான—வளர்ந்து சிறந்துள்ள மொழி மேம்பாட்டு நிலைகளையும் உணர்வுகளையும் கருத்திற் கொண்டு ஆய்வாளர் தம் ஆய்வு நடையை ஆக்கி அமைக்க வேண்டும். ஆய்வுக் களங்களில் இருக்கும் எழிலைச் சிதைவுறாமல் அப்படியே காப்பாற்றி அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு செல்வதும், வேண்டிய இடங்களில் எழில் சேர்த்துத் தொண்டாற்றி அடுத்த தலைமுறையினருக்குத் துணை நிற்பதும் ஆய்வாளர் பொறுப்பாகும். இருக்கும் எழிலையும் கொடுத்து, இவர் முயற்சியும் இன்றி, அடுத்து வரும் தலைமுறையினர்க்கும் தகாதன செய்யும் வகையில் ஆய்வாளர் தம் நடையில் மொழிக் கலப்பைச் சேர்ப்பதும் செய்வதும் இன்று பல ஆய்வேடுகளில் காணப்படுதல் விரும்பத் தகாதது மட்டுமல்ல; வெறுத்து ஒதுக்கத் தக்கதுமாகும். எதையும் தாய்மொழியில் உணர முடியாதவரும், உணர்த்த முடியாதவரும் அறிவார்ந்த கல்வியாளராகக் கருதப்பட மாட்டார். அதிலும் ஆய்வாளர் என்னும்போது, அவர் பொறுப்பு இன்னும் கூடுகிறது.

சங்க இலக்கியங்களைக் களமாகக் கொண்டு அமைந்த— தொடக்க கால ஆய்வேடுகளில் தனித்தமிழையும், நற்றமிழ் நடையையும் சுண்டு மகிழலாம்.[7]

அடுத்து வந்த ஆய்வேடுகளிலும் இத்தகு இனிய நடையருமை களைக் காணலாம்.[8]

இத்தகு இனிய நிலையும் நடையும் மாறி, படிப்படியாக ஆய்வுக் களங்களின் தேர்வில், அண்மைக் காலப் படைப்புகள் இடம் பெறுகிற போது, களங்களில் கலந்திருக்கும் பிற மொழிச் சொற்கள் ஆய்வேடுகளிலும் இடம் பெற்றுள்ளமை காணலாம். தனித் தமிழுக்கு முரணான ஆய்வுப் போக்குகளும், தமிழ் ஆய்வுக் களங்களும் தமிழின் நலன் கெடுக்குமென்பதில் ஐயமில்லை. இவ்வளவு இயக்கங்களுக்கும் எழுச்சிகளுக்கும் படைப்புகளுக்கும் பின்னர்; தனித்தமிழ் போற்றாத ஆய்வுகளையும் களங்களையும்; ஆய்வு — தமிழாய்வு என நாம் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

''பயண நூற்கருத்துக்கள் முதல் மூலாதாரமாகவும் இந்நூற் கருத்துக்களுக்கு அரண் செய்யும் கருத்துக்களைக் கொண்டிருப்பன வற்றை இரண்டாம் மூலாதாரமாகவும் எடுத்தாளப்பெற்றிருக் கின்றன...'' எனவும், மற்றும் அனுபவம், வார்த்தைகள், பாத்திரங்

---

7. ''...இவள் இல்லறத்தி என்று சேய்மைக் கண்ணேயே முடிவு கொள்ளலாம், அடியாலும் முடியாலும் இன்மைக் குறியாலும் உண்மைக் குறியாலும் கன்னிமை கழிந்த மனையாட்டி என்பதனைத் தமிழ்ச் சமுதாயம் எல்லாரை யும் அறியச் செய்தது. மணமாகியாளைத் தோற்றத்தால் குமரியென மயங்கிவிடாதவாறும், அங்ஙனம் மயங்கிப் பொய்யும் வழுவும் மேற்கொள்ளாதவாறும் காணத் தடுப்புக் கண்டது தமிழ்ச் சமுதாயம்''—வ.சுப.மாணிக்கம் தமிழ்க் காதல், ப. 166.

8. (''...அவரின் (அண்ணா) உரையாடல்களை வாய்விட்டுப் படித்தால் பழகு தமிழின் உணர்ச்சிக் கனிவினை, உண்மை ஒளியினை, உயர்ந்த பண்பினை, உள்ளத்தோடுள்ளம் பேசும் ஈர்ப்பினை, உரத்த எண்ணத்தினை நன்கு அறிய லாம். (208)...நடையும் தெளிவும், சுருக்கமும், இனிமை யும், உணர்ச்சி ஊற்றமும், விரைவும் நம் உள்ளத்தைக் கவருகின்றன. (209)...அவரது சொற்களில் வெளிப் பூச்சோ, வெற்றாரவாரக் கற்பனைப் புனைவுகளோ கிடையா. அதே நேரத்தில் அவை மிகச் சுருக்கமாகவும் அழகாகவும், ஆழமாகவும் பாட்டழகைக் காட்டி நிற்கும். (216)... இரா. சனார்த்தனம்; அறிஞர் அண்ணா நாடகங் கள் ஓர் ஆராய்ச்சி. 1974)

கள், வாக்காயம், விமரிசனம், விஞ்ஞானம், பிரச்சினை, பிரச்சாரம் என்பன போன்ற பிற மொழிச் சொற்கள் தமிழ்ப் பேராசிரியர் களின் அண்மைக்கால ஆய்வேடுகளில் காணப்படுதல் விரும்பத்தக்க தல்ல. இவர்கள், இத்தகு சொற்களின் கலப்புக்குத் தங்கள் தமிழாய்வுக் களங்களின் தன்மை காட்டினாலும் அது சரியானதும் கொள்ளத்தக்கதும் அல்ல. ஆய்வுக்களம் எத்துறை சார்ந்ததாக இருந்தாலும், எம்மொழிக் கலப்பைக் கொண்டிருந்தாலும் அது தமிழ் ஆய்வுக் களமாக மாறுகிறபோது—தமிழ் ஆய்வறிஞரால் அணுகி ஆராயப்படுகிறபோது; அவர்தம் ஆய்வேட்டில் தனித்தமிழ் இடம்பெற்றே ஆகவேண்டும். இல்லையேல் இவர்களின் போக்கில் இனிய தமிழுணர்வு மறந்தும், தளர்ந்தும் யோயிருப்பது உண்மை யாகிவிடும். இத்தகு கலப்பினை, ஆய்வாளர் முதலில் தவிர்க்க வேண்டும்; இல்லையேல் நெறியாளரும் தேர்வாளரும் இவற்றைத் தட்டித் தடுத்க வேண்டும்.

தற்காலத் தமிழின் போக்கும் தமிழகத்தின் போக்கும் தலை கீழாயிருக்கிறது. தனித்தமிழ் படைப்புகளும், ஏடுகளும் இன்று போற்றுதலற்றுப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளன. தனித் தமிழ்ப் படைப்பாளர்கள், ஒதுக்கியும் ஒதுக்கப்பட்டும் கிடக்கின் றனர். இந்நிலை மாற வேண்டும். அரிய தனித் தமிழ்ப் படைப்புகள் தமிழாய்வுக் களங்களாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். படைப் பாளர்கள், தனித்தமிழ் எழுத்தாளராக உறுதிப்பாட்டோடு விளங்க வேண்டும். அவர்கள் துண்டுக் கொம்புகளைத் துணைக் கொம்புகளாகக் கருதிக் கலப்புநடையைக் கையாளுவார்களே யானால், காலப்போக்கில் அவர் நடை தட்டுப்பட்டுத் தாமே வீழ்வார்; தமிழும் வீழும்.

ஆய்வேடுகளைப் பதிப்பிக்கப் பொருளுதவி செய்யும் தமிழ் வளர்ச்சி இயக்ககம் போன்ற அமைப்புகள், இத்தகு கலப்பினைக் களைந்தாலன்றிப் பொருளுதவி இல்லையெனக் கூறி நெறிப்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்ற அமைப்புகள், மொழிக் கலப்பு நேராவண்ணம், ஆய்வாளரை ஆற்றுப்படுத்தும் வகையில், அவ்வப்போது அறிமுகமாகும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான இன்றமிழச் சொற்களை அறிமுகப்படுத்த வேண்டும். இத்தகு அமைப்புகளில் பணியாற்றுகிறவரும், ஆய்வறிஞரும் கல்வியாளர்களும், தமிழறிஞரும் ஆய்வேடுகள் மட்டுமல்லாது, தம் பிற துறைப் படைப்புகளைத் தனித்தமிழில் எழுதிவெளியிட்

டால் எழுதுவோரையும், இதழ்களையும், ஏடுகளையும் எழுத வற்புறுத்தினால்—இன்றைய இளைஞர்க்கு இவையே இனியதமிழ் ஆய்வுக் களமாகவும், ஏற்ற வழிகாட்டுதலாகவும் அமையும். பிறமொழி கலவாத தனித்தமிழ் நூல்களுக்கே பாடநூலாகும் சிறப்பையும், முன்னுரிமையையும் பல்கலைக்கழகங்கள் வழங்க வேண்டும். அரசு நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களில் முன்னுரிமையும், அளவில் மிகுதியும் தனித்தமிழ் நூல்களுக்கே எனச்சட்டம் இயற்றுதல் வேண்டும்.

முன்னர் வந்த ஆய்வேடுகளை முன்னேடுகளாகக் கண்டும் காட்டியும் தன் வழியில் தமிழ்ச் சிந்தனைகளை வளர்க்க வேண்டும். அவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு தமிழ்த் தொடர்களை அமைக்க வேண்டுமேயல்லாமல், அவற்றிலிருப்பன வற்றை அப்படியே எடுத்துக் கொள்வதாக அமைந்தால் தமிழ் ஆய்வுக் களத்தின் புது வரவுகளுக்கு வழியில்லாமற் போய்விடும். எண்ணிப் பார்க்கவும், புதியன அமைக்கவும் முயன்று செயலாற்ற வேண்டும். ஆய்வாளர் கடமை, தேடிக் கொடுப்பது மட்டுமல்ல; திறமானவற்றைப் படைத்துக் காட்டுவதுமாகும்.

தமிழ் ஆய்வாளர் தனித்தமிழில்—நற்றமிழில் (சரியான உச்சரிப்புகளோடு) பிழையின்றிப் பேசும் வல்லமை வாய்ந்தவராகவும் விளங்குதல் வேண்டும். நூற்றுக்கும் மேற்பட்ட வாய் மொழித் தேர்வுகளில் கலந்து கொண்டு கண்டபோது, பலர் பிற மொழிக் கலப்பின்றியும், பிழையின்றியும் பேச இயலாமல் இடர்ப் பட்டதைப் பார்க்க முடிந்தது.

"வேண்டா அயற் சொற்கலப்பும், மண்டிய சொற்குப்பையும், வற்றிய ஓசைத் தொடரும், செறிந்த தமிழாய்வுக்கு அழகு பயவா; அரண் செய்யா. பொடிமட்டை போலவும் பொற்பேழை போலவும் பொருளுக்கும் வைப்புக்கும் தொடர்பு உண்டு. எப்பட்டத்தினையும் தமிழில் எழுதும் இயற்கை வாய்ப்பினை இன்று நாம் பெற்றிருக்கின்றோம். ஆதலின் கிளவித் தேர்வும், கிளவியாக்கமும், நடைப்பெருமிதமும் ஆய்வு நாடிகட்கு இன்றியமையாதவை"[9] என்னும் தொடர்களை நினைவு கொண்டு,

---

9. வ.சுப. மாணிக்கம், மதிப்புரை, சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்.

ஆய்வாளரும், ஆய்வு நெறியாளரும், படைப்பாளரும் தனித்தமிழ் கார்க்கும் முயற்சியில் தண்ணீராக இருந்து அதனைத் தழைக்கச் செய்யலாம்; தடுப்புச் சுவராக இருந்து தகாதனவற்றைத் தடுத்துக் காத்தும் உதவலாம்.

பின்னிணைப்பு :

1. தமிழரின் தாயகம்—க.ப. அறவாணன்
2. மறைமலை அடிகளாரின் தனித்தமிழ்க் கொள்கை—இரா. இளங்குமரன்
3. பாவாணரும் தனித்தமிழும்—மு. தமிழ்க்குடிமகன்
4. தேவநேயப்பாவாணரின் சொல்லாய்வுகள்—இரா. இளங்குமரன்
5. உலக முதன் மொழி—கு. பூங்காவனம்
6. தமிழ் வரலாறு—தேவநேயப்பாவாணர்
7. சங்கத்தமிழ்—மு. கருணாநிதி
8. தமிழர்கள் மேல் நிகழ்ந்த பன்னாட்டுப் படையெடுப்புகள்—க.ப. அறவாணன்
9. ஒப்பியன் மொழிநூல்—தேவநேயப்பாவாணர்

x x x

தமிழ்—வடசொற்கள்

மாகறல் கார்த்திகேய முதலியார் (ஞானசாகரம்—1. இதழ் 7. 1902, பக். 1-3)

கி.ஆ.பெ. விசுவநாதம் (எது தமிழ் மரபு?—பக். 423-424)

x x x

தனித்தமிழ் இதழ்கள்

செந்தமிழ்ச் செல்வி—கழகம்
தமிழ்ப்பொழில்—கரந்தைத் தமிழ்ச் சங்கம்.
செந்தமிழ்—மதுரைத் தமிழ்ச் சங்கம்.
குயில்—பாவேந்தர்
வானம்பாடி—கோவேந்தன்
குறள் நெறி—இலக்குவனார்
தென்மொழி—பெருஞ்சித்திரனார்
தமிழ்ச்சிட்டு— ''
தமிழன்—செம்பியன்
வேந்தம்—தரங்கைப் பன்னீர்ச்செல்வன்
எழுச்சி—அறிவுறுவோன்
மலர்ச்சி—அரங்க. முருகையனார்
அறிவு, கைகாட்டி—தமிழ்க்குடிமகன்
முதன்மொழி—சிறப்பாசிரியர் பாவாணர்

மாணாக்கன்—வி.பொ. பழனிவேலனார்
பாவை, வலம்புரி—இறைக்குருவனார்
பாரதிதாசன் குயில்—மன்னர்மன்னன்
பூஞ்சோலை—காரை இறையடியான்
செம்பரிதி—அறவாழி
தமிழ்ப்பறை—அடியார்க்கருளி
வண்ணச்சிறகு—மு. வளவன்
வல்லமை—மு. மகிழரசன்
முப்பால் ஒளி—கா. அப்பாதுரை
நித்திலம்—அரங்க. முருகையனார்

x x x

சோமசுந்தரபாரதியார்—நற்றமிழ், மலர்நிலையம், சென்னை, 1957

சோமலெ—1. தமிழ் இதழ்கள்—சென்னைப் பல்கலைக்கழகம் 1975
2. வளரும் தமிழ்—பாரி—சென்னை, 1968.

வி.மி.ஞானப்பிரகாசம்—க.ப. அறவாணன்—தற்காலத் தமிழ் முன்னோடிகள், சென்னை, 1975.

தங்கமணியன்—பத்திரிகைத் தமிழ், மாணிக்கம் பதிப்பகம். திருச்சி-1978.

மு. தமிழ்க்குடிமகன்—பாவாணரும் தனித்தமிழும்—உலகத் தமிழா ராய்ச்சி நிறுவனம், சென்னை. 1985.

x x x

தமிழமல்லன்—1. தனித்தமிழ்—நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை, 1978.
2. தனித்தமிழ்ப் படைப்பாய்வு—தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி, 1984.
3. தனித்தமிழ் வளர்ச்சி—தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி-1984.

தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு—தமிழ்ப் பாதுகாப்பு வெளியீடு, சென்னை, 1984,

ஞா, தேவநேயன்—இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்—கழகம் சென்னை, 1968.

தமிழ் வரலாறு, நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி-1967.

ந.சி. நல்லப்பன்.—தமிழ் மொழியும் அதன் சீரழிப்பாளர்களும். குறிஞ்சி வெளியீடு—புதுக்கோட்டை-1982.

அ.சி. பரந்தாமனார்.—நல்ல தமிழ் எழுத வேண்டுமா? பாரி நிலையம், சென்னை-1984.

இரா, மதிவாணன்,—தமிழ் வளர்ச்சி, தாய்நாடு பதிப்பகம்-சென்னை, 1978.

கோ. முத்துப்பிள்ளை, அரியணையில் அழகு தமிழ்—கழகம் சென்னை, 1971.

x x x

1. திருமாறன்,கு —தனித்தமிழ் இயக்கமும் திராவிட இயக்கமும்.
2. Nambi Arooran. K.—Tamil Renaissance and Dravidian Nationalism 1905-1944. with special reference to the works of Maraimalai Adikal. Ph.D. thesis, University of Madras-1976-(Partly Published)
3. தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்—சாரதாநம்பி ஆரூரான் பி.எச்.டி. மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், அக். 1985.
4. பெருஞ்சித்திரனாரின் பாவியங்கள்—இரா. சீனிவாசன், பச்சை—செ. 1982

x x x

1. க. சிவத்தம்பி,—தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி, சென்னை புக் ஹவுஸ், சென்னை-1979
2. ம.பொ.சி.—விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு-பூங்கொடிப் பதிப்பகம், சென்னை-1978
3. இரா.தண்டாயுதம்—தற்காலத் தமிழ்இலக்கியம்—தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-1976
4. தமிழமல்லன்—தனித்தமிழ், புதுவை-1978
5. டி.எம். பார்த்தசாரதி,—திமுக வரலாறு—பாரிநிலையம், சென்னை-1973
6. கா. அப்பாதுரை—வளரும் தமிழ், முத்து புத்தகநிலையம், திருச்சி-1960
7. சோம. இளவரசு—இருபது நூற்றாண்டுகளில் தமிழ்—மணிவாசகர் நூலகம், சிதம்பரம்-1970
8. ந. சி. கந்தையா பிள்ளை—1. தமிழ் பழமையும் புதுமையும்—முத்தமிழ் நிலையம், சென்னை. 1946.
   2. நமது மொழி—கழகம்,1973
9. சாலை. இளந்திரையன்—புதுத்தமிழ் முதல்வர்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை-1972
10. ம.பொ.சி.—1. இன்பத் தமிழா? இந்தி ஆங்கிலமா?—மாதவி பதிப்பகம், சென்னை, 1963
    2. தமிழும் கலப்படமும்—இன்ப நிலையம், சென்னை, 1960.
    3. விடுதலைப்போரில் தமிழ் வளர்ந்த வரலாறு—இன்பநிலையம், சென்னை-1970.
11. சுப்பையாபிள்ளை—தமிழ் வளர்ச்சிக்கான அறிவிப்பு—கழகம், சென்னை, 1968,

நடையியல்

வ. ஜெயா

மொழியியலும் இலக்கியத் திறனாய்வும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட நிலையில் மலர்ந்த துறையே நடையியலாகும். தகவல் தொடர்பியல், மொழியியல், நாட்டுப்புறவியல், ஒப்பியல், மொழிபெயர்ப்பியல், அறிவியல் முதலான துறைகளில் நடையியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மொழியமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு என்ற ஒருங்கிணைந்த அமைப்பினை விளக்குவதே தெளிவான நடையியலாகின்றது.

முன்னுரை

'இலக்கியம் என்பது மக்களின் வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுவது என்பர் ஒரு சாரார். படிப்போர்க்கு இன்பம் தரும் வகையில் நுண்ணறிவு வாய்ந்த அறிஞர் தம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் முறைப்படுத்தி எழுதுவதே இலக்கியம் என்பார் ஸ்டா போர்டு புரூக்' என்று ஞானமூர்த்தி குறிப்பிடுகிறார் (1986:25). இவ்வாறு இயற்றப்பட்ட இலக்கியங்களைத் திறனாய்வு செய்தும் மதிப்பீடு செய்தும் அவற்றில் காணப்படும் மையக் கருத்துக்களை வெளிக்கொணர்வது ஒருவகை நோக்கு. இதனால் மட்டும் படைப்பாளரின் முழுத்திறனை அறிய முடியாது. மேலும், இந்நோக்கு கருத்துச் சுவைப்பிற்கு அதிக பலனும் தராது. இலக்கியச் சுவைப்பிற்கு அதிக பயன்தரும் மற்றொரு முறையே நடையியலாய்வு. இதன் மூலம் இலக்கியத்தைச் சுவைக்கவும் திறனாய்வு செய்யவும் முடியும். நடை பற்றிய சிந்தனைகள் பல்வேறு மொழிப்பிரிவினரிடையே பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு விதமாக உருப்பெற்று வந்துள்ளன. நடையியல் என்பது பழம்பெருந்துறையாகக் கருதப்பட்டாலும் அதில் பேசப்படும் கோட்பாடுகள், இலக்கண-இலக்கிய விளக்கங்கள், அணுகுமுறைகள் முதலானவற்றில், இன்றுங்கூட ஒருமித்த கருத்துக்களைக் காண முடியவில்லை.

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் கிரேக்கர் நடையைப் புலப் பாட்டு நெறியின் ஒரு சிறு பகுதியாகக் கண்டனர். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ஆங்கிலப் புலப்பாட்டு நெறியாளர் நடை யியலும் புலப்பாட்டு நெறியும் ஒத்திருப்பதாகக் கண்டனர். கி.பி.17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சு இலக்கியத்திறனாய் வாளரால் செய்யுளியல் கோட்பாடு வளர்க்கப்பட்டு, அதன் வழி நடையியல் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெறலாயிற்று.

இந்திய மரபில் தமிழில் தொல்காப்பியர் நடை பற்றிய சிந்தனைகளைச் செய்யுளியலிலேயே வெளிப்படுத்துகிறார். சமஸ் கிருதத்தில் ஒரு சிலர் நடையை அணியியலின் ஒரு பகுதியாகக் காண்கின்றனர். ஆனால், நடை பற்றிய செய்திகள் பெரும்பாலும் செய்யுளியலிலேயே பேசப்படுவதாயிற்று இதனை நோக்கும்போது நடை பற்றிய சிந்தனைகள் செய்யுள் அல்லது இலக்கியச் சுவைப்பு என்ற நிலையிலேயே வளர்ந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. அத்தகைய நடையியலுக்கு இதுதான் வரைவிலக்கணம் என்று முறையாகவும் நிறைவாகவும் வரையறுக்க முடியவில்லை. பல்வேறு அறிஞர் பல்வேறு விதமாக நடைக்கு விளக்கங்கள் தருகின்றனர். எடுத்துக்காட்டாக, ''சொற்களைத் தொகுக்கும் முறையே'' நடை என்கிறார் பொன்னுத்துரை (1966:7). 'நடை என்பது எழுத்தாளரின் பல்வேறு வகையான படைப்புக்களைப் படிக்கும் நிலையில் படிப்போரைக் கவரும் — வயப்படுத்தும் கருவி யாகும்' என்பார் கிப்பன் எட்வர்ட் (1971:416). 'அழகிய செஞ் சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் கருத்தினை உணர்த்த வல்லதே சிறந்த நடையாகும்' என்கிறார் ஹ்யூம் (1972:16). ''நடை என்பது கவிஞனின் தனித்தன்மை; கவிஞன் உணர்த்தும் உத்தி; இலக்கிய உச்சநயம்'' என்றுரைப்பார் மிடில்டன் மர்ரே (1972:7).

பாரதி கவிதை நடை, உரைநடை இவ்வாறெல்லாம் அமைய வேண்டும் என்று சில நடையியல் கோட்பாடுகளைத் தமது படைப்புக்களில் தந்து விளக்கியுள்ளார், முதலில் நடையானது எளிமையாகவும் யாவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் இருத்தல் வேண்டும் என்பதைச் சொல்ல வந்த நிலையில் ''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள

தமிழ் மக்களெல்லாம் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமல் நடத்துதல் வேண்டும்' (1984:312) என்று கவிதை நடைக்கு வரையறை தருகின்றார். உரைநடையைப் பற்றிக்கூறும் போது "கூடியவரை பேசுவது போலவே எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி; ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிக்கை விஷயம் எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது" (1940:390) என்று விளக்குகிறார். மேலும் நடையானது ஒளி, தெளிவு, தன்மை, ஒழுக்கம் நான்கும் உடையதாக இருக்க வேண்டும் (1940:390-91) என்றும் கூறுகின்றார் பாரதி. இவ்வாறு நடை என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் தரப்படுகின்றன.

இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மொழியை மட்டும் எடுத்துக்கொண்டு பல்வேறு இலக்கிய ஆசிரியர் தங்களது கருத்துக்களை எவ்வாறெல்லாம் விளக்கியுள்ளனர் என்பதை ஆய்வதே தொடக்க கால நடையியல் ஆய்வாக அமைந்திருந்தது. அந்த வரிசையில் இன்று நடையியல் பற்றி சில ஆய்வாளர் நூல்களை வெளியிட்டு விளக்கம் தந்துள்ளனர். எடுத்துக்காட்டாக. 1) அண்ணாவின் மொழிநடை 2) அண்ணாவின் கொடை 3) திரு.வி.க.—பாரதி நடையியற் சிந்தனைகள் 4) பாரதி நடையியல் 5) நடையியல் அறிமுகம் 6) சங்க இலக்கியநடை 7) கண்ணதாசன் கவிதை நடை 8) பாரதி மொழி நடை 9) நடையியல் 10) தமிழ் நடையியல் 11) திருக்குறள் நடையியல் 12) புதுக்கவிதையில் நடையியல் 13) பத்திரிகை மொழி நடை 14) பாட்டிலே புரட்சி போன்ற நூல்களும் சில ஆய்வுக்கட்டுரைகளும் நடையியல் தொடர்பாக வெளிவந்துள்ளன. "பாரதி—பாரதிதாசன் மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும்—நடையியல் ஆய்வு" என்பது இரு ஆசிரியர்களின் படைப்புக்களை எடுத்துக் கொண்டு அவர்களது நடை எவ்வாறு மாறுபடுகிறது என்பதை விளக்கிக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. (கருணாகரன், 1987). தமிழ் நடையைப் பற்றி ஆங்கிலத்திலும் சில கட்டுரைகள் வெளிவந்துள்ளன (திருமலை, 1968). இதன்வழி நடையமைப்பு, நடை உத்திகள், நடையின் பண்புகள் போன்றவற்றை ஒப்பு நோக்கி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

நீண்ட காலமாக மொழிநடை ஆய்வு இலக்கியத்துடன் மட்டும் தொடர்பு படுத்தப்பட்டு வந்ததன் விளைவாக இலக்கியச் சுவைப்

பிற்கு இதுவொரு முறை என்ற எண்ணமே இருந்து வந்தது. இதனால்தான் இதில் குறிப்பிட்ட பெரும்பாலான புத்தகங்கள் வெறும் மொழியமைப்பை மட்டுமே எடுத்துக் கொண்டு, நடையமைப்பை விளக்க முற்பட்டுள்ளன. நடையமைப்பை விளக்குவதன் மூலம் ஆசிரியரின் முழுக்கருத்தையும் அறிந்து கொள்ள இயலாது—வெளிப்படுத்த இயலாது. இந்தப் புத்தகங்களின் மையக் கருத்துக்களின் அடிப்படையில், 1) நடை வகைகள் 2) நடை விளக்க உத்திகள் 3) ஒப்பியல் நோக்கில் நடை 4) பயன்பாட்டு அடிப்படையில் நடை 5) அமைப்பியல் அடிப்படையில் நடை 6) நடையியலாய்வின் வளர்ச்சி 7) பொருளடிப்படையில் நடையியல் 8) நடையியலாய்வு அணுகுமுறைகளில் புதுமை என்று பகுக்கலாம்.

மொழித்திறன் மற்றும் மொழிப்பயன்பாடு என்பவற்றையும் ஒரு படைப்பாளி கண்டறிய வேண்டும். அவ்வாறு கண்டறிந்தால் தான் அப்படைப்பாளன் என்ன கருத்தை எவ்வாறு, எப்படி மக்களுக்குப் புரிய வைக்கின்றான் என்பதை அறிந்து கொள்ள முடியும். மேலை நாடுகளில் நடையியல் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் நம் நாட்டில் நடையியல் பற்றிய ஆய்வுகள் அதிகம் வெளிவரவில்லை. மேலும் நடையியலுக்குச் சரியான வரைவிலக்கணமும் ஏற்படுத்தப்பட வில்லை. அதனால் வெறும் மொழியமைப்பை மட்டும் எடுத்து விளக்கி இதுவே நடையியல் என்று கூறியுள்ளதை மேற்காட்டிய நூல்கள் பலவும் எடுத்துக்காட்டுகின்றன. மொழிப் பயன்பாடு பற்றி ஒரு சில நூல்களே நடையியல் விளக்கத்தில் கூறியுள்ளன.

நடையியல் ஆய்வுச்சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

நடை என்றதும் அது இலக்கியத்தோடு தொடர்புடையது என்ற எண்ணமே நமக்கு முதலில் தோன்றுகிறது. நீண்ட காலமாக மொழி நடை ஆய்வு இலக்கியத்துடன் மட்டும் தொடர்பு படுத்தப் பட்டு வந்ததன் விளைவே இது எனலாம். இலக்கிய விமர்சகரி மட்டுமே நெடுங்காலமாக நடை பற்றிக் கவனம் செலுத்தி வந்துள்ளனர். இதனால் இலக்கியம் அல்லாத துறைகளில் பயன் படுத்தப்பட்டு வரும் மொழிக்கும் நடைக்கும் தொடர்பு ஏதுமில்லை என்ற எண்ணம் பெரும்பாலும் இருந்து வந்தது. நடை, இலக்கியத் திற்கு மட்டுமே உரியது என்ற மனப்பாங்கின் காரணமாக, தனித் தனி இலக்கியங்கள் மற்றும் ஆசிரியர்களுடனேயே நாம் நடையைப் பெரிதும் தொடர்புபடுத்தி நோக்குகின்றோம். எடுத்துக்காட்டாக,

ஜானகிராமன் நடை, ஜெயகாந்தன் நடை, மு.வ. நடை, கலைஞர் நடை, அண்ணா நடை என்றெல்லாம் குறிப்பிடும் போது இக் கருத்தையே நாம் வெளிப்படுத்துகிறாம். இவ்வகையில் ஒவ்வொரு எழுத்தாளனிடமும் கலைஞனிடமும்காணப்படும் தனிப்பண்புகளே நடை என்று கருதப்படுகின்றது. 'நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்தவல்லது. அவரை இனங்கண்டு கொள்ளும் வகையில் அவருக்கே உரியதாக இருக்கும் வெளிப் பாட்டின் மொழிப்பாங்கே'' என்கிறார் மர்ரே (1972:8).

நடை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியோடும் குழுவினரோடும் கூட தொடர்பு படுத்தி நோக்கப்படுகின்றது. சங்கத் தமிழ் நடை, இடைக்காலத் தமிழ் நடை, 19ஆம் நூற்றாண்டு உரை நடை என்றெல்லாம் குறிப்பிடும் போதும், தி.மு.க. நடை, தி,க. நடை. கம்யூனிஸ்ட்டு நடை, தனித்தமிழ் நடை என்று கூறும் போதும் இந் நோக்கினையே நாம் புலப்படுத்துகிறோம். இவை எல்லாவற்றிற் கும் மேலாக நல்ல நடை, மோசமான நடை, அழகு நடை, அலங்கார நடை, அடுக்கு மொழி நடை என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட மொழிப் பயன்பாடு பற்றிய மதிப்பீட்டு முறையிலும் நடை என்ற சொல்லை நாம் பயன்படுத்துகின்றோம் என்கிறார் நுஃமான் (1985:78).

நடை பற்றிய சில வரைவிலக்கணங்கள் இன்று காணப் படுகின்றன. பொது மொழியினை இலக்கிய மொழியாக மாற்றும் போது ஏற்படும் மரபுப் பிறழ்ச்சிகளையே நடையியல் சிறப்புக் கூறுகள் என்பார் ஹாலிடே (1964:303). நடை என்பது எண்ணம்/ கருத்து எனும் கருவினைச் சுற்றி அமைந்துள்ள ஒரு கூடு. வேறு பட்ட வடிவங்களுக்கிடையே ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் உத்தி. ஒரு படைப்பாளியின் படைப்பிலக்கியத்தில் காணப்படும் உறவுகள் என்பார் என்க்விஸ்ட் (1964:30). சில அகராதிகளும் நடை பற்றி விளக்கங்கள் தந்துள்ளன. ''தனக்கேயுரிய ஒரு தனித்தன்மை வாய்ந்த முறையினால் தனது கருத்துக்களை ஓர் ஆசிரியன் வெளிப் படுத்தும் முறையே நடையாகும்'' என்று சேம்பர்ஸ் அகராதி (1970;461) விளக்கம் தருகிறது.

இவ்வாறு நடையினைப் பற்றிப் பல்வேறு ஆய்வாளரும் அகராதிகளும் விளக்கம் தந்துள்ள போதிலும், நடைபற்றிய வரை விலக்கணம் எதுவும் இதுவரை விவாதத்திற்கிடமின்றி அனைவ ராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே முதலில், நடை என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தருவதாக அமையவேண்டும். எல்லோரும் ஏற்றுக்கொள்கின்ற வகையில் அமைக்க வேண்டும்,

கவிதையின் மொழி நடை வேறு: உடை நடையின் மொழி நடை வேறு. இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடு என்ன? ஒவ்வொன்றிற்குமுள்ள தனிச்சிறப்புடைய நடையியற் கூறுகள் எவை எவைஎன்று விளக்கப்பட வேண்டும்.

பொதுவாக எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்ப மொழி நடை மாறுவதுண்டு. அதில் கையாளப்பட்டுள்ள சொற்கள், உத்தி முறைகள் வேறுபட்டுக் காணப்படும். ஆகவே வேறுபடும் முறையினை/நடையமைப்பினைத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டும்.

ஒவ்வொரு படைப்பாளனும் தமது நடையில் வேறுபடுவ துண்டு. கருத்துக்களை யாருக்காக, எப்படி ஓர் ஆசிரியர் சொல்லி யுள்ளார் என்பதையும், மக்களுக்கு எவ்வாறு கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் என்பதையும் அவரது கருத்துப் புலப் பாட்டுத் திறனையும் கண்டறிதல் வேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் வழக்கில் இருந்து வரும் மொழிப் பயன்பாட்டினைத் திறமையாகக் கண்டறிவதற்குச் சமுதாய மொழியியல் உதவியாக இருக்கின்றது. ஆகவே அதன் கோட்பாடு களைக் கொண்டு மொழியமைப்பில் காணப்படும் கொள்கைகளை யும் கோட்பாடுகளையும் தெளிவாக விளக்குதல் வேண்டும்.

சமுதாயப் பின்னணி—சமுதாய வளர்ச்சி—சமுதாய அமைப்பு இவற்றின் அடிப்படையில் அமைகின்ற மொழிப்பயன்பாட்டினை யும் அறிதல் வேண்டும்.

படைப்பாளியின் உணர்ச்சி—கருத்து இவற்றிற்கேற்ப அவன் பயன்படுத்தும் மொழியமைப்பு, மொழிப்பயன்பாடு இவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் கண்டறிய வேண்டும்.

இன்று வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் துறைகளில் பயன் படுத்தப்படும் மொழியை அறிவதற்கு உறுதுணையாக இருப்பது அறிவியல் கட்டுரைகள், சொற்பொழிவுகள், விளக்கங்கள், அறிவியல் நூல்கள் போன்றவை, இவற்றில் கையாளப்படும் மொழியும் இலக்கியத்தில் கையாளப்படும் மொழியும் எவ்வாறு வேறுபடுகிறது அறிவியல் கருத்துக்கள் எந்த வகையில் இவற்றில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன என்பதையும் தெளிவாக விளக்குதல் வேண்டும். செய்யுளின் சிறப்பு அமைப்புகள் அணிகள், யாப்பு போன்றவற்றை எவ்வாறு ஒவ்வொரு படைப்பாளியும் தான் எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப மாற்றுகின்றான் என்பதை

யும் இவை நடையியலுக்கு எவ்வாறு உறுதுணையாக விளங்கு கின்றன என்பதையும் கண்டறிதல் வேண்டும். இவற்றையெல்லாம் ஆய்வுச்சிக்கல்களாகவும் பொருளாகவும் கொண்டு நடையியலாய்வு மேற்கொள்ளப்படுதல் தேவை என்பதனை உணர முடிகிறது.

நடையியலாய்வில் இரு முக்கியமான பிரிவுகள் இடம் பெறுகின்றன:

(1) மொழியியல் அணுகுமுறை (2) இலக்கிய அணுகுமுறை.

மொழியியல் அணுகுமுறையில் இரண்டு உட்பிரிவுகள் இடம் பெறுகின்றன: (1) அமைப்பு மொழியியல் அணுகுமுறை (Structural linguistic approach), (2) சமுதாய மொழியியல் அணுகுமுறை (sociolinguistic approach).

ஒரு படைப்பாளியின் உணர்வினையும் கருத்தினையும் தெளிவாக அறிந்து கொள்வதற்குச் சமுதாய மொழியியல் அணுகுமுறை மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. மேலும், இலக்கியங்களைச் சுவைப்பதற்கும் அவற்றில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் நடையியல் பெருந்துணையாக இருந்து வருகிறது. மொழியியல் கொள்கைகளைப் பயன்படுத்தி மொழியை வளப்படுத்துவதற்கு இத்தகைய ஆய்வு பயனுடையதாக அமையும். எடுத்துக்காட்டாக, ஆட்சித்துறை, கல்வித்துறை, தகவல் தொடர்புத்துறை போன்றவற்றிற்கு மொழியைத் தேர்ந்தெடுத்தல், எளிமையாக்கம்—புதுமையாக்கம் செய்தல் போன்ற கொள்கைகளின் மூலம் மக்கள் எளிதில் அறிந்து/புரிந்து கொள்ளக்கூடிய சொற்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இத்தகைய ஆய்வுகள் அமையும். ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்கள் இருக்கும் போது அதனை நிலைபேறாக்கம் செய்வதற்கும் இத்தகைய ஆய்வு பயனுள்ளதாக அமையும். மொழித்திட்டமிடுவோருக்குச் சொற்களின் பயன்பாடு குறித்துப் பரிந்துரை செய்யலாம். இதனால் மொழிக்கூறுகள் பரவலாக்கம்பெறும்—அவற்றின் பயன்பாடு நிலை பேறாக்கம் பெறும்—இதன்வழி மொழிப்பயன்பாடு எளிமையும் ஆற்றலும் பெறும்—இறுதியில் இதன் வழி மொழி சீரான வளர்ச்சி யடையும்.

விரிவான நிலையில் இனி செய்யப்பட வேண்டிய ஆய்வுகள்

இலக்கியங்களைச் சுவைப்பதற்கும் அவற்றில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை அறிந்து கொள்வதற்கும் மொழிநடை—அது குறித்த ஆய்வுகள் பெருந்துணையாக இருந்து வருகின்றன.

மொழியியலும் இலக்கியத்திறனாய்வும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்ட நிலையில் மலர்ந்த துறையே நடையியலாகும். பொதுவாக, ஒரு படைப்பாளியையும் அவர்தம் கருத்தையும் ஆய்வதைத் திறனாய்வாளரும், மொழியாகிய கருவியை ஆய்வதை மொழியியலாரும் தத்தம் அணுகுமுறைகளாக மேற்கொண்டாலும் இருவருமே தனித்து நின்று தீர்வு காணமுடியாத சில சிக்கல்கள் இலக்கியச் சுவைப்பில் காணப்படுவதுண்டு. சில வேளைகளில் ஒருவரது எல்லைக்குள் மற்றொருவர் நுழைந்துவிடக்கூடிய வாய்ப்பும் உண்டு. இப்படிப்பட்ட மயக்கங்கள் ஏற்படும் பொழுதே நடையியல் செயல்படுகிறது என்பார் நீதிவாணன் (1983 : 15). இதனால் குழப்பங்கள் ஏதும் ஏற்பட்டு விடுவதில்லை. மொழியியல் உத்திகள் செயல்படும் போது உருவமும், திறனாய்வு உத்திகள் செயல்படும்போது கருத்தும் முதலிடம் பெறுகின்றன. எங்கும் அறிவியல் வேட்கை வளர்ந்து வரும் இந்நாளில் நடையியலும் அத்தகையதொரு வேட்கைக்கு உள்ளாவது இயற்கையே. அறிவியல் மதிப்பீடாக நிகழ்த்தப்படும் நடையியல் ஆய்வு முடிவுகள் இலக்கியச் சுவைப்பிற்கு மட்டுமின்றி வேற்று மொழியைக் கற்பித்தலுக்கும் பல்துறை மொழிப்பயன்பாட்டின் ஆற்றலுக்கும் மிகவும் பயன்படும் என்று எதிர்பார்க்கலாம்.

மொழியானது இலக்கியங்களில் மட்டுமல்லாது சமுதாயவியல், அறிவியல், ஆட்சித்துறை, பண்பாடு, தகவல் தொடர்பு, நாட்டுப்புறவியல் போன்ற பல்துறைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. காலத்தின் தேவையையும் சமுதாய முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு ஒரு மொழியின் வாயிலாகப் பல்துறை அறிவும் வெளிப்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, அறிவியல் தொழில் நுட்பவியல் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் மொழியமைப்பு இலக்கிய மொழியமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டு நிற்பதாகும். இதற்குக் காரணம் இத்துறையின் பயன்பாட்டில் இடம்பெறும் மொழி, பொருட் குழப்பத்தை அறவே தவிர்ப்பதாகவும் தேவையற்ற மொழிக்கூறுகளையும் வழக்கொழிந்த மொழிக்கூறுகளையும் நீக்கியதாகவும், எளிய இலக்கண விதிகளை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும்.

தகவல் தொடர்பில் நடையியலாய்வு

தகவல் தொடர்பியலில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், அறிக்கைகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் போன்றவை அடங்கும். இன்றைய தமிழ்ப்பத்திரிகைகளை

மூன்றாகப் பிரிக்கலாம். மக்கள் தமிழிலேயே வெளிவரும் பத்திரிகைகள் எதுவும் இன்று தமிழ்நாட்டில் இல்லை. மக்கள் தமிழைச் சிற்சில இடங்களில் பயன்படுத்தும் பத்திரிகைகள் முதல் வகையைச் சார்ந்தவை. இரண்டாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் எப்போதும் இலக்கியத் தமிழையே பயன் படுத்துபவையாகும். எந்தப் பொருளைப் பற்றி எழுதினாலும் இலக்கியத் தமிழினை இவை பயன்படுத்துகின்றன. மூன்றாவது பிரிவைச் சார்ந்த பத்திரிகைகள் பண்டித நடையிலே எழுதுவன. இவ்விதழ்களில் காணப்படும் மொழிநடையை ஆராய்தற்கும் நடையியல் கோட்பாடுகள் உதவுகின்றன. பத்திரிகையில் காணப் படும் எளிமையாக்கம், நிலைபேறாக்கம், புதுமையாக்கம், கடன் சொற்கள், தன்னினமாக்கம். இலக்கிய வழக்குச் சொற்களின் பயன்பாடு ஆகியவற்றை இனங்காண நடையியல் ஆய்வு பயன் படுகிறது. பொதுவாகச் சொன்னால் ஒரு நாட்டின் அரசியல், பொருளாதார—சமூக மாற்றங்களுக்குத் தகவல் தொடர்புச் சாதனங்கள் வெகுவாகத் துணை புரிகின்றன. இவ்வாறு பயன் படும் சாதனங்கள் எல்லாமே, குறிப்பாக மொழியை வைத்தே தத்தம் கருத்துக்களை வெளியிடுகின்றன/எடுத்துரைக்கின்றன. எல்லாச் செய்திகளுக்கும் ஆதாரமாக அமைந்திருப்பது மொழி. ஆகவே பல ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான மக்களிடையே பேசும் இச்சாதனங்களின் மொழி எவ்வாறு அமைந்திருக்க வேண்டும், மொழி நடை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிய தீர்க்கமான முடிவுடன் நாம் செயலாற்ற வேண்டும். செய்திப்பரிமாற்றத்தின் வெற்றி அதில் கையாளப்படும் மொழி யைப் பொறுத்தே அமைகிறது. ஆகவே, இதில் கையாளப்பட்டி ருக்கும் மொழிநடையை ஆராய நடையியல் ஆய்வு துணை புரிகின்றது. இதன்மூலம் மொழிப்பயன்பாடு அதிகரிக்கும்— மொழிப்பயன்பாடு அதிகரிக்கும் பொழுது செய்திப் பரிமாற்றம் சீராகவும் விரைவாகவும் நிறைவாகவும் நடைபெறும் சூழ்நிலை ஏற்படும். இதன்வழி சமுதாயப் பயன் கூடும்.

மொழியியல்

இன்று வெகுவாக வளர்ந்து வரும் துறைகளுள் ஒன்று மொழி யியலாகும். சமுதாய மொழியியல் (sociolinguistics), விளக்க மொழியியல் (descriptive linguistics), வரலாற்று மொழியியல் (historical linguistics), பயன்பாட்டு மொழியியல் (applied linguistics), கணிப்பான் மொழியியல் (computational

linguistics) போன்ற பல பிரிவுகளாக மொழியியல் விரிந்து காணப் படுகிறது. பயன்பாட்டு மொழியியல் வகையைச் சார்ந்ததே நடையியலாகும். இது மொழியியலின் ஒரு பிரிவாகும். நடையியல் உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு கவிஞனை அல்லது ஆசிரியனை எளிதில் இனங்கண்டு கொள்ள முடியும். அவரது மொழியமைப்பு, மொழிப்பயன்பாடு இரண்டினையும் இதன் மூலம் அறியமுடியும். அதற்குத் துணை செய்வதே நடையியலாகும்.

இன்றைய நடையியலாய்வு பெருமளவில் மொழியமைப்பு அடிப்படையில் அமைந்துவருவதை உல்மான் (1971), டேவிட் கிரிஸ்டல் (1966) போன்றோர் விளக்குகின்றனர். பல்வேறு மொழியியற்கூறுகளில் காணப்படும் பொதுமை மற்றும் தனித் தன்மை அல்லது விலகல் இவற்றின் அடிப்படையில் மொழிநடை சிறப்பாக விளக்கப்படுகிறது. இதனை நாம் பல்வேறு ஒப்புவிதி களின் அடிப்படையில் வரையறை செய்து விளக்கலாம். ஆகவே இன்றைய நடையியலாய்வு பெருமளவில் மொழியியல் அமைப்பை ஒட்டியே விளக்கப்படுவதால் இத்தகைய நடை வகைப்பாடுகள் உத்திகளாகவே அமைந்து விடுகின்றன. மொழியமைப்பின் பல்வேறு நிலைகளில் (levels of linguistic structure) மொழிக் கூறுகளானவை வழக்கில் இடம் பெறுவதைக் கொண்டு நடை யமைப்பு தெளிவாக விளக்கப்படுகிறது. மேலும், மொழிப்பயன் பாட்டின் அடிப்படையில் பார்க்கும் பொழுது சமுதாயச் சூழலுக்கு ஏற்ப மொழியமைப்பானது சில இடங்களில் எளிமையாக்கம் (simplification) செய்யப்படுகிறது; இன்னும் சில இடங்களில் விரிவாக்கம் (elaboration) செய்யப்படுகிறது. ஆகவே இன்றைய நடையியலாய்விற்கு மொழியியல் கோட்பாடுகள்—உத்திகள் பெருந்துணையாக இருப்பது இவற்றின் வாயிலாக நன்கு தெளி வாகிறது.

நாட்டுப்புறவியல்

இன்று வேகமாக வளர்ந்து வரும் துறைகளில் மற்றொன்று நாட்டுப்புறவியல் துறையாகும். நாட்டுப்புறங்களில் வாழ்ந்து வரும் மக்கள் தங்களது உணர்ச்சிகளை—எண்ணங்களை வாய் மொழி இலக்கியங்களாக்கித் தருகின்றனர். அவற்றில் புதுமை யான எண்ணங்கள், புரட்சிக்கருத்துக்கள் போன்றவை மரபு களோடு இணைந்து காணப்படுகின்றன. மிக எளிய வழக்குச் சொற்கள் தொடர்கள்—உரைக்கோவை இவற்றின் மூலம் உள்ளத்து உணர்வுகளை வெளிக் கொணர முடியும் என்பதற்கு

இவர்களது பாடல்கள், கதைகள், பழமொழிகள், கதைப்பாடல்கள் விடுகதைகள் போன்றவை சான்றாக மிளிர்கின்றன. இத்தகைய நாட்டுப்புறவிலக்கியங்களில் காணப்படும் புதிய உத்திகள் போன்ற வற்றை இனம் பிரித்துக்காட்ட நடையியல் கோட்பாடு பயன்படு கிறது. நாட்டுப்புற இலக்கியங்களில் காணப்படும் ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர், சொற்பொருள் அமைவு, உரைக்கோவை அமைப்பு போன்றவற்றைக் கண்டறிந்து அவற்றின் வாயிலாக நடையமைப்பு விளக்கம் (stylistic description) இன்று மேற் கொள்ளப்படுகிறது.

ஒப்பியல், மொழி பெயர்ப்பியல், அறிவியல் போன்ற துறை களிலும் நடையியல் கோட்பாட்டைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். இன்று எல்லா அறிவுத் துறைகளின் மொழிப்பயன்பாட்டைக் குறித்தும் நடையியலாய்வு மேற்கொள்ள லாம். இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் நடையியலாய்வை மேற் கொள்ளும் போது அதில் காணப்படும் நிறை - குறைகள் தெரிய வரும். மொழிப்பயன்பாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்து எளிமையான சொற்களை நிலைபேறாக்கம் செய்யலாம். இதனால் மொழியின் வளம் பெருகும். மேலும் புதுமையாக்கக் கொள்கை யின் மூலம் பல புதிய சொற்களைக் கையாள்வதால் மொழி வளர்ச்சி பெருகும். ஆகவே இது போன்ற துறைகளில் நடையிய லாய்வு மிகவும் தேவையான ஒன்றாகிறது. மேலும் படைப் பாற்றலை வளர்க்கும் முறையில் நடையியல் விளக்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு படைப்பாளியும் எவ்வாறு சொற்களைத் தேர்ந்தெடுத்து உரிய முறையில் தகுந்த இடங்களில் கையாளுகின்றார்? எந்த வகையான கருத்தினை மையமாக எடுத்து, தமது படைப்பில் படைத்துள்ளார்? அவர் கையாண் டுள்ள உத்திகள் எவை எவை என்று விளக்கிக் காட்ட வேண்டும். ஒரின மொழிகளிலுள்ள படைப்புக்களை எடுத்துக் கொண்டு படைப்பாளிகளின்/ஆசிரியர்களின் நடையினை ஒப்பாய்வு செய்ய வேண்டும். அதே போன்று பல்வகைத் துறைகளில் (அறிவியல், ஆட்சி, கல்வி, தகவல் தொடர்பு, படைப்பிலக்கியம், நாவல், சிறுகதை, நாடகம்) காணப்படும் மொழிநடையை ஆராய்ந்து அவற்றிடையே காணப்படும் ஒற்றுமை—வேற்றுமையினை ஒப்புமைப்படுத்திப் பார்த்தல் வேண்டும். சமுதாயத் தேவைக் கேற்பவும், சமுதாயப் பின்னணிக்கு ஏற்பவும் நடையினைப் பகுப் பாய்வு செய்ய வேண்டும். குறிப்பிட்ட துறையினர்க்கு எளிதாகப் புரியும் வண்ணம் எத்தகைய மொழி நடையைத் தேர்ந்தெடுக்க

வேண்டும் என்பதையும் நடையியலாய்வு தெளிவுபடுத்துகிறது. இலக்கியக் கருத்துக்கள் மட்டுமின்றி அறிவியல் செய்திகளும் மக்களுக்குத் தங்குதடையின்றிப் போய்ச் சேர வேண்டும். இது நமது குறிக்கோளுங்கூட, ஆகவே அத்தகைய கருத்துக்களை எவ்வாறெல்லாம் தரவேண்டும் என்பதையும் நடையியலாய்வு விளக்குகின்றது. அதே போன்று புள்ளியியல் ஆய்வும் செய்யப்பட வேண்டும். இதனை நடையியலாய்வின் ஒரு உத்தி என்றும் கூறுவர். ஒரு படைப்பாளி தனது கருத்தைக் கூறும்போது அவனுக்கென்று சில தனிக்கூறுகளைக் கையாளுவான். அத்தகைய கூறுகளை இந்தப் புள்ளியியல் ஆய்வு மூலம் விளக்க முடியும். இதன் மூலம் படைப்பாளியை இனங்காணவும் முடியும்.

ஆய்வு நெறிமுறைகள்

பேச்சாலும், எழுத்தாலும் மக்கள் தங்களது பலதிறப்பட்ட எண்ணங்களைக் காலங்காலமாக ஆங்காங்கே பல்வேறு மூலங்களின் மூலம் வெளியிட்டு வருகின்றனர். ஒரு சமுதாயத்திற் குள்ளேயும் பல சமுதாயங்களுக்கிடையேயும் செய்திப் பரிமாற்றம் மொழியின் மூலமே தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என்ற இரண்டும் கருத்துப்பரிமாற்றத்தில் சிறப்பிடம் பெறுகின்றன. ஆயினும் எழுத்து வழக்கற்ற பல மொழிகளில் கருத்துப்பரிமாற்றம் பேச்சு வழக்கு மூலமே நடை பெற்று வருகிறது. மேலும், குறிப்பிட்ட கருத்தினை எடுத்துச் சொல்லும் முறையால் ஒருவர் மற்றொருவரிடமிருந்து வேறுபடு வதைக் காண்கிறோம். இவ்வாறு தோன்றும் வேறுபாடுகளுக்குப் பல்வேறு சமுதாய மற்றும் மொழியியற் காரணங்கள் இருக்கின்றன.

மொழியமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு என்ற இரண்டை யும் ஒரு சேர எடுத்துக் கொண்டு மொழியைப் பயன்படுத்துவோர் அவற்றை எவ்வாறெல்லாம் பயன்படுத்தும் நிலையில் எவ்வெவ் முறைகளிலெல்லாம் வேறுபடுகிறார்கள் என்பதையும் கண்டறிந்து விளக்குவது முறையான மொழி ஆய்வாகும். இத்தகைய ஆய்வில் மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும் சிறப்பிடம் பெறுவதால் இது ஒரு முழுமையான மொழி ஆய்வாக, அதாவது மொழி— இலக்கியம் என்ற இரண்டையும் சார்ந்த ஆய்வாகக் கொள்ளப்படு கிறது. இத்தகைய ஆய்வே இன்று நடையியல் ஆய்வு என்றும் விளக்கப்படுகிறது. இக்காலமொழி ஆய்வில் நடை (style) என்பது அதன் அமைப்பிலும் பயன்பாட்டிலும் இன்றியமையாத

இடத்தைப் பெறுகின்றது. சொல்பவர்/எழுதுபவர், சொல்லப் படும்/எழுதப்படும் பொருள், சமுதாய—மொழியியற் சூழல் போன்ற பல்வேறு காரணிகளுக்கேற்ப மொழியமைப்பும் மொழிப் பயன்பாடும் வேறுபட்டே அமைகின்றன. மேலும் ஒருவருக் கொருவர் செய்தியினைப் பரிமாறிக் கொள்வதிலும், வேறுபடு கின்றனர். மக்களுக்குத் தேவையான செய்திகளை—கருத்துக் களைத் தருகின்ற முக்கிய சாதனங்களாக விளங்குபவை தகவல் தொடர்புச் சாதனங்கள். இச்சாதனங்களின் மூலம் பல்வேறு கருத்துக்களையும், செய்திகளையும் பரப்ப முடியும். அவை மக்களிடம் எளிதில் சென்றடைவதற்கு எளிமையாக கருத்துப் புலப்பாட்டுத் திறனுடன் அமைக்க வேண்டியுள்ளது. மேலும், பல்வேறு பிரிவினருக்கும் ஏற்ற வகையில் நிகழ்ச்சியை வடிவமைக்க வேண்டியுள்ளது. இதனை வெளிப்படையாக விளக்குவதற்குச் சமுதாய மொழியியலோடு இன்றைய நடையியலும் நமக்குத் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

பொதுவாக நடை என்பது மனிதனின் நடக்கும் செயலைக் குறிப்பதற்கும் அவனது ஒழுக்கத்தினைக் குறிப்பதற்கும் (நடத்தை) பயன்படுத்தப்பட்டு வரும் சொல்லாகும். இச்சொல் கலைச் சொல்லாக இன்றைய மொழி -- இலக்கிய ஆய்வுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒருவர் தம்முடைய எண்ணத்தை வெளியிடும் முறையையே நாம் நடை என்கிறோம். மொழிய மைப்பின் அடிப்படையில் எழுத்து, சொல், தொடர், உரைக்கோவை என்பவைகளைக் கொண்டு நடையமைப்பு (stylistic structure) அமைகிறது. இதே நிலையினைப் பேச்சு முறை யிலும் ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர், உரைக்கோவை என்ற அமைப்பிலும் நாம் காண்கிறோம்.

இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள மொழியை மட்டும் எடுத் துக்கொண்டு பல்வேறு இலக்கிய ஆசிரியர்கள் தங்களது கருத்துக் களை எவ்வாறெல்லாம் விளக்கியுள்ளனர் என்பதை ஆய்வதே தொடக்ககால நடையியல் ஆய்வாக அமைந்திருந்தது. ஆனால் இன்று இலக்கியத்தோடு பல்துறைக் கருத்துக்கள் - பல்வகை இலக் கியங்கள் ஒரு மொழியின் மூலம் (அறிவியல் இலக்கியம், மருத்துவ இலக்கியம் போன்று) வெளிப்படுத்தப்படுவதையும் இலக்கியமாக எடுத்துக்கொண்டு அவ்வகையான இலக்கியங்களிலெல்லாம் மொழி யின் அமைப்பும் பயன்பாடும் அமைந்துள்ள முறையை விளக்கு வதையும் நடையியல் ஆய்வின் ஒரு பகுதியாகவே நாம் கருது கிறோம்.

மொழியமைப்பும் மொழிப் பயன்பாடும் மொழி பயன்படுத்து வோரின் (language users) அறிவாற்றலுக்கு ஏற்ப அமைவதைக் காண்கிறோம். மேலும் எடுத்து விளக்கப்படும் கருத்திற்கு ஏற்ப அவை அமைவதையும் பார்க்கிறோம். இவற்றோடு கருத்துக்கள் யாருக்காகச் சொல்லப்படுகின்றன என்பதைப் பொறுத்தும் மொழியமைப்பு அமைவதைப் பார்க்கிறோம். இதனால் மொழி யமைப்பிலும் பயன்பாட்டிலும் மாற்றங்கள் பெருமளவில்கூட சில நேரங்களில் தோன்றி விடுகின்றன. எடுத்துக்காட்டாக, சிலரது பயன்பாட்டில் எளிய சொற்கள் அமைந்து, கருத்துப் பரிமாற்றத் திற்கு ஏற்ற வகையில் மொழியமைப்பு வலிமையும் ஆற்றலும் பெற்றிருக்கும். வேறு சிலரது பயன்பாட்டில் பொருள் விளக்கம் எளிதாக அமையாத நிலை, (மொழியமைப்பில் இடம் பெற்றுள்ள கூறுகளால் ஏற்பட்டிருக்கும். இன்னும் சிலரது) மொழியமைப்பு படிப்போரையும் கேட்போரையும் தன்வயப்படுத்தும் நிலையில் கவர்ச்சியாக அமைந்திருக்கும். சிலர் பயன்படுத்தும் மொழி யமைப்போ அவ்வாறு அமைந்திருக்காது. இவ்வாறு மொழி பயன் படுத்துவோர் மொழியினைத் தத்தமக்கேயுரிய வகையிலும் சொல்ல எண்ணும் கருத்துக்களுக்கு ஏற்பவும் சமுதாயச் சூழல் களுக்கு ஏற்பவும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு அமையும் மொழிப்பயன்பாட்டினை விளக்குவது மொழி ஆய்வில் நிறைவு ஏற்பட வழி செய்வதோடு மொழியமைப்பும் மொழிப்பயன்பாடும் சமுதாயத்திற்குப் பயனுள்ள வகையில் அமையவும் வழிவகுக்கும் என்று உறுதியாக நம்பப்படுகிறது.

இன்றைய மொழியியற் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் மொழிப்பயன்பாட்டினை மையமாகக் கொண்டும் மொழிநடை விளக்கப்படும் பொழுது அதற்கெனச் சில கூறுகளும் உத்திகளும் தேவைப்படுகின்றன. உல்மான் (1971) மற்றும் டேவிட் கிரிஸ்டல் (1966) போன்றோர் மொழியமைப்பினை நான்கு பெரும் நிலைகளாகப் பிரித்துக் கொண்டு அவற்றில் இடம்பெறும் மொழிக் கூறுகளை நடையியற் கூறுகளாக எடுத்தாளுகின்றனர்.

முதல் வகை

1.1 தற்போக்கு

1.2 கிளைமொழி

1.3 காலம்

இரண்டாவது வகை

2.1 மொழிச் சாதனம்

2.2 ஊடகம் (பேச்சு, எழுத்து)

2.3 பங்கேற்பு (தனிமொழி, உரையாடல் போன்று)

மூன்றாவது வகை

3.1 துறை

3.2 சமூகப் படிநிலை

3.3 வடிவம்

3.4 தனித்துவம்

நடையியற் கூறுகளை விளக்கும் நிலையில் நீதிவாணன் (1982) ஒலிக்கோலம், சொல் தேர்வு, தொடர்கட்டு என்ற கூறுகளை விரித்து, ஒவ்வொன்றிலும் சில உத்திகளைக் கையாண்டு மொழி நடையை விளக்கலாம் எனப் பரிந்துரை செய்கிறார். (காண்க : ப. 312)

மொழியியல் வழி விளக்கம்

மொழியியலார் மொழியமைப்பைப் பல்வேறு நிலைகளில் பாகுபடுத்தி ஆராய்வதைப் பார்க்கிறோம். ஒலிநிலையில் தொடங்கிச் சொற்பொருள்நிலைவரை அவர்களது மொழியமைப்பு குறித்த ஆய்வு பரந்த நிலையில் (broad based) அமைந்துள்ளது. இதே நிலையினை மொழிப்பயன்பாட்டு ஆய்விலும் நம்மால் அமைத்துக் கொள்ள முடியும். மொழியமைப்பின் பல்வேறு நிலைகளில் நடையியல் முக்கியத்துவமுடைய வேறுபாடுகளை நம்மால் கண்டறியவும் முடியும். அதே போன்று ஒரு குறிப்பிட்ட படைப்பில் அல்லது ஓர் எழுத்தாளனது படைப்பில் எல்லா நிலைகளிலும் காணப்படும் இத்தகைய வேறுபாடுகளை உற்று நோக்கி அவற்றின் நடையியல் தன்மைகளையும் அமைப்பையும் உத்திகளையும் விவரித்துக்கூற முடியும். மொழியியல் அணுகுமுறையைக் கொண்டு நடையியலாய்வினை மேற்கொள்ளும் போது சில பிரச்சினைகளைக் குழப்பமின்றித் தீர்த்துவைக்க முடியும். மரபு ரீதியான விமர்சனத்தின் மனச்சார்பான பொதுக் கூற்றுக்களை விட மிகவும் திட்டமான எல்லாவற்றையும் உள்ளடக்கிய புரிநிலையான நடை பற்றிய விவரணமுறை ஒன்றை உருவாக்குவது இன்றைய நடையியலின் நோக்கங்களுள் ஒன்றாக இருப்பதால், இத்தகைய மொழியியல் பகுப்பாய்வு பெரிதும் தேவைப்படுகிறது. இத்தகைய பகுப்பாய்வின் மூலமே வெளிப்படையாகக் காண முடிகின்ற கூறுகளை மட்டுமின்றி நுட்பமான நடையியல் கூறுகளையும் நம்மால் கண்டறிய முடியும்.


நடையியற் கூறுகள் : விளக்கம்
ஒலிக்கோலம்
சொல்தேர்வு
தொடர்கட்டு
ஒலிக்கோலம்
எதுகை மோனை
வண்ணம்
இயைபு
ஒலிக்குறிப்புச் சொற்கள்
ஒலிக்கோலமும் நகைச்சுவையும்
வட்டார வழக்குகள்
சொல்தேர்வு
மங்கலச்சொற்கள்
பழஞ்சொல்லுக்குப் புதுப்பொருள்
மூவிடப்பெயர்கள்
அடைச் சொற்கள்
அனுபவங்களின் பாதிப்பு
தொடர்கட்டு
சங்கிலித் தொடர்
கருத்திற் கேற்ற தொடர்
குறிப்பு வினைத் தொடர்
விளித் தொடர்
பயின்று வரும் தொடர்
அடைத் தொடர்
விருப்பத் தொடர்
உவமைத் தொடர்
விரித்தல் உத்திகள்
பிறமொழிச் செல்வாக்கு
விளம்பரத் தொடர்

இன்றைய இலக்கியங்களின் (பேச்சு / எழுத்து வழக்குகளில்) நடையமைப்பினை ஆராய்வதற்கு அடிப்படையாக அமைபவை மொழியினது அமைப்பும் அதன் பயன்பாடுமே என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இதற்குக் காரணம் பல்வேறு கருத்துக்களை ஓர் ஆசிரியன் அல்லது படைப்பாளி அல்லது பேச்சாளன் வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு மொழிக்கூறுகளையும் மொழிப்பயன்பாட்டு நிலைகளையும் ஒருங்கிணைத்துப் பார்த்துக் கருத்துக்களை வெளிவிடும் முறையேயாகும். இவ்வாறு கருத்துக்களை வெளிப்படுத்தும் நிலையில் ஒருவர் எடுத்தாளும் மொழியமைப்பானது அவர் எடுத்துக் சொல்லும் மொழிப்பயன்பாட்டின் நிலைக்கும் தன்மைக்கும் ஏற்ப மாறுகிறது/அமைகிறது, இதனால் கருத்துக்களைப்பயன்படுத்தும்/வெளிப்படுத்தும் மொழியின் பிற அமைப்பானது (peripheral structure) ஒருவரது மொழியமைப்பிலிருந்து மற்றொருவரது மொழியமைப்பில் வேறுபட்டுக் காணப்படுகிறது. இந்த வேறுபாடுகள் அனைத்தும் நடையமைப்பில் பிரதிபலிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே நடையமைப்பு விளக்கம் மேற்சொன்னவாறு மொழியமைப்பு (language structure), மொழிப்பயன்பாடு (language use) என்ற இரண்டையும் ஒருங்கிணைத்துப் பார்த்து மேற்கொள்ளப்படும் ஆய்வின் வழியாகக் கிடைப்பதேயாகும்.

இவ்விளக்கம் நமக்குக் கிடைத்திட சில உத்திகளும் கூறுகளும் தேவைப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மொழியமைப்பு மற்றும் மொழிப்பயன்பாடு என்ற ஒருங்கிணைந்த அமைப்பினை விளக்குவதே தெளிவான நடையியலாய்வாகிறது. அதாவது, நடையியலாய்வு என்பது இலக்கியம் மற்றும் மொழி சார்ந்த தெளிவான அணுகுமுறைகளான அமைப்பு மொழியியல் அணுகுமுறை, சமுதாயமொழியியல் அணுகுமுறை மற்றும் இலக்கிய மொழியமைப்புக்களை விளக்கிடும் நடையியலாய்வு அணுகுமுறை என்ற மூன்றும் ஒருசேரப் பயன்படுத்தப்பட்டு நடையியலாய்வில் தெளியும் நிறைவும் ஏற்படுகிறது.

(அ)


நடையமைப்பு விளக்கம்
அடிப்படை
நடைவிளக்கம்
நடையியற் கூறுகள்
மொழியின் புற அமைப்பு
மொழியின் அக அமைப்பு
மொழியமைப்பு
மொழிப்பயன்பாடு
மொழியமைப்பு
மொழிப்பயன்பாடு
அடிப்படைநிலை
துறை
மொழி வழக்குக்கொள்கை
ஒலியன் நிலை
இலக்கணநிலை
சொல் நிலை
சொற்பொருள் நிலை

(ஆ)


மொழியமைப்பு : நிலைகள்
ஒலியியல்நிலை
ஒலியனியல் நிலை
இலக்கண நிலை
சொல்நிலை
சொற்பொருள் நிலை
ஒலியன்
எழுத்து
ஒலி
ஒலியன் சேர்க்கை
மேற்கூற் றொலி
உருபன்
தொடர்
தாய்மொழிச் சொற்கள்
பிறமொழிச் சொற்கள்
இவற்றின் கலப்பு
பழஞ்சொல் புதுப்பொருள்
பொதுமை யாக்கம்
சிறப் பாக்கம்
பிற

(இ)


மொழிப் பயன்பாடு அடிப்படையில்
புதுமையாக்கம்
நிலைபேறாக்கம்
எழுத்துருவாக்கம்
எளிமையாக்கம்
விரிவாக்கம்
மொழிப் பொதுமை
மொழி ஆற்றல்
எளிதாக எடுத்தாளும் திறன்
எழுத்துச் சீரமைப்பு
எழுத்தமைப்பு

நடையியல் ஆய்வு : எதிர்காலப் பணிகள்

நடையியலாய்வின் இன்றியமையாத பங்கினையும் பணியினையும் கருத்தில் கொண்டு வருங்காலத்தில் சில முயற்சிகளைக் கீழ்க் காணும் வகையில் மேற்கொள்வது மொழி—இலக்கிய ஆய்விற்கும், மொழி மற்றும் சமுதாய வளர்ச்சிக்கும் தேவையானது.

(1) கருத்துப்புலப்பாட்டுத் திறனை அடிப்படையாகக் கொண்டு எழுத்து வழக்கை மட்டுமல்லாது பேச்சு வழக்கின் அமைப்பு மற்றும் பயன்பாட்டையும் நடையியல் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும். இன்றைய கருத்துப்பரிமாற்றம் வானொலி, தொலைக்காட்சி, சொற்பொழிவு, மேடைப்பேச்சு போன்ற வற்றின் மூலமும் அதிக அளவில் நடைபெறுவதால் இது பற்றிய ஆய்வுகள் புதிய கூறுகள், புதிய உத்திகள் போன்றவற்றைக் கண்டறிவதற்கும் அவற்றின் கருத்துப்புலப்பாட்டு ஆற்றலை மதிப்பீடு செய்து நடைமுறைக்குக் கொண்டு வரவும் வழிவகுக்கும்.

(2) பல்துறைப்படைப்புக்களை எடுத்துக்கொண்டு (ஒரேகாலக் கட்டத்தில் வெளிவந்தவை) தமிழ் மொழியின் அமைப்பும் பயன் பாடும் எவ்வாறெல்லாம் நிலைபேறாக்கம் பெற்று வருகின்றன என்பதைக் கண்டறிந்து செயல்படுத்தும் வகையில் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு துறையிலும் நடையமைப்பு மொழிக்கு மொழி மாறுபடும் மற்றும் பொதுவாக விளங்கும் தன்மைகளைக் கண்டறியும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்வது கருத்துப்புலப் பாட்டுத் திறனைச் சீராக வளர்த்துக் கொள்வதற்கு வழி வகுக்கும்.

(4) நடையியல் பற்றிய தெளிவான கருத்துக்களைப் பரவலாக்கம் செய்யும் வகையில் ஆய்வுகளையும் படைப்புக்களை யும் அதிகரிக்கச் செய்வது நடையியலின் பயன்பாட்டினை, விரிவாக்கிக் கொள்ள வழி வகுக்கும்.

ஆகவே இது போன்ற முன் முயற்சிகள் நடையியலாய்வில் எதிர்காலப் பணிகளாக அமைவது சமுதாயத்திற்கும் அது சார்ந் துள்ள மொழிக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் உதவுவதாக அமையும்.

துணை நூற்பட்டியல்

இரபிசிங், ம. செ. — அண்ணாவின் மொழி நடை, சாமுவேல் பதிப்பகம்; சென்னை, 1980

கருணாகரன், இ. — சமுதாய மொழியியல், பாரி நிலையம்; சென்னை, 1975

——— — மொழி வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம்; சிதம்பரம், 1981

ஜெயா, வ. — பாரதி மொழி நடை. ஜெயா பதிப்பகம்; மதுரை, 1989

ஞானமூர்த்தி, தா. ஏ. — இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம்; சென்னை, 1986

திருமலை, மா. சு. & கருணாகரன், இ. — மொழியியல், பாரி நிலையம்; சென்னை, 1971

தூரன், பெ. — பாரதி தமிழ், வானதி பதிப்பகம், சென்னை, 1986

நீதிவாணன், ஜெ. — நடையியல், மணிவாசகர் பதிப்பகம்; சிதம்பரம், 1983

நுஃமான், எம்.ஏ. — ஆக்க இலக்கியமும் அணுகுமுறைகளும், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வெளி யீடு; யாழ்ப்பாணம், 1985

Chapell, A. — **Studies in Sociolinguistics**, Mouton; The Hague, 1966

Darbyshire, A.E. — **A Grammar of Style**, OUP; London, 1971

David Crystal & Derek Devy — **Investigating English Style**, Longman; London, 1969

Deseriev, J. — 'Sociolinguistics', **Linguistics** 113 : 5-40 1973

Enkvist, N. E. — **Linguistics and Style**, OUP, London, 1964

Ferguson, C. A. — Language Structure and Language Use, SUP; Standford, 1971

Fishman J, A. — Readings in the sociology of Language, Mouton; The Hague, 1968

Halliday, N. A. K. — 'The linguistic study of literary Texts' in the Proceeding of the Ninth International Conference of Linguistics, Mouton; The Hague, 1964

Karunakaran, K. — 'Language Planning Theory' in Language Forum, 3 ; 1, 1979

——————— — Sociolinguistics Patterns of Language Use, All India Tamil Linguistics Association; Annamalainagar, 1983

Macdonald, A. M. — Chambers Twentieth Century Dictionary, Allied Publishers Private Ltd, Bombay, 1978

Middleton Murray — The Problem of Style, OUP; London, 1972

Ohman, R. — 'Generative Grammar and the Concept of Literary style' Word 20 : 424-29, 1964

Omkar, N. Kaul — Language Style and Discourse, Bahri Publications Pvt, Ltd; New Delhi, 1986

Stephen Ullman — 'Stylistics and Semantics' in Literary Style (ed.) Seymour-chatman, OUP; London, 1971

Thirumalai, M. S. — Stylistics - A Linguistic Approach. University of Madras; Madras, 1976

Thomas, F. Sebeok (Ed.) — Style in Language (2nd ed.,) The M.I.T. Press; Cambridge, 1964

Whitely, W. H. — Language Use and Social Change, OUP, London, 1971

கிளைமொழியியல்

கி. கருணாகரன்

கிளைமொழி ஆய்வானது, ஒரு மொழி எவ்வாறு மக்களிடையே பேச்சு வழக்கில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை ஆராய்வதாகும். இன்றைய கிளைமொழி ஆய்வில் கிளைமொழி அகராதிகள் தயாரித்தல், கிளைமொழி இலக்கணங்கள் தயாரித்தல், கிளைமொழிகள் மொழியில் பெற்றுள்ள இடம்—அவற்றின் ஒருங்கிணைப்பு என்ற மூன்றும் முக்கிய மான பணிகளாக அமைந்துள்ளன: கிளைமொழி ஆய்வு, அதிலிருந்து பெறப்படும் விளக்கங்கள் போன்றவை மொழியமைப்பு மற்றும் மொழிப் பண்பாடு தொடர்பான ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன.

முன்னுரை

தமிழ் மொழியில் வழக்கிலிருந்து வரும் கிளைமொழிகளின் வாழ்வையும் வரலாற்றையும் இன்றைய மொழியியல் மற்றும் சமுதாய மொழியியல் நோக்குகளில் ஆய்வுக் கண்ணோட்டத் தோடு விளக்குவதே இவ்வாய்வுக்கட்டுரையின் பொதுவான நோக்க மாகும். தமிழ்க் கிளைமொழிகளின் வகைகளையும் கிளைமொழி ஆய்வு பற்றிய பொதுவான விளக்கத்தையும், தமிழ்க் கிளைமொழி கள் பற்றி தொன்று தொட்டு மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வுகள் குறித்தும், இவ்வகையான ஆய்வுகளை மேற்கொள்ளும் போது தோன்றும் சிக்கல்கள்—அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்றவை குறித்தும், இன்றைய கிளைமொழி ஆய்வில் பின் பற்றப்பட்டுவரும் அணுகுமுறைகள் குறித்தும், விரிவான முறையிலே எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தமிழ்க் கிளை மொழி தொடர்பான முறையான ஆய்வுப்பணிகள் குறித்தும், தமிழ்க்கிளைமொழி ஆய்வுகளின் சிறப்பியல்புகள் இவ்வாய்வுகளின் வழிப் பெறப்படும் பயன்கள் மற்றும் விளைவுகள் குறித்தும் ஒருங் கிணைத்து வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் சிறப்பு நோக்க மாகும்.

கிளைமொழி ஆய்வு

மொழி என்பது கருத்துப்பரிமாற்றத்திற்குரிய ஒரு சருவி. எழுத்து வடிவமும் பேச்சு வடிவமும் கருத்துப்பரிமாற்றத்திற்கான இருவகை ஊடகங்களாகும். மொழிக்கு அடிப்படையான வடிவம் ஒலிதான். ஒலியின்றேல் பேச்சில்லை. ஒலியின் திருந்திய மாற்று வடிவம் எழுத்து வடிவமாகும். ஒரு மொழி அதிகமான மக்களால் பரந்த நிலப்பரப்பில் பேசப்படும் போது அம்மொழி சில மாறுதல்களையும் வேறுபாடுகளையும் பெற வாய்ப்பிருக்கிறது. பரந்த நிலப்பரப்பில் பல்வேறு சமுதாய வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் ஒரு மொழியைப் பேசுகிறார்கள். பின்னர் அவர்கள் சமூகக் காரணங்களால் சிறுசிறு குழுக்களாக இணைந்தும் பிற குழுவினரிடமிருந்து சற்று விலகியும் வாழ்கிறார்கள். இதனால் இவர்கள் பேசுகின்ற மொழியும் நாளடைவில் சிறுசிறு வேறுபாடுகளைப் பெறுகின்றது. வட்டாரத்திற்கு வட்டாரம் ஒரு மொழி ஒரு சில வேறுபாடுகளுடன் விளங்கலாம். ஒரே வட்டாரத்திற்குள்ளும் சாதி, சமய மற்றும் பொருளாதார வேறுபாடுகளாலும் பேச்சு வழக்கு வேறுபடலாம். ஆயினும் இவ்வேறுபாடுகள் கருத்துப்பரிமாற்றத்திற்குப் பெருந்தடையாக அமைவதில்லை. தனியொருவன்கூட தான் பேசுகின்ற மொழியினை எப்போதும் ஒரே மாதிரியாகப் பேசுவதில்லை. சிறுவயதில் ஒருவிதமாகவும் வளர்ந்து கல்வி கற்ற பின்பு வேறுவிதமாகவும் வயது முதிர்ந்த நிலையில் மற்றொரு விதமாகவும் மொழியைப் பயன்படுத்துவதைக் காணமுடிகிறது.

ஒரு தனிமனிதனின் பேச்சுவழக்கைத் தனிவழக்கு (idiolect) என்று கூறுவர். இவ்வாறு தனிமனிதர்கள் சமுதாய மற்றும் வட்டார வரன்முறைகளுக்கு உட்பட்டு, சிறுசிறு குழுவினராக இணைந்து வாழ்கின்றனர். இச்சிறு குழுவினர் பேசும் மொழிவழக்கு சிலமொழியியற் கூறுகளைத் தமக்குரியனவாகப் பெற்றிருக்கின்றது. இத்தகைய பேச்சு வழக்குகளே கிளைமொழிகள் (dialects) எனப்படுகின்றன. ஒரு மொழி வழக்கு குறிப்பிட்ட சமுதாய மற்றும் வட்டார மக்களின் பேச்சிற்குரிய சில மொழியியற் கூறுகளைத் தனித்தன்மைகளாகப் பெற்றிருக்கும். அத்தகைய வழக்கினை அம்மொழியின் கிளைமொழியாகக் கூறுவர். வட்டார அடிப்படையில் மொழியியற் கூறுகள் காணப்பட்டால் அப்பேச்சுவழக்கு வட்டார வழக்கு (regional dialect) என்றும்; சாதி, சமயம் போன்ற சமூகக்கூறுகளால் தனித்தன்மையுடன் விளங்கினால் அதனைச் சமுதாயவழக்கு (social dialect) என்றும் கூறுவர்.

வழக்கு எனும் சொல் மொழியில் ஒரு குறிப்பிட்ட பேச்சினைக் குறிக்கப் பயன்படும் பொதுச்சொல்லாகும். இந்தியச் சூழலில் ஒரு குறிப்பிட்ட சாதிப்பிரிவினர் பயன்படுத்திவரும் பேச்சு வழக்கினைச் சாதி வழக்கு (Caste dialect) என்று குறிப்பிடலாயினர்.

தமிழ்மொழியில் பல்வேறு கிளைமொழிகள் உள்ளன, சென்னை வழக்கு, தஞ்சாவூர் வழக்கு, கன்னியாகுமரி வழக்கு, கோவை வழக்கு என்பனவெல்லாம் புவியியல் அடிப்படையில் மொழி வேறுபாடுகளைக் கொண்ட பேச்சு வழக்குகளைக் குறிக்கும் வட்டார வழக்குகளாகும். பிராமணர்வழக்கு, முதலியார் வழக்கு, நாடார் வழக்கு, அரிசன வழக்கு முதலியன சாதி அடிப்படையிலும்; சான்றோர் வழக்கு, பெண்கள் வழக்கு, படித்தவர் வழக்கு என்பன சமுதாயத்தின் உட்கூறுகளின் அடிப்படையிலும் அமைந்த சமுதாய வழக்குகளாகும். கிளைமொழி என்பது வட்டார வழக்குகளையும் சமுதாய வழக்குகளையும் உள்ளடக்கியதே.

கிளைமொழியியல் சமுதாய மொழியியலிலிருந்து வேறுபட்டது. கிளைமொழியியல் ஒரு சமுதாய அல்லது வட்டார மக்களின் பேச்சினை விளக்குகிறது—ஆராய்கிறது. சமுதாய மொழியியல் ஆய்வு மொழியின் வேறுபாடுகளுக்குச் சமுதாயக்கூறுகளைக் காரணங்காட்டியும் தொடர்புபடுத்தியும் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வாகும். சமுதாய மொழியியலின் உட்பிரிவாகவே கிளை மொழியியல் அமைகிறது எனவும் குறிப்பிடலாம். சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட மக்களின் பேச்சில் வட்டாரத்திற்கு வட்டாரம் காணப்படுகின்ற வேறுபாடுகளையோ அன்றி ஒரு வட்டாரத்தில் உள்ள சமுதாய மக்களிடையே நிலவும் வேறுபாடுகளையோ மொழியியல் அடிப்படையில் கண்டறிந்து ஆராய்வது கிளை மொழியியலின் நோக்கமாகும். தனிமனித அல்லது சமுதாயப் பேச்சு வழக்குகளை ஆராய்ந்து அவைகளைச் சமுதாயக்கூறுகள் மற்றும் சூழல்களுடன் முறையோடு தொடர்புபடுத்தி ஆய்வு மேற் கொள்கிறது சமுதாய மொழியியல். ஒரு சமுதாயத்தின் தாழ்ந்த வகுப்பினர் கல்வியறிவு அதிகமற்றவர்கள் வேற்றுப்பகுதிகளுக்கு அதிகம் செல்லுகின்ற வாய்ப்பின்றி ஒரே பகுதியிலேயே வாழ்பவர் கள். வேற்று மொழி அறிவு இன்றியும் தாய்மொழிக் கல்வியறிவு இன்றியும் பேச்சளவில் தாய்மொழியினை அறிந்தவர்கள். இதன் காரணமாக இவர்களின் பேச்சுவழக்கில் வட்டாரக்கூறுகள் மிக அதிகமாகக் காணப்படும். சமுதாயத்தில் மேல்நிலையிலிருப்பவரி

கள் பெரும்பாலும் படித்தவர்கள், தங்கள் வட்டாரங்களைத் தாண்டியும் பலநிலைகளில் தொடர்பு கொண்டிருப்பவர்கள். இவர்களது பேச்சுவழக்கில் அயல்மொழித் தாக்கங்களும் தாய் மொழிக்கல்வியறிவும் அதன் பயனாய் உயர் வழக்கில் நல்ல மொழித்திறனும் வளமும் காணப்படும்.

மக்கள் தாம் சார்ந்த சமுதாயத்தோடு தங்களை ஐக்கியப் படுத்திக்கொண்டு கருத்துப்பரிமாற்றத்தினை மேற்கொள்கின்றனர். இதனால் அச்சமுதாயத்திற்கெனச் சில குறிப்பிட்ட பேச்சுவழக்கு முறைகள் ஏற்படுகின்றன. சமுதாயக்கூறுகளைச் சாதி. சமயம் போன்ற உட்பிரிவுகளால் சமுதாயப்பிரிவினர் மீண்டும் தங்களை இணங்கண்டு ஒன்றுபட்டு வாழ்வதால் மொழியும் சாதி சமய வழக்குகளுக்கு உரிய சில வேறுபாடுகளைப் பெற்றுப் பல்வேறு கிளைமொழிகளாகக் கிளைத்து விடுகின்றது. இக்கிளைப்புகள் வலுவாகவும் மிக நீண்ட காலத்திற்குத் தொடர்ந்தும் இருக்கு மானால் தனியான மொழி வழக்குகளாகத் தெளிவுடன் திகழும். ஒரு குழுவினர் மற்றொரு குழுவினருடன் தொடர்பினை வளர்த்துக் கொண்டு இணைந்திருப்பதால் ஒவ்வொரு குழுவினர்க் கும் உரிய கிளைமொழிகளும் விலகிச்செல்லாது தங்களுக்குள் பல்வேறு பொதுத்தன்மைகளைப் பெற்று ஒரு மொழியின் கீழ் இணைந்து நிற்கின்றன.

கிளைமொழி - ஆய்வு வரலாறு

பல தனிமனிதப் பேச்சு வழக்குகள் ஒரு கிளைமொழியையும் பல கிளைமொழிகள் சேர்ந்து ஒரு மொழியையும் உருவாக்கு கின்றன. மொழிக் குடும்ப வரலாற்றிற்கு மொழியும் ஒரு மொழி வரலாற்றிற்குக் கிளைமொழி ஆய்வும் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. மக்கள் சிறுசிறு குழுக்களாக வாழும் போது மலை, ஆறு, கடல் போன்ற இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்டு அவர்களிடையே அதிகத் தொடர்பின்றி வாழ வேண்டியநிலை ஏற்படுகிறது. சங்ககாலத்திலேயே கிளைமொழிகள் இருந்தன என்பதற்கு இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் காணப்படும் குறிப்புகள் சான்றுகளாகின்றன. தொல்காப்பியர் பன்னிரண்டு வட்டாரக்கிளைமொழிகளையும் உரையாசிரியர்கள் செந்தமிழுடன் கொடுந்தமிழ், சான்றோர் வழக்கு, குழுக்குறி, தொழில் பற்றிய வழக்கு, எனப்பல நிலைகளில் பேச்சு மொழியினையும் எடுத்துக் காட்டியுள்ளனர். சங்கத்தமிழில் கிளைமொழிகள் இருந்தன என்று சண்முகம் (1973) குறிப்பிடுகின்றார். சங்கத்தமிழில் பொதுத்

தமிழ்க் இளைமொழி, தொன்மொழிக் கிளை மொழி, வழக்குத் தமிழ்க் இளைமொழி ஆகியவை வழங்கியிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

தொல்காப்பியர் செந்தமிழ் நிலத்து எல்லையையோ கொடுந் தமிழ் நிலத்து எல்லையையோ குறிப்பிடவில்லை. செந்தமிழை இயற்சொல்லாகக் கொண்டு வட்டார வழக்கினைத் திசைச்சொல் என்கிறார்.

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந்
தங்குறிப் பினவே திசைச் சொற் கிளவி (நூ. 400)

சேனாவரையர் பொங்கர் நாடு, ஒளிநாடு, தென் பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்கா நாடு, சீதநாடு, பூமிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனப் பன்னிரு நிலத் தைக் குறிப்பிடுகின்றார்,

சிலப்பதிகாரத்திலும் இளைமொழிகள் இருந்ததாகக் குறிப் பிடப்படுகிறது.

புலையூன் துறந்து என்னும் தொடரைப் புலவூண்துறந்து என்றும், காணாமல் எனும் தொடரினை அடியார்க்குநல்லார் தம் உரையில் காணாமே என்றும் பேச்சு வழக்குச் சாயலில் கையாண் டுள்ளார்.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
அவிந்தன மழுப்பு
கலங்கினர் பலரி

எனும் வாக்கியங்களும் மிகச்சிறியதாக எளிமையாக அமைத் துள்ளன. தனிப்பட்ட ஒரு சமூகத்திற்கு அல்லது வட்டாரத்திற்குரிய மொழியியல் கூறுகளையும் நாம் பண்டைய இலக்கியங்களில் காணலாம். பேசப்படும் சூழலுக்கு ஏற்பப்பயன்படும் சொல்லின் பொருள் மாறுபடுவதைக்கூடச் சங்ககாலச் சான்றோர்கள் உணர்ந்திருந்தனர்.

வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே (நூ. 536)

சமூக உயர்வு தாழ்வுகளால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என மக்களிடையே பிரிவுகளுண்டு. சமூக வேறுபாடுகளால் பேச்சு வழக்குகளும் மாறலாம். இதனால் உயர்ந்தோர் பேச்சு வழக்கு தாழ்ந்தோர் பேச்சுவழக்கு என்று வேறுபாடுகள் இருப்பதை நாம் உணரலாம்.

ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே
தாவென் கிளவி ஒப்போன் கூற்றே
கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே

இவை சமூக வேறுபாடுகளின் மூலம் வேறுபடுவதை உணர்த்து கின்றன. கல்வெட்டுக்களினால் தமிழ் எழுத்துக்களின் வரலாறும் வட்டார வழக்கு வகைகளும் நமக்குப் புலனாகின்றன என்று கூறுகின்றார் சண்முகம் (1971). பண்டைத் தமிழகத்தில் கல்வெட்டு களை எழுத தமிழ்-கிரந்த எழுத்துக்களும் வட்டெழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டின் வடபகுதியில் கிரந்த எழுத்துமுறை பின்பற்றப்பட்டது. இத்தகைய வேறுபாடுகள் வட்டார வழக்கு வேறுபாடுகளினால் ஏற்பட்ட நேரடி விளைவு களாகும். இவ்வாறு சங்ககால இலக்கியங்களிலும் கல்வெட்டுக் களிலும் கிளைமொழிகள் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப் படுகின்றன.

மேலைநாடுகளில் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் கிளைமொழி ஆய்வு முறையாகத் தொடங்கியது. மொழி ஆய்வு வரலாற்றில் கிளைமொழி ஆய்வு தற்செயலாக நிகழ்ந்தது. அதற்குப்பின்னரே அது ஒரு தனித்துறையாக வளர்ச்சி பெற்றது. முதலில் மொழியறிஞர்கள் பல்வேறு இலக்கிய மொழிகளை அவை களின் எழுத்து வடிவங்கள் மூலமாக ஒப்புநோக்கில் ஆராய்ந்தனர். சொற்களுக்கிடையே சார்ந்த மொழிகளுக்கிடையே இத்தகைய ஒப்புமை ஆய்வுகள் நடைபெற்று வந்தன. கிரிம் எனும் அறிஞர் இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் கண்ட சில ஒலி மாற்றங்களை ஒலி விதிகளில் (Phonetic laws) அமைத்துச் செம்மைப்படுத்தி கிரிம்ஸ் ஒலி விதிமுறை எனும் புதிய கருத்தை வெளியிட்டார். இந்த வலுவானவிதிமுறையினால் பலர் ஈர்க்கப்படலாயினர். எழுதப்பட்ட இலக்கிய மொழிகளுக்கு மட்டுமல்லாது பேச்சு வழக்கு மொழிகளுக்கும்கூட இவ்விதிமுறை பொருந்துகிற பொதுமை விதியாகக் கருதப்பட்டது. இதனால் எழுதப்படாத கிளைமொழிகளிலிருந்தும் ஆதாரங்களைத் தேடத் தொடங்கினர். இதன்வழி இதுவரை அறியப்படாமலிருந்த புதிய கிளைமொழி களைத் தேடிச் சென்றனர். புதிய கோட்பாட்டிற்கான சிந்தனை யுடன் கிளைமொழிகளை ஆராயத்தொடங்கினர். தொடக்கக் காலத்தில் கிளைமொழி ஆய்வு வட்டார வழக்கு ஆய்வாகவே இருந்தது. 1821இல் ஜோஹன் அன்டிரஸ் ஹிம்லர் எழுதிய பவேரியக் கிளைமொழி எனும் நூல்தான் முதல் கிளைமொழி இலக்கண நூலாகும். இதில் அல்சேக் பகுதியிலுள்ள செருமானிய வட்டார

வழக்குகளை இவர் ஆராய்ந்தார். சுவிஸ்நாட்டு மொழி அறிஞர் ஜோஸ்ட் வின்ட்டெலர் சுவிஸ்நாட்டின் கிலாரஸ் பகுதி பேச்சு வழக்கினை ஆராய்ந்தார். டுஸல்டோர்ப்என்பவர் பிரெஞ்சு—செருமன் எல்லைப்பகுதியிலுள்ள தெற்கு பாலியா என்ற பகுதியினை ஆராய்ந்து விளக்கிக்கூறியுள்ளார். ஜெர்மன்நாட்டு வட்டார வழக்கு ஆய்வுத்திட்டத்தின் எதிரொலியாக ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் வட்டார வழக்கு ஆய்வுகள் பல தொடங்கப்பட்டன. 1898இல் டென்மார்க்கில் வட்டார வழக்கு ஆய்வு நடந்தேறியது. வட்டார வழக்கு ஆய்வு வரலாற்றில் பிரெஞ்சு மொழி வட்டார வழக்கு ஆய்வு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பணியாகும். இத்தாலி மற்றும் தென் சுவிட்சர்லாந்துப்பகுதிகளிலும் வட்டார வழக்கு ஆய்வினைத் தொடர களப்பணி நடைபெற்றது. பல்வேறு தலைப்புகளில் தரவுகள் திரட்டப்பட்டன. இந்த ஆய்வின் பயனாக எட்டுத்தொகுதிகள் வெளிவந்தன. இத்திட்டத்தில் பணியாற்றிய பால்ஷவர்மேயர் தமது களப்பணி அனுபவங்களையும் ஆய்வுச்சிக்கல்களையும் நீண்ட கட்டுரையாக எழுதினார். இது களப்பணி ஆய்வாளர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாக அமைந்தது.

1930இல் அமெரிக்காவிலும் கனடா நாட்டிலும் வட்டார வழக்கு ஆய்வினைத் தொடங்கும் திட்டமொன்று உருவானது. அமெரிக்கா, கனடா இரு நாடுகளும் மிகப் பரந்த நிலப்பரப்பை உடையதாக இருந்ததால் மக்கள் பலர் அங்குக் குடியேறினர். இதனால் நிலவாரியாகப் பிரித்துத் தனித்தனி வட்டார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சமூக மற்றும் வட்டார அடிப்படையில் மொழியியல் வேறுபாடுகள் அங்கே தெளிவாகக் காணப்பட்டன. இங்கிலாந்து, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் வட்டார வழக்கு ஆய்வுகள் தடைபெற்றன. முதலில் கிளைமொழிகளின் ஆய்வு, வரலாற்று ஒப்புமை ஆய்வுகளுக்குச் சார்பாக/துறையாக அமைந்திருந்தது. பின்னர் அதுவே வட்டார வழக்கு ஆய்வு நோக்கில் தீவிரமடைந்தது. கிளோனோ பிக்ஃபோர்டு என்பவர் களப்பணி முறைகளில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைக் குறிப்பிட்டு, தெளிவாக எழுதியுள்ளார். ஒரு கிளைமொழி ஆய்வு அச்சமூகம் முழுவதையும் பிரதிபலிப்பதில்லை. இதனால் புதிய வளர்ச்சி மொழியியலில் தோன்ற ஆரம்பித்தது.

மேலை நாட்டினர் கிளைமொழி ஆய்வுகளில் காட்டிய தீவிரம் இந்தியாவின் பல இடங்களிலும் 'கிளைமொழி ஆய்வு பற்றிய கருத்து எதிரொலிக்க அடிப்படையாக அமைந்தது. இந்தியா பரந்த

நிலப்பரப்பும், சமூக வேறுபாடுகளால் மிகவும் சிக்கலான சமூக அமைப்பும் கொண்டது. இதனால் இங்கு அதிக அளவில் கிளை மொழி ஆய்வு செய்யப்பட்டது.

முதன்முதலில் கிரியர்சன் என்பவர் பீகார் மாநிலத்தின் விவசாயிகளின் பேச்சு வழக்கினை ஆராய்ந்து தொழிற்பெயர் அகராதி ஒன்றையும் பீகார் விவசாயிகளின் வாழ்க்கை என்னும் நூலையும் வெளியிட்டார். இதன்பின் இந்தியாவில் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் கிளைமொழி ஆய்வுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்ற வண்ணம் உள்ளன. நீண்ட கால உழைப்பும் போதிய அளவு நிதி வசதியும் கிடைக்காததால் அதிக அளவு ஆய்வுகள் வெளிவரவில்லை. ஆனால் தனிமனிதர் மேற் கொண்ட கிளைமொழி ஆய்வுகளால் சில ஆய்வேடுகள் வெளி வந்தன. 1974இல் பல்கலைக்கழக மானியக்குழு நிதியுதவியுடன் கிளைமொழியியல் நூல் எழுதும் திட்டத்திற்காகச் சோமசேகர நாயர் இந்தியாவிலுள்ள 26க்கும் மேற்பட்ட ஆய்வு நிறுவனங் களுக்கும் பல்கலைக்கழக மொழியியல்துறைகளுக்கும் சென்று வந்தார். லக்னோ பல்கலைக் கழகத்தில் கிளைமொழி ஆய்வுகள் சில நடைபெற்றன. பஞ்சாப் பகுதியில் பேசப்படும் பஞ்சாபி கிளைமொழி, இந்தி கிளைமொழி, பஹடி கிளைமொழி போன்றவை குருஷேத்திரா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றன. பூனாவிலுள்ள டெக்கான் கல்லூரியில் பல கிளைமொழி ஆய்வுகள் வெளிவந்தன. 14 கன்னட கிளைமொழிகள் இங்கு ஆராயப் பட்டுள்ளன. தெலுங்கு மொழியிலும் கிளைமொழி ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. விவசாயிகள், நெசவாளர்கள், குயவர்கள், மீனவர்கள் ஆகியவர்களின் தொழில் கலைச்சொற்களை மாவட்ட ரீதியாகத் திரட்டினர். பி.எச். கிருஷ்ணமூர்த்தி (1977) விவசாயக் கலைச்சொல் தொகுப்பு வெளியிட்டார். கரிம்நகர்மாவட்ட தெலுங்குக்கிளைமொழி ஆய்வில் சிவானந்த சர்மா (1974) தெலுங்கானா பகுதியைச் சார்ந்த ஒன்பது மாவட்டங்களிலுள்ள பேச்சு வழக்கினை ஆராய்ந்தார். சுவராஜ்யலெட்சுமியால் (1982) கடப்பா கிளைமொழி விளக்க இலக்கணம் என்ற நூல் வெளியிடப்பட்டது. மோகன்ராவ் (1983) குண்டூர் பேச்சு வழக்கினை ஆராய்ந்தார்.

கேரளப் பல்கலைக்கழகத்திலும் பல்வேறு கிளைமொழி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நியர் பேச்சு வழக்கு, அரிசனர் பேச்சு வழக்கு, முஸ்லீம் பேச்சு வழக்கு போன்ற சாதிக்கிளை

மொழி ஆய்வுகளும் கொச்சி திருவிதாங்கூர் வட்டாரக் கிளை மொழி ஆய்வுகளும் வெளிவந்தன. தமிழகத்திலும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் கிளைமொழி ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

கிளைமொழியியல் வகைகள்

கிளைமொழி ஆய்வானது, ஒரு மொழி எவ்வாறு மக்களிடையே பேச்சு வழக்கில் வழங்கப்பட்டு வருகிறது என்பதை ஆராய்வதாகும். அத்தகையக் கிளைமொழிகளை விளக்கும் பிரிவுகளை,

1. மரபுக் கிளைமொழியியல்
2. அமைப்புக் கிளைமொழியியல்
3. நகர்ப்புறக் கிளைமொழியியல்
4. சமூகக் கிளைமொழியியல்
5. இரட்டையமைப்பு முறை
6. மாற்றிலக்கணக் கிளைமொழியியல்
7. இயக்க அமைப்புமுறை

என ஏழாகப் பகுக்கலாம்.

1) மரபுக் கிளைமொழியியல்

இதில், மொழியியலில் காணும் சிறுசிறு வேற்றுபாடுகளைக் கவனத்துடன் ஆராய்கின்றனர். மரபுக் கிளைமொழி ஆய்வு ஒலி வேறுபாடுகளையே பெரிதும் சார்ந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட சொல் ஒரு பகுதியில் ஒரு விதமாகவும் இன்னொரு பகுதியில் வேறு விதமாகவும் ஒலிக்கப்படுவதைப் பதிவு செய்து கொண்டு ஒப்பிடுவர். தனித்தியங்கும் தன்மை கொண்டவைகளாக ஒலிகளைக் கருதி அவைகளின் வேறுபாடுகளைக் கிளைமொழிகளுக்கிடையே ஒப்பிட்டு ஆராய்வர். இவ்வொலிகளே வழக்குச் சிறப்புகளாக அக்கிளைமொழிகளுக்கு அமையும்.

2) அமைப்புக் கிளைமொழியியல்

1940களில் மொழியியல் ஆய்வில் அமைப்பு மொழியியல் எனும் புதிய கோட்பாடு வலுப்பெறத் தொடங்கியது. ஜூல்ஸ் பிளாக் (1948) என்பவர் அமைப்பு மொழியியல் கோட்பாடுகளுக்குட்பட்டு ஒலியன்களை ஒப்பிட்டு ஆராய்ந்து வந்த கிளைமொழி ஆய்வினையும் ஒலியன்களைக் கண்டறியும் பாங்கினையும், புதிதாக எழுந்த அமைப்பு மொழிக்கோட்பாடும் பிளாக்கின் நெறிமுறைகளும்

பாதித்தன. மொழியும் அதன் எல்லாக் கிளைமொழி வழக்கு களும் ஓர் அமைப்புக்கு உட்பட்டதாகும். மொழியின் கூறுகள் அனைத்தையும் அதன் அமைப்புகளுக்குள் ளேயிருக்கும் கூறுகளோடு மட்டுமே ஒப்பிட்டு ஆராய்ந்திட வேண்டும். ஒரு கிளைமொழியின் ஒலியனை வேறோர் கிளைமொழியின் ஒலியோடு ஒப்பிடுதல் முறை யாகாது. ஒரு ஒலி அக்கிளைமொழிக்குள் ஒரு ஒலியமைப்பில் இடம் பெற்றுள்ளது. ஓர் ஒலியின் செயற்பாடு (phonetic function) மற்றும் ஒலித்தகுதி (phonetic value) (ஒலி அல்லது மாற்றொலி எனும் தகுதி) முதலியவைகளைப் பின்புலமாகக் கொண்டு அக்கிளைமொழிக்குள் இயங்குகிறது. ஓர் ஒலி ஒன்றிற்கு மேற்பட்ட கிளைமொழிகளில் காணப்படலாம். ஆனால் அதன் செயற்பாடும் ஒலித்தகுதியும் அங்கே வேறுபட்டிருக்கலாம். அவ்வாறாயின் மொழிகளை மேலோட்டமாக ஒப்பிடுவது முறையாகாது. அதனால் அமைப்புரீதியாக ஒலிகளைக் கிளை மொழிகளுக்கிடையே ஒப்பிடவேண்டுமென ஜுல்ஸ் பிளாக் (1948) வாதிட்டார். ஒரு வட்டாரத்திற்குள் எழுந்த ஒலி வேறுபாடுகளை ஒலியனின் மாற்றொலி வேறுபாடுகளாகக் கருதி அமைப்பு வழிக்கிளைமொழியில் (கட்டிலா) உறழ்ச்சிகளுக்குப்(free variation) புதிய விளக்கங்களைத் தரத்தொடங்கினார்கள். புறனடைகள் பெற்ற புது விளக்கத்தால் கிளைமொழி ஆய்வு அமைப்பு மொழிக் கோட்பாட்டின் பக்கம் ஈர்க்கப்பட்டது.

3) நகர்ப்புறக் கிளைமொழியியல்

தொடக்கக் காலத்தில் வரலாறு மற்றும் ஒப்புமை ஆய்விற்கு வேண்டிய தரவுகளைப் பெறுவதற்காகக் கிளைமொழி ஆய்வுகள் நிகழ்ந்தன. அதிகம் படித்திராத வயதான, கிராமப்புறத்தில் வாழும் மக்களின் பேச்சுவழக்கே ஆய்வுக்கு உகந்த தரவுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில ஒலிமாற்றங்களையும் புராதனச் சொற்களையும் மொழியின் பழைய மொழியியற் கூறுகளையும் கிராமப் பேச்சுவழக்குகளே பாதுகாத்து வருவதாகக் கருதினார்கள். அங்கேதான் புறச்சூழல் களால் அதிகம் பாதிக்கப்படாது தன்னியல்பாய் மொழி வழக்குகள் அமைந்துள்ளனவென்றும் எண்ணினார்கள். இதனால் கிராமப்புறங்களிலேதான் கிளைமொழி ஆய்வுகள் நிகழ்ந்தன. ஆனால் கிராமங்களில் மட்டுமே ஒரு மொழி பேசப்படவில்லை. கிராமத்தில் பேசப்படும் மொழி வழக்கு அவ்வட்டார முழுமைக்கும் உரிய கிளைமொழியாக அமைந்துவிடாது. நகர்ப்புறங்களில்

வாழும் மக்களும் அதே மொழியினைப் பேசுகிறார்கள். அவர்களின் பேச்சுவழக்கு கிராமங்களில் இருப்பதைவிட வேறுவிதமாக அமைந்துள்ளது. அப்பேச்சு வழக்கிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன, நகர்ப்புறப் பேச்சுவழக்கும் ஒரு கிளைமொழிக்குரிய பல்வேறு சிறப்புமிக்க தனித்தன்மைகளுடன் விளங்குகின்றன. அதனால் கிளைமொழி ஆய்வு நகர்ப்புற மக்களின் பேச்சுவழக்கினை ஒதுக்கி விட்டுச் செல்வது முழுமையான பலனைத் தராது என்று வாதிட்டனர். ஒரு வட்டாரக் கிளைமொழி ஆய்வு அவ்வட்டார நகர்ப்புற மக்களின் பேச்சு வழக்கையும் கிராமப்புற மக்களின் பேச்சுவழக்கையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும் என்னும் கருத்து மேலோங்கியது. நகர்ப்புற மக்களின் பேச்சு வழக்கினை மட்டுமே களனாகக் கொண்ட ஆய்வு நகர்ப்புறக் கிளைமொழி (urban dialect study) ஆய்வாகும்.

4) சமூகக் கிளைமொழியியல்

நகர மக்கள் கல்விநிலை, பொருளாதாரம், தொழில்வகை எனும் பல்வேறு சமூகக்கூறுகளால் வேறுபடுகின்றனர். இவர்களின் ஒட்டுமொத்தப் பேச்சுவழக்கினைவிட இவர்களுக்கிடையே காணும் பேச்சுவழக்கு வேறுபாடுகள் மிக முக்கியமானவையாகும். ஏனெனில் இவ்வேறுபாடுகள் இவர்களிடையே நிலவும் சமூகப் பிரிவுகளை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. மொழி மாற்றங்களுக்கும் அம்மொழி பேசப்படும் சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளுக்கும் தொடர்பு உள்ளது எனும் கருத்து சமூக மொழியியல் ஆய்வுக்கு வழிவகுத்தது.

1960களில் வில்லியம் லபோவ் (William Labov) என்பவர் சமூகமொழியியலுக்கு ஓர் ஆய்வுப்பாதையினை வகுத்துத்தந்தார். 1936இல் அவர் எழுதிய 'ஒலிமாற்றத்திற்கான சமூக உள்நோக்கம்' எனும் கட்டுரையில் மார்த்தா வைன்யார்டு (Marthas Vineyard) தீவில் முதியோர் மற்றும் இளைஞர்களிடம் காணும் ஒலிவேறுபாடுகளுக்குச் சமூகக்கூறுகளே காரணங்களாகும் என்பதை மிகத் தெளிவாக நிறுவியுள்ளார். லபோவ் நியூயார்க் நகரில் உள்ள பலதரப்பட்ட மக்களிடையே காணும் ரகர ஒலிப்பு முறையினை ஆராய்ந்தார். சமூகத்தில் உள்ள உயர்தர, நடுத்தர, கீழ்நிலை மக்களிடையே அவர்கள் பேசும் பேச்சுவழக்கில் ரகர ஒலி வேறுபடுவதை அவர்தம் சமூகநிலைகளோடு நிரலாகத் தொடர்பு படுத்திக் காட்டினார். அத்துடன் ஒரே மனிதரின் பேச்சுவழக்கில் கூடச் சூழலுக்கு ஏற்ப மாற்றங்களும் வேறுபாடுகளும் நிகழலாம்.

இயல்பான சூழல், செம்மையான சூழல், வாசிக்கும்நிலை, சொற் பட்டியலி, படிக்கும் சூழல் எனும் பல்வேறு சூழல்களில் ஒருவரின் பேச்சு வேறுபடுவதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வரலாற்று ரீதியாக மொழியில் நிலவிய மாற்றங் களைஒப்பிட்டு ஆராயத்தொடங்கி ஒரு மொழிக்குள்ளே வட்டாரத் திற்கு வட்டாரம் நிலவும் வேறுபாடுகளைக் கண்டறிந்து பின்னர் ஒரே வட்டாரத்திற்குள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறவழக்கு வேறு பாடுகளை ஆராய்ந்து அதற்குப் பிறகு ஒரே பகுதியில் வாழும் ஒரு சமூகத்தினரின் ஒட்டு மொத்தப் பேச்சுவழக்குகளையே ஆய்வுக் களமாகக் கருதி ஆராய்ந்து அதற்குப் பின்னர்ப் பல்வேறு சூழல் களுக்கேற்ப ஒரே மனிதரின் பேச்சு வழக்குகள் மாறுபடுவதை ஆராயத் தொடங்கியுள்ளனர்.

5) இரட்டை அமைப்புமுறை

ஒரு மொழியில் ஒலிகள் பல உள்ளன. ஒவ்வொரு கிளை மொழியிலும் ஒலிகளின் எண்ணிக்கை (phonetic inventory) வேறுபடும். அதுபோன்றே ஒவ்வொரு கிளைமொழிக்கும் ஒலிகள் வகைப்படும் முறை (distributional pattern) வேறுபடும். அமைப்புக்கிளை மொழி ஆய்வு சாத்தியமா? என்ற ஒரு கட்டுரையை 1954இல் வெயின்ரிக் எழுதினார். அதில் ஒலிகளை ஒப்பிடுவதில் இரட்டை அமைப்புநிலை ஒன்று இருப்பதை விளக்கி யுள்ளார். இதன் மூலம் ஒலிகளின் எண்ணிக்கை, அவை இடம் பெறும் வெவ்வேறான களன்கள் ஆகியவற்றை விளக்க முடியும்,

ஒலிநிலையில் இருவேறு கிளைமொழிகளில் வழங்கப்பட்டு வரும் ஒலிகள் ஒன்றாக இருக்கலாம். ஆனால் அவை ஒவ்வொன்றும் பெற்றுள்ள மாற்றொலிகளும் அவை இடம்பெறும் களன்களும் தனித்தனியாக வேறுபடலாம். இருந்தும் இத்தகைய மிகக்குறைந்தளவு ஒற்றுமைகளைக் கொண்ட ஒலிகளைக்கூட இரட்டையமைப்பு முறையில் ஒப்பிட முடியும். இரட்டையமைப்பு முறையானது மொழியில் வழங்கப்படும் ஒலிகளை அவை பயன்படும் பாங்கினை உள்ளது உள்ளவாறு படம் பிடித்துக் காட்டுவதாக வெயின்ரிக் கருதினார். இதற்கும் மேலாக இரு மொழிக்குமான பொது அமைப்பினை இவ்விரட்டை அமைப்பு முறை பிரதிபலிப்பதாகச் சொற்களுக்கும் இலக்கணக்கூறுகளுக்கும் கூட இத்தகைய இரட்டையமைப்பு முறையினைப் பொருத்திப் பார்க்க முடியும் என வெயின்ரிக் கூறினார்.

ஒலிகளின் எண்ணிக்கை அவை இடம்பெறும் வெவ்வேறான களங்கள் ஆகியவற்றை வெயின்ரிக்கின் இரட்டையமைப்பு முறை மூலம் விளக்க முடிந்தது உண்மைதான். ஆனாலும் ஒரு வழக்கி லுள்ள ஒலியனுக்குப் பதிலாக இன்னொரு வழக்கில் வேறொரு ஒலியன் வரக்கூடும். இவை இரண்டையும் தொடர்பு படுத்தவோ ஒன்றிற்குமாறாக இன்னொரு கிளைமொழியியல் வருவதைக் குறிப்பிடவோ இரட்டையமைப்பு முறையில் போதுமான வாய்ப் பில்லை.

6) மாற்றிலக்கணக் கிளைமொழியியல்

1957ஆம் ஆண்டு மொழியியலில் நிகழ்ந்த சோம்ஸ்கியின் அறிவுப்புரட்சியால் மாற்றிலக்கணக் கோட்பாடு உதயமாயிற்று. உளவியல், சமூகவியல், அறிவியல் ஆகிய துறைகளில்கூட மாற்றி லக்கணக் கோட்பாட்டினுடைய அடிப்படைத் தத்துவங்களின் தாக்கம் தவிர்க்க இயலாது பெருமளவு பாதித்திருந்தது. அமைப்பு வழிக் கிளைமொழி ஆய்வு இடர்பாடுகளைச் சந்தித்து நின்றபோது அங்கே மாற்றிலக்கணக் கோட்பாடு கைகொடுத்து உதவ முன் வந்தது. மொழியில் உள்ள புறனடைகள், உறழ்ச்சிகள் பல வற்றிற்கும் மாற்றிலக்கணம் அரிய பல விளக்கங்களைத் தந்தது, மாற்றிலக்கணக் கோட்பாடு ஓர் புதிய அணுகுமுறையினை மொழியியல் ஆய்விற்கு வழங்கிற்று எனலாம்.

மாற்றிலக்கணத்தில் ஆக்க ஒலியியல் இரு நிலைகளைக் கொண்டது. ஒன்று அக வடிவில் உள்ளது. அது ஒலியன்கள் வடிவில் அமைந்த சொற்களைக் கொண்ட சொற்களஞ்சியம். இரண்டாவது புறவடிவில் உள்ளது. அதில் அச்சொற்களைத் தேவைப்படும்போது புறவடிவிற்குக் கொணர்ந்து ஒலிப்பு நிலைக் குரியதாக மாற்றும் பல ஆக்க ஒலியனியல் விதிகள் (generative phonological rules) இடம்பெற்றுள்ளன.

ஆக்க ஒலியினியலில் (generative phonology) ஒலி வேறுபாடு களை மிக எளிதாக விளக்கிட இயலும். இதனால் கிளைமொழி ஆய்வாளர்கள் மாற்றிலக்கணக் கோட்பாட்டினைத் தீவிரமாகப் பற்றிக்கொள்ளத் தொடங்கினர். மாற்றிலக்கணிகளின் பார்வை யில் ஒரு மொழியின் கிளைமொழிகள் அனைத்தும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடைய இலக்கண அமைப்புகளைக் கொண்டனவாகக் கருதப்பட்டன. மாற்றிலக்கண விதிகள் நிரலாகச் செயல்படுவதில் ஏற்படுகிற மாற்றங்களே கிளைமொழிகளுக்குள் வேறுபாடுகளை

உருவாக்குகின்றன. கிளைமொழிகளுக்கிடையே இத்தகைய வேறுபாடுகள் ஒலியியல், பொருண்மையியல், சொற்கள், இலக்கணக் கூறுகள் எனப் பல்வேறு நிலைகளில் காணப்படலாம். (ஒரு மொழியின் எல்லாக் கிளைமொழிகளும் அகநிலையில் தொடர்புடையவை: ஒரு பொது அமைப்பினைக் கொண்டவை.) ஒரு மொழியின் எல்லாக் கிளைமொழிகளையும் அப்பொது அமைப்பிலிருந்தே மாற்றிலக்கணவிதிகள் மூலம் பெற முடியும். மாற்றிலக்கண ஒலியியல் விதிகள் செயல்படும் நிரலில் எழும் மாறுதல்களாலும், சில சமயம் விதிகளுக்கான சூழல்கள் வேறுபடுவதாலும் ஒலிகள் செயல்படநேரும் அகஅமைப்பு வேறுபடுவதாலும் கிளைமொழிகள் வேறுபடுகின்றன எனும் கருத்தைக் கிளைமொழி ஆய்வாளர்கள் மாற்றிலக்கணக் கோட்பாட்டின் அடிப்படையில் கூறிவந்தனர்.

7) இயக்க அமைப்புமுறை

1960களில் வில்லியம் லபோவ் (Wiiliam Labov) எனும் சமூக மொழியியலறிஞர் வேறுபாடுகளே மொழியின் முக்கியமான உட்கூறுகள் எனும் கருத்தினை வலியுறுத்தினர். மொழி என்பது வேறுபாடுகளை உள்ளடக்கி, பேசுவோனின், கேட்போனின் சமூக வேறுபாடுகளோடு மொழிக்கூறுகள் நேரடித் தொடர்பு கொண்டிருப்பதை லபோவ் விளக்கினார். மொழியில் வேறுபாடற்ற ஒரே தன்மை (homogeneity) என்பது கிடையாது. ஆய்வுக்காக ஒருவர் ஏற்படுத்திக்கொண்ட மாயநிலையாகும். அது உண்மைக்குப் புறம்பான வெளித்தோற்றம் இத்தகைய பொய்யான அடித்தளத்தில் மெய்யான ஆய்வு வளராது என்று கூறி மொழி ஒரே தன்மை கொண்ட அமைப்புடையது எனும் கோட்பாடுடைய மாற்றிலக்கணிகளைக் கடுமையாகச் சாடினார். ஒருவன் தமது பேச்சைப் பல்வேறு பின்புலத்துடன் வேறுபாடுகளின் வெளிப்பாடாகவே அமைக்கிறான். தனிமனிதப் பேச்சு வேறுபாடுகளின் சாரம். சமூகத்தின் பேச்சே ஒரு நிரலாக அமைந்திருக்கும். ஒருவனின் பேச்சுவழக்கு சமூக வேறுபாடுகளுடன் தொடர்புபடுத்திய மொழியியல் வேறுபாடுகளை உள்ளடக்கி அதிலே ஓர் ஒழுங்கு முறையினைப் பின்பற்றுவதாக அமைந்திருக்கும். மொழி ஆய்வு மொழி வேறுபாடுகளைச் சமூக வேறுபாடுகளுடன் தொடர்புபடுத்திக் காணும் முறையினைக் கைக்கொள்ள வேண்டிய தேவையை லபோவ் தமது ஆய்வுகள் மூலம் வலியுறுத்தி நிலை நாட்டினார்.

விருப்ப விதிகள் (optional rules) பெரும்பாலும் வேறுபாட்டு விதிகளாகவும் (variable rules) சமூக வேறுபாடுகளுடன் (social

variables) தொடர்புடையனவாகவும் இருப்பதை லபோவ் விளக்கினார். இவ்வேறுபாடுகளில் சில ஒரு மொழியின் தலைமுறை தலைமுறையாய்த் தொடர்ந்து வரும் வரலாற்று மாற்றங்களின் விளைவுகளாகும்.

ஒரு சமூகத்தில் வாழும் முதியவர்களின் பேச்சுக்கும் இளைய வர்களின் பேச்சுக்கும் உள்ள வேறுபாடுகள் வரலாற்றுப் போக்கில் அமையும். இவை ஒரு தலைமுறைக்கான வேறுபாடுகளைச் சமகாலத்திலேயே பிரதிபலித்துவிடுகின்றன. இதனால் லபோவின் அணுகுமுறை இயக்க அமைப்பு கொண்டதாகக் கருதப்பட்டது.

தமிழில் கிளைமொழி ஆய்வுகள்

சங்க காலம் தொட்டுத் தமிழில் கிளைமொழிகள் இருந்து வந்துள்ளன. பண்டைய இலக்கியங்கள் பேச்சுவழக்குக் கூறுகளைப் பெற்றிருப்பதைச் சண்முகம் (1974), நீதிவாணன் (1986), சண்பகம் (1971) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். கல்வெட்டுகளில் பேச்சுவழக்குக்கூறுகள் பல காணப்படுவதை வேலுப்பிள்ளை (1976), சண்முகம் (1971) ஆகியோர் குறிப்பிடுகின்றனர். 1910இல் ஜூல்ஸ் பிளாக் (Jules Bloch) இந்திய மொழிகளில் சாதி அடிப் படையில் கிளைமொழிகள் அமைந்துள்ளனவென்று வலியுறுத்தி னார்.

தமிழ்க் கிளைமொழி ஆய்வில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் சாதனை குறிப்பிடத்தகுந்ததாகும். 1956இல் தொடங்கப்பட்ட மொழியியல் துறையின் பேராசிரியரும், ஆய்வாளரும், மாணவரும் 1960முதல் கிளைமொழி ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு இதுவரை சாதி, சமய அடிப்படையில்பல சமூக வழக்குகளையும், ஊர் மற்றும் மாவட்ட அடிப்படையில் பல்வேறு வட்டார வழக்குகளையும் ஆராய்ந்துள்ளனர். இவை களில் பெரும்பாலானவை முதுகலை மற்றும் முனைவர் பட்ட ஆய்விற்காக மாணவர் தமது சொந்தப் பேச்சு வழக்குகளையும், களப்பணி செய்து பிற பேச்சு வழக்குகளையும் ஆராய்ந்த ஆய்வேடு களாகும். 1976-78ஆம் ஆண்டில் மொழியியல்துறை கையேடு இதுவரை 63 நூல்களைத் துறையினர் வெளியிட்டதாகக் கூறுகிறது. இதில் 15 நூல்கள் கிளைமொழி ஆய்வினைச் சார்ந்ததாகும். துறையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 35 முனைவர் பட்ட ஆய்வுகளில் 5 கிளைமொழி ஆய்வுகளாகும், 96 முதுகலைப்

பட்ட ஆய்வுகளில் 69 ஆய்வேடுகள் தமிழ்க்கிளைமொழி பற்றிய ஆய்வுகளாகும்.

தமிழில் வெளிவந்த கிளைமொழி நூல்களில் அகத்தியலிங்கம் (1976) எழுதிய காணிக்காரக் கிளைமொழி, கருணாகரனின் (1971) கொல்லிமலைக் கிளைமொழி, காமாட்சிநாதனின் (1969) திருநெல்வேலிக் கிளைமொழி ஆகியவை குறிப்பிடத்தகுந்த கிளை மொழி ஆய்வு நூல்களாகும்.

தென்னார்க்காடு, வடார்க்காடு, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் (தொண்டைமண்டலம்) முன்னோடிக் கிளைமொழி ஆய்வொன்றினை ஞானசுந்தரம் (1973) மேற்கொண்டார். சக்திவேல் (1979) முகலீம் எட்டார வழக்குகளை ஆராய்ந்துள்ளார். தென்னார்க்காடு மாவட்ட மீனவர் பேச்சுவழக்கில் கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களின் பேச்சு வழக்கிற்கும் ஆற்றில் மீன் பிடிக்கும் மீனவர்களின் பேச்சுவழக்கிற்கும் வேறுபாடுகள் இருப்பதாகத் தென்னார்க்காடு மாவட்ட மீனவர் பேச்சுத்தமிழ் ஆய்வேடு (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1980) குறிப்பிடுகிறது.

மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் 'பிரமலைக் கள்ளர் சமுதாய மொழியியல்' ஆய்வு ஒன்று முனைவர் பட்ட ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வினை யொட்டி (ஆய்வுக்கோவை, வையை ஆகிய இதழ்களில்) பிரமலைக் கள்ளர் பற்றிய பல கட்டுரைகளையும் பின்னர் பிரமலைக்கள்ளர் சமுதாய மொழியியல் என்னும் நூலினையும் அஜ்மல்கான் வெளி யிட்டுள்ளார்.

1984இல் கி. இராஜநாராயணன் எனும் தமிழ் எழுத்தாளர் கிளைமொழி ஆய்வில் ஈடுபட்டு, 'கரிசல் பகுதியினைச் சார்ந்த வட்டார வழக்குச் சொல்லகராதி' எனும் நூலினை வெளியிட் டுள்ளார். அண்டை மாநிலத்தவர் தங்களது மொழியிலுள்ள வட்டாரச் சொற்களைச் சேகரித்து வட்டாரச் சொல்லகராதிகளை வெளியிட்டு வர, தமிழரோ இதுவரை அவ்வாறு செய்ய வில்லையே எனும் பெரும் ஆதங்கத்துடன் முயன்று இதனை வெளியிட்டதாக அவர் கூறுகிறார்.

வெளிநாடுகளில் நடைபெற்ற தமிழ்க்கிளைமொழி ஆய்வுகளில் குறிப்பிடத் தகுந்தது இராம. சுப்பையாவின் (1966) லோயர் பராக் பகுதியில் பேசப்படும் தமிழ்க்கிளைமொழிச் சொல்லாய்வு. இவர் மலேயா நாட்டின் லோயர் பராக் பகுதியில் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் பேச்சு வழக்கினை ஆராய்ந்துள்ளார்.

திண்ணப்பன் (1978) மலேசியத் தமிழ்ப்பேச்சு வழக்கில் எல்லாச் சூழல்களிலும் பல்வேறு மலேசிய மொழிச் சொற்கள் விரவி வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர்களின் பேச்சில் காணும் மலாய்ச் சொற்கள் எனும் ஆய்வு ஒன்றினைத் திலகவதி (1971) தமது பட்ட மேற்படிப்பு ஆய்விற்காகக் கோலாலம்பூர்ப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு முடித்துள்ளார்.

கிளைமொழி ஆய்வுச்சிக்கல்களும் அவற்றுக்கான தீர்வுகளும்

இன்றைய கிளைமொழி ஆய்வில் மூன்று முக்கியமான பணிகள் காணப்படுகின்றன. 'கிளைமொழி அகராதிகள் தயாரித்தல், கிளைமொழி இலக்கணங்கள் தயாரித்தல். கிளை மொழிகள் மொழியில் பெற்றுவரும்/பெற்றுள்ள இடம், அவற்றின் ஒருங்கிணைப்பு என்ற மூன்றும் முக்கியமான பணிகளாக அமைந் துள்ளதோடு இப்பணிகளை நிறைவேற்றிடும் சூழ்நிலையில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிப்பனவாகவும் அமைந்து வருகின்றன. கிளைமொழி அகராதி இன்னும் முறையாக மேற் கொள்ளப்படாத நிலையே இருந்து வருகிறது. இத்தகைய பணி முறையாக மேற்கொள்ளப்பட்டால்தான் அதன் மூலம் மொழியின் சொற்களஞ்சியம் வளர்ச்சி மற்றும் சொற்பயன்பாடு சீராகவும் செம்மையாகவும் அமையும். வழக்கொழிந்த பல சொற்களுக்குப் பதிலாகப் புதிய சொற்களும் புதிதாகச் சமுதாயத்திலே இடம் பெறும் கோட்பாடுகள், கருவிகள், பொருள்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சொற்களும் நமக்குக் கிடைக்க வழி ஏற்படும். ஒரு மொழியின் அமைப்பில் சொற்களஞ்சியம் சிறப்பான இடத்தைப்பெற்றுள்ளதோடு பயன்பாட்டின் அடிப் படையிலும் அது மிகவும் ஆக்கபூர்வமானதாக அமைந்துள்ளது. மொழியமைப்பில் அதிகமான மற்றும் விரைவான மாற்றத்திற்கும் தாக்கத்திற்கும் உள்ளாவது சொற்களஞ்சியமும், சொற்பயன் பாடுமே ஆகும். மேலும் சொற்களை அடிப்படையாகக் கொண்டே பல்வேறு சொல்லமைப்புக்கள் மொழியிலே இடம் பெறுகின்றன. ஒரு மொழி நிறைவானதாகவும் பயன்பாட்டில் ஆற்றல் பெற்றதாகவும் அமைய சொற்பெருக்கம் துணை செய்வ தால் இதற்கான ஆய்வுகள் பரந்த நிலையிலேயே மேற்கொள்ள வேண்டியது இன்றைய தேவையாகிறது. இதனை மேற்கொள்ளு வதற்குத் தகுந்த ஆய்வாளர்கள், வினா நிரல்கள், தகவல் சேகரிப்ப தற்கான கருவிகள் போன்றவை மிகவும் இன்றியமையாதன, இவற்றை முதலில் தாம் செம்மைப்படுத்திக் கொள்வது முறை

யான சொல்லாய்விற்கும் பெரிதும் உதவும். வழக்கிலிருக்கும் சொற்களையும் அவற்றின் வேறுபாடுகளையும் கண்டறிவதன் மூலம் சொற்களின் பயன்பாடு தரப்படுத்தப்பட வாய்ப்பு ஏற்படும். இதனால் பிறமொழிக்கூறுகளின் பயன்பாட்டையும் தவிர்க்க முடியும்; தாய் மொழியின் வளமும் கூடும்.

கிளைமொழி இலக்கணங்கள் பல உருவாக்கப்பட்டால் மொழியின் அன்றாடப் பயன்பாட்டில் இருந்து வரும் தொடர்கள், தொடரமைப்புகள், உரைக்கோவை அமைப்பு போன்றவற்றையும் அவற்றின் பொதுமையையும் எளிதாக அறிந்து கொள்ள முடியும், மேலும், எத்தகைய அமைப்புகள், எந்தெந்தச் சமுதாயச் சூழலில், எவ்வகைக் கருத்துக்களை வெளிப்படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பதையும், மக்களின் எளிமையான கருத்துப்புலப்பாட்டிற்கு ஏற்றவையாக அமைந்துள்ளன என்பதையும் இனங்காண முடியும்.

கிளைமொழிகளையே வாழும் மொழிகள் (living languages) என்கிறோம். இத்தகைய மொழிகள் பயன்பாட்டிற்கு, அதுவும் குறிப்பாகக் கல்வி, ஆட்சி, அறிவியல்போன்ற துறைகளின் தேவைக் கேற்ப அமைவது சமுதாய நோக்கில் வரவேற்கத்தக்கது. தமிழ் போன்ற இரட்டை வழக்கு மொழிகளில் இத்தகைய பயன்பாடு மொழி ஆற்றலையும் மொழியாக்கத்தையும் மேம்படுத்தும் என்பதால் இது குறித்த ஆய்வுகள் மொழி வளர்ச்சிக்கும் அதன் வழி சமுதாய வளர்ச்சிக்கும் தேவையானவை என்று கருதப் படுகின்றன.

கிளைமொழிகள் : ஆய்வு அணுகுமுறைகள்

கிளைமொழி ஆய்வு இட அடிப்படையிலேயே பல நூற்றாண்டு களாக மேற்கொண்டு வந்துள்ளதை மொழி வரலாறு நமக்குத் தெளிவாக்குகிறது. தமிழ் மொழியிலும் இத்தகைய நிலையே இருந்து வந்துள்ளதைத் தொல்காப்பியம் முதல் இந்நூற்றாண்டின் தொடக்க காலம் வரை மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகள் காட்டுகின்றன. 1910 ஆம் ஆண்டிலேயே முதன்முறையாகத் தமிழின் சமுதாயக் கிளைமொழிகள் பற்றிய ஆய்வு பிரெஞ்சு அறிஞர் ஜூல்ஸ் பிளாக் என்பவரால் சிறு அளவில் மேற்கொள்ளப்பட்டது. இன்றைய மொழியியல் தனித்துறையாக வளரத் தொடங்கிய பின்னர் 1960களில் தமிழ்க் கிளைமொழிகளின் மொழியியல் விளக்கங்கள் இலக்கணங்களாக வெளிவந்தன. அதாவது விளக்க

மொழியியல் மற்றும் அமைப்பு மொழியியல் அணுகுமுறைகளைக் கொண்டு இது போன்ற கிளைமொழிகள் பற்றிய ஆய்வுகள் பிற நாடுகளிலும் இந்திய நாட்டிலும் மேற்கொள்ளப்படலாயின. இவற்றை ஒருங்கிணைத்தே மரபுசார் கிளைமொழியியல் (traditional dialectology) என்பது வழக்கிற்கு வந்தது. இதனை யடுத்து அமைப்பியல் கிளைமொழி ஆய்வு (structural dialectology) என்பது வழக்கிற்கு வந்தது. இதன் மூலம் பல்வேறு மொழிக் கூறுகள் எவ்வாறெல்லாம் அமைப்பு அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன என்பது விளக்கப்பட்டது. 1966ஆம் ஆண்டில் வில்லியம் லெபாவ் என்ற அமெரிக்க அறிஞர் சமுதாயக் கிளைமொழி ஆய்வில் ஒரு புதிய அணுகுமுறையைக் கையாண்டு வெற்றி கண்டார். சமுதாய அமைப்பில் காணப்படும் படிமநிலை களுக்கு ஏற்ப, கிளைமொழிப் பயன்பாட்டில் காணப்படும் மாற்றங்களையெல்லாம், சமுதாயக் காரணிகளையும் சூழல்களை யும் (social variables and contexts) கொண்டு வரையறை செய்ய முடியும் என்பதை அவரது சமுதாய மொழியியல் விளக்கம் மாறல் விதிகளின் (Variable rules) மூலம் தெளிவுபடுத்தியது.

மொழிக்கூறுகளையும் சமுதாயக்கூறுகளையும் ஒன்றோ டொன்று தொடர்புபடுத்தி, மொழி மாற்றத்திற்கான விதிகள் சொல்லப்பட்டன. இத்தகைய ஆய்வு 'Social Stratification of Language' (மொழியின் சமுதாயப் படிமநிலை ஆய்வு) என்று குறிப்பிடப்பட்டது. கிளைமொழி மற்றும் பேச்சுவழக்கு தொடர்பான ஆய்வில் இந்த அணுகுமுறை ஒரு புதிய அத்தியாயத் தைத் தோற்றுவித்தது. இவ்வணுகுமுறையைப் பயன்படுத்தி தமிழ்ப்பேச்சு வழக்குகளைச் சில ஆய்வாளர்கள் தங்களது பிஎச்.டி. ஆய்வில் மேற்கொண்டு முடித்துள்ளது குறிப்பிடத்தக்கது (இருளப்பன், 1978; யேசுதாசன், 1978; ஞானம், 1979; சிவசண்முகம், 1980; முத்துசாமி பிள்ளை, 1981; தயாளன், 1985) மேலும் தமிழ்ச்சமுதாயக் கிளைமொழிகள் பற்றிய ஆய்வு நூல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது (கருணாகரன் & சிவசண்முகம், 1981).

கிளைமொழி ஆய்வின் சிறப்பியல்புகள் - பயன்கள் - எதிர்காலப் பணிகள்

தொன்று தொட்டே இலக்கிய வளம் பெற்ற மொழிகளில் கிளைமொழி வழக்கு இருந்து வருகிறது. சில மொழிகளில் இலக்கிய வழக்கிற்கும் அன்றாட மொழிப்பயன்பாட்டிற்கும் வேறு

பாடுகள் அதிக அளவில் இருந்து வருகின்றன. இந்த அடிப்படையில்தான் மரபிலக்கணங்கள் மொழியைப் பற்றிக் குறிப்பிடும் நிலையில் செய்யுள் வழக்கு, உலக வழக்கு என்று வரையறை செய்கின்றன. செய்யுள் வழக்கிற்கே இலக்கணம் யாத்த நிலையிலும் உலகவழக்கில் உள்ளதையும் அதனோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதை மரபிலக்கணக்காரர்கள் மறக்காமல் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு இலக்கணத்தில் சொல்லப்பட்டதற்கான காரணம் கிளைமொழியின் பயன்பாடு குறித்த சிறப்பியல்பேயாகும். கிளைமொழி தொடர்ந்த (continuous) மற்றும் அன்றாட (day-to-day) மாற்றங்களுக்கு உட்பட்டது. மாற்றங்களின் எண்ணிக்கையும் கிளைமொழியில் அதிகமாக இருக்கும். கிளைமொழி நிலைபேறாக்கம் செய்யப்படாதது, பயன்பாட்டில் ஏன்? எவ்வாறு? என்ற கேள்விகளுக்கு அப்பாற்பட்டது.

மக்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்களுக்குத் துணை நிற்பது, அதற்காகப் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாவது, கருத்துப் புலப்பாட்டிற்கு, குறிப்பாக அதன் ஆற்றலைப் பெருக்குவதற்கு விதிகளைத் தளர்த்தியும், புதுமைகளைப் புகுத்தியும் பழையனவற்றைக் கழித்தும் மொழியமைப்பைத் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்வது, எனுமிவையெல்லாம் கிளைமொழியின் சிறப்பியல்புகள் எனலாம்.

கிளைமொழி ஆய்வு—அதிலிருந்து பெறப்படும் விளக்கங்கள் போன்றவை மொழியமைப்பு மற்றும் மொழிப் பயன்பாடு தொடர்பான ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. மொழிக்கூறுகளின் நிலைபேறாக்கத்திற்கும் புதுமையாக்கத்திற்கும் வழிவகுக்கிறது. மொழி வரலாறு முறையாகச் செம்மைப்படுத்தப்படத் துணை நிற்கிறது. சொற்களஞ்சியத்தைப் பெருக்கி, மொழி வளத்தை அதிகரிக்கச் செய்வதற்கு உதவுகிறது. பிற மொழிகளின் பயன்பாட்டைத் தேவையில்லாத நிலையில் குறைத்துக் கொள்வதற்கு வழி வகுக்கிறது. ஓரளவே படித்த மற்றும் படிக்காத மக்கள் பரவல் செய்தித் தொடர்பு மூலங்களின் வாயிலாக நாடு—மொழி—சமுதாயம் போன்றவற்றின் வாழ்வு, வரலாறு, வளர்ச்சி பற்றியெல்லாம் ஓரளவிற்கு அறிந்து கொள்ள உற்ற கருவியாக அமைகிறது. மொழி ஆராய்ச்சிக்காகக் கிளைமொழி வரைபடம் தயாரித்தல், மொழிப் பொதுமைகளைக் கண்டறிதல், சிறப்புக்கூறுகளைக் கண்டறிதல், மொழிப்பயன்பாட்டிலுள்ள குறைகளைக் கண்டறிதல் இவற்றின் மூலம் ஆக்க

பூர்வமான மொழிப்பயன்பாட்டை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ள கிளைமொழி ஆய்வுகள் பயனுள்ளதாக அமைகின்றன. ஆகவே தமிழ்க் கிளைமொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கண்ட பணிகளை எதிர்காலப் பணிகளாக மேற்கொள்வது காலத்தின் கட்டாயம்—நிறைவேற்றப்பட வேண்டிய சமுதாயப் பணி என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

அகத்தியலிங்கம், ச. — **திராவிட மொழிகள்**, பொன்னகம், அண்ணாமலை நகர், 1976

ஆரோக்கியநாதன், எஸ். — **கிளைமொழிகள்**, முத்துப் பதிப்பகம், விழுப்புரம், 1987

கருணாகரன், கி. — **சமுதாய மொழியியல்**. பாரி நிலையம், சென்னை, 1975
மொழி வளர்ச்சி. மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1982
'தமிழ் வழக்குகள்', ஆய்வுக் கோவை, இ.ப.த. மன்றம், அண்ணாமலைநகர், 1985

சக்திவேல், சு. — **தமிழ் மொழி வரலாறு**. மணிவாசகர் பதிப்பகம்; சிதம்பரம், 1984

சீனிவாச வர்மா, கோ. — **கிளைமொழியியல்**, அ.த.மொ. கழகம். அண்ணாமலைநகர், 1986

தொல்காப்பியர் — **தொல்காப்பியம்**, (மூலம்) கழக வெளியீடு, சென்னை, 1963

மீனாட்சி சுந்தரன், தெ. பொ. — **தமிழ் மொழி வரலாறு**, (மொழி பெயர்ப்பு), மதுரை, 1964

முத்துச்சண்முகம் — **இக்கால மொழியியல்**, முத்துப் பதிப்பகம்; மதுரை, 1967

Agesthialingom, S. — **'Three Dialects of Tamil**, Pakha Sanjam, 2.1, 1976

Annamalai, E. — **'Standard Spoken Tamil, Some Observations'**, **Studies in**

	Dialectology, 1,2; 266-67, 1976
Arokianathan, S. (ed.)	**Seminar on Dialectology**, Tamil University, Thanjavur, 1987
Bright, W. & Ramanujan, A. K.	'Sociolinguistic Variation and Language Change', **Sociolinguistics** (ed.). 1962
Deivasundaram, N.	**Tamil Diglossia**, Nainar Pathippagam, Tirunelveli, 1981
Edward Williams, T. & Jeyapaul, V. Y,	**Udaiyar Dialect of Tamil**, Annamalai University, Annamalainagar, 1977
Gnanam, M.	'Social Differentiation of Tamil in the Neyveli Township Area' (unpublished Ph.D. thesis), Annamalai University, Annamalainagar, 1979
Gnanasundaram, V.	'A Pilot Dialect Survey of Thondaimandalam' (un published Ph D. thesis) Annamalai University, Annamalainagar, 1973
Grierson, G. A.	**A Linguistic Survey of India**, Motilal Banarsidass, New Delhi, 1964
Irulappan, K. M.	'Social Stratification of Tamil in a Tamilnadu Village (Bhuvanagiri Village)' (unpublihed Ph.D. thesis), Annamalai University; Annamalainagar, 1978
Jeyapal, S.	**Yadava Dialect of Tamil**

Annamalai University, Annamalainagar, 1978

Jules Bloch — 'Castes et Dialects on Tamil' Memoires de la Sociectie de Linguistique de Paris 16.1-30, 1910

Kamatchinathan, A. — The Tirunelveli Tamil Dialect, Annamali University, Annamalainagar, 1970

Karunakaran, K. — The Kollimalai Tamil Dialect, Annamalai University, Annamalainagar, 1971

Karunakaran, K. & Shanmugam Pillai, C. — Saiva Vellala Tamil Dialect, Annamalai University, Annamalainagar, 1976

Karunakaran, K. & Sivashanmugam C, — Study of Social Dialects in Tamil, AITLA, Annamalai-nagar, 1982

Muthuswamy Pillai, P, — 'Social Differentiation of Tamil in Madurai City, (unpublished Ph.D. thesis), Annamalai Universiry, Anna-malainagar, 1981

Labov, W. — The Social Stratification of English in New York City, CAL; Washington, D.C, 1966

Neethivanan, J. — 'A Survey of Dialect Works done in India, 'Seminar on Dialectology (ed.), Ttivandrum, 1973

Pattanayak, D. P. — 'Caste and Language', IJDL 4.1 : 94-104,1975

Rajaram, S. 'Structural Dialectology as applied to Tamil, AYVUKKOVAI 4 : 492-96, 1972

Ramasamy, K. Padayacci Dialect of Tamil, Annamalai University; Annamalainagar, 1978

Sakthivel, S. 'Muslim Dialect of Tamil AYVUKKOVAI 11; 95-101, 1979

Shankaranarayanan, G. 'A Study of the Brahmin Dialect of Tamil, AYVUKKOVAI 5; 535-40, 1973

Shanmugam, S. V. 'Dialects in Inscriptional Tamil, Orbis 7; 90-98, 1971

Shanmugam Pillai 'Tamil Dialectology; A Critical Study' in Seminar on Dielectology (ed.) 1987

Sivashanmugam, C. 'Social Differentiation of Tamil in Coimbatore, (unpublished Ph.D. thesis) Annamalai University, Annamalainagar, 1980

Srinivasa Varma, G & Ramaswamy, N. Harijan Dialect of Tamil Annamalai University; Annamalainager, 1976

Subramaniam, V. I. Dialect Survey of Malayalam, University of Kerala, Trivandrum, 1974

Thayalan, V. 'Sociolinguistic Description of Krishnan Vagai Speech' (unpublished Ph.D. thesis), Annamalai University; Annamalainager, 1985

Thirumalai, M. S, — Aspects of Language Use, AITLA; Annamalainagar, 1983

Vaithiyanathan, S. — 'On the Harijan Dialect of Tamil', AYVUKKOVAI 3; 294-99, 1971

Weinreich, U. — 'Is a Structural Dialectology Possible?' Word 10; 388-400. 1954

Yesudhason, C. — 'Sociolinguistic Study of Vilavencode Tamil Speech' (Unpublished Ph.D. thesis) Annamalai University, Annamalainagar, 1977

Zvelebil, K. — 'Dialects of Tamil' Archiev Orientalni (Vols. 27 & 28), 1959-60

'Spoken Language of Tamil nadu', Archiev Orientalni 13.2. 237-64, 1964

ஒப்பிலக்கியம்

எஸ். எஸ். குமார்
(வான்முகில்)

தொன்மை வாய்ந்த தமிழ், வடமொழி, சீனம் முதலான இலக்கியங்களுக்கான ஒப்பிலக்கிய விதிமுறைகள் புதிதாக வகுக்கப்பட வேண்டும். இந்திய, உலகத் திறனாய்வாளர்க்குத் தமிழிலக்கியம் சென்றடைய வேண்டும் எனில், ஒப்பிலக்கிய ஆய்வுகளைக் கணித்தல், தொகுத்தல், மதிப்பிடுதல் உடனடித் தேவையாகும்.

முன்னுரை

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''— எனில் கேளிர் உறவாடும் களம் ஒப்பிலக்கியமாகும். பொதுவாகச் சராசரி இந்திய அறிஞன் இயல்பிலேயே ஒப்பாய்வாளனாகத்தான் இருக்கின்றான்; ஏனெனில் சொந்த இலக்கியம் அனைத்திந்தியப் பண்பாட்டின் அடிப்படையில் எழுதுவதால் நாட்டின் பிற பகுதிகளோடு கொண்டுள்ள இலக்கிய ஆன்மீகத் தொடர்புகளை வைத்து அதனை மதிப்பிட்டுத் தீர வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருக்கிறது (சச்சிதானந்தன்). அவ்வாறு செய்யப்படும் மதிப்பீடுகள் மொழி, பண்பாடு, இனம் முதலானவற்றைக் கடந்து மனித நேய ஒருமைப் பாட்டினை வற்புறுத்த வேண்டும். இதனை விளக்க வந்த கா. செல்லப்பன்; 'எல்லாக் கவிதைகளுமே சத்தியம் என்ற மூலக் கவிதையின் மொழி பெயர்ப்பாக முகிழ்க்கின்றன. அவை சத்தி மோனத்திலிருந்து மொழிகடந்த ஒரு மோனத்தை நோக்கிச் செல்கின்றன. எனவே மொழி இன வேறுபாடுகள் இலக்கியத்தைப் பிரிக்கக் கூடாது என்பதே இன்றைய ஒப்பிலக்கிய ஆய்வாளரின் சித்தாந்தம்' (1987-17) என்கிறார்.

பிறமொழி இலக்கியப் பயிற்சியினை நாம் கீழ்க்குறித்தவாறு முறைப்படுத்திக் கொள்ளலாம். நாம் நம்முடைய இலக்கியம் தவிர குறைந்தது இரண்டு வேற்று மொழி இலக்கியங்களைப் படிக்க

வேண்டும் என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப்படுகிறது. அவற்றுள் ஒன்று நம் இலக்கியத்தை மிகவும் ஒத்திருப்பதாகவும், மற்றொன்று கூடிய வரை வேறுபட்டதாகவும் இருக்க வேண்டும்; அதனால் ஒன்று நமது நம்பிக்கைகள், மனோபாவங்கள் மற்றும் மதிப்பீடு களை உறுதிப்படுத்தும்; மற்றொன்று திருத்தும்; அதன் மூலம் ஒரு முழுமை உருவாக உதவும் (Narasimhaih xxi). இந்த அறிவுரையின் அடிப்படையில் நாம் மலையாள, ஆங்கில இலக்கியங்களைப் பயில்வதும், ஒப்பிடுவதும் பயன்தருவதாக அமையும். ஆங்கில இலக்கியம் தமிழிலக்கியத்தில் பிரதிபலிப்பது பற்றிக் கூற வந்த க. கைலாசபதி, 'மேனாட்டு நாகரிக முறை களையும் இலக்கிய இயக்கங்களையும் அப்படியே பின்பற்றல், மறுத்தல், ஒன்றிணைத்தல், இவையே நவீன தமிழ் இலக்கியத்தைப் பாதித்து வழி நடாத்தும் முக்கிய போக்குகள் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. பாரதியிடம் மூன்றும் வெவ்வேறு அளவிற் காணக் கூடியதாய் உள்ளது, ஒன்றையொன்று ஈர்த்தும், எதிர்த்தும், தழுவியும், மறுத்தும் நிற்கும் வலிந்திழுப்பு நிலையிலேயே (Tension) முரண்பாடுகள் சங்கமமாகும் ஆபூர்வ ஆற்றல் பிறக்கிறது. இலக்கியத்துக்கு இந்நிலை பெருவாய்ப் பானது' (1) என்கிறார். இத்தகு பெருவாய்ப்பினைப் பயன் படுத்திக் கொள்ளத் தமிழ்-ஆங்கிலம் ஒப்பிலக்கியம் உதவும் என்பதில் ஐயமில்லை.

தமிழிலக்கியம் தொன்மையும் வளமையும் நிறைந்ததாயினும், உலக அரங்கில் உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்று குறிப்பிடும் ச. வே. சுப்பிரமணியன், உலகின் கண்களில் நம் இலக்கியம் நடைமுறையில் படுவதில்லை என்றே கூறலாம். எடுத்துக்காட்டாக Erotic Poetry, (ed.) W. Cole, London; Weidenfield and Nicolsen, 1964 என்னும் தொகுப்பு நூலில் கீதகோவிந்தம் இடம் பெறும் பொழுது ஒரு தமிழ்க் கவிதை கூட இடம் பெறவில்லையே (259) என வருந்துகிறார். 1990இல், இக்கட்டுரையாளருக்கு அமெரிக்கப் பேராசிரியர் டாக்டர் அலென் மெக்ளாய்டு எழுதிய மடலொன்றி லும் இத்தகு வருத்தம் வெளிப்படுகிறது. இந்தியக் கலாச்சாரத் தொடர்புக் கழகம் 1974இல் பதிப்பித்த இன்றைய இந்தியக் கவிதை எனும் ஆங்கிலத் தொகுப்பு நூலில் பாரதிதாசனின் ''கடவுள் மறைந்தார்'' எனும் கவிதை ஒரு பக்க அளவில் வெளி யிடப்பட்டுள்ளது. ''மற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பக்கங் களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது பாரதிதாசன் உண்மை

யிலேயே முக்கியமில்லாத கவிஞர் எனத் தோன்றுகிறது" (1) என வருந்துகிறார் மெக்ளாய்டு, இந்தச் சூழ்நிலையில் தமிழ்—ஆங்கில ஒப்பிலக்கியத்துக்கு மேலும் முன்னுரிமை தரப்படவேண்டியுள்ளது. எனவே இத்துறையில் இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகளை அறிமுகம் செய்து, இனிச் செய்யப்பட வேண்டிய ஆய்வுகளுக்கு வழிகாட்டலே இக்கட்டுரையின் நோக்கமாகும். இந்நோக்கத் திற்குத் துணையாக நூற்பட்டியலொன்றும் தயாரிக்கப் பட்டுள்ளது.

இதுவரை செய்யப்பட்ட ஆய்வுகள்

தமிழ்—ஆங்கில ஒப்பிலக்கியத்தில் 1960 முதல் 1984 வரை செய்யப்பட்ட ஆய்வுகள், எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றின் திறனாய்வுப் பட்டியலொன்றினை எஸ். ஜீவா நாகரத்தினம் தொகுத்துள்ளார். அதில் 53 ஆய்வுகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றின் மதிப்பீடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. (பார்க்க : இணைப்பு : 1) இவை தவிர, தமிழ்ண்ணலின் தமிழியல் ஆய்வில் தமிழகப் பல்கலைக் கழகங்களில் பதிவாகியுள்ள 10 ஆய்வுத் தலைப்பு மட்டும் தொகுக்கப் பட்டுள்ளன. (பார்க்க : இணைப்பு: 2)

மேற்குறித்த இரு நூல்களிலும் இடம் பெறாத இரு ஆய்வேடு களைப் பற்றிய அறிமுகம் மட்டும் இங்கே மாதிரிக்காகக் கொடுக்கப் படுகின்றது.

1. V. Murugan, 'D.H. Lawrence and the Akam poets—A Comparative Study of their themes', Ph.D. Dissertation, Madras U. 1983.

ஒப்பிலக்கிய ஆய்வு நெறிப்படி அமைந்துள்ள இந்த ஆய்வேடு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் Being and Knowing; The Religion of Love; Blood Consciousness; The Centrality of Marriage, Sex and Beauty; The Circumambient Universe ஆகிய இயல்கள் உள்ளன. 'அகம் கலைச் சொற்பட்டியல்' ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆடவரைத் தம்பால் ஈர்க்கும் மகளிரின் அழகு பற்றியும், மகளிரைத் தம்பால் ஈர்க்கும் ஆடவரின் செயல் நோக்க நடவடிக்கைகள் பற்றியும் அகக் கவிதைகள் குறிப் பிடுகின்றன. ஆனால் லாரன்ஸின் படைப்புகளில், மகளிரைப் போலவே ஆடவரும் அழகுடையவர்; மகளிரின் அழகு ஆடவரை ஈர்க்கும் அளவுக்கு, ஆடவரது அழகும் மகளிரை ஈர்க்கின்றது,

பண்டைய அகத்துறைக் கவிஞர்கள் அக, புற அழகின் அனுபவ மாகப் பாலுணர்வினைக் கருதினர். எனவே அதனை மிகவும் வீரும்பத்தக்க உணர்வாக்கினர். ஆனால் லாரன்ஸின் நோக்கமோ அதைவிட அதிகம். இயந்திர அதிகாரம், பணம் மற்றும் தன் முனைப்பு ஆகியவற்றின் அழகே அழகெனக் கருதப்படும் காலத்தில் வாழ்ந்த லாரன்ஸ் தன் சக மாந்தர் பாலுறவில் நல்லுறவு நிலைக் குத் திரும்பத் தன் வாழ்நாள் முழுவதும் போராட வேண்டி யிருந்தது. அகத்துறைக் கவிஞர்களும், லாரன்சும் அண்டத்தின் ஒருமையை உணர்த்தினர்; உலகில் பயன்பாட்டுக்கும், வசதிக்கு மான வகைகளில் இயற்கையினை மதிப்பிட மனிதன் முயலக் கூடாது: அண்ட ஒழுங்கமைப்புத் தாளகதியின்படி வாழ முயல வேண்டும் எனக் கூறினர். லாரன்ஸின் பாத்திரங்களிலும், நிகழ்ச்சிகளிலும் அவரது வாழ்க்கை வரலாற்றுணர்வினை அகழ்ந்து எடுக்க இயலும். ஆனால் அகத்துறைக் கவிதையில் தனிமனிதச் சுட்டு இல்லை; கவிஞன் தலைநீட்ட அனுமதிக்கப் படுவதில்லை. அதாவது, வரலாற்றின் உண்மைக்கும், லாரன்ஸின் உண்மைக்கும் உள்ள வேறுபாடு அவரது படைப்புகளில் பல இடங்களில் மங்கலாக் கப்பட்டுள்ளது. ஆனால் அகத்துறைக் கவிதை இலக்கியத்தின் உண்மை, அழகு பற்றியே முழு ஈடுபாடு கொண்டதாய் அமை கின்றது. இத்தகு முடிவுகள் இந்த ஒப்பிலக்கிய ஆய்வில் பெறப் பட்டுள்ளன.

2. துரை. ஜெகநாதன், வில்லியம் பட்லர் யேட்ஸ் மற்றும் சுப்பிரமணிய பாரதியின் பாடல்களில் புலப்படும் புனைவியல் கூறுகள் – ஓர் ஒப்பாய்வு, பிஎச்.டி, ஆய்வேடு, சென்னை, 1987.

ஒப்பிலக்கிய ஆய்வு நெறிப்படித் தமிழில் எழுதப்பட்டுள்ள இந்த ஆய்வேட்டில் புனைவியல் வரலாறும் வரைவிலக்கணமும், காலகட்டங்களும் தாக்கங்களும், தன் வரலாறு, மனக்கிளர்ச்சிகள் சமுதாயப் புரட்சி, வெளிப்பாட்டுத்திறன் முதலான இயல்களும், அருங்கலைச் சொற்கள், வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் நிழற்படங் களும் அமைந்துள்ளன. யேட்ஸின் பெரும்பான்மையான காதற் பாட்டுகளில் ஏக்கமும் மனத்தளர்ச்சியும் புலப்படுகின்றன. ஆனால் பாரதி காதற்பாட்டுகளில் பெரும்பாலும் காதலைப் போற்றியே பாடியுள்ளார். பாரதி அழகைத் தெய்வமாகக் காண்கின்றார். ஆனால் யேட்ஸ், அழகி மாட்கானை மனத்தில் கொண்டு அழகு அழிக்கும் ஆற்றல் கொண்டது என்கிறார். அரசியல், சமுதாயம், குடும்பப் பொருள்நிலை போன்ற சூழல்கள் யேட்ஸைவிடப்

பாரதிக்கு மிகுந்த இடுக்கண் ஏற்படுத்தியதால், யேட்ஸை விட மிகுதியாகவே பாரதி மனித வாழ்க்கையை வெறுத்துப் பாடியுள்ளார். யேட்ஸ் மேட்டிமையை விரும்பியிருக்கிறார். பாரதி எளிய வாழ்க்கையில் நாட்டம் கொண்டிருந்தார். யேட்ஸின் வாழ்நாளிலேயே அயர்லாந்து விடுதலை பெற்று விட்டதால், அவருடைய இறுதிக்காலப் படைப்புகளில் நாட்டுப்பற்றுப் பாடல்கள் அமையவில்லை. பாரதி அடிமை இந்தியாவிலேயே மாண்டு போனதால், இறுதிவரை அவர் நெஞ்சத்தில் நாட்டுப்பற்றுத் தீ கனன்று கொண்டிருந்தது. யேட்ஸின் பாடல்களில், பாரதியின் பாடல்களில் இருப்பதை விடவும், மிகுதியான உரையாடற் பாங்கும், எதிர்ப்பின்மைத் தொனியும், காணக்கிடக்கின்றன. பாரதியின் வருணனைகளைப் போன்று யேட்ஸின் வருணனைகள் மிகுந்த கற்பனையோடு பொருந்திவரவில்லை. யேட்ஸ். குறியீட்டியலிலும், பாரதி புலனின்ப அடைமொழித் தொடர்களிலும் மிகுந்த நாட்டம் செலுத்தியுள்ளனர். இத்தகைய முடிவுகள் இவ்வாய்வேட்டில் பெறப்பட்டுள்ளன.

மேலும் ஒப்பிலக்கியக் கட்டுரைகளைப் படிக்கவிரும்புவோர்க்கு Journal of Tamil Studies. Journal of the Institute of Asian Studies, Tamil Civilization, All India Tamil Teachers Conference Papers முதலானவை உதவும்.

ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

அயல்மொழி கற்றலில் ஏற்படும் கலாச்சாரச் சிக்கலினை அமியதேவ் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: இப்பொழுது இங்கிலாந்தில் ஆங்கிலம் படித்தல், கூடுதல் சிக்கல்களை ஏற்படுத்துவதில்லை. ஏனென்றால், இலக்கியத்தைப் படிப்போரது கலாச்சாரமும், படைப்போரது கலாச்சாரமும் ஒன்றே. ஆனால் கலாச்சார வேறுபாடு ஆங்கிலம் படிக்கும் இந்தியருக்கு ஏற்படுகின்றது (33).

அரசியல், வரலாற்றுக் காரணங்களினால் ஏற்பட்ட ஆங்கிலக் கலாச்சார மேலாண்மையினைத் தமிழர் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஆங்கில இலக்கியத்தில், தமிழ், பிற இந்தியமொழி இலக்கியங்களின் தாக்கம் குறிப்பிடத் தக்கவாறு இல்லை. தோரோ, டி.எஸ். எலியட் ஆகியோரது படைப்புகளில் பண்டைய இந்திய இலக்கியங்களின் தாக்கங்கள் இருந்தாலும் அவை, அவர்களது தனித்தன்மையைப் பாதிப்பதாக இல்லை, இச்சூழலில்

ஆங்கில மொழிபெயர்ப்புகள் மூலமே உலகின் கவனத்தை நாம் ஈர்க்க முடியும். இது பற்றிச் சச்சிதானந்தன் கூறுவதாவது:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள, மிகச் சிறந்த ஆய்வடங்கலின்படித் தமிழில் மிக அதிகமான மொழிபெயர்ப்புகள் ஆங்கிலம், வடமொழி, ருஷ்ய மொழி வங்கமொழி ஆகிய மொழி களிலிருந்து செய்யப்பட்டுள்ளன. இதில் ஆங்கிலம் பெருமைக்குரிய முதலிடத்தை வகிக்கின்றது. ஒத்துப் பார்க்கும்போது, ஒருசில தமிழ் நூல்களே மற்ற இந்திய மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன (168).

இந்நிலையை மாற்ற இந்தியமொழி இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தும், திறனாய்வு செய்தும், சாகித்ய அகாதமி 'இந்திய இலக்கியம்' எனும் இருமாத ஏட்டினைச் சிறப் பாக வெளியிட்டு வருகின்றது. இதனால் தமிழ்-ஆங்கில ஒப்பிலக் கியம், ஒப்பிந்திய இலக்கியம், ஒப்பு மேலை இலக்கியம் என்ற இரு சாயல்களுடன் வளர்ந்து வருகின்றது.

தமிழ், ஆங்கில மொழிக் குடும்பங்களும், கலாச்சாரங்களும் வேறுபட்டவை, மேலைநாட்டு இலக்கியங்களில் கிரேக்கப் புராணக் கதைக் குறிப்புகள் விரவிக் கிடக்கும். ஆனால் தமிழ் இலக்கியங் களிலோ இராமாயண, மகாபாரதக் கதைக் குறிப்புகள் விரவி இருக்கும். எனவே இரு மொழிகளிலும் உள்ள இலக்கியக்கலைச் சொற்கள், புராணக்கதைக்குறிப்புகள், இலக்கிய வரலாறுகள் முதலானவை அகராதி/கலைக் களஞ்சிய வடிவில் வெளியிடப்பட வேண்டும். ரோமன் வரிவடிவத்தை இதற்குப் பயன்படுத்தலாம்.

எளிமைப்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்புகள் ஒப்பிலக்கியத் தில் மற்றொரு சிக்கல். அரசியல் அங்கதமாக ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட 'கலிவரின் யாத்திரைகள்' எளிமையாக்கப்பட்டுத் தமிழில் குழந்தைகள் இலக்கியமாக அறிமுகமாகியுள்ளது. அது போன்றே பெர்னார்ட்ஷா, துணுக்கு நகைச்சுவை எழுத்தாள ராகவே தமிழுக்கு அறிமுகமானார். நல்ல வேளையாக, மு. வரத ராசன், ''அறிஞர் பெர்னார்ட் ஷா'' என்ற நூலின் மூலம் அவரை முறையாகத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். என்றாலும் ஷாவின் புகழ்பெற்ற நாடகங்கள் முழுமையாகத் தமிழில் மொழி பெயர்க்கப் படவில்லை. ஆனால் ஷா நாடகமொன்றின் மையக் கருத்து எளிமைப் படுத்தப்பட்டு, ''மனம் ஒரு குரங்கு'' என்ற நாடகமாகித் திரைக்கும் தாவியது. நல்ல மொழிபெயர்ப்பாளரின் தகுதி பற்றிக் கூற வந்த சச்சிதானந்தன், அவரது [மொழிபெயர்ப்பாளரது]

அன்னிய மொழியறிவு திறனாய்வுச் சார்பானதாகவும், தாய்மொழி யறிவு நடைமுறைச் சார்பானதாகவும் இருக்க வேண்டும். அவரது அன்னிய மொழியறிவு, அவரது பலவருடக் கடின, நுண்ணிய ஆய்வின் விளைவாகக் கிடைக்கப் பெற்றதாகவும் இருக்க வேண்டும் (177) என்று வரையறுக்கின்றார். இத்தகுதியுள்ள மொழிபெயர்ப் பாளர் கிடைக்கும் வரை காத்திராமல் கூட்டு முயற்சியில் நல்ல மொழிபெயர்ப்புகளை உருவாக்கலாம். இவ்வகையில் கரோலின் ரைட் நம் நாட்டில் செய்த சோதனை முயற்சி பின்பற்றக் கூடியதே (ஸ்பான். 29-34). அவர் செய்தது போல் ஒரு திட்டம் வகுத்து, வாழும் தமிழ்க் கவிஞர் ஒருவரின் படைப்புகளை ஆங்கிலத்தில் பெயர்க்கலாம், அக்கவிஞரையும் மொழிபெயர்ப்பாளரையும் ஒரு கோடை முகாமில் தங்க வைத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை களின் மொழி பெயர்ப்பினை முடிக்கலாம். இரு மொழி வல்லுநர் கள் கொண்ட மேலாய்வுக் குழு ஒன்றும் அங்கே உடன் இருந்தால் மொழிபெயர்ப்புகளை உடனே செம்மைப்படுத்த இயலும். எளிமைப்படுத்தல், தழுவல், மறுமொழியாக்கம் முதலானவை பொதுநிலை இளநிலை வாசகர்க்கே பயன்படும். ஆய்வாளர்க் கேற்ற முழுமையான, உண்மையான மொழிபெயர்ப்புகள் தாம் ஒப்பிலக்கியத்துக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

எதிர்கால ஆய்வுகள்

இரு எழுத்தாளர்கள் ஒப்பிடப்படுவதுடன் இரு மொழிப் பொதுக் கருத்துகள் ஒப்பிடப்பட வேண்டும். (எ-டு) 'இரண்டாம் உலகப் போருக்குப்பின் தோன்றிய தமிழ்—ஆங்கில நாவல்களில் விடுதலை பெற்ற மகளிர் சித்தரிப்பு', 'கறுப்பு நாட்டுப்புற இலக்கியத்திலும், தமிழ் நாட்டுப்புற இலக்கியத்திலும் உழைக்கும் வர்க்கத்தின் குரல்', தமிழ் வட்டார நாவல்களும், ஹார்டியின் வட்டார நாவல்களும்'. 'நகர அடிக்கருத்து'—தமிழ் ஆங்கில நாவல்களில் வெளியிடப்பட்டுள்ள விதம் ஒப்பிடப்படக்கூடியதே. புராணக் கருத்துகள் கவிதைகளில் தோன்றும் விதம் ஒப்பாய்வுக் கேற்றது.

இது பற்றிக் கூறும் கா. செல்லப்பன், ...ஷெல்லியிலும் பாரதியிலும் பழங்கதையின் புதுப் பொருளைப் பார்த்தால் (Re-interpretation of old Myths) பாரதிதாசனில் காணப்படுவது புராண மாற்றமல்ல; புராண மறுப்பு (Demythologisation)· சஞ்சீவிபர்வதத்தின் சாரலிலே குப்பன் கதை இராமகாதைக்கு இணையாகிறது. புரட்சிக்கவியிலே மன்னன் பிரச்சனை குடிமக்கள்

பிரச்சனையாகிறது (1987 : 49) என்கிறார். இந்தப் புராண மறுப்பினை ஆங்கிலக் கவிஞர்கள் கையாண்டுள்ள விதம் ஒப்பிடக் கூடியது. மேலும் கீட்ஸின் ''தி ஈவ் அவ் செயிண்ட் அக்னஸ்'' எனும் கவிதையுடன் சஞ்சீவி பர்வதத்தின் சாரலை ஒப்பிடவும், தொல்காப்பியரின் பொருளிலக்கணத்துடன் மேலைநாட்டு உட் கட்டமைப்பு நெறித் திறனாய்வினை ஒப்பிடவும் வழி காட்டுகிறார் செல்லப்பன். ஒன்றுக்கொன்று ஒளிபெறும் வகையில் கீழ்க் குறித்த தலைப்புகள் ஆய்வுக்கேற்றவை. 'ஷேக்ஸ்பியர் நாடகங்களிலும் சங்கப்பாடல்களிலும் உள்ள முல்லைப் பாங்கு', 'ஜேன் ஆஸ்டினின் நாவல்களிலும் லக்ஷ்மியின் நாவல்களிலும் குடும்பக் கட்டமைப்பு', 'சிறுபான்மையினரது வாழ்க்கையை விவரிக்கும் நாவல்களின் ஒப்பீடு'. அகத்துறைக் கவிதைகளுடன் எலிசபெத் காலக் காதல் கவிதைகள் மற்றும் ஃபிலிபசிட்னி, ஷேக்ஸ்பியர், ஸ்பென்ஸர் கவிதைகளை ஒப்பிடலாம். 'லாரன்ஸின் குறியீட்டியலுடன் அகத்துறைக் கவிதைகளின் உள்ளுறை இறைச்சி', லாரன்ஸின் ஆண்-பெண் மூலக் கோட்பாட்டுடன் திருவள்ளுவர் காமத்துப் பாலின் தலைவன்-தலைவி' முதலானவை ஆய்வுக்குரியவை.

மூலப்படிவங்களின் (Archetypes) ஒப்பீடு மேலை நாட்டில் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றது. தமிழ்-ஆங்கிலம் போன்ற தொடர்பற்ற இருவேறு கலாச்சாரங்களில் எழுந்த இலக்கியங் களை ஒப்பிட மூலப் படிவங்களே மிகவும் உதவும். (எ-டு) தாய், பயணம், உருமாற்றம்.

புதிய ஆய்வு நெறிமுறைகள்

தற்போது இங்கு அறிமுகமாகியுள்ள ஒப்பிலக்கிய ஆய்வு நெறி முறைகள் ஆங்கில அமெரிக்க, ஐரோப்பிய இலக்கியங்களுக்காக ஏற்பட்டவை, தொன்மை வாய்ந்த தமிழ் வடமொழி, சீனம் முதலான இலக்கியங்களுக்கான ஒப்பிலக்கிய நெறிமுறைகள் புதிதாக வகுக்கப்பட வேண்டும்.

தாக்கம், வரவேற்பு—முதலான மேற்கத்திய ஒப்பிலக்கிய ஆய்வு நெறிமுறைகள் தமிழ்—ஆங்கில ஆய்வுக்குப் பயன்படா. ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் தோன்றிய இலக்கியங்கள் சிலவற்றை ஒப்பிட அவை பயன்படலாம். அதற்கு முந்தைய இலக்கிய ஒப்பாய்வுக்கு, அடிக்கருத்து, வகைமை, மூலப்படிவங்கள் முதலானவையே பயன்படும்.

மொழிபெயர்ப்புகள் ஒப்பிலக்கியத்தில் முக்கியமானவை. ஆனால் ஆங்கிலத்திலிருந்து தமிழில் நூல்கள் மொழிபெயர்க்கத்

தொடங்கிய காலத்தில், மொழிபெயர்ப்பாளரின் நோக்கம், தகுதி முதலானவற்றின் அடிப்படையில் ஷேக்ஸ்பியர் நாடகங்களின் தமிழ்மொழிபெயர்ப்புகள் அமைந்துவிட்டன. அத்தகு மொழி பெயர்ப்புகளை மூலத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்து சரியான பெயர்ப்பினை அடையாளம் காட்டலும் ஆய்வாளரின் பொறுப்பா கிறது.

ஒப்பிலக்கிய ஆய்வு நெறியில் தோன்றக்கூடிய குறைகளை ச. வே. சுப்பிரமணியன் எடுத்துரைப்பதாவது :

1. ஒரு தவறான, மாயத் தோற்றமான தன்னிறைவுணர்வு, கிரேக்கத் திறனாய்வின் பண்பாகியிருந்த தன்னிறைவு உணர்வு வகை போன்றது (ஏனெனில் கிரேக்கர்களுக்கு ஒப்பிடுதல் என்ற பேச்சே எழவில்லை—அவர்கள் தங்கள் இலக்கியம் தவிர, வேறு இலக்கியம் இருப்பதாகவே ஒத்துக் கொள்வதில்லை). மீறத்தகாத தனித்தன்மை.

2. தேசப்பற்றுடைய செயல் நோக்கங்களும், கலாச்சார எல்லை விரிவாக்கமும் (261). இக்குறைகளைத் தவிர்க்கும் வகையில் புதிய நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.

அழகியல் ஒப்பாய்வு என்பது புதிய கோட்பாடாக வளர்ந்து வருகின்றது. அதனைப் பற்றி விவரிக்கும் கா. செல்லப்பன் : 'உலகம் ஒன்று உலகத்தவர் உள்ளம் ஒன்று எனவே உலகத்தவர் உள்ளத்திலிருந்து ஊறும் கலையும் கவிதையும் ஒன்று என்பதுதான் ஒப்பிலக்கியத்தின் அடிப்படைக் கொள்கை... ஆழ்நிலை உணர்வு களின் எந்த வண்ணமும் இல்லை. அவற்றைப் பல்வேறு நாகரிகங் கள் பகுத்துத் தொகுத்துக் கலைவண்ணமும் தரும்போது, வடிவிலும் கருத்திலும் நெருங்கிய ஒருமைப்பாடு இருக்கிறது என்பதை உணர்ந்து, அழகியல் ஒப்பாய்வுகள் (Comparative Aesthetic Studies) செய்யப்பட வேண்டும் என்னும் கோட்பாடு அமெரிக்காவிலே தழைத்தது' (1986 : 3), என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. அந்தப் போக்கில் அழகியல் ஒப்பாய்வு நெறிகள் வகுக்கப்படவேண்டும்.

ஒப்பிலக்கியத்தின் எதிர்காலப் பணிகள் பற்றிக் குறிப்பிடும் வி. முருகன், 'அடிப்படை மற்றும் செயல்முறை சார்ந்த உளவியலின் நவீன கண்டுபிடிப்புகளைக் கொண்டு, அகநானூற்றுக் கவிதைகளுக்கு மறுவிளக்கம் காணலாம். மேற்கத்திய தமிழ் யாப்பமைதிகளை

ஒப்பிடலாம்... ஆய்வாளருக்கு உளவியல், சமூகவியல், மானுட வியல் அறிவு வேண்டும் (143) என்று விளக்குகின்றார்.

ஒப்பிலக்கியத்துக்கு உதவும் அகராதிகள் சொற்களுக்கு விளக்க மளிக்கும் பாணியில் அமையவேண்டுமேயன்றிப் பலவகைப்பட்ட வழக்காற்று மரபுகள் சரி, தவறு அல்லது மேன்மையானவை என விதி வகுக்கும் தோரணையில் அமையக்கூடாது; ஏனெனில் அத்தகைய எண்ணங்கள் செயற்கையானவை.

ஒப்பிலக்கிய ஆய்வு முறைகளில் ஒன்றான ஏற்பாய்வுகள் (Reception Studies) குறித்து விவாதிக்கும் கா. செல்லப்பன் 'ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் நம்மைச் சிலதாம் பெரிதும் கவர்ந் துள்ளன (உ-ம்) Julius Caesar, Twelfth Night, Othello. அவற்றைப் பற்றி நாம் கொண்டிருக்கும் விளக்கங்கள் சற்று வேறு பாடானவை. இவற்றுக்குரிய காரணம் என்ன? Hamletக்கும் மனோகராவுக்கும் வேறுபாடுகள் என்ன? மனோன்மணீயத்தின் ஆசிரியர் Lyttonனின் கவிதைக் கதையை ஏற்று ஷேக்ஸ்பியர் போன்றோரது உத்திகளைத் தமிழ்மொழி, நாகரிக மரபுக்கேற்ப எப்படிப் பயன்படுத்தியுள்ளார்? முதலானவை ஆராயப்பட வேண்டும்' என்கிறார்.

சில தமிழ்ச் சொற்களை அப்படியே ரோமன் எழுத்துக்களைக் கொண்டு எழுதவேண்டியுள்ளது. அத்தகைய எழுத்துகள், அவற்றுடன் பயன்படுத்தும் அழுத்தக் குறிகள், புள்ளிகள், கோடுகள் முதலானவற்றைப் பயன்படுத்தும் முறை நிலைப் படுத்தப்பட வேண்டும். சில ஆங்கிலப் பெயர்களை அப்படியே தமிழில் எழுத வேண்டியிருக்கின்றது. அப்பொழுது கிரந்த எழுத்து களை ஆய்வாளர் பயன்படுத்தினால் தேவையில்லாக் குழப்பங் களைத் தவிர்க்கலாம்,

(எ-டு) Hamlet, Shelley, Harlem, Wordsworth

முடிவுரை

ஒரு நாட்டின் பண்பாட்டைப் பற்றி, மற்றொரு நாட்டார் கொண்டுள்ள தவறான நம்பிக்கைகளை ஒப்பிலக்கியத்தின் மூலம் போக்க இயலும். இது பற்றிச் சச்சிதானந்தன் கூறுவது சிந்திக்கத் தக்கது. 'உள்நாட்டு இலக்கியத்தில் வெளிநாட்டு மக்கள், அவர் களுடைய பண்பாடு ஆகியவை பற்றித் திரிபு பட்டதும், தேசிய அளவில் பரவலானதுமான பிரிதிமைகளை ஆய்வு செய்வதே இது

(Study of Mirages). இந்தியா பாம்பாட்டிகளும், மகாராஜாக்களும், கழைக்கூத்தாடிகளும் நிறைந்த நாடென்று மேற்கு நாட்டவர் தவறாக எண்ணிக்கொண்டிருப்பதை இதற்குச் சான்றாகக் காட்டலாம். தற்கால இந்திய இலக்கியத்தில், அதிலும் நாவலில், கற்பு அல்லது ஆன்மீகத் தூய்மை பற்றி நம்மை உயர்வாக எண்ணிக் கொண்டும் மேற்கு நாட்டவரின் இது பற்றிய சிந்தனையை நாம் தவறாகக் கருதுவதையும் சான்றாகச் சொல்லலாம்' (52).

தமிழிலக்கியத்தில் உலகளாவிய சிந்தனை வளமிருந்தும், அவை அனைத்திந்திய அளவில்கூடப் பரவவில்லை என்ற வருத்தத்தைக் கா. செல்லப்பன் இவ்வாறு வெளிப்படுத்துகின்றார் :

'...கர்ணன், இராமன், சீதை ஆகியோரும் தத்தம் தனித்தன்மை, பொதுத்தன்மைகளைக் கடந்து இந்திய மனத்தின் படிவங்களாகிவிட்டனர். ஆனால் தெற்கில் தோன்றிய கண்ணகி, ஆதிப்படிவங்களைப் போலவே இந்தியத் தன்மை பெற்றிருந்தும் கூட, இந்திய இலக்கியம் என்ற மைய நீரோட்டத்தில் ஆட்கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும், (1987 : 87).

இத்தகுநிலை மாற வேண்டுமானால், இந்திய, உலகத் திறனாய்வாளர்க்குத் தமிழிலக்கியம் சென்றடைய வேண்டும் அதற்கு ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறிப்பாக ஆங்கிலத்தில் எழுதப்படும் ஆய்வேடுகள் வழிகோலும். (எ-டு) கம்பனும் மில்டனும், ஷேக்ஸ்பியரும் இளங்கோவும், பாரதியும் விட்மனும், பாரதியும் இராபர்ட் பிராஸ்டும்.

கைலாசபதியின் முன்னோடி முயற்சி தொடங்கி, இன்றைய முதுநிலை மாணவர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் வரையிலான ஒப்பிலக்கிய ஆய்வுகளைக் கணினியில் தொகுத்தல், மதிப்பிடுதல், புதிய ஆய்வு நெறிகளை வகுத்தல் முதலானவை பல்கலைக்கழக நல்லகக் குழு நிதியுதவியுடன் மேற்கொள்ளக்கூடிய திட்டங்களாகும். அவற்றின் மூலம் உணர்வு பூர்வமான தேசிய ஒருமைப்பாடு மலர வழி ஏற்படும்.

அறிவியல் இந்த மண்ணுலகை ஓர் 'உலகக் கிராம'மாக ஒருங்கிணைத்துள்ளது. அறிவியல் சாதனங்கள் புதிய துறைகளில் மொழி, இலக்கிய வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. ஆனால் மொழி, இலக்கியத்தை உலக மக்களைப் பிரிக்கும் சக்திகளாகச்

சிலர் பயன்படுத்த முயல்வது களைதற்குரியது. மாறாக, மக்க ளனைவரும் உலகக் குடிமக்களே என்ற பிணைப்பை ஏற்படுத்தும் பாலமாக ஒப்பிலக்கியம் வளர்ந்து வருவது முன்னேற்றத்தின் அறிகுறியே.

துணை நூற்பட்டியல்

(அ) ஆங்கிலம்

Dev, Amiya. **The Idea of Comparative Literature in India** Calcutta, Papyrus, 1984.

Jeevanagarathinam, S. **English-Tamil Literary Relations : A Critical Bibliography**, Madras, Emerald, 1986.

Mcleod, A. L., Letter to the auther, 12 Feb. 1990.

Murugan, V. "Comparative Literature" எண்பத்தொன்றில் தமிழ், சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.

Narasimhaiah, (ed.) **Indroduction, Asian Response to American Literature**. Delhi : Vikas, 1972.

Subramanian, S. V. **Studies in Tamilology**, Madras Tamil Pathippakam, 1982.

Wright Carolyne. "The Pains and Pleasures of Transcrea-tion", **Span**. Feb. 1989, pp 29-34.

ஆ. தமிழ்

கைலாசபதி, க., 'தமிழ் இலக்கியத்தில் ஆங்கிலத்தின் பிரதிபலிப்பு" இந்திய ஒப்பிலக்கியம் செய்தியிதழ், ஆகஸ்டு. 1986, ப. 1.

சச்சிதானந்தம், வை., ஒப்பிலக்கியம், சென்னை, ஆக்ஸ்போர்டு, 1985.

செல்லப்பன், கா. ஒப்பியல் தமிழ், சென்னை. எமரால்டு, 1987.

"ஒப்பழகியல்", இந்திய ஒப்பிலக்கியம் : செய்தி இதழ் ஆகஸ்டு, 1986 ப. 3.

சுப்பிரமணியன், ச. வே., கடிகாசலம், ந. (பதி). எண்பத்தொன்றில் தமிழ், சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.

தமிழண்ணல், முத்தையா (பதி). தமிழியல்ஆய்வு, மதுரை; மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், 1988.

இணைப்பு—I

ஆங்கிலம்-தமிழ் இலக்கியத் தொடர்புகள்
(ஒரு இலக்கியத் திறனாய்வுப் பட்டியல்)

பார்க்க : **English-Tamil Literary Relations,** S. Jeevanagarathinam, Madras: Emerald, 1986.

1 G. John Samuel, **Studies in Comparative Literature** (Tamil, Malayalam and English. Madras; 1977).

2 G. John Samuel and A. Shanmugam,(eds.) **Comparative Literature,** Vol. I (Madras; Academy of Comparative Literature, 1980).

3 A. A. Manavalan, **Epic Heroism in Milton and Kamban** (Coimbatore; Kamban Trust, 1984).

4 S. Ramakrishnan, **The Epic Muse—The Ramayana and Paradise Lost.** (New Delhi; Pepole's Publishing House, 1977).

5 V, Sachithanandan, **The Impact of Western Thought on Bharati;** (Annamalainagar; Annamalai U. 1970).

6 V. Sachithanandan, **Whitman and Bharathi : A Comparative Study** (Madras; Macmillan, 1978).

7 N. Subramanian, **Robert Frost and Subramania Bharati;** (Madurai, Madurai Kamaraj U. 1984).

8 Xavier S. Thaninayagam, **Landscape and Poetry: A Study of Narrative in Classical Tamil Poetry** (Bombay; Asia Pub. House, 1966).

9 க. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம் (Essays on Comparative Literature, Madras; Chennai Book House, 1982).

10 வை. சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம் (சென்னை; ஆக்ஸ்போர்டு, 1985).

11 ஜி. ஜான் சாமுவேல், ஷெல்லியும் பாரதியும் ஒரு புதிய பார்வை (சென்னை, மணி பதிப்பகம், 1980).

12 கே. செல்லப்பன், எங்கெங்கு காணினும் சக்தி, (சிவகங்கை அகரம், 1981).

13 தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், (மதுரை; மீனாட்சி புத்தக நிலையம், 1973).

14 K. Chellappan, 'Literature without walls; A Search for the still centre', Journal of Asian Studies, Vol. 2, No. 1 (Sep. 1984), 44-50.

15 A. Govindan, 'Whitmanian Bharati' பத்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி-1. (அண்ணாமலைநகர்; சிவகாமி அச்சகம், 1978), 192-197.

16 R. Gurunathan Citirappavai and Peony; A Comparison, பதினோராவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுதி-1 (அண்ணாமலைநகர்; சிவகாமி அச்சகம், 1979), 213-216.

17 M. D. Jayabalan and V. Sachithanandan, 'A Comparative Study of Byron's Cain and Bharatidasan's Iraniyan as Critiques On Rationalism', Journal of Tamil Studies (Tamil Nadu; International Institute of Tamil Studies, Dec. 1980), 37-49.

18 G. John Samuel, The Cult of Ideal Womanhood and the Revolt of Islam and Puthumaipen, Collection of Research Papers Presented in the Ninth Conference-Seminar, Part I (Annamalainagar; Sivakami Achakam, 1977), 494-99,

19 A. A. Manavalan, 'The Exordiums of Kamba Ramayanam and Milton's Paradise Lost-A Study'. Collection of Research Papers Presented in the 9th Conference-Seminar, Part I (Annamalainagar; Sivakami Achakam, 1977), 294-399.

20 A. A. Manavalan 'Wordsworth and Bharatidasan as Poets of Nature', Collection of Research Papers Presented in the 10th Conference-Seminar, Part I (Annamalainagar; Sivakami Achakam, 1978), 503-508.

21 R. Mascarenhas, 'The English Influence on Tamil' (ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, அண்ணாமலை நகர், சிவகாமி அச்சகம், 1973), p. 831.

22 A. Perumal, 'King Lear and King Jeevakan', Collection of Research Papers Presented in the 8th Conference-Seminar Parl I (Annamalainagar; Sivakami Achakam, 1976), 357-360.

23 V. Sachithanandan, 'Comparative Literature Scope and Method', **Studies in Comparative Literature**, ed. V. M. Gnanapragasam and K. P. Aravanan (Madras; Academy of Tamil Culture, 1974), 1-12.

24 V. Sachithanandan, 'Comparative Literature Definition, Scope and Method'. **Journal of Asian Studies** Vol I. No. (Sep. 1983), 44-59.

25 V. Sachithanandan, 'The Influence of Bernard Shaw on M. Varadarajan; A case Study', **The Laurel Bough**, Essays Presented in honour of Professer M. V. Rama Sarma, ed. G. Nagarawara Rao (Bombay; Blackie, no date) 167-175.

26 V. Sachithanandan, 'Dr. M. Varadarajan and Somerset Maugham as Novelists : A Sample Study; **Dr. Mu. Va:** ed. S. V. Subramanian and A. A. Manavalan (Madras International Institute of Tamil Studies, 1975), 19-36.

27 V. Sachithanandan. H. G. Wells, 'The Invisible Man' and Mu. Varadarajan's Markuticai' 'A Thematic Comparison **Journal of Tamil Studies**, XII (1975), 87-96.

28 R. Suriyanarayanan, James Joyce's 'A Portrait of the Artist as a young Man' and Jayakantan's Pariskku Po, **Collection of Research Paper Presented in the 11th** Conference-Seminar **Part I** (Annamalainagar; Sivakami Achakam, 1979), 265-270.

29 K. Swaminathan, 'The Problem of Evil in King Lear and Silappatikaram; A Comparative Study', 'Collection of **Research Papers Presented in the 5th** Conference-Seminar (Annamalainagar : Sivakami Achakam, 1973), 234-239.

30 S. Swaminathan, 'The Impact of Emersonian Transcendentalism on Kavimoni 'Collection of Research Papers **Presented in the 3rd Cenference** (Annamalainagar; Sivakami Achakam, 1971), 382-387.

31 Mu. Thirumavalavan, 'Cencepts of Beauty of Bharatidasan and Keats', Collection of Research Papers

Presented in the 6th Conference Vol. 4. (Annamalai-nagar; Sivakami Achakam, 1974), 404-409.

32 ஆர். கேசவமூர்த்தி, 'செந்தமிழ்ப் புலவரும் சேக்ஸ்பியரும்' 16வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 4 (அண்ணா மலைநகர்; சிவகாமி அச்சகம் 1984), 46-51.

33 க. கைலாசபதி, "பாரதியும் மேனாட்டுக் கவிஞரும்", பாரதி ஆய்வுகள் (சென்னை; நியூ செஞ்சுரி, 1984), 83-109.

34 வை. சச்சிதானந்தன், 'ஒப்பிலக்கியம் என்றால் என்ன?' செந்தமிழ், பாண்டித்துரைத்தேவர் சிறப்பு மலர், தொகுதி 74, பகுதி 4 (டிசம்பர் 1980), 186-195.

35 சரளா ராசகோபாலன் 'தமிழிலக்கியத்தில் தோழியும், சேக்சுபியரில் தோழியும், ஒப்பாய்வு', பதினோராவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை' தொகுதி 1 (அண்ணாமலை நகர்; சிவகாமி அச்சகம், 1979), 265-270.

36 ஞ. சிரிய புட்பம், 'கவிமணியும் பிட்ஜெரால்டும்: ஓர் ஒப்பீடு', 10வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை; தொகுதி 1. (அண்ணாமலைநகர்; சிவகாமி அச்சகம், 1978) 291-296.

37 ஜி. ஜான் சாமுவேல், 'ஒப்பிலக்கியம்', எண்பதில் தமிழ், பதிப். ச. வே. சுப்பிரமணியன், ர. விஜயலட்சுமி (சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1982), 209-223.

38 கறுவை பழனிசாமி, 'அன்னம், சீதை, போர்ஷியா; ஓர் ஒப்பியல் பார்வை, 16வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 4 (அண்ணாமலைநகர்; சிவகாமி அச்சகம்) 133-139.

39 பொன்மணி, 'சரசாங்கி ரூபாவதி; ஒரு ஒப்பீடு' 8வது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, தொகுதி 1 (அண்ணாமலை நகர்: சிவகாமி அச்சகம், 1976), 369-375,

40 பி. மருதநாயகம், தமிழர் கலை, 1, 4 (டிசம்பர் 1983), 1-14.

41 V. Murugan, 'Comparative Literature' எண்பத்தொன்றில் தமிழ், பதிப். ச. வே. சுப்பிரமணியன், ந. கடிகாசலம், 1983, 135-143.

42 ஜோ. விக்டர், 'தமிழில் ஒப்பீட்டு ஆய்வு வரலாறு' பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை (அண்ணாமலை நகர்; சிவகாமி அச்சகம், 1982), 603-608.

43 ப. விசயலட்சுமி, தமிழ் நாவல் - ஒரு அறிமுகம். ஆய்வு மலர், கேரளப் பல்கலைக்கழகம் தமிழ்த்துறை பழைய மாணவர்

மன்ற ஆண்டு வெளியீடு (Nagerkoil Assisi Press, 1972), 217-229.

44 யோகி சுத்தானந்த பாரதியார், 'பிற நாட்டார் தமிழ்த் தொண்டு' மதுரைத்தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் (மதுரை; தமிழ்ச் சங்கம்), 67-72.

45 Bharwatha Regina Papa, D H. Lawrence and Jayakantan; A Comparative Study', Dissertation, Madurai Kamaraj U. 1980.

46 K. Chellappan, 'Shakespeare and Ilango as Tragedians; A Comparative Study', Dissertation Madurai Kamaraj U, 1975.

47 Gnanasambandan, 'Shelley and Bharati; Comparative Study of their Poetic Creed', Dissertation U. of Madras, 1980.

48 S. Jeevanagarathinam, 'Somerset Maugham and Mu. Varadarajan as Novelists; A Comparative Study, Dissertation, Madurai Kamaraj U. 1983.

49 T. Sivasankaran 'Bacon and Thiruvalluvar; A Comparative Study', Dissertation, Madurai Kamaraj U. 1982,

50 A. Shanmugakani, 'A Comparative Study of John Updike and Jayakantan As Novelists', Dissertation Madurai Kamaraj U. 1982,

51 M. Thayyalnayaki, 'Bernard Shaw and Mu. Varadarajan; A Comparative Study', Dissertation, Madurai Kamaraj U. 1984.

52 வே. அந்தனி ஜான் அழகையா, வள்ளுவரும் விவிலியமும் ஓர் ஒப்பாய்வு, சென்னை, ப. 1979.

53 K. Kailasapathi, 'The Relations Between Tamil and Western Literatures', Madurai Kamaraj U. 1984.

இணைப்பு 2

தமிழண்ணல், தமிழியல் ஆய்வில் பதிவாகியுள்ள ஆய்வுத் தலைப்புகளின் பட்டியல் (எம்.பில்)

1 இலட்சுமி காந்தன், ச. பாரதியின் குயில் பாட்டும் கீட்ஸின் இலாமியாவும்; ஓர் ஒப்பாய்வு, செ. ப. 1981.

2 இலட்சுமிகாந்தன், பாரதி, பைரன் கவிதைகளில் சமுதாய மறு மலர்ச்சி, செ. ப. 1981.

3 நாகலிங்கம், நா., இப்சன், சோ, நாடகங்கள், ம, கா. ப, 1986, பிஎச்.டி.

4 அஞ்சலா ரிச்சர்ட்ஸ், A Comparative Study of the Hymns of Tanjai Vedanayaga Sastriar and Charles Wesley of England, செ. ப. திருநாவுக்கரசு, க. த.

5. ஆறுமுகம், சு., சமுத்திரத்தின் நாவல்களும் எச். ஜி. வெல்சின் நாவல்களும் ஓர் ஒப்பாய்வு, பாதா. ப. இரபிசிங் ம. செ., செல்லப்பன், க.

6 இராசேந்திரன், பி. The Plays of Bernard shaw and Cho, A Comparative Study, ம. கா. ப., ராமமூர்த்தி கே. எஸ். செயராமன், நா.

7 இலட்மிநாதன், பாரதி, பைரன் கவிதைகளில் சமுதாய மறு மலர்ச்சி, செ. ப., செயப்பிரகாஷம், நா.

8 இளமாறன், மு., இராபர்ட் பர்ன்ஸ், பாரதிதாசன் ஒப்பாய்வு, ம.கா.ப., 1985, சச்சிதானந்தன், வை, பெரிய கருப்பன், இராம.

9 கோபாலசுவாமி, எம் எஸ். எட்மண்ட் பர்க்கும் அண்ணாவும் ஓர் ஒப்பாய்வு செ. ப., 1982. இரபிசிங், ம.செ.

10 சச்சிதானந்தம், வீ., தி. ஜானகிராமனும் டி.எச். லாரன்சும்; ஓர் ஒப்பாய்வு, செ.ப, இரபிசிங் ம.செ., குமாரராசு, ஆ.

11 தங்கவேலு ஆர்., The Influence of English on Modern Tamil Prose. செ. ப., மணவாளன் அ.

12 தியாகமணி, எஸ். Arichandrapuranam and the Book of Job. திரு. வே, ப. தானியல் தேவசங்கீதம்.

13 துரைவேலு, எஸ்., வில்லியம் பிளேக், திருமூலர்; ஓரி ஒப்பாய்வு, செ. ப., மாணிக்கவாசகம் இரா.

14 பத்மா சீனிவாசன், Herbert's and Alwar's Mystic Poetry, ம.கா.ப., கோபால், கோ.

15 ரமணி, என். ஹாப்கின்-நம்மாழ்வார் பாடல்கள் ஓர் ஒப்பீடு, செ.ப., கமலேஸ்வரன், கே.எஸ்.

16 ரெத்னா ரகலாண்ட், வேர்ட்ஸ் வொர்த்தும் பாரதியும், ம.கா.ப.

17 ஜெயசேகரன் யு.வி., 'Milton and Kamban as Epic Poets, செ.ப. அன்னிதாமசு.

18 கந்தசாமி ஏ.கே. Comparative Study of Tamil and English Fiction, செ.ப. திருநாவுக்கரசு, க.த.

இணைப்பு 3

ஒப்பிலக்கிய நூற்பட்டியல்

அ. ஆங்கிலம்

Aiyar, V.V.S.; Kamba Ramayanam-A Study, New Delhi; Delhi Tamil Sangam, 1950.

Amur, G.S. et al Essays on Comparative Literature and Linguistics. New Delhi; Sterling, 1984.

Dev' Amiya, The Idea of Comparative Literature in India Calcutta: Papyrus, 1984.

Frederich, P. Werner and David H. Malene. Outline of Comparative Literature from Dante Alighieri to Eugene O'Neil Capel Hill; North Carolina UP. 1954,

Gnanapragasam, V.M., Aravanan, K.P., Studies in Comparative Literature; Madras; Academy of Tamil Culrure, 1974.

Jadavpur Journal of Comparative Literature Calcutta; Dept. of Comparative Literature, Jadavpur U.

Jeevanagarathinam, S. English-Tamil Close Relations; A Critical Bibliography Madras; Emerald, 1986.

Jost, Francois, Introduction to Comparative Literature, Indiana and New York; Bobbs Merril, 1974.

Journal of Asian Studies, Madras; Institute of Asian Studies,

Kailasapathy, K. **The Relation of Tamil and Western Literatures**, Madurai; Madurai Kamaraj U, 1984.

Levin, Harry, **Refractions ;** Essays in **Comparative Literature**, London : Oxford, 1966.

Meenakshisundaram, K. **The Contribution of European Scholars to Tamil**, Madras; Madras U. 1944.

Mukherjee, Sujit (ed). **The Idea of Indian Literature** Mysore; Central Institute of Indian Languages. 1981,

Pillai, K.K. "The Western Influence on Tamil Prose" **Tamil Culture**, July 1957, 167-175.

Prawer, S. S. **Comparative Literary Studies: An Introduction**, London; Duckworth, 1973

Remak, Henry H H, "Comparative Literature at the Cross Roads. Diagnosis Theraby and Prognosis", **Year Book of Comparative and General Literature 9** (1960).

Sachithanandan, V. et al. (ed.) **Bharatidasan Critical Perspectives**. Madurai; Madurai Kamaraj U. 1991.

Samuel, John, G, and Shanmugam, R. (ed.) **Comparative Literature.** Vol. I. Madras; Academy of Comparative Literature 1980.

Strelka, J (ed.) **Patterns of Literary Style** Year Book of Comparative Criticism, Vol. III. Pennsylvania State U. 1971.

Perspectives in Literary Symbolism. Vol. I. Pennsylvania; Pennsylvania State UP, 1972.

Subramanian. N. **Rebert Frost and Subramania Bharathi**, Madurai; Madurai Kamaraj U. 1984.

Viswanathan, S. et al. **Critical Essays** Madras Macmillan, 1987.

Watson, George: **The Study of Literature** New York; Charles Scribners, 1969

Weisstain, Ulrich. S. **Comparative Literature and Literary Theory.** Bloomington : Indiana UP, 1973.

Welleck, Rene. and warren, Austen, Discriminations Further Concepts of Criticism Delhi; Vikas, 1970.

Welleck, Rene and Warren, Austen. Theory of Literature, Great Britain; Penguin, Rpt, 1982.

Year Book of Comparative and General Literature. ed· Horst Fenz et al. 1951 ++. Pub at Indiana U. U.S.A.

ஆ. தமிழ்

இந்திய ஒப்பிலக்கியம் செய்தியிதழ். (பதி.) பிச்சை ஏ. அம்பாத்துரை, ஆக. 1986.

கடிகாசலம், ந. (பதி.) பாரதிதாசன். சென்னை; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1991.

இராசா, கி, ஒப்பிலக்கிய நோக்கு. மதுரை; பார்த்திபன், 1986.

ஏசுதாசன், பூரணசந்திரன். உரசல்கள், திருச்சி; பிஷப் ஹீபர் கல்லூரி, 1988.

சச்சிதானந்தன், வை. ஒப்பிலக்கியம்; சென்னை; ஆக்ஸ்போர்டு' 1985.

செல்லப்பன், கா. ஒப்பியல் தமிழ், சென்னை; எமரால்டு. 1987.

தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், மதுரை; சோலை, 1973,

————————, சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள் மதுரை; மீனாட்சி, 1975,

ரகுநாதன், பாரதியும் ஷெல்லியும், சென்னை; நியூ செஞ்சுரி, 1964

பிற நூல்கள், கட்டுரைகள், ஆய்வேடுகள் விவரத்துக்குப் பார்க்க; ஜீவா நாகரத்தினம் எஸ், ஆங்கிலம் தமிழ் இலக்கியத் தொடர்புகள் சென்னை; எமரால்டு, 1986.

தமிழாய்வுக்குப் பன்முக அறிவின்தேவை

க.ப. அறவாணன்

தமிழைத் தமிழியல் பார்வையிலேயே பார்க்க வேண்டும் என்ற நிலைமாறிப் பன்முகப் பார்வையில் பார்க்க வேண்டும் என்ற முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது. பலராலும் ஒப்புக் கொள்ளவும் பெற்றது, பன்முகக் கல்வியால் இழப்பை விட பெறுதலே மிகுதி. எனவே, பன்முக ஆய்வை வளர்க்க வேண்டிய கட்டாயச் சூழலில் உள்ளோம். இது வளர்வதற்கு இடையூறான தடைகள் அறியப் பெற்று, களையப் பெறுதல் வேண்டும்.

அண்மைக் காலமாகத் தமிழியல் அனைத்தையும் பன்முக ஆய்விற்கு உட்படுத்த வேண்டும் என்ற குரல் உரத்து முழங்கு கிறது. தமிழ் இலக்கியங்களும், தமிழ் இலக்கணங்களும் அண்மைக் காலம் வரை உள்முக நோக்கிலேயே ஆராயப் பெற்றன. இலக்கிய இலக்கணங்களின் செய்திகளை எடுத்துப் பேசுவது, சுவைத்துப் போற்றுவது, முன்னோர் மொழிப் பொருளைப் பொன்னே போல் போற்றுவது, தமிழியலார் கடனாக இருந்து வந்தது. அதுவே சரி யென்றும் நம்பப் பெற்றது. ஐரோப்பியர் வரவால் தமிழ் ஆய்வு உலகில் சில மாற்றங்கள் நிகழ்வது கட்டாயம் ஆயிற்று. குறிப்பாக, மொழி வரலாறும், இன வரலாறும், நாட்டு வரலாறும் புதிய பரிமாணத்தைப் பெற்றன. டாக்டர் கால்டுவெல்லின் ஒப்பிலக் கணம், எட்கர் தேர்ஸ்டனின் தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் என்ற பெரும் தொகுதி, வின்சென்ட் ஸ்மித், கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, சத்தியநாத ஐயர் முதலானோரால் எழுதப் பெற்ற நாட்டு வரலாற்று நூல்கள் ஆகியன தமிழ் உலகையும் தாக்கத் தொடங்கின. இப்பாதிப்பில் நாட்டு வரலாற்றைக் கட்டி அமைப்ப தற்குக் காரணமாக அமைந்த தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி கள் குறிப்பிடத் தகுந்தவை. இக்கல்வெட்டுகள் வழி அமைக்கப் பெற்ற நாட்டு வரலாற்றுச் செய்தியும், அரசர் முதலானோர் வரலாற்றுச் செய்திகளும் தமிழ் இலக்கிய இலக்கணங்களின் காலத்தை முடிவு செய்யும் போக்கில் முதன்மை பெற்றன. எனவே,

தமிழ் இலக்கண, இலக்கிய ஆய்வில் கல்வெட்டியல் என்ற அயல்முக ஆய்வியல் கால்கொண்டு நிலைபெறத் தொடங்கியது. ஒப்பிலக்கண வரவால் காலப்போக்கில் பிலாலஜி (Philology) என்ற மொழி மரபு இயல் இடம் பெற்றது. இதுவே நாளடைவில் மொழியியலாக வளர்ச்சி பெற்றது. தமிழ் இலக்கணங்கள் மொழியியல் என்னும் புது விளக்கில் ஒளி ஊட்டப் பெற்றன. வரலாற்று மொழியியல் என்ற ஒரு பிரிவு தமிழ் இலக்கிய இலக்கணக் காலங்களைக் கணிப்பதில் துணையாகக் கொள்ளப்பெற்றது. பி.டி. சீனிவாச ஐயங்கார், சி.கே. சுப்பிரமணிய முதலியார் முதலானோர் தம் இலக்கிய விளக்க முயற்சிகளில் இவ்வரலாற்றுக் கூறுகளும் இடம் பெறத் தொடங்கின. பின்னர் அறிவியலின் பல்வேறு கூறுகளும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் இடம் பெற்றுள்ளமை விளக்கம் பெறுவதாயிற்று. புதுவை பி.எல். சாமி, வ. செ. குழந்தை சாமி ஆய்வுகள் அறிவியல் பார்வையில் பழமை இலக்கியங்களின் செவ்வையை எடுத்துரைத்தன. ஆக, மெல்ல மெல்லத் தமிழைத் தமிழியல் பார்வையிலேயே பார்க்க வேண்டும் என்ற நிலை மாறி பன்முகப் பார்வையில் பார்க்க வேண்டும் என்ற முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது; பலராலும் ஒப்புக் கொள்ளவும் பெற்றது.

பன்முக ஆய்வுக்கு எதிர்ப்பு

தமிழியல் ஆய்வில் கல்வெட்டியல், மொழியியல், இனவியல், அறிவியல் முதலானவை ஒரு நூற்றாண்டில் எவ்வெவ்வாறு இடம் பெற்றன என்பது மேலே சுருக்கமாக விளக்கப் பெற்றது. எனினும், பன்முக ஆய்வு தமிழியல் பார்வைக்கு வேண்டா என்று சொல்வோர் உள்ளனர். அவர்தம் கருத்துப் புறக்கணிக்கத் தக்கதன்று; போற்றத் தக்கதும் அன்று; ஆராயத் தக்கது. வேண்டா என்று சொல்வதற்கு அவ்வோர் கூறும் காரணங்களாவன :

1. இலக்கியம், இலக்கணம் பயிலும் மூலக்கல்வியைப் பன்முகக் கல்வி பின்னுக்குத் தள்ளுகிறது.

2. பன்முக அறிவு வற்புறுத்தப் பெறுவதால் அவ்வாய்விற்கு உள்ளாகும் இலக்கியக் கல்வி / இலக்கணக் கல்வி ஆழம் குறைந்ததாக ஆகிவிடுகிறது.

3. உணர்ச்சிப் பூர்வமான இலக்கியத்தை, அறிவு பூர்வமான பன்முக நோக்கு தொடர்ந்து பாதிக்கிறது. எனவே படைப்பு உணர்வு குறைகிறது.

4. தமிழியல் அன்றி, பல்துறை இயலில் தகுதியும், ஆற்றலும் பெற வேண்டும் என்று வற்புறுத்துவது ஒருவனை ஒரு துறையில் ஆழமாகச் செல்லாமல் தடுக்கிறது. மானுடன் ஒருவனே பல்துறை வல்லமை பெறுவது பலரால் இயலாதது.

மேலே கண்ட பன்முக ஆய்விற்கு எதிராகக் கூறுகின்றனவற்றை முற்றும் புறக்கணித்துவிட முடியாது. மேற்கண்ட கூற்றுக்கு அடிப்படை இல்லாமலும் இல்லை. கடந்த அரை நூற்றாண்டாக அயல்முகக் கல்வி வளர்ந்த அளவிற்கு ஒரு துறை ஆழக் கல்வி வளரவில்லை. மூலக் கல்வியும் வளரவில்லை. ஆய்வு நாள்தோறும் நலிந்து வந்திருக்கின்றது. தமிழர்க்கு உள்ள இயல்பான அயல் மயக்க ஆர்வமே இதற்குக் காரணமாக இருந்துளளது. மாறாகப் பன்முக அறிவுத் திறத்தால் தமிழியல் பெரும் சிறப்பு எய்திடவில்லை. தமிழ் கற்போர் படைப்புத் துறையின் பெரும்பாலும் ஈடுபாடு உடையோராக இருப்பது இல்லை, அவர்தம் படிப்புத் திறம் வளர்ந்த அளவிற்குப் படைப்புத்திறம் வளர்க்கப் பெறவில்லை. தரமான படைப்பு இலக்கியப் பங்கு குறைவிற்கு இதுவும் ஒரு காரணம்,

பன்முக நோக்கு வேண்டா, பழைய போக்கே வேண்டும் என்று முழக்கப்படுவதற்குரிய காரணங்கள் கருதத் தக்கன. எனினும், பன்முக நோக்கே வேண்டும் என்று வற்புறுத்தும் அறிஞர் குரல் ஒதுக்கத் தக்கது அன்று.

1. இலக்கியம் தானே முளைத்துத் தரையில் படாமல் வானில் தொங்கும் தருவும் அன்று, திரிசங்குவும் அன்று. அது மக்களிடம் இருந்து முளைக்கிறது; அவர்தம் வாழ்க்கையில் இருந்து முளைக்கிறது, எனவே, மண்ணின் சாயல் அதில் படிந்து இருக்கிறது; மண்ணின் வாசனை அதில் வீசுகிறது. ஆகவே, தரமான ஓர் இலக்கியத்தில் மக்களின் குணநலன்களும், அவர் வாழும் சமுதாயப் போக்குகளும் நிலபுல இயல்புகளும் செடிகொடி உயிர் இனத் தன்மைகளும், அனைத்திற்கும் மேலான மானுட உறவுகளும் பேசப்பெற்றே இருக்கும்: பேசப் பெறவே வேண்டும். எனவே, நல்ல இலக்கியத்தில் சமூகவியல், உளவியல், உயிரியல் என அறிவியலின் பல்வேறு கூறுகள் இப்பன்முகக் கூறுகளில் படிந்து இருக்கும்.

2. இலக்கியக் கல்வி பொதுவாக இரண்டு அடிப்படைகளைக் கொண்டதாக அமையும்,

1. புரிந்து கொளல்
2. புலப்படுத்தல்

மேற்கண்ட இரண்டிற்கும் பலதுறைக் கூறுகளை உள்ளடக்கி இருக்கும் இலக்கியத்தை விளங்கிக் கொள்ளவும், அதனை விளக்கவும் பன்முக அறிவு தவிர்க்க முடியாததாகிறது. சான்றாக, ஆண்டாளின் பாவைப் பாடலில் கீசு கீசு எனும் ஆனைச் சாத்தானின் பேச்சரவம் கேட்டிலையோ எனும் பாடல் அடி, தும்பியின் பேச்சாக இதுவரை விளக்கப் பெற்று வந்தது. அது சரியன்று. புலர் காலைப் பொழுதில் ஒலி எழுப்புவது தும்பி அன்று, ஆனைச் சாத்தன் என வலிமை வாய்ந்த குருவி என்பது அறிஞர் ஒருவரால் கண்டறியப் பெற்று விளக்கப் பெற்றது (பி.எல். சாமி, ஆனைச் சாத்தன், தமிழ்மணி, 16.3.91)

பன்முக அறிவால் இலக்கியம் துல்லியமான விளக்கம் பெறுகிறது என்பதற்கு மேலே காட்டியது ஒரு சான்று,

திருக்குறளில் இடம் பெற்றுள்ள 'ஏதில் பிணந்தழீஇ யற்று' (913), என்ற குறட் செய்தியை இனவியல் துறை மெய்ம்மைப் படுத்திற்று.

3. தமிழியலுக்கு ஆக்கம் என்ற கோட்பாட்டால் புலவர் இடையே இலக்கியப் போற்றி மனமே வளர்க்கப் பெற்றது. அதற்கு எதிரான தூற்றி மனமும் வளர்க்கப் பெற்றது. மானுடவியல் ஆராய்ச்சியின் நெஞ்சாங் குலையான சத்தியத் தேட்டம் முன்னிலை பெறவில்லை; பின்னிலை பெற்றது. இதனால் உணர்ச்சிப் பூர்வமான இரகசிய மனநிலையே வளர்க்கப் பெற்றது.

4. போற்றி மனம், தூற்றி மனம் என்ற இருதுருவப் போக்கிற்கு அப்பால் நொதுமல் மனம் ஒன்று உள்ளது. இந்நொதுமல் மனம் ஒன்றைப் போற்றுதற்கும், தூற்றுதற்கும் காரணங்களை நல்கப் பணிக்கிறது. அதுவும் அறிவியல் அடிப்படையிலான காரணங்களை வழங்க வற்புறுத்துகிறது. எனவே, இதன்மூலம் இலக்கியக் கோட்பாடுகளையும் இலக்கணக் கோட்பாடுகளையும் பன்முக அறிவால் உருவாக்க முடிகிறது; உருவாக்க முடியும்.

மேற்கண்ட காரணங்களால் தமிழியல் மெத்த நன்மையைப் பெறுகிறது. பன்முகக் கல்வியால் இழப்பைவிட இலாபங்களே மிகுதி. எனவே, பன்முக ஆய்வை வளர்க்க வேண்டிய கட்டாயக் காலத்தில் நாம் உள்ளோம். இது வளர்வதற்கு இடையூறான தடைகள் அறியப் பெற்று, களையப் பெறுதல் வேண்டும். அதற்காக என்ன என்ன செய்யலாம் என்பது எண்ணத் தக்கது.

1. இன்று கல்லூரி, பல்கலைக் கழகங்களில் இடம் பெற்றுள்ள தமிழ் இலக்கிய, இலக்கணக் கல்வி வெறும் தமிழ் ஆய்வாக மட்டுமே உள்ளது. தமிழ்க் கல்வியுடன் கூடத் தமிழ் இலக்கிய இலக்கணங் களைப் புதுப் போக்கில் மேன்மைப்படுத்தும் பன்முகக் கல்வியையும் ஆங்காங்கே அறிமுகப்படுத்த வேண்டும். அண்மைக் காலமாக மொழியியலும், மிக அண்மைக்காலமாகச் சமூகவியலும் மானுட வியலும் மெல்ல மெல்லத் தமிழியல் கல்வியில் இடம் பெற்று வருவது நல்ல அறிகுறி.

2. தமிழ்நாட்டின் அவப்பேறு, தமிழ் மக்களின் வரிப்பணத்தை ஊதியமாகப் பெற்று வாழும் பல்வேறு அறிவியல் துறை ஆசிரியர் கள் (ஒரு சிலர் தவிர) தம் தாய்மொழியையோ, தம் மக்களையோ தம் நாட்டிலுள்ள சமுதாயப் போக்குகளையோ செடிகொடி உயிரினங்களையோ, பொருட்படுத்துவது இல்லை; போற்றுவதும் இல்லை. ஆங்கில வழியாகப் பெற்ற இறக்குமதிச் சரக்குகளை அப்படியே சுருக்கங்களாக (நோட்ஸ்) மாணாக்கர்களுக்கு இறக்கி வைப்பதுடன் தம் கடமை முடிந்து விடுவதாக எண்ணுகின்றனர் அன்னோர். தாம் இருக்கும் நாட்டை அறிந்து, தாம் பேசும் மொழியை உணர்ந்து விளக்கி வந்தால் தமிழ்நாட்டில் பன்முக அறிவு ஓங்கி வளரும்.

3. அயல்துறை அறிஞர்களின் சோர்வாலும், புறக்கணிப் பாலும் தமிழியல், தமிழ்நாட்டு வரலாற்றில், தமிழ் இனவியல் வளம் பெறாமல் இருந்து விட்டதே என்ற அக்கறையாலும், ஆர்வத் தாலும் ஆங்காங்கே தமிழ் அறிஞர்கள் ஒருசிலர் பன்முக அறிவை ஓரளவு வளர்த்துள்ளனர்: வளர்த்து வருகின்றனர். அன்னோரில் வி.ஐ. சுப்பிரமணியம், திருவனந்தபுரம், ந.சஞ்சீவி, சென்னை, மு. முத்துச்சண்முகம், மதுரை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

4. பன்முகக் கல்வியின் அடிப்படை—அறிவியலாகும். சரியான பரிசோதனையின் அடிப்படையில் ஒன்றை ஆழ்ந்து பகுத்து ஆராய்வதே அறிவியலின் செயல் முறையாகும். இம்முறை குறித்த கருத்து வருமாறு :

> 'அறிவியல் முறையின் முக்கியமான கூறுபாடு, சோதனை (testing) தர்க்க முறையிலோ, அநுமானத்திலோ, மற்ற வழி களிலோ கண்ட முடிவை, அது சரிதானா, இயற்கை நியதி களுடன் ஒத்திருக்கிறதா என்று சோதனை மூலம் பார்ப்பதும்,

ஒற்றுமை காணவில்லையானால் மீண்டும் முடிவுகளை மறு பரிசீலனை செய்து மாற்றுவதும், மாற்றியதைச் சோதனைக்கு ஆளாக்குவதும், சரி பார்ப்பதும் இந்த முறையின் முக்கிய பகுதி ஆகும். அறிவியல் முறை வளர்ந்த நிலையில், சோதனை களின் மூலம் தகவல்கள் சேகரிப்பதும், அப்படிச் சேகரித்த தகவல்களை அலசி, ஆய்ந்து அவற்றின் அடிப்படையில் சித்தாந்தங்களை உருவாக்குவதும், தேவைக்கு ஏற்ப அவற்றைச் சோதிப்பதும், உண்மை காணும் முறைகளில் ஒன்றாக ஒப்புக் கொள்ளப் பட்டது. சித்தாந்தங்களைச் சரி பார்ப்பதற்கும், சோதனை பயன்படும். சித்தாந்தங்களை உருவாக்குவதற்கும் சோதனை பயன்படும். (அறிவியல் தமிழ், வா.செ. குழந்தைசாமி. பக் : 36-37)

தமிழகத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் சாதி, கட்சி, மதச்சார்பு இலக்கியத்தைப் போற்றவும் தூற்றவும் காரணமாக இருந்து வந்திருக்கின்றன. இச்சார்பு ஒன்றைச் சொல்லவும் தடுக்கிறது; கொள்ளவும் தடுக்கிறது. (பார்க்க; இந்து ரிவிவ், மார்ச்சு 5, 1991)

மேலே விளக்கப் பெற்ற நான்கு தடைகளையும் நீக்குதலின் மூலமே பன்முகக் கல்வி தடையின்றி வளர முடியும்.

முற்காலத்தில் படைப்பை அறிவது மட்டுமே கல்வியாக இருந்தது. அதனை அடுத்த தலைமுறையில் நினைவில் சுமப்பதே கல்வியாக இருந்தது. நெடுங்காலம் சென்றே அறிந்ததை அறிவிப்பதும் கல்வியாயிற்று. மிக நெடுங்காலம் சென்றேபடைப்பை ஆராய்வது கல்வியாயிற்று. ஆராய்ச்சிக் களத்தின் ஊற்றுக்கண் இது தான். ஆராய்ச்சி என்பது மூலத்தை அறிவது, அறிவிப்பது என்ற இரண்டு கட்டங்களைத் தாண்டி ஆராய்வது என்ற நிலைக்கு வருதல் வேண்டும். நம்முடைய ஆராய்ச்சி காலம்தோறும் இருந்து வந்த முறைமை வருமாறு :

1. விளங்கியல்—படைப்பை மீண்டும் மீண்டும் ஓதி விளங்கிக் கொள்வது.

2. தொகுப்பியல் — படைப்பில் உள்ள செய்திகளைத் தொகுத்து அளிப்பது.

3. வகுப்பியல்—தொகுத்துக் கிடைக்கும் செய்திகளை முறை யான தலைப்புகளில் வகுத்து அளிப்பது.

4. விளக்கியல்— தொகுத்தும், வகுத்தும் கிடைக்கும் செய்திகளை நிரல்பட விளக்குவது.

5. விரிப்பியல்—விளங்கி, தொகுத்து, வகுத்து விளக்கிய செய்திகள் ஒவ்வொன்றையும் ஆராய்வது. உரிய செய்திக்கு உரிய மூலத்தைப் பயன்படுத்துவது,

மு. வரதராசனார், ரா.பி. சேதுப்பிள்ளை முதலானோர் தம் ஆய்வு விளங்கியலாய்வாக நின்றது. நம் தொல் கால ஆராய்ச்சி விளங்கியலாக நின்றது உ.வே. சாமிநாதையர், எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகிய அறிஞர்களால் தொகுப்பியல் ஆய்வும், வகுப்பியல் ஆய்வும் விளக்கம் பெற்றன. வி.ஐ. சுப்பிரமணியம், ச.வே. சுப்பிரமணியன், ஆ. வேலுப்பிள்ளை முதலானோரால் விளக்க இயல் ஆய்வு வளமை பெற்றது, க. கைலாசபதி, நா. வானமாமலை ஆகியோரால் விரிப்பியல் ஆய்வு தமிழில் கால் கொண்டு தற்போது தளர்நடை இட்டு வருகிறது.

விளக்கவியல் ஆய்விலும், விரிப்பியல் ஆய்விலும் பன்முக அறிவு பேரிடம் பெற்று இருப்பது கவனிக்கத்தக்கது.

ஆய்வாளும், பன்முக அறிவு ஆய்வாலும் நிகழும் ஒன்றும், நிகழ்ந்த ஒன்றும் கூர்த்த பார்வைக்கு உரியவை. இலக்கியத் தொடர்பாளர்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்:

1. படைப்பாளி
2. படிப்பாளி
3. ஆய்வாளி (கிரிட்டிக்)

மேற்கண்ட மூவருக்கும் அடிப்படையாக இருப்பது படைப்பே. படைப்பைப் படைப்பாகப் புறத்தே நின்று படிப்பாளி படித்துச் சுவைக்கிறான். ஆய்வாளி படித்து ஆராய்கிறான். இம்மூவருள் யார் பெரியவர் அல்லது படைப்பு, படிப்பு ஆய்வு என்ற மூன்றனுள் எது சிறந்தது? படைப்பாளிதான் முதலாமவன்; படைப்பே முதலாவது. ஆனால், கல்வி உலகில் படிப்போர் எண்ணிக்கை முதலாவதாகவும், ஆய்வோர் எண்ணிக்கை இரண்டாவதாகவும், படைப்போர் எண்ணிக்கை மூன்றாவதாகவும் இருந்து வருகிறது. ஒன்றைக் கட்டுவதைவிட, அதனைத் திட்டுவது எளிது. வீட்டை அமைப்பதை விட அமைக்கப் பெற்ற வீட்டிற்குக் குறை சொல்வது எளிது. மானுட மனத்தின் இயல்பு அது. எனவேதான், படிப்பாளி எண்ணிக்கை ஏனையோர் எண்ணிக்கையை விட மிகுதியாக இருக்கிறது போலும்,

தமிழியல் கல்வி படிப்பையும், ஆய்வையும் மட்டுமே அடிப் படையாகக் கொண்டது இழப்புதான். நம்மிடையே படிக்கிறவர் களும், ஆராய்கிறவர்களும் இருக்கிற அளவிற்குப் படைப்பாளி இல்லாமல் போவது எண்ணுவதற்கு உரியது. நம் கவனம் முழுதும் தொகுப்பு, வகுப்பு, விளக்கவியல் ஆய்வில் சொக்கிப் போனது மறுபார்வைக்கு உரியது.

மதம், சாதி, கட்சிச் சார்பால் நாம் வேறு வேறு காரணங் களால் வேறு வேறு காலங்களில் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் புறக்கணித்து வந்திருக்கிறோம். திட்டி வந்திருக்கிறோம். திட்டுவதை நெறிப்படுத்தும் முயற்சியாகத் திறனாய்வு நம் தமிழகத் தில் வளர்ச்சி பெற்றது. அதனை உயர்நெறிப் படுத்தும் முயற்சி யாக ஆராய்ச்சி அமைந்தது. படைப்பின் மெய்ம்மையை அறிந்து மேன்மைப் படுத்தும் செயல்பாட்டில் பன்முக அறிவே வருங்காலத் தில் தலைமை தாங்கும்; தலைமை தாங்குதல் வேண்டும்,

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (423)

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு (355)

நம் நாட்டில் கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பேர் கல்லூரி/ நிறுவனம்/பல்கலைக் கழகங்களில் பணியாற்றுகின்றனர் (இந்து, 13-3-94). ஒவ்வொருவர்தம் சராசரி மாத வருவாய் மூவாயிரம் ஆகும். அன்னோர் ஐம்பத்தெட்டு அல்லது அறுபதாண்டு வரை வேலை உறுதி பெற்றோர் ஆவர். ஒரு விரிவுரையாளர், ஒரு நாள் ஊதியம் ரூ. 137. கிராம உழைப்பாளியின் சராசரி ஒரு நாட் கூலி ரூ. 10 ஆகும். ஏறத்தாழ 14 உழைப்பாளிகளின் கூலியை ஒரு விரிவுரையாளர் பெறுகிறார்.

உழைப்பாளி, நேரடியாக உடலி உழைப்போடும், உற்பத்தி யோடும், தொடர்புடையவர்; விரிவுரையாளர்; உடல் உழைப் போடும், உற்பத்தியோடும் நேர்த் தொடர்பில்லாதவர். ஒரு நாட்டின் பொருளாதாரம் உற்பத்தியுடன் தொடர்புடையது. உற்பத்தி, உடல் உழைப்புடன் தொடர்புடையது. இவ்விரண்ட னுடன் தொடர்பில்லாத ஒருவர்க்கு, ஊதியத்தை மறைமுகமாக வழங்குபவர் உழைப்பாளியே.

இந்நிலையில், விரிவுரையாளர்தம் கடமை பதினான்கு மடங்காகிறது. பதினான்கு மடங்கு அல்ல, அனக்குரிய ஒரு மடங்கிற் காகவது. விரிவுரையாளர் உழைக்கிறாரா என்பதுவினாவிற்குரியது.

உழைக்கிறார் எனில்.....அவர்தம் பங்களிப்பு என்ன? எவ்வளவு?

மேற்கண்ட வினாக்கள், பொருளமுத்தம் உடையவை. வினாக்களுக்குரிய விடை மனநிறைவளிப்பதாக இல்லை. சான்றாக, 1990இல் தமிழில் வெளிவந்த நூல்கள் 1269 ஆகும் (இந்து 16-3-91), (1989இல் 1978). அதாவது 'இருநூறு ஆசிரியர்க்கு ஒன்று என்று கூடக் கணக்கில் அமையவில்லை.*

எனவே, நம் கல்லூரி/நிறுவன/பல்கலைக்கழகத் தற்போதைய அமைப்பு, செயற்பாடு பற்றி மறுபார்வை செய்தாக வேண்டும்.

முதலாளித்துவத்தை ஒப்புக்கொண்ட நாடுகளில், கல்வி நிறுவனப் பணிகள், வேலை சார்ந்த ஒப்பந்த அடிப்படையிலேயே நிகழ்கின்றன. முன்று மாதம் தொடங்கி—ஐந்தாண்டுகள் வரை, ஒருவர்தம் செயல்திறனையும், தேவையையும் கணக்கில் கொண்டு ஒப்பந்தங்கள் அமைக்கப் பெறுகின்றன.

பொதுவுடைமை நாடுகளில் உடல் உழைப்பிலிருந்தும் உற்பத்தியில் இருந்தும் விலகிய வேலைகள் பொதுவாக அமைக்கப் படுவதில்லை; அப்படி அமைத்தாலும், உழைப்பாளி/தொழிலாளி பெறும் ஊதியத்தையே மற்றவரும் பெறுவார்; பெற வேண்டும். அவருக்கு உழைப்பு, கட்டாயமானது; பங்களிப்பும் கட்டாயமானது, தொழில் சாராத் தமிழகக் கல்லூரி, பல்கலைக்கழக ஆசிரியர் எண்ணிக்கை 17,631 (1987-88)

17.631 ÷ 1269 = 13,89.

முதலாளித்துவத்தை ஒப்புக்கொண்ட இந்தியாவில், உழைக்காமல், பங்களிப்பில்லாமல் 58/60 வயது வரை ஊதியம் பெறுகிறோம்; பங்களிப்பில்லாமல், உரிமை கோருவதில், ஊதிய உயர்வு பெறுவதில் முன்னணியில் நிற்கிறோம்.

ஒன்று, நாம் செய்திறனைச் சார்ந்த ஒப்பந்த அடிப்படையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அல்லது உழைப்போடும் உற்பத்தியோடும் தொடர்புடைய கட்டாய உழைப்பையும், கட்டாயப் பங்களிப்பையும் ஏற்க வேண்டும்.

சீக்கியர்களால் பஞ்சாப் மொழி கௌரவம் பெற்றது; வங்காளியரால், வங்க மொழி கௌரவம் பெற்றது, யூதர்களால், எபிரேயம் கௌரவம் பெற்றது; ஆங்கிலேயர்களால், ஆங்கிலம் கௌரவம் பெற்றது; இந்தியத் தமிழரால் தமிழும் உலகில் ஒங்கி ஒலிக்கப்பட வேண்டும். அதன் பெருமை நிலை நாட்டப்பட வேண்டும்.

இனியாவது இந்தியத் தமிழர்கள் விழிப்பார்களா?

தமிழும் அறிவியலும்

ந. சுப்பு ரெட்டியார்

அறிவியல் தமிழ் என்பது அண்மைக் காலத்தது. மேலைநாடுகளில் அறிவியல் துறை பல்கிப் பெருகிவரும் வேகத்திற்கேற்ப அறிவியல் தமிழ் வளர்ச்சி பெறவில்லை. அறிவியல் தமிழ் வரலாற்றில் தமிழக அரசின் பங்கும் உண்டு. துறைச்சொற்களை ஒருநிலையாக்கும் பணியில் அறிஞர் ஈடுபட வேண்டும். தமிழில் உருவாக்கப்பெறும் அறிவியல் நூல்கள் அண்மைக்கால வளர்ச்சியை எடுத்துக்காட்டுவனவாக இருத்தல் வேண்டும்.

தமிழும் சமயமும், தமிழும் தத்துவமும் தமிழும் பௌத்தமும் தமிழும் கிறித்தவமும், தமிழும் இசுலாமும்.....என்ற தலைப்புகளில் எல்லாம் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. இவையெல்லாம் இரண்டுக்குமுள்ள தொடர்புகள், ஒன்றையொன்று வளர்த்துக் கொண்ட முறைகள் ஆகியவற்றைக் காட்டுகின்றன. தமிழர் எப்போதும் தம் மொழியைப் பற்றிப் பேசும் பெருமித உணர்வுடையவராதலால், தமிழில் அறிவியல் வரவேண்டும் என்ற ஆசையுடையவராகத் திகழ்கின்றனர், முத்தமிழுடன் நான் காவது தமிழாக அறிவியல் சேர்ந்து 'அறிவியல் தமிழ்' என்று போற்றும் அவாவுடன் இக்கட்டுரை அமைகின்றது.

'அறிவியல் தமிழ்' என்று சொல்லப்பெறும் பகுதி அண்மைக் காலத்தது. நாட்டுப்பற்று மிகுந்து அது விடுதலை இயக்கமாக மாறத் தொடங்கிய நாள்தொட்டு அதனுடைய இரட்டைப்பிறவி போல் மொழிப்பற்றும் அதனுடன் தோன்றி ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றது. பாவேந்தரின் 'தமிழியக்கம்' என்னும் நூல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. பல்வேறு வகையில் தமிழ் வளர்ச்சிக்கு உரம் இட்டு நீர்வார்க்கப் பெற்று வருவதால் இத்துறையில் விரைவான வளர்ச்சியை எதிர்பார்க்கலாம். ஆனால் பெரும்பாலும் எம் மருங்கும் கேட்கப்பெறும் முழக்கத்திற்கேற்ப இத்துறையில் செயல் திறன் காணப்பெறவில்லை.

கடந்த சில ஆண்டுகளாக 'அறிவியல் தமிழ்' புதிய வேகத்துடன் வளர்ந்து வருகின்றது. ஆயினும், மேலைநாடுகளில் அறிவியல்துறை பல்கிப் பெருகிவரும் வேகத்திற்கு ஏற்ப அது வளர்ச்சி பெறவில்லை என்பதுவே இன்றுள்ள நிலையாகும்.

தொடக்கநிலைத் தொண்டர்கள்

நாட்டு விடுதலை இயக்கம் முற்றிய நிலையிலிருந்தபொழுது காந்தியடிகள், இராஜாஜி முதலிய சில தூய்மையான சான்றோர்களின் உள்ளத்தில் நம்நாட்டுக் கல்விநிலை பற்றிய சிந்தனையும் எழுந்தது, தாய்மொழி மூலம் கல்விபுகட்டப் பெற்றால் நாட்டு மக்களின் அறிவுநிலை விரைவாக வளரும் என்ற எண்ணம் அவர்களிடையே வேரூன்றலாயிற்று. நாடு விடுதலையடைந்த பல்லாண்டுகட்கு முன்பிருந்தே (1930க்கு மேல்) தாய்மொழிக் கல்வித்திட்டத்தையும் வகுக்கலாயினர். முதன் முதலில் உயர்நிலைப் பள்ளிகளில் பள்ளி இறுதித் தேர்வுக்கான ஏ-பிரிவு பாடங்களைத் (வரலாறு, புவியியல், பொது அறிவியல்: தொடக்கக் கணிதம் போன்றவை) தாய்மொழியில் கற்பிப்பதும் தேர்வுகள் எழுதுவிப்பதுமான முறைகள் செயற்பட்டன. நாளடைவில் சி-பிரிவு பாடங்கட்கும் (வேதியியல், இயற்பியல், கணிதவியல் முதலிய விருப்பப் பாடங்கள்) இம்முறைகள் நீட்டிக்கப் பெற்றன. இக்காலத்தில் பல்வேறு துறைகளில் தாய்மொழியில் பாடநூல்கள் தோன்றலாயின. நாளடைவில் (1940க்குமேல்) மொழியறிவும் துறையறிவும் சேர்ந்த ஆசிரியர் தொகை பெருகவே, நூல்களும் புதுமெருகுடன் புத்தொளி வீசித் திகழலாயின. இக்காலத்தில் உயர்நிலைப் பள்ளிக் கல்வித் திட்டத்திற்குமேல், சற்று உயர்ந்த நிலையில் பொதுமக்கள் படிப்பதற்கென்று பல நூல்கள் தோன்றலாயின.

பொது விருப்பார்வ நூல்கள்

இராஜாஜி எழுதிய தமிழில் முடியுமா? திண்ணை இரசாயனம் ஆகிய நூல்களும், பெ. நா. அப்புசாமி எழுதிய மின்சாரம், வானக்காட்சி போன்ற முதல் நூல்களும், நீங்களும் விஞ்ஞானமும் போன்ற மொழிபெயர்ப்பு நூல்களும், ஆர். கே. விசுவநாதன் (அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) எழுதிய அணுவில் ஆனந்தத் தாண்டவம் விசுவரூபம், ஆலயமணி போன்ற முதல் நூல்களும். ஈ. த. இராஜேசுவரி எழுதிய சூரியன், வானக்குமிழி போன்ற முதல் நூல்களும் குறிப்பிடத் தக்கவை.

இத்துறையில் இங்ஙனம் பணியாற்றிய வேறுபல ஆசிரியரும் உள்ளனர். நா.கி. நாகராசன் எழுதிய 'அணுவை அறிக' (1952) என்ற நூலையும் குறிப்பிடலாம். இவர்கள் யாவரையும் இத்துறையின் முதல்நிலைத் தொண்டராகக் கருதலாம். அரசின் துணையோ பிறர் துணையோ இன்றித் தாமாகவே தாய்மொழிப் பற்றுடன் தொண்டாற்றிய பெரியார்கள் இவர்கள்.

கலைச் சொல்லாக்க முயற்சிகள்

அறிவியல் தமிழ் வரலாற்றில் தமிழகஅரசின் பங்கும் உண்டு, தொடக்கத்தில் இது குறைவாகவே இருந்தது. நாளடைவில் இது வளர்ந்து வருகின்றது. நாடு விடுதலை அடைவதற்கு முன்னர் இராஜாஜி சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் தாய்மொழிக் கல்வி நடைமுறைக்குக் கொண்டுவரப் பெற்றது. இதன் காரணமாக அம்மட்டத்தில் தனியார் முயற்சியால் பல்வேறு துறைகளில் பல நூல்கள் தோன்றின. அறிவியல் தமிழின் வளர்ச்சியில் பெரிய இடர்ப்பாடாக இருப்பது கலைச்சொல்லாக்கமே. இதில் பல்வேறு கருத்து வேற்றுமைகள் உள்ளன. அவற்றை ஆராய்வதற்கு ஈண்டு இடம் இல்லை.

நாடு விடுதலைபெற்றுத்தன்னாட்சி ஏற்பட்ட பிறகு இத்துறை வளர்ச்சியில் ஒரு தனிவேகம் உண்டாயிற்று. தமிழ்க் காதலர் தி.சு. அவினாசிலிங்கம் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் இந்த வேகத்தை முடுக்கினார். இவர் காலத்தில் மீண்டும் பல்வேறு துறைகட்கும் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பெற்றன. இக்குழுக்களின் துணையால் இது காறும் தனியார் முயற்சியால் தோன்றிய பல்வேறு கலைச்சொற்களும், நூல்கள் எழுதுவோரில் சிலர் தத்தம் நூல்களின் இறுதியில் பின்னிணைப்புகளாகத் தொகுத்து வெளியிட்ட சொற்களும் ஒருசேரத் தொகுக்கப் பெற்று, ஒரு நிலையாக்கப் பெற்று (Standardised). மேலும் பல புதிய சொற்கள் சேர்க்கப்பெற்றுச் சென்னை மாநில அரசின் ஆதரவில் (1947) மீண்டும் நூல்வடிவமாக வெளியாயின. இவை ஒரு பத்தாண்டுகள் நூல்கள் எழுதுவோருக்குத் துணைநின்றன. இந்நிலையில் கல்லூரிகளிலும் தமிழ் பயிற்று மொழியாக அமைதல் வேண்டும் என்ற கருத்து அறிஞரிடையே முகிழ்த்தது. இதற்கு இதுகாறும் வெளிவந்த சொற்கள் போதா என்பதையும் அவர்கள் அறிந்தனர்.

இந்நிலையில் இளங்கலை மட்டத்தில் சில அறிவியல்துறை களைத் துணைப்பாடங்களாக (Minors) அமைக்கலாம் என்ற கொள்கையைச் சென்னைப் பல்கலைக்கழகம் ஒப்புக் கொண்டது. அதற்கு உடனடியாகத் தமிழில் பல நூல்கள் எழுதப்பெற வேண்டிய இன்றியமையாமையும் எழுந்தது.

நூல்களை வெளியிடும் முயற்சிகள்

இன்று அரசு பாடநூல்களை வெளியிடும் பொறுப்பை மேற் கொண்டதற்கு முன்பு பல்லாண்டுகளாகத் தனிப்பட்ட வெளி யீட்டாளர்கள் இத்துறையில் பல்வேறு பாடநூல்களை வெளியிட் டுள்ளனர். பொதுமக்களுக்கென சில நூல்களை இன்றும் வெளி யிட்டு வருகின்றனர், இன்று பல்வேறு நிறுவனங்கள் மூலம் வெளி வந்துள்ள, வெளிவந்துகொண்டிருக்கும் அறிவியல் நூல்களை (அ) பாடநூல்கள் (ஆ) பொதுவிருப்பார்வமுள்ள நூல்கள், என இரு பிரிவுகளாகப் பகுத்துக் கூறலாம். இந்த இரண்டு பகுதிகளிலும் முதல் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என இரண்டு வகைகள் உள்ளன.

சென்னைப் பல்கலைக்கழகம்

பொதுமக்களுக்கென நூல்கள் வெளியிடுவதில் பல்லாண்டு களாகச் சென்னைப் பல்கலைக்கழகம் பரிசுத் திட்டங்களை ஏற் படுத்தி நூல் எழுதுவோருக்கு ஊக்கம் காட்டிவருகின்றது. மொழி பெயர்ப்பு நூல்கட்கும் முதல் நூல்கட்கும் பரிசுகள் அளித்துவரு கின்றது. மொழிபெயர்ப்பு நூல்களில் ந. சுப்புரெட்டியாரின் அணுக்கரு பௌதிகம் (Nuclear Physics) இங்ஙனம் பரிசு பெற்று வெளிவந்த நூலாகும். அங்ஙனமே அ. சுந்தரமூர்த்தியின் வான நூல் (1954), பரிசு பெற்று வெளிவந்த முதல் நூலாகும். இது தவிர ஈ.த. இராஜேசுவரியின் அணுப்புராணம் (1953) என்ற நூல் அவ்வப்போது நிகழ்த்திய சொற்பொழிவுகளின் குறிப்புகளில் கிடைத்தனவற்றை ஒரு கோவைசெய்து நூலாக எழுதிமுடித்த தாகும் (வெளியிட்டது தருமையாதீனம்). ந. சுப்புரெட்டியார் எழுதி வெளியிட்டுள்ள அணுவின் ஆக்கம் (Atomic Energy for Peaceful uses) என்ற நூல் (1958) சென்னைப் பல்கலைக் கழகப் பரிசுத் திட்டத்தின் கீழ் எழுதப் பெற்று வெளிவந்தது. அதன் பிறகு இத்தகைய திட்டம் நடைமுறைக்கு வராது அடங்கி விட்டது போலும். தமிழக அரசு பாடநூல் நிறுவனம் மூலம்

இத்தகைய திட்டங்களைப் பல்துறை நூல்கட்கும் ஏற்படுத்தி நூல்கள் வெளிவர வாய்ப்புகள் உண்டாக்கலாம்.

தொழில் துறையில்

இன்று இத்துறையில் ஒருசில நூல்கள் தோன்றியுள்ளன. கோவை தொழில்நுட்பக் கல்லூரி 'தொழில்நுட்பம்' (1967) என்ற ஓர் அருமையான நூலை வெளியிட்டுள்ளது. வி. அருணாசலம் என்பார் எழுதிய எலக்ட்ரிகல் என்ஜினியரிங் (தமிழக அரசு பரிசு பெற்றது) என்ற நூல் குறிப்பிடத் தக்கது. ரேடியோ மெக்கானிசம், ரேடியோ செய்வதெப்படி? என்ற தலைப்புகளிலும் நூல்கள் வெளிவந்துள்ளன.

தமிழ் வளர்ச்சி இயக்ககம் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கும் திட்டத்தில் அறிவியல் நூல்கட்கும் இடம் தந்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் சில நூல்கள் பரிசு பெற்றாலும் பலநூல்கள் வெளியாகியுள்ளமை தமிழ் அறிவியல் நூல்களின் பெருக்கத்திற்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

அறிவியல்தமிழ் வரலாற்றில் 'அறிவியல்துறை' தோற்றுவிக்கப் பெற்று கலைச்சொல்லாக்கம் முதலிய பணிகளில் ஈடுபட்டுச் செயலாற்றிவருகின்றது. இப்பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் பதின்மூன்று தலைப்புகளில் நூல்கட்குப் பரிசுகள் வழங்கி வருகின்றது. இதில் 10ஆவது தலைப்பின்கீழ் சட்டம், மருத்துவம், பொறியியல், வேளாண்மை, பிற அறிவியல் துறைகளில் முதல் நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் பரிசு பெறுகின்றன.

எதிர்காலத் திட்டங்கள்

கலைச்சொற்களை உருவாக்கி ஒருநிலையாக்கும் பணியில் அறிஞர்கள் ஈடுபடவேண்டும். தனிப்பட்டோரும், அமைப்புகளும் இதில் பங்குபெறலாம். எந்த நூல் வெளிவந்தாலும் அதில் வரும் கலைச்சொற்களை அகரவரிசையில் நூலின் இறுதியில் தொகுத்து வெளியிடும் வழக்கம் அமைதல் வேண்டும். இதனால் பலருக்கும் சொற்களை அறிய வாய்ப்பு ஏற்படும். நாளாவட்டத்தில் ஏற்ற சொற்கள் நிலைத்து நின்று பொருந்தாச் சொற்கள் மறைந்து போகும். கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய பல்வேறு துறையினரும் ஒரேமாதிரியாகப் பொதுவான கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல் வேண்டும். பலமாவட்டங்களில் பாமரர்வாக்கில் வாய்மொழியாகப் பயின்றுவரும் தொழில்

நுணுக்கக் கலைச்சொற்களைத் தொகுத்து வெளியிடும் பணி மேற் கொள்ளத்தக்கது.

அறிவியல் விரைந்து வளரும் இன்றைய சூழலில் தமிழில் உருவாக்கப்பெறும் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்களாயினும் சரி முதல் நூல்களாயினும் சரி, அவை அண்மைக்கால வளர்ச்சிவரை எடுத்துக்காட்டுவனவாக இருத்தல் வேண்டும். அறிவியல் நூல் களை மொழிபெயர்ப்போர் அறிவியலறிவு, முதல் மொழி அறிவு, தமிழறிவு இம்மூன்றும் பெற்றவராக அமையின் மிக நன்று. அது பருத்தி புடவையாய்க்காய்த்தது போல் அமையும். இம்மூன்றும் ஒருசேரப் பெற்றவர் கிடைப்பது அருமை. இன்று வெளிவந்துள்ள பலநூல்களில் தெளிவும் நீரோட்டமான நடையும் காணப்பெறாத தற்கு இக்குறையே முக்கிய காரணமாகும். இந்நூல்களில் கருத்து கள் மொழிபெயர்க்கப் பெற்றுவிடினும் கனமான ஆங்கிலச்சாயல் படிந்த ஒருசெயற்கையான தமிழ் நடை கையாளப் பெறுகின்றது. படிப்போரின் கருத்துணர்தலுக்கு இது பெரும்தடையாக உள்ளது. எதிர்காலத்தில் இந்நடை தவிர்க்கப் பெறுதல் வேண்டும்.

இறுவாய் : இன்று எங்கும் 'தமிழ் முழக்கம்' கேட்கப் பெறு கின்றது. தமிழுணர்ச்சி பொங்கிவழிகின்றது. இந்த உணர்ச்சி ஆற்றில் கரைத்த புளிபோலாகாமல், காற்றில் கரையும் கற்பூரம் போலாகாமல், உருப்படியான முறைகளில் செயற்படுதல்வேண்டும். பாரதியாரின்,

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
(பாரதியார் கவிதைகள். ப-3)

என்ற ஆணையைச் செயற்படுத்தல் வேண்டும்.

வெளியுலகில் நித்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு கவடியெல்லாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாச் செய்வதுவும் வேண்டும்
.....
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள்

ஒருவரீதயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்
(பா.தா.க. 24-தமிழ் வளர்ச்சி-1-2.)

என்ற கவிஞனின் கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும். அதுவே தமிழ்மொழியில் அறிவியல் வளர்ச்சிக்கு உரிய தலையாய தொண்டாகும். பக்தியுடன் மேற்கொள்ளவேண்டிய விழுமிய பணியுமாகும்.

தமிழும் உளவியலும்

தா. ஏ. சண்முகம்

1879இல் அறிவியலாகத் தோன்றிய உளவியல் இன்று 26 பிரிவுகளாக விரிவு பெற்று இயங்குகின்றது. உளவியல் சார்பில் தமிழிலக்கியத்திலான ஆராய்ச்சியைப் பல கோணங்களில் அணுகலாம். சங்க இலக்கியம், காப்பியம், சிறுகதை, புதினம், கவிதை, நாடகம், திரைப்படம் ஆகிய கோணங்களில் தமிழிலக்கியத்தை அணுக வாய்ப்புண்டு.

உளவியலானது விஞ்ஞான இயலாக 1879ஆம் ஆண்டு தோன்றி இன்று பெரிய அளவில் விரிவு பெற்று 26 பிரிவுகளாக இயங்குகின்றது. இந்தப் பிரிவுகளில் பொது உளவியல், சமூக உளவியல், பிறழ்வு நடத்தை உளவியல், முதியோர் உளவியல், வளர்ச்சி உளவியல், கல்வி உளவியல், விலங்கு உளவியல், ஆளுமை உளவியல் என்பன முக்கியமானவை ஆகும். ஒவ்வொரு நாளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சி உண்மைகளில் சில வற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்ய இயலும்.

உளவியல் ஒரு மனிதனது நடத்தைக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்து அறியும் அறிவியல். கடந்த 110 ஆண்டுகளுக்கு மேல் நடத்திய ஆராய்ச்சிகள் பல கொள்கை களை உருவாக்கி உள்ளன. இந்தக் கொள்கைகளுக்கு (Theories) உள்ளேயே முரண்பாடுகள் உள்ளன. சான்றாக மிகவும் புகழ் பெற்ற உளப்பாகுபாட்டு உளவியலை எடுத்துக் கொள்வோம். அதனது அடிப்படைக் கொள்கை பிறப்பால் மனிதனிடம் அமைந்த ஆழ்ந்த உள்ளம், அதில் அடங்கிய உள்ள சக்தி என்பதாகும். ஆனால் நடத்தைக் கொள்கை உளவியலார் உள்ளமோ உள்ள சக்தியோ என்பது கிடையாது என்பதாகும். பிறந்த குழந்தை யிடம் உள்ளது மூளையைச் சார்ந்து உள்ள அச்சம், சினம், பால்

போன்ற மெய்ப்பாடுகள். குழந்தை வளரவளர சூழ்நிலை தொடர்பு காரணமாக இம்மூன்று மெய்ப்பாடுகளின் அடிப்படையில் ஒருவனது நடத்தை அமைகிறது என்பதாகும்.

இவ்விரண்டு கொள்கைகளைத் தவிர மற்றும் முக்கியமான கொள்கைகளும் உண்டு. இவைகளில் முழுமைக் கொள்கை (gestalt) மனிதாபிமான கொள்கை (Humanistic Psychology) ஹார்மீசக் கொள்கை போன்றவை முக்கியமாகும். இந்த ஐந்து கொள்கைகளின் அடிப்படையில் பல பிரிவுகள் உள்ளன. ஒரு உளவியலார் மனிதனின் நடத்தையை விளக்கும்போது, ஏதாவது ஒருவகைக் கொள்கையின் அடிப்படையில்தான் செய்வார், எல்லா விதக் கொள்கைகளிலும் உண்மை உள்ளது எனக் கருதும் உளவியலாரும் உண்டு. அவர்களைப் பலகொள்கைத் திரட்டாளர் (electic) என்று உளவியலார் கூறுவர்.

பொதுவாக நாம் மனிதன் எனக் கருதுவது உடலையும் அதனுள்ளே உள்ள உறுப்புக்களையும் ஆகும். இவ்வுறுப்புக்களில் மிகவும் முக்கியமானது மூளை. மூளையே மனிதனது உடல் உறுப்புக்களின் இயக்கத்திற்கும், உள்ள சக்திகள் உருவாவதற்குமான மையங்கள் உடையதாக உள்ளது.

முதலாவதாக உடலைப்பற்றிய அடிப்படை உண்மையை அறிவது அவசியம். உடலானது இருவகையான மின் சக்திகளை வெளியிடுகிறது. அவற்றை முறையே தூண்டும் சக்தி (Excitatory Potential), தடை சக்தி (Inhibitory Potential) என்று கூறுவர். தூண்டும் சக்தியும் தடை சக்தியும் ஒரே நேரத்தில் நிகழும் போக்கு உடையவை. இந்த தூண்டு தடை சக்திகள் ஒவ்வொருவரிடமும் வெவ்வேறு அளவில் அமைந்துள்ளன. தூண்டும் சக்தி தடை சக்தியைவிட அதிகமான அளவில் உள்ளவரை புறமுகத்தார் (Extraverted person) என்றும், தடைசக்தி தூண்டும் சக்தியைவிட அதிகம் உடையவரை அகமுகத்தார் (Introverted person) என்றும் வகைப்படுத்தி உள்ளனர். புறமுகத்தாருடைய ஆளுமை இயல்புகள், அகமுகத்தாருடைய ஆளுமை இயல்புகளினின்றும் மாறுபட்டவை. பொதுவாக, புறமுகத்தார் பிற மனிதர்களோடும், நண்பர்களோடும் பொழுது போக்க விரும்புவர். பேசுவதில் ஆர்வம் உடையவர். உள்ளக் கிளர்ச்சியூட்டும் நடத்தைகளில் ஈடுபட விரும்புவர். எளிதில் உணர்ச்சி வசப்படும் போக்கு உடையவர். சிந்திக்காமல் செயலில் ஈடுபடும் போக்கு உடையவர். தவறு இழைத்தாலும் அதற்காகத் தளர்ந்து விடுவதில்லை.

புத்தகத்திலோ, அறிவுசார்ந்த நடத்தைகளிலோ ஆர்வம் இல்லாதவர். கடவுள் நம்பிக்கை உள்ளவர். எடுத்த எந்த செயலையும் செய்து முடித்து விடலாம் என்ற துணிவு உடையவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் போக்கு இல்லாதவர். நண்பர் களையும், நண்பர் குழுக்களையும் அடிக்கடி மாற்றும் போக்கு உடையவர்.

அகமுகத்தார் மேலே கூறிய இயல்புகளுக்கு எதிர்மாறான இயல்புகளை உடையவர். அதாவது மக்களைவிட நூல்களில் அதிகம் பற்றுள்ளவர். தனித்து வாழ்வதில் அதிகம் விருப்பம் உடையவர். எதிலும் குறைகாணும் பாங்கும் (Pessimist) எல்லோரிடமும் எல்லாச் செய்கைகளிலும் முழு நிறைவு எதிர் பார்க்கும் போக்கும் உடையவர் (Perfectionist). சமயத்தில் பற்று இல்லாதவர். ஆனால் கடமை கட்டுப்பாடு இவைகளின் அடிப்படையில் அன்றாட நடத்தையை மேற்கொள்பவர். மிகவும் சிந்தித்த பிறகே செயலில் ஈடுபடுபவர். ஆனால் பெரும்பாலும் சிந்தனையிலே ஈடுபட்டு இருப்பவர்.

மேலே விவரித்த இயல்புகள், முறையே முழுநிலை புறமுகத்த வரையும், அகமுகத்தவரையும் குறிப்பன. பெரும்பாலான மனிதர்கள் இடைநிலைமுகத்தார் (ambivert) இயல்புகளை உடையவர்களாக உள்ளனர். அதாவது புறமுக இயல்புகள் சிலவும் அகமுக இயல்புகள் சிலவும் உள்ளவர் ஆவர்.

அடுத்தபடியாக மனிதனது நடத்தைக்கு அடிப்படையாக உள்ள அறிவுக்கூறு (Cognition), மெய்ப்பாடு (Emotion), ஊக்கி (Motivation) நுண்ணறிவு, பிரச்சினை தீர்க்கும் திறன், கற்பனைத் திறன் ஆகியவை அறிவுக் கூற்றில் அடங்கும். அச்சமும் சினமும் மெய்ப்பாட்டில் அடங்கும். பசி, தாகம், தூக்கம், கழிவு (elimination) பால் போன்ற உடல்சார் விடாய்களும், ஏற்பு (recognition), ஒன்றுதல் (belongingness), பாசம் (affection), சாதனை (achievement) போன்ற உளவிடாய்களும் ஊக்கியில் அடங்கும். அறிவுக்கூறு, மெய்ப்பாடு ஊக்கி, இவைகளுக்கான மையங்கள் மூளையிலுள்ளன. உள்ளம் என்ற சொல், இவைகளை எல்லாம் குறிப்பவை ஆகும்.

மேலே விவரித்த உளவியல் சுருக்கத்தைப் பின்னணியாகக் கொண்டுத் தமிழ் இலக்கியத்தை நோக்குவோம். உளவியல் சார்பில்

தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சியைப் பல கோணங்களில் அணுகலாம்.

தமிழ் இலக்கியத்தை,

1) பழைய இலக்கியங்கள்
தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு.
2) காப்பியங்கள்
சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி,
3) புதினங்கள்
4) சிறுகதைகள்
5) புதினங்களில் சிறுகதைகள், இவைகளின் அடிப்படையில் வரும் நாடகங்கள், திரைப்படங்கள்.
6) கவிதைகள்.

என்றெல்லாம் அணுகலாம்.

சில சான்றுகள் :

1) உளவியல்சார் மொழிஇயல் (Psycholinguistics) மொழியின் ஒலி, அதன் தொடக்கம், மற்ற மொழிகளோடு ஒன்றுக் கொன்று தொடர்பு, அதன் வாயிலாக மக்களின் மரபு, பண்பாடு ஆகியவற்றை ஆராய்தல் முக்கியம். எடுத்துக்காட்டாக ஒருவர் மற்றவரோடு அளவளாவும் போது, ஆடு - கீடு; மரம் - கிரம்; காரம் - கீரம்; கரடி - கிரடி என்ற சொற்களைப் பயன்படுத்துகிறார். இந்தப் போக்குத் தென்னிந்திய மொழிகளில் உள்ளது. இந்தப் போக்கினை எதிரொலி (Echo) என்று கூறுகிறார்கள். இந்த விளக்கம் சரி என எனக்குத் தோன்றவில்லை. இந்த ஒலிக்கு அடிப்படை உளவியல் காரணம் ஏதோ உளது.

(ஆ) மொழியைத் தொடர்ந்து மற்றொரு ஆராய்ச்சி மக்கள் தொடர்பு (Mass Communication) ஆகும். இத்துறையில், நீதி, மதம், போதனை முறைகள், காலட்சேபம், வில்லுப்பாட்டு, தெருக் கூத்து முதலியவற்றை ஆராயலாம்.

தலைமையும் தலைமை இயல்புகளும்

உளவியலில் தலைவர்களை நான்கு வகைகளாகக் கருதுகின்றனர். அவர்களில் ஆதிக்கத்தலைவர் (Authoritarian), மக்கள் ஆட்சி (Democratic) தலைவர், கவர்ச்சித்தலைவர் (Charismatic), முக்கியமானவர்கள். இந்தத் தலைமை வகைகளை அடிப்படையாகக் கொண்டுத்தமிழ் இலக்கியத்தில், அரசியல்,

மதம், பண்பாடு போன்ற துறைகளில் இடம்பெறும் தலைவர் களை வகைப்படுத்தலாம். அவர்களுடைய ஆளுமை இயல்புகளை யும் ஆராயலாம். சான்றாக இராவணனை ஆதிக்கத் தலைவனா கவும் புறமுக ஆளுமையுடையவனாகவும் கருதலாம்; இராமனை மக்கள் ஆட்சித் தலைவனாகவும், அகமுகத்தானாகவும் கருதலாம்.

முடிவு செய்தல் (Decision Making)

இக்கட்டான நிலையில் குறித்த குறிக்கோளுக்கான தகுந்த முடிவை எடுத்து அதற்கான வழிவகுத்தல் மிகவும் முக்கியம்; இது ஒரு மனிதனின் வெற்றி தோல்விக்கு அடிப்படையாகும். கோவலன் குற்றவாளி எனப் பாண்டியன் நெடுஞ்செழியன் முடிவு செய்தது, இராவணன் சீதையைத் தனது மனைவியாகக் கொள்ளச் செய்த முடிவு; மற்ற உறவினர்கள் இராவணனுக்கு துணையாக நிற்க, விபீடணன் இராவணனை விட்டு இராமனைச் சேர முடிவு செய்தது போன்றவை சில சான்றுகளாகும்.

நெருக்கடி—மனமுறிவு சமாளித்தல் (Crisis and Frustration Management)

நெருக்கடியைச் சமாளித்தல், மனமுறிவைத் தாங்குதல் போன்றவை உளவியலில் முக்கிய பகுதிகளாகும். நெருக்கடி மனமுறிவு இலக்கியத்திலுள்ள பாத்திரங்களுக்கு ஏற்படுவதைத் தமிழ் அன்பர் அறிவர். பாரதத்தில் திரௌபதியின் துகில்உரியும் கட்டம்; அருச்சுனன் தன் மகன் அபிமன்யுவை இழந்த கட்டம்; கோவலன் மாதவியைப் புறக்கணிக்கும் கட்டம் போன்றவை எடுத்துக்காட்டுகளாகும்.

மெய்ப்பாட்டு நிலைகள் (Emotional States)

காதல், காமம், வீரம், கற்பு, வாய்மை, பொய்மை, தூய்மை போன்ற நுண்பொருட் சொற்களும் (abstract ideas) அவற்றின் உள நிலைகளும் அச்சொற்களின் தோற்றமும் அறிவது முக்கியம். சான்றாக காதல் காமம் இவைகளுக்கு அடிப்படைத் தூண்டுதல் பால்விடாயாக அமைந்தாலும், அதன் தூண்டுதலினால் ஏற்படும் உடல் மாறுதல் உணர்ச்சிகள் வெவ்வேறாக இலக்கியத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. காதலுக்குச் சான்றாகச் சீதை, கண்ணகி போன்றவர்களையும், காமத்துக்குச் சூர்ப்பணகை, இராவணன் போன்றவர்களையும் சான்றாகக் கூறலாம்.

சடங்குகள் (Rituals)

இலக்கியத்தில் குழந்தை தாயின் வயிற்றில் உருவான கட்டத்திலிருந்து, மனித வளர்ச்சியின் பல கட்டங்களில் பல சடங்குகளுக்கு உள்ளாகின்றது எனக் குறிக்கப்பட்டுள்ளது. குழந்தையைத் தொட்டிலில் இடுதல்; மகள் பூப்பு எய்தல்; மணம், சீமந்தம், ஈமக்கடன் போன்றவற்றின் தோற்றத்தை உளவியல் நோக்கோடு ஆராய்வதும் முக்கியம்.

கடவுள் கருத்து உருவம் (Concepts)

ஆதிமனிதனின் காலத்திலிருந்து கடவுள் கருத்துருவம் மாறுபட்டு வருகின்றது. இந்த மாறுதலையும், கடவுள் போன்ற நுண்பொருள் (abstract concept) எவ்வாறு புலனீடான (concrete) சொல்லாயிற்று என்பதை அறிவது முக்கியம். கடவுளின் உருவ அமைப்பு. கடவுள் ஏற்கும் கருவிகள், உளவியலின் அடிப்படையில் ஏற்படும் பொதுக்குறியீடு (symbol) எனச் சொல்லலாம். சான்றாக, லிங்கம், காளி, காளியின் கழுத்தில் மாலையாக உள்ள மண்டை ஓடுகள்; முருகன், முருகன் வாகன மாகிய மயில், கையில் கருவியாகக் கொண்ட வேல்; தேங்காய், பூசணிக்காய்ப் போன்றவை சில.

இந்தச் சான்றுகள் எல்லாம் பண்டைய இலக்கியத்திலிருந்து தரப்பட்டது போலத் தற்கால இலக்கியத்திலிருந்தும் சான்றுகள் கூற இயலும்.

கட்டடக்கலை

சி. கோ. தெய்வநாயகம்

கட்டடக்கலை என்றாலே கோயில்களை ஆய்வு செய்தல் என்பது களைந்து புதுப்புதுக் களங்களையும் சிக்கல்களையும் ஆய்வு செய்யும் பாங்குத் தற்போது முயலப்படுகிறது. இத்தகு ஆய்வுகட்கு மூல நூல்களாக, இதுவரை வெளிவந்துள்ள முதன்மைச் சான்று நூல்களை உரிய விளக்கங்களுடன் அடைவு செய்து அறிந்தாக வேண்டும். அணுகும் ஆய்வு நெறிகளாக நுண்ணாய்வு அல்லது விளக்கவியலாய்வு என்பனவற்றை ஏற்கலாம்.

உலக அரங்கில் இந்தியாவிற்குள்ள பெருமைகளுள் அதன் மரபு வழிப் பண்பாட்டுக்கலைச் சின்னங்களும் ஒன்றாகும். குறிப்பாகத் தமிழகம் பெற்றுள்ள தகுதி இலட்சக்கணக்கில் உள்ள கோயில்களும் ஆயிரக்கணக்கில் உள்ள பிற நினைவுச் சின்னங்களும், கோட்டைகளும், கலைச் சின்னங்களுமாகும். இவற்றை ஆய்ந்து ஆழ்பொருட்களைப் புலப்படுத்துவது அருமை வாய்ந்ததொரு செயலாகும். அம்மரபுச் சின்னங்களின் விளக்கவுரைகளாக சமயச் சார்பு நிலையில் வேதங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் இடைக்காலத்தில் எழுந்துள்ளன. தலபுராணங்கள் இவற்றின் தொடர்பாகவும், குறுக்கமாகவும், ஒரு பொருள் பற்றியனவாகவும் எழுந்து மக்களின் சமய அறிவு—ஆய்வுக்களங்களுக்கு அறிமுகமாகின. ஐரோப்பியர் ஆட்சியில் வரலாற்றுணர்வு மிக்க அவர்கள் கட்டடக்கலைச் சின்னங்களைப் பாதுகாத்தல், பதிவு செய்தல், விளக்கம் செய்தல் என்ற முறையில் தொகுப்பு நூல்களை வெளியிட்டுத் தொகுப்பாய்வுகளை வழங்கியுள்ளனர். இராபர்ட்சிவல் போன்றோர் எழுதிய கலைச்சின்ன வெளிப்பாட்டு விளக்கங்கள் பின்னர் இந்திய தொல்லியல் அளவீட்டுத்துறை, பல்வேறு கழக வெளியீடுகள் முதலியவற்றின் மேலாய்வு விளக்கங்களையும் பெற்றுள்ளது. இந்தியன் ஆண்டிக்வரி, ஆண்யுவல் ரிபோர்ட், எபிகிராபிகா இண்டிகா, சவுத்இண்டியன் இன்ஸ்கிரிப்

சன்ஸ் முதலிய பல்வேறு தொகுதி நூல்களும் தனிப்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியில் தக்க தரத்துடன் வெளிவந்துள்ளன. மேலும் டிஸ்ரிக்ட் கெஜட்டீர்கள், வரைபடங்கள், கீழ்த்திசைச் சுவடிப் பதிப்புகள், ஆவணக்காப்பகங்கள் முதலான அவர்தம் முயற்சிகள் தமிழகக் கட்டடக்கலைத்துறையின் சான்றுகளாகத் திகழ்ந்து வருகின்றன.

நாகையில் இருந்த புத்த விகாரக் கலைத்திறனை இந்தியன் ஆண்டிக்வரி வாயிலாகத்தான் அறிந்துகொள்ள முடிகின்றது. சுவடற்றுப்போன பல கலைச்சின்னங்களை ஆங்கிலேயரின் உணர்வு பூர்வமான பதிவு வழி அறிந்து வியக்க முடிகிறது. ஆங்கிலேயருக்கு முதலில் உதவி, பிறகு தோளோடு தோள் நின்று இத்தகு முயற்சியில் அரும்பணி ஆற்றிய இந்திய அறிஞர் சிலரின் வழி நடத்தலில் விளக்கம் பெற்ற அடுத்த தலைமுறையினரி விடுதலை இந்தியாவில் நிகழ்த்திய கட்டடக்கலைத்துறை தொடர்பான ஆய்வுகள், வாய்ப்புகள், சூழல்கள் இவற்றுக்கேற்றபடி வடிவங் கொண்டிருப்பினும் தகுதியில் சிறந்தே விளங்கின. அவர்தம் வழிமுறையினரால் மேற்கொள்ளப்பெற்ற அடுத்த நிலை ஆய்வுகளைக் கி. பி. 1960ஆம் ஆண்டில் காணமுடிகிறது. இவை ஒரு பொருள் பற்றியனவாக ஆய்வாளரின் நோக்கிற்கேற்ப முயலப் பட்டவையாக விளங்கின. 1970களிலும் அதன் பின்னரும் எழுந்து வருகின்ற ஆய்வுகளில் தன்முனைப்பு ஒன்றையே பெரும்பான்மையுறக் காண்கிறோம். வாய்ப்புகள் பல்கி இருப்பினும் ஈடுபாடும் முனைப்பும் தளர்வுற்றே காணப்படுகின்றன. இவையன்றிப் பட்டம் பெறுவதற்காக எழுதப்பட்டு வருகின்ற கட்டடக்கலை ஆய்வேடுகள் பலவற்றில் கட்டடக்கலை எது? புராணம் எது? வரலாறெது? சிற்பவியல் எது? இலக்கியக் குறிப்புகள் யாவை? என்ற புலனறியாச் சூழலில் கடமை உணர்வுடன் இட்டு நிரப்பும் பணியாக அமைந்துள்ளமையினை நாம் நன்கறிவோம். ஆய்வுகள் வெறும் தரமில்லாத விளக்கங்களாக இருந்து வருகின்றன. முதுகலை வரலாறு, தமிழியல், சமூகவியல், பொருளாதாரம், அரசியல், நிர்வாகம் முதலிய துறை மாணவர்கள், அவரவர் கல்வி நிறுவனம் அமைந்துள்ள இடத்தைச் சுற்றியுள்ள கோயில்களை அல்லது தமக்கு அறிமுகமான கோயில்களை அல்லது தமது வாழ்விடத்திற்கு அருகாமையில் உள்ளதை ஆய்வேட்டிற்குரித் தாக்கிக் கொள்வது வழக்கமாகியுள்ளது.

எம். பில், பி எச். டி மாணவர்களும் இத்தகு கோயில்களை ஆய்விற்குரித்தாக்கி வருகின்றனர். ஒரு பொருள் குறித்தன வாயினும் ஆங்கிலத்தில் இன்றைய முதுகலைத் தரத்தில்—எழுது கின்ற ஆய்வேடுகளைப் பொருட்சிறப்பிலா நிலையிலும் உயர்த்தி, தமிழில் எழுந்த காரணத்தால் தாழ்த்தியும் வருகின்ற சூழல் உள்ளமை மறைக்கற்பாற்றன்று. ஆங்கிலத்தில் அமைகின்ற ஆய்வேடுகள் வரலாற்றுத் துறையிலும் தமிழில் அமைவன தமிழ்த் துறையிலும் அடையாளங் காணப்படுகின்ற அவலம் வேறு. இத்தகு சூழலில் வரலாற்றுத்துறையில் அமைவனவற்றை அரிய ஒன்றாகவும் தமிழ்த்துறையில் அமைகின்றவற்றை எளிய தொன்றாகவும் கண்டு காட்டுகின்ற சிறுமை பரவலாக இருப்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ இயலாது.

இந்நிலையில் கட்டடக்கலை என்றாலே கோயில்களை ஆய்வு செய்யும் முறை என்பதைக் களைந்து புதுப்புதுக் களங்களையும் சிக்கல்களையும் ஆய்வு செய்யும் பாங்குத் தற்போது முயலப் படுகிறது. அவ்வகையில்,

1. கோயிற் கட்டடக்கலை (சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாம், கிராம வீட்டு தெய்வக் கோயில்கள்)
2. நினைவுச் சின்னங்கள் (உப்பரிகை, மாளிகை, அரண்மனை, கோட்டை, கல்லறைகள், பாலங்கள், சுருங்கைகள், நிலவறை கள், கூடங்கள், சத்திரங்கள், சாவடிகள் முதலியன)
3. அகழிகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள், நீராடு கட்டங்கள், ஏரிகள், கேணிகள் முதலியன.
4. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் போன்ற நிலப்பாகு பாட்டு அமைப்பில் கட்டடக்கலை (வாழ்வியற் கட்டடக் கலை), நிலவியற் கட்டடக்கலை.
5. வாழ்விடக் கட்டடக்கலை (குடிசைகள், கூரை வீடுகள், மச்சு வீடுகள், மாடி வீடுகள் முதலியன) தொழில் நுட்பங்கள் பயன்படு பொருட்கள், எளிய அரிய அறிவியல் கூறுகள்.
6. தமிழகத் தனித்திறக் கட்டடக்கலையும், பிற நாட்டு, மத, இனக் கலைத் தாக்கமும் (ஆங்கில, பிரெஞ்சு, டேனிஷ், போர்ச்சுக்கிய கலைத் தாக்கம்)
7. நகரமைப்புகளும் வாழ்வியலடிப்படை வாய்ப்புகளும் (குடிநீர்க் குழாய்கள், சாக்கடைப் பாதைகள், சந்துகள்,

முட்டுச் சந்துகள், தெருவமைப்பு, சாலை அமைப்பு, நகர அமைப்புகள் முதலியன)

8. கட்டட ஒப்பயினயல் (சுவரோவியம், விதான ஓவியம், கொடிக்கருக்குச் சுதை ஒப்பனை போல்வன)
9. கட்டடப் பாதுகாப்பியல்
10. கட்டடக்கலை விந்தைகள்
11. கட்டடக்கலையும் தமிழிலக்கியங்களும்
12. தமிழின வாழ்வியலும் கட்டடக்கலையும் போன்ற புதுப்புதுத் தலைப்புகளில் எழும் சிக்கல்களுக்கு விளக்கந்தேடும் முயற்சி களைப் புதியதாக மேற்கொள்ளலாம்.

இவ்வகை ஆய்வு ஆயப்புகுமுன் இதுவரை தமிழகக் கட்டடக் கலைத்துறை தொடர்பாக வெளிவந்துள்ள நூல்கள், கட்டுரைகள் இவற்றது விளக்க அடைவு ஒன்றினைச் செய்தாக வேண்டும்.

இரண்டாவதாக இக்களங்கள் தொடர்பாக இந்தியாவிலும், பிற நாடுகளிலும் மேற்கொள்ளப் பெற்றுள்ள ஆய்வுகளைப் பட்டியலிட்டு அடைவு செய்தாக வேண்டும்.

மூன்றாவதாக இத்தகு ஆய்வுகட்கு மூல நூல்களாக இன்றைய நாள்வரை வெளிவந்துள்ள முதன்மைச் சான்று நூல்களை உரிய விளக்கங்களுடன் அடைவு செய்து அறிந்தாக வேண்டும்.

அணுகும் ஆய்வு நெறிகளாக நுண்ணாய்வு அல்லது விளக்க வியலாய்வு என்பவற்றை ஏற்கலாம். பிறஆகுல நீர.

புதிய தலைப்புக்களைக் தெரிந்தெடுப்பது என்பது காணப் பட்ட பன்னிருகளங்களில் இலகுவாக அமைவதாகும். எடுத்துக் காட்டாக ஒரு கோயிலைப் பற்றிப் பல ஆய்வுகள் எழுந்திருப்பினும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புதிய கோணத்தில் அமையலாம்.

ஆய்வுகளைச் செய்ய முனைவார் ஒருதிறமான எல்லா தலைப்புகட்கும் பொதுவாகப் பொருந்தும் சில படிவ அமைதி களைக் கடைப்பிடித்தல் நன்று. அவ்வகையில்,

1. படித்த நூல்கள் / பார்த்த தரவுகள்
2. எழுந்த சிக்கல்கள் / தலைமைச் சிக்கல்
3. தரவுதேடல்—பதிவுகள்
4. கருதுகோள்
5. வகுப்பீடும் பகுப்பீடும்

6. ஆய்வுமுறை
7. புலப்பாடுகள்
8. விதிகள்
9. கருதுகோளும் விதியும்—சரிபார்த்தல்
10. முடிவுகளும் கருத்துகளும்
11. நிழற்பட, வரைபட விளக்கப் பின்னிணைப்புகள்

என்ற பாகுபாட்டைக் கொள்வது நன்று.

இவ்வகையில் கட்டடக்கலை பற்றிய ஆய்வுகளைப் புதுப்புதுக் கோணங்களில் அமைத்து தமிழகத்தின் பண்டைத் தொழில் நுட்பக் கூறுகளைப் புலப்படுத்தும் முயற்சி இற்றைநாள் தொழில் நுட்ப அளவிற்கு விளக்கம் சேர்ப்பதாக ஆய்வின் முடிபுகளைத் தக்கார் பதிவு செய்வதும் பயன்படுத்த வேண்டியதும் நாட்டிற்குச் செய்யும் பயன் எனலாம்.

துணைநூற் பட்டியல்

அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்	ஆய்வுக் கோவை, மலர் 10, தொகுதி 3, அண்ணாமலைநகர், சிதம்பரம், 1965
இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கக் கலைக் காட்சிக்குழு	தமிழகமும் பௌத்தமும், கையேடு, சென்னை, 1968
இராசமாணிக்கம், மா	தமிழகக் கலைகள், இரண்டாம் பதிப்பு, பாரிநிலையம், சென்னை, 1972 பெரியபுராண ஆராய்ச்சி, மாடல் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1972
இராமசுவாமி, மே.சு	தமிழ்நாட்டுச் செப்புத் திருமேனிகள், தொல்பொருளாய்வுத் துறை வெளியீடு, தமிழக அரசு, சென்னை, 1976
இராமநாதன், அரு (பதிப்பாசிரியர்)	சித்தர் பாடல்கள், கருவூராரி பூஜா வீதி, சென்னை,
உலகநாதபிள்ளை, எல்	முதலாவது இராசராச சோழன், தஞ்சாவூர், 1932
உருத்திரங் கண்ணனார்	பட்டினப்பாலை

கந்தசாமி. சோ.ந — தமிழும் தத்துவமும், மணிவாசகர் நூலகம், சென்னை, 1976

கரந்தைத் தமிழ்ச் சங்கம் — இராசராசன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ், தஞ்சை, 1984
தமிழ்ப் பொழில். துணர் 34.41,58, மலர் 3, 11 தஞ்சை 1958-59, 1965, 1983

கன்னையா செட்டியார் — பெரியநாயகி அம்மன் பதிகம், பூமகள் அச்சுக் கூடம், அமரம்பேடு

கலைக்கதிர் — பிரமிடுகள்—பண்டைக்கால எகிப்திய பொறியியல் நிபுணர்களின் திறமைக்குச் சான்றுகள் பொற். கோ. தெமி நவம்பர் 1983

கலைக்கூடம் — கலைச்சிறப்பு விழா மலர்; பாஸ்கரத் தொண்டைமான் (பதிப்பாசிரியர்) தஞ்சை, 1954
குடந்தை மகாமகத் திருவிழா மலர், வீரராகவன், டி.எம் (பதிப்பாசிரியர்). தஞ்சை, 1956

காசி மடம் — பெரிய புராணம், திருப்பனந்தாள், 1982

கிருஷ்ணசுவாமி சர்மா — முதலாவது இராஜராஜ சோழன், ஞானபோதினி பிரசுராலயம். சென்னை, 1923

கிருஷ்ணராஜ மகாராஜ ராஜஸ்ரீ — ஸ்ரீதத்துவநிதி (மூன்றாம் பாகம்) சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை, 1966

குருமூர்த்தி, சா — தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும், சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை. 1974

கோவிந்தராமன், சி — தமிழக வரலாற்றுச் செய்திகள், சாந்தி நூலகம், சென்னை, 1965

தஞ்சைப் பெரிய கோயில் கல் வெட்டுக் குறிப்புகள், தமிழ்ப் பொழில், துணர் 28. 1952-53

சதாசிவ பண்டாரத்தார், தி.வை. பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1974

சர்வோதயப் பிரசுராலயம் 'பௌத்தம்' தஞ்சாவூர், 1965

சரஸ்வதி மகால் மானசாரம் (பகுதி 2), தஞ்சை, 1963

சாம்பசிவ சர்மா, இரா.சிவ இராஜராஜ சோழன், பயனீர் பப்ளிஷர்ஸ், சென்னை, 1932
இராஜேந்திர சோழன், கேசவ ராமானுஜலு நாயுடு & கம்பெனி, சென்னை, 1932

சுப்பிரமணியன், தி.நா பல்லவ மகேந்திரவர்மன், அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை,

சுப்ரமண்ய சாஸ்திரி, கே. எஸ் ஸ்ரீகாசியப சில்ப சாஸ்திரம், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை, 1960
சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம் சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை, 1960
மயமதம் (பகுதி 1) சரஸ்வதி மகால் நூலகம் தஞ்சை. 1966
மயமதம் (பகுதி 2) சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை, 1966

சேக்கிழார் பெரிய புராணம், ஸ்ரீகாசி மடம். திருப்பனந்தாள், 1982

சோமசுந்தரம், ஜே.எம் சோழர் கோயிற்பணிகள், (இரண்டாம் பதிப்பு) தஞ்சை, 1941
தஞ்சைத் திருக்கோயில்கள், கும்பகோணம், 1939
பெரியகோயில் திருப்பதிகங்கள்,

கோலமண் பதிப்பகம், சென்னை, 1936

தண்டபாணி தேசிகர், ச — ஆதீனக் கோயில்கள், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1949

இந்துமத பாலபாடம், தருமபுரம், 1949

கணபதி, திருவாவடுதுறை, 1966

தாமோதரன், கு — வரலாற்றில் தஞ்சை, தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1984

திருமங்கையாழ்வார் — நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்

தெய்வநாயகம், கோ — சித்தர் சிந்தனைகள், முத்துக்கோ வெளியீட்டகம், தஞ்சை, 1979

'புலங் காணாப் புதுக்கல்வெட்டுக் கள்', தமிழ்ப் பொழில், துணர் 56

வேனாதாச்சாரியார் (மொழிபெயர்ப்பாளர்) — சிற்ப ரத்தினம், சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சை. 1961

நாகசாமி. இரா — கலைச் செல்வங்கள், அரசினர் பொருட்காட்சிச் சாலை, சென்னை அரசாங்கம். சென்னை 1961

தஞ்சைப்பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள் (முதற் பகுதி) தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1969

கங்கை கொண்ட சோழபுரம்,, தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1970

ஓவியப்பாவை

நாகசாமி. இரா & சந்திர மூர்த்தி. மா — தமிழகக் கோயிற் கலைகள், தொல்பொருளாய்வுத்துறை, சென்னை, 1964

நாராயணசாமி, ஒ.எ (பதிப்பாசிரியர்) — சரஸ்வதி மகாலும் தஞ்சை வரலாறும், தஞ்சை, 1964

நாராயணசாமி, வெ — தமிழக அற்புத ஆலயங்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, 1983

நாவுக்கரசர், — தேவாரப் பதிகங்கள், சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை, 1935

பக்கிரிசாமிப்பிள்ளை. கே.சி — பெரிய கோயிலும் தஞ்சாவூரும், வெற்றிவேல் பிரஸ், தஞ்சை, 1960

பாலசுப்பிரமணியம், எஸ். ஆர் — சோழர் கலைப்பாணி, பாரி நிலையம், சென்னை, 1966

புத்தமித்திரர் — வீரசோழியம், பவானந்தர் கழகம், சென்னை. 1942

மகாதேவன், வே — சிவபாதசேகரனின் தஞ்சைக் கல் வெட்டுக்கள், ஸ்ரீகாஞ்சி காம கோடிபீட பொன்விழாக் கமிட்டி. சென்னை, 1984

ராமன், மு.கோ — தஞ்சை பெருவுடையார் மாலை, தஞ்சை. 1949

ருக்மணி, ஆர். எஸ் — இந்தியச் சிற்பங்கள். பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1955

வாசுதேவ சாஸ்திரி, கே (மொழிபெயர்ப்பாளர் & வெளியீட்டாளர்) — சகளாதிகாரம். சரஸ்வதி மகால், தஞ்சை, 1961

வேங்கடராமன், க — தஞ்சை மாநகரம் தலபுராணம், தஞ்சை

வேங்கடசாமி, மயிலை சினி, — மகேந்திரவர்மன், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1955

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் (மூன்றாம் பதிப்பு), பாரி நிலையம், சென்னை, 1969

பௌத்தமும் தமிழும், கழக வெளியீடு, சென்னை, 1972

Ayyapan, A & Srinivasan.P,R	**Story of Buddhism with Special reference to South India, Government of Madras,** 1960
Balasubramaniam. S.R	**Middle Chola Temples** Thomson press (India) Ltd., Delhi, 1975
Brown Percy	**Indian Architecture,** (Bhuddhist and Hindu Period), D B. Taraporevala Sons and Co, Pvt. Ltd, Bombay, 1976
C asson Lionel	**Ancient Egypt. Time-Life** Books, Nederland, 1966
Caedes Georges	"Archaeology in Indo-China" **Indian art and Letters, vol.III** The India Society, Victoria Street, London
Codrington. H.W & Hocart, A.M	**A Short History of Ceylon,** Macmillan & Co-Ltd , London, 1926
Das. R.K	**Temples of Tamilnadu,** Bombay, 1964
Deneck M.M (Text) & Forman W,B (Photos)	**Indian Sculpture,** Spring Books, London, 1962
Dubreuil Jouveau. G	**Pallava Antiquities, (Vol II)** Translation-Swaminadha Dikshitar, V,S Pondicherry, 1918
	Dravidian Architecture,
Francesco Abbage (Editor) & Jean Richardson (Tranalator)	**Indian art end the art of Ceylon, Central and South-East Asia,** Octopus Books, Hongkong, 1972

Gopalan. S	**Bhonsle Vamsa Charitra** Saraswathi Mahal Series, Tanjore, 1951.
Gopinatha Rao, T. A	**Elements of Hindu Iconography** (Vol. I & II) The law Printing House, Madras, 1916. **Travancore Archaeological Series** (Vol. I) Methodist, Publishing House, Madras, 1919-23.
Grosset & Dunlop	**Monuments of Civilisation** New york, 1978.
Hemingway, F. R	**Gazetteer of the Tanjore District**, Government Press, Madras, 1915.
Henry Cousens	**The Chalukyan Architecture of Kanerese District**, Archaeological Survey of India, New Imperial Series, Calcutta, 1926.
Himansu Bhuman Sarkar	**Corpus of the Inscriptions of Java** (Vol I) Firma K. L. Mukhopadyay, Calcutta, 1971.
Karashima Noboru, Subbarayalu & Matsui toru	**A Concordance of the Names in the Chola Inscriptions**, Sarvodaya Ilakkiya Pannai, Madurai, 1978.
Krishna Sastri, H	**South Indian Images of Gods and Goddesses**, Government Press, Madras, 1916.
Krishna Murthy, K	**The Gandhara Sculptures-A Cultural Survey**, Ajanta Publications, Delhi 1977.
Krishnaswamy Ayyar, K. N.	**Statistical Appendix together with a Supplement**

to the District Gazetteer (1906) For Tanjore District, Madras, 1933.

Legge James (Translator) — A Record of Buddhistic Kingdoms - Fahien of his Travels in India and Ceylon, Oxford, 1896.

Longhurst, A. H. — The Story of the Stupa, Asian Educational Services, New Delhi, 1979.

Mahalingam, T. A. — Studies in the South Indian Temple Complex, Desai P. B. (Ed), Komada Research Institute, Karnataka University, Dharwar, 1970

Mayumdar — Hindu Colonies,

Moti Chandra — Trade and Trade Routes in Ancient India, Abhinav Publi cation, New Delhi, 1977.

Nagasami, R — Art and Culture of Tamil nadu, Sundeep Prakashan, Delhi, 1980.

Nilakanda Sastri, K. A. — The Cholas (IIEdition) Madras University, Madras, 1955.

Orme Robert — A Collection of Maps and Plan to Accompany the History of the Military Transactions of the British Natien to Hindustan (Vol.III) Madras, 1862.

Paramasivam, S — "Dating of the Frescors in the Brahadiswara Temple, Tanjore - A Note" Journal of Oriental Research, Vol IX 1935.

Poongothai, T & — Rajaraja the Great,

Thirunavukkarasu. K. D	Dept. of Museum, Madras, 1984.
Ramaswamy, N. S	Archaeological Guide to Pudukkottai District, Collectorate, Pudukkottai, 1982.
Rasanayagam, C	Ancient Jaffna, Everyman's Publishers Ltd., Madras, 1909 South Indian Buddhist Antiquities, Madras, 1874.
Ronald Bernier, N	The Temple Forms of Kerala S. Chand & Company Ltd' Delhi. 1980.
Sairam, T. V	Indian Temple Forms and Foundations, Agamkala Prakashan, Delhi 1982.
Sarkar, H. B	Some Contribution of India to the Ancient Civilization of Indonesia and Malaysia, Punthi Pustak, Calcutta, 1970.
Sivaramamurthy, C	Chola Temples, (III Ed) Archaeological Survey of India New Delhi, 1978.
Smith Vincent, A Codrington, K. D. B.	A History of Fine art in India and Ceylon, (Revised Second edition) Oxford, 1930.
Somasundaram, J. M	The Great Temple at Tanjore Madras, 1936.
Soundararajan, K. V	The Art of South India: Tamil nadu and Kerala, Sundeep Prakashan, Delhi, 1978.
	Art and Culture of Tamil nadu
Stella Kramrisch	The Art of India (3rd Ed)

Phaidon Publishers Inc., London, 1965.

The Hindu Temple, (Vol. I & II) Motilal Banarsidass, New Delhi, 1976.

Subramanian, S. V (Ed) — Heritage of the Tamils: Art and Architecture, International Institute of Tamil Studies, Madras, 1980.

Historical Heritage of the Tamils, International Institute of Tamil Studies, Madras, 1980

Suresh. B. Pillai — Introduction to the Study of Temple Art, Equator and Meridian, Thanjavur, 1976.

Swarup Shanthi — 5000 Years of Arts and Crafts in India and Pakistan, D. B. Taraporevala Sons & Co. Pvt. Ltd. Bombay, 1968.

Thiagarajan, N — A Manual of the Pudukkottai State, Sri Brihadamba State Press, Pudukkottai, 1921.

Volwahsen Andreas — Living Architecture: Indian, Oxford & IBH Publishing, New Delhi, 1969.

Willhelm Geiger (Translator) — The Mahavamsa, Information Department, Ceylon Govt,. Colombo, 1950.

— Aurangabad Daulatabad, Ellora, Ajanta; Department of Tourism, Govt. of India, New Delhi, 1958.

— Splendours of Tamilnadu, Marg Publication Bombay, 1980.

— Temples of South India,

Goverment of India, Publi -cation Department, Delhi. 1973.

— Temples of Tamilnadu, Travancore Archaeological Series, Indian Antiquity (Vol. Iv) Goverment of India, Publi cation Department, Delhi, 1875

Inscriptions : Epiqraphica Indica (Vol xlx, xxlï) Delhi .1927, 1934. South Indian Inscriptions. (Vol. II) Hultzech. E. . Archaeological Survey of India, Madras, 1891.

Papers :

Aravamuthan, T. G. Transactions of the Archaeo logical Society of South India (Vol. I) Temple, Pyramid and Oblique, Archaeological Society of South India, Madras 1955.

Govindasamy, S. K Jounrnel of Annamalai University (Vol. II) The Frescone of the Brahades -wara Temple at Tanjore, Annamalai University, Annamalai Nagar, 1933.

Suresh. B. Pillai Rajaraajeesvaram at Tancaavur,, Proceedings of the I Internarional Conference of Tamil Studies, Kualalumpur, 1966.

Thesis :

Alexander, P. C Buddhism in Kerala, (D. Litt. Thesis) Annamalai University, Annamalai Nagar, 1946.

Vasudeva Rao, T. N. Bhuddhism in the Tamil Country. (M, Litt Thesis) Annamalai University. Annamalai Nagar, 1956.

சுவடிப் பதிப்பு

பூ. சுப்பிரமணியம்

ஓலைகளில் மறைந்து கிடக்கும் தமிழர்தம் கருத்துகளை மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற நோக்குடையதே சுவடிப் பதிப்புப் பணி. இந்த நோக்கம் முழுமை பெறச் சுவடிகளை ஆராய்ச்சிப் பதிப்பாகவே வெளியிடுதல் வேண்டும். பதிப்பாசிரியர்தம் பிழைகளைச் சுட்டிக் காரணம் காட்டுவதே பதிப்பு அறமாகும்.

பதிப்புப் பணி

நூலாசிரியர் செய்திகளைத் திரட்டித் தொகுத்துத் தருகிறார். அவற்றை அச்சுக்கு அனுப்புமுன், அச்சு நூலின் அமைப்புக்கு ஏற்பத் தூய்மை செய்து முறைப்படுத்தும் பணியே பதிப்புப்பணி யாகும். அது அச்சுப் பணியிலும் வேறாய ஒன்று, நூலாசிரியரே பதிப்புப் பணியையும் மேற்கொள்ளலாம். ஆனால் சுவடிப் பதிப்புப் பணியில் நூலாசிரியர் ஒருவர், பதிப்பாசிரியர் மற்றொருவர் என்ற நிலை மட்டுமே உண்டு. எனவே நூலாசிரியரை முழுமையாகப் புரிந்துகொள்ளும் பொறுப்பு சுவடிப் பதிப்பாசிரியருக்கு ஏற்படுகிறது. இந்த அடிப்படைகளை உள்ளத்தில் கொண்டே பதிப்புப் பணியில் ஈடுபடுதல் வேண்டும். அவ்வகைப் பதிப்புப் பணிகளுக்கான ஆய்வு பதிப்பாய்வு எனப் பெறுகிறது.

சுவடிப் பதிப்பு

சுவடிப் பதிப்புப் பணியை, 1. சுவடிப் பதிப்பிற்காக மேற் கொள்ளும் பணிகள். 2. சுவடிப் பதிப்பில் மேற்கொள்ளும் பணிகள் என இரண்டு வகையில் அணுகலாம். இவ்விருவகைப் பணிகளிலும் ஆய்வுக் களங்கள் பல அமைகின்றன. இவற்றுள் சுவடிப் பதிப்பிற்காக மேற்கொள்ளும் பணியில் இறங்குமுன்,

1. எந்தவகைச் சுவடியைத் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்யலாம்?
2. அவற்றுள் அச்சானவை எவை? அச்சாகாதவை எவை?

3. அச்சாகியிருப்பின் அது எந்தவகைப் பதிப்பாக அமைகிறது?
4. இதுகாறும் எந்தெந்தச் சுவடிகள் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன?
5. சுவடிப் பதிப்பு பற்றிய ஆய்வுகள் என்னென்ன நிகழ்ந்துள்ளன?
6. மேலும் நிகழ்த்துதற்குரிய ஆய்வுவகைகள் யாவை?
7. அச்சாகாத சுவடிகள் கிடைக்குமா?
8. அச்சான நூல்களுக்கான சுவடிகள் கிடைப்பின் அவை பயன்படுமா?
9. ஒரு சுவடியைத் தேர்ந்தெடுத்தபின் சுவடிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமா?
10. ஒரு நூலுக்குரிய பல சுவடிகள் கிடைப்பின் எப்படிப் பயன் படுத்துவது?
11. வேறு நூலுக்கான சுவடி கிடைப்பின் அதனால் பயன் உண்டா?
12. சுவடிகளைப் பதிப்பிப்பதில் என்னென்ன வகை ஆய்வுகள் தேவைப்படுகின்றன?
13. பல சுவடிகளைத் தொகுத்துச் செய்யும் ஆய்வுக்கு இடம் உண்டா?
14. சுவடிப் பதிப்புக்கும் பிறபதிப்பு முறைக்கும் வேறுபாடு உண்டா?

என்பன போன்ற வினாக்களுக்குத் தெளிவான விடைகாணுதல் வேண்டும். அவ்விடைகளே பலவகை ஆய்வுத் தலைப்புகளைத் தேர்ந்தெடுக்கத் துணைபுரிவனவாகும்.

பதிப்புவகை

இவ்வினாக்களுக்குரிய விடைகளைக் கண்டு ஆய்வுக் களங்களை அமைப்பதற்குத் துணையாகச் சுவடிப் பதிப்புகளை வகைப்படுத்தி அறிவது தேவைப்படுகிறது. சுவடிப் பதிப்புகளை 1. பழைய பதிப்பு. 2. திருத்தப் பதிப்பு. 3. எளிய அல்லது தெளிவுப் பதிப்பு. 4. ஆய்வுப் பதிப்பு. 5. தொகுப்புப் பதிப்பு, 6. மறு பதிப்பு என ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

இவற்றுள் சுவடிவேறு. அச்சு நூல்வேறு என்று பிரித்து அறிய இயலாத அமைப்பினை உடையது பழைய பதிப்பு. இதில்

பாடல்கள் மட்டும் தனித்தனியே எண்களிட்டு அச்சிடப்பெற்றிருக்கும்; அடிகள் கூடப் பிரிக்கப் பெற்றிருக்காது. அடிகளைப் பிரித்து, அவற்றுள் சீர்களையும் பிரித்துக்காட்டிச் சில பாடவேறுபாடுகளைச் சுட்டி அச்சிட்டது திருத்தப் பதிப்பு எனப்பெறுகிறது. கடின சந்திகளைப் பிரித்தமைத்துத் தெளிவுரையோடு அச்சானது தெளிவுப் பதிப்பாகும். இது எளியபதிப்பு எனவும்பெறும். திருத்தப்பதிப்பு முறைகளோடு நூலின் முழுத்தன்மையையும் ஆய்ந்து, நூலின் சிறப்புச் செய்திகள், பதிப்பு முறைகள் போன்றவற்றை முழுமையாகக் கொடுத்து வெளியிடுவதே ஆராய்ச்சிப் பதிப்பாகும்.

தொகுப்புப் பதிப்பு இருவகையில் அமையும். ஒரேதலைப்பில் கிடைக்கும் பலவகைப் பொருள்களைத் தொகுத்து வெளியிடுவது ஒருவகை; ஒருபொருள்பற்றிய பலசுவடிச் செய்திகளைத் தொகுத்து வெளியிடுவது மற்றொருவகை. பிள்ளைத்தமிழ்க் கொத்து, அந்தாதி இலக்கியங்கள், ஊஞ்சல் இலக்கியங்கள் என்பன முதல் வகைக்குச் சான்றாகும். கண் மருத்துவம், கற்பங்கள், குழந்தை மருத்துவம், மகளிர் மருத்துவம் போல்வன இரண்டாம் வகைக்குரிய சான்றுகளாகும்.

முதற்பதிப்பு நூல்கள் தீர்ந்துபோன நிலையில் மீண்டும் அச்சிடுவது மறுபதிப்பு ஆகும். இதுவும் மறுஅச்சு, மறுபதிப்பு என்ற இருநிலைகளில் அமையும். மறு அச்சு என்பது முதற்பதிப்பில் பெரிதும் மாற்றம் பெறுவதில்லை; அச்சுப்பிழை போன்ற சிறுசிறு பிழைகள் மட்டுமே திருத்தம் பெறும். ஆனால் மறுபதிப்பிலோ முதற்பதிப்பு முழுமையாகப் படிக்கப் பெற்றுத் தேவையற்றவை நீக்கம் பெறும்; புதியன பல சேர்க்கப்பெறும். இவ்வாறு முதற் பதிப்பு நூலைக்காட்டிலும் சிறப்புற வெளியாவதே மறுபதிப்பாகும்.

நிகழ்ந்துள்ள ஆய்வுகள்

மேலே குறிப்பிட்ட சுவடிப் பதிப்பு வகைகளை உள்ளத்திற் கொண்டு ஆய்வுக்களத்திற்கான பொருள்களைச் சுட்டுமுன் இதுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகளை உள்ளத்திற் கொள்ளுதல் வேண்டும். சுவடிப் பதிப்பு பற்றிய ஆய்வுகள் இதுகாறும் மிகுதியாக நிகழ்த்தப் பெறவில்லை என்றாலும், சுவடிப்பதிப்பு அடிப்படையில் முனைவர் பட்டம், எம்.ஃபில் பட்டம், சுவடி இயல் பட்டயம் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒருசில ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவ்வாய்வுகள் இருவகையில் அமைகின்றன.

1. சுவடிப்பதிப்பு பற்றிய பொதுநிலை ஆய்வு
2. குறிப்பிட்ட ஒரு சுவடி அல்லது ஒரு பொருள் பற்றிய சிறப்பு நிலை ஆய்வு

என்பன அவ்விருவகைகளாகும்.

பொதுநிலை ஆய்வு

'சுவடி இயல் ஓர் ஆய்வு' என்னும் ஒன்று மட்டுமே பொது நிலை ஆய்வாக நிகழ்ந்துள்ளது.[1] இது சுவடி, ஆய்வு, பதிப்பு என்னும் மூன்று பொருள்களில் அமைந்த ஒரு ஒட்டுமொத்தமான ஆய்வாகும். சுவடி என்னும் முதற்பகுதி சுவடி-பெயர்க் காரணம், சுவடிகளின் தோற்றம், வளர்ச்சி, அக அமைப்பு புற அமைப்புகள்' தொடக்கம் முடிவுகள், நூல்தரும் செய்திவகை, நூலாசிரியர் வரலாற்றுக்கான அகப்புறச் சான்றுகள் போன்ற பல செய்திகளையும் அவற்றை அறியும் முறைகளையும் சுட்டுகிறது. இச் செய்திகள் சிறப்புநிலை ஆய்வாக மேற்கொள்ளப்பெறும் ஒவ்வொரு சுவடியையும் ஆய்ந்து உணர்த்தவேண்டிய ஆய்வுச் செய்திகளாகும்.

'ஆய்வு' என்னும் இரண்டாவது பகுதி மூலபாட ஆய்வு, பாட வேறுபாடு என்னும் இருபொருள்களில் அமைகிறது. மூலபாட ஆய்வு என்பது. மூலபாடம், மூலபாடஆய்வு, மூலபாட ஆய்வியல் என்னும் நுட்பமான மூன்று பாகுபாடுகளை எடுத்துக்காட்டுகிறது. இந்த மூவகைப் பாகுபாடுகளும் தனித்தனிச் சுவடிபற்றிய சிறப்பு நிலை ஆய்வுகளில் மேற்கொள்ளவேண்டிய தனித்தலைப்பாக அமையவேண்டுவனவாகும். மூலபாட ஆய்வு அடிப்படையில்..... என்னும் சுவடி ஒப்பீட்டு ஆய்வு என்ற முறையில் தலைப்புக் கொடுத்து ஆய்வு செய்யத் துணைநிற்கும் பாகுபாடுகளாகும். அதாவது,

1. 'சுந்தரானந்தர் சூத்திரம்' மூலபாட ஒப்பீட்டு ஆய்வு
2. 'வைகுந்த அம்மானை' மூலபாட ஒப்பீட்டு ஆய்வு

என்பன போன்று தனிநூல்களை ஆய்வு செய்யத் துணைபுரிவனவாகும்.

பாடவேறுபாடு என்னும் பகுதியும் பாடவேறுபாடு, வடிவ வேறுபாடு, பிழை என்னும் மூவகைப் பாகுபாடுகளை வகுத்துக் காட்டுகிறது. மேலே மூலபாட ஆய்வில் குறிப்பிட்டவாறு,

---

1. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வழி சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்த ஆய்வேடு, 1985.

1. 'சுந்தரானந்தர் சூத்திரம்'—பாடவேறுபாடுகள்
2. வைகுந்த அம்மானை—பாடவேறுபாட்டாய்வு

என்பன போன்று தனிநூல் சுவடிகள் ஒவ்வொன்றையும் ஆய்வு செய்து, வேறுபாடுகளை உறுதிப்படுத்த ஆய்வேட்டின் இப்பகுதி முழுமையாக வழி காட்டுகிறது.

'பதிப்பு' என்னும் மூன்றாவது பகுதி பதிப்புப் பணிகளை நிரல்படுத்திக் காட்டுவதன் வழி பதிப்பாசிரியர்களுக்கும் பதிப்பு ஆய்வாளருக்கும் ஒரு முழுமையான, தெளிவான வழிகாட்டியாக அமைகிறது. மேலும் பதிப்புக்கலை முன்னோடிகளின் பட்டறிவு களைத் தொகுத்துக்காட்டி, ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுவ தற்கான, முறைப்படுத்துவதற்கான வழிவகைகளில் அப் பட்டறிவைப் பின்பற்றத் தூண்டுகிறது.

'உ.வே.சா. வின் பதிப்புப் பணிகள்' பற்றிய ஆய்வேடு ஒன்றும் இப்பணியில் வழிகாட்டியுள்ளது.[2] சுவடிப்பதிப்பின் உயர்ந்த முன்னோடியேயாயினும் அவர்தம் பதிப்புகளின் சிறப்பை ஆய்ந்து தொகுத்துக் காட்டுவதைக் காட்டிலும், அவர்தம் பதிப்புப் பணி களைப் பின்பற்றி ஒருசிறு சுவடியேனும் ஆய்வுப் பதிப்பாக வெளி வருமாறு தம் ஆய்வுக்களனை அமைத்துக் கொள்ளுவதே பயனுடைய ஆய்வாக அமையும்.

சிறப்புநிலை ஆய்வுகள்

'ஐவர் அம்மானை' என்னும் ஒரு சுவடியினைப் பதிப்பித்துக் காட்டியுள்ளது சிறப்புநிலை ஆய்வின் முதல் ஆய்வேடாகும்.[3] மகாபாரதச் செய்திகளின் வேறான சில செய்திகளைப் புகுத்துதல், உலகவழக்குச் செய்திகளை இணைத்தல், அவற்றிற்குரிய நோக்கங் கள் போன்ற சுவடிச் செய்திகளைப் புலப்படுத்துவதே ஆய்வின் வெளியீடுகளாக அமைகின்றன. மூலபாட ஆய்வின் வரலாறும் முறைகளும் மிகத் தெளிவாக அமைகின்றன. அதேநிலையில் பாடவேறுபாட்டு முறைகளும் விளக்கம் பெறுகின்றன. இவ்விரு வகை ஆய்வுமுறைகளையும் எடுத்துக்கொண்ட சுவடிப்பதிப்பில் பயன்படுத்திக் காட்டுவதே ஏற்புடைய ஆய்வாகும். ஆனால் ஆய்வாளருக்கு ஐவர் அம்மானைச் சுவடி ஒன்று மட்டுமே கிடைத்

---

2. உ.வே.சா.வின் பதிப்புப்பணிகள், சொல்விளங்கும் பெருமாள் செய்த ஆய்வு
3. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், ஆ. விநாயகமூர்த்தி செய்தது.

துள்ளது. எனவே தம் ஆய்வு நெறிகளைப் பதிப்பில் பயன்படுத்திக் காட்டும் வாய்ப்பை இழந்துள்ளார். இருப்பினும் இந்த இரண்டு நெறிகளிலும் தனித்தனிச் சுவடிகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்வதற்கான இருவகை ஆய்வுக்களங்களில் இவ்வாய்வேடு உறுதுணையாக அமையும்.

'மெக்கன்சி சுவடிகள் ஓர் ஆய்வு' என்னும் ஆய்வேடு[4] தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சுவடிதிரட்டுதலில் வழிகாட்டியவர் கர்னல் மெக்கன்சி என்பவரேயாவார் என்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பெற்றது. மெக்கன்சி என்பவர் திரட்டியுள்ளதாகக் காப்பாற்றப் பெற்றுவரும் சுவடிகளில் அரசினர் சுவடி நூலகத்திலுள்ள தமிழ்ச் சுவடிகள் மட்டும் 1340 ஆகும். அவை

1. கிராமக்கைபீது
2. கைபீது
3. கோவில் வரலாறு
4. சாதி வரலாறு
5. சிலாசாசனங்கள்
6. தேவஸ்தான வரலாறு
7. பூர்வ வரலாறு
8. வமிசாவளி

என்பன போன்ற பலவகைப் பொருள்களில் தொகுக்கப்பெற்றவையாகும். ஒவ்வொருபொருளிலும் பலவகைச்சுவடிகளைக் காணலாம், சான்றாக வமிசாவளி என்னும் ஒருபொருளில் உள்ள சுவடிகளை எடுத்துக் கொண்டால் இராமநாயகன் வமிசாவளி, சர்க்கரைக் கவுண்டன் வமிசாவளி, சின்னம நாயகன் வமிசாவளி, பாளையக்காரர் வமிசாவளி, ஜமீன்தார் வமிசாவளி போன்ற பலவகை வமிசாவளிகள் உள்ளன. இவ்வாறே ஒவ்வொரு பொருளிலும் அமையும் பல்வேறுவகைச் சுவடிகளும், ஒவ்வொரு தனித் தலைப்பில் எடுத்து ஆய்வு செய்தற்குரிய ஆய்வுக்களன்களாக அமைபவை என்பதை இந்த ஆய்வேடு சுட்டிக்காட்டுகிறது.

எடுத்துக்காட்டாக மெக்கன்சி திரட்டிய சுவடிகளில் ஒன்றான 'தேசிங்குராசன் வரலாறு' என்னும் சுவடியை எடுத்துப் பதிப்பித்தும் காட்டியுள்ளது.

'முத்தாரம்மன் அம்மானை' என்னும் சுவடிப்பதிப்பு ஆய்வேடு ஒன்றும் இவ்வகைச் சிறப்பு நிலை ஆய்வைச் சேர்ந்ததாகும்.[5]

---

4. சென்னைப் பல்கலைக்கழகம், ம. இராசேந்திரன் செய்தது
5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நிர்மலா தேவி நிகழ்த்திய ஆய்வு.

சுவடிகளின் தோற்றம், வளர்ச்சி போன்ற சிலபொதுச் செய்திகளைத் தொகுத்துக்கூறி, முத்தாரம்மன் அம்மானை என்னும் ஒரு தனிச்சுவடியை முறையாகப் பதிப்பித்துக் காட்டியுள்ளது இந்த ஆய்வேடு. நாற்பதுக்கும் மேற்பட்ட சுவடிப்பதிப்பு ஆய்வேடுகள் சுவடிஇயல் பட்டயத்திற் காக அளிக்கப் பெற்றுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தும் சுவடிஇயல் வகுப்பில் உருவாக்கப்பெறும் இந்த ஆய் வேடுகள் மிகக் குறுகிய காலத்தில் செய்யப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகைச் சுவடிப் பதிப்பாய்வேடுகளில், இலட்சுமியம்மன் தவநிலை, கன்னிவாடி.....வளமடல், காத்தவராய நாடகம், குசலவர் சுவாமிகதை, சித்த மருத்துவத்தில் நாடி, சித்தர் வெண்பா, சிவகிரி குமரசதகம், சூதர் வாக்கியம், தன் வந்திரி குழந்தை வாகடம், தேரையர் அந்தாதி, தோட்டுக்காரி கதை, நட்சத்திர மாலை, பரத்தையர் மாலை, வர்ம சூத்திரம் போன்ற பல சுவடிகள் தனித்தனி நூல்களாகப் பதிப்பாய்வு செய்யப்பெற்றுள்ளன.

சுவடி ஆய்வுக் களங்கள்

ஆய்வு மேற்கொள்ள வேண்டிய வகையில் சுவடிகளை இரு வகையாகக் கொள்ளலாம். அவை 1. ஓலைச் சுவடிகள் 2. தாள் சுவடிகள் என்பனவாகும். ஆய்வுக்களங்களுக் குரியனவாகக் காட்டப்பெறும் ஒவ்வொரு தலைப்பும் இவ்விருவகைச் சுவடி களிலும் தனித்தனியே மேற்கொள்ளப் பெறவேண்டியவையாகும் என்பது நினைவிற்கொள்ளுதல் வேண்டும்.

1. அச்சிடப் பெறாத சுவடிகள்

''உலகம் முழுவதும் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கின்றன. இன்னும் அச்சில் வரவேண்டிய நூல்கள் மட்டும் 50 ஆயிரத்திற்கு மேல் இருக்குமோ என்று தோன்றுகிறது.''[6]

''டாக்டர் உ.வே.சா. அவர்கள் தம் அறுபதாண்டுப் பதிப்புப் பணியில் சுவடிகளினின்றும் பதிப்பித்த நூல்கள் 74 என்பதை அறியும்போது, இன்னும் வெளிவரவேண்டிய சுவடிகள் சுமார் 20,000 என்பதை எண்ணுகையில் உ.வே.சா. போன்ற தமிழறிஞர் கள் எத்தனைபேர், எத்தனைகாலம் உழைக்க வேண்டும் என்பது மலைப்பைத் தருகின்றது''[7] என்பன போன்று மிகைப்

6. தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை) முன்னுரை.

7. சுவடிப் பதிப்பு நெறிமுறைகள், ப. 16.

படுத்தப் பெற்ற செய்திகள் பல வெளியாகியுள்ளன. அதே சமயம் 'தமிழ்ச் சுவடிகள் இனி பதிப்பிப்பதற்கு என்ன இருக்கிறது? எல்லாச் சுவடிகளும் வெளியிடப் பெற்றுவிட்டன; மருத்துவச் சுவடி என்ற பெயரில் கூழ்பாண்டலேகியம், தாதுவிருத்தி லேகியம் போன்றவை வேண்டுமானால் வெளியிடப்பெறாமல் இருக்கலாம்' என்பது போன்ற கருத்துகளும் சான்றோரிடையே நிலவிவருகின்றன. இவற்றின் வன்மை மென்மைகளை ஆய்வதே சுவடிப் பதிப்பின் முதற்களமாகிறது.

சுவடி நூலகங்களில் வெளியிடப் பெற்றுள்ள விளக்க அட்டவணைகள் (Descriptive Catalogues) பலவற்றையும் தொகுத்து ஒரே அட்டவணையாக வெளியிடும் முயற்சிகள் பல நிகழ்கின்றன. தங்களிடம் கிடைத்துள்ள சுவடிகளுக்கு அட்டவணை செய்பவர்களும் மிகவிரிந்த நிலையில் அந்த அட்டவணையை அமைப்பதில் பெரிதும் காலத்தையும் உழைப்பையும் பொருளையும் செலவழிக்க முனைந்து வருகின்றனர். சுவடிப் பதிப்பு ஆய்வாளர் ஒரு சிலருக்கு மட்டுமே, ஒரு குறிப்பிட்ட கால அளவில், ஒரு சிறிதே பயன்படுவனவே அந்த விளக்க அட்டவணைகள். ஆனால் அவை பல காலம் பயன்படும் பெருநூல்களைவிட உயர்ந்த அமைப்பில் வெளியிடப் பெறுகின்றன. பெரும் பொருட் செலவில் உருவாகும் அந்த விளக்க அட்டவணைகளின் பயனோ மிகமிகச் சிறிதளவேயாகும். ஏன்? பயன் இல்லை என்று கூறுவது பெரும்பாலும் தவறாகாது.

ஒரு சுவடிக்குப் பலவகையான விளக்கச் செய்திகள் அந்த விளக்க அட்டவணையில் கொடுக்கப் பெறுகின்றன. அதாவது சுவடியின் (நூலின்) பெயர், அதற்குக் கொடுக்கப்பெற்றுள்ள நூலக எண் நூலின் பலவகையான அளவுகள், நூலாசிரியர், கூறும் பொருள், சுவடி கொடுத்தவர், சுவடியின் தொடக்க அமைப்பு, இறுதி அமைப்பு, சுவடி எழுதியது பற்றிய குறிப்புகள் போன்ற பல செய்திகள் கொடுக்கப்பெறுகின்றன. அச்செய்திகளில் மிகவும் இன்றியமையாத ஒரு பகுதி 'அச்சுவடி அச்சாகிவிட்டதா? இல்லையா? என்பதாகும். இப்பகுதி விளக்க அட்டவணையில் இடம்பெறுகிறது. ஆனால் இப் பகுதிக்குரிய செய்திமட்டும் தெளிவாகச் சுட்டப் பெறுவதில்லை. சுட்டப் பெறுவனவற்றுள் பல தவறான செய்திகளாகும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம். தம்மிடமுள்ள தமிழ்ச் சுவடிகளுக்குத் 'தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை' என்ற பெயரால் பல தொகுதிகளை வெளியிட்டுள்ளது. அவற்றுள் முதல் தொகுதியில் (1987) மட்டும் சில செய்திகளைச் சுட்டலாம்.

இலக்கண விளக்கம், பொருளதிகாரம், புறத்திணையியல். (எண். 146)

கூர்ம புராணம் (எண். 254)

சூடாமணி நிகண்டு—முதற்பெயர்த் தொகுதி. (எண். 486)[8]

போன்ற பல சுவடிகளின் விளக்கத்தில் ஏழாவது பகுதியாகிய வெளியீட்டுச் செய்தி இடம் பெறவில்லை. இவை அச்சானவை என்பது வெளிப்படை ஆதலின் 'அச்சாகியுள்ளது' என்று குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை என விடப்பட்டுள்ளது என்று எண்ணவும் இயலவில்லை. இச்சுவடிகளைக் காட்டிலும் மிகவும் வெளிப்படையாக அறியக் கூடிய இராமாயணம், மகாபாரதம் போன்ற வற்றின் செய்தியில் 'அச்சாகியுள்ளது' என்ற குறிப்பு காணப்படுகிறது. சுவடிகளைப் பற்றிய அச்சான செய்தியறிவதில் இத்தகு விளக்க அட்டவணைகளும் துணைபுரிவதில்லை.

அச்சிடப் பெறாதவை என்று முடிவுசெய்தல்

கிடைக்கும் சுவடிகளை ஆய்ந்து காணும்போது, எல்லோரும் அறிந்த நூல்களாக, அச்சாகியுள்ளது என்ற செய்தியை அறிந்த நூல்களாகப் பலவற்றைக் காணமுடிகிறது. அச்சுவடிகளைத் தவிர அரிய நூல்களுக்கான சில சுவடிகளும் கிடைக்கின்றன. அந்த நூலின் பெயரே நாம் கேள்விப்படாததாக இருப்பதும் உண்டு. அந்தச் சுவடி இதுவரை அச்சாகியுள்ளதா இல்லையா என்பதை அறிவது மிகக்கடினமான செயலாகும். அட்டவணை தயாரிப்போர் அந்தவிதமான கடின ஆய்வில் ஈடுபடாமல், பெயரளவில் கேள்விப் பட்டதாக இல்லை என்ற காரணத்தால் அது 'அச்சாகவில்லை எனத்தெரிகிறது' என்று சுட்டிவிடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். ஆய்ந்து பார்க்கும்போது அச்செய்தி தவறானதாகி விடுகிறது.

அச்சாகாத சுவடிபற்றிய பொதுநிலை ஆய்வுக்களங்கள்

ஆழ்ந்த, முறையான ஆய்வின்வழி அச்சிடப்பெறாத சுவடிகளை அறுதியிடுவது சுவடிப்பதிப்புகளை விரைவுபடுத்தப் பயன்

8. பிறவற்றுள் சில எண் 102, 103, 105, 108—116, 121, 139, 619, 620, 625...

படுவதாகும். இவ்வாய்வில் அச்சாகாத சுவடிகள் மிகுதியாகக் கிடைப்பதாகத் தெரியவந்தால் ஆய்வியல் நெறிகளுக்கேற்ப ஒரு வரையறையை உருவாக்கிக் கொள்ளுவது முறையாகும். அவ்வரை யறையைப் பெருவாரியாக இருவகைப்படுத்தலாம். அதாவது
1. ஒருகுறிப்பிட்ட கவடி நூலகத்திலுள்ள அச்சாகாத சுவடிகள்,
2. ஒருகுறிப்பிட்ட பொருள் பற்றிய அச்சாகாத சுவடிகள் என்ற அடிப்படையில் வரையறுத்துக் கொள்ளலாம்.

இவ்வகைப்பாட்டிலும் மிகுதியாகக் காணப்பெறும் நிலை ஏற்பட்டால், ஒருகுறிப்பிட்ட சுவடி நூலகத்திலுள்ள, ஒருகுறிப் பிட்ட பொருள்பற்றிய அச்சாகாத சுவடிகள் எனவும் வரையறை செய்து கொள்ளலாம், ஒருநூலகத்திலுள்ள ஒரு பொருள் பற்றிய சுவடிகளிலும் சில உட்பிரிவுகள் அமைய இடமுண்டு. அந்த அள விலும் ஒரு தெளிவான வரையறையைச் செய்து கொள்ளலாம். சான்றாக, ஒருசுவடி நூலகத்திலுள்ள ஒரு பொருள்பற்றிய ஆய்வு என்ற அடிப்படையில் இலக்கியம் பற்றிய சுவடிகளை ஆய்வு செய்வதாயின்,

1. அகப்பொருள் இலக்கியச் சுவடிகள்
2. புறப்பொருள் இலக்கியச் சுவடிகள்
3. புராண இலக்கியச் சுவடிகள்
4. தலபுராணச் சுவடிகள்
5. பக்தி இலக்கியச் சுவடிகள்
   (ஒருசமயம் பற்றிய சுவடிகள், பல சமயம் குறித்த சுவடிகள்)
6. சிற்றிலக்கியச் சுவடிகள்
   (ஏதேனும் ஒருவகைச் சிற்றிலக்கியச் சுவடிகள்)
7. மருத்துவச் சுவடிகள்
8. கதைப் பாடல்கள்
9. நாடக வகைகள்
10. வரலாற்றுச் சுவடிகள்
11. ஓவணச் சுவடிகள்

இவ்வாறு வரையறை செய்து கொள்ளுவது தெளிவான வரை யறைக்குட்பட்டதாகும். இவ்வரையறையானது குறித்த காலத்தில் முடிக்கும் சிறந்த ஆய்வாக அமையத் துணைபுரியும்: ஆய்வு. செறிவான செய்திகளைப் பெற்றதாகவும், குறித்த அளவினை மீறாததாகவும் அமையும் வாய்ப்பை ஏற்படுத்தும். இவ்வாய்வுக் களத்தினை ஒரே காலத்தில் பலர் மேற்கொள்ள வாய்ப்பு உண்டு.

ஒரு சுவடி, நிறுவனத்தில் அல்லது பலஇடங்களில் உள்ள ஒரு பொருள் பற்றிய அச்சாகாத பல சுவடிகளைக் கண்டு, அவற்றின் பொதுவான சிறப்பியல்புகளை இவ்வாய்வின் வழி எடுத்துக் காட்டலாம். இவ்வாறு எடுத்துக்காட்டப் பெற்ற ஒவ்வொரு சுவடியைப் பற்றியும் சிறப்பு ஆய்வினை மேற்கொள்ளும் வாய்ப்பு பல ஆய்வாளருக்கு ஏற்படும். சிறப்பு ஆய்வின்போது பதிப்புநெறி களை முறையாகப் பின்பற்றிச் சுவடிப் பதிப்புகளை முழுமைபெறச் செய்ய இயலும்.

அச்சாகாத சுவடிகளையறியும் இப்பொதுநிலை ஆய்விற்குச் சில துணைக்கருவிகள் பயன்படுவனவாகும். இச்சுவடியில் உள்ள நூல் இதுவரை அச்சாகவில்லை என்பதை முதலில் பதிப்பாசிரியர் அல்லது ஆய்வாளர் தம் பட்டறிவின் வழி அறியலாம். தெளிவாகத் தெரிய இயலாதபோது நூலகங்களிலுள்ள நூல்பட்டியல்களையும். அகரவரிசை அட்டவணைகளையும் ஆய்ந்து பார்த்து அப்பெய ருடைய நூல் வெளியாகியுள்ளதா எனக் கண்டறியலாம். நூலகங் களில் காணும் முறையைக் கையாளும் பொழுது அந்தந்தத் துறை களில் அமைந்துள்ள நூலகங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பெரும்பயன் அளிக்கும். நூலறிவுமிக்க சான்றோர்களை அணுகிக் கேட்டறிவதும் ஒருவழியாகும்,

தமிழ்நூல் விவர அட்டவணை

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிமன்ற வெளி யீடாகப் பத்துக்குமேற்பட்ட தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றில் அச்சான தமிழ் நூல்களுக்கான அட்டவணைகள் அகர வரிசையில் அமைகின்றன, பொருள்வாரியாகவும் பிரிக்கப் பெற்றுள்ளன. 1867 முதல் 1900வரை அச்சான நூல்களுக்கான அட்டவணையே முதல் தொகுதியாகும். பிற ஆண்டுகளின் வெளி யீடுகள் தொடர்ந்த தொகுதிகளில் தொகுக்கப் பெற்றுள்ளன. ஆனால் முழுமையான துணையாக அத்தொகுதிகளைமட்டும் ஏற்க முடியவில்லை. தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்திற்கு வெளியீட் டாளர்களால் அனுப்பப் பெற்ற நூல்கள்மட்டுமே அத்தொகுதி களில் இடம்பெறும். அனுப்பப் பெற்றவையும் முழுமையாகச் சேர்ந்திருக்கும் என்றுகூற இயலாது. இத்தொகுதிகளைத் தவிர,

1. Classified Catalogue of Tamil Printed Books, (1867 -1910) by John Murdoch, Tamil Development and Research Council, Reprint-1968 Govt. of TamilNadu)

2. British Museum Catalogue, by Dr. L.D. Barnett & Dr. G U, Pope-Year 1909 upto 1900.

3. A Supplementary Catalogue of the Tamil Books,1931 British Museum, by Dr. L.D Barnett.

ஆகிய அட்டவணைகளும் பயன்படுவனவாகும். சென்னை, மாவட்ட மைய நூலகத்தின் சார்பில் ஆண்டுதோறும் ஒரு அட்டவணை வெளியிடப் பெறுகிறது, நூலகம்போன்ற இதழ்கள் தினத்தாள்கள் ஆகியவற்றில் சில நூல்கள் மதிப்புரையாக வெளியாகின்றன. இவை அனைத்துமே அச்சான நூல்களை எடுத்துக் காட்டி நமக்குத் துணைபுரிவனவாகும். இவற்றை ஆய்ந்து இந்தச் சுவடி அச்சாகவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். இவற்றோடு அந்தந்தச் சுவடி நூலகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வழி வெளியாகும் நூல்களுக்கான பட்டியல்களும் அச்சான சுவடிகளை அறிவதில் துணைபுரியும்.

அச்சாகாத சுவடிபற்றிய சிறப்புநிலை ஆய்வுக்களங்கள்

கிடைத்துள்ள சுவடிகளில் அச்சாகாத நூல்கள் பற்றிய ஆய்வைப் பொதுநிலை ஆய்வுக்களன்களாகக் கண்டோம். அதில் பொதுநிலை ஆய்வே பல சிறப்புநிலை ஆய்வுக்களன்களைத் தோற்றுவிக்கும் என்பது தெளிவு. தேர்ந்து கண்டுள்ள நிலையில் சிறப்புநிலை ஆய்வுக்களன்களுக்குரிய தனிப்பட்ட சுவடிகள் ஓலைச் சுவடிகளாகவும் தாள் சுவடிகளாகவும் சிலவற்றைக் கூறலாம்.

1, மெக்கன்சி திரட்டிய சுவடிகளில் முன்பு காட்டப்பெற்ற பலவகைத் தலைப்புகளில் (கைபீதுகள், வரலாறுகள், வமிசாவளிகள்போல்வன) கிடைப்பன அச்சாகாதவை; தனித்தனித் தலைப்புகளில் தொகுப்பாகவோ, தனிப் பதிப்பு நூலாகவோ ஆய்வு செய்யும் தகுதிவாய்ந்தவை; பல ஆய்வாளர்களுக்குரிய களன்களாக அமையும் தன்மை வாய்ந்தவை.

2. இதிகாச, புராணங்களாகிய முழுமை இலக்கியங்களை மூலங்களாகக் கொண்டு உருவான ஒருமை இலக்கியங்கள் பல தொகுப்புப் பதிப்பாய்வுக் களன்களாகும் திறன் பெற்றவை.

குகநட்பு, சடாயுமோட்சம், சுக்கிரீவநட்பு, தாடகைவதம், பரசுராம சபதம், பாதுகாபட்டாபிஷேகம், மூலபலப்போர், விசுவாமித்திரன், வீர அனுமன் போன்ற பலவகை ஒருமை இலக்கியங்கள், மூல இலக்கியங்களாகிய வான்மீகி ராமாயணம்,

கம்பராமாயணம் போன்ற முழுமை இலக்கியங்களினின்றும் முகிழ்த்தவையாகும். நாட்டுப்புற இலக்கிய அமைப்பில் உருவாகியுள்ள இந்த ஒருமை இலக்கியங்களுக்கும் மூல இலக்கியங்களுக்குமிடையே உள்ள கால இடைவெளி, அதனால் ஏற்பட்ட கருத்து மாற்றங்கள், புதுமை நுழைவுகள் ஆகியவற்றைத் தெளிவாக ஆய்ந்து எடுத்துக்காட்டலாம். கருத்து மாற்றங்களும் நுழைவுகளும் ஏற்பட்டதற்கான காலச்சூழல்கள், பிறவகைத் தாக்கங்கள் போன்றவையும் தெளிதற்கு ஆய்வு இடந்தரும். புதிய செய்திகள் பலவற்றைப் புலப்படுத்தும் வாய்ப்பு இந்த ஆய்வுக்களன்களின்வழி ஏற்படும்.

அல்லியரசாணிமாலை, இரணியன்வதை, இராசசூயயாகம், காண்டவ தகனம், சுபத்திரைத் திருமணம், சூதுபோர் நாடகம், பவழக்கொடிகதை, பிரகலாதன்கதை, புலந்திரன் களவு, வீர அபிமன்யு, போன்ற ஒருமை இலக்கியங்கள் பலவும் சுவடிகளில் காணப்பெறுபவை யாகும். இவையாவும் ஒப்பீட்டு ஆய்வுக்களன்களாக அமைபவையாகும்.

3. தமிழில் இலக்கிய, இலக்கணச் சுவடிகளைத் தவிரப் பல வகையான கலைகளடங்கிய சுவடிகளும் உள்ளன. அவற்றுள் மிகச் சிறப்புவாய்ந்த அரிய கலையாகிய மருத்துவக் கலையும் ஒன்று. மருத்துவச் சுவடிகள் பல, பல நூறு பாடல்களால் இயன்றவை. பெரும்பாலும் அகத்தியர், தன்வந்திரி, தேரையர் போன்ற ஆசிரியர் பெயர்களால் ஆனவை. இவற்றுள் பலவும் அச்சாகியுள்ளன என்ற நிலையே காணப்படுகிறது. ஆனால் எல்லா நூல்களுமே ஆய்வுக்குரியனவாக ஏற்கத்தகுந்தவையாகும். அச்சானவை பெரும்பாலும் மூலப்பாடல்களை மட்டுமே கொண்டுள்ளன, அவற்றால் பயன் இல்லையாதலின் அவற்றை அச்சானவை எனக் கொள்ளவேண்டிய கட்டாயம் இல்லை எனலாம். அவற்றிலுள்ள மருந்துப் பொருள்களுக்கான விளக்கம், மருந்து செய்முறைகள், துணை மருந்துகள், மருந்து கொடுக்கும் முறைகள், பத்திய முறைகள் ஆகியவற்றைத் தெளிவாக்கும்போதே அந்நூல்கள் பயன்படுவனவாகும். நோயின்தன்மைகளும் நோயறியும் முறைகளும் எளிமையாக எடுத்துக்காட்டப் பெறவேண்டும். இந்த அனைத்து விளக்கங்களையும் பெற்று வெளிவரும் நூலே பயனுடைய மருத்துவ நூல்களாகும். இத்தகு வெளியீடுகளுக்குச் சுவடி ஆய்வு தேவைப்படுகிறது. எனவே மருத்துவச் சுவடிகள் ஒவ்வொன்றும் ஒருகளனாக அமைகின்றன. 'போகர் சூத்திரம் என்னும் பெயரில்

உள்ள ஒரு சுவடி பாணசாத்திரம் பற்றியது என்பதும் குறிப்பிடத் தக்கது.

1. எளிய விளக்கத்தோடு வெளிவராத சுவடிகள் பலவும்—அந்தந்த நூல் பெயராலேயே ஆய்வுப் பதிப்பாக வெளிவருமாறு ஆய்வை அமைத்துக்கொள்ளலாம், சான்றாக,

தேரையர் நோயின் சாரம்—ஆய்வு வெளியீடு.
தன்வந்திரி வாகடம்—ஒரு விளக்க ஆய்வு.
புலிப்பாணி மருத்துவம்—பயன்பாட்டு ஆய்வு.

என்பன போன்ற தலைப்புகளில் முழுமையாக ஆய்வு செய்யலாம்.

2. ஒரு பொருள்பற்றிய செய்திகளைப் பல சுவடிகளிலிருந்தும் தொகுத்து எடுத்துக்கொண்டு அவற்றை வகை, தொகைப்படுத்திப் பயன்படுமாறு ஆய்வை அமைத்துக் கொள்ளலாம். சான்றாக,

1. மகளிர் நோய்களும் மருத்துவமும்—சுவடி ஆய்வு
2. குழந்தை மருத்துவம்—சுவடித் தொகுப்பாய்வு
3. முறிவு மருத்துவம்—சுவடித் தொகுப்பாய்வு
4. வர்மக்கலை மருத்துவம்—சுவடி ஆய்வு
5. கற்பவகைகளும் பயனும்—சுவடித்தொகுப்பாய்வு
6. லேகிய வகைகள்—செய்முறையும் பயன்பாடும் (சுவடி ஆய்வு)

என்பன போன்ற தலைப்புகளில் பலவகைப் பயனுடை ஆய்வுகள் அமைய மருத்துவச் சுவடிகள் இடமளிக்கின்றன.

4, மருத்துவச் சுவடிகளை யடுத்து இடம் பெறுவன சோதிடச் சுவடிகளாகும். சப்தரிஷிநாடி போன்ற பலவகை நாடி நூல்கள் ஒவ்வொன்றும் இலக்கணத்திற்கு ஒரு தொகுதியாகப் பன்னிரண்டு தொகுதிகளை உடையவை. மருத்துவச் சுவடிகளுக்குக் காட்டியது போன்று பலவகை விளக்கங்களோடு எளிமைப்படுத்தி வெளியிட சோதிடச்சுவடி ஆய்வு தேவைப்படுவதாகும்.

சோதிடச் சுவடிகள் ஓர் ஆய்வு—என்ற அடிப்படையில்

1) நட்சத்திரப் பலன்கள்—ஓர் ஆய்வு
2. இராசி பலன்கள்—ஓர் ஆய்வு
3. இலக்கினப் பலன்கள்—ஓர் ஆய்வு
4. கிரகப்பலன்கள்—ஒரு கணிப்பாய்வு

என்பன போன்ற தனித்தனித் தலைப்புகள் ஆய்வுக்களங்களாக அமைகின்றன. ஒவ்வொரு ஆய்வும் பல சுவடிகளின் தொகுப்பாகிய ஆய்வுப் பொருள்களைப் பெற்று அமையும்.

மருத்துவம், சோதிடம் ஆகிய பொருள்களில் ஆய்வு செய்பவர்கள் அந்தந்தத்துறையில் அடிப்படை அனுபவம், அடிப்படைக்கல்வி பெற்றவர்களாக இருப்பது விரும்பத்தக்கதாகும். அப்போதுதான் ஆய்வும் எதிர்பார்க்கும் பயன் தருவதாக அமையும்.

5. தூதுத்திரட்டு, பிள்ளைத்தமிழ்க் கொத்து போன்ற சிற்றிலக்கியத் தொகுப்பு வெளியீடுகள் பல சுவடிகளிலிருந்து வெளியாகியுள்ளன.[9] இவை மூலங்களைமட்டும் கொண்டவை. இவற்றைப் போன்ற சிற்றிலக்கியத் தொகுப்பு ஆய்வுகள் நிகழ்த்த, அச்சாகாத சுவடிகள் பல உள்ளன. தனித்தனிச் சுவடிகளாகவும் ஆய்வுசெய்யச் சிற்றிலக்கியங்கள் பல இடம் அளிக்கின்றன.

1. சாரங்கதாரன் யட்சகானம் 2. சிறுத்தொண்டர் யட்சகானம் 3. நரசிங்கப் பெருமாள் யட்சகானம் 4. பழையனூர் நீலி யட்சகானம் 5. வல்லாளராசன் யட்சகானம் போன்றவை தனித்தனிச் சுவடிப்பதிப்பாய்விற்குரியவை. இவற்றுள் வல்லாளராசன் யட்சகானம் மூலச்சுவடி மட்டும் அச்சாகியள்ளது.[10] இவ்வாறான பலவகைச் சிற்றிலக்கிய ஆய்வுக்குச் சுவடிகள் இடம் தருகின்றன.

6. சுவடி வடிவில் உள்ள நாட்டுப்புற இலக்கியங்கள் பல இன்னும் அச்சேறாதவையாகும். அவை பழந்தமிழரின் உயர்ந்த பயன்பாடுகளையும், நல்ல பழக்கவழக்கங்களையும் எடுத்துக்காட்டுவனவாகும். அம்மானை, கதை, கதைப்பாட்டு, வில்லுப்பாட்டு என்னும் வடிவங்கள் அமைந்த அவை ஒவ்வொன்றும் ஒருதனிநிலை அல்லது சிறப்புநிலை ஆய்வுக்களங்களாக அமையும் தகுதி வாய்ந்தவை,

அன்பு உள்ளங்களைச் சாதி, மதத் தடைகள் கட்டுப்படுத்த மாட்டா; அந்த அன்பு உள்ளங்களே மக்களின் கண்கண்ட தெய்வங்களாகின்றன என்னும் உண்மைகளை உணர்த்துவன தோட்டுக் காரிகதை போன்ற சிறுதெய்வ உற்பத்திக் கதைகள்.

ஒரு தனிமனிதரையோ சமூகத்தையோ அரசையோ ஏமாற்றிச் சேர்த்த பொருள்கள் நிலைத்து நிற்கமாட்டா என்ற கருத்தை உணர்த்தி மக்களிடையே நல்ல பண்பாட்டை வளர்க்க இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்ட கற்பனைப்பகுதி யடங்கியவை குசலவன் கதை போன்ற பண்பாட்டுக் கதைகள்.

---

9. அரசினர் சுவடி நூலக வெளியீடுகள்
10. துர்கா

இத்தகு நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் பல ஆய்வுக்களனாவதற்கு உரிமை உடையவையாகும்.

7. ஓலைகளை ஒரே அளவில் நறுக்கிச் சுவடிவடிவில் அமைத்து எழுதப் பெற்றுள்ள இலக்கண, இலக்கியங்களுக்கு மாறான முறையில் கிடைக்கும் ஓலைகளை அப்படியே நீண்டவடிவில் பயன்படுத்தி எழுதியுள்ள செய்திகளும் ஓலைச்சுவடிகளாகக் கிடைக்கின்றன. அவற்றில் ஆவணங்களும் பதிவேடுகளும் (Documents and Records) அடங்கியுள்ளன. இந்தவகைச் சுவடிகள் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் உள்ளன. மாவட்டவாரியாக ஆவணங்கள் எனவும், பதிவேடுகள் எனவும் தனித்தனித் தலைப்பில் ஆய்வுசெய்து தொகுக்க வாய்ப்பு உண்டு. பல ஆய்வாளர்கள் இப்பணியை மேற்கொள்ளலாம்.

அடமானக் கடன்பத்திரம், அடிமைப் பத்திரம், அதிகாரப் பத்திரம், உடன்படிக்கைச் சாசனம், உரிமைச் சாசனம், ஒப்பந்தப் பத்திரம், கிரயப் பத்திரம், குத்தகைப் பத்திரம், பாக அட்டவணைப் பத்திரம், விடுதலைப் பத்திரம் போன்ற வாழ்க்கை நிலைகளுக்குரிய பலவகை ஆவணங்கள் மக்கள் வாழ்க்கையையும் அரசாட்சி முறைகளையும் எடுத்துக்காட்டத் துணைபுரிவனவாகும்.

இதேபோல மனுநெறி வளர்த்த தமிழ் மன்னர்கள் மக்கள் வாழ்க்கையில் கொண்டிருந்த அக்கறையைக் காட்டும் பதிவேடுகள் பல ஒவ்வொன்றும் ஒரு தலைப்பின்கீழ் ஆய்வு மேற்கொள்ளும் தகுதி வாய்ந்தவையாகும். அரசு ஆணைகளடங்கிய ஆணத்தி, வரிசெலுத்தியதற்கான அடைச்சீட்டு, சாகுபடி மதிப்புப்புள்ளி, லாபநட்டங்களை எடுத்துக்காட்டும் இராசிக்கணக்கு, அரசுக் கருவூலக் கணக்கு, உழவுக்கணக்கு, களத்து தானியக்கணக்கு, கிராம ஊழியர், கிராம நில அளவுகள் தீர்வைமுறைகள், மானியங்கள் போன்ற பலதிறப் பொருள்கள் ஆய்வுக்களன்களாக அமைவன,

8. ஓலைச் சுவடிகளைப் போலத் தாள்சுவடிகளும் அச்சாகாத நிலையில் ஆய்வுக்குரியனவாகப் பல சுவடிகள் கிடைக்கின்றன. பொதுநிலை ஆய்வில் அச்சாகாத தாள் சுவடிகள் என்ற தலைப்பில் இவை தொகுக்கப்பெறின் பல சிறப்புநிலை ஆய்வுக்கு வழிவகுக்கும். தாள் சுவடிகளில் சிறப்புநிலை ஆய்வுக்குரியனவாகச் சிலவற்றை இங்குச் சுட்டலாம்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த பேராசிரியர் ந. கனகராசன் இயற்றிய நூல்களாக நூற்று இருபத்தைந்து சுவடிகள், சென்னை, அரசினர் சுவடிநூலகத்தில் உள்ளன. அனைத்தும் அச்சாகாதவை; ஆசிரியர் தம் கைப்பட எழுதிய மூலச்சுவடிகள்; எழுதத்தொடங்கியநாள், முடித்த நாள் முதலான குறிப்புகளுடன் காணப்பெறுபவை; ஆசிரியரே அன்பளிப்பாக நூலகத்திற்குக் கொடுத்திருக்கிறார். அவற்றுள் திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் என்ற ஒரு சுவடிமட்டும் அந்த நூலக மலரில் வெளியாகியுள்ளது[11].

அவர்தம் சுவடிகளில் வடமொழி உபநிடதங்களின் மொழி பெயர்ப்புத் தொகுதிகள் குறிப்பிடத்தக்கவை. ஈசோபநிடதம் தொடங்கி, பிரஹதாரண்ய கோபநிடதம் ஈறாகப் பதினொரு பகுதிகளும் (Parts) மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன. சில உரை யுடன் கூடியவை; பதினாறு தொகுதிகளாக (Volumes) எழுதப் பெற்றவை (ஆர். 7766-81).

ஆஞ்சநேய புராணம் என்னும் நூல் 13223 விருத்தப்பாக்களால் இயன்றது; ஐந்துதொகுதிகளாக எழுதப் பெற்றுள்ளது. (ஆர் எண். 7782-86). 'வால்மீகியும் கம்பரும்' என்பது ஒரு உரைநடைநூல்; இருவரும் தங்கள் கருத்துகளை நேருக்குநேர் உரையாடும் முறையில் வெளியிடுவதாக அமைந்தது (ஆர். 7790). சுந்தரபுராணம் மூன்று தொகுதிகளாக அமைந்த நூல் (ஆர். 7791-93). கலம்பகம், கும்மி, குறவஞ்சி, கோவை, மாலை போன்ற அறுபத்தாறு சிற்றிலக்கியங் களின் தொகுப்பான 'பிரபந்தத் திரட்டு' என்னும் சுவடி இரண்டு தொகுதிகளாக உள்ளது (ஆர். 7794-95). 'ஆன்மநாதன் பதிற்று நூற்றந்தாதி' என்பது பதிற்றுப் பத்து அந்தாதிகளின் மாறுபட்ட நிலையில், பதிற்று நூற்று அந்தாதி என ஆயிரம் பாடல்களால் இயற்றப்பெற்றதொரு புதிய படைப்பாகும் (ஆர். 8242).

இவருடைய படைப்புகளில் ஒருநூல் 'இலங்கைப்பரணி' என்பதாகும் (ஆர். 7798). இராமாயணத்தின் இலங்கைப் போரைப் பற்றிப் பாடுவது. இது 1300 தாழிசைகளால் ஆனது: பரணி இலக்கிய மரபில் இயற்றப் பெற்றது. 1943இல் இயற்றப் பெற்றுள்ள இந்தநூல், சுபானு ஆண்டு மார்கழித் திங்கள், 25ஆம் நாள் ஞாயிறு இரவு ஏழுமணியளவில், புதுக்கோட்டை யரசர் தொழும் தெய்வமாகிய, கடையர்குடி, பிரசன்ன ரகுநாத சந்நிதியில், ராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்களின்

11. நூலக மலர், தொகுதி-20

தலைமையில் அரங்கேற்றப் பெற்றுப் பலராலும் போற்றப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சுவடிகளைப் போன்ற தாள்சுவடிகள் பல தனிநிலை ஆய்வாகவும் தொகுப்புநிலை ஆய்வாகவும் மேற்கொள்ளுவதற்கு உரியவையாகின்றன.

அச்சான நூலின் சுவடிகளில் ஆய்வுக்களன்

சுவடிகளிலிருந்து பதிப்பிக்கப்பெற்ற பழைய பதிப்பு நூல்கள் கிடைக்காத போது மறுபதிப்புகள் வெளியாகின்றன. அந்த மறுபதிப்புகளை ஆய்வுப் பதிப்பாக்கும் முயற்சியில் ஆய்வுக்களன் உருவாகிறது. ஆய்வாளர்தம் பயிற்சிக்கும் அனுபவத்திற்கும் ஏற்றதொரு பழைய பதிப்பைத் தம் ஆய்வுத் தலைப்பாகத் தேர்ந்து, கிடைக்கும் சுவடிகளுடன் ஒப்பிட்டுப் பாடவேறுபாடு முதலியவற்றால் ஏற்படும் புதிய கருத்துகளடங்கிய ஆய்வுப் பதிப்பாகத் தம் ஆய்வேட்டை உருவாக்கலாம். அச்சுநூல்களைக் களனாகக் கொண்ட ஆய்வுகளாயினும்; சுவடிகளின் துணையோடு நிகழ்த்தப் பெறுவதால் பழையபதிப்பு நூல்ஆய்வு ஒரு நுண்ணிய ஆய்வாக அமையும்.

அச்சான நூலும் சுவடியும்

அரிமந்தி ரம்புகுந்தால் ஆனை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்பும் கரித்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல் (நீதிவெண்பா-2)

என்பது அச்சு நூலிற்காணும் பாடல். இதே பாடல்,

.....முத்தும் பெறலாம்—நரிபுழையில்
வாலுஞ் சிறிய மறியெலும்பும் கத்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்[12]

என்னும் வேறுபாட்டோடு சுவடியில் காணப்பெறுகிறது. மயிரெலும்பும் என்று பாடம் கொண்ட அச்சுநூல்கள் 'எலிய வால்களும் மயிர்களும் எலும்புகளும்...' என்று உரை கூறின. ஆனால் சுவடியிலோ 'மறியெலும்பும்' என்ற பாடத்திற்கேற்பச் 'சிறிய ஆட்டெலும்பும்' என்ற உரையே காணப்பெறுகிறது. பொருட்போக்கை மாற்றியமைக்கும் இத்தகு வேறுபாடுகள் பல ஒரே நூலில் கிடைக்கின்றன. இந்த வேறுபாடுகளை ஆய்வுசெய்து

12. நீதிவெண்பா, அரசினர் சுவடிநூலக எண். டி. 2283

தொகுத்துத்தரும் ஆய்வில், நூலின் கருத்து வேறுபாடுகள், அதற் கேற்ற ஆசிரியர் கொள்கைகள், காலச்சூழல்கள் சமுதாயச் சூழல்கள் ஆகியவற்றில் தோன்றும் மாற்றங்கள் போன்ற பல புதுமைக்கருத்துகள் வெளிப்பட்டு ஆய்வு சிறக்கும்; நல்ல ஆய்வுப் பதிப்பும் உருவாகும்.

பிறநூல் சுவடிகள்

சிறப்பு நிலை ஆய்வாக ஒரு தனிநூல்சுவடி பற்றிய ஆய்வில் பிறநூல் சுவடிகளின் பயனை உணர்த்தும் சான்றுகளின் தொகுப்பாக ஒருதனிப்பட்ட ஆய்வை மேற்கொள்ளலாம். அதாவது ஒரு நூலை வேறு சிலநூல்கள் எடுத்தாண்டிருக்கலாம்; அல்லது வேறு நூல்களின் உரையாசிரியர்கள் உரைவிளக்கத்திற்காக எடுத்தாண் டிருக்கலாம்; அல்லது எடுத்துக்காட்டுகளாகக் காட்டியிருக்கலாம்; அல்லது ஒப்புப்பகுதிகளாகவும் காட்டியிருக்கலாம். இவ்வாறு எடுத்துக்காட்டப் பெற்றுள்ள நூல்களையும் சுவடிகளையும் ஆய்ந்து தொகுத்து ஒரு நூலையோ ஒரு நூலின் சிறந்த பாடல் களையோ முழுமையாக்குவதாக ஒரு தனிஆய்வை மேற்கொள்ள லாம். சான்றாக,

1. எடுத்துக்காட்டுப் புறநானூற்றுப் பாடல்கள்
2. எடுத்துக்காட்டுக் கலிப்பாக்கள்
3. எடுத்துக்காட்டுக் குறுந்தொகைப் பாடல்கள்

என்பன போன்ற தலைப்புகளில் சுவடிகளின் துணையுடன் கூடிய ஆய்வு செய்யும்போது நூலின் பாடல்கள் பல தூய்மை பெறுவதும், புதிய பாடல்கள் பல கண்டுபிடிக்கப் பெறுவதுமாகிய பலன்கள் உருவாகும் வாய்ப்பு ஏற்படும். சான்றாக,

பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பின்னே
அறவோர் புகழ்ந்த வாய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே (291)

என்னும் புறநானூற்றுப் பாடல் பல பதிப்புகளிலும் இவ்வாறே காணப்பெறுகின்றது. இயைபுத் தொடைநயம் பொருந்திய இப் பாடல், தொல்காப்பிய மேற்கோளில் [13]

பாடுநர்க் கீத்த பல்புக ழினனே
... ...
அறவோர் புகழ்ந்த வாய்கோ லினனே

13. பொருள், நூற்பா 79 எடுத்துக்காட்டு.

என முறையாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இதற்குத் துணையாக இருந்தது தொல்காப்பியப் பொருளதிகாரச் சுவடியேயாகும். இலக்கண நூலாதலின் பாடல்கள் தூய்மையாக, ஆழ்ந்த கல்வி யறிவு உடையவர்களால் படியெடுக்கப் பெற்றுள்ளது. இத்தகு பாடல்கள் பலதூய்மை பெறவும், புதிய பாடல்கள் காணவும் பிற நூல் சுவடிகளை ஒப்பிட்டு, எடுத்துக்காட்டுகளின் ஆய்வாகச் சில ஆய்வுகளை நிகழ்த்தலாம்.

சுவடிப்பதிப்பு ஆய்வில் சில நெறிமுறைகள்

சுவடிப் பதிப்பு ஆய்வில் கடைப்பிடிக்க வேண்டிய சில நெறி முறைகளையும் அறிய வேண்டிள்ளது. இப்பணியே சுவடிப்பதிப்பில் மேற்கொள்ளும் பணிகள் என்னும் இரண்டாம் நிலைப்பணியாகும்.

பதிப்பின் முன் ஏற்பாடுகள்

பதிப்பாய்விற்குத் துணைநிற்பன முதற்கருவிகளும் துணைக் கருவிகளும் என இருவகைப்படும். ஆய்வுக்குரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், பழையபதிப்புகள் ஆகியவை முதற்கருவிகள். உரை நூல்கள், மேற்கோள் நூல்கள், அகராதிகள், மொழிபெயர்ப்புகள் போல்வன துணைக் கருவிகள், இவற்றின் துணைகொண்டு பதிப்புப் பணி தொடங்கப்பெறுகிறது.

முதற்பணி—படியெடுத்தல்

சுவடிகளில் பாடல்களும் உரைகளும் தொடர்ந்து எழுதப் பெற்றுள்ள நிலை, சில எழுத்துக் குழப்பங்கள், பழைய எழுத்து வடிவங்கள். கூட்டெழுத்து முறைகள், கிரந்த எழுத்துக்கலப்பு ஆகிய பலவகைச் சிக்கல்கள் சுவடிகளைப் படிஎடுக்குங்கால் ஏற்படும். அச்சிக்கல்களில் தெளிவு பெற்றபின் சுவடிகளைப் படியெடுக்கவேண்டும்.

பாடல்களைச் சீரும் தளையும் பொருந்த, தொடைநயம் வெளிப்படுமாறு, சீர் அளவு ஒத்துவருதலை அறிந்து சீர்களைப் பிரித்து அமைத்துப் பாடல்களை எழுதவேண்டும்.

இரண்டாவது பணி—ஒப்பிடுதல்

அதே நூலுக்குரிய பிறசுவடிகளோடு ஒப்பிடுவதனால், முதலில் எழுதுவதற்குத் துணையாயிருந்த மூலச்சுவடியில் இடம் பெற்ற பிழைகள், விடுபட்டவை, விளங்காதவை, தெளிவற்றவை போன்ற வற்றைத் திருத்தியும் நிரப்பியும் எழுத்துப்படியைத் தூய்மை பெறச் செய்யலாம். ஆய்வாளர் தம் மதிநுட்பத்தாலும் மீட்டுரு

பதிப்பாய்வுப்பணி

பதிப்புப்பணியைப் பயனுடையதாக்குவது இந்த ஆய்வுப் பணியாகும். இதனால் நூல் முழுமையுடையதாகிறது. இப்பணியில் மேற்கொள்ளவேண்டியவை :

1. செய்யுட்களில் சீர்களையும் சொற்களையும் முறையே ஓசையும் பொருளுந்தோன்றப் பிரித்து அமைத்தல் வேண்டும்.

2. முறையான நிறுத்தற்குறிகளை அமைத்துப் பொருள் புலப்பாட்டினைத் தெளிவுபெறச்செய்தல் வேண்டும்;

3. மேற்கோள்களுக்கேற்ற அடிக்குறிப்புகளைக் கொடுத்து ஆய்வை முழுமைபெறச் செய்தல் வேண்டும்.

4. ஆய்வடங்கலும் சொல்லடைவும் அமைத்துப் பிற ஆய்வாளருக்கு உதவுவாறு முழுமையாக்குதல் வேண்டும்.

5. பதிப்புரை, ஆய்வுரைகளின் வழி நூலைப் புலப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

6. நூலில் திருத்த முறைகளையும், சீர்மைசெய்தலையும் கையாண்டு நூலைத் தெளிவும் முழுமையும் பெறச்செய்தல் வேண்டும்.

7. உரைநடையில் மொழியியல்பு மாறாவண்ணம் சொற்களை இணைத்தும் பிரித்தும் அமைக்கும் முறை ஆய்வில் கையாளப் பெறுதல் இன்றியமையாத ஒன்று.

துணை நூல்கள்

1. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், (கருத்தரங்கக் கட்டுரைகள்) கு. பரமசிவம் (பதி), தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989
2. தமிழ்ச்சுவடிகள் (அட்டவணை) இரா. நிர்மலாதேவி (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983
3. தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடிகள்-விளக்க அட்டவணை 1 வே.இரா. மாதவன். தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 1987
4. தூதுத்திரட்டு, டி. சந்திரசேகரன் (பதி), அரசினர் சுவடி நூலகம், சென்னை. 1957
5. தொல்காப்பியம், பொருளதிகாரம் பேராசிரியர் உரை, கழகப்பதிப்பு, சென்னை, 1975
6. நீதிவெண்பா, ஆறுமுகநாவலர், (பதி.3) சென்னை, பரிதாபி. ஐ

7. நூலகமலர், தொகுதி 20, அரசினர் சுவடி நூலகம், சென்னை
8. பிள்ளைத்தமிழ்க் கொத்து, அரசினர் சுவடி நூலகம், சென்னை 1956
9, வல்லாளராசன் யட்சகானம், துர்க்கா (பதி)

ஆய்வேடுகள்

1. உ. வே. சா.வின் பதிப்புப்பணிகள், பூ. சொல்விளங்கும் பெருமாள், மதுரைக் காமராசர் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வேடு, 1979
2. ஐவர் அம்மானை, அ. விநாயகமூர்த்தி, 1981
3. சுவடிஇயல் ஓர் ஆய்வு, பூ. சுப்பிரமணியம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985
4. தமிழ் யட்சகானங்கள் (ஆங்கிலம்), இராமசாமி, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1987
5. மருத்துவச் சுவடிகளில் பாடவேறுபாடுகள், க. லலிதாம்பிகா, (எம்.பில்) பூண்டி புஷ்பம் கல்லூரி, தஞ்சாவூர். 1990
6. மருத்துவச் சுவடிகள் (குழந்தை மருத்துவம்). வே. இரா, மாதவன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985
7. முத்தாரம்மன் அம்மானை. இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். சென்னை 1986
8. மெக்கன்சி சுவடிகள், ம. இராசேந்திரன், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1984

சுவடிகள்

1. நீதி வெண்பா, டி. 2283, அரசினர் சுவடி நூலகம், சென்னை
2. பிறசுவடிகள்—அ. சுவடி நூலகம், ஆர் எண். 7766 முதல் 7798, 8242

தேர்ந்த துணைநூற் பட்டியல்

அகிலன் ஆய்வடங்கல், சு. வேங்கடராமன், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1974

ஆக்க இலக்கியமும் அணுகுமுறைகளும், எம். ஏ. நுஃமான், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வெளியீடு, யாழ்ப்பாணம் 1985

ஆராய்ச்சி நெறிமுறைகள் ச. வே. சுப்பிரமணியன் (பதி); உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; சென்னை, 1975

கம்பன் ஆய்வடங்கல், ச. சிவகாமி, தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978

சிலப்பதிகார ஆய்வடங்கல், இரா. காசிராசன், கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம், 1974

தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, வ. ஜெயதேவன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985

தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ஆ. வேலுப்பிள்ளை, ல. ராமகிருஷ்ணன் வெளியீடு, சென்னை, 1969.

தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம், மது. ச. விமலானந்தம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987

தமிழியல் ஆய்வு, இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்), மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1988

தமிழியல் நோக்கு நூல் அடைவு, பெ. மாதையன்

திறனாய்வு அணுகுமுறைகள், கு. பகவதி (பதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989

தொல்காப்பிய ஆய்வின் வரலாறு, கோ. கிருஷ்ணமூர்த்தி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1990

நாட்டுப்புறவியல் நூலடைவு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1988

நாட்டுப்புறவியலாய்வு நெறிமுறைகள், சி. கிருஷ்ணன் & இரா. பாக்கியலக்ஷ்மி (பதி) இந்திய நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1989

நாள் கிழமை திங்கள் இதழ்கள்—விளக்க வரிசை, இராமசாமிப் புலவர், கழக வெளியீடு, சென்னை, 1961.

பாரதி நூல்கள் விவரக் கோவை, சீனி. விசுவநாதன், பாலாஜி புத்தக நிலையம், சென்னை, 1987

மு. வ. ஆய்வடங்கல், சு. வேங்கடராமன், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1976

ஜெயகாந்தன் ஆய்வடங்கல். ந. அறிவழகன், அமராவதி பதிப்பகம், சோனங்குப்பம், 1978

An Annotated Bibliography on Modern Tamil Grammars & Tamil Hand Books, ஆ. தசரதன்

Dissertations on Tamilology, Annie Thomas, Internationa Institute of Tamil Studies, Madras, 1977

Introduction to the Study of Literature, W. H. Hudson, George G. Harrap & Co Ltd , London, 1970.

Literary Appreciation, Peter Westland, The English University Press, London, 1966

Literary Criticism — A Short History, William K. Wimsalt Jr., Cleanth Books, Oxford & IBH, Delhi, 1970

Methods in Social Research, William J Soode & Paul K. Hatt, Mc GrowHill — Kogakusha Ltd.,

Princeton Encyclopaedia of Poetry and Poetics, Alex Priminger (Ed), Macmillan, 1975

Tamil Research Through Journals (An Annotated Bibliography), A A. Manavalan, International Institute of Tamil Studies, Madras, 1975

சிறப்புச் சொல்லகராதி

(எண்— பக்க எண்)

அகம் கலைச் சொற் பட்டியல் 346
அச்சகத் தமிழின் போக்கு 238
அசன்பே சரித்திரம் 86
அடியார்க்கு நல்லார் 323
அப்புசாமி, பெ. ந 375
அமைப்பியல் கோட்பாடு 121
அமைப்பு மொழியியல் அணுகு முறை 303, 313
அம்மானை மடக்கு 218
அய்யாசாமி 200
அயோத்தி தாச பண்டிதர் 280
அரசியல் அங்கதம் 349
அருணகிரிநாதர் 52
அருணாசலம். ப. 46
அருணாசலம். மு. 25, 28, 204
அவினாசிலிங்கம் தி. சு. 376
அழகப்பன், ஆறு 206
அழகியல் கோட்பாடுகள் 113
அறிவியல் தமிழ் 374
அறுவகை இலக்கணம் 7, 8, 15
அன்றீக்கு அடிகளார் 91
அனவரத நாயகம் பிள்ளை 64
ஆக்க ஒலியனியல் விதிகள் 331
ஆசிரிய மாலை 26
ஆதித்தனார், சி. பா. 237
ஆபிரகாம் பண்டிதர் 280
ஆலன் டண்டீஸ், 209, 220
ஆவணப் பதிவு 114
ஆனந்த மூர்த்தி 65
இசுலாமிய அறபுத் தமிழிலக் கியங்கள் 84
இசுலாமிய ஞான இலக்கியங்கள் 83
இசுலாமியத் தமிழ்க் காப்பியங் கள் 77
இசுலாமியத் தமிழிலக்கிய நூல் விவரக் கோவை 73
இதழியல் உத்திகள் 122
இந்திரா மானுவல் 17
இரட்டைப் புலவர் 28
இரத்தின சபாபதி, வை. 46
இராகவையங்கார். இரா. 199
இராகவையங்கார், மு. 26
இராசமாணிக்கனார், மா. 46, 269
இராணி, எஸ். பி. 47
இராபர்ட், டி. நோபிலி 280
இராமலிங்க அடிகள் 65
இராமானுசம், ஏ. கே. 209
இராஜாஜி 375
இராஜேசுவரி, ஈ. த 377
இலக்கண விளக்கம் 7
இலக்கிய அணுகுமுறை 303
இலக்கியத் தன்மை 134
இலக்கிய வடிவங்கள் 135
இலட்சா ராமன், இரா. 47
இளைய பாரதம் 256
இறையனார் களவியல் 8
ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் 74
ஈழ மண்டலப் புலவர் 74
உல்மான் 306. 310
உளவியல் அணுகுமுறை 157
உளவியல் நோக்கு 145
உளவியல் சார் மொழியியல் 384
ஊர்ப்பெயர் ஆய்வுகள் 156
எடுத்துரை முறை 172
எதிர்கால ஆய்வுகள் 144
எல்லிசு 280
எலியட், டி. எஸ், 348
எள்ளல் முறை 172
ஏழாம் இலக்கணம் 15
ஐயர், வ.வே.சு, 107
ஒட்டக் கூத்தர் 28
ஒப்பாய்வு நோக்கு 141
ஒப்பீட்டாய்வுக் களன் 414
ஔவையார் 28, 42
ஃபெர்கூசன் 232.
கட்டுக் கோப்பு முறை 128
கட்டுரை ஆய்வின் நெறிமுறை 176

கட்டுரை நடை ஆராய்ச்சி 174
கட்டுரை வரைவியல் 177
கணேசையர், சி. 74
கணையாழி 108
கந்தசாமிக் கவிராயர், மு.ரா. 27
கந்தையா பிள்ளை, ந.சி. 64
கம்பனும் மில்டனும் 354
கரந்தைத் தமிழ்ப் பெருமன்றம் 280
கருணாமிருத சாகரம் 94
கரோலின் ரைட் 350
கல்கி 105
கல்வெட்டுக்கள் 324
காசிச் செட்டி 74
காஞ்சிபுரம் இராமசாமி நாயுடு 27
கார்லோஸ் 108
கால்டுவெல் 277, 280
காளமேகப் புலவர் 28, 42
கித்தேரியம்மாள் அம்மானை 219
கிதாபுல் மஹாசி 82
கிராமியப் புனைவு 136
கிரிம் 324
கிரிம்ஸ் ஒலி விதிமுறை 324
கிரியர்சன் 326
கிரெய்க் 181
கிருஷ்ண மூர்த்தி, பி. எச் 326
கிருஷ்ண மூர்த்தி, ஜி. ஆர். 47
கிருஷ்ணன நம்பி 100
கிளிப்பாடு பூதி 57
கிளை மடங்கள் 264
கீழ்த்திசைச் சுவடி நூலகம் 92
குகையிடிக் கலகம் 270
குணங்குடி மஸ்தான் 83
குமரகுருபரர் 266
குமாரசாமிப் புலவர், ஆ. 74
குருதத், கே. 64
குழந்தை இலக்கிய வரலாறு 191
குழந்தை எழுத்தாளர் சங்கம் 192
குழந்தைசாமி, வா. செ. 365
கைலாசபதி 345, 354, 371
கௌமதி நூல் 63
சகந்நாதன, கி. வா. 214
சங்கர் சென் குப்தா 208
சங்கர நாராயணன், ஏ. 16
சச்சிதானந்தன் 349
சஞ்சீவி, ந. 369
சண்முக சுந்தரம், சு. 216, 220
சத்திய பிரகாசிகை 167
சதாசிவப் பண்டாரத்தார், தி. வை. 28
சபாபதி நாவலர், க. 74
சம்பூ காவியம் 164
சமுத்திரம், சு. 107
சமுதாய மொழியியல் அணுகு முறை 303, 313
சமூகக் கிளை மொழியியல் 329
சமூக மொழியியல், நடையியல் கோட்பாடுகள் 121
சமூகவியல் அணுகுமுறை 113
சமூகவியல் கோட்பாடுகள் 120
சரசுவதி வேணுகோபால் 221
சாதுராம சுவாமிகள், எஸ். வி. 47
சாந்தி புராணம் 26
சாமி, பி. எல். 366
சாமி நாதையர் உ. வே. 371
சாரங்கதாரா யட்சகானம் 416
சித்தர் இயக்கம் 61
சிதம்பரனார், ஆர். 48
சிலப்பதிகாரம் 323
சிவ சங்கரன், தி. க. 108
சிவபாத சுந்தரம் 107
சிவபுராண தோத்திர மஞ்சரி 26
சிவராம மூர்த்தி, சி. 64
சிவானந்த சர்மா 326
சிறுத்தொண்டர் யட்சகானம் 416
சிறு பிள்ளைகளின் நேசத் தோழன் 201
சீகன்பால்கு 91
சீனிவாச ஐயங்கார், பி. டி. 366
சுந்தர மூர்த்தி, அ. 377
சுந்தர ராமசாமி 103
சுந்தர வடிவேலு, நெ. து. 151
சுப்பிரமணிய சிவா 279
சுப்பிரமணிய பிள்ளை, கா. 27, 28
சுப்பிரமணியம், பா. ரா. 208
சுப்பிரமணியம், வி. ஐ. 208, 369, 371
சுப்பிரமணியன், ச. வே. 47, 345, 352, 371

சுப்பிரமணியன், சி. கே. 366
சுப்பு ரெட்டியார், ந. 377
சுப்ர பாரதி மணியன் 108
சுப்ரமணியம், சி. 204
சுவராஜிய லெட்சுமி 376
சுவாமிநாத தேசிகர் 279
சுவாமி நாதம் 7
சுனீத் குமார் சட்டர்ஜி 208
சுஜாதா 108
செங்கமலத் தாயார் 17
செட்டியார், ஏ. சி. 16
செம்மலர் 108
செய்யுட் கோவை 26
செயராமன், ந. வீ. 17
செல்லப்பன், கா. 344, 350, 353, 354
செல்வராசு ரெட்டியார் 93
சேகனாப் புலவர் 78
சேதுப்பிள்ளை, ரா. பி. 371
சேலம் பகடாலு நாயுடு 151
சைவ மஞ்சரி 26
சொற்பொழிவு முறை 172
சோமசேகர நாயர் 326
சௌமிய சாகரம் 62
ஞானப் பூங்கோதை, எஸ். 16
டேவிட் கிரிஸ்டல் 306, 310
தகடூர் யாத்திரை 26
தங்கவேலு, சு. 46
தண்டியலங்காரம் 24
தத்துவ முறை 172
தமிழ் இந்தியா 64
தமிழ்ச் சுவடி விளக்க அட்டவணை 410
தமிழ்ச் செய்யுட் கலம்பகம் 26
தமிழ் நாவலர் சரிதை 26
தமிழ் நூல் விவர அட்டவணை 412
தமிழ் நெறி விளக்கம் 7, 8
தமிழ்ப் புலவர் சரிதம் 74
தமிழ் மொழி வரலாறு 280
தமிழ் வளர்ச்சி இயக்கம் 492
தமிழன்பன் 28
தமிழிசை பற்றிய களஞ்சியம் 284
தமிழியக்கம் 281
தமிழில் கிளைமொழி ஆய்வுகள் 333
தமிழில் பயண இலக்கியம் 151
தருக்க முறை 172
தல புராணங்கள் 55
தனிச் செய்யுட் கொத்து 25
தனிச் செய்யுட் கோவை 25
தனிச் செய்யுட் சிந்தாமணி 25
தனிப் பாசுரத் தொகை 25
தனிப் பாடல் திரட்டு 25
தனிப்பா மஞ்சரி 25
தாட்சாயணி, கே. வி. 17
தாமரை 108
திராவிட இயக்கத்தவர் 282
திராவிடப் பிரகாசிகை 74
திருமூலர் 47, 261
திரு. வி. க. 275
திருவேங்கட நாயுடு 26
திரைப்படமும் நாட்டுப் புறவியலும் 222
தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் 27
திறனாய்வு முறை 172
துக்ளக் இதழ்களில் அங்கதம் 231
துரைசாமிப் பிள்ளை, ஔவை. சு. 46
தூய மொழி இயக்கங்கள் 274
தூரன் 194
தெ.பொ. மீ. 34
தேசிக விநாயகம் பிள்ளை 25
தொடக்க நிலைத் தொண்டர்கள் 375
தொழிற் பெயர் அகராதி 326
தொல்காப்பியம் 191
தொல்காப்பியர் 214, 298, 323, 336
தொல் படிமவியல் கோட்பாடுகள் 113
தொன்மொழிக் கிளைமொழி 323
தொன்னூல் விளக்கம் 7, 18
தோரோ 348
நக்கீரர் 49
நகர்ப்புறக் கிளைமொழியியல் 318
நச்சினார்க்கினியர் 2
நச்சு இலக்கிய உளவியல் 121
நடையியல் ஆய்வு அணுகு முறை 313
நடையியல் கோட்பாடு 307

நம்பியகப் பொருள் 7, 8
நரசிங்கப் பெருமாள் யட்ச கானம் 416
நற்றமிழ் நாளேடுகள், தாளிகைகள் 283
நாச்சியப்பன், நா.ரா 200
நாட்குறிப்பு இலக்கிய ஆய்வுகள் 141
நாடகச் சுவைகள் 131
நாடக முறை 172
நாடகவியல் 129
நாரத காதை 26
நாராயணசாமி, சி. ஆர். 17
நிகண்டுகள் 6
நீதிவாணன் 311
நீலாம்பிகையார் 277
நேராய்வுகள் 142
நும்மான் 301
படைப்பிலக்கியக் கருத்தரங்கம் 247
பண்டாரச் சாத்திரங்கள் 266
பதிப்பு வகை 403
பயண நூல் வழிப் பண்பாடு 152
பரமசிவம், எஸ். 47
பரிதிமாற் கலைஞர் 124, 275
பல்சந்த மாலை 76
பல்தேயுஸ் 91
பலபாடல் திரட்டு 26
பவேரியக் கிளைமொழி 324
பழனிச்சாமி, பி.எம் 235
பழையனூர் நீலி யட்சகானம் 416
பன்னிரு படலம் 8
பன்னூல் திரட்டு 26
பாணடித்துரைத் தேவர் 26
பாத்திரப் படைப்பு முறை 130
பார்ஸ்டர், இ எம் 113
பாரதிதாசன் 25
பாரதியார் 171, 172, 298
பாரதியும் இராபர்ட் பிராஸ்டும் 354
பாரதியும் விட்மனும் 354
பால்ஷவர் மேயர் 325
பால தீபிகை 201
பிச்சை, அ. 17
பிரசார் பாரதி 257
பிரெண்டாஸுக்கு 220
பின்வரு நிலையணி 220
பீகார் விவசாயிகளின் வாழ்க்கை 326
பீட்டர் இளாஸ் 209
புகழேந்திப் புலவர் 28
புதிய ஆய்வு நெறிமுறைகள் 351
புறப்பொருள் வெண்பாமாலை 8
பூர்ணலிங்கம் பிள்ளை, எம்.எஸ் 26
பெண்ணியக் கோட்பாடுகள் 120
பெர்னார்ட்ஷா 171.349
பெரியார், ஈ.வே.ரா 281
பெரியோர் இதழ்கள் 198
பெருந்தொகை 26
பொது அறிவுக் களஞ்சியம் 155
பொதுக் குறியீடு 386
பொதுத் தமிழ்க் கிளைமொழி 322, 323
பொது விருப்பார்வ நூல்கள் 375
பொள்ளாச்சி நசன் 247
பொன்னுசாமித் தேவர் 27
போப், ஜி.யு. 26, 280
போஸ் 64
பௌரா 220
மக்கள் தகவல் தொடர்பியல் துறை 242
மஞ்சரி 180
மணிக்கொடி 105
மணிமேகலை 166
மணியன், தங்க 233
மருதூர் அரங்கராசன் 16
மறைமலையடிகளார் 64, 275
மனிதாபிமானக் கொள்கை 382
மனோன்மணீயம் 124
மாணிக்கம், அ
மாணிக்கவாசகம், இரா. 46
மார்க்சிய சமூகவியல் அணுகு முறை 113
மார்க்சியத் திறனாய்வுக் கோட்பாடுகள் 113
மார்கிரெட், டி. எக்னர் 209
மாற்றிலக்கணக் கிளைமொழியியல் 331
மானவகப் பொருள் 7

மான விஜயம் 124
மீனாட்சி, ஜெ வி கே. 46
முகம்மது காசீம் சித்திலெப்பை ப 86
முடிவு செய்தல் 385
முத்துச் சண்முகம், மு. 369
முருகன், வி. 352
முத்துப்பிள்ளை, ஆ. 74
முத்துவீரியம் 7
மு.வ. 195
முழுமைக் கொள்கை 382
மூவகைக் கதைப்பாடல்கள் 219
மெக்கன்சி 407, 413
மெய்கண்டார் 52
மோகன்ராவ் 326
மொழியியல் அணுகுமுறை 303
யதோசாதரா 164
யோகி சுத்தானந்த பாரதி 125
ராமலிங்கம் பிள்ளை, வெ. 25
லாக் 167
லாரன்ஸ் 347
வடமொழி மரபுத் தாக்கம் 6
வடிவவியல் அணுகுமுறை 120
வண்ணத் தியல்பு 15, 20
வண்ணதாசன் 100
வரதராசனார், மு. 371
வரலாற்றின் வரலாறு 135
வரலாற்று நோக்கு 145
வருணனை முறை 172
வல்லாளராசன் யட்சகானம் 416
வழக்குத் தமிழ்க் கிளைமொழி 323
வள்ளியப்பா 192
வாசகர் உளவியல் 121
வாசகர் வரவேற்புக் கோட்பாடு 121
வாழ்க்கைவரலாற்று இலக்கிய வரலாறுகள் 140
வானமாமலை, நா. 207, 371
வித்யா விநோதினி 27
விருத்தப் பாவியல் 15, 20
விருப்ப விதிகள் 332
வில்லியம் பட்லர் யேட்ஸ் 347
வில்லியம் லபோவ் 329, 332, 333, 337
வில்லியன் சான்தாமசு 213
விளக்கமுறை 172
விஜயலக்ஷ்மி, பி. 17
வீர இராகவ முதலியார் 28
வீரசைவத் திருமடங்கள் 268
வீரசோழியம் 7, 18
வீரமாமுனிவர் 89, 280
வீராச்சாமி நாயக்கர் 216
வீரைவேற்பிள்ளை, எம் 27
வெயின்ரிக் 330
வெள்ளைவாரணனார், க. 46, 49
வேங்கடராமன், சு. 108
வேலுப்பிள்ளை, ஆ. 371
வையாபுரிப் பிள்ளை 25, 26, 37
ஜவகர்லால் ஹண்டூ 209
ஜீவானந்தம், பா, 207
ஜூல்ஸ் பிளாக் 327, 336
ஜெயமோகன் 108
ஜெயா, க. 47
ஜேன் ஆஸ்டின் 181
ஜோய்ட் வினட்டெலர் 325
ஜோஹன் அன்டிரஸ் ஷிட்லர் 324
ஸ்ரீ ஆரிய திவ்ய தேச யாத்திரை சரித்திரம் 151
ஷேக்ஸ்பியரும் இளங்கோவும் 354
ஸ்டுவர்ட் பிளாக்பர்ன் 209
ஹார்மீசக் கொள்கை 382

உலகத் தமிழ் மாநாடும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்

இன்தமிழ், உலகத்தமிழாய் வலம் வரவேண்டும் என்ற பெருநோக்கில் ஆன்றோர் பலரின் பெரு முயற்சியால் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் (1968) விளைவாக 1970 அக்டோபர் 21ஆம் நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோன்றியது... மிகக் குறுகிய காலத்திற்குள் குறைந்த பணியாளரைக் கொண்டு பல்வேறு துறைகளில் 185 நூல்களை நிறுவனம் வெளியிட்டிருப்பது தமிழுலகம் பாராட்டுகின்ற சாதனையாகும்.

உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில் நிகழ்கையில் அதனையொட்டித் தேவையான பல நூல்களை வெளியிட வேண்டும் என்பதும் அதன் தலையாய குறிக் கோள்களுள் ஒன்று. மதுரையில் 1981இல் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நிகழ்ந்த போது நூல்கள் பல வெளிக்கொணரப்பட்டன.

1995 சனவரியில் தஞ்சையில் நிகழவிருக்கும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டித் **தமிழ் ஆய்வுக் களங்கள்** நூல் முதலாவதாக வெளிவருகிறது.

தமிழில் ஆய்வு செய்ய இனி என்ன இருக்கிறது என்று கேட்போருக்கும், எப்பொருளை எங்ஙனமெல்லாம் ஆய்வு செய்யலாம் என விழைவோருக்கும் விடையாக, வழிகாட்டியாக, கையேடாக இந்நூல் கனிந்துள்ளது.

—பேராசிரியர் க. பொன்னுசாமி.
மாண்புமிகு கல்வியமைச்சர்